பெரிய ஜோதிட

# சில்லரைக் கோவை

(21-நூல்கள் அடங்கியது)

ஸ்ரீ

ஜோதிட ஆசிரியர்
கந்தசாமி பிள்ளை அவர்களால் இயற்றிய
உரையுடன்

பிரசுரித்தவர் :

**B. இரத்தின நாயகர் அண்ட் சன்ஸ்,**
20, வெங்கட்ராமய்யர் தெரு, கொண்டித்தோப்பு,
சென்னை-79.

பதிப்புரிமை] 1997 [விலை ரூ. 80-00

RangaRakes tamilnavarasam.com

# பொருளடக்கம்


1. ஜம்புமகாரிஷி வாக்கியம்
2. ஜோதிட கணிதாமிர்தம்
3. நவக்கிரகமாலை
4. தாண்டவமாலை
5. பலகறை ஆருடம்
6. தேங்காய்க்குறி ஆருட பலன்
7. நவக்கிரக திசாபுத்தி நிர்ணயம்
8. நவக்கிரக ஆருட பலன்
9. காக்கேயர் நூல்
10. காக்கேயர் வாக்கியம்
11. நவக்கிரக கோட்சார பலன்
12. சந்திர காவியம்
13. துவாதச லக்கின கிரகபலன்
14. ஆயுள் நிர்ணய பலன்
15. போதக-வேதக-பாசக-காரக கிரக நிலை
16. சகதேவராருடம்
17. ஸ்திரீ ஜாதகம்
18. ஸ்திரீகள் ருதுஜாதக நிர்ணயம்
19. திருமணப் பொருத்த நிர்ணயம்
20. ஜெயமுனி ஜோதிட சூத்திரம்
21. கருட தரிசன பலன்


RangaRakes tamilnavarasam.com

உ

## பெரிய ஜோதிட
# சில்லரைக் கோவை

### மூலமும் - உரையும்

### கணேசர் துதி

*எண்சீரடி விருத்தம்*

ஆதிபிர ணவமூர்த்தி யானவெந்தன்
    ஐயனே விநாயகாநின் னருளினாலே
ஜோதிடசில் லரைக்கோவை மூலத்திற்கு
    சொல்லும் உரைசரியாக அமைந்திருக்க
நீதியா யென்மனதில் கொலுவமர்ந்து
    நின தருளால் யானெழுத வரந்தாவென்று
பாதிமதி சடையணிந்த பரமனீன்ற
    பாலகனே சாவென்று பணிந்திட்டேனே.

### சரஸ்வதி துதி

*எண்சீரடி விருத்தம்*

அன்னையே சரஸ்வதி யுன் கிருபையாலே
    அவனி தனிலே பிறந்த ஜாதகற்கு
சொன் மயமாய்ப் பலனுரைக்க முன்னோரோதும்
    ஜோதிட சில்லரைக் கோவை மூலத்திற்கு
நன்மையா யுரையெழுத வானேனெந்தன்
    நாவில்நின்று ஞாபக சக்திதந்து
அன்பாக அனுக்கிரகஞ் செய்வாயம்மா
    அருள்வாணி யுன்பாதம் பணிந்திட்டேனே.

### நவக்கிரகங்கள் துதி

*எண்சீரடி விருத்தம்*

அன்பான ரவிசசிசேய் மால்வியாழன்
    அசுரகுரு சுக்ரசனி ராகுகேது
ஒன்பதுபேர் சகாயத்தால் யானிப்போது
    ஓதுகிறேன் மனிதர்கட் காதாரமாக
நன்மையாய் ஜோதிடசில் லரைக்கோவை மூலத்திற்கு
    நலமுடனே உரையெழுத நவக்கிரகங்கள்
என்மனதி லிருந்தருள்வா ரென்றுநம்பி
    எத்ததியும் பக்தியுடன் பணிந்திட்டேனே,

RangaRakes tamilnavarasam.com

## பராசக்தி துதி

*எண்சீரடி விருத்தம்*

ஆதிபராசக்தி ராஜேஸ்வரி வராகி
அம்பிகா வாலைகௌரி நீலிசூலி
நீதிசேர் திரிபுரசுந் தரிஓங்காரி
நீணிலத்தின் மனிதர்கட்கா தாரமாக
ஜோதிடசில் லரைக்கோவை மூலத்திற்கு
சொல்வழுவா உரையெழுத சகாயஞ்செய்வாய்
பாதிமதி சடையணிந்தோன் பாகத்துற்ற
பராசக்தி பாதத்தை பணிந்திட்டேனே.

## சபை வணக்கம்

*எண்சீரடி விருத்தம்*

நவகோடி சித்தர்களின் சகாயத்தாலும்
தாதாக்கள் ரிஷிமுனிவர் கிருபையாலும்
சிவசுப்ர மண்யர்திரு வருளினாலும்
ஜோதிடசில் லரைக்கோவை மூலத்திற்கு
தவறுமல் உரையெழுத லானேனிந்த
தரணியில்நம் ஜோதிடசாஸ் திரவல்லோர்கள்
கவனித்து வாசித்துக் குறைசொல்லாமல்
கருணையுடன் மதிப்பீர்கள் கலைவல்லோரே. ௧

## நூன்முகம்

*விருத்தம்*

அன்புடன் சிஷ்யனுக்கு ஆசான் ஜோதிட சாஸ்திரத்தை
இன்புட னுபதேசிக்க இனிதுட னருகிருத்தி
தன்மையாய் ஜாதகர்க்கு நவக்கிரகங்கள் கொடுக்கும்
தன்மையை யுரைக்கும்ஞான சாஸ்திரமாகும் பாரீர். ௨

உரை:—ஜோதிட சாஸ்திர நூலுணர்ந்த குருவானவர் தமது சிஷ்யனுக்கு உலகில் பிறந்த ஜாதகர்களின் பலாபலனை விபரமாய் அனுக்கிரகஞ் செய்யும்படியான மார்க்கமனைத்தும் உணர்ந்து கொள்வதற்கிசைந்த விஷயமாய் அமைந்த இந்தப் பெரிய ஜோதிட சில்லரைக் கோவை முன்னோர்களால் பாடி வைத்த மூலபாடமாகும். இதில் குறிப்பித்த இருபத்தொரு புத்தகத்திற்கு சரியான உரை யெழுதலாயிற்று.

RangaRakes tamilnavarasam.com

# ஜம்புமகாரிஷி வாக்கியம்

எண்சீரடி விருத்தம்

தினமொன்றுக்கறுபது நாழிகையென்றும்
　　தினகரனுர்க்காதியந்த மாகும்பாரே
தினனுதிவேளைதனைக் கணக்கெடுத்து
　　சாற்றுமந்தலக்கினத்தை முதலாய்வைத்தால்
பனிரெண்டுஸ்தானபலன் விபரங்காணும்
　　பருதிமதிசேய்மால் பொன்னன்சுக்கிரனுமாக
சனிராகுகேதுநின்று பலன்கொடுக்குமார்க்கம்
　　சாற்றுகிறேன்கவனிப்பீ ருலகத்தோரே. 3

உரை:—தினந்தோறும் அறுபது நாழிகை நடப்பது ஆதித்தனுக்கு ஆதியந்தமாகும்; இதனையே மனித வகுப்பார் இரவு பகலாய் கணக்கிட்டு ஒருநாளெனக் குறிப்பித்துச் சொல்வர். இதில் எத்தனையாவது நாழிகையில் ஜாதகர் ஜனனமோ அதனையே பனிரெண்டு லக்கினங்களில் ஒன்றாகிய ஜனன லக்கினமாய் அமைத்து, மற்றவை அடியிற் குறிப்பித்தவிதமாய் எடுத்துச் சொல்ல வேண்டும்.

## ஜனனலக்கினம் குறிக்கும்போது

1-வது, ஜனனலக்கினம், உயிர்லக்கினம்.
2-வது, குடும்பஸ்தானம், தனஸ்தானம், வாக்குஸ்தானம், வித்யாஸ்தானம்.
3-வது, சகோதரஸ்தானம், தீரஸ்தானம்.
4-வது, சுகஸ்தானம், வாகனஸ்தானம், மாதுருஸ்தானம்.
5-வது, புத்திஸ்தானம்.
6-வது, சத்துருஸ்தானம், ரோகஸ்தானம்.
7-வது, களத்திரஸ்தானம், மாரகஸ்தானம்.
8-வது, ஆயுஸ்தானம்.
9-வது, பிதுர்ஸ்தானம், தர்மஸ்தானம், பாக்கியஸ்தானம்.
10-வது, ஜீவனஸ்தானம், கர்மஸ்தானம்.
11-வது, இலாபஸ்தானம், மூத்த சகோதரஸ்தானம்.
12-வது, சயனஸ்தானம் மோக்ஷஸ்தானம்

RangaRakes　　tamilnavarasam.com

## இராசிய விபரம்

| | | | |
|---|---|---|---|
| மீ | மே | ரிஷ | மி |
| கு | | | க |
| ம | | | சி |
| த | வி | து | க |

இலக்கினத்திற்குரிய
நாழிகை விபரம்

| | |
|---|---|
| மேஷம்-4¼ | துலாம்-5 |
| ரிஷபம்-4¾ | விருச்சிகம்-5¼ |
| மிதுனம்-5¼ | தனுசு-5½ |
| கடகம்-5½ | மகரம்-5¼ |
| சிங்கம்-5¼ | கும்பம்-4¾ |
| கன்னி-5 | மீனம்-4¼ |

ஆக மொத்தம் தினசரி நாழிகை-60.

இவ்விதமாய் ஜாதகர்கள் பிறக்கும்போது
இலக்கினத்திற்கு குறிப்பிக்கும் நவக்கிரகங்கள்
எவ்விதமாய் பலன்கொடுப்பா ரென்றுலோசித்து
எதிரில்வந்த ஜாதகர்க்கு பலனுரைக்கும்
அவ்விதத்தை ஒவ்வொன்றாய்க் குறிப்பித்தோதில்
அவரவர்க ளநுபவிப்ப துண்மையென்றே
ஒவ்வியேகணிதநூ லாராய்ந்து நன்றாய்
ஓதும்விதம் நவின்றிடுவோம் கவனிப்பீரே. 4

உரை:—இவ்விதமாய் ஜாதகர்கள் பூமியில் பிறக்கும்போது துவாதச லக்கினங்களிலிருந்த கிரகங்கள் கொடுக்கும் பலாபலவின் விபரமாய் அடியிற் குறிப்பித்திருக்கும் விதமே பலன் நடக்குமென்று கணித நூலாராய்ச்சி செய்து சொல்லிக்கொண்டு வருவோம் கவனிப்பீர்களானால் சரியாயிருக்கும்.

இலக்கினத்திற்கேமூன்று மிடத்திற்குடையோனுகி
இசைந்தகிரகம்வந்தால் சமான்யமாகும்
கலக்கமிலாஅவன்திசை புத்தியுமப்படியேயாகும்
காணுமெட்டாமிடத் துடையோன்ஜனனகாலம்
தலைமையெக்காலிலிருந்தாலோ அந்தராசிதன்னில்
நாடிசனிவரும்போ தவன்புத்திமாதத்தில்
பலவிதமாயமைந்தசேதி எதுவந்தாலும்
பலனதிகமில்லையென்று பகருவீரே. 5

உரை:—உலகத்தில் பிறந்த எந்த ஜாதகனுக்கும் உதய லக்கினத்திற்கு மூன்றுமிடத்திற் குடையவனுடைய திசை வந்தால் சாமான்யமாயிருக்கும். அன்றியும், அவன் திசையிலும், அவன் புத்தியிலும் சாமான்யமாயிருக்குமென்று கவனிப்பீர்கள். ஆனால், எட்டாமிடத்திற்குடையவன் ஜனனகாலத்தில் எந்தநக்ஷத்திரத்தின் எத்தனையாவது காலிலிருந்தாலோ அந்த ராசியில் சனி

RangaRakes tamilnavarasam.com

வரும்போது அவன் புத்தி மாதத்தில் அவனுடைய ராசியாவது இலக்கினுதிபன் மாதமாவது வந்தால் அந்த மாதத்தில் அவனுடைய ராசி நக்ஷத்திரத்தில் சந்திர லக்கினத்திற்குடையவனிருக்கும் நக்ஷத்திரமாவது வந்தாலும் அந்த ராசிக்குடையவன் கிழமை அந்த மாதத்தில் எத்தனையாந்தேதி வருகிறதோ அந்த தேதியிலே மிகவும் சாமான்ய பலன் நடக்குமென்று ஜோதிட கணித சாஸ்திரத்தை ஆராய்ந்துணர்ந்து பலன் சொன்னால் சரியாய் அமைந்திருக்கும்.

## இரட்டைப்பிள்ளை ஜனனம்

இலக்கணத்தின் மூன்றோனும் ராசியோனும்
இராகுகேதுடன் சேர்ந்தோர் ராசியேறில்
நலமுடனேபார்த்தாலும் இரட்டைப்பிள்ளை
நவில்வாய்ஆண்கிரகமெனில் ஆண்பிள்ளையாகும்
நிலையாய்பெண்கிரகமெனில் பெண்ணென்றோது
நிலைத்திடும்லக்கினத் தோனும்ராசியோனும்
பலமுடனேராசியோன் பெண்கிரகமானால்
பாரில்ரெண்டும் பெண்ணாகப்பிறக்கும்பாரே. 6

உரை:—இலக்கினத்திற்கு மூன்றுக்குடையவனும் இராசிக்குடையவனும் ஓரே ராசியில் சேர்ந்து அவர்களுடன் இராகு பகவானாவது கேது பகவானாவது சேர்ந்தாலும் பார்த்தாலும் ஒரு லக்கினத்திலேயே இரட்டைபிள்ளை பிறக்கும் ஆனால், அந்த இலக்கினத்திற்குடையவன் ஆண் கிரகமானால் பிறக்கும் குழந்தை ஆணென்றும், பெண்கிரகமானால் பெண்ணென்றும், ஆனால், இரண்டும் ஆண் கிரகமாயிருந்தால் இரண்டும் ஆண் குழந்தை என்றும், அவ்விதமின்றி இரண்டும் பெண் கிரகமானால் இரண்டும் பெண் குழந்தையாய் பிறக்குமென்றும் சொல்வாய். ஆனால், இலக்கினத்திற் குடையவனும் நாவம்சத்திற் குடையவனும் சந்திரபகவானும் இல்லத்திலிருக்கும் போது பிறந்தால் இரட்டைபிள்ளையாகு மென்றுணர்வாய்.

## தத்துப் புத்திரன்

பஞ்சமஸ்தானம் புதன்வீடாயிருக்க
பகைகிரகங்கள் புதனைசேர்ந்திருக்க
எஞ்சலிலாசனியேனும் குளிகனேனும்
இசைந்தவரோடேயிருந்தேனும் பார்த்திட்டாலும்
தஞ்சமெனப்பிறந்த சிசுதத்துபுத்திரன்
தனவந்தன் வீட்டிலிருந் தன்பாய்வாழ்வான்
அஞ்சொன்பதிற் குடையோனுர் ராசியேறில்
அவன்தந்தைவர்க்கத்தில் தத்தாய்ப்போவான். 7

உரை:—ஜனன லக்கினத்திற்கு பஞ்சமஸ்தானம் புதன் வீடாயிருந்தால் அந்த ஸ்தானாதிபதியாகிய புதன் சத்ரு கிரகங்

களுடனே சேர்த்தும் அவருடனே சனிபகவானாவது குளிகனாவது சேர்ந்திருக்க அன்றி, அந்த ராசியைப் பார்த்தாலும் அந்த சமயத்தில் பிறந்த பிள்ளை தத்துபுத்திரனாய்ப் போவான். இதன்றியும், விசேஷயோகமாவது: பஞ்சம ஸ்தானாதிபதியும், பிதுர் ஸ்தானாதிபதியும் ஒரே இராசியிலிருக்கப் பிறந்த பிள்ளை தகப்பன் வர்க்கத்திலே தத்துபுத்திரனாகப் போவான். இவர்களிரண்டு கிரகத்துடனும் மாதுர் ஸ்தானாதிபதியாவது சுக்கிரபகவானாவது சேர்ந்திருந்தால் தாய் வர்க்கத்திலாவது களத்திர வர்க்கத்திலாவது தத்துபுத்திரனாய்ப் போவானென்றறியவேண்டியது.

புகருடனேலக்கினத்தோன் இரண்டேனுங்கூடில்
போகுமப்பாநேத்திரந்தான் ரவியும்சேர்ந்தால்
ஜகத்தில்ஜனிக்கும்போதே குருடென்றோது
சந்திரன்சேர்ந்தால் மாலைக்கண்ணனாவார்
சுகயில்லைஐந்தேழில் ரவிசேய்ராகு
சூழ்ந்திருந்தால் பைத்தியரோகமாகும்
மகிழுடன்செவ்வாய் திசையின்புத்தியிலேனும்
மற்றெவர்சேர்த்த புத்திவந்தால்சுகமென்றோதே. 8

உரை:—இலக்கினாதிபதியுடனே இரண்டாமிடத் ததிபதியும் சுக்கிரனும் சேர்ந்திருந்தால் நேத்திரப்பார்வை போகும். அம்மூன்று கிரகங்களுடனே சூரியன் சேர்த்தால், ஜனன காலத்திலிருந்தே கண் குருடாகும். ஆனால், அவர்களுடனே சந்திரன் சேர்ந்திருந்தால் மாலைக்கண்ணாகும், பஞ்சம ஸ்தானத்திலேனும் சப்தம ஸ்தானத்திலேனும் சூரியன், செவ்வாய், இராகும் சேர்ந்திருந்தால் சித்தப்பிரம்மையும் பைத்தியரோகமும் உண்டாகும். ஆனால், செவ்வாய் திசை சுயபுத்தியிலாகிலும் மற்ற கிரகங்களுடைய புத்தியிலாகிலும் சவுக்கியமாய் நேத்திரபார்வை தெரியும், பைத்திய ரோகமும் விலகி சுகமடைவார்கள்.

விருத்தம்

புதனுமாறுமிடத்தோன் பொருந்திலக்னத்திருக்க
இதமுடனிரண்டுபேரும் ஓரிராசியிலிருந்திட்டாலும்
இதமுடனிவர்களோடு இராகுதான்சேர்ந்திட்டாலும்
புதன்திசைபுத்திதன்னில் பொருந்துமேவியாதிதானே. 9

உரை:—புதனும் ஆறுமிடத்திற்குடையவனும் இலக்கினத்திலாவது அல்லது இரண்டுபேரும் துவாதச ராசியி லெத்த ராசியிலாவது சேர்ந்திருக்க அவர்களுடனே இராகு சேர்ந்தால் புதன் திசாபுத்தியில் வியாதி சம்பவிக்கும்.

RangaRakes tamilnavarasam.com

*சந்த விருத்தம்*

*நசமஸ்தானாதிபதியுடனே சார்ந்துகிரகம்மூன்றிருந்தால்*
*விசனத்தாழ்ந்து இல்லறத்தை வெறுத்தேசன்யாசம்பெறுவார்*
*இசைவாயிரண்டுகிரகங்கூடில் இகத்தில்சீர்கேடாவானே*
*அசையாதோர்கிரகம்கூடில் அன்பாய்ஞானியாவானே.* 10

உரை :—இலக்கினத்திற்குப் பத்தாமிடத்திற் குடையவனுடனே ஒரு ராசியில் மூன்று கிரகங்கூடினால் சந்யாசி யோகமுண்டு, இரண்டு கிரகங்கூடினால் குணபேத ஜீரணமாயுஞ் சீர்கேடனுமாகப் போவான், ஒரு கிரகம் கூடினால் ஞானியாவான்.

*எண்சீரடி விருத்தம்*

*ஜீவனத்தோன் கிரஸ்தோன் சசியும்சேர்ந்து*
*திடமாயோர் இராசியிலிருந்தால் நீரடைப்புநோயாம்*
*மேவியேதிரஸ்தோன் புதனிரண்டுபேரும்*
*மேன்மையுடன் தனுசிலுறசெவ்வாய் சேரபார்க்க*
*தாவியே நீரடைப் பாகுமென்பாய்*
*சந்திரன் நாலாமிடத்திருக்க ராசிநா தன்சேர*
*ஆவலுடனவருடன் மூன்றுகிரகம்சேர*
*அன்பாய்நாற்காவ் ஜீவனால் பிறந்ததென்பாய்.* 11

உரை :—ஜீவனஸ்தானாதிபதியும் திரஸ்தானாதிபதியும் சந்திரனுமாகிய மூன்றுபேரும் ஒருராசியில் சேர்ந்திருந்தால் நீரடைப்பு ரோகமும், மேகவியாதியும் வரும். இலக்கினத்திற்கு மூன்றுமிடத்திற் குடையவனும் புதனும் இவர்களிரண்டுபேரும் தனுசிலிருக்க இவர்களுடனே செவ்வாய் சேர்ந்திருந்தாலும் பார்த்தாலும் நீரடைப்பு வியாதி யுண்டாகும். நாலாமிடத்திற் சந்திரனிருக்க இராசிக்குரியவன் சேர்ந்து அவருடனே மூன்று கிரகமிருக்க நாலுகால் மிருகத்தினால் பிறந்த ஜீவனென்னப் படும்.

*சீஷன்* :—குருநாதா! மனிதவகுப்பார் சதாகாலமும் கஷ்ட நஷ்டங்களிற் சிக்கி கவலையடைவதும், சுகசவுக்கியத்தை யனுபவித்து மனமகிழ்வதும் நவக்கிரகங்களின் செயல்தானென் றெண்ணுகிறேன்.

குரு:—ஆம்! அதற்கென்ன சந்தேகமா? மனிதர்கள் செய்த பாப புண்ணியத்தின்படியே சுகதுக்கத்தைக் கொடுப்பதற்காகவே நவக்கிரகங்களாகிய அதிகாரிகள் துவாச ராசியிலுமிருந்து பலன் கொடுக்கும் விஷயத்தை விபரமாய்ச் சொல்வேன் கவனிப்பாய்.

ஜனன லக்கினத்திற்கு ஐந்தாமிடத்திலாவது ஒன்பதாமிடத்திலாவது நாலு கிரகங்கள் சேர்ந்திருந்தால் மோக்ஷத்தையடைவான். அல்லது நாலாமிடம், ஏழாமிடம், பத்தாமிடமாகிய

RangaRakes tamilnavarasam.com

ஸ்தானங்களிலாவது நாலுகிரகங்கள் சேர்ந்திருந்தால் மோக்ஷத்தை யடைவான். ஆனால், இலக்கினத்திற்கு மூன்று மிடத்ததிபதி ஒன்றுமிடத்தில் இருக்க ஒன்பதிற்குடையவன் நட்பு, ஆக்ஷி, உச்சத்திலிருக்க, அவருடனே சுக்கிரனாவது வியாழனாவது சேர்ந்திருந்தாலும் பார்த்தாலும் ஜெபதபங்கள் செய்து பகவத்பானமாய் மடாதிபதியா யிருப்பார்கள்.

இலக்கினத்திற்குடையவனும், புதனும் மிதுனராசியிலாவது கன்னியா ராசியிலாவது இருக்கும்போது பிறந்தவனுக்கு சதாகால மும் ஆசனத்தில் வியாதியுண்டாகும். இலக்கினத்திற்கு இரண் டுக்குடையவனும் சந்திரனும் சேர்ந்து ஒரு ராசியிலிருக்க அவர்க ளுடனே இராகு கேது சேர்ந்திருந்தால் வெள்ளைக்குஷ்டம் வரும். அந்தக் கிரகங்களைச் செவ்வாய் பார்த்தால் பெருவியாதி வரும். இலக்கினத்திற்கு இரண்டாமிடத்திற் குடையவனும் ஆறுமிடத் திற்குடையவனும் சேர்ந்து மேஷத்திலாவது விருச்சிகத்திலாவ திருக்கும்போது பிறந்தவன் அடிக்கடி துக்கப்படுவான்.

இலக்கினத்தில் சந்திரனிருக்க அவனுடனே மூன்றுமிடத் திற்குடையவனுமிருந்தால் பிள்ளைக்குத் தாய்ப்பாலில்லாமல் அந்நிய ஸ்திரீயின் பால் குடித்து வளருவான்.

இராசிநாதனும் இராகுவும் ஜனனலக்கினத்திலிருக்க அவன் திசாபுத்தியானால், நாற்கால் மிருகத்தினால் மரணம் சம்ப விக்கும். இவர்களுடனே செவ்வாய் கூடினால் வலிரோகம் உண் டாகும்.

இலக்கினத்திற்கு மூன்றுமிடத்திற் குடையோனாவது இரா சிக்கு மூன்றுமிடத்திற் குடையோனாவது சனியுடன் சேர்ந்து ஒரு இராசியிலிருக்க அவர்களுடனே செவ்வாய் சேர்ந்திருந்தால் சண் டையிலே மரணமுண்டாகும்; இல்லாவிட்டால் ஆயுதத்தால் மரணமுண்டாகும். நாலாமிடத்திற்கு உடையவன் சனி, ராகு, கேது, செவ்வாய் பகவானுடனே சேர்ந்து அஷ்டமஸ்தானத்தி லிருக்க அஜீரணத்தால் ஆறும் வயதில் மரணமுண்டாகும்.

இலக்கினத்திற் குணமுடையவனுடன் ஆறுக்குடையவ னாவது ராகு பகவானாவது, கேது பகவானாவது சேர்ந்திருந்தால் ஸ்திரீகளால் மருந்திடப்பட்டு மரணம் வரும். சனி சேர்ந்திருந் தால் சோரர்களாலே மரணமுண்டாகும்.

சுகஸ்தானத்திலும், லக்னத்திலும், இராசியிலும், சனி, செவ்வாய், ராகு, கேது இருக்க இந்த மூன்றுஸ்தானத்திலிருந்த வர்கள் பலஹீனமாயிருந்தால் மூன்று மாதத்தில் மரணம், லக்கி னத்தை பாபர் பார்த்தாலும் சேர்ந்தாலும் அல்லது ஆறுமிடம் அஷ்டம ஸ்தானத்தில் பாபரிருக்க அவர்களுடனே சத்துரு

RangaRakes tamilnavarasam.com

கிரகங்கள் சேர்ந்திருந்தால் பத்துநாளையில் மரணம். இந்த இரண்டு யோகத்திலே பாலாரிஷ்டம் பார்த்து சொல்லவும்.

இலக்கினத்திற்கு மூன்றிலே செவ்வாய், சூரியன், குருபகவான் சேர்ந்திருக்கும்போது பிறந்தவன் திடகாத்திர தேகமுடையவனு யிருப்பான். இவர்களுடனே சனி சேர்ந்திருந்தால் குட்டையா யிருப்பான். செவ்வாய், ராகும் ஜனன ராசியிலிருக்க தொப்புள் பெருத்திருக்கும். புதனும், சனியும் ஒரே ராசியிலிருந்தாலும் சரீரமெல்லாம் மயிராயிருக்கும். இலக்கினத்தில் சூரியனும் ஆறுமிடத்திற் குடையவனும், இராசிக்குடையவனும் சேர்ந்திருந்தால் பூனைக்கண்ணனாய்ப் பிறப்பான்.

இலக்கினத்திற்கு மூன்றுமிடத்திற் குடையவனும் செவ்வாயும் சூரியனும் சேர்ந்திருந்தால் தலைமொட்டையாகப் பிறப்பான். சுகபோகத்தில் அதிக விருப்பமுடையவனுயிருப்பான். ஜஷ்ண போஜனம் பண்ணுவான். இலக்கினத்திற்குப் பத்தாமிடத்தில் இராகுவும் சூரியனுமிருந்தால் அவனுக்கு கங்கா யாத்திரை கிடைக்கும், அல்லது பெரியோர்கள் கங்கா யாத்திரை செய்வார்கள். இலக்கினத்திற்கு தசமஸ்தானம் மீனமாயிருக்க அதில் புதனிருந்தால் அவசியம் கங்கா யாத்திரை கிடைக்கும்.

இலக்கினத்தில் இராகுவும், லக்கினாதிபதியும் கூடியிருந்தால் தாய் ஜனனகாலத்தில் முக்கிப் பெறுவாள். அஷ்டமத்திற் குடையவனும் லக்கினத்திலிருந்தால் கொடிசுற்றிப் பிறப்பான். அல்லது புதனும் லக்கினத்திலிருக்க அந்தப் புதன் ஆறுமிடத்திலிருக்க, இல்லாவிட்டால் ஆறுமிடத்திற் குடையவனுடனே சேர்ந்திருக்க புருஷனானால் பேடியாய்ப் பிறப்பான், பெண்ணானால் முகத்தில் மயிருண்டா யிருக்கும்.

இலக்கினத்திற்கு நாலு, ஏழு, பத்திலே சுக்கிரனாவது, சந்திரனாவதிருந்தால் அந்நிய ஸ்திரீகள் அவனுக்கு வலுவிலே வருவார்கள். அதில் சுக்கிரனேயிருந்தால் போக ஸ்திரீகள் ஆசையாய் வருவார்கள்.

சனியுஞ் செவ்வாயும், இராசிக்குடையவனும் நாலாமிடத்திலாவது இராசியிலாவதிருந்தால் அவனுக்கு இராத்திரிகாலத்தில் ஏவலினாலே கல்லு வந்துவிழும்.

RangaRakes tamilnavarasam.com

சிநேகிதனுவான். ஏழாமிடத்திற் குடையவனோடே இராகு, கேது கூடவும் அந்த சப்தமஸ்தானம் தனுசு, மீனமாயிருந்தால் அவனுக்கு பிராமண ஸ்திரீகளின் நேச முண்டாகும்.

இராசிக்குடையவனுடன் சூரியனும் சுக்கிரனும் சேர்ந்திருந்தால் இராஜஸ்திரீகளுடனே நேசமுண்டாகும். இலக்கினத்திற்கு நாலாமிடத்திற் குடையவனும், ஒன்பதாமிடத்திற் குடையவனும் பகை கிரகத்துடனே சேர்ந்து ஒரு ராசியிலிருந்தால் அந்த ஜாதகன் பல வித்தாகும். இலக்கினத்திற்கு ஆறுமிடத்திற் குடையவனும் சந்திரனும் செவ்வாயும் நாலாமிடத்திலே யிருந்தால் அந்த ஜாதகனுடைய மாதாவுக்கு தோஷமுண்டு.

இலக்கினத்திற்கு ஆறுமிடத்திற் குடையவனும் சந்திரனும் செவ்வாயும் நாலாமிடத்திலே யிருந்தால் மாதாவுக் காகாதென்றலும் ஒரு பார்வையிலிருந்தால் சிலநாள் வரையிலும் சரீர அசௌக்கியமாயிருந்து, நவக்கிரக சாந்தியினுல் சுகப்படுவார்கள்.

இலக்கினத்திற்கு ஒன்பதாமிடம், ஆறுமிடத்திற் குடையவனும் பாபக்கிரகங்களுடனேகூடி ஒரு ராசியிலிருக்க அந்த ஜாதகன் பெண்ஜாதிக்குத் தோஷமுண்டு. இலக்கினத்திற் குடையவனும் நாலுக்குடையவனும் ஆறெட்டுப் பனிரெண்டிலிருந்தும் அந்த ஸ்தானமும் பகைவீடா யிருந்தால் கனவிலும் சுகமில்லை.

இலக்கினத்திற்குடையவன் ஆணிபெற்றிருக்க களத்திர ஸ்தானாதிபதியும் சேர்ந்து ஒரு ராசியிலிருந்த அந்த ஜாதகனுக்கு பெண்ஜாதிகூட அநுமானமாவாள். இது சர்வயோகம்.

இலக்கினத்திற்குப் பத்துடையவனும், புதனும், குருவும், மூன்றுபேரும் இரண்டாமிடத்திலிருக்க, அந்த ஜாதகன் யாகம் பண்ணி தெய்வபக்தியிற் சிறந்தவனும் தனந்தான்ய சம்பத்துடன் பாக்கியவானு யிருப்பான். தர்ம கர்மாதிபதியாகி ஒன்பது பத்துக்குடையவர்களிருவரும் பாபர்வீட்டிலிருந்து பலஹீனமாயிருந்தால் அவன் ஸ்ரீமந்த புத்திரனல்ல, இலக்கினத்திற்குப் பதிஞேராமிடத்திற்குடையவன் பாபர் வீட்டிலிருந்தால் நாலு, மாதத்திலே பிள்ளை தரியாமற் போகும்.

இலக்கினத்திற்கு ஏழுக்குடையவன் நீசனும் சூரியன் வீட்டிலாவது அவனுடைய அம்சத்திலாவதிருந்தால் அந்த ஜாதகனுக்குக் கனரோகம் உண்டாகும். அவன் உச்சாங்கிஷத்திலிருந்தால் கண்ணிலே பித்தகாசம் வரும். அவன் சத்துரு க்ஷேத்திரத்திலாவது, சத்ரு அம்ஸத்திலாவதிருந்தால் குஷ்டமும், குமாண்ட வியாதியும் வரும். அந்தக் கிரகத்துடன் இராசிக்குடையவனும், இலக்கினத்திற் குடையவனுமிருந்தால் குன்ம வியாதி

யும், அன்னத் துவேஷமும் வரும். அவனோடு ஆறுமிடத்திற்குடையவனும் கூடினால் மனிதரைக் கொல்லுகிற பில்லி சூனிய வித்தையை கற்றுக் கொள்வான். அந்தக் கிரகத்தினுடனே அஷ்டமாதிபதியும் செவ்வாயும் இராசிக்குடையவனுஞ் சேர்ந்தால் கைம்பெண்சாதி பிள்ளையாவான். இலக்கினத்திற்குப் பதினொருமிடத்தில் செவ்வாயிருக்க இலக்கினத்திற்கு ஐந்தொன்பதில் சூரியனிருக்க அந்த ஜாதகனுக்கு ஆடு, மாடு, எருமை கூட்டங்கள் விசேஷமாயிருக்கும். அந்த கிரகங்களுடன் இராகு பகவானாவது குளிகனாவது சேர்ந்திருந்தால் நாய், பன்றி, பலவிதமான மிருகங்கள், பக்ஷிகளும், பலவிதமான தானியங்களும் முண்டு.

இலக்கினத்திற்கு இரண்டு, நான்கு, பத்து, பனிரெண்டென்னும் இராசிகளில் எத்தனை கிரகங்களிருந்தார்களோ அத்தனைபேர் பிள்ளைபிறக்கும்போது அந்த வீட்டிலிருந்த பேரென்று சொல்லவும். அதிலே சனியிருந்தால் அன்னியஸ்திரீ ஒருத்தியுமிருந்தாளென்று சொல்லவும்; சுக்கிரனுஞ் சந்திரனுமானால் சுமங்கலியுமிருந்தாளென்று சொல்லப்படும்; இதுதான் பூர்வஜன்ம பலனாகும்.

## பூமியில் புதையலிருக்கும் விபரம்

இலக்கினராசியை முப்பதாகப் பிரித்து அந்தந்த பாகத்தின் ஸ்தானங்களில் தற்காலத்தில் வந்த பாகத்திற்குடையவர் இலக்கினத்திற்கு எத்தனையாவது இராசியிலிருக்கின்றாரோ அந்த ராசிக்குடையவர் சுபக்கிரகமானால் அந்த வீட்டிற்கு எட்டு திக்கிலே பூர்வதனமாகிய புதையலுண்டு இதன் விபரமெவ்விதமெனில், அந்தக் கிரகம் சூரியனானால் கிழக்கு, சுக்கிரனானால் அக்கினிமூலை, குஜனானால் தெற்கு, இராகுவானால் நிருதிமூலை, சனியானால் மேற்கு, சந்திரனானால் வாயுமூலை, புதனானால் வடக்கு, குருவானால் ஈசான்யமூலை இந்த ஸ்தானங்களில் பூர்வதனமாகிய புதையலுண்டென்று சொல்லவும். இவ்விதமாகிய கிரகமானால் அந்த வீட்டின் சமீபத்திலே பில்லி சூனியங்கள் வைத்த பூமியாயிருக்கும். அந்தக் கிரகமும் நீசமூட அஸ்தமனமாயிருந்தாலும், சத்துரு சம்பந்தமானாலும் அந்தப் பூமி ஐய்யன், துர்க்கை, பிடாரி, ஆலயங்கள் இடிந்து பாழடைந்த பூமியாயிருக்கும். சுபக்கிரகமானால் நல்ல தேவதா பூமியாயிருக்கும். இந்த ஆராய்ச்சி கணிதத்தை கவனித்து சொல்லவும்.

இலக்கினத்திற்கு நாலாமிடத்திலே யாதொரு கிரகமுமில்லாவிட்டால், அந்தக் கிரகத்திற்காவது நாலாமிடத்திற்கு முன்னே பாபக் கிரகமிருந்தால் மேற்கு திக்கு பாழென்றும், இலக்கினத்திற்கு மூன்றுமிடத்தில் பாபக் கிரகமிருந்தால் கிழக்கு திக்கு பாழென்றும் சொல்லவும். இலக்கினாதிபதியும பாபக் கிரகங்களுடனே சேர்ந்து இராசியிலாவது அஷ்டம ஸ்தானத்திலாவ

RangaRakes tamilnavarasam.com

திருந்தால் ஜாதகனுடைய சரீரத்தில் சொறி, சிரங்கு ரணமுண்டாகுமென்று ஜாதகஃகணிதத்தின்படியே சொல்லவும்.

## ஜாதகன் புசிப்பதற்கிஷ்டமான உணவு

### எண்சீரடி விருத்தம்

இலக்கினத்தோன் குருவானால் தயிர்சிச்சிப்பான்
இசைந்தபுதனானாலே புளிப்பிச்சிப்பான்
நலமுடன்சுக்கிரனானால் சர்க்கரைதேனிஷ்டம்
நவிலுவாய்சனிக்குக்கீரை விருப்பமாகும்
நலத்தோனோடே ராகுகேதுகுளிகன் சேர்ந்தால்
சத்திபூசைசெய்து மாங்கிஷம்புசிப்பார்
நலமாட்வியாழனானால் வெஞ்சனபக்ஷணமென்றும்
நவில்புதன் சந்திரன் குளிர்ந்தசோறுண்பாரே. 12

உரை:—இலக்கினாதிபதி இராஜாவாயிருந்தால் தயிர்சோறுண்பதற்குப் பிரியப்படுவார். புதபகவான் லக்கினாதிபதியாயிருந்தால் புளிப்பு பதார்த்தத்தின்மீது பிரியமாயிருப்பார்கள். சுக்கிரபகவான் இலக்கினாதிபதியானால் சர்க்கரை சேர்த்த மிட்டாய் வகைகளின் மீதும், தேன் முதலாகிய இனிப்பு பக்ஷணங்களையும் புசிப்பதற்குப் பிரியப்படுவார்கள். சனிபகவானே இலக்கினாதிபதியானால் காட்டிலிருக்கின்ற கீரை தினுசுகளைப் புசிக்கப் பிரியப்படுவார். இராகுவாவது கேதுவாவது இலக்கினத்திலிருக்க அவர்களுடனே குளிகனும் சேர்ந்திருந்தால் ஜாதகர் சத்தி பூசை செய்து மது மாமிச பக்ஷணங்களைப் புசிக்கப் பிரியப்படுவார்கள். இலக்கினாதிபதி குருவானால் சமையலிருக்கும். சுடுகையான போஜனத்திலே பிரியப்படுவார்கள். புதனுஞ் சந்திரனும் இலக்கினாதிபதியாயிருந்தால் குளிர்ந்திருக்கிற சோற்றிலே பிரியப்படுவார்கள். சூரியனும், செவ்வாயும் இலக்கினாதிபதியானால் அன்ன பதார்த்த மனைத்தும் சுடச்சுடச் சாப்பிடுவார்கள். சுக்கிரனுஞ் சனியுமானால் சமமான அன்ன பதார்த்தம் புறப்பதற் கிச்சிப்பார்கள்.

## வித்தை

### எண்சீரடி விருத்தம்

இலக்கினத்திரண்டில் குருவிருந்தால் வேதசாஸ்திரங்கற்பா
இதமுடனேபுதனிருந்தால் தமிழில்வல்லோனும் [ன்
தெலுங்குகன்னடங்கற்பான் சனிசெவ்வாய்திற்கில்
தெளிவாகராகுகேது இரண்டோனும்சேர்த்தால்
பலவிதமாயன்னிய பாஷைமுதலாயுள்ள
பலபாஷைகீசபாஷை யெல்லாம்கற்று

நலமுடனேசமர்த்தராய் விளங்கியிந்த
ஞாலமதில்கீர்த்தியுட னிருப்பர்தானே. 13

உரை:—இலக்கினத்திற்கு இரண்டாமிடமாகிய வாக்கு ஸ்தானத்தில் குருபகவானிருந்தால் வேதசாஸ்திர புராணங் களைக் கற்றுணர்வார்கள். வாக்குஸ்தானத்தில் புதனிருந்தால் தமிழ்வித்தையில் தேர்ச்சியடைந்து கீர்த்தியாயிருப்பார். வாக்கு ஸ்தானத்தில் சனிபகவானாகிலும் செவ்வாயாகிலு மிருந்தால் தெலுங்கு கன்னட பாஷையும் கற்றுணர்வார்கள். வாக்குஸ்தா னாதிபதியும் இராகு பகவானும், கேது பகவானும் சேர்ந்திருந் தால் அந்நியபாஷை நீசபாஷை முதலான பலவித பாஷை களும் ஜாதகன் கற்றுணர்ந்து சமர்த்தனா யிருப்பதற்காகும்.

இலக்கினத்திற்கு சப்தமஸ்தானம், அஷ்டமஸ்தானத்தில் சூரியன் ஸ்தானத்தில் சந்திரனும் சந்திர ஸ்தானத்தில் சூரியனுமிருக்க தசமஸ்தானாதிபதியும் இந்த இரண்டுபேருடனே சேர்ந்திருந்தால் அந்த ஜாதகன் பதினேழும் வயதில் ஏறின தண்டிகை தனது ஆயுள்வரையிலும் ஏறி மகா ப்ரசங்கியா யிருப் பான். ஆனால், நடு வயதில் தன் மதத்லைதவிட்டு அந்நிய மதத்தைச் சேர்ந்திருப்பான். இது பூலோகத்தோர் சொல்லும் வாக்கியமாகும்.

இலக்கினத்திற் குடையவனும் சஷ்டமாதிபதியும் ஆறெட்டு பனிரெண்டிலிருக்க இவர்களுடனே பாபக்கிரகங்கள் சேர்ந்திருந் தால் ஜன்மபரியந்தம் வியாதியஸ்தனா யிருப்பான்.

இலக்கினஸ்தானாதிபதி நீசனானாலும் சூரியபகவானுடனே சேர்ந்திருந்தாலும் நாலிலொருபாகம் பலனாயிருப்பதற்காகும்.

உதயலக்கினத்தில் குருவிருக்க அவரைப்புதபகவான் பார்த் தாலும் சேர்ந்திருந்தாலும் அந்த ஜாதகனுடைய சீட்டை அரசர் கள் அன்பாக வாங்கிப் பார்த்துத் தமது சிரசிலே வைத்துக் கொள்வார்கள்.

மேஷவிருச்சிக ஜனன லக்கினமாக அந்த ஸ்தானத்தில் அங் காரக பகவா னிருந்தால் இராஜயோகமா யிருப்பதற்காகும். மிது னங் கன்னி ஜனன லக்கினமாக அந்த ஸ்தானத்தில் புதபகவா னிருந்தால் ஜாதகன் வித்யா சமர்த்தனாயிருப்பான். தனுசு, மீனம் ஜனன லக்கினமாக அந்த ஸ்தானத்தில் குருபகவானிருந் தால், வெகு பொருள் சேகரித்து யோகவானா யிருப்பான்.

## யோக பலன்

சுகஸ்தானத்தில் இராஜாவிருந்தால் மாளவயோகம் அதற் கிசைந்தபலன் அஸ்வம், யானை, தண்டிகை, ஆடை, ஆபரண

RangaRakes tamilnavarasam.com

மும் சகலவிதமான இரதகஜதுரகபதாதிகளமைந்த யோகமும், வெகுஜன போஷணையும் வருவாரை ஆதரித்தலுமான நல்ல பலனுண்டு. அந்த ஜாதகம் எந்தக் காட்டிலிருந்தாலும் அந்த ஸ்தானத்திலும் சகல விதமான போக பாக்கியமும் கிடைக்கும். மகர கும்ப லக்கினமாயிருக்க அந்த ஸ்தானத்திலே சனிபகவானிருந்தால் சகலவிதமான யோகமுண்டு. இலக்கினாதிபதியும், இராசிநாதனும் ஒரே கிரகமாயிருந்தால் முழு பலமென்றும், அதை புஷ்களயோகமென்று சொல்லும் பூபாலகனெனும் பேர்க்கு வாளுப் இருப்பான்.

எண்சீரடி விருத்தம்

மகிழுடனேமாதிறத்தில் ஜனித்தோருக்கு
மன்னும்சுகதுக்கமென்னும் விபரத்திற்கு
சுகஸ்தானத்தில் பருதிமதியும்ராகு
செவ்வாயுமிருந்து சத்ருக்ஷேத்ரமானால்
வெகுதுயரம் ஜனனவிடுமூவாண்டில்
வெறும்விடாய் பாம்புபெருச்சாளிரும்ந்து
தனமாய்ஜீரணித்து பந்துமித்திரர்
தனிபேதமாய்வெவ்வே ருய்ப்போவாரே. 14

உரை:—சுகஸ்தானத்தில் பருதி, குஜன், ராகுபகவானும் இருந்தாலும், அது சத்ரு க்ஷேத்ரமாயிருந்தாலும், அந்த ஸ்தானத்தில் ஜனித்த ஜாதகன்விடு மூன்றாண்டில் ஜீரணித்திடிந்து பாழ் வீடாகி அதில் பாம்பு, பெருச்சாளி, எலி முதலானவை வாசஞ்செய்யும். அக்கினியா லெரிந்துபோகும். சேர்ந்த பந்துமித்திரர்களும் சாமானியமாய் இருப்பிடம்விட்டு பல தேசத்திற்குப் போய்விடுவார்கள்.

சூரியனும்புதன்சுக்கிரன் மூன்றுபேரும்
சுகஸ்தானம் இரண்டேழாமிடத்திருக்க
பாரில்வெகுதனதான்ய சம்பத்தோடு
பராக்கிரமுளமந்த்ரீயோகம் பெற்றுய்வார்கள்
இராசிநாதனும்ஆறெட்டிற் குடையோனானால்
எங்கெங்குமலைந்து தேசாந்திரியாய்போவான்
வீரியமாய்லக்கினத்தோன் நட்பாட்சிஉச்சம்
விளங்கினுக்பலத்த ஜாதகமென்றேதே. 15

உரை:—சூரியன், புதன், சுக்கிர பகவானாகிய மூன்றுபேரும் சுகஸ்தானம், வாக்குஸ்தானம், சப்தமஸ்தானத்திலிருக்க உலகத்தோர் மெச்சுந்தன்மையான தனத்தான்ய சம்பத்தோடு மகா மந்த்ரனுப் அறிவு, ஆலோசனையிற் சிறந்த மந்திரியோகம் பெற்று வாழ்ந்திருப்பான். ஆனால், இராசிநாதனும் ஆறெட்டிற்

RangaRakes tamilnavarasam.com

குடையவனுமானால் தேசாந்திரியாய் அலைந்து திரிவான். இலக்கினஸ்தானாதிபதி நட்பு, ஆட்சி, உச்சஸ்தானத்தி லிருந்தால் பலத்த ஜாதகமென்று சொல்லவும்.

இலக்கினத்தோன் ஆட்சிஉச்சமாயிருக்க
இரண்டில்மால் பனிரெண்டில்புகரிருக்க
பலத்தஜாதகம் கூர்மையோகமாகும்
பருதிமால்புகரிரண்டில் நான்கிலிருக்கும்போது
நலமுடனேஜனித்தோர்கள் மந்திரியாவார்
நன்மதிபோதிக்கும் ராஜயோகவானும்
நிலையாகஒன்பதில் மால்புகரும்வியாழன்
நின்றுட்சியுச்சமெய்தில் புதையல்வாய்க்கும். 16

உரை :—இலக்கினாதிபதி ஆட்சி உச்சமாயிருக்கவும், இரண்டாமிடத்திலும் பனிரெண்டாமிடத்திலும் புதனும் சுக்கிரனுமிருந்தால் அந்த ஜாதகன் கூர்மையான யோகத்தை யனுபவிக்கும் பலத்த ஜாதகனாகும். ஆனால், சூரியன், புதன், சுக்கிரனும் வாக்குஸ்தானம் சுக ஸ்தானத்திலாவது இருக்கும்போது பிறந்தவன் மந்திரி யோகத்தை யநுபவிக்கும்படியான இராஜயோகவானு யிருப்பதற்காகும். ஒன்பதாமிடத்தில் புதன், குரு, சுக்கிரனிருந்தாலும் அந்த ஸ்தானங்களில் ஆட்சி, உச்சமாயிருந்தாலும் பூமியில் பூர்வ தனமாகிய புதையல் கிடைக்கும்.

சுகஸ்தானம் பாக்கியஸ்தானநாதன்
சுகஸ்தானத்திலிருக்க சுபர்வீடாகில்
கனவாகன முடையோனுயிருப்பான்
காணுமதில்நாலோனுமோர் ராசியேறில்
மகிழ்ராசிக் குடையோனோடும்சேர்ந்திருக்க
வாகனம் அஸ்வங்கிடைக்கும் புகரிருந்தால்
புகழ்தண்டிகைவரும் குருவிருந்தால்திரவ்யலாபம்
பொருந்தியேசுகமாக இருப்பர்தானே. 17

உரை :—சுகஸ்தானாதிபதி பாக்கியஸ்தானாதிபதியும் சுகஸ்தானத்திலிருக்க அது சுபர்வீடாகில் ஜாதகன் தேவவிமான முடையவனுயிருப்பான். சந்திரனும் சுகஸ்தானாதிபதியும் சம்பந்தமாகி இராசிநாதனுடனே சேர்ந்திருந்தால் குதிரைவாகனம் கிடைக்கும். சுக்கிரனிருந்தால் பல்லக்கு கிடைக்கும். குருவிருந்தால் திரவிய லாபம் கிடைக்கும்.

சித்தமகிழ்ஏழிடத்தோனுட னெத்தனைகோட்கள்தான்
சேர்ந்திருக்குமானாலும் ஜாதகர்க்கு
அத்தனைபேர்மனைவியருண் டாகுமென்று
அறிவிப்பாய்பகைநீச அஸ்தமனமானாலும்

RangaRakes tamilnavarasam.com

எத்ததியில்திசாபுத்தி வருமோவப்போது
ஏற்கெனவேமுந்தினபெண் போகுந்தானே
புத்திரனுண்டா மிரண்டாமனைவியர்க்கு
பொருந்தியேசந்திரன்சனியு மிருந்திட்டாலே. 18

உரை:—சப்தம ஸ்தானாதிபதியுடனே எத்தனை கிரகங்கள் சேர்ந்திருக்கின்றார்களோ அத்தனை மனைவியர்கள் உண்டாகும். ஆனால் பகை, நீசம் அஸ்தமனமாயிருந்தால் அந்த கிரகங்களின் திசாபுத்தியில் கிடைக்கும் முந்தின மனைவி மரணமாவாள். சந்திரனும் சனியுமிருந்தால் இரண்டாவது மனைவியர்க்குப் புத்திர பாக்ய முண்டாகும்.

இலக்கினத்திற்கிரண்டேழுபத் தோனுந்தான்
இனிதாயோர்ராசியிலே சேர்ந்திருக்க
பலதாரங்களைக்கொள்வான் திரேக்காணராசி
பார்த்துபலன் புகன்றிடுவாய்ஜாதகர்க்கு
தலமுடனே குடும்பத்தோன் ஐந்தில்மேவ
நற்புத்ரபாக்கியமுண்டா மிந்தகிரகங்கள்தன்
பலம்பார்த்துசொன்னாலே பொருந்துமென்று
பாரோர்க்குவிபரமாய்ப் புகலுவாயே. 19

உரை:—குடும்ப ஸ்தானாதிபதியும், களத்திர ஸ்தானாதிபதியும் ஜீவன ஸ்தானாதிபதியும் ஓர் இராசியிலிருந்தால் பல மனைவியரைச் சேர்ந்திருப்பான். ஆனால் திரேக்காண ராசி பார்த்து பலன் சொல்ல வேண்டும். குடும்ப ஸ்தானாதிபதியும் பஞ்சம ஸ்தானாதிபதியும் சேர்ந்திருந்தால் புத்ரபாக்கிய முண்டாகும் ஆனால் அந்த கிரகங்களின் பலத்தைக் கண்டு பலன் சொல்ல வேண்டும்.

ஐந்திடத்தோன் சத்துருஸ்தானத்தோடேனும்
ஆறுமிடத்தில்மேவ சத்துருவுடனேசேர
மைத்தனில்லை ஜாதகர்க்கு யென்றுரைப்பாய்
மறைந்தேனும்நவத்திருக்க அற்பாயுசுடையமைந்தன்
அந்தமுடன் ஒன்பதோன் மூன்றோனோடு
அமைந்தொருராசியிலிருக்க சற்புத்ரபாக்கியம்
சுந்தரமாகப்பிறந்து தீர்க்காயுசாக
சூழ்புவியில்தனவானாய் விளங்குவானே. 20

உரை:—பஞ்சம ஸ்தானாதிபதியும் சத்துரு ஸ்தானாதிபதியுடன் சேர்ந்திருந்தாலும் அல்லது ஆறுமிடத்திலிருந்தாலும் அந்த ஜாதகனுக்கு புத்திரபாக்கியங் கிடையாது. புத்திர ஸ்தானாதிபதி அஸ்தமனமாய் ஒன்பதாமிடத்திலிருந்தால் அற்பாயுசுடைய புத்திரருண்டாகும். பாக்கிய ஸ்தானாதிபதி மூன்றாமிடத்

RangaRakes tamilnavarasam.com

திற் குடையவனோடு சேர்ந்து ஒரு ராசியிலிருக்க சற்புத்திர பாக்கியம் பிறந்து தீர்க்காயுசாய் உலகத்தில் தனவந்தனாக வாழ்ந்திருப்பானென் றோதுவாய்.

இலக்கினத்தோனிருக்கின்ற ராசிநாதன்
இசைத்தைந்துமொன்பதில் லக்கினகேந்திரத்தில்மேவ
பலமாகமூலத்திரிகோண உச்சமாக
பருவதயோகமுடை யோனாயிருந்து
மலைகளிலும்க்ஷேத்திரதீர்த்தங் களிலும்சென்று
மந்திரங்கற்றுணர்ந்து மூலிகைகள்காண்பான்
நலமுடனேசித்புருஷ னாய்விளங்கி
ஞாலத்தில்பாக்கியவானா யிருப்பான்தானே. 21

உரை:—இலக்கினத்தோ னிருக்கின்ற ராசிநாதன் ஐந்து ஒன்பது அல்லது கேந்திரங்களிலிருக்க அந்த ஸ்தானம் மூலத்திரிகோணமாகவும், உச்சஸ்தானமாகவு மிருந்தால் அந்த ஜாதகன் பருவத யோகத்தை யனுபவித்து வனங்களிலும் க்ஷேத்திரங்களிலும் திரிந்து தீர்த்தஸ்நானஞ்செய்து மகான்களைத் தரிசித்து மந்திரங்கற்றுணர்ந்து அருமையான மூலிகைகளைக் கண்டு காயசித்திபெற்று சித்புருஷனாய் விளங்கி பூலோகத்தில் பாக்கியவானா யிருப்பதற்காகும்.

சுகஸ்தானந்தனிலேனும் ஜனனராசி
சூழ்ந்தகேந்திரஸ்தானங் களிலெங்கேனும்
மகிழ்வாய்குருஇருந்தால் கெஜகேசரியோகமாகும்
மாக்ஷிமையாய் ஆனைசேனை குதிரைபாக்கியம்
மிகமகிழ்வாய்ஆதிபத்ய மனுபவித்து
மேன்மையுடனிருப்பார்கள் லக்கினத்தோன்
தகுத்தலக்னத்திருக்க யோகவானாய்
தாரணியோர்புகழ்ந்துரைக்க வாழ்குவாரே. 22

உரை:—நான்காமிடத்திலாயினும் ஜனனராசியின் கேந்திரஸ்தானங்களிலாயினும் குருபகவானிருந்தால் கெஜகேசரி யோகமாகும். அதன் பலன் ஆனை, சேனை, குதிரை முதலான சம்பத்துகள் பெற்று சுகாதிபத்தியபலனை அனுபவிக்கும்படியாகச் செய்யும் மேன்மையா யிருப்பார்கள். இலக்கினத்தில் இலக்கினாதிபதி ஆட்சியாயிருக்க சகலருக்கும்யோக்கியவானாய் தரணியோர் புகழ்ந்துரைக்கும்படியாக வாழ்ந்திருப்பார்கள். ஆனால் திசாபுத்தி கவனித்து ஆராய்ந்து பலன் சொல்லவும்.

அன்புடனேநாலோனும் சுகத்தில்மேவ
அவன்வெகுசேனைக் கதிபனாயிருப்பான்
மன்னனும்சப்தமாதிபதி ஏழிலுய்ய
மகாமந்திரியோகமா யிருப்பானென்பாய்

3

RangaRakes tamilnavarasam.com

தன்னயமாய் தசமஸ்தானத்தோன்பத்தில்
நலமுடனேயிருந்தாலும் மந்திரியோகம்
இன்னவிதம் ஜாதகரின்பலனாராய்ந்து
இனிதாகவேபுகல்வீர் தரணியோரே. 23

உரை:—சுகஸ்தானாதிபதி சதுர்த்த கேந்திரத்தில் ஆட்சி பெற்றிருக்க அந்த ஜாதகன் வெகு சேனைக்கதிபதியாயிருப்பான். சப்தமஸ்தானாதிபதி ஏழாமிடத்திலிருக்க மகா புத்திசாலியாய் விளங்கி மந்திரியோகம்பெற்று கீர்த்திவந்தனாயிருப்பதற்காகும். பத்தாமிடத்ததிபதி தசமஸ்கேந்திரத்திலிருந்தாலும், மந்திரி யோகத்தை யனுபவிப்பானென்று அவரவர்கள் திசாபுத்தி பலனை யும் ஆராய்ந்து பலன் சொல்லுவீர்கள்.

ஒன்பதோன் சசிமந்தன்ஆறில்மேவ
ஒருமித்து ஆறுளோனுடனேசேர
தன்மையுடனவன்பிதா ராத்திரியிலிறப்பான்
சந்திரனுனல்பகலில் மரணமாவான்
வன்மையாயாரும்ராசி சரமாய்ரவியிருந்தால்
மைந்தன்பிறக்கும்போது தந்தைமறைந்திருப்பான்
தன்மையாய்ஸ்திரத்தில்ரவி யிருந்தால்தந்தை
நலமுடனே தன்தேசந்தனிலிருப்பான். 24

உரை:—பாக்கியஸ்தானாதிபதியும், சந்திரனும் சனிபகவா னும் சத்துரு ஸ்தானத்திலிருந்தால் அந்த ஜாதகனுடைய பிதா இராத்திரியிலிறப்பான். சந்திரனே தனியாயிருந்தால் பகலில் மரணமாவான். ஆறுக்குடையோன் ராசி சரமாய் அந்த ஸ்தா னத்தில் சூரியனிருந்தால் தகப்பன் தன் தேசத்திலேயே இருப் பான்.

## நேத்திர ஸ்தானபலன்

ஜென்மலக்கினம்மேஷமாய் ரவியிருந்தால்
ஜெனித்தவன் நேத்திரரோகியாயிருப்பான்
அன்புடனேகடகலக்கினம் ரவியிருந்தால்
ஆரும்பாநேத்திரபங்க மென்றேசொல்லு
இன்புடனேதுலா சிங்கந் தனிலேசூரியன்
இருந்தாலும் இரவில்கண் தெரியாதப்பா
பன்னிரண்டுஇரண்டில் ரவிபாபர்சேர்ந்தால்
பலநாளும்கண்நோயால் கலங்குவாரே. 25

உரை:—ஜன்ம லக்கினம் மேஷமாயிருந்து சூரியனிருந்தால் ஜாதகன் நேத்திர ரோகியாயிருப்பான், கடகலக்கினமாகி சூரிய னிருந்தால் நேத்திர பங்கமாம், துலாலக்கினம் சிங்க லக்கினமு

யிருந்தால் இரவில் கண் தெரியாது. இரண்டாமிடம் பனி ரெண்டாமிடத்தில் சூரியன் பாபக்கிரகங்களுடனே சேர்ந்திருந் தால் சதாகாலமும் கண் வியாதியா யிருக்கும்.

இலக்கினாதிபதிகேந்திர ஸ்தானாதிபதியும்சுக்கிரன்
இரண்டெட்டிலிருந்தாலே குருடனாவான்
லக்கமுடன்சுக்கிரனும் சந்திரனிருந்தால்ரெண்டு
கண்களுக்குமனமென்று மதித்துசொல்வாய்
இலக்கினேசன்மதிசுக்கிரன் ஆறுஎட்டுபனிரெண்டில்
இருந்தாலேபிறவி குருடாயிருப்பான்
நலமிலாபிதுர்ஸ்தானத் திருந்தால்தந்தை
நவிந்துகுருடாவானென் றோதுவாயே. 26

உரை :—இலக்கினாதிபதியும் கேந்த்ர ஸ்தானாதிபதியும் சுக்கிரனும் இரண்டு எட்டில் இருந்தால் அந்தகனாவான். அந்த ஸ்தானங்களில் சுக்கிரனும் சந்திரனுமிருந்தாலும் இவர்கள் விரய ஸ்தானமாகிய பனிரெண்டிலிருந்தாலும் பிறவிக் குருடாயிருப் பான். ஆனால் ஒன்பதாமிடமாகிய பிதுர்ஸ்தானத்தில் இலக்கி னாதிபதி கேந்திர ஸ்தானாதிபதி சுக்கிரனும் சேர்ந்திருந்தால் ஜாதகனுடைய தகப்பன் அந்தகனா யிருப்பான்

*வேறு விருத்தம்*

வாக்கோனும் ஏமோனும் சுக்கிரனும் ஆறெட்டில் பனிரெண் டில்பாபர், சேர்க்கையுற்றிருந்திட்டாலே சேர்ந்த கிரகங்கள் போல, நோக்கியஸ்திரீகள்வாய்க்கும் நேர்ந்தே ழெட்டில்மதி யுஞ் செவ்வாய், பார்க்கவன் சொட்சேத்திரம் பெற்றால் பஹுமாய் ஸ்திரீ சேர்க்கையாமே. 27

உரை :—வாக்கு ஸ்தானாதிபதியும் சப்தமாதிபதியும் ஆறெட்டு பன்னிரண்டில் சேர்ந்திருந்தால் அந்த ஸ்தானத்தில் எத்தனை கிரகங்களிருக்கின்றதோ அத்தனை ஸ்திரீகள் வாய்க் கும், ஆனால், ஏழு, எட்டில் சந்திரனும், செவ்வாயும் சேர்ந்து சூரியனும் ஆட்சிபெற்றிருந்தால் அந்தந்த கிரகங்களுக்கிசைந்த படியே ஸ்திரீகள் சேர்க்கையுண்டாகும். ஆனால், கிரகங்களின் பலமறிந்து திசாபுத்தி அந்தர தாதர்களின் கால நிலையை கவனித்து பலன் சொல்லவேண்டும்.

*எண்சீரடி விருத்தம்*

இலக்கினகேந் திரங்களிலே சுபரிருக்க
இசைந்தி லக்கினத்தில் பாபரிருக்கநோக்க
லக்கமுடன் விபசாரி பெற்றபெண்ணை
கலியாணஞ் செய்திடுவான் கலனிப்பாயே

RangaRakes tamilnavarasam.com

பலமுடன் லக்கினத்தில் குஜன்ரெண்டில்மந்தன்
பன்னிரண்டிலேமதியும் ஒன்பதிலேராகு
நலமுடனே சேர்ந்திருந்தால் பகலில்போகம்
நடத்துவான் ஸ்திரீ இச்சை மிகுதியாலே. 28

உரை:—இலக்கின கேந்திரத்திலே சுபரிருக்க, ஜனன லக்கினத்தில் பாபக்கிரகமிருக்க பார்க்க அந்த ஜாதகன் விபசாரி பெற்ற பெண்ணைக் கலியாணஞ் செய்துகொள்வான். ஆனால், இலக்கினத்தில் செவ்வாயும் இரண்டில், சனி பனிரெண்டில் சந்திரனும், ஒன்பதில் இராகும் சேர்ந்திருந்தால் பகலில் போகம் செய்பவனும் ஸ்திரீயிச்சை யுடையவனு மிருப்பதாகும்.

நன்மையாய் கேந்திர திரிகோணந்தன்னில்
நலமுடனே லக்கினாதி பதியிருக்க
ஒன்பதோன் பரம உச்சனுமிருக்க
ஒற்றுமையாய் லக்கினாதிபதி பலத்திருக்க
இன்பமுடனே தனதான்ய சம்பத்தோடே
இலக்ஷ்மி கடாக்ஷம்பெற்று மகிழுவாரே
என்றினிதாய் ஜாதகநூல் பாத்தாராய்ந்து
எடுத்துரைப்பீர் ஜோதிடரே தரணியோர்க்கே. 29

உரை:—இலக்கினகேந்திர திரிகோணங்களில் இலக்கினாதி பதி யிருக்க ஒன்பதிற்குடையோன் பரம உச்சனுமிருக்க இலக்கினாதிபதி பலத்திருக்க தனதான்ய சம்பத்துடனே லக்ஷ்மி கடாக்ஷம் பெற்று சுகஜீவியாய் மனமகிழ்ந்திருப்பார்கள்.

செவ்வாய்மூன்று மிடத்தில் பெலத்திருக்க
ஜெகமீதில் சகோதரபாக்கிய மென்மேலுண்டாம்
ஒளவியமாய் மூன்றோனும் ஆறோனும்கூடி
அவர்கள் பகையுடனே யோர்ராசியேறில்
எவ்விதமும் இந்திரஜால மயேந்திரஜாலம்
எப்போதும் செய்துசூது வித்தைகற்று
ஒவ்வியே பொருள்சேர்த்து செலவழித்து
ஓதுகின்ற பூதலத்தோர்க் கஞ்சிடாரே. 30

உரை:—செவ்வாய் பகவான் ஆட்சி உச்சமாய் மூன்றுமிடத்தில் பலத்திருக்க பலத்த சகோதர பாக்கிய முண்டாகும். மூன்று மிடத்ததிபதியும் ஆறுமிடத் ததிபதியும் ஒருவர்க்கொருவர் பகை பெற்று ஓர் இராசியிலிருந்தால் ஜாதகன் கோபமும் குரோதமு முடையவனாய் க்ஷாத்ரியமுடனே மாந்திரீகளை நேசித்து மந்திர தந்திரங்கற்று இந்திரஜால மயேந்திரஜாலமும், சூதுவித்தையும்

RangaRakes tamilnavarasam.com

கற்று மோச தந்திரத்தினால் வெகுபொருள் சேகரஞ்செய்து பல விதமாய்ச் செலவுசெய்து தரணியோர்க்கஞ்சாத தைரியசாலியா யிருப்பான்.

பத்தாவ திடத்துளோன் நாலோனுங்கூடி
    பகைமாயோர் ராசியிலிருக்க மதியுஞ்சுக்கிரன்
சுத்தமாய் நட்பாட்சி யாயிருக்க
    குற்புவியின் ஜாதகனும் வித்தைகற்று
எத்தாக நெற்றியிலே திலதமிட்டு
    எவர்களுங் காணாதுலகி லுலாவுவானே
சுத்தமாய்தாவோன் லக்கினமன் பதிலிருந்து
    குழ்ந்தபுதன் குருவானால் அஞ்சனக்காரனுமே. 31

உரை :—சுகாதிபதியும் ஜீவன ஸ்தானாதிபதியும் ஓர் ராசியி லிருக்க அவருடனே சந்திரனுஞ் சுக்கிரனுஞ் சேர்ந்து நட்பாட்சி யாயிருக்க, ஜாதகன் அநேக வித்தைகற்று மாந்திரீகத்தில் தேர்ச்சி யடைந்தவனாய் நெற்றியில் திலதமிட்டுக்கொண்டு உலகத்தில் எவருங் காணாமல் உலாவிக்கொண்டிருப்பான். நாலா மிடத்ததிபதி இலக்கினத்திலாகிலும் ஒன்பதாமிடத்திலாகிலு மிருந்தாலும் அவர்களுடனே புதனும் குருவும் சேர்ந்திருந்தால் பாதாள அஞ்சனம் போட்டுப் பார்க்கும் சமர்த்தனா யிருப்பான்.

சுகாதிபதிஇராசி யோன்பத்திலிருக்க
    குழ்ந்துமதிசேர்ந்தாலும் பார்த்திட்டாலும்
ஜெகமீதுஆகர்ஷண கோகரணவித்தைகற்பான்
    சுகமிரண்டுக்குடையோன் நட்பாட்சியாயிருக்க
மகிழுடனேபுத னவரோடிருக்கபார்க்க
    மாந்திரீகம்ரசவாத வித்தைகற்பான்
உகந்துரவிஅவர்களுடன் சேர்ந்திட்டாலே
    உத்தமதெய்வத்தை பூஜிக்கிருப்பான்தானே. 32

உரை :—நாலாமிடத்திற் குடையவனும் இராசிநாதனும் பத்தாமிடத்திலிருக்க அவர்களுடனே சந்திரன் சேர்ந்தாலும், பார்த்தாலும், பூலோகத்தில் மகா சமர்த்தனாய் விளங்கி ஆகர்ஷண கோகரண வித்தைகற்று மாந்திரீக வல்லவனாவான். இரண்டுக் குடையோன் நட்பு, ஆட்சியாயிருக்க அவருடனே புதபகவா னும் சேர்ந்தாலும், அல்லது பார்த்திட்டாலும் மாந்திரீகமும் ரச வாத வித்தையும் கற்றுணர்ந்து, கீர்த்திவந்தனா யிருப்பான். ஆனால், சூரியனும் அவர்களுடன் சேர்ந்திருந்தால் உத்தமமான தேவதா பூஜைசெய்துக் கொண்டு பகவத்பக்தியானந்தனாயிருப் பான்.

இலக்கினத்திதோன் ராசியோன்பத்தோனும்கூடி
    இனிநாலோர்ராசியிலே சேர்ந்திருந்தால்

RangaRakes tamilnavarasam.com

நலமாகசித்தர்களைப் போலெந்தாளும்
நரைதிரைமூப்பில்லாமல் காண்போர்மெச்ச
உலகமதில்வெகுகால மிருந்துவாழ்ந்து
உண்மையுள்ள மோக்ஷத்தையடைகுவானே
நிலையறிந்தஜாதகத்தின் பலனூராய்ந்து
நிதானமாய்ஜாதகர்க்குப் பலன்சொல்வீரே. 33

உரை:—இலக்கினாதிபதியும் இராசிநாதனும் ஜீவனஸ்தானாதிபதியும் ஓர் இராசியிலே சேர்ந்திருந்தால் அந்த ஜாதகன் சித்தர்களைப்போல சதாகாலமும் நரைதிரை மூப்பில்லாமல் காண்போர் மெச்சும் தன்மையாய் வெகுகாலம் வரையில் பூலோகத்தில் ஜீவித்திருந்து அந்தியகாலத்தில் மோக்ஷத்தை யடைவான். ஆனால் மற்ற கிரகங்களின் நிலையையும் ஆராய்ந்து பலன் சொல்ல வேண்டியது.

அஷ்டமத்தோன் லக்கினத்தோனிரண்டுபேரும்
அன்பாயோர் ராசியிலேசேர்ந்திருக்க
இஷ்டமுடன்குஜனவரை சேர்ந்திடவும்பார்க்க
இவர்நின்ற ராசிபகையாயிருக்க
துஷ்டதெய்வபூஜையினால் சூன்யவித்தைகற்று
சூதாகமனிதர்களைக் கொல்லுவானே
கஷ்டமாய்மனிதர்களை வியாதியாலும்
கலங்கிடவேசெய்வானென் றறிகுவீரே. 34

உரை:—அஷ்டமஸ்தானாதிபதியும் இலக்கினாதிபதியும் ஒரு இராசியிலே இருக்கும்போது, அவர்களுடன் செவ்வாய் பகவானும் சேர்ந்திருந்தாலும் அல்லது பார்த்தாலும் அவர்கள் நின்ற ராசிபகை வீடாயிருந்தால் அந்த ஜாதகன் துஷ்ட தெய்வங்களை பூஜித்து சூன்ய வித்தைகளைக் கற்றுக்கொண்டு மனிதர்களை சூதுமார்க்கமாய் வியாதியால் கஷ்டப்படுத்துவதும் கொல்லுவதுமாயிருப்பான்.

ஜன்மத்தோன் நாலோனும் ஏழோனுந்தான்
சேர்ந்தோர்ராசியிலவர்கள் சுபரேயாகி
அன்புடனேபார்த்தாலும் சேர்ந்திட்டாலும்
அவன்தனதுநற்குணத்தால் பில்விருன்யம்
நன்மையாயெடுத்திட வல்லவனேயாகும்
நாடியேஇவன்சமர்த்தையே சொல்வதற்கு
என்னவிதம்நினைத்தாலு மாகாதென்று
எவர்களுமேபுகழ்த்துரைப்பா ருலகமீதே. 35

உரை:—இராசிநாதனும் சுகாதிபதியும் சப்தமஸ்தானாதிபதியும் சுபக்கிரகமாயிருந்து, அவர்கள் ஓர்ராசியிலிருந்து இலக்கினத்

ரைப் பார்த்திருந்தாலும், சேர்ந்திருந்தாலும், அந்த ஜாதகன் நற்குணத்திற் சிறந்த உத்தமனும் விளங்கி மாந்திரீக வித்தை கற்று பில்லி சூனியங்களை யெடுத்துவிட்டு மனிதர்களுக்கு நன்மை செய்யும் பரோபகாரியென்று பல பேர் மெச்சத் தன்மையான கீர்த்தியும் புகழும் பெற்றிருப்பான்.

இலக்கினத்தோன் பனிரெண்டாமிடத்துளோனும்
இனிதாயோர் ராசியிலேசேர்ந்திருக்க
கலக்கமிலாதவனிரண்டாம் நட்சத்திரத்தோனும்
கலந்திருந்தால் ஆகாச அந்தரசக்ரமாகும்
நலமுடனே இத்தகைய யோகத்தாலே
நன்மையாய்ஆகாசத்தில் கோபுரத்தின்மீதும்
பலமானகம்பங்கட்டி மாயஜாலவித்தை
பாரோர்முன் விளையாடி மகிழுவாரே. 36

உரை:—இலக்கினுதிபதியும் பனிரெண்டா மிடத்ததிபதியும் சேர்ந்து ஓர் இராசியிலிருக்க, இவர்களுடனே அந்த ஜாதகனுடைய இரண்டாவது நட்சத்திரத்தோனும் சேர்ந்திருந்தால் ஆகாச அந்தர சக்கர யோகமாகும். இந்த யோகபலமானது காண்போர் மனமிரளும் தன்மையாக உயரமான கம்பத்தை பூமியில் நாட்டி கோபுரத்தின் மீதும், ஆகாசத்திலும் மாயஜால வித்தையாடி பார்ப்பவர் பயங்கரங் கொள்ளும் தன்மையாக சாமர்த்தியங் காண்பிப்பார்.

இலக்னேசன் ராசியோன் ஏழிலேயிருக்க
இனியபலவேஷவித்தை தனிற்சிறந்தோன்
கலக்கமிலா ஆறோனும் செவ்வாய்சேர்ந்திருக்க
கடினப்பகைவீட்டாக இருக்குமானால்
பலர்மீதுகோள்சொல்லி குடிகெடுப்பான்
பகையின்றேல் சாமான்யமாயிருப்பான்
நிலையாகக்கிரகநிலை ஆராய்ந்தன்பாய்
நிதானமாய் பலனுரைப்பீர் ஜோதிடவல்லோரே. 37

உரை:—இலக்கினுதிபதியும் இராசிநாதனும் சப்தம ஸ்தானத்திலிருந்தால் பலவித்தை கற்றுணர்ந்து பலவித வேஷங்களாய் ஆடிக்கொண்டிருப்பான். ஆறுக்குடையவனும் செவ்வாயும் பகையாய் சேர்ந்திருந்தால் அந்த ஜாதகன் பலர்மீதும் கோள்சொல்லிக் கொண்டு ஒரு குடியை ஒன்பது குடியாய்க் கலைத்து, காண்போர் இகழும் தன்மையாக கலகப்பிரியனுயிருப்பான். ஆனால் சத்ரு க்ஷேத்ரமில்லாமல் மித்துரு க்ஷேத்ரமாயிருந்தால் சாதாரணமாயிருப்பார்கள்.

RangaRakes tamilnavarasam.com

## ஆயுள் ஸ்தான பலன்

எண்சீரடி விருத்தம்.

இலக்கினத்தோன் அஷ்டமத்தோனுடனேகூடி
இசைந்த தசமாதிபதி மூவர்சேர்ந்து
பலமானகேந்திர திரிகோணமுற்றால்
பாரிலவர் தீர்க்காயுளாய் வாழ்வார்கள்
நலமுடனேலக்கினேசன் அஷ்டமத்தோன்
நாடியேசரத்திருந்தால் தீர்க்காயுளாகும்
கலக்கமுடன் ஸ்திர உபயராசியாகில்
கழறுவாய்மத்திபஆயுளென்றே 38

உரை:—இலக்கினாதிபதி, அஷ்டம ஸ்தானாதிபதி, தசம ஸ்தானாதிபதியுஞ் சேர்ந்து கேந்திர திரிகோணத்திலிருந்தால் ஜாதகன் தீர்க்காயுசாய் ஜீவித்திருப்பான். இலக்கினத்தோனும், அஷ்டமத்தோனும் சரத்திலிருந்தால் தீர்க்காயுசா யிருப்பார்கள். உபயராசியிலிருந்தால் மத்திப ஆயுசாய் ஜீவித்திருப்பார்கள்.

ஜன்மலக்கினாதிபதி அஷ்டமத்தோன்
தசமாதிபதி யிவர்கள்மூன்றுபேரும்
நன்மையாய் மித்ருக்ஷேத்ரந்தனிலிருக்க
நட்பினரும்சனிபார்க்க ஆயுள்விர்த்தி
அன்புடனேலக்கினாதிபதி திரிகோணகேந்திரத்தில்
அமைந்துமித்ருராசிகளி லிருந்திட்டாலும்
நன்மையாய் சுபக்கோள்கள்சேரபார்க்க
தரணியில்தீர்க்காயுசாய் ஜீவிப்பாரே. 39

உரை:—இலக்கினாதிபதியும் அஷ்டமாதிபதியும் தசம ஸ்தானாதிபதியுமாகிய இம்மூன்று கிரகங்களும் மித்ரு க்ஷேத்திரத்திலிருக்க அவர்களை மித்ரு கிரகங்களும் ஆயுள்காரகனாகிய சனிபகவானும் பார்த்தால் ஜாதகனுக்கு ஆயுள்விர்த்தியாகும். இலக்கினாதிபதி திரிகோண கேந்திரங்களில் சுபக்கிரகங்களிருந்தாலும் பார்த்தாலும், ஜாதகன் பூலோகத்தில் தீர்க்காயுசாய் ஜீவித்திருப்பான்.

இலக்கினத்தோன் திரிகோணகேந்த்ரமேறி
இனிதுடனே மித்ரராசியிலிருக்க
பலமுடனே சுபக்கிரகம்பார்க்கசேர
பாரில்வெகுநாளிருப்பான் ஆயுள்விர்த்தி
கலக்கமுடன் பாபர்திரிகோணகேந்திரம்
கலந்துசுபருடனிருக்க லக்கினநாதன்
பலவானுயிருந்தாலே ஆயுள்விர்த்தி
பார்தனில்தீர்க்காயுசாய் விளங்குவாரே. 40

உரை:—இலக்கினாதிபதி திரிகோண கேந்திரத்தில் மித்ரு ராசியிலிருக்க சுபக்கிரகம் பார்த்தாலும், சேர்ந்தாலும் உலகத்தில் வெகுநாளிருந்து, ஆயுள் விர்த்தியடைந்து தீர்க்காயுசா யிருப்பார்கள். இலக்கினாதிபதி திரிகோண கேந்திரத்திலிருந்து சுபக்கிரகங்களுடனே சேர்ந்து பலவானாயிருந்தால் ஆயுள் விர்த்தியாகும்படியான தீர்க்காயுசாய் ஜீவித்திருப்பதற்காகும்.

சஷ்டாஷ்டம வியத்தில்பாபர்சேர
சார்ந்துசுபர் திரிகோணகேந்திரமேற
இஷ்டமுடன் லக்கின நாதன்பலத்திருக்க
இனிதுடன் ஜாதகன் தீர்க்காயுசாகவாழ்வான்
நஷ்டமிலாமதிக்கேழில் நாவில்பத்தில்
நாடியே குருபுகருமிருந்திட்டாலே
துஷ்டரின்சேர்க்கையின்றி காலமெல்லாம்யோகம்
துடர்ந்துதீர்க்காயுஸாய் ஜீவிப்பாரே. 41

உரை:—இலக்கினத்திற்கு ஆறு, எட்டு, பனிரெண்டில் பாபகிரகங்களிருக்கவும், சுபக்கிரகங்கள் திரிகோண கேந்திர ஸ்தானத்திலிருக்கவும், இலக்கினாதிபதி பலத்திருக்க ஜனனமான ஜாதகன் தீர்க்காயுளாக வாழ்வான். பூர்ணசந்திரனுக்கு ஏழில், நாலில், பத்தில் குரு, சுக்கிரன் சேர்ந்திருந்தால் ஜாதகன் சன்மார்க்கனாய் துன்மார்க்கமின்றியே உத்தமனாய் மரணபரியந்தம் நல்ல யோகபலனை யனுபவித்து தீர்க்காயுளாய் ஜீவித்திருப்பதற்காகும்.

தன்னுடையலக்கினத்தோன் அஷ்டமத்தோன்
சரராசியாயிருந்தால் தீர்க்காயுளாதும்
பன்னியஉபயமென்றால் மத்திபாயுளாதும்
பார்தனிலேஜாதகர்க்கு சரத்திருந்தால்
தன்மையில்அற்பாயு ளமைந்திருக்கும்
நம்பாதேஜாதகனை யிருப்பானென்று
தன்மையுடன்திசாபுத்தி யாராய்ந்தன்பாய்
தரணியோர்க்குரைத்திடுவீர் ஜோதிடவல்லோரே. 42

உரை:—இலக்கினாதிபதியும் ஆயுள் ஸ்தானாதிபதியும், சர ராசியிலிருந்தால், தீர்க்காயுஸாயிருப்பதற்காகும். ஆனால், உபய ராசியிலிருந்தால் மத்திப ஆயுளாகும். ஸ்திர ராசியிலிருந்தால் அற்பாயுளாகும். ஆகையால், இந்த ஜாதகனுடைய திசாபுத்தியையும் ஆராய்ந்துணர்ந்து, ஆயுள் பலன் சொல்லவேண்டும்.

## தன போக சுக வாகன பலன்

இலக்கினத்தில்சுபக்கிரக மிருக்கபார்க்க
இனிதுடனேசுகவானா யிருக்கலாகும்



RangaRakes tamilnavarasam.com

தலமாய்ரெண்டாம்ராசிக்கதிபன் கேந்திரகோணம்
 நாடியேஆட்சி உச்சமாயிருந்து
பலமுடன்மித்திரர்சேர்க்கை பார்வையானால்
 பலவித்தைகற்றுணர்ந்து கீர்த்தியாளாய்
கலக்கமிலாஉத்தியோக வர்த்தகமுஞ்செய்து
 காலமெல்லாம்தனவானா யிருப்பர்தானே. 43

உரை:—ஜனன லக்கினத்தில் சுபக்கிரகமிருந்தாலும், பார்த்தாலும் சுகஜீவியா யிருப்பதற்காகும். இரண்டாம் ராசிக்கதிபன் கேந்திரத்திலாகிலும் திரிகோணத்திலாகிலும் ஆட்சி உச்சமாயிருந்து நட்பு கிரகம் சேர்க்கையா யிருந்தாலும், பார்வையானாலும் பலவிதமாகிய சமர்த்துடன் கல்வியில் தேர்ச்சியடைந்து கீர்த்தி பிரகாசமாய் உத்தியோகஞ் செய்தும், வியாபாரஞ்செய்தும் பலவிதமாய் திரவிய சேகரஞ்செய்து மரணமாகும் வரையிலும் சுகஜீவியா யிருப்பதற்காகும்.

சுகபாக்கிய ஸ்தானாதிபதிகளானோரை
 சுபக்கிரகங்கள்சேர்ந்தும் பார்த்திட்டாலும்
தகுதியாய்கேந்த்ர திரிகோணமானால்
 தக்கபடிமிக்கபலன் கிடைத்துநாளும்
வெகுதனவானுகியே வாகனபலன்கள்
 வேணபடியே கிடைக்குமென்றுசொல்வாய்
மகிழுடனே ஜாதக லக்ஷணத்தையோர்ந்து
 மதித்துரைப்பாய் ஜாதகர்க்குப்பலனைத்தானே. 44

உரை:—நான்காமிடத் ததிபதியும், ஒன்பதாமிடத் ததிபதியும் கேந்த்ர திரிகோண க்ஷேத்திரத்திலிருந்து சுபக்கிரகங்கள் சம்பந்தமானாலும் பார்வைபெற்றாலும், சமயோசிதமாய் வெகுலாபங்கிடைத்து சகலரும் புகழுந்தன்மையாக வாகனபலன் கிடைக்கும். ஆகையால், இலக்கின திசாபுத்தி பலனை ஆராய்ந்து பலன் சொல்லவேண்டும்.

ஒன்றிரண்டொன்பதுநான்கு பதினொன்றுக்கானோர்
 ஓதுங்கேந்திரங்களிலே சுபரோடுற்றால்
பொன்பெருகும் சேகரிப்பான் தனவானாக
 பொருந்தியொன் பதுபத்தோர் சேர்ந்திருந்தால்
அன்புடனே மேவான யோகமுண்டு
 ஆஸ்திபூள் திதியுடனே சுகித்திருப்பார்
தன்மையுடனிவர்களை தனவானென்று
 தரணியோர் புகழ்ந்துரைப்ப ரென்பர்தானே. 45

உரை:—இலக்கினஸ்தானம், தனஸ்தானம், சுகஸ்தானம், இலாபஸ்தானமாகிய இந்த நான்கு வீட்டுக்குடைய கிரகங்கள்

RangaRakes tamilnavarasam.com

கேந்திர ஸ்தானங்களிலேயிருந்து சுபக்கிரகங்களுடன் சேர்ந்திருந்தால் பொன், பொருள் பூஸ்திதிகள் சேகரித்து தனவந்தனுயிருப்பதற்காகும். ஆனால், பாக்கியாதிபதியும், ஜீவஸ்தானாதிபதியும் சேர்ந்து தமது வீட்டிலே ஒருவர்க்கொருவர் பரிவர்த்தனமாய் மாறி யிருந்தாலும் மேலான யோகபலனை யநுபவித்து சுகானந்தமா யிருப்பார்கள்.

குருசுக்கிரன் புதன்சந்த்ரன் திரிகோணகேந்த்ரம்
குறிப்பான வாபத்தி லிருந்தாரானால்
பெருமையாய் நல்யோக பலனைத்தந்து
பொன்பொருளும் தருவார்கள்ஜாதகர்க்கு
தருணமேபாபர் மாரகாதிபரை சேர்ந்தும்
தங்கள்மேல் பார்வையவர் செலுத்தினாலும்
பொருளில்லா வறுமைபிணி யதிகரிக்க
பூதலத்திலே துன்பம் செய்குவாரே. 46

உரை :—சுபக்கிரங்களாகிய குரு, சுக்கிரன், புதன் வளர்பிறைச்சந்திரன் இந்நால்வரும் கேந்த்ரதிரிகோண ஸ்தானத்திலிருந்தால் ஜாதகர்க்கு நல்ல யோகபலனைத்தந்து தனதான்ய சம்பத்துடனே சுகஜீவியாய் வாழ்ந்திருக்கும்படியாகச் செய்வார்கள். ஆனால், பாபக்கிரகங்கள் மாரகாதிபதிகளுடனே சேர்ந்தாலும் பார்வை பெற்றாலும் வறுமை, பிணி, துக்கமும் அதிகரிக்கும் படி செய்வார்கள்.

புகர்குருவும் உபயகேந்த்ரா திபரேயாகில்
பொருந்துமே ஜாதகர்க்கு பலத்ததோஷம்
மகிழாகஆட்சிஉச்ச மாயிருந்தால்
மதிப்புண்டு வெகுயோகம் கிடைக்குமப்பா
சுகமாக நட்புதிரி கோணத்திருந்தால்
சொல்லுவாய் மத்திம பலனுண்டாமே
திகழுமூன் றெட்டு வியத்திருந்தால்
தீராத துன்பமுண் டென்றுசொல்வாய். 47

உரை:—சுக்கிரனும், குருவும், உபயராசி கேந்திர ஸ்தானங்களிலிருந்தால் ஜாதகர்க்கு பலமான தோஷமுண்டு. ஆனால், ஆட்சி உச்சமாயிருந்தால் மிகவும் பெருமையும் கீர்த்தியும் வாய்ந்த வெகு யோகபலனை யநுபவிக்கச் செய்வார்கள். அவர்கள் நட்புஸ்தானம், திரிகோண ஸ்தானங்களிலிருந்தால் மத்திம பலன் தருவார்கள். குரு, சுக்கிரன் மூன்று, ஆறு எட்டு, பனிரெண்டிலிருந்தால் தீராத துன்பமும் துயரமும் நேரிடும்.

RangaRakes tamilnavarasam.com

இன்பமாக சப்த கிரகங்கள் நீங்க
    இராகு கேதுக்களுக்கு சுவீடில்லை
என்னென்ன கிரகத்தோடே சேர்ந்தாலும்
    எத்தெந்த வீட்டிலிருந் தாலுமந்த
தன்மையாய் க்ஷேத்திரபலன் கொடுப்பதோடு
    தன்னுடனே சேர்ந்த கிரகபலன்கொடுப்பார்
இன்னின்ன விதமாக சுபாசுபங்கள்
    இனிதுடனே தருவாரென் றியம்புவீரே. 48

உரை:—சூரியன், சந்திரன், செவ்வாய், புதன், குரு, சுக்ரன், சனி இவர்களுக்கு மாத்திரம் மேஷம், ரிஷபம், மிதுனம், கடகம், சிங்கம், கன்னி, துலாம், விருச்சிகம், தனுசு, மகரம், கும்பம், மீனமென்னும் பனிரெண்டு இராசிவீட்டில் அவரவர்க்கிசைந்த க்ஷேத்ரமுண்டு. ஆனால், இராகு, கேதுக்களுக்கு மாத்திரம் சொந்த ராசி வீடில்லை. ஆகையால், அவ்விருவரும் தாங்களிருந்த ஸ்தானபலனும், தங்களுடனிருந்த கிரகங்களின் சேர்க்கை பலனும் என்னென்ன விதமா யிருக்கின்றதோ அந்த விதமாக சுப பலனேயோ அசுப பலனேயோ சமயோசிதமாய்த் தருவார்கள்.

பத்துநவத்தோ டொன்று ரெட்டுமூன்று
    பதினொன்றுக் கதிபருடன் சேராதிருந்தால்
வித்தையுடன் ராஜயோக மீவார்கள்
    வியாழனுக்கா றெட்டுபனிரெண்டில் மதியிருக்க
சித்தமாய் சகடயோக மாகுமப்பா
    சிலகாலம் சுகாசுகத்தை யனுபவிப்பார்
இத்தரணிஜா தகரின் பலனுரைத்தால்
    இவ்விதமாய்கவனித்து புகலுவீரே. 49

உரை:—இலக்கினாதிபதி ஜீவனஸ்தானாதிபதி பாக்கியாதிபதிகளாகியவர்கள் மூன்றுமிடம், ஆறுமிடம், எட்டாமிடம், பனிரெண்டாம் இடத்ததிபருடன் சேராதிருந்தால் வித்யாலாபமும் மேலான இராஜ யோகத்தையும் தருவார்கள். ஆனால், குருபகவானுக்கு ஆறெட்டு பனிரெண்டாம் இராசியில் சந்திரனிருந்தால் சகடயோகம், அதன் பலன் சிலகாலம் சுகத்தையும் சிலகாலம் கஷ்டத்தையும் அனுபவிக்கச் செய்யும். இந்த விபரத்தை சரியாய் கவனித்துப் பலனுரைத்தால் ஜாதகரின் பலன் சரியாய் அமைந்திருக்கும்.

இலக்கினத்தோன் சரத்திருந்தால் அந்யதேசம்
    இசைந்தபடிஸ் திரத்திருந்தால் சொந்ததேசம்
நலமுடனேவாசஞ் செய்வாரென்றேது
    நவிலுவாய்உபயத்தில் லக்கினத்தோனிருந்தால்

RangaRakes tamilnavarasam.com

சிலகாலம்பரதேச வாசியாயிருந்து
சிறிதுநாள்தன்னூரில் வாசஞ்செய்வான்
பலதேசந்திரிந்து பொருள்சேகரித்து
பார்தனிலேவெகுகீர்த்தி யடைகுவானே. 50

உரை:—இலக்கினாதிபதி சரராசியிலிருந்து இலக்கின கேந்திர திரிகோண நட்பு, ஆட்சி, உச்சஸ்தானங்களிலும் இலாபஸ்தானங்களிலாகிலு மிருந்தால் அந்நிய தேசத்தில் சென்று பலவித வியாபாரஞ் செய்தாகிலும், உத்யோகஞ் செய்தாகிலும், தனவானா யிருப்பதற்காகும். ஸ்திரராசியிலிருந்தால் தன்னூரில் தானே திரவியஞ் சேகரித்து பிரபுவாயிருப்பதற்காகும். ஆனால், உபயராசியிலிருந்தால் சிலகாலம் அந்நியதேசத்திலும், சிலகாலம் சொந்த தேசத்திலுமிருந்து காண்போர் மனமகிழ பொருள் சேகரஞ்செய்து பெருமையுடன் வாழ்த்திருப்பதற்காகும்.

பனிரெண்டாம் ஸ்தானத்தில் வியாழன்சுக்ரன்
பிறைமதியும் புதனிருந்தால் ஜாதகன்தான்
முனிவுறு உத்தமனாய் * சத் கர்மத்தில்
முனைந்துசெல வழித்துசுக மாயிருப்பான்
சனிராகுகேதுகுஜன் இரவிவியத்தில்
சார்ந்தாலும்பார்த்தாலும் † துர்க்கர்மத்தில்
இனிதாகசெலவுசெய்து பழிக்கஞ்சாமல்
இருமாப்பா யிருப்பானென் றோதுவாயே. 51

உரை:—இலக்கினத்திற்குப் பனிரெண்டா மிடமாகிய விரயஸ்தானத்தில், குரு, சுக்கிரன், வளர்பிறைச் சந்திரனிருந்தாலும் பார்த்தாலும் ஜாதகன் கோபசிந்தனை யில்லாமல் அடக்கம், பொறுமை, சாந்தம், தயாளம், ஜீவகாருண்யமென்னும் நற்குணங்களிற் சிறந்து உத்தம கைங்கரிய சத்விஷயத்தில் செலவு செய்து கொண்டிருப்பான். ஆனால், விரயஸ்தானத்தில் சனி, ராகு, கேது, குஜன், தேய்பிறைச் சந்திரனிருந்தாலும் பார்த்தாலும் கோபம், குரோதம், வஞ்சகம், லோபம், பொறாமை யென்னும் துர்க்குணத்திற் சிறந்தவனாய்ப் பழி பாபத்திற் கஞ்சாமல் துர்விஷயத்தில் பொருள் செலவு செய்து மனோகர்வமா யிருப்பதற்காகும்.

அன்புடனேலக்கினத்தோன் நட்புஉச்சம்
ஆட்சிபெற்றிருந்திடவும் நான்குளோனும்
இன்பாகப்பதினொன்றுக் குடையோனும்நட்பாய்
இருந்தாலும்தமக்குரிய ராசிதன்னில்

---

* சத்கருமம்: அன்னதானஞ் செய்தல். ஆலயம் கட்டுதல்.

† துர்க்கர்மம்: தன்னைப்போன்ற ஜீவர்களை இம்சித்தல், ஏழைகளை அவமானமாய் கஷ்டப்படுத்துதல்.

RangaRakes tamilnavarasam.com

நன்மைபாய்மாறியே யிருந்திட்டாலும்
　　நல்லபலன்தருவார்க ளாகையாலே
பொன்பொருளும்பூமிபலம் கிடைத்தேந்நாளும்
　　பூதலத்தில்கீர்த்தியாய் ஜீவிப்பாரே. 52

உரை:—இலக்கினாதிபதி நட்பு, ஆட்சி, உச்சமாயிருந்து சுகாதிபதியும், இலாபாதிபதியும் நட்பு ஸ்தானத்திலிருந்தாலும், தமது இராசிகளில் மாறியிருந்தாலும் நல்ல யோக பலனைத் தந்து, ஜாதகனை சகலரும் புகழ்ந்துரைக்கும்படியான கீர்த்திப் பிரகாசனாயிருக்கும்படிசெய்து, பொருள், காணி, பூமி முதலானவை பெருகும்படியான தன்மையை விளங்கச்செய்யும்.

அன்புடனேலக்கினத்திற் கிரண்டுநான்கு
　　ஐந்துபத்தாமிடத்திற் குடையோருந்தான்
ஒன்பதினொன்றுக் குடையோரோடு
　　ஓதுலக்னாதிபனும் கேந்த்ரகோணம்
நன்மையாய்உச்சநட்பிருந்தே நல்லோர்கள்
　　தாடியேபார்த்தாலும் சேர்ந்திட்டாலும்
இன்பசுகபோக பாக்கியங்களோடு
　　இனிதானயோகபலன் தருகுவாரே. 53

உரை:—இலக்கினத்திற்கு இரண்டு, நான்கு, ஐந்து, பத்தாமிடத்திற் குரியவர்கள் பாக்கியஸ்தானாதிபதி இலாபஸ்தானாதிபதி இலக்கினாதிபதிகளுடன் சேர்ந்து கேந்திர, திரிகோணம், நட்பு, உச்சஸ்தானத்திலிருந்து சுபக்கிரகங்கள் சம்பந்தமானாலும் பார்வை பெற்றாலும் அந்த ஜாதகன் மகா தனவந்தனாயிருந்து சுபபோக பாக்கியங்களுடன் மிகவும் விசேஷமான யோகபலனை அனுபவிப்பதற்காகும்.

சந்திரன்நட்பாயிருந்து வியாழனுக்கு
　　சப்தமத்திலிருந்தாலும் யோகமுண்டு
அந்தமுடன்ஜீவன ஸ்தானந்தன்னில்
　　அமைந்திருந்தால் சுகவானென்பராமே
இந்தவிதமாய்கிரக நிலையைக்கண்டு
　　இத்தரணிஜாதகர்க்குப் பலனைச்சொன்னால்
எந்தவிதமும்பொருந்து மென்றுநீயே
　　எண்ணுவாயுன்மனதி லினிதாய்த்தானே. 54

உரை:—சந்திரபகவானானவர் நட்பு ஸ்தானத்திலிருந்து வியாழ பகவானாகிய குருவுக்கு ஏழாமிடத்திலிருந்தால் அநேக விதமாகிய தன்மைகளும், பொன், பொருள், ஆஸ்தி, பூஸ்திதிகளும் தனம் தான்யசம்பத்தும் நிறைந்து சுகவானாய் ஜீவித்

திருப்பதற்காகும். ஆனால், இவ்விதமாய் கிரகநிலை அமைந்திருந்தாலும், மற்ற கிரகங்களிருக்கும் ஸ்தானபலனும் ஆராய்ச்சி செய்து ஒழுங்காய் பலன் செல்லவேண்டும்.

இலக்கினமுதல்நான் கு கேந்திரங்களில்தான்
 *இந்துவுடன்சுபக்கிரக மிருக்குமானால்
கலக்கமிலாமனதமைந்து ஜாதகன்தான்
 கல்விகற்றுஞாபகசக்தியோடு
பலவித்தைதானுணர்ந்து பெருமையாக
 பார்தனிலேஉத்தியோகஞ் செய்துவாழ்வான்
நிலையானவர்த்தகமும் செய்தெந்நாளும்
 நீணிலத்தில்தனலாபத் துடன்ஜீவிப்பான். 56

உரை:—இலக்கினமுதல் நான்கு கேந்திரங்களிலும் சந்திர பகவானுடன் சுபக்கிரகமிருந்தால் பயங்கரமும் கிலியுமில்லாத சுத்த மனதமைந்தவனாய் ஜாதகன் ஞாபகசத்தியுடன் வித்யா சாதுர்யமாய்க் கல்வி கற்றுணர்ந்து சகலரும் புகழ்ந்துரைக்கும் படியான சிறந்த உத்தியோகஞ்செய்து கீர்த்திவந்தனாயிருந்தும், பெருமையான வியாபாரஞ்செய்தும் உலகத்தோர் மதிக்கும்படி யாய் திரவிய சேகரஞ்செய்து வெகுபொருள் சேகரித்து சுகவானா யிருப்பதற்காகும்.

கன்னியிலே புதனுச்சமாயிருக்க
 கடகத்தில்குருஉச்ச மாயிருக்க
இன்பமுடன்ரிஷபத்தில் சந்திரனுச்சம்
 இருந்திடவேகன்னியா லக்கினஞ்ஜனித்தோர்
தன்மையுடன்வியாபாரம் மிகவேசெய்து
 தனதான்யபொன்பொருளு மிகவேசேர்த்து
நன்மையாய் பாக்கியவானாய் விளங்கி
 நலமுடனே வாழ்ந்திருப்பார்கவனிப்பீரே. 57

உரை:—ஜனன இலக்கினம் கன்னியாய் அந்த ஸ்தானத்தில் புதன் உச்சமாகவும், கடகத்தில் குரு உச்சமாகவும், ரிஷபத்தில் சந்திரன் உச்சமாகவுமிருந்தால் ஜாதகன் வித்தியா சாதுர்யமாய் கல்வி கற்று கணிதாராய்ச்சியிற் சிறந்தவனாய் வர்த்தகஞ் செய்து வெகு பொருள் சேகரித்து தனதான்ய சம்பத்துடனே பெருமையாய் வாழ்ந்திருப்பான். ஆனால், மேற்குறிப்பித்த மூன்று கிரகமும் உச்சமாயிருக்கும்போது சிம்மலக்கினமாயிருந்தால் சங்கீத சாகித்தியத்திற் சிறந்த வித்வானாய் விளங்கி நாடக வாத்தியாரெனும் கீர்த்திபிரகாசமாய் வெகுபொருள் சேகரித்து யோகவானாயிருப்பதற்காகும்.

---

* இந்து - சந்திரன்

RangaRakes tamilnavarasam.com

தனுசுலக்கினந்தனிலே ஜனித்தோருக்குத்
    தகுந்தபடிமீனத்தில் குருவிருக்க
வனமுடனேமிதுனத்தில் புதனிருக்க
    காவழியுடன் சுக்கிரன் துலாத்திருக்க
தனதான்யசம்பத்து மிகவேபெற்று
    தாரணியில்வெகுகீர்த்தி யாயிருந்து
இனஜனத்தோருடன்சூழ்ந்து தனவானாக
    இன்பமுடன்சுகமாக வாழ்வார்தானே. 57

உரை:—ஜனன இலக்கினம் தனுசாகவும், மீனத்தில்குருவும் மிதுனத்தில் புதனும் துலாமில் சுக்கிரனுமிருந்தால் ஜாதகன் தன தான்ய சம்பத்துடன் வெகு கீர்த்திவானாய் தனது இனஜனத் தார் பந்துமித்திரர் புகழ்ந்துரைக்கும்படியான சமர்த்துடன் வெகு பொருள் சேகரஞ்செய்து சுகபோகபாக்கியவானா யிருப்பதற்கா கும். ஆனால், சனி செவ்வாய் இராகு கேது சம்பந்தமானாலும் பார்வைபெற்றாலும் மத்திப பலனாக விளங்கும்.

அன்புடனே சுபக்கிரகங்களெல்லாம்
    அமைந்திருந்த ராசிமித்ருஷேத்ரமானால்
பொன்பொருளும்பூஸ்திதியும் கிடைக்குமிந்த
    பூதலத்தில் தனவந்தராயிருப்பார்
தன்மையாய்சனிராகு கேதுசெவ்வாய்
    தங்களுடன்சேர்ந்தாலும் பார்த்திட்டாலும்
தன்மையில்லிதுன்பமுண்டு வறுமையாலே
    நல்லோர்க்கும்பகையாக விளங்குவாரே. 58

உரை: –குரு, சுக்கிரன், புதன், வளர்பிறைச்சந்திரன் இந் நால்வரும் நட்புராசியிலிருந்தால் வித்யாபிவிர்த்தியுடன் உத்தி யோகஞ் செய்தும், வர்த்தகஞ்செய்தும் பலவிதமாய் திரவிய சேகரஞ் செய்து சுகபாக்கியவானா யிருப்பதற்காகும். ஆனால், இந்த சுபக்கிரகங்களுடனே சனி, ராகு, கேது, செவ்வாய் சேர்ந் தாலும் பார்த்தாலும் யோகபலனைத் தராமல் துன்பமும், துயர மும் அனுபவித்து கஷ்ட நஷ்டமாய்க் கலங்கி வறுமையால் துக்கப்படச்செய்யும். அவர்களுடன் செவ்வாய் மாத்திரம் சேர்ந் தாலும் பார்த்தாலும் மத்திப பலனை அனுபவிக்கச் செய்யும்.

குருபகவான் நட்பு ராசியிலிருக்க
    குறித்தலக்னாதிபதி மித்ருவானால்
பெருமையுடன்சந்திரனும் பார்த்திட்டாலும்
    பேதமில்லாசேர்ந்தாலும் யோகமாகும்

RangaRakes tamilnavarasam.com

கருணையின்றி ஆறெட்டுபன்னிரண்டில்
கலங்கும்மூன்றிலு மிருந்தால்வறுமையாலே
பொருளிழந்துகாண்போர்கள் பழித்துரைக்க
பெருமையின்றியேமயங்கி திகைப்பன்தானே. 59

உரை :—இலக்கினாதிபதியும், குருபகவானும் நட்புராசியி லிருக்க, சந்திரன் பார்த்தாலும் தனவானாக வெகு பொருள் சேகரித்துக் கீர்த்திவந்தனா யிருப்பதற்காகும். ஆனால், சந்திரன் ஆறு, எட்டு, பனிரெண்டா மிடத்திலிருந்தால் கைப்பொருளிழந்து, கலங்கி துடித்து வறுமையினால் மதிமயங்கி சகலரும் பழிக்கும்படியான தாழ்ந்த நிலையாயிருந்து, உலகத்தில் கஷ்டநஷ்டத்தை யனுபவிப்பார்கள்.

புதன்குருவும்சுக்கிரனும் நட்பாட்சிஉச்சம்
பொருந்தியிருக்கும்போது சந்திரன் தன்னை
இதமுடனேசெவ்வாயும் பார்த்திட்டாலே
இனிதானதனசம்பத் துடனேவாழ்வான்
பதமுடனேசுபக் கிரகங்கள் தன்னை
பாபர்காணிவ்பலனே கிடையாதென்றும்
அதமபலனுண்டாகு மென்றுமேலோர்
அறிவித்தவாக்கியத்தைக் கவனிப்பாயே. 60

உரை :—புதபகவானும், குருபகவானும், சுக்கிரபகவானும் நட்பு, ஆட்சி, உச்சஸ்தானத்திலிருக்கும்போது சந்திரனை செவ்வாய் பகவான் பார்த்திட்டால் தனதான்யம், பொன், பொருள், சேகரஞ்செய்து கீர்த்திபிரகாசமாய் ஜீவித்திருப்பார்கள். ஆனால் சனி, ராகு, கேதுபகவான் குரு, புதன், சுக்கிரனை பார்த்தால் பலவிதமான கஷ்டமும், கவலையும், துக்கமும், துன்பமுமனுபவிப்பதற்குரிய கலவரமான மனதமைந்து கஷ்டமடையச் செய்யும்.

கர்க்கடலக்கினமாய் மதியும்வியாழன்
கலந்திருக்கும்போதுவகில் ஜனனமானோர்
துர்க்குணமில்லாமலே நல்லோர்சேர்க்கை
துடர்ந்துவித்யா லாபத்தால்தனவானாக
சர்க்குணமாய் வாழ்ந்திருப்பாருலகமீது
சார்ந்துசனிராகு கேதிவரோடுற்றால்
அற்பபலனுண்டாகும் ஜாதகர்க்கு
அளவுபோல் சுகதுக்கமெய்தும்பாரே. 61

உரை —கடகலக்கினத்தில் சந்திரன் ஆட்சியாகவும் குரு

RangaRakes tamilnavarasam.com

வெகு சமர்த்தனாக விளங்கி காண்போர் புகழுந்தன்மையராக உத்தியோகஞ் செய்தும் தனலாபத்துடன் சுகபாக்கியவானாயிருப்பதற்காகும். ஆனால், சனி, ராகு, கேது சம்பந்தமானாலும் பார்வையானாலும் மத்திப பலனாக ஜாதகர்க்கு அளவுபோல் பலன் கிடைக்கும்.

இலக்கினமும் இராசியுமொன் றாயிருந்து
இருபுறமும் குருபுதனும் சுக்கிரனும் சந்திரன்
கலக்கமிலா திருந்தாலே ராஜயோகம்
கௌரவமும் வெகுகீர்த்தியா யிருக்கும்
பலபேரால் புகழ்ந்துரைக்கும் தனவானாக
பார்தனிலே ஜீவித்திருப்பான் சுகவானாக
நிலையான கிரகநிலை கவனித்தன்பாய்
நிதானமாய்ப் பலனுரைப்பீர் ஜாதகர்க்கே. 62

உரை:—ஜனனலக்கினமும் இராசியும் ஒன்றாயிருந்து இரண்டு பக்கமும் குருபகவானும், சுக்கிரபகவானும், வளர் பிறைச் சந்திரனுமிருந்தால் இராஜயோகத்திற் கிசைந்த கௌரவமும் கீர்த்தியும் பொருந்தி பலபேர் புகழ்ந்துரைக்கும்படியான தனவந்தனாக உலகத்தில் ஜீவித்து, சுகவானாயிருப்பதற்காகும். ஆனால், மற்ற கிரகங்கள் நின்ற நிலையையும் கவனித்து நிதானமாய்ப் பலன் சொல்லவேண்டும்.

திரிகோ ணாதிபதிகள் திரிகோணத்துற்று
திரமாக சுபக்கிரக மிருபால்நிற்க
சரியான யோகபல னிதுவேயாகும்
சற்றேனும் துயரமிலா சுகத்திருந்து
துரிதமா யெந்தெந்த விஷயமெல்லாம்
தொடர்ந்துசெய்து முடிப்பதற்கும் சமர்த்தராவார்
திரியாண காலம்வரை கீர்த்தியாக
நீணிலத்தில் வாழ்ந்திருப்பா ரறிகுவீரே. 63

உரை :—திரிகோணாதிபதிகள் திரிகோணத்திலிருந்தும், சுபக்கிரகங்கள் இரண்டு பக்கத்திலுமிருந்தால் ஜாதகனுக்கு சரியான யோக பலனாகும். அதன் பலனெவ்விதமெனில் எச்சமயமும் துன்பமும் துயரமுமில்லாமல் நினைத்த காரியத்தை முடிக்கும் சமர்த்தனாயிருந்து எவ்விதமான கல்வியையும் ஞாபகசக்தியுடன் வாசித்து உத்தியோகஞ்செய்யும் சக்தியும், கைத்தொழிலில் முயற்சி செய்தலும் மகா சமர்த்துடன் செய்து முடித்து வெகு பொருள் சேகரித்தும், வியாபாரத்தினாலும் சாமர்த்தியமாய் திரவிய சேகரஞ்செய்து தனவத்தனாய் சுகஜீவியாக வாழ்ந்திருப்பதற்காகும்.

RangaRakes tamilnavarasam.com

## களத்திர ஸ்தான பலன்

ஜனனலக்கி னத்திற்கேழில் ரவியிருந்தால்
சார்ந்திடுவான் மலடியுடன் ஜாதகன்தான்
கனமுடனே சப்தமத்தில் மதியிருக்க
காசினியில் சங்கீதப்பெண் ணோடுவாழ்வான்
வினயமுடன் புதனேழி லிருந்திட்டாலே
வேசியுடன் சுகமாக வாழ்ந்திருப்பான்
கனமுடனே குருசப்த மத்திருந்தால்
கன்னிபிரா மணப்பெண்ணோ டிணங்குவானே. 64

உரை:—ஜாதகனுடைய ஜனன லக்கினத்திற்கு ஏழாமிடத்தில் சூரிய பகவானிருந்தால் மலடியுடன்கூடி வாழ்வதற்காகும். சப்தம ஸ்தானத்தில் சந்திரனிருந்தால் உலகத்தோர் மெச்சுந் தன்மையான சங்கீதமாய்ப் பாடும் இனிய நற்குணமான பெண்ணுடனே சேர்ந்து வாழ்ந்திருப்பதற்காகும். புதபகவான் இலக்கினத்திற்கு ஏழாமிடத்திலிருந்தால் விபசாரியுடன் சேர்ந்திருப்பான். குருபகவான் சப்தம ஸ்தானத்திலிருந்தால் பிராமணப் பெண்ணோடு சுகானந்தமாய் வாழ்ந்திருப்பதற்காகும்.

இலக்கினத்திற்கேழில் சுக்கிரனிருந்தால்
இனிதுடனேகர்ப்பஸ்திரீ யுடன்சேர்வானே
கலக்கமுடன்ராகுகே திவர்களத்த
ளத்திரஸ்தானத்திலிருந்தால் ஜாதகன்தான்
நலமிலாதாரஸ்திரீ தன்னைச்சேர்ந்து
நலமுடனேதனதுமன மகிழுவானே
பலவிதமாய்ஜோதிடநூ லுணர்ந்தன்பாக
பகுத்துணர்ந்துஜாதகர்க்குப் புகலுவீரே. 65

உரை:—இலக்கினத்திற் கேழாமிடத்தில் சுக்கிரபகவானிருந்தால் கர்ப்பஸ்திரீயைச் சேர்ந்து வாழ்ந்திருப்பான். இராகுகேது களத்திர ஸ்தானத்திலிருந்தால் ஜாதகன் தாரஸ்திரீயுடனே சேர்ந்து மனமகிழ்வாயிருப்பான். ஆனால், ஜோதிட சாஸ்திர ஆராய்ச்சி செய்து ஜாதகர்க்குப் பலன் சொல்ல வேண்டியது.

சுக்கிரனாகிய களத்திரகாரகன்தான்
சூழ்ந்துவித்யாகாரகனு மென்றுரைக்கும்
தக்கபுதனுட னினிதாய்சேர்ந்திருந்தால்
தாசியுடன்சேர்ந்திருப்பான் சுகவானாக
லக்கினத்திற்கேழில் புகர்நீசமானால்
லஷ்மீகடாக்ஷமின்றி மூத்தாளோடு

பக்குவமாய்வாழ்ந்திருப்பா னுலகந்தன்னில்
பக்ஷமுடன் நூலுணர்ந்து பலன்சொல்வீரே. 66

உரை:—களத்திர ஸ்தானத்திலிருக்கும் சுக்கிரபகவானுடனே வித்யாகாரகனாகிய புதபகவானும் சேர்ந்தால் தனது மனதிற்கினிய தாசியுடனே சேர்ந்து சுகவானு யிருப்பதற்காகும். ஆனால், களத்திர ஸ்தானத்தில் சுக்கிரபகவான் நீசமாயிருந்தால் இலக்ஷ்மி கடாக்ஷமில்லாமல் குரூரமனதமைந்தவளும் தனது வயதிற்கு மூத்தவளுடனே சேர்ந்து சுகமில்லாமல் சதா கவலையாயிருப்பான். ஆனால், மற்ற கிரகங்களின் நிலையை ஆராய்ந்து பலனைச் சொல்ல வேண்டும்.

அன்புடனேஜோதிட நூ லாராய்ந்துரைக்கும்
அறிவுடையமுதறிஞர் வாக்கியத்தை
இன்புடனேயனுசரித்து ஜாதகர்க்கு
இனிதுடனேபலனுரைக்கும் விபரமெல்லாம்
வன்மையாய்புகன்றுலும் சனியுஞ்சுக்ரன்
வந்தேழிலிருந்தாலே ஜாதகன்தான்
வின்னமாய்பலராலும் பழிக்கப்பெற்று
விதவையுடன்சேர்ந்திருப்பா னென்றுசொல்வாய். 67

உரை:—ஜோதிட சாஸ்திரத்தில் மிகவும் தேர்ச்சி யடைந்த பெரியோர்களுடைய வாக்கியத்தை யனுசரித்து ஜாதக பலனுரைத்தாலும் களத்திர ஸ்தானபலனை கவனிக்கும்போது ஜாதகனுடைய இலக்னத்திற்கு சப்தம ஸ்தானத்தில் களத்திர காரகனாகிய சுக்கிரனும் சனியும் சம்பந்தமாயிருந்தால் சகலராலும் பழிக்கப்பெற்று விதவை ஸ்திரீயுடனே சேர்ந்து காலங் கழித்துக் கொண்டிருப்பதற்காகும்.

இத்தகையதாகவே ஜாதகர்க்கு
இசைந்தசப்தமஸ்தான மெனவேயோதும்
சுத்தமெனும்களத்திர ஸ்தானந்தன்னை
சுபக்கிரகங்கள்பார்த்தால் தோஷமில்லை
எத்ததியும்சுகபாக்கிய மாகவாழ்ந்து
எவர்களுமேபுகழ்ந்துரைக்க ஜீவிப்பார்கள்
அத்தனருளால்விரத மநுஷ்டித்தன்பாய்
அன்புடனே வாழ்ந்திருப்பாருலகமீதே. 68

உரை:—ஜாதகனுடைய சப்தம ஸ்தானமாகிய களத்திர ஸ்தானத்தை சுபக்கிரகங்கள் பார்த்தால் எத்தகைய தோஷமும் அணுகாமல் விலகிப்போகும். அதனால் தனக்கு உத்தமமனைவாள்

RangaRakes tamilnavarasam.com

வந்து தனது மனதிற்கிசைந்தவிதமாய் இல்லறத்தை நடத்தி விரதானுஷ்டானம்புரிந்து பகவத் பக்தியானந்தமாய் தனது பந்துமித்திரர் புகழும் தன்மையாக வாழ்ந்திருப்பதற்காகும்.

## அஷ்டமபாகத்தின் விபரம்

ஒன்றுமுதல்பனிரெண்டு வருஷமட்டும்
ஓதும்பாலாரிஷ்ட மாகுமப்பா
என்றுரைப்பாய்பதின்மூன்றே டிருபதாண்டும்
எவ்வனஅரிஷ்டமென் றினிதாய்ச்சொல்லு
முன்பாகஇருபத்தோ ராண்டிருந்து
முப்பத்திரண்டுவரை கௌமாரரிஷ்டம்
அன்பாய்முப்பத்திமூன்று வருஷத்தோடு
ஆருமப்பாஎழுபதாண்டு விருத்தாரிஷ்டம். 69

உரை:—ஜாதகன் பிறந்த ஒருவருஷ முதல் பனிரெண்டு வருஷம் வரைக்கும் பாலாரிஷ்டமுண்டாகும். பதின்மூன்று வயதிலிருந்து இருபது வயதுவரைக்கும் யௌவன அரிஷ்டமாகும் இருபத்தொரு வயதிலிருந்து முப்பத்திரண்டு வயது வரையிலும் கௌமார அரிஷ்டமாகும். முப்பத்துமூன்று வருஷ முதல் எழுபதுவருஷம் வரையிலும் விருத்தாரிஷ்டமாகும். இத்தகையதான அரிஷ்டபலன்களுக்கு இலக்கின பலனையும் கிரகங்கள் இலக்கின பலனையும் கிரகங்கள் நின்ற பலனையும் ஆராய்ந்துணர்ந்து பலன் சொல்லவேண்டும்.

இலக்கினஸ்தானத்திற்கு ஏழில்செவ்வாய்
இருப்பதுடன் சரீரகாரகன் சூரியன்தான்
கலக்கமுடனஷ்டமத்தி லிருக்கும்போது
கனகுருமுதலான சுபக்கிரகங்கள்
இலக்கினத்தைப்பாராம லிருப்பாராகில்
இசைத்தபடி ஜாதகர்க்கு அரிஷ்டமாகும்
பலமுடனேசுபக்கிரக நோக்கைக்கண்டு
பண்புடன் பலாபலனை ஓதுவீரே. 70

உரை:—இலக்கின ஸ்தானத்திற்கு ஏழாமிடத்தில் அங்காரகனும் சரீரகாரகனாகிய சூரியன் அஷ்டம ஸ்தானத்திலுமிருந்தால் குரு, சுக்கிரன், புதன் முதலாகிய சுபக்கிரகங்கள் ஆயுள் ஸ்தானத்தையும் பாராமலிருந்தால் ஜாதகர்க்கு அரிஷ்டமாகும். ஆனால், சுபக்கிரகங்கள் நின்றநிலையை ஆராய்ந்து கவனித்துப் பலன்சொல்ல வேண்டும். ஜாதகரின் திசாபுத்தியில் எத்தெத்த கிரகங்கள் எத்தெத்த ஸ்தானத்திலிருந்தார்களோ அதன்படியே அரிஷ்டமுண்டாகும்.

RangaRakes tamilnavarasam.com

[illegible]சந்திரன் லக்கினகேந்திரத்தில்
சேர்ந்துசனி இராகுகேதுடனேசெவ்வாய்
காணவேஅஷ்டமத்தி லிருந்திட்டாலே
கலக்கமுடன் அற்பாயுசாய்விளங்கி
காணவே அரிஷ்டபலனாகுமென்று
கழறுவாய்ஜோதிடத்தின் பலனாராய்ந்து
பூணவேகிரகங்கள் ராசிதன்னில்
பொருந்திநின்றபலன்விபரங் கவனித்துரைப்பாய். 71

உரை:—தேய்பிறைச் சந்திரன் இலக்கின கேந்திரத்தி லிருக்க சனி, ராகு, கேது அஷ்டமஸ்தானத்திலிருந்தால் ஜாதக னுக்கு அப்போதைக்கப்போது கஷ்டமும் கண்டங்களும் சூழ்ந்து சமயோசிதமாய் அரிஷ்டம் செய்யும். ஆனால் துவாதச லக்கினங் களின் கிரக நிலை ஆதிபத்தியமும் கிரகங்களின் நிலைமையும் கண்டு திசாபுத்தியை கணக்கெடுத்து அரிஷ்டபலனை விபர மாய்ச் சொல்லவும்.

இலக்கினத்திற்கிருபுறமும் சனியும்செவ்வாய்
இராகுகேதுக்க ளிருக்கின்றபோது
கலக்கமுடன்சந்திரன் உதயத்திருக்க
கனமுடனேநான்கேழு அஷ்டமத்தில்
நலமிலாசனிராகு கேதும்நிற்க
நாடிவேதாயுடனே சிசுவுக்கும்தோஷம்
பலதுலாராய்ந்தினிதாய் ஜாதகர்க்குப்
பலனுரைப்பீர் ஜோதிஷத்தில்மிகவல்லோரே. 72

உரை:—இலக்கினத்திற்கு இரண்டு பக்கத்திலும் சனியும், செவ்வாயும், இராகு கேதுக்களு மிருக்கின்றபோது, சந்திரன் உதய லக்கினத்திலிருக்க, சுகஸ்தானம், சப்தமஸ்தானம், அஷ்டமஸ்தானத்தில் சனி ராகு, கேது இருந்தால் தாயும் குழந் தையும் வியாதியால் மெலிந்து அரிஷ்டமாகும். ஆனால், மற்ற கிரகநிலையை சரியாய் ஆராய்ந்துணர்ந்து பலனுரைத்தால் சரியா யமையுமென்பது ஜோதிஷ கணிதவல்லோரின் சம்மத மாகுமென்பது சித்தாந்தம்

துன்பமாய் தேய்பிறைச்சந்திரன்தான்
துலக்கமுடன் ஒன்றேழு பன்னிரண்டில்
தன்மையாயிருந்தாலு மரிஷ்டமாகும்
நலமுடனேஜாதகத்தின் பலனாராய்ந்து
இன்னவிதமாகவே நடக்குமென்று
இசைந்தபடிதிசாபுத்தி தனையாராய்ந்தே
அன்புடனேசொல்வீர் ஜோதிடவல்லோரே
அவனிதனிலேஜனித்த ஜாதகர்க்கே. 73

உரை:—தேய்ப்பிறைச்சந்திரன் உதய லக்கினம், ஏழு, பனிரெண்டாமிடத்திலிருந்தால் அரிஷ்டமாகும். அன்றியும் சப்தமஸ்தானத்திலும், ஆயுள் ஸ்தானத்திலும் சனிபகவானும், அங்காரகனுமிருந்தால் அரிஷ்டமுண்டாகும் ஆகையால், துவாதச பலனையும் சரியாய் ஆராய்ந்து கிரகங்களின் நிலையறிந்து பலனை விபரமாய்ச் சொல்லவேண்டும்.

இலக்கினத்திற்கெட் டொன்பான்பன்னிரண்டில்
    இரவிகுஜன்சனியுடன் தேய்மதியிருக்க
வைக்ஷமுடன்ஜாதகர்க்கு அரிஷ்டமாகும்
    காணுமந்தஷ்டெட்டில் சனிகுஜனிருக்க
பலமில்லைஅரிஷ்டமென் றேதுவாய்நீ
    புகர்குஜனும்சனி யிருந்தாலும்அரிஷ்டம்
நலமில்லைஜாதகர்க் கற்பாயுளென்றே
    நவிலுவீர்ஜோதிஷத்தில் மிகவல்லோரே. 74

உரை :—இலக்கினத்திற்கு அஷ்டமஸ்தானம், கர்மஸ்தானம், விரயஸ்தானத்தில் சூரியனும், செவ்வாயும் சனியும் தேய்பிறை சந்திரனுமிருந்தால் ஜாதகர்க்கு அரிஷ்டபலனுண்டாகும். ஆனல், சனி, குஜனும் சப்தமஸ்தானத்திலும் ஆயுள் ஸ்தானத்திலுமிருந்தாலும் ஜாதகர்க்கு துன்ப பலனும் அரிஷ்டமுமுண்டாகும். ஆகையால் அந்த ஜாதகனுக்கு அற்பாயு சென்பதாகவே சொல்லவேண்டுமென்று கணிதநூலாராய்ந்தோர் புகல்வார்.

பஞ்சமஸ்தானத்தனிலே சனிநின்றாலும்
    பத்தாமிடமென்னும் ஜீவனஸ்தானத்தில்
வஞ்சமுடன்சனியிருந்தால் துன்பமாகும்
    வையகத்தோர் பழித்திடவேசோம்பலாகி
எஞ்சலிலாகஷ்டநஷ்ட மனுபவித்து
    எந்நாளும்வறுமை துயரால்மெலிந்து
அஞ்சியேகலங்கிடவும் ஜாதகர்க்கு
    அரிஷ்டபலனுண்டாகும் கவனிப்பீரே. 75

உரை:—பஞ்சமஸ்தானத்திலாகிலும், ஜீவன ஸ்தானத்திலாகிலும் சனிபகவானிருந்தால் துன்பமும் துயரமுமுண்டாகி உலகத்தோர் பரிகாசித்துப் பழிக்குந்தன்மையான மதியீனமாய் சோம்பலும், கஷ்டநஷ்டமுமாகும். சதாகாலமும் வறுமை பிணியால் மெலிந்துருகும்படியாக ஜாதகனுக்கு அரிஷ்ட பலனுண்டாகும்.

இலக்கினத்தில் சனிபகவானிருக்கும்போது
    இனிதுடனேசெவ்வாய் ஏழிலுமிருக்க

RangaRakes tamilnavarasam.com

சலக்கமுடன்சூரியனும் குஜனும்சேர்ந்து
காணுமந்த சுகஸ்தானந்தனிலிருக்க
பலவிதமாய் கஷ்டநஷ்டமனுபவித்து
பராக்ரம மில்லாசரீரநோயுண்டாகி
விலவிலத்தே அரிஷ்ட மாவார்களென்று
விளம்புவாய்ஜாதகர்க்கு பலனைத்தானே. 76

உரை:—இலக்கினத்தில் சனிபகவா னிருக்கும்போது சப்தம ஸ்தானத்தில் செவ்வாயிருந்தாலும் அல்லது நன்காமிடத்தில் சூரியனும் குஜனுமிருந்தாலும், ஜாதகர்க்குத் துன்பமும் துயரமும் நேர்ந்து, வறுமை பிணியால் மெலிந்து, கஷ்டநஷ்டமும் அரிஷ்டமு முண்டாகும்.

இலக்கினத்தில் ராகுபகவானிருக்க
இசைந்தசுகஸ்தானத்தில் சப்தமத்தில்
பலமிலாசூரியனு மொடுங்கிநின்றால்
பகருவாய்ஜாதகர்க்கு அரிஷ்டமாகும்
கலக்கமிலாசுபக்கிரக பார்வையானால்
காணுதுதுன்பமொன்று மணுகிடாது
நலமாகஜோதிடநூல் கணித்தாராய்ந்து
நவிலுவீர்ஜாதகர்க்கு பலனைத்தானே. 77

உரை:—இலக்கினத்தில் ராகுகேதுக்களிருக்க சுகஸ்தானத்திலாகிலும் சப்தமஸ்தானத்திலாகிலும் சூரியனிருந்தால் பலவித மாய்க் கஷ்டநஷ்டமும் கவலையும் நேர்ந்து அரிஷ்டமுண்டாகும். ஆனால் குரு, சுக்கிரன், புதன் முதலான சுபக்கிரகங்கள் பார்வை யானால் சுகமாயிருப்பதற்காகும் அன்றியும், இலக்கினாதிபதி வலுத்து கேந்த்ர திரிகோண நட்பாக்ஷி உச்சஸ்தானத்திலிருந் தால் அரிஷ்டபங்கமாகி சவுக்கியமா யிருப்பதற்காகும்.

எந்தெந்தஜாதகர்க் காணலுந்தான்
ஏற்றபடிபலன்சொல்ல வேண்டுமானால்
ஐந்துபத்தாமிடத்தில் குஜனிருக்க
அம்மானுக்கரிஷ்டமாய் விளங்கும்பாரே
சந்திரன்ஐந்துபத்தி லிருக்குமானால்
சாற்றுவாய் மாதாவுக்கரிஷ்டமென்றே
இந்தவிதமைந்துபத்தில் ரவியிருக்க
இவன்பிதாவுக்கரிஷ்ட மாகுந்தானே. 78

உரை:—ஜாதகர்க்குப் பலன் சொல்லும்போது இலக்கினத் திற்கு ஐந்து பத்தாமிடத்தில் அங்காரகனிருந்தால் அம்மானுக்கு

RangaRakes tamilnavarasam.com

அரிஷ்டமாகும். சந்திரன் பஞ்சமஸ்தானத்திலும் ஜீவன் ஸ்தானத்திலுமிருக்குமானால் தாய்க்கு அரிஷ்டமாகும். இவ்விதமாகவே சூரியபகவான் ஐந்தாமிடம் பத்தாமிடத்திலிருந்தால் பிதாவுக்கு அஷ்டமாகும். ஆனால், குருபகவான் பார்வையாயிருந்தால் கஷ்ட பலனை கொடுத்தாலும் சிறிதுநாள் பொறுத்து சுகப்படச்செய்யும்.

*சந்திரனுக்கேழில் சனிகுஜனிருக்க*
*சாற்றுவாய்மாதாவுக் கரிஷ்டமென்றே*
*மந்தன்குஜன்சூரியனுக் கேழில்நின்றால்*
*மாநிலத்திலவனுக் காதாரமான*
*தந்தைக்குஅரிஷ்டமென சாற்றினாலும்*
*தக்கபடிசுபக்கிரகம் பார்வையானால்*
*எந்தவிதமானாலும் அரிஷ்டபங்கம்*
*ஏற்படுமென்றுரைத்திடுவீர் ஜாதகர்க்கே.* 79

*உரை:*—சந்திரபகவானுக்கு சப்தமஸ்தானத்தில் சனிபகவானும், செவ்வாய் பகவானுமிருந்தால் மாதாவுக்கு அரிஷ்டமாகும், செவ்வாயும், சனியும், ஏழாமிடத்திலிருந்தால் தகப்பனுக்கு அரிஷ்டமாகும். ஆனால், இவர்கள்மீது சுபக்கிரகங்கள் பார்வை செலுத்தினால் அரிஷ்ட பங்கமாகும்.

*இலக்கினத்திற்காறு மிடத்திற்றனே*
*இரவிநிற்கஅதற்கேழில் சனியும்செவ்வாய்*
*வலக்கமுடனே யிருக்குமானலப்பா*
*காணுமேகுழந்தைக்கும் தந்தைக்கரிஷ்டம்*
*பலமில்லாசந்திரனும் ஆறில்நிற்க*
*பார்த்துசனிசெவ்வாய் பாவர்க்குஏழில்நிற்க*
*நலமில்லாகுழந்தைக்கும் தாய்க்கும்அரிஷ்டம்*
*நாடுமென்றேபுகலுவீர் ஜோதிடவல்லோரே.* 80

*உரை:*—இலக்கினத்திற்கு ஆறுவது ஸ்தானத்தில் சூரியனிருக்க அவருக்கு ஏழாமிடத்தில் சனியும், செவ்வாயுமிருக்குமானால் குழந்தைக்கும் தந்தைக்கும் அரிஷ்டமாகும். சந்திரனும் இலக்கினத்திற்கு ஆறிலிருக்க அவருக்கு சப்தமஸ்தானத்தில் சனி, செவ்வாயிருக்க பிறந்த குழந்தைக்கும் தாய்க்கும் அரிஷ்ட முண்டாகும்.

*இலக்கினத்திற்கொன்பது பதினொன்றுமிடத்தில்*
*இனிதுடனேசனிசெவ்வா யிருக்கும்போது*
*நலமில்லாராகு கேதுக்களானோர்*
*நாடியேஒன்பதா மிடத்திருக்க*

RangaRakes tamilnavarasam.com

பலதுன்பதுயரமும் கவலைசூழ்ந்து
பாரிலுள்ளோர்பரிதாப மெய்துமாப்போல்
திலயானபிதாவுக்கு அரிஷ்டமென்று
தீணிலத்தின் ஜாதகர்க்குப்புகலுவீரே. 81

உரை:—இலக்கினத்திற்கு சதுர்ஸ்தானம் இலாபஸ்தானத்தில் சனி செவ்வாயிருக்க ஒன்பதாமிடத்தில் இராகு கேதுக்களிருந்தால் காண்போர் பரிதாபமடையும்படியாக துன்பமும், துயரமும், கவலையும் சூழ்ந்து பிதாவுக்கு அரிஷ்டமாகும். ஆனால் கடகலக்கினமாயிருந்து, அந்த ஸ்தானத்தில் சந்திரன் ஆட்சியாகவும், குரு உச்சமாகவுமிருந்து, சுக்கிரனும், புதனும், சனி, ராகு, கேது இவர்களைப் பார்த்தால் பிதாவுக்கு அரிஷ்டமாகும்.

ஜென்மலக்கினத்திற்கு மூன்றுமிடத்தில்
செவ்வாயிருக்க சகோதர அரிஷ்டமாகும்
நன்மையில்லை ஆறேழெட்டுப்பன்னிரண்டில்
நாடியேஅமரபக்ஷ மதியிருந்து
துன்பமாய்பாபருடன் சேர்ந்திட்டாலும்
துடர்ந்தெட்டாமிடத்தில் நான்கில்பாபர்திற்க
வன்மையாய்அரிஷ்டம் செய்யுமென்றிப்போதே
வழுத்துவாய்ஜாதகர்க்கு பலனைத்தானே. 82

உரை:—ஜனன லக்கினத்திற்கு மூன்றுமிடத்தில் செவ்வாயிருந்தால் சகோதரர்க்கு அரிஷ்டமாகும். அமரபக்ஷத்தின் சந்திரன் ஆறு, ஏழு, எட்டு பனிரெண்டாமிடத்திலிருந்தால் சுகஸ்தானத்தில் சனி, செவ்வாய், இராகு கேதுக்களிருந்தாலும் தப்பாமல் அரிஷ்டமாகும்.

சுகஸ்தானந்தன்னிலே குருவிருக்க
சூழ்ந்தரெண்டில் சனியிருக்கயெட்டில்ராகு
வெகுவாகபலத்திருந்தால் அரிஷ்டமாகும்
மேற்கண்ட அரிஷ்ட தோஷங்களெல்லாம்
மகிழுடனேசுபக்கிரக பார்வையானால்
மாறியேஅரிஷ்டபலன் விலகிப்போகும்
ஜெகமீதுஜாதகத்தோர் பலனுராய்ந்து
செப்புவீர்விபரமாய் விளங்கத்தானே. 83

உரை:—சுகஸ்தானத்தில் செவ்வாய் பகவானிருக்க, இரண்டாமிடத்தில் சனிபகவானிருக்க, எட்டாமிடத்தில் இராகு பகவான் பலத்திருந்தால் அரிஷ்டமுண்டாகும். ஆனால், சுபக்கிரகங்கள் பார்வையாயிருந்தால் அரிஷ்டபலன் விலகிப்போகும். ஆகையால், ஜாதகத்தில் கிரகங்கள் நின்ற ஸ்தானபலனறிந்து பலன் சொல்ல வேண்டும்.

RangaRakes tamilnavarasam.com

## மாரகஸ்தான பலன்

சத்தமும்சரராசி இலக்கினத்தை
சார்ந்திருந்த இரண்டேழுக்கதிபராஞேர்
எந்தவிதமாஞலும் மாரகத்தைசெய்வார்
ஏற்றதோர்ஸ்திரராசி லக்கினத்திற்கு
மூந்தியமூன்றெட்டுக் கதிபராஞேர்
மூர்க்கமுடன்மாரகமே செய்வாரென்று
அந்தமாய்ஜாதகர்க்கு பலனைச்சொல்வீர்
அவனியில்ருஞ்ஜோதிட கலைவல்லோரே. 94

உரை:—ஜாதகரின் சரராசி லக்கினத்திற்கு இரண்டு, ஏழாமிடமாகிய இந்த ஸ்தானாதிபதிகள் மாரகம் செய்வார்கள். ஸ்திரராசி இலக்கினத்திற்கு மூன்றாமிடத்ததிபநும், எட்டாமிடத்ததிபநும் மாரகஞ் செய்வார்கள். ஆஞல், அந்த ஸ்தானாதிபதிகளின் பலத்தைக் கண்டு சுபக்கிரகங்களின் பார்வையையும் ஆராய்ந்து பலன் சொல்லவேண்டும்.

இனிதுடனேஉபய ராசிகளுக்கேதான்
இலக்கினத்தின் மூன்றெட்டுக்கதிபராஞேர்
முனிவுடனேமாரகத்தை செய்யமாட்டார்
முறையாக சப்தமத்தோன் லாபத்தோனும்
கனவில்லாமாரகத்தை செய்வாரென்று
கருதுவாய்சுபகிரகம் பார்வையாஞல்
தனியாகசெய்வார்கள் திசாபுத்தியோர்ந்து
தரணியோர்க்குரைத்திடுவீர் ஜோதிடவல்லோரே. 95

உரை:—உபயராசியாயிருந்தால் இலக்கினத்திற்கு மூன்று எட்டுக்கதிபர்கள் மாரகஞ் செய்யமாட்டார்கள். ஆஞல், சப்தமஸ்தானாதிபதியும் இலாபஸ்தானாதிபதியும் மாரகத்தைச்செய்வார்கள். ஆஞல் சுபக்கிரகங்கள் பார்வையாஞல் மாரகஞ்செய்யாமல் கண்டாதி கண்டங்களைத்தந்து மாரகத்தை விலக்குவார்கள். அந்த அதிபதிகளுடன் சேர்ந்த கிரகநிலையைக் கண்டு பலன் சொல்லவேண்டும்.

ஜென்மலக்னத்திற்கேழு மிரண்டாம்வதானம்
ஜாதகனுக்கே மாரகத்தைச்செய்யும்
அன்னைக்குநாலேழு ஸ்தானத்தோடும்
ஐந்தோனும் மாரகத்தைச்செய்வார்கள்
துன்பமாய்ஐந்துபதி னென்றும்ஸ்தானம்
துணைவனுக்கும்சகோதரர்க்கு மாரகஞ்செய்வார்கள்
பின்னுமே ஆறேன் குரியனையாஞல்
பிதாவுக்குமாரகஞ் செய்வானென்றே.

RangaRakes tamilnavarasam.com

உரை:—ஜன்ம இலக்கினத்திற்கு சப்தம ஸ்தானாதிபதியும், இரண்டாமிடத்ததிபதியும் ஜாதகனுக்கு மாரகத்தைச் செய்வார்கள். சுகஸ்தானாதிபதி, சப்தமஸ்தானாதிபதி பஞ்சமஸ்தானாதிபதியும் தாய்க்கு மாரகஞ் செய்வார்கள். பதினோராமிடத்ததிபதியும், ஐந்தாமிடத்ததிபதியும், சகோதரர்க்கு மாரகஞ் செய்வார்கள். இலக்கினத்திற்கு ஆறாமிடத்ததிபதி சூரியனா யிருந்தால் பிதாவுக்கு மாரகஞ் செய்வான்.

பனிரெண்டாமிடத் தாதிபத்யந்தான்
    பகர்ந்திடும்ஆயுள் காரகனென்றோதும்
சனிபகவானுக்கமைந் திருந்துதானால்
    ஜாதகனுக்கே மாரகத்தைச்செய்யும்
முனிவுடனேசெவ்வாய் பகவானுக்கு
    மூண்டதோராறாமிடத் தாதிபத்யம்
தனியாகவந்தால் ஜாதகர்க்கு மாரகமாமென்று
    தாரணியிலுரைப்பீர் ஜோதிடவல்லோரே. 87

உரை:—ஆயுள்காரகனாகிய சனி பகவானுக்கு பனிரெண்டாம் இடத்தாதிபத்தியம் வந்தால் ஜாதகனுக்கு மாரகஞ் செய்யும், செவ்வாய் பகவானுக்கு மூன்றாமிடத்தாதிபத்தியம் வந்தாலும் ஜாதகனுக்கு மாரகமாகுமென்றும், சுபக்கிரகங்கள் பார்வையானால் விலகுமென்றும் திசாபுத்திபலனை ஆராய்ந்துரைக்க வேண்டும்.

இலக்கினத்திற்கானதொரு நான்கில்பத்தில்
    இருந்தாலேகுளிகனால் மாரகமேயாகும்
கலக்கமுடன்சுக்கிரற்கு விரயஸ்தானம்
    காணுகின்ற ஆதிபத்தியமாயிருந்தால்
நலமிலாஜாதகர்க்கு மாரகமாமென்று
    நவிலுவாய்திசாபுத்தி பார்த்துநன்றாய்
நிலையுடன்ஜோதிடநூலை ஆராய்ந்தன்பாய்
    நிதானித்துபலன்சொல்ல வேண்டும்தானே. 89

உரை:—இலக்கினத்திற்கு நாலாமிடத்திலாகிலும், பத்தாமிடத்திலாகிலும் குளிகனிருந்தால் ஜாதகனுக்கு மாரகமுண்டாகும். சுக்கிரபகவானுக்கு விரயஸ்தான ஆதிபத்யமானாலும் மாரகத்தைச் செய்வார். ஆனால், திசாபுத்திகளின் வலுவைப் பார்த்து இலக்கினாதிபதியின் குறிப்புணர்த்தும் பலன் சொல்லவேண்டும்.

அன்புடனே இலக்கினத்தின் மூன்றோனோடும்
    அஷ்டமாதிபதியும் மாரகஞ்செய்வார்கள்
தன்மையாய்இவர்கள் திசாபுத்திதன்னில்
    தருவார்கள்மாரகம்போல் கஷ்டநஷ்டம்

RangaRakes tamilnavarasam.com

துன்பஞ்செய்கின்ற கண்டாதிகண்டம்
　　துடருமேஜாதகற்கு இரண்டேழ்மூன்றில்
பன்னிரண்டாமதிபர் மாரகஞ்செய்வார்கள்
　　பஷமாய்சுபர்சேர்ந்தால் மத்திபமேயாகும் 89

உரை:—இலக்கினத்திற்கு மூன்றுமதிபதி, அஷ்டமாதிபதி மாரகஞ்செய்வார்கள். ஆனால் சுபக்கிரகங்கள் பார்வையானால் இவர்களின் திசாபுத்தியில் மாரகத்திற்கு சமானமான கஷ்டநஷ்டங்களையும், கண்டாதிகண்டபலனையும் தருவார்கள். ஆனால், இரண்டாமிடத்ததிபதியும், ஏழாமிடத்ததிபதியும், மூன்றுமிடத்ததிபதியும், பனிரெண்டாமிடத்ததிபதியும் மாரகஞ்செய்வார்கள். சுபக்கிரகங்களிவர்களைப் பார்த்தால் மத்திப பலனுண்டாகும்.

இலக்கினத்திற்கிரண்டேழோனும் மாரகஞ்செய்வார்கள்
　　இவர்கள்கேந்திர கோணநட்புஆஷி
பலமானஉச்சராசியிலிருந்தால்
　　புதன்குருசுக்ரனிவ ரோடுசேர்ந்தும்
நலமுடனேபார்த்தாலும் யோகமுண்டு [துற்குல்
　　நவில்ரெண்டேமூன்றேழ் விரயமெட்டாம்ஸ்தானத்
கலகமாம்பாபர் மாரகரும்சேர்ந்தால்
　　கண்டத்திற்கிசைத்த கஷ்டப்படுத்துவாரே. 90

உரை:—இலக்கினத்திற்கு இரண்டாமிடத்ததிபரும், ஏழாமிடத்ததிபரும் மாரகஞ்செய்வார்கள். இவர்கள் கேந்திரம், திரிகோணம், நட்பு ஆஷி, உச்சஸ்தானத்திலிருந்து புதன், குரு, சுக்ரனிவர்களோடு சம்பந்தமானாலும் பார்த்தாலும் யோகமுண்டு ஆகும், இவர்கள் மாரகாதிபதிகளுடனும், பாபர்களுடனும் சேர்ந்தால் கண்டத்திற்குச் சமானமான கஷ்டபலனைத் தருவார்கள்.

துன்பஞ்செய்மாரகாதி பதிகளானோர்
　　துடர்ந்துமாரகாதிப ருடனேசேரநோக்க
வன்மைசேர்மாரகத்தைக் கொடார்கள்
　　வழுத்தும்பாபக்கிரக மிவரோடுற்றால்
கன்மங்கள்செய்யும் கண்டாதிகண்டம்
　　கஷ்டபலன்மரண வேதனையும்செய்வார்
தன்மையாய்கிரகநிலை ஆராய்ந்தன்பாய்
　　நவிலுவாய்ஜாதகர்க்கு பலனைத்தானே. 91

உரை:—துன்பத்தைக்கொடுக்கின்ற மாரகாதிபதிகள் தங்களைப்போல் கொடுமை செய்யும்படியான மாரக ஸ்தானாதிபதிகளுடனே சேர்ந்த பாபக்கிரகங்கள் கண்டாதிகண்டமான கஷ்டபலனையும், மாரகத்தையும் செய்வார்கள். இலக்கினபலனையும் கிரகபார்வை சம்பந்த பலனையும் ஆராய்ந்துணர்ந்து பலன் சொல்லவேண்டும்.

RangaRakes tamilnavarasam.com

இனிதாகஜாதகரின் பலனுராய்ந்து
இசைந்தபடிசொல்வதென்றால் உதயஸ்தானந்
தனில்ரெண்டுநான் கேழு ஆயுள்ஸ்தானந்
தசமஸ்தானம்லாபஸ் தானத்தோடு
பனிரெண்டாம்ஸ்தானம் மாரகஸ் தானங்கள்
பகரும்ந்தராசி திரிகோணத்திற் குளிகனின்றால்
சனிவருங்காலத்தில் கொல்வார்களென்று
சாற்றுவாய் ஜாதகர்க்கு பலனைத்தானே. 92

உரை:—ஜாதகரின் காலநிலையை யனுசரித்துப் பலன் சொல்ல வேண்டுமானுல், இலக்கனத்திற்கு இரண்டு, நான்கு, ஏழு, எட்டு, பத்து, பதினென்று, பனிரெண்டாமிடங்கள் மாரகஸ்தானமாகும். ஆனுல், குளிகனிருந்த ராசிக்கு திரிகோண ஸ்தானத்தில் சனிவருங் காலத்தில் கொல்வார்களென்று ஜாதக கணித ஆராய்ச்சியோடு பலன்சொல்லவேண்டும்.

வாக்குஸ்தானந் தனிலேராகுநிற்க
வன்மையுடன்கேது எட்டாமிடத்திருக்க
தீர்க்கமுடன் ஜாதகனுக் கமையும்கண்டம்
திறமுடனேசொல்வாய் ஜாதகமாராய்ந்து
ஏற்கெனவேஇராகுபகவானுந்தான்
எட்டாமிடத்திலிருக்க பாபர்சேர்ந்திட்டாலும்
பார்த்தாலும்லக்கினத்தோன் குருவுங்கூடி
பாபரோடோர்ராசியுற்றுல் விஷத்தாற்பீடை. 93

உரை:—இராகுபகவான் வாக்குஸ்தானத்திலும், ஆயுள் ஸ்தானத்தில் கேதுவுமிருந்தால் ஜாதகனுக்குக் கண்டாதிகண்டமும் மாரகமும் நேரிடும். ராகுபகவான் அஷ்டம ஸ்தானத்திலிருக்கும்போது பாபர் சேர்ந்திட்டாலும் பார்த்திட்டாலும், லக்கினுதிபதியும் குருவும் பாபருடன் சேர்ந்து ஒரே ராசியிலிருந்தால் விஷத்தினுல் பீடையுண்டாம்.

சுத்தரஞ்சேர் ஜாதகர்க் கிவ்விதங்களாக
சூழ்ந்ததொருமாரக மிவ்விதமானுலும்
சந்திரனுமிருந்த விரயஸ்தானத்தில்
சனிபகவான்வரும்போது ஏழரையாண்டென்னும்
மந்தனுக்குரித்தான காலமென்று
மாநிலத்தில்ஜாதகர்க்கு பலன்சொன்னுலும்
பிந்திவரும்மூன்றும்ராசி தனிலேகாரி
பிரவேசமானுலே நீங்குந்தானே. 94

உரை:—அழகமைந்த ஜாதகர்களுக்கு இவ்விதமாக மாரக பலனிருந்தாலும், சந்திரனிருக்கும் இராசிக்கு பனிரெண்டாம்

இராசியில் சனிபகவான் வரும்போது ஏழரை நாட்டுச் சனியாகும். அந்த ஏழரை வருஷமும் ஜாதகருக்கு பலவித துன்பமும் துயரமும் கஷ்டமும் கவலையும் வறுமையும் பிணியும் கண்டாதிகண்டமும் மாரக பலனுமுண்டாகி இராசிக்கு மூன்றுமிடத்தில் சனி வரும்போது நீங்கிவிடும்.

அம்புவியிலேபிறந்த ஜாதகர்க்கு
    ஆராய்ந்துபலன் சொல்லவேண்டுமானால்
சிம்மம்தேள்மீனமுடன் கடகம்மேஷம்
    சிறந்தவொரு சனிக்காட்சிவீடென்றேதும்
கும்பமும்சந்திர ராசியாயிருந்தால்
    குறித்தஏழரைநாட்டுச் சனிவந்தாலே
வம்பாககஷ்டநஷ்ட பலதுன்பங்கள்
    வாய்க்குமென்று ஜாதகர்க்குபலன்சொல்வீரே. 95

உரை:—உலகில் பிறந்த ஜாதகர்கட்கு பலன் சொல்லும்போது சந்திரனின்ற ராசி சிம்மம், விருச்சிகம், மீனம், கடகம், மேஷம், கும்பமா யிருந்தால் ஏழரைநாட்டுச் சனிவரும்போது பலவிதமாகிய கஷ்டநஷ்டமும் துன்பமும் துயரமும் வரும்.

பன்னரியஏழரைநாட்டுச் சனிவருங்காலத்தில்
    பகருவேன்ஜாதகர்க்குப் பலனைத்தானே
முன்தடவைஜாதகர்க்கு கஷ்டமாகும்
    முயற்சிசெய்தாலுந் துன்பம்மாறுதப்பா
தன்பிதாசுகபலனையநுப விப்பான்ரெண்டாந்
    தடவையில்ஜாதகன் சுகமாயிருப்பான்
வன்மையாய்மூன்றுந்தடவை மரணமென்று
    வழுத்துவீர்ஜாதகர்க்கு ஜோதிடவல்லோரே. 96

உரை:—உலகில் ஜனித்த ஜாதகர்களுக்கு ஏழரைநாட்டுச் சனி வருங்காலத்தில் ஜாதகனுக்கு கஷ்டபலனும், ஜாதகனுடைய தகப்பனுக்கு சுகபலனும் உண்டாகும். இரண்டாவது சுத்து வரும்போது ஜாதகன் சுகபலனை யநுபவிப்பதும் தகப்பன் கஷ்ட பலனை யநுபவிப்பதாயிருக்கும். மூன்றாவது சுத்துவரும்போது ஜாதகனுக்கு மரணமாகும். ஆனால் கிரகங்களின் நிலையறிந்து திசாபுத்தியின் கால நிர்ணயமும் மாரகஸ்தானாதிபர்களுடைய பலனையும் ஆராய்ந்து பலன் சொல்லவேண்டும்.

சனிபகவான்சரராசி தனிலிருந்தால்
    சார்ந்தமறுதேசத்தில் மரணமாகும்
தனியாகஸ்திரராசி தனிலிருந்தால்
    தன்வீட்டில்மரண மெய்துவானென்றேது

இனிதான உபயராசியிலிருந்தால்
இன்பமாய்நூதன வீட்டில்மரணமாவான்
சனிவுடையஜாதகத்தின் பலனாராய்ந்து
கணித்துரைப்பீர்விபரமாய் ஜோதிடவல்லோரே. 97

உரை:—சனிபகவான் சரராசியிலிருந்தால் ஜாதகர் மறு தேசத்தில் மரணமாகும்படியா யமையும். ஸ்திரராசியிலிருந்தால் தன் வீட்டில் மரணமாவார்கள். உபயராசியாயிருந்தால் நூதன வீட்டில் மரணமாவார்கள். ஆனால் இதனுடனே ஜாதககணித ஆராய்ச்சியோடு பலன் சொல்லவேண்டும்.

பன்னுலக்னஞ்சரராசி யாயிருந்தால்
பனிரெண்டுக்குடையவர்கள் பலன்தாரார்கள்
ஒன்பதாமிடத்தோர்கள் ஸ்திரராசிக்கு
ஒருநாளும்நல்லபலன் கொடுக்கமாட்டார்
தன்மையாய்உபயரா சிக்குரமோர்
தருந்தநற்பலன் ஜாதகர்க்கீயார்கள்
தன்மையாய்நட்பாயிருந்து மித்ருசேர்க்கைபார்வை
நாடினால்சுபபலனைத் தருவார்தானே. 98

உரை :—ஜனனலக்கினஞ் சரராசியாயிருந்தால் விரய ஸ்தானாதிபர் பலன் கொடுக்கமாட்டார்கள். ஸ்திரராசியாயிருந் தால் ஒன்பதாமிடத்ததிபதி நல்லபலனைக் கொடுக்கார். உபய ராசியா யிருந்தால் ஜாதகனுக்கு உத்தம பலனை ஒருபோதும் கொடுக்கமாட்டார்கள். ஆனால் அந்த கிரகங்கள் நட்பாயிருந்து மித்ருகிரகங்களின் சேர்க்கையானாலும் பார்வையானாலும் நல்ல பலனைக்கொடுத்து தனலாபமும் சுகசவுக்கியத்தையும் அனுப விக்கச் செய்வார்கள்.

ஜனனலக்கினத்திற்கு மூன்றாறுபத்தில்
சார்ந்தசூரியனிருந்தால் யோகமாகும்
தினகரனார்திசையில் மதிகுருசேய்புத்தி
திடமானநற்பலனை கொடுக்குமப்பா
புனமகிழ்வாய்ஒன்றாறேழ் தசமஸ்தானம்
மதியிருந்தால்சுபபலனை தருவாரப்பா
தினகரன்குருபுத்தியில்சந்திரன் திசையில்தானே
திறமுடனேநற்பலன்தந் தருள்செய்வாரே. 99

உரை:—இலக்கினத்திற்கு மூன்று, ஆறு, பத்தில் சூரிய னிருந்தால் நல்ல யோகபலனைத் தருவார். ஆனால், சூரிய திசை யில் சந்திரன், குரு, செவ்வாய் நல்ல பலனைத் தமது புத்தியில் தருவார்கள். சந்திரன் ஒன்று, ஆறு, ஏழு, பத்தாவதுஸ்தானத்தி

RangaRakes tamilnavarasam.com

யிருந்தால், நல்லபலனைக் கொடுப்பார். ஆனால், சந்திரதிசையில் சூரியபுத்தியிலும் குருபுத்தியிலும் நல்ல பலனைக் கொடுப்பார்.

இலக்கினத்திற்காறு மூன்றும்ஸ்தானத்தில்
 இசைந்துசெவ்வாயிருந்தால் சுபமேயாகும்
கலக்கமிலா குஜதிசையில் வியாழன்சந்திரன்
 கதிரவனூர்புத்திகளில் சுபயோகங்கள்
நலமுடனே தருவார்க ளினிதாய்த்தானே
 நவிலலாகுஞ்சுகலாபம் வெகுவாய்கிடைக்கும்
பலமறிந்துகிரகநிலை ஆராய்ந்தன்பாய்
 பலனுரைப்பீர்ஜோதிடத்தில் மிகவல்லோரே. 100

உரை:—இலக்கினத்திற்கு திரிதியஸ்தானத்திலும், ஆறுமிடத்திலும் செவ்வாய் பகவானிருந்தால் சுபயோகமாகும். செவ்வாய் திசையில் சூரியன், சந்திரன், குருபகவானும் நல்ல பலனைக் கொடுப்பார்கள். ஆனால் கிரகங்களின் நிலையை விவரமாய்க் கவனித்து மற்ற கிரகங்களின் சேர்க்கை நோக்கமறிந்து பலனுரைத்தால் ஜாதக சித்தாந்தத்திற்குப் பொருந்தி யிருக்கும்.

புதபகவானிரண்டெட்டு பத்தாமிடத்தும்
 பொருந்திடினும் லாபத்திலிருந்திட்டாலும்
இதமுடனே சுபமாகு மானாலுந்தான்
 இலக்ஷ்மிகடாக்ஷமும் பெறுவாரின்னும்
பதமாகவித்தைபுத்தி மிகவுண்டாகும்
 பார்தனிலேமால்திசையில் சனியுஞ்சுக்ரன்
சதமானபுத்தியில் நல்லபலனைத்தந்து
 சந்தோஷிக்கச்செய்வா ரென்றுரைப்பாய். 101

உரை:—புதபகவான் இரண்டு, எட்டு, பத்தாமிடத்தி லிருந்தாலும் பதினோருமிடமாகிய லாபஸ்தானத்திலிருந்தாலும், நல்ல சுபபலனைக் கொடுத்து இலக்ஷ்மி கடாக்ஷம் பெறும்படியாய்ச் செய்வார்கள். வித்தையும், புத்தியும் மென்மேலும் பெருகும்படியாய் அனுக்கிரகஞ் செய்வார்கள். ஆனால் சனி புத்தியிலும், சுக்கிரன் புத்தியிலும் நல்ல பலனையும் கொடுத்து மனோல்லாசமாயிருக்கும்படி செய்வார்கள்.

குருபகவான் லக்கினத்திற் கிரண்டேழைந்தில்
 குறித்தஒன்பதா மிடத்திலிருப்பாரானால்
அருமையுடன்சுபபலனைத் தருவாரப்பா
 ஆதித்தன்மதிசெவ்வாய் புத்திதன்னில்



RangaRakes tamilnavarasam.com

தருவார்கள் நற்பலனை யோகங்கண்டு
    தரணியில்ஜாதகற்கு விபரமாக
பெருமையாயுரைக்கும்பொ தாதிபத்தியம்
    பெற்றுணர்ந்தே பலனைபுகலுவாயே. 102

உரை:—குருபகவான் இலக்கினத்திற்கு இரண்டு, ஏழு, ஐந்து ஒன்பதாகிய சுபஸ்தானத்திலிருந்தால் நல்ல பலனைத் தருவார். ஆனால், குருதிசையில் சூரியன், சந்திரன், செவ்வாய் புத்திகளில் விசேஷ யோகபலனைத் தருவார்கள். ஆனால் திசா புத்தி நாதர்களின் ஆதிபத்திய பலனை ஆராய்ந்து பலன் சொல்லவேண்டும்.

சுக்கிரனும்லக்கினத்திற் கொன்றிரண்டு
    சுகஸ்தானம்மூன்றைந்தெட் டொன்பதோடு
பக்குவமாய்பதினொன்று பன்னிரெண்டில்
    பக்ஷமாயிருந்திடிலோ சுபயோகந்தான்
சுக்கிரதிசைதனில் மந்தன்மாலின்புத்தி
    சுகமான நல்லபலன் கிடைக்கச்செய்வார்
சிக்கிளைஜாதகநூல் கணித்தாராய்ந்து
    ிராகப்புகன்றிடுவீர் ஜாதகர்க்கே. 103

உரை:—சுக்கிரபகவானவர் இலக்கினத்திற்கு ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து, ஏழு, எட்டு, ஒன்பது பதினொன்று, பனிரெண்டாவது ஸ்தானங்களிலிருந்தால் சுபபலனைத் தருவார். இந்த சுக்கிர திசையில், புதன்புத்தியிலும், சனிபுத்தியிலும் நல்ல பலனைக் கொடுப்பார்கள். ஆனால் திசாநாதன் ஸ்தானபலனறிந்து பலன் சொல்லவேண்டும்.

மந்தனுமேலக்கினத்திற் காறுமூன்றில்
    மனமகிழ்வாயிருந்திட்டால் சுபயோகந்தான்
இந்ததிசையில்மாலின் புத்தியோடும்
    இசைந்தசுக்கிரனும் புத்தியும்நற்பலனைத்தந்து
சுந்தரமாங்குணமமைந்த பெண்களோடும்
    சூழ்புவியில்தனந்தான்ய சம்பத்தோடும்
அந்தமாய்சுகித்திருக்க நல்லயோகம்
    அன்புடனே தந்திடுவா ரென்றுசொல்லே. 104

உரை:—சனிபகவான் இலக்கினத்திற்கு ஆறுமிடத்திலும் மூன்றுமிடத்திலுமிருந்தால் சுபயோகபலனை அனுபவிக்கச் செய்வார். ஆனால் சனிதிசையில் புதன்புத்தியும், சுக்கிரபுத்தியும் நல்ல பலனைக் கொடுப்பார்கள். அதன்பலனெவ்விதமென்றால் ஜாதகர் அழகான பெண்களுடனே சுகானந்தமாய் வாழ்ந்திருந்து திரவிய சம்பத்துடனே பெருமையாய் ஜீவித்திருப்பார்கள்.

RangaRakes tamilnavarasam.com

இலக்கினத்திற்காறு மூன்றுமிடத்தில்
    இராகுபகவானிருந்தால் ஜாதகர்க்கு
தலமுடனேயோகபலன் தருவாரே
    தாடியேயவர்திசையில் செவ்வாய்சுக்கிரன்
பலமானபுத்தியிலே யோகபாக்கியம்
    பக்ஷமுடன் தருவார் ஜாதகர்க்கு
கலவரமில்லாமலே ஜோதிடசாஸ்திரத்தை
    கவனித்துஜாதகர்க்குப் பலன்சொல்வீரே. . 105

உரை:—இராகுபகவான் இலக்கினத்திற்கு மூன்று ஆறு மிடத்திலிருந்தால் நல்ல பலனைத் தருவார். ஆனால், இராகு திசையில் செவ்வாய்புத்தியிலும் சுக்கிரபுத்தியிலும் நல்ல யோக பலனைத் தருவார்கள் ஆனால் இந்த புத்திநாதர் நின்ற ஸ்தான பலனறிந்து ஜாதக கணிதாராய்ச்சி செய்து பலன் சொல்ல வேண்டும்.

கேதுபகவான்லக்கினத்திற்கு மூன்றுறில்
    கெம்பீரமாயிருந்தால் சுபயோகங்கள்
ஓதரியஞானமும் பெரியோர்சேர்க்கை
    ஒழுங்காகவேயமைந்து சுகமாய்வாழ்வார்
நீதியாயிவர்திசையில் சனியின்புத்தி
    நிதானமாய்சுக்கிரபுத்தி தனிலும்நல்ல
காதலுள்ளகன்னிசுகம் திரவ்யலாபம்
    கௌரவமாய்ஜாதகர்க்கு கிடைக்கும்பாரே. 106

உரை:—கேதுபகவான் இலக்கினத்திற்கு மூன்று ஆறு மிடத்திலிருந்தால் நல்ல யோகபலனைத் தருவார். அன்றியும், பெரியோர் சேர்க்கை, ஞானமும் சங்கீதக்யானமும் நல்ல கீர்த்தி யையும் தருவார். இந்த கேது திசையில் சுக்கிரபுத்தி சனிபுத்தி தனில் நற்குணமுள்ள கன்னியர் சேர்க்கையும் திரவிய லாபமும் சுகபோக பாக்கியமும் ஜாதகர்க்கு உண்டாகும்.

## நவக்கிரக திசாபுத்தி பலன்

சாற்றுமந்தத்சாநாதன் தனக்குவாய்ந்த
    சகலபுத்திநாதர்களும் மித்ரராக
தூற்றியதிரிகோண கேந்த்ரஸ்தானம்
    சொக்ஷேத்ரம்உச்ச தனலாபத்திருந்தால்
ஏற்றவாகனம்பூமி சம்பத்தோடு
    எந்நாளும்களத்ரபுத்ர லாபத்தோடும்
வீற்றிருந்தேதனதான்யம் மிகவேபெற்று
    விளங்குவார்கீர்த்தியாய் யெப்போதும்தானே. 107

உரை:—ஜாதகரின் திசாநாதருக்கு புத்திநாதன் மித்திரனும் அமைந்து, திரிகோண கேந்திரஸ்தானம் ஆட்சி உச்ச தன லாப ஸ்தானத்திலிருந்தால் வாகனம், பூமி, திரவிய சம்பத்துடன் மனைவி மைந்தர், தன தான்ய சம்பத்துடனே கீர்த்திப்ரகாசமா யிருந்து வாழ்ந்திருப்பார்கள்.

புத்திநாதன் துதிசை பதியானாலும்
பொருந்தியேசப் தமத் தோனானாலும்
சுத்தராய்ரெண்டுமூன் றாறேழெட்டு
துலங்கியபன் னிரண்டி லிருந்திட்டாலும்
சித்தமாய்பாபருடன் சேரபார்க்க
சரீரபிணிவறுமையுடன் துன்பத்தோடு
சத்ததிமுங்கஷ்டநஷ்ட மனுபவித்து
ஏங்கியேமனஞ்சலித்துக் கலங்குவாரே. 108

உரை:—புத்திநாதன் துதிசையாதிபதியானாலும் சப்தம ஸ்தானாதிபதியானாலும் திசாநாதருக்கு இரண்டு, மூன்று, ஆறு, ஏழு, எட்டு, பனிரெண்டாம் ஸ்தானத்திலிருந்தாலும், அன்றி யும் பாபக் கிரகங்களுடன் சேர்ந்தாலும் பார்த்தாலும் ஜாதக னுக்கு வறுமையும், வியாதியும், துன்பமும், துயரமும், கஷ்ட நஷ்டங்களும், கண்டாதி கண்டங்களும் சேர்ந்து கஷ்டநஷ்டத் தினால் கலங்கும்படிச் செய்யும்.

இன்பானபுத்திநாத ராஞோர்நல்ல
இசைந்தயோககாரகா ளுடன்சேர்ந்தாலும்
அன்பாகப்பார்த்தாலும் ஜாதகர்க்கு
அதிகநற்பலன்தருவா ராகையாலே
நன்மனதும்வித்தைபுத்தி விவேகத்தோடும்
நானுவிதமானவர்த் தகங்கள்செய்து
பொன்பொருளும் வெகுவாகசேகரித்து
பூதலத்திலேமகிழ்வாய் ஜீவிப்பாரே. 109

உரை:—ஒவ்வொரு திசையிலும் வருகின்ற புத்திநாதர் யோககாரர்களுடனே சேர்ந்தாலும் பார்வைபெற்றானாலும் ஜாதகர்க்கு விசேஷ தைரியமும் வித்தையும், புத்தியும் ஞானமும் கல்வியும் விவேகமும் பொருந்தி பலவிதமான வியாபாரஞ்செய்து திரவிய லாபத்துடனே பொருள் பூஸ்திதியோடு மனைவிமைந்தர் பந்துவர்க்கத்தாருடனே மனமகிழ்ந்து வாழ்ந்திருப்பதுடன் எண்பேர் சுகவானென்றுரைக்கும்படியான கீர்த்தியுடன் விளங்குவார்.

RangaRakes tamilnavarasam.com

சனிகுஜனும்இராகுகேது முதலானோரும்
சாற்றுந்தேய்பிறைசந்திர பகவானோடு
தினகரனும்நட்பு ராசியிலிருந்து
திகழினிசுபக்கிரகம் யோகரோடும்
மனமகிழசேர்ந்தாலும் பார்வைதான் பெற்றாலும்
மாரகாதிகளுடைய சேர்க்கைநோக்கம்
கனமுடனேஉண்டானால் கொடியதுன்பம்
கஷ்டநஷ்டம் கண்டங்களெய்தும்பாரே. 110

உரை:—சனிபகவானும், செவ்வாய்பகவானும், இராகு கேதுக்களும், தேய்பிறைச் சந்திரனும், சூரியனும், நட்புராசியி லிருந்து சுபக்கிரகங்களுடன் சேர்ந்தாலும் யோககாரகர்களுடன் சேர்ந்தாலும் பார்வை பெற்றாலும், மாரகாதிபதிகளுடைய சேர்க்கை நோக்க முண்டானாலும் குரூரமாகிய கொடிய துன்ப மும், கஷ்ட நஷ்டங்களும் கண்டாதி கண்டங்களும் நேரிட்டு கவலை யடைந்து கலங்கும்படியாகச் செய்வார்கள்.

தன்மகன்மாதிபதி திசைவந்தாற்றால்
தகுந்தபுத்திவந்தாலே யோகமாகும்
ஒன்பதிற்குடையோன் திசையில் பத்தோன்புத்தி
ஓங்கும்புகழ்சுப பலனைத்தருகுவார்கள்
நன்மையுடன்பத்தோன் திசையில் ஒன்பான்புத்தி
நாடியோகந்தான்தருவார் ஜாதகர்க்கு
பொன்பொருளும்பூஸ்திதியும் வாகனங்கள்
பொருந்துகின்றதனலாபம் கிடைக்கும்பாரே. 111

உரை:—தன்ம கன்மாதிபதியாகிய தர்மஸ்தானதிபதியும் கரம ஸ்தானதிபதியும் மித்ருகிரகங்களாயிருந்து மித்ருக்ஷேத் திரத்திலிருந்தாலும் யோகபலனைத் தருவார்கள் அன்றியும், பத் தாமிடத்தான் திசையில் ஒன்பதாமிடத்தான் புத்தியிலும், ஒன்ப தாமிடத்தான் திசையில் பத்தாமிடத்தான் புத்தியும் நல்லயோக பலனைத் தருவார்கள். அதெவ்விதமென்றால், மகா சமர்த்துடன் வர்த்தகஞ் செய்து வெகு திரவியம் சேகரஞ்செய்து பொன் பொருள் சேகரித்து ஆஸ்தி பூஸ்திதியுடன் தனந் தான்ய லாபத்தை விசேஷமாய் சேகரித்து சுகசவுக்கியமா யிருக்கும்படி யான நிலையா யிருப்பார்கள்.

பூதலத்தில்ஜாதகர்க்கு பலனாராய்ந்து
புகலுகின்றவேளையில் கோட்சாரமாக
நீதனுகாவியாமுன் சனி இரண்டுபேரும்
திகழும்நல்லஸ்தானத்தி லிருப்பாரானால்

RangaRakes tamilnavarasam.com

ஓதரியநற்பலனைத் தருவார்நாளும்
ஓங்குமே நாகரீகசவுக்கியங்கள்
சதன்றிதுர்ஸ்தானத் திருப்பாராகில்
இன்பமில்லை மத்திபப்பலனீவாரே. 112

உரை:—உலகினில் பிறந்த ஜாதகர்க்கு பலாபலன் விபரமாய் ஆராய்ந்து திசாபுத்தி பிரித்துப் பலன்சொன்னாலும், அந்த சமயத்தில் குருபகவானும் சனிபகவானும் நல்ல ஸ்தானத்திலிருந்தால் வித்தியா லாபமும், திரவியசம்பத்தும், பந்துமித்திர நல்லோர் சேர்க்கையும், சுபகாரிய முதலான நன்மை யனைத்தும் கிடைக்கும். ஆனால் மேற்குறிப்பித்த சனி குருவானவர்கள் கெட்ட ஸ்தானத்திலிருந்தால், திசாபுத்திநாதர்கள் வலுத்திருந்தாலும் தாங்களிருந்த ஸ்தானபலத்தினால் மத்திப பலன்கள் அனுபவிக்கும்படி செய்வார்கள்.

இஷ்டமுடன் ஜாதகர்வந் தெதிரில்நின்று
இனியபலன் கேட்டாலே நவக்கிரகங்கள்
அஷ்டமாதிபதிதிசையில் மாரகர்புத்தியானல்
அனைவர்க்கும்பகையாகி வியாதிகண்டம்
கஷ்டமுடன் துன்பங்கள் துயரத்தோடு
கண்டாதிகண்டங்க ளால்திகைத்து
நஷ்டத்தை யனுபவிப்பாரென்றுநீயே
நவிலுவாய்ஜாதகர்க்கு பலனைத்தானே. 113

உரை:—ஜாதகர் தமது காலநிலையை கவனிக்க வேணுமென்பதாக வந்து விசாரித்தால் எந்தக் கிரகமாயிருந்தாலும் அவர்களுடைய அஷ்டமாதிபதி திசையில் மாரகனுடைய புத்தி வந்தால் சகலருக்கும் பகையாகி, துன்பமும், துயரமும் சூழ்ந்து, கஷ்டம், கவலையால் மனமயங்கி வியாதியால் திகைத்து கண்டாதி கண்டங்களை யனுபவித்து காண்பேர் பழித்துப் பரிகாசிக்கும்படியான தன்மையா யிருப்பார்களென்று சொல்லவேண்டும்.

## மாரக நிசைவரிவ

தக்கரெண்டுக்குடையோன் திசையில்விரயத்தோன்புத்தி
தருந்தவிரயத்தோன் திசையில்ரெண்டோன்புத்தி
லக்கினத்திரண்டிவிருந்தோன் திசையில்ரெண்டோன்புத்தி
லக்னவிரயத்தோன் திசையி லிரண்டுற்றன்புத்தி
மிக்கவேமாரகஞ் செய்யுமென்று
மேதினியின் ஜாதகர்கட் குரைத்தவாக்கியம்
முக்கியமாய்கவனித்து ஜாதகர்க்கு
முன்பிருத்துதெளி வாகப்புகலுவாயே. 114

உரை:—இரண்டுக்குடையோன் திசையில் விரயஸ்தானாதி பதி புத்திமாரகம் செய்யும். பனிரெண்டாமிடத்தோன் திசை யில் இரண்டாமிடத்தோன் புத்திமாரகமுண்டாகும். இலக்கினத் திற்கு இரண்டிலிருந்த கிரகத்தின் திசையில் பனிரெண்டா மிடத்திலிருந்தவன் புத்திவந்தால் மாரகஞ்செய்யுமென்று ஜாதக கணித ஆராய்ச்சி செய்யும்போது கிரகநிலையைக் கண்டு விபர மாய் கவனித்து பலன் சொல்லவேண்டும்.

காண்பாய்நீமூன்றோன் திசையில்லாபத்தோன்புத்தி
கருதுபதினொன்பான் திசையில் மூன்றோன்புத்தி
பூண்பாய்மூன் றோனோடு சேர்ந்தோன் திசையிலேதான்
பொருந்துபதினொன்று சம்பந்தமானோன்புத்தி
காண்பாய்பதினொன்றோன் திசையில் மூன்றோன்புத்தி
கருதுமூன் றுக்குடையோனோடு சேர்ந்தோன்திசையின்
பான்மையுடன்பதினொன்றை சேர்ந்தோன்புத்தி [புத்தி
பகருமூன்றோன் திசையில் மாரகமுண்டாகும். 115

உரை:—இலக்கினத்திற்கு மூன்றுவது ஸ்தானாதிபன் திசை யில் பதினொன்றாமிடத்ததிபதி புத்திவந்தால் மாரகமாகும். பதி னொன்றாமிடத்ததிபதியின் திசையில் மூன்றாமிடத்ததிபதி புத்தி மாரகத்தைச் செய்யும். பதினொன்றுக்குடையவன் திசையில் மூன்றாமிடத்ததிபதி புத்திமாரகத்தைச் செய்யும். மூன்றுக்குடை யவனோடு சம்பந்தப்பட்டவன் திசையில் பதினொன்றுக்குடை யவன் புத்திமாரகஸ்தானமாகும். பதினோறாமிடத்தைச் சேர்ந் தவன் மூன்றாமிடத்தி லிருக்கின்றவன் புத்திவந்தால் மாரகஸ் தானமாகும். ஜாதகரின் திசாபுத்தி பலனை ஆராய்ந்து பல னறிந்து மாரகஸ்தானத்தின் பலனைச் சொல்லவேண்டும்.

சுகாதிபதிதிசையில் பத்துக்குடையோன்புத்தி
சொல்லும்பத்தோன் திசையில் நாலோன்புத்தி
சுகத்திலிருந்தோன் திசையில் பத்துற்றோன்புத்தி
சூழ்ந்துபத்தோன் திசையில் சுகத்தோன்புத்தி
மகிழாகஇருந்தாலும் ஜாதகர்க்கு
மாரகத்தைச் செய்வார்களாகையால்
ஜெகமீதுஜோதிடநூல் கணித்தாராய்ந்து
சொல்லுவீர்சோதிடத்தில் மிகவல்லோரே. 116

உரை:—சுகாதிபதி திசையில் தசம ஸ்தானாதிபதியின் புத்தி வந்தால் மாரகமாகும். பத்தாமிடத்ததிபதி திசையில் நாலாமிடத்ததிபதி புத்திவந்தால் மாரகம். சுகஸ்தானத்தி லிருந்தவன் திசையில் ஜீவன ஸ்தானத்திலிருந்தவன் புத்தி

RangaRakes tamilnavarasam.com

வந்தால் மாரகமாகும். பத்தாமிடத்திலிருந்தவன் திசையில் நாலாமிடத்திலிருந்தவன் புத்திவந்தால் மாரகமாகும். இவ்விதமாக ஒவ்வொரு ஜாதகத்திற்கும் பலன் சொல்லும்போது ஸ்தானாதிபதியின் பலமும் ஸ்தானத்திலிருந்தவன் பலமும் பார்த்துத்தான் பலனை விபரம் சொல்லவேண்டும்.

## இதற்கு உதாரணம்

ஜனன லக்கினத்திற்கு சதுர்த்த கேந்திராதிபதியோடு சம்பந்தமானவன் திசையில் ஜீவன சப்தம ஸ்தானாதிபதியோடு சம்பந்தப்பட்டவன் புத்திமாரகம். ஜீவனஸ்தானாதிபதியோடு சம்பந்தப்பட்டவன் திசையில் சுகாதிபதியோடு சம்பந்தப்பட்டவன்புத்திகாரகத்தைக்கொடுக்கும். சுகாதிபதி திருஷ்டிசம்பந்தப் பட்டவன் திசையில் பத்துக்குடையவன் திருஷ்டி சம்பந்தப்பட்டவன் புத்திமாரக முண்டாம். நாலுக்குடையவன் பார்வையுற்றவன் திசையில் பத்துக்குடையவன் பார்வையுற்றோன் புத்தி யாரகமாகும்.

### எண்சீரடி விருத்தம்

பஞ்சமஸ்தானாதிபதி திசையிலந்த
பாக்கியஸ்தானாதிபதி புத்திதானே
அஞ்சாமல்மாரகத்தை செய்யுமென்று
அன்புடனேஜாதகர்க்கு பலனைச்சொல்வாய்
மிஞ்சியேபஞ்சமத்தோன் திசையில்தானே
மேன்மைசேர்ஒன்பதோன் புத்தியுத்நான்
வஞ்சமுடன்மாரகத்தைச் செய்யுமென்று
வழுத்துவீர்ஜோதிடத்தில் மிகவல்லோரே. 117

உரை:—பஞ்சமஸ்தானாதிபதி திசையில் பாக்கிய ஸ்தானாதிபதி புத்தி மாரகமாகும். ஒன்பதிற்குடையவன் திசையில் ஐந்துக்குடையவன் புத்திமாரகம் ஒன்பதிலிருக்கிறவன் திசையில் ஐந்திலிருக்கிறவன் புத்திமாரகஞ் செய்யும்.

## இதற்கு உதாரணம்

பஞ்சமஸ்தானாதிபதியோடு சம்பந்தப்பட்டவன் திசையில் பாக்கிய ஸ்தானாதிபதியோடு சேர்த்திருப்பவன் புத்தியில் மாரகமுண்டாகும் ஒன்பதிற்குடையவனோடு சேர்ந்திருப்பவன் திசையில் பஞ்சம ஸ்தானாதிபதியுடன் சம்பந்தப்பட்டவன் புத்திமாரகமாகும். அன்றியும் ஐந்துக்குடையவன் பார்வை சம்பந்தப்பட்டவன் திசையில் ஒன்பதிற்குடையவன் பார்வை சம்பந்தப்பட்டவன் புத்திமாரகமாகும்.

RangaRakes tamilnavarasam.com

ஆறுடையோன் திசையில் எட்டோன்புத்தி
அஷ்டமத்தோன் திசையில் ஆறுக்குடையோன்புத்தி
சீருடனே ஆறிலுற்றோன் திசையிலெட்டில்
சிறப்புடனேயிருக்கிறவன் புத்திசொல்வான்
பாருலகில்அஷ்டமத்தோன் திசையில்ஆறில்
பலமாயிருப்போன்புத்தி மாரகத்தைச்செய்யும்
காருண்யகிரகநிலை ஆராய்ந்தன்பாய்
கவனித்துஜாதகர்க்கு பலன்சொல்வீரே. 118

உரை:—ஆறுக்குடையவன் திசையில் அஷ்டமாதிபதி புத்தி மாரகஞ் செய்யும். ஆயுள் ஸ்தானாதிபதி திசையில் ஆறுக்குடையவன் புத்திமாரகஞ்செய்யும். ஆறுமிடத்திலிருப்பவன் திசையில் எட்டாமிடத்திலிருப்பவன் புத்தி மாரகஞ் செய்யும். ஆயுள் ஸ்தானாதிபதி திசையில் சத்துரு ஸ்தானாதிபதி புத்திமாரகஞ் செய்யும். இவையனைத்தும் சோதித்தாராய்ந்தும் ஜாதகத்தின் வலுவினத்தையும் ஆராய்ந்துணர்ந்து பலன் சொல்ல வேண்டும்.

## இதற்கு உதாரணம்

சத்துரு ஸ்தானாதிபதியோடு அஷ்டம ஸ்தானாதிபதியுடனே சம்பந்தப்பட்டவன் புத்தி மாரகமாகும். அஷ்டம ஸ்தானாதிபதியுடனே சம்பந்தப்பட்டவனோடு சத்துரு ஸ்தானாதிபதியுடன் சம்பந்தமாயிருந்தவன் புத்தி மாரகமாகும். சத்துருஸ்தானாதிபதி பார்வை பெற்றவன் திசையில் அஷ்டம ஸ்தானாதிபதி பார்வை பெற்றவன் புத்தி மாரகஞ் செய்யும்.

இலக்கினத்தின்ஒன்றோன் திசையின் ஏழோன்புத்தி
இசைந்தஏழோன்திசையில் ஒன்றோன்புத்தி
வலக்கமிலாலக்கினத்தோன்திசையில் ஏழிலுற்றோன்புத்தி
வருதுலக்கினத்தோனுடன் சேர்ந்தோன்திசையிலே
பலமுடனேசப்தமாதி புத்திதானே [தான்
பராக்கிரமமாய்மாரகஞ் செய்யலாமென்றோது
நடமுடனேசப்தமத்தோ னுடனுற்றோன்திசையில் [வான்.
நாடியேலக்கினத்தோனுடன் சேர்ந்தோன்புத்திசொல்

உரை:—இலக்கினாதிபதி திசையில் சப்தமாதிபதி புத்திமாரகஞ் செய்யும் சப்தமாதிபதி திசையில் ஏழுக்குடையவன் புத்தி மாரகமாகும். இலக்கினாதிபதியுடனே சேர்ந்தவன் திசையில் சப்தமஸ்தானாதிபதி புத்தி மாரகமென்று ஜாதகர்க்கு ஆயுள் நிர்ணயங் கணித்துச் சொல்லும்போது, இலக்கின கணிதம் ஆராய்ச்சி செய்து துவாதச இலக்கினத்திலிருக்கும் கிரகங்களின் பலனை ஆராய்ந்து பலன் சொல்லவேண்டும்.



RangaRakes tamilnavarasam.com

## இதற்கு உதாரணம்

இலக்கினாதிபதியுடனே சம்பந்தப்பட்டவன் திசையில் சப்தமஸ்தானாதிபதியுடனே சம்பந்தப்பட்டவன் புத்திமாரகமாகும். சப்தம ஸ்தானாதிபதியுடனே சம்பந்தப்பட்டவன் திசையில் லக்கினாதிபதியுடனே சம்பந்தப்பட்டவன் புத்திமாரகமாகும்.

இவ்விதமாய்ஜாதகர்க்குப் பலனாராய்ந்து
இனிதுடனேசொல்வதென்றால் நவக்கிரகங்கள்
ஒவ்வியேதுவாதச லக்கினத்திருந்து
ஓதுபலன் தருவதையே கவனித்தோர்ந்து
எவ்விதமாயவரவர்கட் கிசைந்தயோகம்
ஏற்றபடிதருவாரென் றெண்ணிப்பார்த்து
அவ்விதமேயுரைத்தாலும் ஆயுள்பாகம்
அறிந்துணர்ந்துபுகல்வீர் ஜோதிடவல்லோரே. 120

உரை:—உலகத்தில் பிறந்த ஜாதகர்கட்குப் பலன் சொல்வதென்றால் நவக்கிரக தேவர்கள் பனிரெண்டு ராசியிலிருக்கும் ஸ்தானபலனை ஆராய்ந்துணர்ந்து, அதன்படியே பலன் சொல்லும்போது ஆயுள் கணிதத்தையும் விபரமாய் கணித்து எந்த திசா நாதனுடைய எந்த புத்தியில் மாரக திசையுண்டாகுமோ அதை கவனித்துப் பார்த்து விபரமாய்ச் சொல்லவேண்டும். அவ்விதமாய் கணித்தாராய்ந்து சொல்லும்போது, ஜனனகாலத்தில் சந்திரனின்ற ராசியே ஜன்ம இராசியாகையால் அந்த இராசிகளுக்கு அஷ்டம ஸ்தானத்திலும் பனிரெண்டாமிடத்திலுமிருக்கின்ற கிரகநிலையையும் பார்த்து பலன் சொல்லவேண்டும்.

பன்னிரெண்டுராசியிலும் நவக்கிரகங்கள்
பலனுமுடனிருக்கின்ற நிலையாராய்ந்து
நன்மையுடன்கணித சாஸ்திரங்கணித்து
நலமுடனேபலனுரைக்கும் போதுவாய்த்த
இன்பதுன்பங்களையுணர்ந்து உலகத்தோர்க்கு
இசைந்தபடி சுகதுக்கம்வாய்க்கும்போது
அன்பாகநவக்கிரக சாந்திசெய்து
அன்புடன்ஜீவித்திருக்கப் புகலுவீரே. 121

உரை:—மேஷம், ரிஷபம், மிதுனம், கடகம், சிங்கம், கன்னி, துலாம், விருச்சிகம், தனுசு, மகரம், கும்பம், மீனம் என்னும் பனிரெண்டு இராசிகளில் எந்தவீட்டில் நவக்கிரகங்களாகிய சூரியன், சந்திரன், செவ்வாய், புதன், குரு, சுக்கிரன், சனி,

RangaRakes tamilnavarasam.com

இராகு, கேது என்னும் கிரகங்கள் எந்தெந்த இராசியில் என்னென்ன விதமா யிருக்கின்றார்களோ அதற்கிசைந்த விதமாய்ப் பலன் கொடுப்பதோடு அந்தந்த கிரகங்கள்நின்ற ஆட்சி, நட்பு, உச்சம், பகை, நீசமென்னும் கிரகபலத்திற் கிசைந்த பலனையும் விவரித் துரைக்கும்போது ஆயுள் தானமும் மாரகாதிபர்கள் நிலையையும் அனுசரித்து பலன் சொல்ல வேண்டும் என்றாலும், கிரகங்களின் ஆதிபத்தியத்தை யனுசரித்து திசாபுத்தி பலனையும் கவனித்து எந்தெந்த திசாபுத்தி நாதர்களில் எந்தெந்த அந்தரநாதர்கள் வருகின்றார்களோ அவர்கள் நிலையையும் பலனையும் ஆராய்ந்து பலன் சொல்லவேண்டும். அப்போது நவக்கிரக சாந்திசெய்து ஜீவிக்கவேண்டும்.

ஜம்புமகாரிஷி வாக்கியம்

முற்றிற்று

RangaRakes tamilnavarasam.com

காலக்கிரம நிர்ணயம் என்னும்

# ஜோதிட கணிதாமிர்தம்

## சந்த்ரவிநாயகர் துதி

எண்சீரடி விருத்தம்

ஆதிஞானமூர்த்தி கணேசாவெந்தன்
    ஆதாரமாவிருந்தென் வாக்கி லமர்ந்திப்போது
ஜோதிடகணிதாமிர்த மெழுதுமெந்தன்
    சொல்லிலிருந்துலகில் ஸ்ரீமனிதர்முன்னே
ஓதுமெந்தன் வாக்கியம்மெய் யென்றெல்லோரும்
    உண்மையாய்நம்புவதற் கிசைந்தாற்போல
நீதியாயுன்பதத்தை மனதிலெண்ணி
    நின்னருளாலெழுதுகிறேன் துணைசெய்வீரே.

## சரஸ்வதி துதி

மலரயன்ராணி சரஸ்வதியேயுந்தன்
    மலரடியையான்துதித்து நூலாராய்ந்து
கலக்கமிலாஜோதிட கணிதாமிர்தம்
    கணக்குடனேவாழ் நாளின்சுவடுக்கத்தை
நலமுடனேயெழுதவெந்தன் மனதமர்ந்து
    ஞாபகசக்திதந்து வாக்யங்குன்றாமல்
இலக்கியமாயெழுதவர மெனக்குத்தந்து
    இனிதுடனே துணையிருப்பாய் கருணைவாழ்வே.

## நவக்கிரகங்கள் ஸ்தோத்திரம்

பருதிமதிசேய்புதனே வியாழசுக்ரா
    பார்புகழும்சனிராகு கேதுவுங்கள்
திருவருளால்ஜோதிடகணி தாமிர்தத்தை
    திறமையுடனேயெழுத ஞாபகார்த்தம்
அருள்புரிவீரென்றுமது பாதந்தன்னை
    அனுதினமும்பூசித்து துதிக்குமெந்தன்
குருவாகவந்தமர்ந்து ஜோதிடசாஸ்திரத்தை
    குற்றமிலாதெழுதுதற்குத் துணைசெய்வீரே.

RangaRakes tamilnavarasam.com

## இராஜேஸ்வரி ஸ்தோத்திரம்

அம்பிகைராஜேஸ்வரி பார்வதியேகௌரி
அவனியோர்முதலான முனிவர்சித்தர்
உம்பரெல்லாந்துதிக்குமுந்தன் கிருபையாலே
ஓதும்ஜோதிடகணிதாமிர்த மெழுதுதற்கு
நம்பினே னருள்புரிவா யெந்தனுக்கு
நாராயணிவாலை வராகிதுர்க்கா
செம்பொன்பாதாரவிந்தம் பணிந்தேனெந்தன்
செந்தமிழுக்கனுதினமுந் துணைசெய்வாயே

## நூற் பெருமை

அன்புடனேமானிடர்கள் முன் ஜன்மத்தில்
அறிந்தறியாமற்செய்த பாபபுண்ய
ஸம்பத்திற்கியைந்தவித மாய் ஜனித்து
கஷ்டசுகமனுபவிக்கும் விபரந்தன்னை
நன்மையாய்கணித்துவருஷ மாததிதியோகங்கள்
நக்ஷத்ரவாரகரண மிவைபலனைத்தும்
இன்பமுடனேயுரைப்பேன் ஜோதிடவல்லோரே
இனிதுடனேகேட்டுமன மகிழுவீரே.

## ஜோதிட நூல் வரலாறு

ஆதிநாரணனுந்தி தனிற்பிறந்த
அயனுலகைவேதங்க ளால்படைத்து
பூதலத்தில்பலஜீவ ராசியோடும்
புல்பூண்டுமலைவிருக்ஷங் களையுண்டாக்கி
நீதியாய்மனிதர்களை சிருஷ்டித்தன்பாய்
நிலைத்திலவர்களைக்காப் பாற்றுந்தன்மை
ஓதகிதேன்பலநூலா ராய்ந்தோன்முன்னே
ஒழுங்காகக்கவனித்து வாசிப்பீரே. [

உரை:—ஆதியில் மஹாவிஷ்ணுவின் உந்திக்கமலத்தில் பிறந்த பிரம்மதேவன் வேதங்களால் உலகத்தைப் படைத்து, அதில் பல ஜீவராசிகளையும், புல், பூண்டு, மலை, விருக்ஷங்களையும் உண்டாக்கி மனிதர்களையும் சிருஷ்டித்து அவர்களுக்கு அறிவையும் புத்தியும் விளங்கும்படி செய்து, பக்தி அதிகமாக்கும் பகவானை துதிக்கும் பக்திமார்க்கத்தையும் போதித்து, இவ்வாறு தத்தம் தீவினையை அனுசரித்து, மனைவி மைத்தர் பந்துமித்திருடன் வாழ்ந்து, விரதானுஷ்டானம் புரிந்து பகவத்பக்தியால் [illegible],

RangaRakes tamilnavarasam.com

தர்மம் புரிந்து சுகஜீவியா யிருப்பதற் கிசைந்த நல்லறிவை புகட்டி ஆதரிக்கலாயினை என்பது கருத்தாகும். கல்வியிற் றேர்ச்சி யடைந்து பல சாஸ்திர முணர்ந்த பெரியோர்கள் இதனை கவன மாய் வாசித்து விபரந் தெரிந்து கொள்வீர்.

இவ்விதமாய் மனிதர்களுற்பத்தியாகி
இல்லறநீதியைவிடுத்து மாய்கையாலே
செவ்விழியார் சுகபோகத் திற்கிச்சித்து
செம்பொன்னும் பொருள்பூமிசேகரிக்க
வெவ்வியபொய்சூது மோசஞ்செய்து
ஒழுங்கீனமாய்நடந்த கர்மத்தால் ஜன்மம்
எவ்வெவ்விதமாய்வருமோ அதற்கேற்றுப்போல்
எடுத்துமுன் றுகர்மவினையை விலக்குவாரே. 2

உரை:—இவ்விதமாய் மனிதர்கள் பூமியில் பிறந்து வளர்ந்து மணம்புரிந்து மனைவி மைந்தர்களுடன் வாழ்ந்திருக்கும்போது இல்லற தர்மநீதியை விடுத்து, ஆசாபாச மாய்க்கைக்குட்பட்டு மனைவி மைந்தர் சுகபோகத்திற்சிக்கி பொன், பொருள், நில வளங்களை சேகரிப்பதற்கிசைந்து பொய், சூது, மோசம், வஞ்சக முதலான கொடுமை யெல்லாம்செய்த ஆயுள் முடிந்தபிறகு, அந்த ஜன்மத்தில் செய்த கர்மவினைக்காக எவ்வெவ்விதமாய் ஜன்ம மெடுத்து முன் ஜன்மத்திற் செய்த கர்மவினையை விலக்கு கின்றார்களோ அந்த விபரத்தை சொல்லுகிறேன் கவனிப்பீர்கள் அறிவுடையோர்களே.

அவரவர்கள்செய்த புண்யபாபத்தாலே
அடுத்தஜென்மத்தில்சுகதுக்க மனுபவிக்க
நவக்கிரகமொன்பதுபேர் அவ்வப்போது
நலமுடனேஅதிகாரஞ் செய்யும்நேர்மை
தவறுதென்றேமதிப்பீர் கலைவல்லோரே
தாரணியினிலேயுனும் பாபபுண்ணியத்தை
கவனித்தொழுங்காய்நடந்தால் மறுஜென்மத்தில்
கடவுளருளால்மேன்மை யடைகுவீரே. 3

உரை:—மனித வகுப்பினர் தமது மனதிற்கிசைந்தவிதமாய் செய்த புண்ணியத்தினாலும் பாபத்தினாலும் மறுஜன்மத்திற்கு சுக துக்கத்தை யனுபவிக்கச்செய்வதற்காக நவக்கிரகங்களாகிய சூரியன், சந்திரன், செவ்வாய், புதன், குரு, சுக்கிரன், சனி, ராகு, கேது என்னும் ஒன்பதுபேரும், தமது அதிகாரத்திற் கிசைந்தவிதமாய் மனிதரின் பாபத்திற்கிசைந்த துக்கமும், புண் ணியத்திற்கிசைந்த சுகமும் கொடுத்துஆதரிப்பார்கள். பாபபுண் ணியம் விலகி ஆயுள் முடிவானால் மறுஜன்மத்திலு மிவ்விதமே

அமையும். ஆகையால் இனிமேலாயினும் விரதானுஷ்டானம் புரிந்து தானதர்ம பரோபகாரம் புரிந்து பகவத் பக்தியானந்தமா யிருந்தால் மறுஜன்மத்தில் பகவானருள்பெற்று மேன்மை யடைவீர்கள்.

அன்பாகமனிதர்செய்த பாபபுண்ய
    அளவுபோல்சுகதுக்க மனுபவிக்கும்
தன்மையைக்கண்டுணர பிறந்தநாளின்
    ஜாதகத்தைக்கணித்தெழுத விபரந்தோன்றும்
இன்னவருஷமாதம் கிழமைதேதி
    இசைந்த திதி நக்ஷத்ரகரணயோகம்
நன்மையாய்க்கண்டுணர விபரமாக
    நவிலுகிறேன் கவனிப்பீருலகுள்ளோரே. 4

உரை:—மனிதவகுப்பினர் தமது மனதிற் கிசைந்த விதமாய்ச் செய்த பாபபுண்யத் திற்கு தகுந்தவிதமாய் சுகதுக்க மனுபவிக்கும் தன்மையைக் கவனிப்பதற்காகவே அவர்கள் பிறந்த நாளின் ஜாதகத்தை கணித்தெழுதிப் பார்த்தால் விபரந் தோன்றும். இதற்காகவே அவர்கள் பிறந்தது இன்னின்ன வருஷம், மாதம், தேதி, கிழமை, திதி, நக்ஷத்ரம், கரணம், யோகமென்பதை கவனித்துணர்வதற்காகவே இந்த ஜோதிட சாஸ்திரத்திற்கு ஆதாரமாக அடியிற் குறிப்பித்திருக்கின்றோம் கவனித்துக்கொள்வீர்கள்.

## சதுர்யுகங்களின் விபரம்

| | |
|---|---|
| 1. கிரேதாயுகம் | 3. துவாபரயுகம் |
| 2. திரேதாயுகம் | 4. கலியுகம் |

ஆக மொத்த யுகங்கள் 4.

கிரேதாயுகத்திற்கு 17-லக்ஷத்து 28-ஆயிர வருஷம்
திரேதாயுகத்திற்கு 12-லக்ஷத்து 96-ஆயிர வருஷம்
துவாபரயுகத்திற்கு 8-லக்ஷத்து 64-ஆயிர வருஷம்
கலியுகத்திற்கு 4-லக்ஷத்து 32-ஆயிர வருஷம்

RangaRakes tamilnavarasam.com

## 60-வருஷங்களின் பெயர்

| | | |
|---|---|---|
| 1-பிரபவ | 21-சர்வஜித்து | 41-பிலவங்க |
| 2-விபவ | 22-சர்வதாரி | 42-கீலக |
| 3-சுக்கில | 23-விரோதி | 43-சௌமிய |
| 4-பிரமோதூத | 24-விக்ருதி | 44-சாதாரண |
| 5-பிரசோற்பத்தி | 25-கர | 45-விரோதிகிருது |
| 6-ஆங்கீரச | 26-நந்தன | 46-பரிதாபி |
| 7-ஸ்ரீமுக | 27-விஜய | 47-பிரமாதீச |
| 8-பவ | 28-ஜய | 48-ஆனந்த |
| 9-யுவ | 29-மன்மத | 49-ராக்ஷச |
| 10-தாது | 30-துன்முகி | 50-நள |
| 11-ஈஸ்வர | 31-ஏவிளம்பி | 51-பிங்கள |
| 12-வெகுதான்ய | 32-விளம்பி | 52-காளயுக்தி |
| 13-பிரமாதி | 33-விகாரி | 53-சித்தார்த்தி |
| 14-விக்கிரம | 34-சார்வரி | 54-ரௌத்திரி |
| 15-விஷு | 35-பிலவ | 55-துன்மதி |
| 16-சித்திரபானு | 36-சுபகிருது | 56-துந்துபி |
| 17-சுபானு | 37-சோபகிருது | 57-ருத்ரோத்காரி |
| 18-தாரண | 38-குரோதி | 58-இரக்தாக்ஷி |
| 19-பார்த்திப | 39-விசுவாவசு | 59-குரோதன |
| 20-விய | 40-பராபவ | 60-அக்ஷய |

ஆக மொத்தம் வருஷம்-60.

*எண்சீரடி விருத்தம்*

அன்பாகவேயுலகந்தனில் ஜனிப்போர்
    ஆயுள்நிர்ணயங்கணித்து வருஷமெண்ணி
இன்பாகஜாதகத்தை பார்க்கும்போது
    இன்னின்னார்பிறந்த வருஷந்தெரிந்து
நன்னயமாய்அந்தந்த சமயந்தன்னில்
    நடக்கின்றவயதறிந்துக் சொன்வதற்கு
தன்மையாயவரவர்கள் பிறந்தஆண்டு
    தனிலிருந்துவயதெண்ணிப் புகலுவீரே. 6

உரை:—உலகிலுள்ள மனிதர்கள் பிரபவாதி முதல் அக்ஷய வருஷத்திற்குள் எந்த வருஷத்தில் பிறக்கின்றார்களோ அந்த வருஷத்திலிருந்து தற்காலத்தில் நடக்கும் வருஷம் வரையிலும் எண்ணிக்கொண்டு வருவதுதான் அவரவர்க்குரிய வயதெனவே சொல்லப்படும்.

RangaRakes tamilnavarasam.com

விருத்தம்

அன்புடன்மனிதருக்கு அமைந்தமுப்பதுநாளானால்
மன்னியமாதமென்று மாநிலத்தோருரைப்பார்
பன்னியபிறந்தமாதம் பார்த்தெண்ணிவரும்போது
தன்மையாய்நடக்கும்மாதம் நாடியேபுகலுவீரே. 6

உரை:—மனித வருப்பார் பிறந்த நாளிலிருந்து முப்பதுநாள் சேர்ந்தால் ஒரு மாதமாகும். ஆனால், தினந்தோறும் நாழிகையின் அளவில் மாதத்தின் நாட்களில் சிலசமயம் ஏறக்குறைய இருந்தாலும் மாதத்திற்கு நாள் முப்பது என்பதுதான் வழக்கமாய் விளங்கும். இவ்விதமான மாதங்களில் ஜாதகர் எந்த மாதத்தில் பிறக்கின்றார்களோ அதனையே முதலாகக்கொண்டு எண்ணிக்கைவிட்டு பனிரெண்டு மாதமானால் ஒருவருஷமென்று சொல்லவேண்டும்.

## மாதங்களின் பெயர்

| | | |
|---|---|---|
| 1-சித்திரை | 5-ஆவணி | 9-மார்கழி |
| 2-வைகாசி | 6-புரட்டாசி | 10-தை |
| 3-ஆனி | 7-ஐப்பசி | 11-மாசி |
| 4-ஆடி | 8-கார்த்திகை | 12-பங்குனி |

ஆக மொத்தம் மாதம்-12.

## சங்கற்ப மாதங்களின் விபரம்

| | | |
|---|---|---|
| 1-சைத்திரம் | 5-சிராவணம் | 9-மார்க்கசிரம் |
| 2-வைசாகம் | 6-பாத்ரபதம் | 10-புஷ்யம் |
| 3-ஜேஷ்டம் | 7-ஆஸ்விஜம் | 11-மாகம் |
| 4-ஆஷாடம் | 8-கார்த்திகம் | 12-பால்குணம் |

ஆக மொத்தம் மாதம்-12.

## இங்கிலீஷ் மாதங்களின் விபரம்

| | | |
|---|---|---|
| 1-ஜனவரி | 5-மே | 9-செப்டம்பர் |
| 2-பிப்ரவரி | 6-ஜூன் | 10-அக்டோபர் |
| 3-மார்ச் | 7-ஜூலை | 11-நவம்பர் |
| 4-ஏப்ரல் | 8-ஆகஸ்டு | 12-டிசம்பர் |

ஆக மொத்தம் மாதம்—12.

## மகம்மதியர் மாதங்களின் விபரம்

| | | |
|---|---|---|
| 1-மொகரம் | 5-ஜமாதிலவ்வல் | 9-ரம்ஜான் |
| 2-ஸபர் | 6-ஜமாதிஸானி | 10-ஷவ்வால் |
| 3-ரபியுலவ்வல் | 7-ரஜப் | 11-ஜில்காத் |
| 4-ரபிஉஸானி | 8-ஷாபான் | 12-ஜில்ஹேஜ் |

ஆக மொத்தம் மாதம்—12.

RangaRakes tamilnavarasam.com

## வாரங்களின் விபரம்

*எண்சீரடி விருத்தம்*

கதிர்பானுமதி இந்துசேய்பவ்மவாரம்
　　கருதுலாவ்சௌமியவாரம் குருவியாழன்
மதிக்கும்வெள்ளிக்கிழமையே பிருகுவாரம்
　　மந்தவாரமென்றால் சனிக்கிழமையாகும்
விதித்திட்டஸ்திரவாரமும் சனீஸ்வரர்க்கே
　　விளங்குமெனவேபுகன்றார் கலைவல்லோர்கள்
அதிகநோக்கத்தோடே பார்த்துரைக்கும்
　　அறிவுள்ளஜோதிடரே கவனிப்பீரே. 7

உரை:—ஞாயிற்றுக்கிழமையை பானுவாரமென்றும், திங்கள் கிழமையை இந்துவாரமென்றும், செவ்வாய்க்கிழமையை பவ்ம வாரமென்றும், புதன்கிழமையை சௌமியவாரமென்றும், வியாழக்கிழமையை குருவாரமென்றும், வெள்ளிக்கிழமையை பிருகு வாரமென்றும், சனிக்கிழமையை மந்தவாரமென்றும் ஸ்திரவார மென்றும் ஜோதிட சாஸ்திர நூலாராய்ச்சியில் சிறந்த வித்வான்கள் சொல்வார்கள். இதற்கு உதாரணம் அடியிற்காண்க.

## சப்த வாரங்களின் விபரம்

| | |
|---|---|
| ஞாயிற்றுக்கிழமை | பானுவாரம் |
| திங்கட்கிழமை | இந்துவாரம் |
| செவ்வாய்க்கிழமை | பௌமியவாரம் |
| புதன்கிழமை | சௌமியவாரம் |
| வியாழக்கிழமை | [?]ருவாரம் |
| வெள்ளிக்கிழமை | பிருகுவாரம் |
| சனிக்கிழமை | மந்தவாரம்-ஸ்திரவாரம் |

ஆக மொத்தம் வாரங்கள்-7.

## திதிகளின் விபரம்

| | | |
|---|---|---|
| 1-பிரதமை | 6-சஷ்டி | 11-ஏகாதசி |
| 2-துதியை | 7-சப்தமி | 12-துவாதசி |
| 3-திரிதியை | 8-அஷ்டமி | 13-திரயோதசி |
| 4-சதுர்த்தி | 9-நவமி | 14-சதுர்த்தசி |
| 5-பஞ்சமி | 10-தசமி | 15-அமாவாசை-பௌர்ணமி |

ஆக மொத்தம் திதிகள்-15.

RangaRakes tamilnavarasam.com

### எண்சீரடி விருத்தம்

இவ்விதமாய்த்திதிகளெல்லாம் வருதும்போது
இத்திதியில்சந்திரனும் நடக்குங்காலம்
ஒவ்வியேதேய்பிறைச் சந்திரனேயானல்
ஒதுபதினைந்தில் அமாவாசையாகும்
எவ்விதமாயமதிகளும் கலைகளெல்லாம்
எம்போதும்பூரணமாய் பிரகாசித்தால்
அவ்விதமேசந்த்ரப்ரகாசமாகும்
அத்தினமேபௌர்ணமி யென்றேதுவாரே. 8

உரை:—மேற்குறிப்பித்த திதி நாட்களில் சந்திரன் நடக்கும் போது ஒவ்வொருநாளும் தனது கலை குறைந்துகொண்டே போய் கடைசி தினத்தில் சந்திரனைக் காண்பதற்கில்லாமல் மறைந்த நாளில் வருவதுதான் பதினைந்தாவது திதியாகிய அமாவாசை யென்று சொல்லப்படும். ஆனால் அந்த அமாவாசை தினத்திலிருந்து சந்திரன் ஒவ்வொரு திதியிலும் நடக்கும்போது, தனது கலை வளர்ந்துகொண்டே பூரணமாய்வரும் பதினைந்தாவது தினம் பூர்ணச்சந்திரனாய் பிரகாசிப்பதால் அதனையே பௌர்ணமி யென்றுரைப்பார்கள்.

### இதற்கு உதாரணம்

| | |
|---|---|
| தேய்பிறைச்சந்திரன் | அமாவாசை திதி |
| வளர்பிறைச்சந்திரன் | பௌர்ணமி திதி |

### கரணங்களின் விபரம்

முனிவான பவம்பாலவம் கௌலவம்தைதுலைகரசையோடு
மூதறிஞருரைக்குமிந்த கரணங்களோடும்
வணிசை பத்திரை சகுனிசதுஷ்பாதமென்னும்
வாய்ந்தநாகவகரமாம் கிம்ஸ்துக்னமென்னும்
இனிதானகரணங்கள் பதினொன்றுக்கும்
இசைந்தபடிநகர்வன ஊர்வனஜந்துக்கள்
தனியாகபறப்பனநடப்பனவென் றுரைப்பதெல்லாம்
தரணியோர்கவனிக்கச் சாற்றுவேனே. 9

உரை:—கோபத்தையுடைய சிங்கத்தைப்போன்ற பவம், பாலவம், கௌலவம், தைதுலை, கரசை, வணிசை, பத்திரை, சகுனி, சதுஷ்பாதம், நாகவம், கிம்ஸ்துக்னமென்னும் இந்த பதினொறு கரணங்களும் நகர்வன, ஊர்வன, பறப்பன, நடப்பன வென்னும் ஜீவராசிகளைப் போன்றிருக்கும். இதன் விபரத்தை அடியிற் காண்க.

RangaRakes tamilnavarasam.com

## கரணங்களின் ரூபம்

| | |
|---|---|
| 1. பவம் - சிங்கம் | 7. பத்திரை - கோழி |
| 2. பாலவம் - புலி | 8. சகுனி - கூகை |
| 3. கௌலவம் - பன்றி | 9. சதுஷ்பாதம் – நாய் |
| 4. தைதுலை - கழுதை | 10. நாகவம் - பாம்பு |
| 5. கரசை - யானை | 11. கிமிஸ்துக்கினம் - புழு |
| 6. வணிசை – எருது | ஆக கரணங்கள் 11. |

இந்த பதினொரு கரணங்களும் மேற்குறிப்பித்த ரூபமாகவே விளங்கும். இவைகளும் தினசரியாகவே நடக்கும்.

## நக்ஷத்திர விபரம்

இனிதுடனே மாநிலத்தில் பகவானாலே
இன்பமாகவேபிறந்து வாழ்ந்திருக்கும்
மனிதர்களின்வாழ்நாளிற் கிசைந்தவாறே
மதியென்னும்சந்திரன் சஞ்சரிக்கும்காலம்
கனிவாகநக்ஷத்ர மிருபத்தேழும்
காணவுடனேயமைந்த விபரமெல்லாம்
தனித்தனியேயோதுகின்றேன் கவனித்தோர்ந்து
தாரணியின்ஜாதகர்க்குப் புகலுவீரே. 10

உரை:—பகவானால் பூலோகத்தில் பிறந்து ஜீவித்திருக்கும் மனிதர்களின் வாழ்நாட்களில் சந்திரன் நடக்கும் நக்ஷத்திரங்களையே இருபத்தேழெனக் குறிப்பித்திருக்கும் விபரத்தை அடியிற் கவனிப்பதற்கிசைந்த விதமாய் குறிப்பித்திருக்கின்றோம். இதில் சமஸ்கிருத பாஷைக்கிசைந்த தமிழ்பாஷையில் குறிப்பித்திருப்பதையும் கவனித்துக் கொள்வீர்கள்.

## நக்ஷத்திரங்களின் பெயர்

| வடமொழி | தென்மொழி |
|---|---|
| 1-அஸ்வனி | 1-அசுவனி |
| 2-பரணி | 2-பரணி |
| 3-கிருத்திகா | 3-கிருத்திகை |
| 4-ரோஹிணி | 4-ரோகணி |
| 5-மிருகசிரா | 5-மிருகசீரிடம் |
| 6-ஆருத்ரா | 6-திருவாதிரை |
| 7-புனர்வஸு | 7-புனர்பூசம் |
| 8-புஷ்யா | 8-பூசம் |
| 9-ஆஸ்லேஷா | 9-ஆயில்யம் |

RangaRakes tamilnavarasam.com

| | |
|---|---|
| 10-மகா | 10-மகம் |
| 11-பூர்வபற்குனி | 11-பூரம் |
| 12-உத்தரபற்குனி | 12-உத்திரம் |
| 13-ஹஸ்தா | 13-அஸ்தம் |
| 14-சித்ரா | 14-சித்திரை |
| 15-ஸ்வாதி | 15-சுவாதி |
| 16-விசாகா | 16-விசாகம் |
| 17-அநூராதா | 17-அனுஷம் |
| 18-ஜேஷ்டா | 18-கேட்டை |
| 19-மூலா | 19-மூலம் |
| 20-பூர்வாஷாடா | 20-பூராடம் |
| 21-உத்திராஷாடா | 21-உத்திராடம் |
| 22-சிரவணு | 22-திருவோணம் |
| 23-சிரவிஷ்டா | 23-அவிட்டம் |
| 24-சதபிஷா | 24-சதயம் |
| 25-பூர்வாபாத்ரா | 25-பூரட்டாதி |
| 26-உத்ராபாத்ரா | 26-உத்திரட்டாதி |
| 27-ரேவதி | 27-ரேவதி |

தினந்தோறும் வருகின்ற இந்த நட்சத்திரங்களில் சந்திரன் சஞ்சரிப்பதையே இராசியென் றுரைக்கப்படும்.

## யோகங்களின் விபரம்

உலகமதில்தினந்தோறும் பஞ்சாங்கத்தில்
    உரைத்தபடிநடக்கின்ற யோகமெல்லாம்
நலமுடனேஇருபத்தே ழாகுமென்று
    நவின்றிடும்வாக்கியம்போல ஜாதகர்க்கு
பலன்தருவதையுணர்ந்து ஜாதகத்தோர்
    பணமுடனே கவனித்தெந்தநாளும்
நிலையாகவாழ்ந்திருக்கும் விபரந்தன்னை
    நீணிலத்தோர் கவனிக்கும்படிசொல்வேனே. 11

உரை:—பூலோகத்திற் பிறந்த மனிதர்கட்கு ஆதாரமாக அமைத்துக் குறிப்பித்த வருஷம், மாதம், கிழமை, திதி, நக்ஷத்திரமென்பதுடனே தினந்தோறும் ஒவ்வொரு நாளைக் கொவ்வொரு யோகமாக இருபத்தேழு நாளைக்குவரும் இருபத்தேழு யோகத்தின் விபரத்தை இதற்கடியில் குறிப்பித்திருப்பதைக் கவனிப்பீர்கள் ஜோதிட கணித வல்லோரே.

RangaRakes tamilnavarasam.com

## யோகங்களின் பெயர்

| | | |
|---|---|---|
| 1–விஷ்கம்பம் | 10–கண்டம் | 19–பரிகம் |
| 2–பிரீதி | 11–விருத்தி | 20–சிவம் |
| 3–ஆயுஷ்மான் | 12–துருவம் | 21–சித்தம் |
| 4–சவுபாக்கியம் | 13–வியாகாதம் | 22–சாத்தியம் |
| 5–சோபனம் | 14–அரிஷணம் | 23–சுபம் |
| 6–அதிகண்டம் | 15–வச்சிரம் | 24–சுப்பிரம் |
| 7–சுகர்மம் | 16–சித்தி | 25–பிராமியம் |
| 8–திருதி | 17–வியதீபாதம் | 26–மகேந்திரம் |
| 9–சூலம் | 18–வரியான் | 27–வைதிருதி |

இந்த இருபத்தேழு யோகமும் ஒவ்வொரு நாளும் ஒவ்வொன்றாய் திதி நக்ஷத்திரங்கள் வருவதுபோல் வருவது வழக்கமானபடியால் ஜாதகர் ஜனனமான யோகபலனையும் அனுசரித்துப் பார்க்கவேண்டும். பெண்கள் புஷ்பவதியான தினங்களிலும் இவ்விதமே மாதம் கிழமை திதி நக்ஷத்திரங்களைப் பார்க்கும்போது மேற்குறிப்பித்த யோகபலன்களையும் பார்த்து களத்திரஸ்தானம், சுகஸ்தானம், ஆயுள் ஸ்தானம் முதலானவைகளையும் ஆராய்ந்து பலன் சொல்லவேண்டும்.

## துவாதச இலக்கின திசைகள்

மீனமுடன் மேஷமும் ரிஷபராசி
மிதுனராசியும்கிழக் கென்றேஓது
ஆனதொருகடகம்சிங்கம் கன்யாராசி
அமைந்ததெற்கென்றேதான் கவனித்தோது
வானதுலாம்விருச்சிகம் மேற்கென்றோது
வழுத்துவாய்தனுசுமகரம் கும்பராசி
தானுமேவடக்காகு மெனவாராய்ந்து
தாரணியிற்குறிப்பித்த விபரங்கேட்பீர் 12

உரை:—மீனராசி, மேஷராசி, ரிஷபராசி, மிதுனராசியும் கிழக்கு புறமாகவும், கடகராசியும் சிங்கராசியும் கன்யாராசியும் தென்புறமாகவும், துலாம் விருச்சிகராசியும் மேற்புறமாகவும், தனுசு ராசியும் மகரம், கும்பராசியும் வடக்குபுறமாகவும் விளங்கும். இந்த ஸ்தான விபரத்தை அடியிற் குறிப்பித்திருப்பதைக் கவனித்துக் கொள்வீர்கள்.

RangaRakes tamilnavarasam.com

கிழக்கு

| | | | |
|---|---|---|---|
| மீனம் உபயராசி 4¼ | மேஷம் சரராசி 4¼ | ரிஷபம் ஸ்திரராசி 4¾ | மிதுனம் உபயராசி 5¼ |
| கும்பம் ஸ்திர ராசி 4¾ | இவ்விதமாக ஒவ்வோர் நாளைக்கு நடக்கின்ற 60-நாழிகையில் பனிரெண்டு ராசி நடந்துகொண்டு வரும். | | கடகம் சரராசி 5½ |
| மகரம் சரராசி 5¼ | | | சிம்மம் ஸ்திரராசி 5¼ |
| தனுசு உபயராசி 5½ | விருச்சிகம் ஸ்திரராசி 5¼ | துலாம் சரராசி 5 | கன்னி உபயராசி 5 |

வடக்கு (இடப்புறம்) — தெற்கு (வலப்புறம்)

மேற்கு

## இராசிகளின் நிலையறியும் விபரம்

*எண்சீரடி விருத்தம்*

ஆனதொருமேஷம்கடகம் துலாம்ராசியோடு
அமைத்தமகரம்சர ராசியாகும்
மீனம்கன்னிதனுசு ராசியோடு
மிதுனமும்உபயராசியென்றே சொல்லு
ஆனரிஷபம்சிங்கம் விருச்சிகந்தனுடன்
அமைந்தகும்பம்ஸ்திரராசியாகுமென்று
வானசாஸ்திரமுணர்ந்த கணிதவல்லோர்
வழுத்தியதைகவனித்துப் புகலுவேனே. 19

உரை—மேஷம், கடகம், துலாம், மகரம் இந்த நான்கு இராசிகளும் உபயராசியாகும். மீனம், மிதுனம், கன்னி, தனுசு இந்த நான்கு ராசிகளும் உபயராசியாகும். ரிஷபம், சிங்கம், விருச்சிகம், கும்பம் என்னும் இந்த நான்கு ராசிகளும் ஸ்திர ராசியாகும். இதன் விபரத்தை அடியிற் குறிப்பித்திருக்கின்றோம் கவனிப்பீர்.

RangaRakes tamilnavarasam.com

## சரம் ஸ்திரம் உபய ராசிகளின் விபரம்

| | | |
|---|---|---|
| மேஷம் | ரிஷபம் | மிதுனம் |
| கடகம் | சிங்கம் | கன்னி |
| துலாம் | விருச்சிகம் | தனுசு |
| மகரம் | கும்பம் | மீனம் |
| இந்நான்கு-சரராசி | இந்நான்கு-ஸ்திரராசி | இந்நான்குஉபயராசி |

இவ்விதமே ஒவ்வொரு இராசியிலும் கிரகங்கள் நிற்கும் போது அந்தந்த இராசி பலனைத் தருவார்கள்.

## இராசிகளின் ரூபம்

ஆடுபோல்மேஷம்ரிஷப மெருதுபோலாம்
ஆடவனும்ஸ்திரீபோல மிதுனமாகும்
நாடுகடகம்நண்டுசிங்கம் கேசரியைப்போலும்
நவிலும்கன்னிபெண்ரூபம் துலாம்திராசு
ஓடுந்தேள்விருச்சிகமாம் மகரமும்முதலைபோலும்
ஓதும்கும்பம்சோற்றுப்பானைப் போன்றரூபம்
வாடும்மீனம்மச்ச ரூபம்போலும்
வையகத்தோர்களுக்கு காணுந்தானே. 14

உரை:—மேஷராசி ஆடுபோலிருக்கும். ரிஷபராசி எருதுபோலிருக்கும். மிதுனராசி ஆண்பெண்ணுகிய சதிபதியை போலிருக்கும். கடகராசி நண்டுபோலிருக்கும். சிங்கராசியானது சிங்கத்தைப்போலவே இருக்கும். கன்னியாராசி பெண்போலவே இருக்கும். துலாராசி திராசுபோலிருக்கும். விருச்சிகராசி தேள் போலவே தோற்றும். தனுசுராசி வில்போலவே காணப்படும். மகரராசி முதலைபோலிருக்கும். கும்பராசி சோற்றுப்பானைபோலிருக்கும். மீனராசி மச்சத்தைப்போலவே காணப்படும் இதன் விபரத்தை அடியிற்காண்க.

## இராசிகளின் ரூபம்

| | |
|---|---|
| மேஷராசி | ஆடுபோலிருக்கும் |
| ரிஷபராசி | எருதுபோ லிருக்கும் |
| மிதுனராசி | சதிபதிபோ லிருக்கும் |
| கடகராசி | நண்டுபோ லிருக்கும் |
| சிங்கராசி | சிங்கத்தைப்போ லிருக்கும் |
| கன்னியாராசி | பெண்போலவே யிருக்கும் |
| துலாம்ராசி | திராசுபோலவே யிருக்கும் |
| விருச்சிகராசி | தேள்போலவே இருக்கும் |

RangaRakes tamilnavarasam.com

| | |
|---|---|
| தனுசுராசி | வில்போலவே இருக்கும் |
| மகரராசி | முதலையைப்போலவே இருக்கும் |
| கும்பராசி | சோற்றுப்பானைபோ லிருக்கும் |
| மீனராசி | மச்சத்தைப்போ லிருக்கும் |

இவ்விதமாய் இந்த இராசிகள் வடிவமைந்து வானத்தில் தோற்றுவதை வானசாஸ்திரிகள் கவனித்து, உலகத்திலிருப்பவர்கட்கு சொல்வதும் உண்மையாக விளங்கும். இந்த இராசிகளில் சூரியன் வரும்போது ஒவ்வொரு மாதமாகவும் குறிப்பிக்கப்படும் விபரம் :—

| | |
|---|---|
| மேஷம்—சித்திரை | துலாம்—ஐப்பசி |
| ரிஷபம்—வைகாசி | விருச்சிகம்—கார்த்திகை |
| மிதுனம்—ஆனி | தனுசு—மார்கழி |
| கடகம்—ஆடி | மகரம்—தை |
| சிங்கம்—ஆவணி | கும்பம்—மாசி |
| கன்னி—புரட்டாசி | மீனம்—பங்குனி |

இவ்விதமே பனிரெண்டு இராசிகட்கும் பனிரெண்டு மாதம் அமைந்திருக்கும்.

## அவயவ ராசிகள்

தலைமேஷம்முகம்ரிஷபம் மிதுனங்கழுத்து
    தோள்கடகம்மார்புசிங்கம் பக்கம்கன்னி
துலாம்முதுகுவிருச்சிகம்பீஜ மாதுமின்னும்
    துடைதனுசுமகரம்முழங் காலென்றேது
நிலையானகும்பங் காலென்றேது
    நீணிலத்தில்மீனமே பாதமாகும்
உலகினிலேஇவ்விதமாய் ராசிகட்கு
    உற்றசரீரம்பலவாய் விளங்கும்பாரே. 15

உரை:—மேஷராசி தலை, ரிஷபராசி முகம், மிதுனராசி கழுத்து, கடகராசி தோள், சிங்கராசி மார்பு, கன்னியாராசி பக்கம், துலாம்ராசி முதுகு, விருச்சிகராசி பீஜம், தனுசுராசி தொடை, மகரராசி முழங்கால், கும்பராசி கணுக்கால், மீனராசி பாதமாகும். இவ்விதமே பனிரெண்டு ராசிகளிலும் அவயவபாகத் தோற்றுவித்ததைக் கவனித்துப் பார்த்தால் பனிரெண்டு ராசிகளும் சரீரத்தில் ஒவ்வொரு பாகமாக விளங்கும். இதற்கு திருஷ்டாந்தம் அடியிற் காண்க,



RangaRakes tamilnavarasam.com

| இராசிகள் | சரீர நிலைகள் | ஜாதி |
|---|---|---|
| மேஷம் | சிரசு | வேளாளன் |
| ரிஷபம் | முகம் | இடையன் |
| மிதுனம் | கழுத்து | சக்கிலியன் |
| கடகம் | தோள் | கன்னான் |
| சிங்கம் | மார்பு | பிராமணன் |
| கன்னி | பக்கம் | நாவிதன் |
| துலாம் | முதுகு | செட்டி |
| விருச்சிகம் | பீஜம் | வேடன் |
| தனுசு | தொடை | தட்டான் |
| மகரம் | முழங்கால் | வண்ணான் |
| கும்பம் | கணுக்கால் | குயவன் |
| மீனம் | பாதம் | பறையன் |

இவ்விதமாகவே ஒவ்வொரு ராசிகளும் நமது சரீர அங்கங்களில் பொருந்தி யிருக்கும்.

### எண்சீரடி விருத்தம்

இந்தவிதமாகவே பன்னிரண்டு
இராசிகளில் வரிசையாய் சுற்றிக்கொண்டு
சந்திரன் வரும்போது பலனைக்கண்டு
சாற்றுகின்றபலாபலனை யறிவதென்றால்
அந்தமுடன் நேரிலுற்றால் லாபமாகும்
அடுத்தபின்புறத்துற்றால் நஷ்டமாகும்
இந்தவிதமாகவே பலனுராய்ந்து
இன்பதுன்பமெய்துவதை கவனிப்பீரே. 16

உரை:—பின்புறம் குறிப்பித்திருக்கும் பனிரெண்டு ராசிகளிலும் சந்திரன் சுற்றிக்கொண்டு வரும்போது நேரிலிருந்தால் வித்யாலாபம், உத்தியோகமேன்மை, வியாபாரலாபம், புத்ரமித்திர சேர்க்கை, தனதான்ய சம்பத்து முதலான பலவித நன்மையும் உண்டாகும். ஆனால், சந்திரன் பின்புறமாய் வரும்போது பலவிதமாகிய கஷ்டநஷ்டங்களும் பகையும் நேரிடும். ஆனால் மற்ற கிரகங்கள் நல்ல ஸ்தானத்திலிருந்தால் மத்திம பலனுமிருக்கும். சுபக்கிரகங்களில் பார்வை பெற்றிருந்தாலும், திசா புத்தி நாதர்கள் வலுத்திருந்தாலும் நல்ல பலனையே கொடுத்து மனமகிழ்ந்திருக்கும்படியாய்ச் செய்யும்.

RangaRakes tamilnavarasam.com

## நக்ஷத்திரங்களில் சந்திரன் நிற்கும் நிலையும் துவாதச ராசிகளின் விபரமும்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அசுவனி | 1 | மகம் | 1 | மூலம் | 1 |
| பரணி | 1 | பூரம் | 1 | பூராடம் | 1 |
| கிருத்திகை | ¼ | உத்திரம் | ¼ | உத்திராடம் | ¼ |
| மேஷராசி | | சிம்மராசி | | தனுசுராசி | |
| கிழக்குதிசை | | கிழக்குதிசை | | கிழக்குதிசை | |
| கிருத்திகை | ¾ | உத்திரம் | ¾ | உத்திராடம் | ¾ |
| ரோகணி | 1 | அஸ்தம் | 1 | திருவோணம் | 1 |
| மிருகசீரிடம் | ½ | சித்திரை | ½ | அவிட்டம் | ½ |
| ரிஷபராசி | | கன்னியாராசி | | மகரராசி | |
| தெற்குதிசை | | தெற்குதிசை | | தெற்குதிசை | |
| மிருகசீரிடம் | ½ | சித்திரை | ½ | அவிட்டம் | ½ |
| திருவாதிரை | 1 | சுவாதி | 1 | சதையம் | 1 |
| புனர்பூசம் | ¾ | விசாகம் | ¾ | பூரட்டாதி | ¾ |
| மிதுனராசி | | துலாராசி | | கும்பராசி | |
| மேற்குதிசை | | மேற்குதிசை | | மேற்குதிசை | |
| புனர்பூசம் | ¼ | விசாகம் | ¼ | பூரட்டாதி | ¼ |
| பூசம் | 1 | அனுஷம் | 1 | உத்திரட்டாதி | 1 |
| ஆயில்யம் | 1 | கேட்டை | 1 | ரேவதி | 1 |
| கடகராசி | | விருச்சிகராசி | | மீனராசி | |
| வடக்குதிசை | | வடக்குதிசை | | வடக்குதிசை | |

இவ்விதமாய் இருபத்தேழு நக்ஷத்திரங்களிலும் சந்திரன் பிரவேசிக்கும்போது ௨¼-நாள் வரையிலும் ஒவ்வொரு ராசியிலும் சஞ்சரித்து வரும்போது மேற்குறிப்பித்த திசைகளையும் பார்த்து சந்திரன் இன்னின்ன திசையில் பிரவேசமாகின்ற வேளை யென்று குறிப்பிக்கப்படும்.

## நவக்கிரகங்களும் இராசிகளும் நோக்கும் திசைகள்

சூரியன்மேஷம்கிழக்கில் பார்வையாகும்
சுக்கிரன்வில்சிம்மம்தென்கிழக்கில் பார்வையாகும்
வீரியசேய்ரிஷபம்தெற்கில் பார்வையாகும்
விளங்கியராகுகன்னிமகரம் தென்மேற்காகும்
வாரிமிதுனம்மேற்கு திசைநோக்காகும்
கருதுசந்திரன்துலாகும்பம் வடமேற்காகும்

பாரில்புதன்கடகமும் வடக்கில்நோக்கும்
பார்வைகுரு விருச்சிகமீனத்திற்கே. 17

உரை:—சூரியன் மேஷம் கிழக்குத் திசையில் பார்வையாகும். சுக்கிரன் தனுசு கும்பம் தென்கிழக்கை நோக்கும். செவ்வாய் ரிஷபம் தெற்கில் பார்வையுண்டாகும். இராகுபகவான் கன்னி, மகரம் தென்மேற்கு திசையில் நோக்கும், சனிபகவான் மிதுனம் மேற்கு திசையில் பார்வையுண்டாகும். சந்திரன் துலாம் ராசி கும்ப ராசி வடமேற்கில் நோக்கமாகும். புதபகவான் கடகராசி வடக்கு பார்வை செலுத்தும். வியாழபகவான் விருச்சிகம் மீனராசி வடகிழக்கில் நோக்கமாயிருக்கும். இதன் விபரம் அடியிற் காண்க.

குறிப்பு:—கேது பகவான் எப்போதும் ராகுக்கு நேராக பார்வை செலுத்துவார்.

## விசேஷ விபரம்

மேஷராசி சூரியன் கிழக்கு பார்வையாகும்.
தனுசுராசி சிம்மராசி சுக்கிரன் தென்கிழக்கு பார்வையாகும்
ரிஷபராசி செவ்வாய் தெற்கு பார்வையாகும்.
கன்னி மகரராசி இராகு தென்மேற்கு பார்வையாகும்.
மிதுனராசி சனிபகவான் மேற்குதிசை பார்வையாகும்.
துலாம் கும்பராசி சந்திரன் வடமேற்கு பார்வையாகும்.
கடகராசி புதபகவான். வடக்குதிசை பார்வையாகும்.
விருச்சிகம் மீனராசி வியாழன் வடகிழக்கு பார்வையாகும்.

## கிரகங்களால் நடக்கும் பலன் விபரம்

அன்புடனே நவக்கிர கங்களானோர்
அவரவர்க்கிசைந்தவா றேயமைந்த
பன்னிரண்டுராசிகளில்வந்தால் ஜாதகர்க்கு
பலன்விபரமெவ்விதமா யமையுமென்றால்
முன்னுலும்வடபுறமும் மிகவும்நன்று
முடியாதகாரியமெல்லாம் முடியும்பாரே
பின்புறமும்இடதுபுறமும் கொடியதீது
பிசகாகும்கஷ்டநஷ்ட மாகுந்தானே. 18

உரை:—நவக்கிரகங்கள் ஒன்பதுபேரும் பனிரெண்டு ராசியிலும் அவரவர்கள் கால அளவின்படி சஞ்சரிக்கும்போது முன்புறமும் வடபுறமும் மிகவும்நன்மையாகும் ஜாதகர்கள் எவ்விதமான காரியத்தையும் நிறைவேற்றி சுகத்வத யனுபவிப்பதற்காகும்.

RangaRakes tamilnavarasam.com

ஆனால், பின்புறமும், இடபுறமும் கொடிய துன்பமும், துயரமும், கஷ்டநஷ்டங்களும் நேரிட்டு கவலை யடையுச்செய்யும். ஆனால் சுபக்கிரகங்கள் பார்வையானல் மத்திப பலனுமிருக்கும்

## மாதசூனிய விபரம்

*சித்திரைஏகாதசி அஷ்டமிரோகணியுங்கும்பம்*
*சீரானவைகாசிதுவாதசி சித்திரைசுவாதிஉத்திராடம்*
*அத்ததியேஆனிதிரயோதசி புனர்பூசம்ரிஷபமாகும் [மீனம்*
*ஆடியில்சஷ்டிஅவிட்டம் மிதுனமாகும்*
*புத்தியாய்கேள்ஆவணிஅமாவாசை பூரணிபூராடம்மேஷம்*
*புரட்டாசிசப்தமிசதயம் பூரட்டாதிரேவதிதனுசுகன்னி*
*இத்ததியேகார்த்திகைபஞ்சமிகிர்த்திகை பூசம்மகம்துலாம்*
*இசைத்தஐப்பசிநவமி பூரட்டாதிவிருச்சிகமேயாகும்.19*

*உரை:—சித்திரை மாதத்தில் அஷ்டமி ஏகாதசி ரோகணி* கும்பம் சூனியமாகும். வைகாசி மாதத்தில் துவாதசி, சித்திரை, சுவாதி, உத்திராடம், மீனமும், ஆனிமாதத்தில் திரயோதசி புனர்பூசம் ரிஷபமும், ஆடிமாதத்தில் சஷ்டி அவிட்டம் மிதுன ராசியும், ஆவணிமாதத்தில் அமாவாசை பௌர்ணமி பூராடம் மேஷமும், புரட்டாசி மாதத்தில் சப்தமி, சதையம், பூரட்டாதி, ரேவதி, தனுசு, கன்னியுமாகும். ஐப்பசி மாதத்தில் நவமி, பூரட்டாதி, விருச்சிகராசியுமாகும். கார்த்திகை மாதத்தில் பஞ்சமி, கிருத்திகை, பூசம், மகம், துலாம் இவ்விதமமைத்தால் சூனிய மாதமாகும்.

*அன்பானமார்கழிதுதிகை நவமிவிசாகம்*
*அனுஷம்உத்திரட்டாதி தனுசுமாகாது*
*தன்னயமாந்தைமாதம் பிரதமைஆயில்யம்*
*நவிலுந்திருவாதிரை அஸ்தம்கடகமாகா*
*பன்னரியமாசிசதுர்த்தசி தசமிமூலம்*
*பகருந்திருவோண மகரம்ஆகாது*
*தன்மையாய்பங்குனி சவுத்திபரணிகேட்டை*
*தக்கபடிசிங்க லக்னமும்ஆகாதே. 20*

உரை:—மார்கழிமாதம் துதியை, நவமி, விசாகம், அனுஷம், உத்திரட்டாதி, தனுசும் ஆகாது. தைமாதத்தில் பிரதமை, ஆயில்யம், திருவாதிரை, அஸ்தம் கடகமுமாகாது. மாசிமாதத்தில் சதுர்த்தசி, தசமி, மூலம், திருவோணம், மகரமுமாகாது. பங்குனி மாதத்தில் சவுத்தி, பரணி, கேட்டை, சிங்கமுமாகாது.

RangaRakes tamilnavarasam.com

## கிழமைகளின் விசேஷம்

பருதியிலுத்தியோகம் மதிவிதைவிதைக்க
பகருகுஜன்போர்செய்ய புதன்வித்யாரம்பம்
குருவிவாகஞ்செய்ய புகர்மயிர்கழிக்க
குற்றமிலாசனியில் தவஞ்செய்வதற்கும்
கருதியநல்லுத்தமமென்றே அவனியோர்கள்
கண்டுணர்ந்தபலன் நடக்கு மெனமுன்னோர்கள்
கருதியினிதுரைத்தவிதங் கவனித்தோர்ந்து
சொல்லுவீர் ஜாதகர்க்கு பலனைத்தானே. 21

உரை:—ஞாயிற்றுக்கிழமையில் உத்தியோகஞ் செய்வதற்கும் திங்கட்கிழமையில் விதைவிதைக்கவும் உத்தமமாகும். செவ்வாய்க்கிழமையில் போர்செய்ய நன்மையாகும். புதன்கிழமையில் வித்தியாரம்பஞ்செய்ய உத்தமமாகும். வியாழக்கிழமையில் விவாகஞ்செய்ய உத்தமமாகும். வெள்ளிக்கிழமையில் மயிர் கழிக்க உத்தமமாகும். சனிக்கிழமையில் தவஞ்செய்ய உத்தமமாகும்.

## இதற்கு விவரம்

| | |
|---|---|
| ஞாயிற்றுக்கிழமையில் | உத்தியோகஞ் செய்யவும் |
| திங்கட்கிழமையில் | விதைவிதைக்கவும் |
| செவ்வாய்க்கிழமையில் | போர் செய்வதற்கும் |
| புதன்கிழமையில் | வித்யாரம்பம் செய்வதற்கும் |
| வியாழக்கிழமையில் | விவாகஞ் செய்வதற்கும் |
| வெள்ளிக்கிழமையில் | மயிர் கழிப்பதற்கும் |
| சனிக்கிழமையில் | தவஞ்செய்வதற்கும் உத்தமாகும். |

இவ்விதமேஒவ்வொரு கிழமைகட்கும்
இசைந்தபடியே சுபகாரியங்கள்செய்ய
எவ்விதமும்நலமாகும் மாநிலத்தோர்
எடுத்தகாரியமெல்லாம் ஜெயமேயாகும்
ஒவ்வியேஎத்தெந்த காரியஞ்செய்தாலும்
ஒற்றுமையாய் சகலகாரியமும்நன்குவ்
அவ்வவ்விதமான வாரத்தன்னில்
ஆகுமென்றுமுன்னோர்சொல் வாக்கியமாமே. 22

உரை:—இந்த ஏழுவாரத்திலும் குறிப்பித்து சொன்னவை செய்தால் முடியுமென்று கவனிக்கவேண்டும்.

RangaRakes tamilnavarasam.com

## வாரசூலை விபரம்

திங்களொடுசனியிரண்டுங் கிழக்கேயாகா
தெற்குமுகம்போகவென்றால் வியாழமாகா
அங்ஙனமேவடக்குமுகம் பிரயாணந்தான்
அப்பனேசெவ்வாயும் புதனுமாகா
தங்கிநின்றவிடமிருந்து மேற்கேபோகத்
தம்பியடாவெள்ளிரவி யாகாதாகா
இங்கிவைகள் சிவனுர்கை சூலமாகும்
ஏற்கநாள்போகவென்றால் குஷங்களே. 23

உரை:—மனித வர்க்கத்தார்கள் தமது வாசஸ்தானத்திலிருந்து மற்றோரிடத்திற்குப் பிரயாணஞ் செய்வதென்றால், திங்கள் சனிக்கிழமையதினத்தில் கிழக்கு திசையிலும், வியாழக்கிழமையில் தெற்கு திசையிலும், செவ்வாய், புதன்கிழமைகளில் வடக்கு திசையிலும், வெள்ளிக்கிழமையிலும் ஞாயிற்றுக்கிழமையிலும் மேற்கு திசையிலும் வாரசூலையா யிருப்பதனால் போகலாகாது. அப்படி அவசியமாய்ப் போகவேண்டுமானல் அதற்கு விபரம் அடியிற் குறிப்பித்திருக்கிறோம் கவனிப்பீர்கள்.

### வெண்பா

வடக்குதயம்சென்றதுகால் வாழ்கிழக்கேயுச்சி
அடுக்குதமன் திசைக்கோ அந்தி—தொடகீழ்
நடுராவிற்சென்றதுகால் நாள்பார்க்கவேண்டாங்காண்
வடிவில்லாதென்றே மகிழ். 24

உரை:—வடக்கு திசையில் உதயத்திலும், கிழக்கு திசையில் உச்சிவேளையிலும், தெற்கு திசையில் அந்திப்பொழுதிலும் மேற்கு திசையில் நடுராத்திரியிலும் போனால் குற்றமில்லை. அதற்கிசைந்த விபரத்தை அடியிற் குறிப்பித்திருக்கின்றோம் கவனிப்பீர்கள்.

## வாரசூலையின் பரிகாரம்

| வாரம் | வாரசூலை | நாழிகை | சூலபரிகாரம் |
|---|---|---|---|
| ஞாயிறு | மேற்கு, வடமேற்கு | 12 | வெல்லம் |
| திங்கள் | கிழக்கு, தென்மேற்கு | 8 | தயிர் |
| செவ்வா | வடக்கு, வடமேற்கு | 12 | பால் |
| புதன் | வடக்கு, வடகிழக்கு | 16 | பால் |
| வியாழன் | தெற்கு, தென்கிழக்கு | 20 | தைலம் |
| வெள்ளி | மேற்கு, தென்மேற்கு | 12 | வெல்லம் |
| சனி | கிழக்கு, தென்கிழக்கு | 9 | தயிர் |

RangaRakes tamilnavarasam.com

குறிப்பு:—மேற்குறிப்பிக்க நாழிகை வரையிலும் வாரசூலை தோஷமாம். அவசியமாய்ப் பிரயாணஞ் செய்யவேண்டுமானால் மேற்கண்ட நாழிகைக்குமேல் பிரயாணஞ் செய்யலாம்.

### விருந்துண்பதற்கு உரியநாள்

*வெண்பா*

வெள்ளிசனிதிங்கள் விருந்துண்ணபுதனுமாம்
கன்னவியாழங் கசப்பிக்கும்—கொள்ளகதிர்
தீராப்பகைகாட்டும் செவ்வாய்தனக்குமே
வாராப்பகையும் வரும். 25

உரை:—பந்து ஜனங்களிடத்திலும், உற்றார், உறவின் முறையார், சுற்றத்தாரிடத்திலும் புதிதாய் விருந்துண்பதற்குப் போனால் வெள்ளிக்கிழமை, சனிக்கிழமை, திங்கட்கிழமையாகிய சுபதினங்களில் விருந்து போஜனம் புசித்தால் சதாகாலமும் உடலும் உயிரும்போல நேசவிஸ்வாசமாயிருப்பதற்காகும். வியாழக்கிழமையதினத்தில் விருந்து புசித்தால் ஒருவர்க்கொருவர் மனவெறுப்பாகி விரோதமாயிருப்பார்கள். ஞாயிற்றுக்கிழமையில் விருந்து புசித்தால் சதாகாலமும் தீராத பகையாயிருக்கும். செவ்வாய்க்கிழமையில் விருந்து புசித்தால் பலவிதமான பகையும், எப்போதுமில்லாத வீண் வம்பு வழக்குகளெல்லாம் நேரிட்டு கொடுமையும் துன்பமுமான குரூரபகை நேரிடும்.

### ஆகாதநாள் ஆகும்நாளின் விசேஷம்

*விருத்தம்*

கற்பினுன்மூன்றிலெண்ணே கடிமணஞ்சிரார்த்தம்போக்கு
வற்புறுபிணிமருந்து மயிர்வினைமருவலாகா
விற்புகலுமுதல்விற்றல் விருந்துண்ணல்வழங்கல்செய்தல்
பொற்பணிமகுடமாடை புனைதலும்புகலுமாதே. 26

உரை:—ஜாதகன் பிறந்த ஜன்மவாரம், ஜன்மதிதி, ஜன்மநக்ஷத்திரங்களில் எண்ணெ ஸ்நானஞ்செய்தலும், கலியாணஞ் செய்வதும், சிரார்த்தம் கொடுக்கவும் ஆகாது. வியாதி வந்த போது மருந்து புசிக்கவுமாகாது. க்ஷவரம் செய்துக்கொள்ளவுமாகாது. மனையாளுடன் சேரவுமாகாது ஆனால் வியாபாரஞ் செய்வதற்கும், பூமியில் உழுது விதை விதைப்பதற்கும் விருந்து புசிப்பதற்கும் உத்தமமாகும். தானதர்மஞ் செய்வதற்கும், ஆடை ஆபரணம் அணிவதற்கும் மிகவும் உத்தமமாகும்.

RangaRakes tamilnavarasam.com

விருத்தம்

இத்தினம்சயனிவாதோர் இகத்தினில்துன்பமுற்று
எத்தகியும்கஷ்டத்தால் ஏங்கியேதுயரடைந்து
சத்தயில்லாமல்நாளும் சுகமின்றி கவலையாலே
சித்தமுங்கலங்கிநாட்டில் திகைத்தலைந்திடுவர்தானே. 27

உரை:—மனிதவருப்பார் ஆகாத தினத்தில் ஏதேனும் ஓர் காரியஞ்செய்தால், அதனால் பலவித துன்பமும் துயரமுமடைந்து கஷ்ட நஷ்டமடைவார்கள். ஆகையால், அவரவர்கள் பிறந்த ஜன்ம நக்ஷத்திரம், ஜன்மதிதி, ஜன்மவாரம் முதலானவைகளை ஞாபகமாய் மனதில் நினைத்துக் கொண்டு மறவாமலிருக்க வேண்டும்.

## கோடிவஸ்திர முடுத்தும் நாள்

காரியிலழுக்கதாகும் கதிரவர்பீடைகாட்டும்
மாரியில்நனையுந்திங்கள் வன்புதன்கந்தையாகும்
விரியமில்லைசெவ்வாய் வெள்ளியில்மடந்தைசேர்வான்
கூறியவியாழன்நன்றும் குலவிய ஆடைசாத்த. 28

உரை:—சனிக்கிழமையில் கோடிவஸ்திர முடுத்தினால் அழுக்காகும், ஞாயிற்றுக்கிழமையில் உடுத்தினால் துன்பம்நேரிடும். திங்கட்கிழமையில் அணிந்தால் சதாகாலமும் ஜலத்தில் நனைந்துக் கொண்டேயிருக்கும். புதன்கிழமையில புதியவஸ்திரமுடுத்தினால் சீக்கிரத்தில் கிழிந்து கந்தையாகும். செவ்வாய்க்கிழமையில் அணிந்தால் மனவிசாரமாகவே திகிலாயிருக்கும். வெள்ளிக்கிழமையில் புதிய வஸ்திரமணிந்தால் இலக்ஷ்மி கடாக்ஷமுண்டாகும். வியாழக்கிழமை தினத்தில் கோடி வஸ்திரமுடுத்தினால் சதாகாலமும் மனமகிழ்வா யிருப்பதற்காகும்படியான பலவித நன்மையுமுண்டாகும்.

## புதிய வீட்டில் குடித்தனம் போவதற்கு ஆகாத மாதங்களின் விபரம்

ஆடித்திங்களில்ராவணன் பட்டதும்
ஆலமேய்பெறும் பாரதமார்கழி
விடிட்டான்புரட்டாசி இரணியன்
மேவிசான்நஞ்சுண்டது மாசியில்
படிக்காமெனசிந்தது பங்குனி
பார்க்குளேகினன்மாபலி ஆனியில்
விடிட்டில்லங்குடிபுக வேண்டிஞேர்
ஒடிட்டே இரந்துன்ப குலகிலே. 29

உரை:—இராவண சம்மாரமானது ஆடி மாதம், பாரதம் போர் நடந்தது மார்கழிமாதம், இரணியசம்மாரமானது புரட்டாசி

மாதம், பரமசிவம் ஆலகாலவிஷம் புசித்தது மாசிமாதம், மன்மதனை சிவபெருமான் நெற்றிக்கண்ணால் எரித்தது பங்குனி மாதம், மகாபலிச் சக்கரவர்த்தி தனது இராஜாங்கத்தை இழந்து பாதாளத்தில் போனது ஆனிமாத மாகையால் இந்த ஆறுமாதங்களில் எந்த மாதத்திலாகிலும் இருக்கும் ஸ்தானத்தைவிடுத்து மற்றொரிடத்திலிருக்கும் வீட்டில் குடித்தனம் போவோர் துன்பமும் துயரமும், கஷ்டநஷ்டமும் கவலையுமனுபவித்து கலங்கித் துடித்து திருவோடேந்தி பிச்சை யெடுக்கும் யாசகராகிய வறுமையானரைப்போ லலைந்து திரிவார்கள்.

சுத்தரஞ்சேர் ரூபலாவண்யமாக
  சொர்ணபணிபூஷணா லங்காரம்விளங்கும்
பந்துவென்றும்சாந்தகுணம் தாயளம்நிறைந்த
  பணக்காரபிரபுவெனும் தனவந்தரென்றும்
எந்தவிதமானாலும் திருமணப்பொருத்தம்
  ஏற்றவிதமிருவருக்கும் சரியாயமைந்தால்
மைந்தர்பாக்கியத்துடனே பிரபுக்களாக
  மாநிலத்தில்வாழ்ந்திருப்பா ரறிகுவீரே. 30

உரை:—உலகில் பிறந்த ஆண்களுக்கும் பெண்களுக்கும் கலியாணஞ் செய்வதாயிருந்தால் அழகாயிருந்தாலும் தனவந்தராயிருந்தாலும் நற்குணம் நற்செய்கை யோடிருந்தாலும் சொந்த பந்துக்களா யிருந்தாலும் அவ் விருதிறத்தாருடைய இராசி பொருத்தம் சரியா யமைந்திராமற்போனால் கஷ்டமும் கவலையும் பொருந்தி துன்பமனுபவித்து பிரிந்துபோவார்கள். ஆனால் அவ் விருதிறத்தாரின் திருமணப் பொருத்தம் சரியாய்ப் பார்த்து ஒருவர்க்கொருவர் சம்பந்தமான பொருத்தமாயிருந்தால் தான் தன தான்யம் பசு புத்ர லாபத்துடன் பிரபுவாக பூர்ணவுளாக வாழ்ந்திருப்பார்கள். இதன் விபரம் அடியில் குறிப்பித்திருக்கின்றோம் கவனிப்பீர்கள்.

## மணப்பொருத்தம் பார்ப்பதற்கு நாமநக்ஷத்திர பொருத்தங்கள் கவனிப்பது

சதிபதிகள்ஒற்றுமையாய் வாழ்வதற்கு
  சார்ந்தலக்ஷணப்பொருத்தம் பார்த்தன்பாக
அதிநலமாகவே கவனித்தோர்ந்து
  ஆண்பெண்ணுக்கினிதுடனே மணஞ்செய்தாலே
நிதிமிகுந்துதனந்தான்ய புத்ரலாபம்
  நினைத்தபடியேபெற்று சுகமாய்வாழ்வார்
மதியுடனேகவனித்து ஜாதகர்க்கு
  மாக்ஷியுடன்புகல்விர்ஜோ திடவல்லோரே. 31

உரை—உலகத்தில் பிறந்த மனிதவகுப்பார் தமது குல விர்த்தியாவதற்கு தமது புத்திரர்களுக்கு மணஞ்செய்வதாயிருந்தால் உத்தம வம்ஸத்தினராகிய நற்குணமமைந்தா பெற்றோர்களீன்ற பெண்ணைத் தேடிப்பார்த்து பிள்ளைக்கும் பெண்ணுக்கும் நாம நக்ஷத்திரம், கணம், மிருகம், விருக்ஷம், பக்ஷி முதலாகிய பொருத்தங்களெல்லாம் சரியாய்ப் பார்த்து சுபலக்கினத்தில் மணஞ் செய்தால் அவர்கள் தனதான்ய சுபுத்ர லாபத்துடனே வாழ்ந்திருப்பார்கள். இதன் விபரம் அடியிற் காண்க.

## நாம நக்ஷத்திரங்கள்

| நக்ஷத்திரம் | நக்ஷத்திர நாம எழுத்து | கணம் | மிருகம் | விருக்ஷம் | பக்ஷி |
|---|---|---|---|---|---|
| அசுவனி | சு-சே-சோ-ல | தேவம் | ஆண் குதிரை | * எட்டி | இராஜா |
| பரணி | லி-லு-லே-லோ | மானுஷ | ஆண் யானை | * நெல்லி | காக்கை |
| கிருத்திகை | அ-இ-உ-ஏ | ராக்ஷஸ | பெண் ஆடு | அத்தி | மயில் |
| ரோகிணி | ஒ-வ-வி-வு | மானுஷ | ஆண் சர்ப்பம் | நாவல் | ஆந்தை |
| மிருகசீரிட | வே-வோ-கா-கி | தேவம் | பெண் சாரை | * கருங்கா | கோழி |
| திருவாதி | கு-க-ஙு-ச | மானுஷ | ஆண் நாய் | * செங்கா | அன்றில் |
| புனர்பூசம் | கெ-கோ-ஹ-ஹி | தேவம் | பெண் பூனை | * மூங்கில் | அன்னம் |
| பூசம் | ஹு-ஹே-ஹோ | தேவம் | ஆண் ஆடு | அரச | நீர்க்காக் |
| ஆயில்யம் | டி-டு-டெ-டோ | ராக்ஷஸ | ஆண் பூனை | புன்னை | சிச்சிலி |
| மகம் | ம-மி-மு-மே | ராக்ஷஸ | ஆண் எலி | ஆல் | ஆண்கழு |
| பூரம் | மோ-ட-டி-டு | மானுஷ | பெண் எலி | பலா | பெண்கழு |
| உத்திரம் | டே-டோ-ப-பி | மானுஷ | ஆண் பசு | அலரி | கிருவை |
| அஸ்தம் | பு-ஷ-ண-ட | தேவம் | பெண் எருமை | ஆத்தி | பருந்து |
| சித்திரை | பெ-போ-ர-ரி | ராக்ஷஸ | ஆண் புலி | * வில்வம் | மரங்கொத்தி |
| சுவாதி | ரு-ரே-ரோ-த | தேவம் | ஆண் எருமை | * மருது | தேனீ |
| விசாகம் | தி-து-தே-தோ | ராக்ஷஸ | பெண் புலி | * விளா | செவ்வா |
| அனுஷம் | ந-நி-நு-நே | தேவம் | பெண் மான் | * மகிழ் | வானம் |
| கேட்டை | நோ-ய-யி-யு | ராக்ஷஸ | ஆண் மான் | பராய் | சக்கரவா |
| மூலம் | யே-யோ-ப-பி | ராக்ஷஸ | பெண் நாய் | மரா | செம்போ |
| பூராடம் | பு-த-ப-ட | மானுஷ | ஆண் குரங்கு | வஞ்சி | பேரண் |
| உத்திராட | பே-போ-ஜ-ஜி | மானுஷ | மலட்டுப் பசு | பலா | வலியன் |
| திருவோ | ஜு-ஜே-ஜோ-க | தேவம் | பெண் குரங்கு | எருக்கு | நாரை |
| அவிட்டம் | க-கி-கு-கெ | ராக்ஷஸ | பெண் சிங்கம் | * வன்னி | பொன் |
| சதயம் | கோ-ஸ-ஸி-ஸு | ராக்ஷஸ | பெண் குதிரை | * கடம்பு | அண்டங் |
| பூரட்டாதி | ஸே-ஸோ-த-தி | மானுஷ | ஆண் சிங்கம் | தேமா | உள்ளான் |
| உத்திரட் | து-ஞ-ச-ய | மானுஷ | பெண் பசு | * வேம்பு | கோட்டான் |
| ரேவதி | தே-தோ-ச-சி | தேவம் | பெண் யானை | இலுப்பை | வல்லூறு |

* இக்குறிபுள்ளவை பாலில்லாத விருக்ஷங்கள்.

RangaRakes tamilnavarasam.com

## இராசிசக்கரம் போடும் விபரம்

### எண்சீரடி விருத்தம்

நலமுடனேமானிடர்கள் பிறக்கும்போது
நக்ஷத்ரமின்னதென கவனித்தோர்ந்து
நிலைபானபனிரெண்டு ராசிதன்னில்
நிற்கின்றசந்திரனை யறிந்துணர்ந்து
பலாபலனைஜாதகர்க்குச் சொல்லும்போது
பகருமந்தராசிகளில் கிரகங்கள்நின்ற
நிலையறிந்துபலனுரைக்கும் விபரந்தன்னை
நீணிலத்தில்ஜாதகர்க்குப் புகலுவீரே. 32

உரை—உலகத்தில் பிறந்த மனிதவகுப்பினர் பூமியில் பிறக்கும்போது பஞ்சாங்கத்தில் குறிப்பித்திருக்கும் நக்ஷத்திரங்களில் சந்திரன் நிற்கும் நிலையே இராசியாகும். இந்த இராசிகள் பனிரெண்டு இவைகளின் பெயர் மேஷம், ரிஷபம், மிதுனம், கடகம், சிங்கம், கன்னி, துலாம், விருச்சிகம், தனுசு, மகரம், கும்பம், மீனமென்பதுதான். இந்த ராசியில் அந்தந்த சமயத்தில் நடக்கும் கிரகங்களின் பலனை ஆராய்ந்துணர்ந்து சொல்வதற்கிசைந்த விபரத்தை அடியில் குறிப்பித்திருப்பதை கவனிப்பீர்கள்.

<table>
<tr><td>ரேவதி 1<br>உத்ரட்டாதி 1<br>பூரட்டாதி ¼<br>மீனராசி</td><td>அசுவனி 1<br>பரணி 1<br>கிருத்திகை ¼<br>மேஷராசி</td><td>கிருத்திகை ¾<br>ரோகணி 1<br>மிருகசீரிட ½<br>ரிஷபராசி</td><td>மிருகசீரிட ½<br>திருவாதிரை 1<br>புனர்பூசம் ¾<br>மிதுனராசி</td></tr>
<tr><td>பூரட்டாதி ¾<br>சதயம் 1<br>அவிட்டம் ½<br>கும்பராசி</td><td colspan="2" rowspan="2">இவ்விதமாக 27-நட்சத் திரங்களையும் 12-ராசிகளாகப் பிரித்து இராசிச் சக்கரம் போட வேண்டியது.</td><td>புனர்பூசம் ¼<br>பூசம் 1<br>ஆயில்யம் 1<br>கடகராசி</td></tr>
<tr><td>அவிட்டம் ½<br>திருவோணம் 1<br>உத்திராடம் ¾<br>மகரராசி</td><td>மகம் 1<br>பூரம் 1<br>உத்திரம் ¼<br>சிம்மராசி</td></tr>
<tr><td>உத்திராடம் ¼<br>பூராடம் 1<br>மூலம் 1<br>தனுசுராசி</td><td>விசாகம் ¼<br>அனுஷம் 1<br>கேட்டை 1<br>விருச்சிகராசி</td><td>சித்திரை ½<br>சுவாதி 1<br>விசாகம் ¾<br>துலாராசி</td><td>உத்திரம் ¾<br>அஸ்தம் 1<br>சித்திரை ½<br>கன்னியாராசி</td></tr>
</table>

RangaRakes tamilnavarasam.com

## நவக்கிரகங்களின் சுப அசுப பலன் விபரம்

ஐந்தாமிடத்ததிப ரானோருந்தான்
ஆறொன்பதா மிடத்ததிபரானோர்
எந்தகிரகங்களானாலும் நல்ல
இசைந்தபலன் தருவார்க ளென்றிட்டாலும்
அந்தமாய்மூன்றெட் டுடையோரானோர்
அசுபபலன் தருவார்கள் புத்திநாதர்
தந்திடுவார் நற்பலனைசுபர் சேர்க்கைபார்வை
தான்பெற்றால்நலமெனவே சாற்றுவீரே. 33

உரை:—ஜனன லக்கினத்திற்கு ஐந்தாமிடத்ததிபர்கள் எந்த கிரகமாயிருந்தாலும் அவர்கள் திசையில் நல்ல சுப பலனையே தருவார்கள். ஆனால் மூன்றாமிடத்ததிபராகவும், ஆறாமிடம், எட்டாமிடத்ததிபராகவிருந்தால் பலவிதமாகிய துன்ப பலனைத் தந்து கஷ்டநஷ்டமடையச் செய்வார்கள். புத்திநாதர்கள் சுபசேர்க்கை பார்வைபெற்றிருந்தால் அவர்களிருக்கும்வரையிலும் சுபபலனையே தந்து நன்மையடையச் செய்வார்கள்.

## கிரகங்களின் கேந்திரகோண விபரம்

பருதிமதிகுஜசனியும் ராகுகேது
பகரும்லக்னநாலேழும் பத்தாம் கேந்திரம்
இருந்தாலேசுபபலனும் வெகுலாபந்தான்
இசைந்தபடிதருவார்கள் கோணமாகா
குருபுதனும்மதிசுக்ரன் கோணத்துற்றால்
கொடுப்பார் நற்பலனையே ஜாதகர்க்கு
பொருள்மிகவேதந்திடுவார் கேந்திரமுற்றால்
பொல்லாததுன்பபலன் தருகுவாரே. 34

உரை:—சூரியன், சந்திரன், செவ்வாய், சனி, இராகு, கேது இவர்களனைவரும் லக்கினம் நாலு, ஏழு, பத்து இந்த ஸ்தானங்களில் கேந்திரம் பெற்றிருந்தால் சுப பலனாக வெகு லாபங்களை தந்து சுக பாக்கியத்தை யனுபவிக்கும்படியான தனதான்ய சம்பத்து வெகுவாய்த் தருவார்கள். இவர்கள் கோண திரிகோணத்திலிருந்தால் கஷ்டபலனைத் தருவார்கள். குரு, புதன், சந்திரன், சுக்கிரன் இவர்கள் கோணம் திரிகோணத்திலிருந்தால் நல்ல சுப பலனைத்தந்து வித்யாவிருத்தியுடன் உத்தியோக லாபமும், வியாபார லாபமும் தந்து சுகஜீவியாயிருக்கச் செய்வார்கள். ஆனால், இந்த சுபக்கிரகங்கள் நான்கு, ஏழு, பத்து ஸ்தானங்களிலிருந்தால் கேந்திர தோஷத்தால் நல்ல

RangaRakes tamilnavarasam.com

பலனைக் கொடுக்கமாட்டார்கள். மத்திப பலனையே தருவார்கள் ஆனால் நவக்கிரகங்களை சொன்னதுபோலும் ஒருவர்க்கொருவர் பிரபலமாவார்கள்.

## அதன் விபரம்

ஐந்தாமிடத்ததிபதிக்கு 9-மிடத்ததிபதி பிரபலன் இலக்கினாதிபதிக்கு 4-மிடத்ததிபதி பிரபலன். அவனுக்கு 7-மிடத்ததிபதி பிரபலன். அவனுக்கு 10-மிடத்ததிபதி பிரபலன். 8-மிடத்ததிபதிக்கு 9-மிடத்ததிபதி பிரபலன். அவனுக்கு 11-மிடத்ததிபதி பிரபலன். இவைகளை விவரமாய்க் கவனித்து பலன் சொன்னால் சரியாயமைந்திருக்கும்.

## தன விரயஸ்தானாதிபதிகளின் விபரம்

தனவிரயஸ் தானாதி பதிகளானோர்
தங்களுடன் சேர்ந்த கிரகங்கட்கேற்ற
இனமான பலாபலனை கொடுப்பார்பின்னும்
இலக்கினத்தினிருபுறமும் சுபர்சேர்ந்தாலே
தனதான்யசம்பத்து மிகவேதந்து
தாரணியில்வெகுமேன்மை யடையச்செய்வார்
னைமுடனே இருபுறமும் சனிசேய்பருதியுற்றால்
கஷ்டநஷ்டமடைந்திடவே செய்குவாரே. 35

உரை:—இலக்கினத்திற்கு தனவிரய ஸ்தானாதிபதிகள் தங்களுடன் சேர்ந்த கிரகங்கள் கொடுக்கும்படியான பலனைத் தருவார்கள். அன்றியும், இலக்கினத்திற்கு முன்னும் பின்னுமாகிய இரண்டு பக்கத்திலும் சுபக்கிரகங்களிருந்தால் நல்ல யோகபலனைத் தருவார்கள். சனி, சூரியன், செவ்வாய், ராகு, கேது இவர்கள் விரயஸ்தானத்திலிருந்தால் துன்ப பலனைத் தருவார்கள்.

## அஷ்டம ஸ்தானாதிபதியின் விபரம்

இலக்கினத்திற்கஷ்டமத்தோன் ஒன்பதுற்றால்
இனியில்லா துன்பபலன் வெகுவாய்தந்து
லைக்கமுடன் மனக்கவலை யடையச்செய்து
கஷ்டநஷ்டமடைந்திடவே செய்குவார்கள்
பலமாகஇலக்கினத்தோன் உதயத்துற்றால்
பராக்ரமமுடன் உத்யோகமும் வர்த்தகமும்செய்து
நலமுடனேபொருள்சேர்த்து தனவானாக
நாற்றிசையும்புகழ்ந்திடவே வாழ்குவாரே. 36

உரை:—இலக்கினத்திற்கு அஷ்டமத்தோன் ஒன்பதாமிடத்திலிருந்தால், தானிருந்த பாக்கியஸ்தானத்திற்கு

விரயஸ்தானாதிபதியான பாவத்தினால் பலவிதமாகிய துன்ப பலனையும் கஷ்டத்தையுங் கொடுத்து கலங்கும்படி செய்து பந்து மித்திரர்கட்கும் பகையாகி பலராலும் பழித்துப் பரிகாசிக்கும்படியான துயரமெல்லாம் அனுபவிக்கச் செய்வார். அந்த அஷ்டமாதிபதியே இலக்கினத்திலிருந்தால் மாறுபட்டு இன்ப பலனைத் தந்து வித்தியாலாபம், உத்தியோக மேன்மை, வியாபார விருத்தியாலும் தனலாபங் கிடைக்கும்படி செய்து பந்துமித்திரர், உற்றார், உறவின்முறையாரனைவரும் புகழ்ந்துரைக்கும்படியான கீர்த்திப் பிரகாசமாய் ஜீவித்துக்கொண்டிருப்பார்கள்.

## கிரகங்களின் கேந்திராதிபத்திய தோஷங்களின் விபரம்

குருசுக்கிரன்கேந்திராதி பதிகளானால்
குரூரமாய்க்கொல்வதிலே சிரேஷ்டமாகா
தருணமிவர் ஆயுள் விரயஸ்தானமாகும்
தகுந்தஇரண்டேழிடத்தில் நிற்பாராகில்
வருகுமப்பாபிணியுடனே மரணமென்று
வழுத்துவாய்ஜாதகர்க்குப் பலனாராய்ந்து
பொருள்தெரிந்துரைக்குமுன் திசையும்புக்தி
பொருந்தவேகணித்துரைப்பாய் விரிவாய்த்தானே. 37

உரை:—குருபகவானும், சுக்கிரபகவானும் கேந்திராதிபதிகளாயிருந்து இரண்டு, ஏழு ஆகிய இந்த மாரகஸ்தானங்களிலிருந்தால் அவர்கள் திசாபுத்தியில் வறுமை, பிணி, மாரகபலன் முதலான கொடிய பலனைத் தருவார்கள். ஆனால் மற்ற கிரகங்கள் நின்ற ஸ்தானபலனையும் திசாபுத்திநாதர் வலுவையும் பார்த்து பலன் சொல்லவேண்டும்.

## நவக்கிரகங்களின் குண விசேஷம்

புகர்குருவுக்குப்பின்னர் பிரபலன்மாலாகும்
புதன்பின்சந்திரன்பலவான் ஆயுள்தானம்
புகலுகின்ற ஆதிபத்தியத்தாலுண்டான
பெரியபாவம்ரவிமதிக்கு சேராதப்பா
சகஜமாய்மற்ற கிரகங்கள்தன்னை
சாருமென்பதாயிற்று கேந்திராதிபத்யம்
நிகழுமிந்நால்வரையும் சேராததாகும்
நீணிலத்திலிவர்விபரங் கவனிப்பீரே. 38

உரை:—குருபகவானுக்கும், சுக்கிரபகவானுக்கும் பிறகு அந்த கேந்திராதிபதி தோஷத்தில் புதன் பலவானாகும். புத

னுக்குப் பிறகு அவர் தந்தையாகிய சந்திரன் பலவானகும். ஆயுள் ஸ்தானாதிபத்தியத்தா லுண்டான பெரிதாகிய பாவம் சந்திர சூரியரைச் சேராது, மற்ற கிரகங்களைச்சாரும். கேந்திராதி பத்திய தோஷமுள்ள நால்வரையும் சேர்த்துச் சொல்லாதபடியால் குருதோஷத்தில் சுக்கிரதோஷமும், சுக்கிரதோஷத்தில் புததோஷமும், புததோஷத்தில் சந்திரதோஷமும் குறையுமென்பது என்றலும், ஆயுள் ஸ்தானாதிபதிகளைப்போல சூரிய சந்திரர்கட்கு தோஷமில்லை யென்றுரைப்பாய்.

## செவ்வாய் பகவான் குண விசேஷ விபரம்

அன்புடையகுஜபகவான் தனக்குவாய்ந்த
　　ஆதிபத்யத்தால்தசம கேந்திராதிபத்யம்
நன்மைதிரிகோணதி பத்தியத்தாலான
　　நலமிகுந்ததசமகேந்திராதிபதி சுகந்தராது
இன்னவிதமிதன்பலனை நன்காராய்ந்து
　　இசைந்தபடி பலனுரைப்பீர் ஜாதகர்க்கே
தன்மையுடனேபலநூ லாராய்ச்சிசெய்து
　　தாரணியில்வாழ்கின்ற ஜோதிடவல்லோரே. 39

உரை:—அங்காரகபகவான் ஆதிபத்தியத்தால் தசமகேந்திராதிபத்தியத்தாலுண்டான நன்மையான சுபம் திரிகோணாதி பத்தியத்தி லுண்டானதாய் மேன்மைபெறச் செய்யும். தசம கேந்திராதிபத்தியத்தினாலே சுகத்தைக் கொடுக்காது. ஆகையால், ஜோதிட வனிதவல்லோர்கள் பல நூலாராய்ச்சிசெய்து ஜாதகர்க்கு கிரகங்களின் நிலையறிந்து பலன் சொல்லவேண்டும்.

## இராகு கேதுக்களின் இலக்ஷண விபரம்

இனிதான ராகுகேதுக்களுக்கு
　　இருப்பிடமாம்சுயக்ஷேத்ர மில்லாதாலே
கனிவுடனேயெத்தானத் திருந்திட்டாலும்
　　கலக்கமிலாதவ்வீட்டின் பலன்கொடுப்பார்
மனம்போலெக்கிரகத்தோ டவர்சேர்ந்தாலும்
　　மாக்ஷிமையாயந்தக் கிரகங்கொடுக்கும்
வினையுள்ளசுப அசுப பலன்களதனை
　　விரும்பியேராகுகேது தருவார்தானே. 40

உரை:—இராகு கேதுக்களுக்கு பனிரெண்டு ராசியிலும் சொந்த ஸ்தானமில்லாதபடியால் அந்தந்த சமயத்தில் எந்த ஸ்தானத்திலிருக்கின்றரோ அந்த ஸ்தானபலனும், எந்தக்

RangaRakes tamilnavarasam.com

கிரகங்களுடன் சேர்ந்தாரோ அந்த கிரகங்கள் கொடுக்கும்படியான பலனும் தாமே விருப்பமாய் சுப அசுப பலனுக்கிசைந்த கஷ்ட சுகத்தை ஜாதகரை அனுபவிக்கச் செய்வார்கள்.

## நவக்கிரகங்களின் பொதுவான சுபயோக பலன்

கேந்திராதிபதிதிரி கோணாதிபதியானோர்கள்
 கெடுதிசெய்யும்மூன்றெட்டாறுக் குடையோரைச்சேராமல்
சாந்தமுடன் தங்கள் தங்களுக்கிசைந்த
 சம்பந்தமுற்றோருடன் வேறேரிடத்தமர்ந்து
ஏத்தியதோஷமில்லாமல் சேரப்பார்க்க
 ஏற்றபலன்தருவார்கள் சுபரேயானால்
வேந்தனைப்போலிருந்திடவே சுபயோகத்தை
 விருப்பமுடன் தருவார்கள் ஜாதகர்க்கே. 41

உரை:—ஜனன லக்கினத்திற்கு கேந்திராதிபதியானவர் கொடுமை செய்யும் ஸ்தானாதிபதிகளாகிய மூன்று, ஆறு, எட்டாமிடத்ததிபதிகளுடன் சேராமல் அவரவர்க்கிசைந்த ஸ்தானத்தில் அன்புடன் சம்பந்தமாயிருப்பவருடன் சேர்ந்து வேறேரிடத்திலிருந்தாலும், கேந்திர தோஷமில்லாத கிரகங்களின் சம்பந்தமானாலும் பார்வையுற்றாலும் சுப பலனையே கொடுப்பார்கள். ஆனால், குரு, சுக்கிரன், புதனுமிருந்து ஆட்சி உச்சஸ்தானத்திலிருந்தால் இராஜயோகபலனை அனுபவிக்கச் செய்வார்கள்.

## ஜாதகர்க்கமைந்த இராஜயோக பலன் விபரம்

தசமகேந்திராதிபதியுடன் திரிகோணாதிபதியுமாக
 தங்களுடன்சம்பந்த முற்றஅந்த
குஜன்சனியும்சூரியனும் சேர்ந்திட்டாலும்
 குற்றமில்லாமல் ராஜயோகந்தந்து
புஜபலமும்கீர்த்தியும் பெருகச்செய்து
 பொன்பொருளும்மிகத்தந்து பூலோகத்தில்
விஜயமுடன் கீர்த்திவானாயிருக்க
 விருப்பமுடன்சுபபலனைத் தருவாரே. 42

உரை:—தசம கேந்திராதிபதியுடனே திரிகோணாதிபதியும் சேர்ந்தாலும், சனி, சூரியன், செவ்வாய் பகவானுடனே சேர்ந்தாலும் குற்றமில்லாத இராஜயோகபலனை அனுபவிக்கும்படியான சாமர்த்தியமும் கீர்த்தியும் பொருந்தியிருக்கும்படியான நன்மையும், பொன் பொருள் பூஸ்திதியனைத்தும் பெருகும்படியான சமர்த்தும் வித்யாபிவிர்த்தி உத்தியோக மேன்மையும் வியாபார லாபமும் விமரிசையாய் நடக்கும்படியான சுபபலனைத் தருவார்கள்.

### தரும கருமாதிபதியின் விபரம்

ஒன்பதாமிடத் ததிபனுடனேயந்த
    ஒதும்பத்தாமிடத்ததிபன் சேர்ந்தாலும்
அன்பாகமற்றோ ரிடத் தற்றாலும்
    அவரவர்கட்கிசைந்த விதமாகத்தான்
தன்மையெனுஞ்சுப லனும் ராஜயோகம்
    நாடியேதருவார்க ளினிதாய்தானும்
இந்தபலன் தந்துதவி வியாபாரத்தால்
    இனியலாபந்தருவார் கவனிப்பீரே. 43

உரை:—ஒன்பதாமிடத்ததிபதியும் பத்தாமிடத்ததிபதியு மான தர்மகர்மாதிபதிகள் ஒருவர்க் கொருவருடன் சம்பந்தமானு லும் பார்வைபெற்றாலும் தமக்கு அன்னியமான ஸ்தானத்திலிருந் தாலும் சதாகாலமும் சுமங்கலியாய் வாழ்ந்திருக்கச் செய்வார். தனதான்ய சம்பத்துடன் யோகபலனை அனுபவிக்கும்படியான இராஜயோகத்தையும் அனுபவிக்கும்படியாய் செய்வார்கள்.

### திரிகோணாதிபதிகளின் இராஜயோக விபரம்

அன்புடனே நவக்கிரக மெவரானாலும்
    அவர்களுக்குத் திரிகோணாதிபத்யம்
தன்மையுடன்வந்தாலே அவர்களோடு
    சார்ந்திருந்தகிரகங்கள் தசமகேந்த்ரம்
இன்புடனேபெற்றினிதாய் அவரைச்சேர்ந்தால்
    இராஜயோகந்தந்து யெந்தநாளும்
தன்மையுடைபார்செய் வார்களென்று
    தனின்றிடுவாய்ஜாதகர்க்கு விளங்கத்தானே. 44

உரை :—நவக்கிரக தேவர்கள் யாராயிருந்தாலும் சரியே, திரிகோணாதிபத்யம் வந்தால் அவர்களுடனே சம்பந்தமான தசமகேந்திராதிபதிகளுக்கும் யோக சுபபலனைத் தந்து தன தான்ய பசு புத்ரலாபம், காணி பூமி யனைத்தும் பொருந்திய இராஜயோகத்தை யநுபவிக்கும்படியான தன்மையான சுகத் தைத் தருவார்கள்.

### திரிநாதர் கொடுக்கும் இராஜயோகம்

இனிதான நவக்கிரக மெவரானாலும்
    இசைந்ததநட்பாக்ஷியுச்சத் தனிலிருக்கும்
கனிவுடனே தமதுதிசை தனில்கொடுக்கும்
    காணியிலும்நற்பலனே அடுத்துவந்த

RangaRakes tamilnavarasam.com

தனியானதிசையிலுமே இராஜயோகம்
　　தருவார்களிப்படியே ஜாதகர்க்கு
இனிதுடனே நடக்குமென் றெந்தநாளும்
　　இயம்புவீர்ஜோதிடநூ லாராய்ந்தன்பாய். 45

உரை:—சூரியன், சந்திரன், செவ்வாய், புதன், குரு, சுக்ரன், சனி, இராகு, கேது வென்னும் ஒன்பது கிரகங்களில் எவர்களானாலும் சரியே துவாதச லக்கினத்தில் அவரவர்க் கிசைந்த ஆட்சி, நட்பு உச்சஸ்தானங்களிலிருந்து அவர்கள் திசையில் நல்ல பலனாகிய வித்யாபிவிருத்தி, உத்யோக மேன்மை, வியாபார லாபமும் தந்து இராஜயோகத்தை அனுப விக்கும்படி செய்தால் அவர்களுக்கு பின்னால் வரும் திசையிலும் அந்த இராஜயோகத்திற்குச் சமானமான சுயபலனையே தந்து மேன்மையடையச் செய்வார்கள்.

## நவக்கிரக திசையில் புத்திநாதர் கொடுக்கும் பலன்

அன்புடையநவக்கிரக மெவரானாலும்
　　அவரவர்கள் சுபஸ்தானந்தனிலிருந்து
இன்புடனேயோகபலந் தருகும்போது
　　இசைந்தபுத்திவரும்போதும் அவர்கட்கேற்ற
தன்மையுள்ளசுபபலனைத் தருகுவார்கள்
　　நற்பலனும்வியாபார உத்யோகத்தால்
பொன்பொருளும்பூஸ்திதியும் மிகவேபெற்று
　　புகழ்விளங்கிகீர்த்தியுடன் ஜீவிப்பாரே. 46

உரை:—நவக்கிரக தேவர்களெவரானாலும் அவரவர்கள் தமது காருண்யத்திற் கிசைந்தபடியே நல்ல ஸ்தானங்களிலிருந் தால் ஒவ்வொரு திசையிலும் வரும் தமது புத்திகளிலும் நல்ல யோகபலனைத் தந்து இறங்க விடாமல் ஏற்றமாகவே மென் மேலும் கீர்த்தியாயிருந்து சகலாபத்தை யனுபவிக்கும்படியாய்ச் செய்து, இராஜ யோகத்தை தருவார்கள்.

## இராகு கேதுக்களாலுண்டாகும் இராஜயோகம்

சாந்தமுடன் இராகுகேதுக்களானோர்
　　சம்பத்தமுற்றிருக்கும் கிரகங்கள்தான்
கேந்திரத்திலாயினும் திரிகோணத்தேனும்
　　செம்பிரமாயிருந்தால் அவரோடுற்று
ஏந்தியநல்யோகபலன் இராகுகேது
　　இசைந்தபடியேதத் துதவிநாளும்

வேந்தனைப்போல் ராஜாதிகாரத்தோடு
விளங்கிடவேசெய் வார்கள் கவனிப்பீரே. 47

உரை:—இராகு கேதுக்களுக்கு சொந்த ஸ்தான மில்லாத படியால் அவாள் எந்த வீட்டில் எந்தக் கிரகங்களுடனே சம்பந்தமுற்ருர்களோ அந்தக் கிரகங்கள் கேந்திரஸ்தானம், திரிகோணஸ்தானங்களி லிருந்தால் அந்தக் கிரகங்கள் கொடுக்கும் சுபயோகபலனைத் தாங்களே கொடுத்து, இராஜாதிகாரத்துடனே ஜீவித்திருக்கும்படியான பலவிதமாகிய சாமர்த்தியமும் பெற்று ஆஸ்தி பூஸ்திதியுடனே வாழ்ந்திருக்கச் செய்வார்கள்.

## கேந்திர திரிகோணுதிபத்தின் இராஜயோக பலன்

எந்தநவக்கிரகாதி பதியானாலும்
இருக்குமிடம்கேந்திர ஸ்தானமானாலும்
அந்தமுடன் திரிகோணஸ்தான மானாலுந்தான்
அங்குற்றதமது நற் பலந்திற்கேற்ற
சொந்தமாம்பலனையே அநுபவிக்க
சோர்விலாமற்கொடுத்து ஜாதகர்க்கு
தந்திடுவார்ராஜயோ கத்தையென்று
தரணியில்வாழ்ஜோதிடரே புகலுவீரே 48

உரை :—எந்த கிரகங்களாயிருந்தாலும் சரியே அவர்கள் கேந்திர ஸ்தானாதிபதியா யிருந்தாலும், திரிகோண ஸ்தானாதிபதியா யிருந்தாலும் தமக்குற்ற நல்ல பலனையே ஜாதகர்க்குக் கொடுத்து இராஜயோகத்தை அனுபவிக்கும்படி செய்வார்கள்.

## இராஜயோக பங்கத்தின் விபரம்

ஒன்பதோன்பத்தோனும் ஆயுள்லாபம்
ஒட்டியஸ்தானாதி பதியானாலும்
இன்னலுடன்அஷ்டம லாபத்தாதிபத்யம்
இசைந்திடவேவந்தாலும் சுபமில்லாமல்
அன்பானராஜயோகம் மாறிப்போகும்
அதிர்ஷ்டமில்லாவறுமையா ளன்போலாகி
துன்பமுடன்கஷ்ட நஷ்ட மனுபவித்து
துயரத்தினாற்கலங்கி திகைப்பர்தானே. 49

உரை :—நல்ல ராஜயோகத்தைக் கொடுக்கும்படியான தர்ம கர்மாதிபதிகளென்னும் பாக்கிய ஜீவன ஸ்தானாதிபதிகளுக்கு ஆயுள் ஸ்தானாதிபத்தியமாகிய அஷ்டம இலாப ஸ்தானாதி

RangaRakes tamilnavarasam.com

பத்யம் வந்தால் சுபகரமாகிய இராஜயோகத்தைக் கொடாமல் மிகவும் ஏழ்மையான வறுமையோகத்தை யனுபவிக்கச்செய்து, துன்பமும் துயரமும் கஷ்ட நஷ்டமும் கவலையுமடையச் செய்து, கலங்கித் தவித்துத் தத்தளித்து அன்னவஸ்திரத்திற்குப் பஞ்சமாயலையச் செய்யும்படியான தரித்திர யோகத்தை அனுபவிக்கச் செய்வார்கள்.

## மாரகஸ்தானங்களின் விபரம்

இலக்கினத்திற்கெட்டாமிடமும் அதற்குமூன்றும்ஸ்தானம்
இசைந்தஆயுள்ஸ்தானமும் தீரஸ்தானம்
கலக்கமுறும்இவைகளுக்கு சப்தமஸ்தானமென்று
கழறுமேழாமிடமும் ரெண்டாம்ஸ்தானம்
உலகத்தோர்க்கிசைந்த மாரகத்தைச்செய்யும்
உற்றஸ்தானங்களென்று உறுதியாக
நலமுடனேஜாதகர்க்குப் பலனாராய்ந்து
நவின்றிடுவீர்ஜோ திடத்தில் மிகவல்லோரே. 50

உரை:—இலக்கினத்திற்கு அஷ்டமஸ்தானமும், அதற்கு எட்டாமிடமாகிய மூன்றும் ஸ்தானமென்னும் தீரஸ்தானமும், இவைகளுக்கு ஏழாமிடமும், இரண்டாமிடமும், பூலோகத்தோர்கட்கிசைந்த மாரக ஸ்தானங்களென்று திடமாக ஜாதகர்க்குப் பலனறிந்து சொல்லும்போது அந்த கிரகங்களின் திசாபுத்தி பலனையும் மற்ற கிரகங்களிருந்த ஸ்தான பலனையும் ஆராய்ந்துணர்ந்து பலன் சொல்லவேண்டும்.

## கிரக சேர்க்கை மாரகத்தின் விபரம்

முன்புகன்றமாரகத்தைக் காட்டிலும்பின்
மொழிந்தஇரண்டாமிடமே பலமென்றோது
என்னவிதமென்றாலும் முன்னுரைத்த
ஏழைவிடரெண்டாமிடமே பலமென்றோது
இன்னவாய்ரெண்டோனிலும் அந்தஸ்தானத்தில்
இருந்தகிரகங்கள்பலத்த மாரகஞ்செய்வார்கள்
தன்னயமாய்கணிதநூ லாராய்ந்தன்பாய்
நலமுடனேஜாதகர்க்குப் பலன்சொல்வீரே. 51

உரை:—முன்சொல்லிய மாரக ஸ்தானாதிபர்களிலும் இரண்டாமிடத்ததிபரே பலமான மாரகராகும். இதன் விபரமெப்படியென்றால் முன்னுரைத்த சப்தம ஸ்தானமாரகமோ பொல்லாததென்றாலும் இரண்டாமிடமாகிய மாரகஸ்தானம் பலமானதாகும். அன்றியும், அந்த ஸ்தானங்களில் இருக்கின்ற

கிரகங்களோ பலமான மாரகஞ் செய்வார்கள். ஆனால் துவாதச லக்கினத்திலிருக்கும் கிரக பலன்களையும், ஆராய்ந்துணர்ந்து ஜாதகர்க்கு பலன் விபரம் சொல்லவேண்டும்.

## சம்பந்த கிரகங்களின் மாரக விபரம்

மாரகஸ்தானத்தனிலே யிருப்போரோடு
மகிழ்ந்துசேர்க்கையானோர் பாபரானால்
நேராகஅவரவர்கள் திசாபுத்திதன்னில்
நேர்ந்திடுமே மரணமென்று ஜாதகர்க்கு
சீரமுடனேபுகல்வாய் இவர்கொல்லாவிட்டால்
திகழ்விரயஸ்தானாதிபதி கொல்வாரென்று
சீராகஆயுள்பல னாராய்ந்தன்பாய்
சிறப்பாகப்புகல்வீர் ஜோதிடவல்லோரே. 52

உரை:—மாரகஸ்தானத்தி லிருப்பவர்களோடு சேர்க்கையான கிரகங்கள் சூரியன், செவ்வாய், சனி, ராகு, கேதுபகவானாயிருந்தால் அந்த கிரகங்களினுடைய திசாபுத்திகளில் அந்த கிரகங்கள் கொல்லாமலிருந்தால் பனிரெண்டாம் ஸ்தானாதிபதி கொன்றுவிடுவாரென்று கால கணித நூலாராய்ச்சிசெய்து மற்ற கிரகங்கள் நின்ற ஸ்தானபலனையும் ஆராய்ந்துணர்ந்து பலன் சொல்லவேண்டும்.

## விரயஸ்தானாதிபதியின் விபரம்

பன்னிரண்டாமிடத்தோன் திசாபுத்திதன்னில்
பலமானமாரகத்தைச் செய்யாவிட்டால்
தன்னிடமாகும்விரய ஸ்தானமுற்றோர்
சம்பந்தமானரவிசேய் சனிராகுகேது
இன்னோர்கள் திசாபுத்திகளிலே கொல்வார்
இவர்களும்கொல்லாவிடில் விரயஸ்தானாதியோடு
இன்னலுடன்சார்ந்தசுபர் திசாபுத்திதன்னில்
இசைந்தவிதம்மாரகத்தைச் செய்வார்தானே. 53

உரை:-இலக்கினத்திற்கு விரயஸ்தானமாகிய பன்னிரண்டாமிடத்தோன் திசாபுத்தியில் ஜாதகர்க்கு மாரகஞ் செய்யாவிட்டால் அந்த விரயத்தானத்தி லிருப்பவர்களாகிலும், அவர்களுடனே சம்பந்தப்பட்ட சூரியன், செவ்வாய், சனி, ராகு, கேது பகவானாகிய இவர்கள் திசாபுத்திகளிலாகிலும் மாரகத்தைச் செய்வார்கள். அவ்விதமாய் அவர்கள் கொல்லாவிட்டாலும் பனிரெண்டாமிடத்ததிபதியுடனே சேர்ந்த குரு, சுக்கிரன், புதன், சந்திரன் இவர்களுடைய திசாபுத்திகளிலே மாரகத்தைச் செய்வார்கள். ஆனால் இலக்கினாதிபதி பலமறிந்து சொல்லவேண்டும்.

RangaRakes tamilnavarasam.com

## இதற்கு உதாரணம்

ஆயுள்ஸ்தானாதிபதியான எட்டாமித்ததிபதிக்கு மூன்று மிடத்ததிபதியாகிய கிரகங்களின் திசாபுத்திகளில் மாரகத்தை செய்வார்கள். எட்டாமிடத்திற்குடையவர்கள் ஆயுளைக் கொடுப் பவர்களாய் இருந்தாலும் வேறு விதத்தினால் மாரகஞ் செய்ய இடமில்லாததினால் அந்த சமயத்தில் மேற்சொன்ன நிலைமையுட னிருந்து மாரகஞ் செய்வார்கள்.

## சனிபகவான் செய்யும் மாரக விபரம்

சனிபகவான்மாரக கிரகங்களோடு
சார்ந்துநின் றநற்றத்தின் வலிமையாலே
இனிதுடனேசகலரையும் தள்ளிவிட்டு
இவரேஜாதகர்க்குமா ரகந்தைச் செய்வார்
கனிவுடனே இவர்க்குமுன் வருவோர்தன்னை
கருதாமல்சனீஸ்வரன் மாரகத்தைச்செய்வார்
மனமகிழஜோதிடநூ லாராய்ந்தன்பாய்
மாரகஸ்தானபலனைச் சொல்லுவீரே. 54

உரை:—சனிபகவான் மாரகாதிபதிகளாகிய கிரகங்க ளுடனே சேர்ந்திருந்தால், அந்த வல்லமையால் தன்னுடனிருந்த கிரங்களை மாரகஞ் செய்யவிடாமல் தடுத்து, தானே முதன்மை யாயிருந்து ஜாதகர்க்கு மாரகத்தைச் செய்வார். ஆனால் இலக் கின ஸ்தானபலனையும், இலக்கினாதிபதியிருந்த ஸ்தானபலனை யும் ஆராய்ந்து பலன் சொல்ல வேண்டும்.

## புத்திநாதர்களின் விபரம்

பருதிமதிகுஜபுதனும் குருவும்சுக்கிரன்
பராக்ரமமுள்ளசனிராகு கேதுவென்று
கருதுமிந்தநவக்கிர கங்களானோர்
காணுமவர்சுயபுத்தி தன்னிலேதான்
வருகின்றசுபபலனைக் கொடுக்கமாட்டார்
வாய்த்தமுன்திசைபலனை தருவாரப்பா
சுருதிகளில்சொன்னபடி ஜோதிஷமாராய்ந்து
சொல்லுவிர்பலன்விபரம் ஜாதகர்க்கே. 56

உரை:—சூரியன், சந்திரன், செவ்வாய், புதன், குரு, சுக்கி ரன், சனி, இராகு, கேதுவென்னும் ஒன்பது கிரகங்களும் தமது திசைவரும்போது, சுயபுத்தியில் தாங்கள் கொடுப்பதற்குரிய சுப பலனைக் கொடுக்கமாட்டார்கள். அவர்களுக்கு முன் நடத்திய

RangaRakes tamilnavarasam.com

திசாநாதர்களின் பலனையே தருவார்கள். ஆனால் அந்த திசாநாதனுக்கு முன்னால் வந்து சுபாசுப பலனைக் கொடுத்த கிரகங்களின் பலத்தையும் இந்த திசாநாதன் பலத்தையும் லக்னாதிபதி, ஜீவனஸ்தானாதிபதிகளின் பலத்தையும் ஆராய்ந்து பலன் சொல்ல வேண்டும்.

## திசாநாதரும் சேர்ந்த புத்திநாதர் விபரம்

தினகரன்செவ்வாய் குருவும்சுக்ரன்மைந்தன்
  திங்களொடுராகு கேதிவர்களெல்லாம்
தனதுசமானத்துவமும் சம்பந்தமில்லா
  தாங்கள்சுபரானால்துன் பஞ்செய்வார்கள்
கனமாயந்தக்கிரகம் அசுபரானால்
  காக்ஷியுடன்சுபபலனைக் கொடுப்பாரென்று
மனமகிழ்வாய்கிரகநிலை தனைஆராய்ந்து
  மாட்சியுடன்ஜாதகர்க்குப் பலன்சொல்வீரே. 56

உரை:—ஜாதகர்களுக்கு பலாபலனைக் கொடுத்து சுக துக்கத்தை யனுபவிக்கச் செய்யும்படியான சூரியன், சந்திரன், செவ்வாய், புதன், குரு, சுக்கிரன், சனி, இராகு, கேது என்னும் ஒன்பது கிரகங்களும் தன்னுடன் சம்பந்தப்பட்ட கிரகங்களின் திசையிலும், தமக்குச் சமானமாகிய கிரகங்களின் திசையிலும் சுபக்கிரகங்களாக வந்தால் துன்பத்தைச்செய்வார்கள். அசுபர்களானால் நல்ல பலனைக் கொடுத்து தன தான்ய சம்பத்துடன் மிகவும் மேன்மையாய் ஜீவித்திருக்கும்படி செய்து பந்து மித்திரானைவரும் புகழ்ந்துரைக்கும்படியான பெருமையுடனே வாழ்ந்திருக்கச் செய்வார்கள். ஆனால் அந்தந்த கிரகநிலையைச் சரியாய் ஆராய்ந்துணர்ந்து பலன் சொல்லவேண்டும்.

## திரிகோணாதிபதி திசாபுத்தி விபரம்

இலக்கினத்தின் திரிகோணாதிபதிகளானோர்
  இனிதுடனேதன் திசையிலேயமைந்த
நலமானகேந்திராதிபதி புத்திகளில்தனக்கு
  நாடியபேதோர்சுபபலனை தருவாரந்த
பலமானகேந்திராதிபதி திசையிலேதான்
  பராக்ரமமாய்திரிகோணாதிபதி புத்தியிலேதன்னால்
கலக்கமிலாசுபபலனைத் தருவாரந்த
  கிரகநிலைதனையறிந்து புகலுவீரே. 57

உரை:—ஜன்ன இலக்கினத்தின் திரிகோணாதிபதிகள் தமது திசையில் வரும் கேந்திராதிபதிகளின் புத்தியில் தமக்குத் தகுந்த சுபபலனைக் கொடுப்பார்கள். ஆனால் கேந்திராதிபதி

னால் அமைந்த கிரகங்களின் திசையில் திரிகோணாதிபதியின் புத்திகளில் நல்ல யோகபலனைக் கொடுப்பார்கள். அவர்கள் ஒருவர்க்கொருவர் சம்பந்தமில்லாமலும், ஆறெட்டு பனிரெண்டாம் ஸ்தானங்களிலும் பகை நீசஸ்தானங்களிலு மில்லாமலிருக்க வேண்டும். அன்றியும், வக்ரம் அஸ்தமனமு மில்லாமலிருக்க வேண்டும். இவ்விதமில்லாமல் சுபஸ்தானாதிபர்களுடனே சேர்ந்து நட்பு ஆட்சி உச்சஸ்தானங்களி லிருந்தால் கீர்த்திப் பிரகாசமான யோகபலனைத் தந்து பொன் பொருள் ஆஸ்தி பூஸ்திதியுடன் சுகசவுக்கியங்களை அனுபவிக்கும்படி செய்வார்கள். ஆனால் லக்கினாதிபதி பலனையும் கிரகங்களின் பலனையும் ஆராய்ந்துணர்ந்து பலாபலன் சொல்லவேண்டும்.

## பத்தாமிடத்ததிபதி திசையின் விபரம்

ஜீவனஸ்தானாதிபதி திசையில்தானே
  ஜீவர்கட்குசுகதுக்க பலனைக்கேட்பாய்
ஆவலுடன்பாக்யாதிபதி புத்திதன்னில்
  அமைந்திடுமே சுபபலன்கள் நனவானாக
பூவுலகில்தனதான்ய சம்பத்தெல்லாம்
  பொருந்தியேவாழ்வார்கள் ஆறெட்டுள்ளோர்
தாவியேபுத்திநாத ராகவந்தால்
  தகத்திரயோகத்தையே யடைகுவாரே. 58

உரை:—ஜீவனஸ்தானாதிபதியாகிய பத்தாமிடத்தோருடையதிசையில் ஜாதகர்க்கு சுகதுக்கபலன் எவ்விதமாயனுபவிக்கும்படியாய் நேரிடுமானால் விபரத்தை கவனிப்பீர்கள். அந்த பத்தாமிடத்ததிபதி திசையில் பாக்கியாதிபதி புத்திவந்தால் சொல்லுதற்கரிய யோகபலனைத்தந்து வித்தியாபிவிருத்தி உத்யோகமேன்மை வியாபாரலாபமும் பொருந்தி தனதான்ய சம்பத்துடன் தனவானாய் விளங்கி பிரபுத்தனமா யிருக்கச்செய்யும். ஆறெட்டு பனிரெண்டா மிடத்ததிபர் புத்திவந்தால் கஷ்டமும் கவலையும் துன்பமுமாகிய தரித்திரயோகத்தை யனுபவிக்கும்படியா யிருக்கும். மற்ற புத்திநாதர்கள் சமபலனையே கொடுப்பார்கள்.

## மாரக திசாயோக பலன் விபரம்

வன்மையாய்மாரகாதிபதி திசாபுத்திதன்னில்
  வந்திட்டராஜ யோகந்தானப்பா
துன்பந்தரும்பாபரிட புத்திகளில்தானே
  தொடர்ந்துமென்மேலாக ஜாதகர்க்கு
இன்பத்தையனுபவிக்கச் செய்வதற்கு
  இசைத்தராஜயோகந்தான் மென்மேலாக

நன்மையேதரு மென்றுஜாதகர்க்கு
நலமுடனேபுகல்வீர் ஜோதிடவல்லோரே. 59

உரை :– மாரகாதிபதியின் திசாபுத்தியால்வந்த இராஜ யோகம் பாபருடைய புத்திகளிலும் மென்மேலாக வளர்ந்து, ஜாதகர்க்கு நல்ல சுபபலனை யனுபவிக்கச் செய்வதுடன் பொன் பொருள் பூஸ்திதிகளை சேகரித்து தனவானு யிருப்பதற்கிசைந்த தன்மையை ஜாதகர்க்குத் தந்து சுகசவுக்கியத்துட னிருக்கச் செய்யுமென் றுரைப்பீர்கள். ஆனால் கிரகநிலையையும் இலக் கினஸ்தான பலனையும் ஆராய்ந்துணர்ந்து பலன் சொல்ல வேண்டும்.

## யோககாரகதிசை விபரம்

நலமானயோககாரக திசையில் தானே
நாடியபுத்திநாத ரெவர்வந்தாலும்
கலகத்தாலுண்டான தோஷமில்லை
கழறுபலனெவ்விதமா யமையுமென்றால்
சிலகாலம்கஷ்டத்தால் துன்புற்றாலும்
சீரானபலனெல்லா மனுபவித்து
நலபொருளும்பூமிலாபம் பெற்றன்பாக
பாக்கியவானுயிருப்பா ருலகமீதே. 60

உரை :—ஜாதகர்க்கு நடக்கின்ற யோககாரக திசையில் புத்திநாதர்கள் எவர்கள் வந்தாலும் கஷ்டத்தைக் கொடுக்க மாட்டார்கள். மாரகஸ்தானுதிபதி புத்திநாதராய் வந்தாலும் மாரகஞ் செய்யமாட்டார்கள். சுப ஸ்தானத்திலிருந்த சுபக்கிர கங்கள் புத்திவந்தால் பொன் பொருள் தனம் தான்ய சம்பத்து பூமி லாபத்தையும் அனுபவிக்கும்படியான நல்ல பலனைக் கொடுத்துதவுவார்கள்.

## திசாயோக பலன் விபரம்

அன்பானயோக காரகர்களானோர்
அவர்களுடன்சம்பந்த மில்லாதிருக்கும்
பொன்னன்புகர்மால் சந்திரனென்றோதும்
போற்றும்சுபர்திசையிலே தமதுபுத்தி
இன்பாகவந்தாலே அவரவர்க்கு
இசைந்தநல்லசுபயோக பலனுக்கேற்ற
நன்மையாய்பொன்பொருள் தருவாரென்று
நவில்வீர்ஜாதகர்க்கு ஜோதிடவல்லோரே. 61

உரை :—யோககாரக கிரகங்கள் தங்கள் தங்களுடனே சம் பந்தமில்லாத குரு, சுக்கிரன், புதன், சந்திரனுகிய சுபக்கிரகங் களின் புத்திவந்தால் அவரவர்க்கிசைந்தபடி சுபபலனைத்தந்து,

RangaRakes tamilnavarasam.com

றுற்சாகம், புத்திகூர்மை, வியாபாரலாபம், திரவியசேர்க்கை, நமித்திரர் நன்மை முதலான சுப நன்மை யனைத்துமுண் நம்படி செய்வார்கள். ஆனால் திசாநாதர் வலுவறிந்து ானபலனுராய்ந்து சொல்லவேண்டும்.

## யோககாரகர் பலன் விபரம்

பன்னிரெண்டெட்டாறுமூன் றுமிடத்தோர்
பக்ஷமுறும்லக்னயோக காரர்களோடு
நன்மையாம்சேர்ந்தாலு மவர்திசையிலேதான்
நாடுமிவர்புத்திவந்தால் பலனில்லாமல்
இன்னலாய்மத்திப பலனைத்தந்து
இசைத்தபடி சுகதுக்கம் சமானமாக
நன்மையுடனேதந்து அற்பமாக
தருகுவார்ஜாதகருக்கு பலனைத்தானே. 62

உரை:—யோககாரகர்களுடைய திசையில் மூன்று, ஆறு, ெ, பனிரெண்டா மிடத்ததிபர் புத்திவந்தால் சுபபலனையும் டுக்காமல் நன்மை பெருக்கமில்லாத அற்பபலனை அளவு ல் தந்து சுகதுக்கத்தைச் சமமா யனுபவிக்கச் செய்வார்கள்.

## இராகு கேதுக்களின் புத்தி விபரம்

குருசுக்ரன்புதன்சந்திரன் ஸ்தானந்தன்னில்
கூடியேமற்றே ருடன்சேராமல்
வருகின்றராகு கேதுக்களானோர்
வத்ததிசைதனில் தமது:புத்திவந்தால்
அருமையுடனேவிளங்கும் ராஜயோகம்
அவ்வப்போதேதந்து ஜாதகர்க்கு
பெருமையும்கீர்த்திவிளங்கி சீமானாக
பொருள்மிகவே ஜாதகர்க்குத்தருதுவாரே. 63

உரை:—குரு, சுக்கிரன், புதன், சந்திரனுடைய ஸ்தானத்தி ்கிற இராகுகேதுக்கள் எந்த கிரகங்களின் திசையிலும் தமது ிவந்தால் அப்போதைக்கப்போது சுக சவுக்கியம் தன ாய சம்பத்து, கீர்த்தி, பெருமை, பொன், பொருள் வரவு, ு மித்திரர்சேர்க்கை முதலான நன்மைப் பெருக்கமாகிய ஜயோக பலனைக் கொடுத்து ஜீவிக்கச் செய்வார்கள். ஆனால் நந்த திசா நாதர்களின் ஸ்தானபலனைக் கவனித்து பலன் ல்லவேண்டும்.

## திசாபுத்திநாதர்களின் விபரம்

தினகரனும்மதிசேய் மந்தன்ராகுகேது
திசைநாதராகுலவரோ டிணங்கிடாத

கனமான சுபக்கிரக புத்தியிலேநஷ்ட
கஷ்டபலன்தருவார்க ளவர்களோடு
இன்பமாகசம்பந்த முற்றோரான
இசைந்தசுபர்புத்தியிலே திசைக்கிசைந்த
தனதுபலன்தருவார்கள் யோககாரகர்களானோர்
தாசித்ரபாபபலன் தருகுவாரே.

உரை:—சூரியன் தேய்பிறைச் சந்திரனும் செவ்வாய்
ராகு, கேது இவர்களில் எவரெவர் திசாநாதராய் வந்
அவர்களுடனே சேராது புத்திநாதர் சுபக்கிரகமானாலும் ப
மாகிய கஷ்டநஷ்ட பலனை யனுபவிக்கச் செய்வார்கள். உ
அந்த திசாநாதருடனே சேர்ந்திருந்த கிரகங்கள் புத்திநா
வந்தால் அவரவர்க் கிசைந்தபடியே அற்பபலனைத் தருவா
ஆனால் யோககாரகர்களா யிருந்தால் கஷ்டநஷ்டத்தை
விப்பதற்கிசைந்த துன்பபலனைத் தருவார்கள்.

## மாரகதிசாயோக பலன் விபரம்

மாரகஸ்தானாதி பதிகளானோர்
மாட்சிமையாய்த்தன்னுடனே சேர்ந்திருந்த
சீரானசுபக்கிரக புத்திதன்னில்
சிறிதேனும்மாரகத்தை செய்யமாட்டார்
நேரானசம்பந்தமில்லா பாபருக்கு
நேரிட்டபுத்தியிலே கொல்வாரென்று
தாரணியில்ஜாதகர்க்குப் பலனாராய்ந்து
தகுந்தபடிபுகல்வீர் ஜோதிடவல்லோரே.

உரை:—மாரக ஸ்தானாதிபதிகளானவர்கள் தன்னு
சம்பந்தமாயிருக்கின்ற சுபக்கிரகங்களின் புத்தியிலே ம
செய்ய மாட்டார்கள். ஆனால், அவர்களுடனே சம்பந்தமி
சூரியன், சனி, ராகு, கேது, செவ்வாய் பகவான் புத்திகள்
போது சமயோசிதமாய் கண்டாதிகண்டங்களைத்தந்து
வார்களென்று ஜாதகர்க்கு பலன்சொல்லவேண்டும். இலக்
பன் வலுத்திருந்தால் மாரகஞ்செய்யாமல் வியாதியினால்
துருவச் செய்து சுகப்படுத்தும்.

## சனி சுக்கிரன் திசை விபரம்

சுக்கிரனுக்கிசைந்ததிசை வந்ததானால்
சூழ்ந்தோர்கள்தன்னிலே சனியன்புத்தி
மிக்கயோகபலனைத் தந்துநாளும்
மேன்மையுடன் தனலாபமெய்துவாரே

RangaRakes tamilnavarasam.com

அக்கரையாய்சனிதிசையில் சுக்ரபுத்தி
அமைத்துவரும்போதவர்க்கு வெகுதுன்பங்கள்
சிக்குடனேவந்தெய்தும் இலக்கினராசி
சீராககணித்தெடுத்துப் பலன்சொல்வீரே. 66

உரை:—சுக்ரதிசையில் சனிபுத்தி வந்தால் நல்ல யோக மையும், தனதான்ய சம்பத்தும், மனோற்சாகம், கீர்த்தி, தைசி ஸ்திரீ சேர்க்கை முதலான நன்மையும் இராஜயோக சுப மும் தந்து மேன்மையுடனே ஜீவித்திருக்கும்படியான நற் னத் தருவார்கள். ஆனால் சனிதிசையில் சுக்கிரபுத்தி வந் ) பலவிதமான கஷ்டநஷ்டங்களும் கவலையுமடையும்படி ர துன்பபலனை அனுபவிக்கும்படியாய் நேரிடும். இதன் ஷ வைபவத்தை இலக்கினபலனை ஆராய்ந்து ஜாதகர்க் பலன் சொல்லவேண்டும்.

## நவக்கிரகங்களின் குணவிசேஷ விபரம்

தினகரனும்செய்மால் பொன்ராகுகேது
திங்கள்புகர்சனியோ டொன்பதுபேரானோர்
மனமகிழ்துவாதஸ்தானங்களாகும்
மாட்சிபெறும்மேடாதி மீனமென்னும்
பனிரெண்டுராசியிலு மிருக்கும்நல்ல
பலாபலனைவிபரமாய் கவனித்தோர்ந்து
இனிதானஜாதகர்க்கு பலனைச்சொல்வீர்
இப்புவியில்ஜோதிட சாஸ்திரவல்லோரே. 67

உரை:—சூரியன், சந்திரன், செவ்வாய், புதன், குரு, சுக்கி , சனி, ராகு, கேது முதலான நவக்கிரகங்கள் ஒன்பதுபேரும், ஷம், ரிஷபம், மிதுனம், கடகம், சிங்கம், கன்னி, ரம், விருச்சிகம், தனுசு, மகரம், கும்பம், மீனமென் பனிரெண்டு ராசிகளில் எவ்வெவ்விதமாய் நட்பு, ஆட்சி, சம், நீசம், மூலத்திரிகோணாதிபதிகளா யிருக்கின்றார்களோ தத்த ஸ்தானபலமறிந்து அவரவர்கள் திசாபுத்திகளில் சம் நமும் பார்வையுமான கிரகங்களின் தன்மையும், சத்ருமித்ரு ங்களின் தன்மையும் ஆராய்ந்து ஜாதகர்க்கு பலன் சொல்ல ண்டும். அப்போதுதான் சரியாயிருக்கும்.

## மேஷராசியின் பலன்

அன்பானமேஷத்திற் புகர்மால்மந்தன்
ஆகாதோரென்றுரைப்பாய் ஆறுலுந்தான்
பொன்னவனும்சூரியர்கள் நல்லோராகும்
பொருந்திசனிசேர்ந்தால் துன்பஞ்செய்வார்

துன்பபலன் தந்துசனி சொல்வாரப்பா
சுக்கிரன்சொல்லான் மேஷராசியோரை
இன்னவிதமாகவே கணித்தாராய்ந்து
இப்புவியோர்க்குரைப்பீர் ஜோதிடவல்லோரே. 68

உரை:—மேஷராசியிற் பிறந்தோர்களுக்கு சனி, புதன், சுக்கிரன் பொல்லாதவர்கள். ஆனால் குரு, சூரியன் நல்லவர்கள். சனி சம்பந்தமானால் குரு அந்த சனி கொடுக்கும்படியான துன்பத்தையே எப்போதும் கொடுத்துக்கொண்டு கஷ்டநஷ்ட மடையச் செய்வார்; சுக்கிரன் மாரகஞ் செய்யார்; சனி முதலான கிரகங்கள் மாரகஞ் செய்வார்கள்.

## ரிஷபராசியின் விபரம்

குருவெள்ளிசந்திரனும் ரிஷபத்திற்கு
குரூரமெனுங்கொடுமையே செய்வாரப்பா
பருதிசனிநல்லவர்கள் மந்தன்யோக
பலன்தருவார்வியாழன்முத லானோர்கொல்வர்
தருணமேகுருசுக்ரன் மதியோடுற்று
சம்பந்தமானகிரகங் களையாராய்ந்து
அருமையாய்ஜோதிட சாஸ்திரத்தைப்பார்த்து
அறிவிப்பீர்ஜாதகர்க்கு பலனைத்தானே. 69

உரை:—ரிஷபராசியில் பிறந்தவர்கட்கு குரு, சுக்கிரன், சந்திரனாகிய மூவரும் குரூரமாகிய கொடுமை செய்யும்படியான தீய பலனைக் கொடுப்பார்கள். ஆனால் சூரியனும் சனியும் நல்லவர்கள்; சனி பகவான் ஒருவரே இராஜயோகபலனைத் தருவார். வியாழன் முதலான கிரகங்கள் சமயோசிதமாய் வறுமை, பிணி, கண்டாதி கண்டமெல்லாம் அனுபவிக்கச்செய்து கொல்வார். ஆகையால், குரு, சுக்கிரன் சந்திரனுடனே சம்பந்தமான கிரகங்களின் நிலையைக் கவனித்து ஆராய்ந்து பார்த்து பலன் சொல்லவேண்டும்.

## மிதுனராசியின் பலன்

சூரியனும்செவ்வாயும் வியாழனுந்தான்
சுபரல்லமிதுனராசிக் கென்றேது
வரியுடன்குருசேர்ந்தால் துன்பஞ்செய்வார்
கஷ்டநஷ்ட மனுபவிக்கச் செய்வாரப்பா
கீரமுடன்புகர்சுபனும் சந்திரன்தான்
துதியாதிபதியானாலுங் கொல்லானே
சூரியனும்குருசெவ்வாய் கொல்வாரென்று
சொல்லுவாய்மிதுனத்தில் பிறந்தோருக்கே. 70

RangaRakes tamilnavarasam.com

உரை:—சூரியனும் செவ்வாயும் வியாழனும் மிதுன ராசியிற் பிறந்தவர்களுக்கு குரூர கொடுமை செய்யும் பொல்லாதவர்கள். குரு சனியுடன் சேர்ந்தால் பல துன்பமும் துயரமு மனுபவிக்கச் செய்து கஷ்டப்படுத்துவார். சுக்கிரபகவான் ஒருவனே சுபனாகும். சந்திரன் துதியாதிபத்திய தோஷத்தை யடைந்தவனாயிருந்தாலும் கொல்லமாட்டான். சூரியன், குரு, செவ்வாய் இம் மூவரும் மாரகஞ் செய்வார்கள். சனியும் குருவும் மிதுனராசிக்கு தருமகருமாதிபதிகளாகையால் கிரகநிலை யறிந்து பலன் சொல்ல வேண்டும்.

## கடகராசியின் விபரம்

சுக்கிரனும்புதன்பொல்லார் கடகத்தோர்க்கு
சுபர்குருவும்செவ்வாயும் விசேஷநல்லோர்
மிக்கநல்யோகந்தருவோர் குஜனேநல்லோன்
மேலுங்கடகத்தோரைரவி கொல்லமாட்டார்
சுக்கிரனும்புதன்கொல்வா ரென்றுரைப்பாய்
சூழ்புவியில்கடகத்தில் பிறந்தோர்க்கு
சிக்கிலாகிரகநிலை தனையாராய்ந்து
செப்புவீர்ஜாதகர்க்கு பலனைத்தானே. 71

உரை:—கடகராசியில் பிறந்தவர்களுக்கு சுக்கிரனும் புதனும் பொல்லாதவர்கள்; குருவும் செவ்வாயும் விசேஷமாய் பலன் கொடுக்கும் நல்ல சுபர்கள்; செவ்வாய் பகவான் மிகவும் நல்ல யோகத்தைக் கொடுப்பவர். சூரியன் துதியாதிபதியா யிருந்தாலும் கொல்லமாட்டார். சுக்கிரனும் புதனும் கொல்வார்கள். ஆனால் மற்ற கிரக நிலையையும் ஆராய்ந்துணர்ந்து பலாபலனை கவனித்துச் சொல்லவேண்டும்.

## சிங்கராசியின் விபரம்

சிங்கராசியில்பிறந்த ஜாதகர்க்கு
சுக்கிரனும்புதபகவான் பொல்லாதோர்கள்
மங்களஞ்சேர்செவ்வாயே நல்லோனாகும்
மகிழ்ந்துபுகர்செய்சேர்ந்தால் கொடுமைசெய்வார்
இங்கிதமாய்புதன்முதலா னோர்களெல்லாம்
இசைத்தபடிசமயம்போற் கொல்வாரப்பா
சங்கையுடன்குருபகவான் யோககாரகனானாலும்
சதுர்த்தகேந்த்ராதிபத்தியத்தால் துன்பஞ்செய்வாரே.

உரை:—சிங்கராசியில் பிறந்தவர்கட்கு சுக்கிரனும் புதபகவானும் பொல்லாதவர்; செவ்வாய் பகவான் சுபயோகத்தைக் கொடுக்கும் நல்லவர். ஆனால் சிங்கராசிக்கு செவ்வாய் யோககாரகனாயிருந்தாலும் சுக்கிரனுடனே சேர்ந்தால் கொடுமை செய்

வார். புதன் முதலான கிரகங்கள் சமயோசிதமாய்க் கொல்வார்கள். ஆகையால் மற்ற கிரகங்களின் பலமறிந்து ஜாதகர்க்குப் பலன் சொல்லவேண்டும்.

## கன்னியாராசியின் பலன் விபரம்

கன்னியாராசியிலே ஜனித்தோர்க்கு
குஜன்குருவும்சந்திரனும் பொல்லாதோர்கள்
இன்பமுடன்சுக்கிரனே சுபனேயோகம்
இசைத்தபுதன்புகர் போககாரகரேயாகும்
நன்மைசெய்யும்சுக்கிரனே கொல்லமாட்டார்
நலமிலாமற்கொல்வர் குஜன்முதலானோர்கள்
தன்மையுடன்கிரகநிலை ஆராய்ந்தன்பாய்
தகுந்தபடி ஜாதகர்க்கு பலன்சொல்வீரே. 73

உரை:—கன்னியாராசியிலேபிறந்தோர்க்கு செவ்வாய், குரு, சந்திரனும் பொல்லாதவர்; சுக்கிரன் நல்லவர். புதனும் சுக்கிரனும் யோககாரகர். சுக்கிரபகவான் மாரகஞ் செய்ய மாட்டார்; செவ்வாய் முதலானோர் கொல்வார். ஆனால் மற்ற கிரகங்களின் சேர்க்கை சம்பந்த பலமறிந்து ஜாதகர்க்குப் பலன் சொல்ல வேண்டும்.

## துலாராசியின் பலன் விபரம்

குருசூரியன்செவ்வாயும் பொல்லாதோர்கள்
குற்றமிலாபுதன் சனியும்நல்லோராகும்
அருமையாய்சந்திரனும் புதபகவானுமோர்
அன்பானயோக காரகர்களாகும்
குருமுதலானகிரகம் கொல்லாரப்பா
குஜபகவான்மாரகஞ் செய்யமாட்டார்
பெருமையுடன் துலாராசிதனிற்பிறந்தோருக்கு
பேசுபலனிதுவாகும் நூல்வல்லோரே. 74

உரை:—துலாராசியில் பிறந்தவர்களுக்கு குருவும் சூரியனும் செவ்வாயும் அசுபராகும்; புதனும் சனியும் சுபராகும். புதன் சந்திரனும் யோககாரகர். செவ்வாய் பகவான் மாரகஞ் செய்யார்; குரு முதலான கிரகங்கள் கொல்லார்கள். ஆனால் இலக்கினாதிபதி நிலையறிந்து ஜாதகர்க்கு பலன் செல்லவேண்டும்.

## விருச்சிகராசியின் பலன் விபரம்

மனமகிழவிருச்சிகத்தில் பிறந்தோருக்கு
மால்குஜனும்சுக்கிரனும் அசுபராகும்
தினகரனும்சந்திரனும் சுபரேயாகும்
திங்கள்யோககாரக னென்றேசொல்வாய்

RangaRakes tamilnavarasam.com

இனமானகுருதுதியாதி பதியானாலும்
இரக்கமின்றிமாரகத்தை செய்யமாட்டார்
எனமுடனேபுதன்முதலோர் கொல்வாரென்று
எழுவாய்விருச்சிகத்திற் பிறந்தோருக்கே. 75

உரை:—விருச்சிகராசியிற் பிறந்தோர்களுக்கு புதனும், செவ்வாயும், சுக்கிரனும் பொல்லாதவர்கள்; சூரியனும் சந்திரனும் யோககாரகனென்றாலும் சந்திரன் ஒருவனே யோகத்தைக் கொடுப்பான். குருபகவான் துதியாதிபதியாகிலும் மாரகத்தைச் செய்யமாட்டார். ஆனால் புதன் முதலான கிரகங்கள் கொல்வார்கள். ஆகையால் திசாநாதர் பலத்தையும் இலக்கினாதிபதி பலத்தையும் ஆராய்ந்துணர்ந்து பலன் சொல்லவேண்டும்.

## தனுசுராசியின் பலன் விபரம்

சுத்தமாய்தனுசிலே பிறந்தோர்க்கு
சுக்கிரபகவானே அசுபராகும்
அத்தமுடன்ரவிகுஜனும் சுபரேயாகும்
ஆதித்தன்மால்யோக காரகரேயாகும்
மந்தனொருவனேகொல்லான் புகர்முதலானோர்கள்
மாரகஞ்செய்வாரென்று தனுசுராசியோர்க்கு
இவ்விதமாகவே பலனுரைப்பீர்
இப்புவியின்ஜாதர்க்கு ஜோதிடவல்லோரே. 76

உரை:—தனுசு ராசியில் பிறந்தவர்களுக்கு சுக்கிரபகவான் பொல்லாதவர். சூரியனும் செவ்வாயும் சுபராகும். ஆதித்தனும் புதனும் யோககாரகர்; சனிபகவான் மாரகஞ் செய்யமாட்டார். சுக்கிரன் முதலான கிரகங்கள் கொல்வார்கள். ஆனால் மற்ற கிரகங்களின் சம்பந்தம் பார்வையறிந்து இலக்கினபலனையும் அனுசரித்து ஜாதகர்க்கு பலன் சொல்லவேண்டும்.

## மகராசியின் பலன் விபரம்

மகரராசியில்பிறந்த ஜாதகர்க்கு
மதிகுஜனும்வியாழனும் அசுபராகும்
புகழுடையபுதன்சுக்ரன்சுபராவார்கள்
புகழ்யோககாரகனென் றேபுகல்வாய்
ஜெகமீதுஜாதகரை மைந்தன்கொல்லான்
செவ்வாய்முதலானோர் மாரகஞ்செய்வார்கள்
சுகமாகஜோதிடநூ லாராய்ந்தன்பாய்
சொல்லுவீர்ஜாதகர்க்கு பலனைத்தானே. 77

உரை:—மகரராசியில் பிறந்த ஜாதகர்க்கு சந்திரனும் செவ்வாயும் குருவும் பொல்லாதவர்கள்; புதனும் சுக்ரனும் நல்லவர்கள். ஆனால் சுக்கிரன் யோககாரகனாகும். சனிபகவான் மாரகஞ்செய்யமாட்டார். செவ்வாய் முதலான கிரகங்கள் மாரகஞ் செய்து கொல்வார்கள். ஆகையால் இலக்கின பலனறிந்து கிரகங்களின் சம்பந்த சேர்க்கை முதலானவை விபரமாய் கவனித்து பலன் சொல்லவேண்டும்.

## கும்பராசியின் பலன் விபரம்

கும்பராசியிற்பிறந்த ஜாதகர்க்கு
குருசந்திரன்செவ்வாயும் அசுபராகும்
நம்பியதோர்சுக்கிரனே நல்லோனாகும்
நாடியபிதோர்புகர்யோக காரகனேயாகும்
வம்பாகுருஜன்முதலோர் கொல்வாரப்பா
வானோரின் குருவியாழன் மாரகஞ்செய்யாரே
அம்புவியின்ஜாதகரின் பலனாராய்ந்து
அன்புடனேபுகல்வீர் ஜோதிடவல்லோரே. 78

உரை:—கும்பராசியில் பிறந்த ஜாதகர்க்கு குருவும், சந்திரனும், செவ்வாயும் பொல்லாதவர் சுக்கிரன் ஒருவனே நல்லவர்; அந்த சுக்கிரனே யோககாரகனாகும்; தேவகுருவாகிய வியாழபகவான் கொல்லமாட்டார். செவ்வாய் முதலான கிரகங்கள் மாரகஞ் செய்வார்கள். ஆனால் ஜாதகபலனை ஆராய்ந்து இலக்கினாதிபதியின் பலமும் சம்பந்த சேர்க்கையான கிரகங்களின் திசாபுத்தியின் வலுவறிந்தும் பலன் சொல்வதுடன் மற்ற கிரகங்கள் நின்ற ஸ்தான பலனையும், ஆராய்ச்சிசெய்து கணிதசாஸ்திர விதிப்படியே பலன் சொல்லவேண்டும்.

## மீனராசியின் பலன் விபரம்

மீனராசியிற்பிறந்த ஜாதகர்க்கு
மந்தன்புகர்ரவிபுதனும் நல்லோரல்ல
ஆனகுருஜன்சந்திரனும் சுபரேயாகும்
அந்தணனும்செவ்வாயும் இராஜயோகம்
ஞானமுந்தந்தருள்வார்கள் சேய்கொல்லானே
சனிமுதலானவர்மார கஞ்செய்வார்கள்
தானேதான்குதியாதி பதியானாலும்
தன்னால்கொல்லான்செவ்வாய் கவனிப்பீரே. 79

உரை:—மீனராசியில் பிறந்த ஜாதகர்கட்கு சனியும், சுக்கிரனும், சூரியனும், புதனும் அசுபராகும். சந்திரனும் செவ்வாயும்

RangaRakes tamilnavarasam.com

கல்வி ஞானம் வித்யாவிவேக இராஜயோகம் முதலான நன்மையைச் செய்வார்கள். சனி முதலான கிரகங்கள் மாரகஞ் செய்வார்கள். செவ்வாய் துதியாதிபதியானாலும் தான் ஒருபோதும மீனராசியில் பிறந்தோருக்கு மாரகஞ் செய்யமாட்டார். ஆகையால் இலக்கின பலனையும் இராசிநாதனுடைய ஸ்தான பலனையும் ஆராய்ந்துணர்ந்து சொல்லவேண்டும்.

## ஸ்தான பலன் விபரம்

தினகரன்சந்திரன்சேய்மால் குருவுஞ்சுக்ரன்
 திகழ்மந்தன்ராகு கேதிவர்களென்னும்
கனமானஒன்பதுபேர் பலனைச்சொல்வேன்
 கருத்துடனேஞாபகமாய் கேட்டுக்கொள்வீர்
இனமாகத்தத்தம் ஸ்தானந்தன்னில்
 இருந்தாலேஅவரவர்கட் கிசைந்தயோகம்
தனதென்றுதான்கொடுப்பார் ஜாதகர்க்கு
 தரணியில்சூழ்ஜோதிட சாஸ்திரவல்லோரே. 80

உரை:—சூரியன், சந்திரன், செவ்வாய், புதன், குரு, சுக்கிரன், சனி, இராகு, கேது என்னும் ஒவ்வொரு கிரகமும் தமது ஸ்தானத்திலிருந்தால் தமக்குரிய பலனைப் தருவார்கள். அவ்விதமில்லாமல் சுபர் வீட்டில் அசுபரிருந்தாலும் சுபபலனையே கொடுப்பார்கள். அசுபர் ஸ்தானத்தில் சுபரிருந்தால் சமபலனையே கொடுப்பார்கள்.

## சுபாசுபர்களின் பலன் விபரம்

இலக்கினத்திற்கைந்தான ஸ்தானமென்னும்
 இசைந்தபுத்திரஸ்தானத் ததிபரோடும்
கலக்கமிலாசப்தம ஸ்தானமென்னும்
 களத்திரஸ்தானத்தோர் சுபக்கிரகங்களாக
பலத்திருந்தாலவர்திசா புத்திதன்னில்
 பத்னிபலன்புத்ரபலன் தருவாரென்று
நலமுடனேகிரகநிலை பலமறிந்து
 நவிலுவீர்ஜாதகர்க்கு பலனைத்தானே. 81

உரை:—ஜனன லக்கினத்திற் கைந்தாவது ஸ்தானமென்னும் புத்திர ஸ்தானாதிபதியும் சப்தம ஸ்தானாதிபதியுமாகிய களத்திர ஸ்தானாதிபதியுமான சுபக்கிரகங்கள் பலத்திருந்தால் அந்த கிரகங்களின் திசாபுத்திகளில் களத்திர பாக்கியமும் புத்திர பாக்கியமும் தருவார்கள். ஆனால் அந்த கிரகங்களுடன் சம்பந்தமானோர் திருஷ்டிக்கப்பட்டவர்களுடைய பலமறிந்து ஜாதகர்க்குரிய பலனை சொல்ல வேண்டும்.

RangaRakes tamilnavarasam.com

## கோட்சார பலன் விபரம்

மனிதர்கட்குநாள்பலனை விபரமாக
வழுத்துதற்குச்சந்திரனின்ற ராசிவீட்டில்
சனிசெவ்வாய்ரவிமதிமால் குருவும்சுக்ரன்
சர்ப்பமெனும்ராகுகே திவர்களெல்லாம்
தனித்தனிராசியிலிருந்து தாமேகும்வீட்டில்
தங்களால்சுகதுக்கம் ஜாதகர்க்கு
இனிதாகவேதருவா ரிதையாராய்ந்து
இப்புவியின்ஜாதகர்க்குப் பலன்சொல்வீரே. 82

உரை:—மனிதர்கட்கு அப்போதைக்கப்போது நடக்கும் பலனைச் சொல்வதாயிருந்தால் ஜாதகன் ஜனனமாகும்போது சந்திரன் இருந்த ஸ்தானமே ஜன்ம ராசியாகும். அந்த ஸ்தானத்திலிருந்து பனிரெண்டு ராசியிலும் அந்தந்த கிரகங்கள் சுற்றி வரும்போது அவரவர்க்கிசைந்த சுபாசுப பலனைக் கொடுப்பார்கள். ஆனால் அந்த கிரகங்களின் பார்வை, சேர்க்கை, நட்பாஷி, உச்சம், பகைநீச ஸ்தானமறிந்து பலாபலன் சொல்லவேண்டும்.

## ஜாதகர்க்கு சுகதுக்கம் வருகிற விபரம்

முன்ஜனனத்திற்செய்த வினைக்கிசைந்து
மூதறிஞர்வாக்யம்போல் நவக்ரகங்கள்
ஜன்மராசியிலிருந்து வரிசையாக
சார்ந்தபனிரெண்டு ஸ்தானங்கள்தன்னில்
அன்பாகவந்திருந்து விதியைப்போல
அவரவர்க்குபலாபலனை தந்தெப்போதும்
இன்பதுன்பமவரவர்க்கு ஏற்றாற்போல
இசைந்தபலன்தருகுவார் கவனிப்பீரே. 83

உரை:—மனித வகுப்பார் முன் ஜனனத்திற் செய்த பாப புண்ணிய பலனுக்கிசைந்தவிதமாய் சுகதுக்கத்தைக் கொடுப்பதற்காக நவக்கிரகங்களாகிய சூரியன், சந்திரன், செவ்வாய், புதன், குரு, சுக்கிரன், சனி, இராகு, கேது முதலான கிரகங்கள் மேஷம், ரிஷபம், மிதுனம், கடகம், சிங்கம், கன்னி, துலாம், விருச்சிகம், தனுசு, மகரம், கும்பம், மீனமென்னும் பனிரெண்டு ராசியிலும் வரும்போது அவர்களிருக்கும் ஸ்தானபலனுக்கிசைந்த சுகதுக்கத்தைக் கொடுப்பார்கள்.

## இராசிநாதர்களின் பலத்தின் விபரம்

தினகரனும்சேய்மால் பொன்னவனும்சுக்ரன்
திங்களோடுசனிராகு கேதுவென்னும்

RangaRakes tamilnavarasam.com

கனமானஒன்பது கிரகங்கள்தான்
கண்டபலன்சேர்க்கைபலன் நட்பாட்சிஉச்சம்
எனுமித்தஸ்தானபல னுடனேநீசம்
எய்தியஸ்தானபலனும் கவனித்தோர்ந்து
மனமகிழ்வாய்ஜாதகர்க்குப் பலனுராய்ந்து
மாட்சிமையாய்கோட்சாரப் பலன்சொல்வீரே. 94

உரை:—சூரியன், சந்திரன், செவ்வாய், புதன், குரு, சுக்கிரன், சனி, ராகு, கேது வென்னும் ஒன்பது கிரகங்களும் தன்னுடன் சம்பந்தமான கிரகங்களின் தன்மையும் பார்வையான கிரகங்களின் தன்மையும் அனுசரித்து ஆட்சி, உச்சம், நட்பு, பகை, நீச முதலான ஸ்தானங்களிலிருக்கும் பலனையும், மூன்றாறெட்டு பன்னிரண்டு, கேந்திர, கோண இவாபஸ்தான பலன்களையும் ஆராய்ந்துணர்ந்து ஜாதகர்க்கு பலன் சொல்ல வேண்டும்.

## விசேஷ பலன் விபரம்

இவ்விதமாய்ஜாதகர்க்கு பலனுராய்ந்து
இசைந்தபடி சொல்வதென்றால் லக்கினத்தை
ஒவ்வியேஇராசிகளில் கிரகம்நின்ற
ஒற்றுமையாம்பலனெல்லாம் சோதித்தன்பாய்
எவ்விதமாய்கிரகங்க ளிருந்திட்டாரோ
எதிருற்றுபார்த்தும் சம்பந்தமானேர்
அவ்வவ்விதமாகவே பலனைத்தந்து
ஆதரிப்பார்ஜாதகர்க்கென் றுரைத்திடீரே. 95

உரை:—இவ்விதமாகவே ஒவ்வொரு ஜாதகர்க்குப் புலா பலனை சொல்வதெனின் அவர்கள் பூமியில் பிறந்த வேளையி லமைந்த இலக்கின பலனையும், அந்த லக்கினத்திற்கிசைந்தபடி நவக்கிரகங்களுக்குரிய திசாபுத்தி பிரித்துக் கணக்கெடுத்து அந்த திசாபுத்திகளின் ஆதாரத்திற் கிசைந்தபடியே சந்திரன் நின்ற இராசியாதி பலனையும் அனுசரித்து அந்தந்த ஸ்தானங்களின் கிரகங்கள் தங்களுடன் சேர்ந்த கிரகங்களின் பலத்தையும், பார்வையான பலத்தையும் கவனித்து விபரம் விபுரமாய் பலன் சொல்லவேண்டும்.

## கேந்திராதிபத்திய கிரக பலன் விபரம்

தினகரன்செய்சனிராகு கேதுவென்னும்
திகழுமிவ்வைந்துகிர கங்களெல்லாம்
மனமகிழுகேந்திர ஸ்தானத்தன்னில்
மாண்பிமையாகவமர்த் திருந்திட்டாலும்

இனமானஆட்சிஉச்சம் நட்புஸ்தானத்தில்
　　இருத்தாலேஜாதகர்க் கெத்ததாலும்
கனமானதல்யோகந் தந்தெப் போதும்
　　கனதனமும்பொன்பொருளும் கிடைக்குந்தானே. 86

உரை:—சூரியன், செவ்வாய், சனி, ராகு, கேது இவர்கள் ஆட்சி உச்சம் நட்பு ஸ்தானத்தில் கேந்திரம் பெற்றிருப்பார்களா னால் கல்வியும் ஞானமும் பெருமையும் கீர்த்தியும் தன தான்ய சம்பத்து, புத்திரமித்திராதி களத்திரலாபமும் பெருகும்படியாய் செய்து சுகசவுக்கியமாய் இருக்கும்படி செய்வார்கள்.

## கோண திரிகோணாதிபதி ஸ்தான கிரக பலன் விபரம்

திங்கள்புதன்குருசுக்ரன் நால்வரான
　　திருவமைந்தசுபக்கிர கங்களெல்லாம்
இங்கிதமாய்திரிகோணந் தனிலிருந்து
　　இசைந்தநட்பாட்சி உச்சஸ்தானத்துற்றால்
மங்காததனதான்ய சம்பத்துற்று
　　மாட்சிமையாயிருப்பார்க ளுலகந்தன்னில்
இங்கிதமாய்திசாபுத்தி பலனாராய்ந்து
　　இசைந்தவிதம்ஜாதகர்க்கு பலன்சொல்வீரே. 87

உரை:—சந்திரன், புதன், குரு, சுக்கிரன் முதலான இந்த நான்கு கிரகங்களும் சுபராகையால் இவர்கள் கோண திரிகோண ஸ்தானத்தில் நட்பு ஆட்சி உச்சமாயிருந்தால் ஜாதகர்க்கு சதா காலமும் தனதான்ய சம்பத்தும் கீர்த்தியும் பெருகும்படியான நன்மையும் தந்து, பந்துமித்திரர் சேர்க்கையும், மனைவி மைந்தர் களின் சுகவாழ்வும், மனோல்லாசமும், வியாபாரவிர்த்தியும் உத்தி யோக மேன்மையும் பெற்று ஜீவித்திருக்கச் செய்வதுடன் பகவத் பக்தி யானந்தமும் விரதாநுஷ்டானமுஞ் செய்து கீர்த்தி பிரகாசமா யிருக்கும் நன்மையும், காண்பவர் பிரபுவென புகழ்ந் துரைக்குந் தன்மையாய் லக்ஷ்மீகரம் பொருந்திய சுகசவுக்கியத் துடனும் திரவியலாபமும் தந்து மேன்மை யடையச்செய்வார்கள்.

## ஜாதகம் பார்க்கும் விபரம்

இன்னவிதமாகவே ஜாதகத்தை
　　இசைந்தவிடம் கணித்துலக்கினமறிந்து
பன்னும்நவக்கிரகங்க ளிருக்குந்தன்மை
　　பார்த்தறிந்துதிசாபுத்தி அந்தரங்கள்

RangaRakes tamilnavarasam.com

என்னவிதமிருக்குதென்று பலனுராய்ந்து
    ஏற்றசோதிடசாஸ்திர முறையைப்போல
தன்மைதுன்மைஜாதகர்கட் குண்மையாக
    நவின்றிடுவீர்சோதிட நூல்வல்லோரே. 68

உரை:—ஜாதகத்தை பார்ப்பதென்றால் ஜாதகன் பிறந்த வேளையில் எந்த இலக்கினம் வந்ததென்று கவனித்து, அந்த சமயத்தில் இருந்த நக்ஷத்திரத்தைக்கண்டு இராசியை தீர்மானத்து திசாபுத்தி அந்தரமும் கணக்கெடுத்து அந்த சமயத்தில் மேஷம், ரிஷபம், மிதுனம், கடகம், சிங்கம், கன்னி, துலாம், விருச்சிகம், தனுசு, மகரம், கும்பம், மீனமென்னும் பனிரெண்டு இராசியிலும் எந்தெந்த ராசியில் எந்தெந்த கிரகங்களிருக்கின்றனவோ அவர்களிருக்கின்ற ஸ்தானபலனையும் கவனித்து பலன் சொல்லவேண்டும்.

இவ்விதமாய்கிரகநிலை யாராய்ந்தன்பாய்
    இராசிலக்கினங்கணித்து நவக்கிரகங்கள்
எவ்வெவ்விதமாக நிற்கின்றுரோ
    எதிர்நோக்குகிரகங்கள் பலமும்பார்த்து
ஒவ்வியேபலனுரைத்து ஜாதகர்க்கு
    ஓதுவீர்உண்மைநிலை விபரமெல்லாம்
அவ்விதமேபலனமையும் சித்தாந்தத்தை
    அறிந்துரைப்பீர்ஜாதகர்க்கு ஜோதிடவல்லோரே. 69

உரை:—இவ்விதமாய் ஒவ்வொரு கிரகங்களின் நிலையையும் ஆராய்ந்துணர்ந்து இராசிலக்கினங் கணித்து அந்த இராசியிலிருக்கும் நவக்கிரக நாதர்களுடைய பலமும், அந்த கிரகங்களை மற்ற கிரகங்கள் பார்வை செலுத்தும் பலத்தையும் ஆராய்ந்துணர்ந்து பலன் சொல்லவேண்டும்.

ஜோதிட கணிதாமிர்தம்

முற்றிற்று.

RangaRakes tamilnavarasam.com

# நவக்கிரகமாலை

### கணேசர் துதி

எண்சீரடி விருத்தம்

ஆதிகஜானனமூர்த்தி யானயெந்தன்
    அன்பானகுருஸ்வாமி கணேசாயுந்தன்
பாதாரவிந்தத்தை நினைந்துதித்து
    பாடுமிந்தநவக்கிரக மாலைக்கன்பாய்
நீதியுடனிலக்கணந் தவறுமலிந்த
    நீணிலத்தோர் ஜாதகத்தைக்கவனிப்பதற்கு
ஜோதிடநூலெழுதுவதற் குனைதுதித்தேன்
    சுந்தரவிநாயகனே துணைசெய்வாயே.

### பராசக்தி துதி

அன்பாகஜோதிடநூ லெழுதுவதற்கு
    அம்பிகைபார்வதிகௌரி வராகிவாலை
பொன்மயமாம்ராஜராஜேஸ் வரியேகாளி
    போற்றுந்திரிபுர சுந்தரியேஅம்பா
உன்பாதம்துணையென்று நம்பியேயான்
    உறுதியுடனேயெழுதும் பாடலுக்கு
நன்மையாய்அனுக்கிரகஞ் செய்வாயென்று
    நாரணியுன்பாதத்தை பணிந்திட்டேனே.

### சித்தர்கள் துதி

சத்ததமும்லோகமெல்லாம் சுயம்புவாக
    சஞ்சரிக்குஞ்சித்தர்களே நீங்களெல்லாம்
எந்தனுக்குத்துணையிருந்து ஜோதிடசாஸ்திரத்தை
    எழுதுதற்கு ஞாபகசக்திஞானம்
தந்தருள்வீரென்றுமது பாதாரவிந்தத்
    தனைத்துதித்துஎழுதுகிறே னெந்தன்முன்பு
வந்துநல்லவரமருள்வீரென் றேதுதித்தேன்
    வாய்மைதவஞானா சித்தர்களேபோற்றி.

RangaRakes tamilnavarasam.com

## சுப்பிரமணியர் துதி

விருத்தம்

அன்பர்கள் துதிக்கின்ற குமரனே சுப்ரமண்யா
பொன்மயூரத்திலேறி பொருந்திவரும் கந்தநாதா
உன்னருளாலே யாவரும் மனோரதம் பெற்றுக்கெத்தாரும்
தன்மையாய்த்துணைசெய்வாய் நின்னடி முருகா போற்றி.

## சூரியபகவான் பலன் விபரம்

சூரியனும்மேஷத்தி லுச்சமானால்
சொல்லொணுமோ அந்த ஜாதகனுக்கு
காரியமும்ஜெயமாக எங்கும்நல்ல
கௌரவமும் தக்கநல்ல விருந்தாரும்
கீர்த்தியுமே ஞானமும் தருவதோடு
நியமமிடாமல் சுகந்தந்து கனிவுடனே
வீரமுடன்வித்யாலாபம் உத்தியோகலாபம்
விசேஷமாய்க்கிடைப்பதற் கருள்செய்வாரே. 1

உரை:—மேஷராசியில் சூரியபகவான் உச்சமாயிருந்தால் அதிக யோக பலனையும் வித்யா சம்பத்தும், கீர்த்தியும், பெருமையும் உத்தியோகபலனும் வியாபாரலாபமும் கீர்த்தியும், சம்பத்தும் மென்மேலும் பெருகி தனதான்ய சம்பத்துடனே ஜீவித்திருக்கச் செய்வார். ஆனால் சனிபகவான் சுக்கிரன் இராகு கேது சூரியனுடன் சேர்ந்திருந்தால் குரூரபலனையே செய்வார்.

## சந்திரபகவான் பலன் விபரம்

சந்திரனும்ரிஷபத்தி லுச்சமானால்
சகலவிதசம்பத்தும் பெருகிடாதும்
சுந்தரமாய்த்தேஜஸும் பொருந்தியோக
சுகசம்பத்தெய்தியே வித்யாஉத்யோகம்
பந்துமித்ரர்சேர்க்கை வர்த்தகத்தில்லாபம்
பாக்கியமெல்லாம்கிடைக்கும்ராகு கேதுசேர்ந்தாலோ
தொந்திரவால்துன்பமுற்று பரதவித்து
தொல்லுலகோர்பழித்திடவே துடிப்பர்தானே. 2

உரை:—சந்திரபகவான் ரிஷபராசியில் உச்சமானால் சகல வித சம்பத்தும் பெருகி, சரீராரோக்யமும் தேஜஸும் சுகபோக யோக பாக்கியமும், வித்தையும், புத்தியும், உத்தியோக சம்பத்தும் வியாபார லாபமும் கீர்த்தியும் வெகுவாகத் தந்து வாழ்ந்

திருக்கச்செய்வார். ஆனால் சந்திரனோடு இராகுகேது சேர்ந்திருந்தால் மனஸ்தாபமும் கஷ்டமும் கவலையும் நேரிடச் செய்து சதாகாலமும் கவலையும் துன்பமுமுண்டாகச் செய்து, பரிதவித்திடச் செய்யும். ஆனல், மற்ற கிரகங்களின் பார்வை நோக்கமும் கவனித்துத்தான் பலன் ஆராய்ந்து சொல்லவேண்டும்.

## செவ்வாய்பகவான் பலன் விபரம்

மகரத்தில்செவ்வாய் பகவான்உச்சமானல்
 மண்பூமிநிலபலமும் காணியாகி
மிகலாபமாய்கிடைக்கும் பந்துக்கூட்டம்
 மித்திரர்கள்சேர்க்கையுண்டாம் தைர்யத்தோடு
ஜெயமீதுவாழ்ந்திருப்பார் சுக்கிரன்சேர்ந்தாலோ
 செருக்களத்திலுற்றவர்போல் மனமிரண்டு
திகிலடைவார்சுகமில்லை துன்பத்தாலே
 தியங்கிவேபரதவிப்பா ரறிகுவீரே. 3

உரை:—மகரராசியில் செவ்வாய் பகவான் உச்சம் பெற்றிருந்தால் பூமிலாபமும் காணி கழனி பெருக்கமும் கிடைத்து திரவியலாபத்துடன் கீர்த்திபிரகாசமா யிருக்கச்செய்யும். பந்துக்கூட்டங்களும் சிநேகிதர் சேர்க்கையும் பொருந்தி, சுகஜீவியாய் வாழ்த்திருக்கச் செய்யும். ஆனல் சுக்கிரபகவான் செவ்வாயுடன் சேர்ந்திருந்தால் கொடிய இரணக்களத்தில் சண்டை சச்சரவு நேரிடும் போது எத்தகையதான சித்தப்பிரமையும் பயங்கரமும், சஞ்சலமும், திகிலு மேற்பட்டு கலங்கச்செய்யுமோ அவ்விதமா யிருக்கும்.

## புதபகவான் பலன் விபரம்

புதபகவான்கன்னியா ராசிதன்னில்
 பொருந்தியேஉச்சமா யிருந்துதானல்
சுதபாக்யம்தாராதி லாபத்தோடு
 சொர்னபணிபூஷணமும் மிகஉண்டாகும்
சதமானவித்தையும் உத்யோகலாபம்
 சம்பத்துண்டாகும்சனி ராகுகேதுசேர்ந்தாலோ
பதமாகதுன்பம்துயர் விசேஷமாகி
 பலதுன்பமனுபவிப்பார் கவனிப்பீரே. 4

உரை:—புதபகவான் கன்னியாராசியில் உச்சமாயிருந்தால் பொன் பொருள் சேர்க்கை வித்யாலாபம் உத்தியோகவிருத்தி வியாபாரலாபம் கீர்த்தி பெருமை புத்திர மித்திராதி களத்திரசுப மனைத்தும் உண்டாகும். ஆனல் புதபகவானுடனே சனி

ராகு கேது சேர்ந்தால் பல துன்பமும் துயரமும் நேரிடும் என்று லும் சுபக்கிரகங்கள் பார்வையானால் மத்திப பலனுயிருக்கும்.

## குருபகவான் பலன் விவரம்

குருபகவான்கடகத்தி லுச்சமானால்
　　குற்றமிலாராஜயோ கத்தைதந்து
பெருமையுடன்பொன்பொருளும் புத்ரபாக்கியம்
　　பெற்றினிதாய்வித்யாவிர்த்தி உத்யோகமேன்மை
அருமையாய்வர்த்தகத்தில் லாபம்பெற்று
　　அவனியிலேசுகவானாய் ஜீவிப்பார்கள்
பருதிசனிராகுகே திவர்களெல்லாம்
　　பார்த்தாலும்சேர்ந்தாலும் கொடுமையாமே. 5

உரை:—குருபகவான் கடகராசியில் உச்சமாயிருந்தால் ராஜ யோகமாய் ஜீவித்திருக்கும்படியான நன்மையையும் பொன் பொருள் பூஸ்திதி புத்திரலாபமும் வித்யாபிவிர்த்தியும் உத்யோக விர்த்தியும் திரவியலாபமும் வியாபாரவிருத்தியும் பெற்று சுக ஜீவியாயிருப்பதற்காகும். ஆனால், சூரியன் சனி ராகு கேது இவர்கள் பார்த்தாலும் சேர்ந்தாலும் பலவிதமாகிய துன்பமும் மனஸ்தாபமும் கஷ்டமும் கவலையுமுண்டாகும்.

## சுக்கிரபகவான் பலன் விபரம்

சுக்கிரனும்மீனத்தி லுச்சமானால்
　　சுகமானயோகபலன் மிகவுண்டாகி
சிக்கிலாவியாபார லாபத்தோடும்
　　சீரானவுத்யோக தனசம்பத்தும்
பக்குவமாய்பெறுவார்க ளானாலுந்தன்
　　பருதிசேய்ராகுகேது இவரோடுற்றால்
துக்கமிகும்கஷ்டமும் கவலையாலே
　　துன்பமுற்றுக்கலங்குவார் கவனிப்பீரே. 6

உரை:—சுக்கிரபகவான் மீனராசியில் உச்சமடைந்திருப் பாரானுல் சுகபோக சம்பத்தும் கீர்த்தியும் பெற்றிருப்பதுடன் உத்யோக சம்பத்தினாலும் வியாபார சம்பத்தினாலும் பொருள் சேகரஞ்செய்து மேன்மை யடைந்திருக்கும்படிச் செய்வார். ஆனால் அந்த சுக்கிரனுடன் சூரியன், செவ்வாய், இராகு, கேது சேர்ந்திருந்தால் கஷ்டமும் கவலையும் வறுமையும் வியாதியும் சத்துருக்களின் கலகமும், பயங்கரமும் பொருந்தி துன்புறச் செய்யும்.

RangaRakes tamilnavarasam.com

### சனிபகவான் பலன் விபரம்

சனிபகவான் துலாராசி தன்னிலேதான்
சார்ந்துச்சமாகவே யிருப்பாரானால்
கனிவுடனே தனதான்ய சம்பத்தோடும்
கௌரவமும்கீர்த்தியும் பொருந்தினாலும்
இனிதாகசுகபோக மனுபவிப்பார்
இரவிசெய்ராகுகேதுவரோடுற்றால்
முனிவுடனே சகலருக்கும் சத்ருவாகி
மூர்க்கருடன் வறுமையுற்று கலங்குவாரே. 7

உரை:—சனிபகவான் துலாராசியில் உச்சம் பெற்றிருந்தால் மகா சாமர்த்தியமும், மனதைரியமும் உற்சாகமும் பொருத்தி வித்தியாபிவிர்த்தியும் உத்தியோக மேன்மையும் கீர்த்தியும் தனதான்ய சம்பத்தும் பெருமையும் பொருள் சேர்க்கையும் புத்திரமித்திராதி களத்திரலாபமும் கிடைத்து ஆனந்தமாயிருக்கச் செய்யும். ஆனால் அந்த சனிபகவானுடனே சூரியன் செவ்வாய் இராகு கேது சேர்ந்தாலும் பார்த்தாலும் பலவிதமாகிய துன்பமும் கஷ்டமும் கவலையும் உண்டாவதுடன் வியாதியும் துயரமு முண்டாகும்.

### இராகுபகவான் பலன் விபரம்

அன்பாகஇராகுபக வான் தனக்கு
ஆனதோர்விருச்சிகத்தில் உச்சமானால்
பொன்பொருளும்பூஸ்தியும் மிகசம்பத்தும்
பொருந்தியேகீர்த்தியுடன் வாழ்ந்திருப்பர்
இன்னமுடன்சூரியன்மதியும் சம்பந்தமானால்
இனியில்லாமனக்கவலை சேர்ந்திடுமெப்போதும்
துன்பமுடன் துயரம்வந்து கஷ்டநஷ்டம்
தொடர்ந்துமிகவருமையினால் திகைப்பர்தானே. 8

உரை:—இராகுபகவான் விருச்சிகராசியில் உச்சமாயிருந்தால் வெகுவித சாமர்த்தியமும் வித்யாபிவிருத்தியும் மனோல்லாசமும் உத்யோகவிர்த்தியும், வியாபார லாபமும் பெற்று, தனதான்ய சம்பத்துடன் கீர்த்தி பிரகாசமாயிருப்பதற்காகும். ஆனால் அந்த ராகு பகவானுடனே சூரியனும் சந்திரனும் சம்பந்தமானால் பலவிதமான மனசஞ்சலமும் துக்கமும் பயங்கரமும் கஷ்டநஷ்டமும் கவலையும் வியாதியும் சூழ்ந்து கவலையால் திகிலடையச் செய்யும்.

### கேதுபகவான் பலன் விபரம்

கேதுபகவான் தனுச்சிய ராசிதன்னில்
கெம்பீரமாகவே உச்சமானால்

ஓதுபுகழ்கல்வியும் ஞானமார்க்கம்
ஒப்புவமையில்லாம லதிகரித்து
ஏதுங்குறையில்லாமல் தனவானுகி
எவர்களுமேபுகழ்ந்துரைக்க ஜீவிப்பார்கள்
நீதுவரும்சூரியன்மதியும் கேதோடுற்ருல்
தியங்கியேமனங்கலங்கி துடிப்பர்தானே. 9

உரை:—கேதுபகவான் விருச்சிகராசியில் உச்சமாயிருந்தால் கல்வியும் ஞானமும் கீர்த்தியும் பெருமையும் பொருந்தி வித்யாபிவிருத்தியும் உத்தியோக மேன்மையும் வியாபார லாபமும்பெற்று தனதான்ய சம்பத்துடன் பந்துமித்திர களத்திர புத்திரபாக்கியத்துடனே மேன்மையாய் ஜீவித்திருப்பதற்காகும். ஆனால் சூரியன் சந்திரன் கேதுபகவானுடனே சேர்ந்திருந்தால் மனக்கலக்கமும், கவலையும், சஞ்சலமும், சோர்பவும் மனச்சோர்வும் பொருந்தி மனைவி மைந்தர் சுற்றத்தார் பந்து மித்திரர்களும் மனவெறுப்பாகவே யிருப்பார்கள்.

## இராகு கேதுக்களின் பொதுப் பலன் விபரம்

அன்பானமேஷம்கடகம் கன்யாராசி
ஆனதோர்விருச்சிக மகரராசிதன்னில்
இன்பாகராகுகே திருப்பாராகுல்
இராஜயோகத்தைப்போல் ஜீவித்திருப்பார்கள்
பொன்பொருளும்ஆஸ்தி பூஷ்திதிகளெல்லாம்
பொருந்தியே சுகஜீவியாகவாழ்வார்
நன்மையாய்லக்கினபலன் ஆராய்ந்தன்பாய்
நவிலுவீர்ஜோதிட சாஸ்திரவல்லோரே. 10

உரை:—மேஷம், ரிஷபம், கடகம், கன்னி, விருச்சிகம் மகரராசிகளாகிய இந்த ஸ்தானங்களிலெங்கேனும் இராகு கேதிருப்பாரானல் இராஜயோகத்தை அனுபவிக்கும்படியான சக்தியும், தனத்தான்ய சம்பத்தும், தீரமும், மனோற்சாகமும், பெருமையும், கீர்த்தியும், ஞானமும், புத்திரமித்ராதி களத்திர லாபமும், உத்தியோக விர்த்தியும், வியாபார லாபமும் பொருந்தி மிகவும் கீர்த்தி பிரகாசமாய் ஜீவித்திருக்கும்படியாய்ச் செய்வார்கள்.

## நவக்கிரகங்களின் ஸ்தான பலன்

தினகரன்செய்மால்பொன்னன் சுக்கிரனேடும்
திங்கள்சனிராகுகே தொன்பதுபேராஞேர்
மனமகிழகேந்திர ஸ்தானம்கோணம்
மற்றுமுள்ளசுபக்ஷேத்ரம் அசுபக்ஷேத்ரம்

இனமானஆட்சிஉச்சம் பகைநட்புநீச
    இடத்திலிருந்தாலவர்கள் கொடுக்கவல்ல
ஈனமானபலாபலனை தெரிவிக்கின்றேன்
    கவனமாயறிகுவீர் ஜோதிடவல்லோரே. 11

உரை:—சூரியன், சந்திரன், செவ்வாய், புதன், குரு, சுக்கிரன் முதலானவர்களும் சனி ராகு கேதுக்களும் கேந்திரஸ்தானம் கோண திரிகோண ஸ்தானம், நட்பு ஆட்சி உச்சம் பகை நீசஸ்தானம் ஆகிய ஸ்தானங்களிலிருந்தால் கொடுக்கும் பலாபலனை விபரமாய் கவனித்து இலக்கினபலன் இராசிபலனையும் ஆராய்ந்து திசாபுத்தி பலனையும் சோதித்து ஜாதகர்க்கு பலன் சொல்லவேண்டும்.

## நவக்கிரக சேர்க்கைபலன் விபரம்

சூரியன்சந்திரனும் குருவும்சேர்ந்து
    சுகமாகடகத்தி லிருப்பாராகில்
வீரியமாய்மனோற்சாக மதிகசித்து
    விரும்பியதோர் காரியங்கள்சித்தியாகும்
காரியுடன்பருதியும்சேய் சிம்மத்துற்றால்
    கவலையுடன்பயங்கரமும் திகிலுண்டாகி
பாரிலுள்ளோரெந்நாளும் பரிகசித்து
    பழித்திடவும் வறுமையால்கலங்குவாரே. 12

உரை:—சூரியபகவானும், சந்திரபகவானும், குருபகவானும் கடராசியிலிருந்தால் மனோற்சாகமும், தைரியமும், கீர்த்தியும் பொருந்தி சமர்த்தராய், பொன் பொருள், பூஸ்திதியுடன் ஜீவித்திருப்பார்கள். ஆனால் ஆதித்தனும் சனியும் சிம்மராசியிலிருந்தால் சதாகாலமும் கவலையும், கஷ்டமும், மனப்பயங்கரமுமிருந்து, துயரத்திலாழ்ந்து துடிப்பார்கள். ஆனால் இலக்கின பலனையும் ஆராய்ந்து பார்த்து விபரம் விபரமாய் கணிதநூல் கணக்கெடுத்துப் பார்த்து பலன் சொல்லவேண்டும்.

## சூரியன் ஆட்சிஸ்தான பலன்

சிம்மத்திற்சூரியனும் ஆட்சிபெற்று
    சீரகமேஷத்தில் குருவிருந்தால்
தம்முடையபலன் தருவாரெவ்வாறென்னில்
    தனதான்யசம்பத்தும் கீர்த்திலாபமும்
அம்புவியோர்அதிசயிக்கத் தருகுவார்கள்
    ஆடைஆபரணமெல்லாம் மிகவேதந்து
செம்பொன்னும் மனைகாணிபூமிலாபம்
    சேகரித்துபெருமையுடன் ஜீவிப்பாரே. 13

RangaRakes tamilnavarasam.com

உரை:—சிம்மராசியில் சூரியன் ஆட்சியாயிருக்கும்போது அவர்மீது மேஷத்திலிருந்து குருபகவான் பார்வை செலுத்தினால் அறிவு விருத்தி, வித்யாலாபம், கீர்த்தி, பெருமையடைந்தும் விளங்கி சுகானந்தமாய் தனந்தான்ய சம்பத்து, ஆடை ஆபரணம் பூமிலாபமும் கீர்த்தியும் பெற்று சுகஜீவியாயிருப்பதற்காகும்.

## இராகு கேதுக்களுடன் சேர்ந்த சூரியன் பலன்

பருதியுடன் இராகுகேதுவர்கள்சேர்ந்து
பகையுடனேயிருந்தாலே கொடுமைசெய்து
தருகுவார்வெகுதுன்பம் வறுமையோடு
தரணியிலே காண்போர்க்கு பகையாய்மக்கள்
பொருளில்லாமனத்துயரால் கலக்கமுற்று
புத்திதடுமாறியே உயிரிழக்க
கருதியேசதாகாலம் மனத்திகைத்து
கலங்குவார்துயரத்தி வாழ்ந்தொருநாளும்.

உரை:—தினகரனெனும் சூரியனுடன் இராகு கேது சேர்ந்திருந்தால் சகலருக்கும் பகையாகி துன்பமும் துயரமும் வறுமையுமடைந்து பலவிதமாய்க் கலங்குவார்கள் ஆனால் தரணியில் வாழும் பலவிதமான மனிதர்கட்கும் சத்ருவாய் அமைந்து தனது வாயினால் சொல்லும் வார்த்தையே பகையாய் விளைந்து, சண்டை சச்சரவும் கஷ்டநஷ்டமும் பொருந்தி துடிதுடித்துக் கலங்கி மனச்சோர்வடைந்து சோம்பலும் மனத்திகிலுமுண்டாகி கலவரமாய் புத்தி தடுமாற்றத்தினால் தியங்கி கலங்கி திக்பிரமையடைந்து துடிதுடிப்பார்கள்.

## சந்திரன் கடகத்தில் ஆட்சிபெற்ற பலன்

சந்திரன்கடகத்தில் ஆட்சியாயிருக்க
ஜன்மநட்சத்திரப்பூசமாயிருந்தால்
பந்தபாசங்களில்லா ஞானத்தோடும்
பக்தியும்சாந்தமும் பொருந்திநல்ல
சுந்தரமாய்நற்குணமும் விவேகத்தோடும்
சூழ்புவியில் ஞானவானென்றுரைக்கும்
அந்தமிகும் கீர்த்திப்பிரகாசமாக
அவனியிலேவாழ்ந்திருப்பாரறிகுவீரே. 15

உரை:—சந்திரபகவான் கடகராசியில் ஆட்சி பெற்றிருக்கும் போது ஜன்ம நக்ஷத்திரம் பூசமானால் நற்குணமும் வித்தையும் புத்தியும் ஞானமும் நல்லறிவும் வல்லமையும் பொருந்தி, அடக்கம் பொறுமை தயாளம் ஜீவகாருண்யமமைந்த நற்குணத்

RangaRakes tamilnavarasam.com

னுடன், காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாச்சரியம், இடும்பை வெட்கை யென்னும் அஷ்டவித துர்க்குணங்களுமில்லாமல், தன்மனதுடனே பொன்பொருள் பூஸ்திதியுடன் சுஜீவியா யிருக்கும்படியா யமைந்திருக்கும்.

### சந்திரனுடனே இராகு கேது சேர்ந்த பலன்

மதியுடனே இராகு கேதுக்களானோர்
 மன்னுதுலாராசியில் இருந்திட்டாலும்
எதிரியாய்விருச்சிகத்தி லிருந்திட்டாலும்
 எத்ததியும்கலவரமும் கஷ்டமாகும்
நிதியிலாவறுமைபிணி துயரமெல்லாம்
 நேர்ந்துதுன்பமும்சூழ்ந்து கொடுமைசெய்யும்
அதிகதுன்பமும்மிகுந்து வியாதியாலே
 அலைச்சலுற்றலைவார்கள் கவனிப்பீரே. 16

உரை:—சந்திரன் இராகு கேதுக்களுடனே சேர்ந்து துலா ராசியிலிருந்தாலும் அல்லது சந்திரனுக்கு நீசஸ்தானமாகிய விருச்சிக ராசியிலிருந்தாலும் பலவிதமாகிய கஷ்டமும் கலவரமும் திகிலும் பயங்கரமும் வறுமையும் சஞ்சலமும் துன்பமும் துயரமும் அலைச்சலும் உண்டாகி, பலவிதமான கொடுமைகளும் நேரிட்டு துயரப்படச் செய்யும். ஆனால் இலக்கினமும் கிரகங்கள் பார்வை சம்பந்தமும் சோதித்துணர்ந்து பலன் சொல்லவேண்டும்.

### செவ்வாய்பகவான் மேஷ விருச்சிகத்திலிருந்த பலன்

சிக்கிலாமேஷவிருச் சிகத்தில்செவ்வாய்
 சிறப்பாகயிருந்தாலே யோகமாகும்
பக்குவமாய்குருகடகந் தனிலிருந்து
 பார்த்தாலேபூமிபலன் கிடைத்தெந்தாளும்
தக்கபடிஆஸ்திபூஸ்திதியோ டன்பாய்
 தாரணியில்சிறப்பாக வாழ்ந்திருப்பார்
லக்கினத்தையும்கணித்து திசையாராய்ந்து
 லக்ஷணங்கண்டுரைப்பீர் ஜோதிடவல்லோரே. 17

உரை:—மேஷராசியிலாகிலும் விருச்சிகராசியிலாகிலும் செவ்வாய் பகவானிருந்தால் மிகவும் மேன்மையான தனலாப யோகமாயிருக்கும் ஆனால் குருபகவான் கடகத்தில் உச்சம்பெற்று பஞ்சமஸ்தான பார்வையாக விருச்சிக செவ்வாயைப் பார்த்தால் பொன் பொருள் பூமி லாபம், கீர்த்தியும் தனதான்ய சம்பத்தும் விசேஷமாய் பெருகி பந்துமித்திர களத்திராதியர்கள் சம்பத்

RangaRakes tamilnavarasam.com

துடனே சதா காலமும் ஜீவித்திருப்பார்கள். ஆனால் இலக்கின கணிதத்தைக் கணக்கெடுத்து இராசிகணிதமும் ஆராய்ந்து நக்ஷத்திர பாகத்தின்படியே திசாபுத்தி பிரித்து பலன் சொல்ல வேண்டும்.

## கடகராசியிலிருந்த செவ்வாய் பலன்

கடகத்திலேசெவ்வாய் நீசமாக
கதிர்இராகுசேர்ந்திருந்தால் கொடுமையப்பா
திடமில்லைஜாதகர்க்கு மனதில்துக்கம்
திறமையில்லாசோம்பலுடன் திகைத்திருப்பார்
படபடத்தேஎவரேனும் பேசக்கேட்டால்
பயங்கரமாய்கண்களில்நீர் சொரிந்துக்கொண்டு
விடநாகன்தனைக்கண்ட தேரையைப்போல்
விசனமாய்துயருற்று திகைப்பார்தானே 18

உரை—கடகராசியில் செவ்வாய்பகவான் நீசமாயிருக்கும் போது சூரியனும் இராகுபகவானும் அவருடன் சேர்ந்திருந்தால் மிகவும் குரூரமான கொடுமையும் துன்பமும் துயரமும் மனக்கவலை யும் சூழ்ந்து அயரப்படச் செய்யும்படியான கஷ்டமும் கவலையு மடைந்து துயரப்படச் செய்யும். அன்றியும் எவர்களானாலும் அதட்டி மிரட்டிப் பேசினால் மன பயங்கரமடைந்து பாம்பைக் கண்ட தேரையைப்போல் திகிலடைந்து கண்ணீர் சொரிந்து கலக்கமடைந்து துயராற் கலங்கி துக்கிக்கும்படியான கவலை யுண்டாகும்.

## புதன் கன்னியாராசியில் சூரியனுடனிருந்த பலன்

கன்னியிலேபுத னுச்சமாயிருக்க
கதிரவனும்சந்திரனும் சேர்ந்திருக்கும்போது
தன்னயமாய்பிறந்தோர்க்கு வித்யாவிசேஷம்
நடனசாஸ்திரவித்தை வியாபாரத்தால்
பொன்பொருளும்பூஸ்திதியும் சரீராரோக்யம்
பொருந்தியேபெருமையாய் வாழ்ந்திருப்பார்
அன்பாகமற்ற கிரகங்கள்நோக்கை
ஆராய்ந்துபலனுரைப்பீர் ஜாதகர்க்கே. 19

உரை—கன்னியாராசியில் புதன் உச்சமாயிருக்கும்போது சந்திரனும் சூரியனும் வந்து புதனுடனே சேர்ந்திருந்தால் வித்யாபிவிருத்தியும், சங்கீதஞானமும் சாஸ்திர ஆராய்ச்சியிலும் சிறந்த வித்வானாக விளங்கி காண்போர் புகழ்ந்துரைக்கும் கீர்த்தி வந்தனாகி சுகானந்தமாய் திரவியசம்பத்துடனே வாழ்ந்திருந்து பொன் பொருள் பூஸ்திதியுடன் நன்மையான பந்துமித்திர ளைத்திராதியுடனே சுகானந்தமா யிருப்பதற்காகும்.

RangaRakes tamilnavarasam.com

### மீனராசியில் இராகுடனிருந்த புதன் பலன்

புத்தியெனும்புதபகவான் மீனந்தன்னில்
பொருந்தியேராகுவுடன் சேர்ந்திருக்க
சிந்தைநொந்துருகியே விசனத்தாலே
சிறிதேனும்சுகமில்லா கஷ்டத்துவீழ்ந்து
அந்தகாரத்திற்சிக்கி பல்லவதைப்போல்
ஆறுதலுற்ற திகைப்பாரப்பா
இந்தவிதகலக்கமுண்டு சிவனைபூஜித்தால்
இன்பமுடன்வாழ்வார்கள் சுகமாய்த்தானே. 20

உரை:—மீனராசியில் புதன்பலமற்று நீசமாயிருக்க அவருடன் இராகுபகவான் சேர்ந்திருந்தால் பலவிதமான மனசஞ்சலமும் கஷ்டமும், கவலையும், துன்பமும், துயரமும்நேரிடும். ஆனால் சுபக்கிரகங்களின் பார்வையும், இலக்கினபலனும், மற்ற கிரகங்களின் ஸ்தானபலனும் ஆராய்ந்துணர்ந்து பலன் சொல்ல வேண்டும்.

### மகரராசியிலிருக்கும் குரு பலன்

மகரராசியில்குருவும் நீசமாக
மந்தனும்விருச்சிகத்தி லிருந்துபார்க்க
வெகுதுன்பம்ஜாதகர்க்கு நேரிட்டேதான்
வெந்தணல்போல்மனங்கலங்கி நிலைத்துசோர்ந்து
சுகமிலாகஷ்டாளி யாயிருந்து
துன்பமெத்தஅநுபவிப்பா னென்றிட்டாலும்
புகழ்மேவும்லக்னபலன் தனையாராய்ந்து
பொருத்தமாய்ஜாதகர்க்கு பலன்சொல்வீரே. 21

உரை:—மகரராசியில் குரு நீசமாயிருக்கும்போது சனிபகவான் விருச்சிகத்தில் பகைபெற்று மூன்றாம்வீட்டுப் பார்வையாக மகரத்தைப் பார்த்தால் அந்த ஜாதகன் மனவருத்தமும் மந்தமதி வாய்த்தவனுமாய் மனக்கலக்கமுற்று கஷ்டாளியாக ஜீவித்துக் கொண்டிருப்பான். ஆகையால் இலக்கின பலனையும் மற்ற கிரகங்கள் நின்ற ஸ்தானபலனையும் ஆராய்ந்துணர்ந்து திசையின் குறிப்புணர்ந்து பலன் சொல்லவேண்டும்.

### மீனராசியிலிருக்கும் சுக்கிரன் பலன்

மீனத்தில்சுக்கிரனு முச்சமாகி
வியாழனும்ஆட்சியா யிருந்தாரானால்
வானவர்கள்புகழ்ந்துரைக்கும் வேதசாஸ்திரம்
வையகத்தோருக்குணர்த்தும் ஆசானுவி

RangaRakes tamilnavarasam.com

ஞானமுடன்வெகுகீர்த்தி யாய்விளங்கி
ஞாலத்தில்தனவானு யிருப்பதாகும்
ஈனமுடன்சேய்ரவியும் புகரோடுற்றால்
உலுத்தகுண தரித்திரனு யிருப்பார்தானே. 22

உரை:—மீனராசியில் சுக்கிரன் உச்சம்பெற் றிருக்கும்போது குருபகவானும் ஆட்சியாய் சேர்ந்திருந்தாரானால் பிறந்த ஜாதகன் வித்யாபிவிர்த்தியடைந்தவனாய் சதுர்வேதமுணர்ந்த சாஸ்திரக்யானியாய் உலகத்திலுள்ள மானுக்கர்களுக்கு ஞானோபதேசஞ் செய்யும் குருவாய் விளங்கி கீர்த்திப்பிரகாசமாய் வெகு பொருள்தேடி, திரவியவந்தனாய் ஆசார அனுஷ்டானத்துடன் கீர்த்திப்பிரகாசமாய் ஜீவித்திருப்பதற்காகும். ஆனால் சூரியனும் செவ்வாயும் சுக்கிரனுடனே சேர்ந்திருந்தால் மந்தபுத்தியும் துர்க்குணமும் பொருந்திய உலுத்தனாய் சகலருக்கும் பகையாகி வறுமையாளனு யிருப்பதற்காகும்.

## துலாராசியிலிருந்த சனி பலன்

சனிபகவான் துலாவிலுச்சமாயிருக்க
சார்ந்துபுகர் ஆட்சியாயிருப் பாரானால்
கனிமொழிமாதர்சேர்க்கை பந்துமித்ரர்
கௌரவமாய்புகழ்ந்துரைக்கும் தனவானாகி
இனிதாகசகலருக்கும் நல்லோராக
இப்புவியில்வாழ்ந்திருப்பா ரென்றிட்டாலும்
தினகரனும்இராகுசேர்த் திருப்பாரானால்
திகைத்துமனச்சோர்வுற்று கலங்குவாரே. 23

உரை:—சனிபகவான் துலாராசியி லுச்சமாயிருக்கும்போது சுக்கிரனும் ஆட்சியாயிருந்தால், தனதான்ய சம்பத்துடன் கீர்த்திப் பிரகாசமாயிருப்பதுடன் அழகான பெண்களின் சேர்க்கையும் பந்துமித்திரர் கூட்டத்தாரும் தன்னைப் புகழ்ந்துரைக்கும்படியான கௌரவமும் பொருந்தி யிருப்பதற்காகும். சூரியனும் இராகும் சேர்த்திருந்தால் துன்பமும் துயரமுமா யிருப்பதற்காகும்.

## விருச்சிகராசியிலிருந்த இராகு கேது பலன்

விருச்சிகத்தில்ராகு கேதுக்களானோர்
விருப்பமுடனுச்சமா யிருக்கும்போது
அருமையுடன்குருபகவான் விருச்சிகத்தில்
ஆட்சிபெற்றிருந்தாலே பூமிலாபம்
பொருளுடனேபொன்பணிகள் ஆடைபூண்டு
போற்றுவார்பந்துமித்ர கூட்டமெல்லாம்
பருதிசனிஇராகு கேதுடனேசேர்ந்தால்
பலதுன்பம்விளையு மென்றுபுகலுவீரே. 24

RangaRakes tamilnavarasam.com

உரை:—விருச்சிகராசியில் இராகுபகவானுகிலும், கேது பகவானுகிலும் உச்சமாயிருக்கும்போது செவ்வாய் பகவான் ஆட்சியாயிருந்தால் தனதான்ய சம்பத்தும், பூமிலாபமும், பொன் பொருள் ஆஸ்தி பூஸ்திதியும் பெற்று, மிகவும் கீர்த்தியாய் பந்துமித்திர கூட்டத்தாரெவ்வோரும் புகழ்ந்துரைக்கும்படியாய் ஆளடிமையுடன் ஆனந்தமாய் வாழ்ந்திருப்பார்கள். ஆனல் சூரியபகவானும், சனிபகவானும் அவருடனே சேர்ந்திருந்தால் பந்துமித்திரர் பகையும், பலவிதமான வம்பும், சண்டைசச்சரவும், கோர்ட்வியாஜ்யத்தினுலும் துன்பமும், துயரமும், கஷ்டமும், கவலையும் நேரிட்டு கலகத்திறல் கலங்குந் தன்மையாயிருக்கும்.

## நவக்கிரக ஆருடம்

அன்புடனே ஆருடங்கேட்கவந்தோர்
அவர்கள்வாயாலெக்கிழமை சொல்லக்கேட்டு
பொன்புகர்சேய்மால்மந்தன் பருதிதிங்கள்
பொருந்தியவாரத்திலொன்றைச் சொல்வாராகில்
தன்மையாயவரவர்க ளிருந்தராசி
தனையறிந்துபலாபலனை யாராய்ந்தன்பாய்
நன்மைதுன்மை இன்னதென கேட்போருக்கு
நவிலுவீர்ஆருட பலனைத்தானே. 25

உரை:—எவர்களாகிலும் ஆருடங் கேட்கவந்தால் அவர்கள் வாயினுல் ஓர் கிழமையை சொல்லக்கேட்டுத் தெரிந்துகொண்டு, அந்தந்த கிரகங்களின் பலமும் குணமும் செயலும் பொருந்திய ஆருட பலனுக்கிசைந்த நன்மை துன்மையை கவனித்து பலன் சொல்லவேண்டும். அதன் காரணமும், விஷயங்களின் விபரமும் இதற்கடியில் விபரமாய்க் குறித்திருக்கின்றதை கவனித்துரைப்பீர் ஜோதிட கணிதவல்லோரே.

## ஞாயிற்றுக்கிழமை பலன் விபரம்

ஆருடங்கேட்கவந்தோர் ஞாயிறென்று
அன்புடனேதானுரைத்த பலனைக்கேளு
பாருலகிலுத்யோக வியாபாரத்தின்
பலன்கேட்கவந்தாயென் றுரைப்பாய்நீயே
சீருடனே நடக்கும்சில தினத்திற்குள்ளே
சித்திப்பாய்சூரியனை ஆதிவாரம்
காருண்யமாகவே நினைத்ததெல்லாம்
கைகூடும்படிசெய்வா ரென்றுசொல்லே. 26

RangaRakes tamilnavarasam.com

உரை:—ஆருடம் கேட்க வந்தவர்கள் ஞாயிற்றுக்கிழமை யென்று சொல்வாரானால், ஜீவிப்பதற்கிசைந்து உத்யோகஞ் செய்வதற்கோ அல்லது வர்த்தகஞ் செய்வதற்கோ நினைத்திருக் கின்றாய். ஆனால் அது தற்சமயம் நடக்காது இன்னும் சிறிது நாட்கள் சென்றால் நிறைவேறும். இந்தக் காரியம் ஜெயம் பெறு வதற்காக ஞாயிற்றுக்கிழமையில் சூரியபகவானுக்கு தேனுந் தினைமாவும் ஆராதனை செய்து பிரசாதம் புசித்து விரதமிருந்து, அன்றிரவு சூரியனுக்கு அர்ச்சனை செய்தால் காரியசித்தியாகும் படியாய் கருணைபுரிவார்.

## திங்கட்கிழமை பலன் விபரம்

*திங்களென்றால் சந்திரன் பேரசுமப்பா*
*தியங்கிமயங்காம லாரூடந்தான்*
*சங்கையிலாதுரைத்திடுவோர் வந்தகார்யம்*
*சந்தோஷசுபகார்யம் விவாகந்தானும்*
*மங்களமாய்நடக்குமோ நடவாதோவென்று*
*மனதினிலேநினைத்துவந்தா யுந்தனுக்கு*
*கங்கணபிராப்தமு மாச்சுதென்று*
*கழறுவாய்துரிதமாய் முடியுமென்றே.* 27

உரை:—திங்கட்கிழமை யென்றுரைத்தால் சந்திரனாகும். அவர் சுபகாரியம் முடிப்பவராகையால், ஆருடங் கேட்க வந்த வர்கள் கலியாண காரியத்தைக் குறித்து கேட்கவானார்களென் றும், அது எவ்விதத்திலும் முடியுமென்றும் கங்கணபிராப்தியா யிருக்கிறதென்றும் விபரமாய்ச் சொல்லவேண்டும்.

## செவ்வாய்க்கிழமை பலன் விபரம்

வந்தோர்செவ்வாயென்று சொல்வாரானால்
வாதுவழக்குக்கோர்ட்டு வியாஜ்யமென்றும்
பந்துக்கள்கலகமென்றும் பூமிபொன்னும்
பகரும்உத்யோக வர்த்தகமென்றோது
இந்தவிதம்கேட் டொன்றைச்சொல்வாராகில்
இக்காரியம்முயற்சிசெய்தா லாகுமென்றும்
செந்தில்வேலவனைபூசித் தாராதித்து
செவ்வாய்க்கும் அர்ச்சித்தால்சித்தியாமே. 28

உரை:—ஆருடங் கேட்க வந்தவர்கள் செவ்வாய்க்கிழமை என்று சொன்னால் பூமி பொன் பொருள் வியாபாரத்தைக் குறித் துக் கேட்க வந்தீர்களென்றும், உத்தியோகம் தொழில் முதலான வைகளைக் குறித்து கேட்டீர்களென்று சொன்னால் இவைகளில்

RangaRakes tamilnavarasam.com

எது நினைத்து வந்தார்களோ அவைகள் கலக்கத்துடன் முடியு மென்றும் சிவசுப்பிரமணியரைப் பூசித்து செவ்வாய்க்கு அர்ச்சனை செய்தால் காரியசித்தி யாகுமென்றும் சொல்லவேண்டும்.

## புதன்கிழமையின் பலன் விபரம்

ஆருடங்கேட்கவந்தோர் புதனென்றேதில்
அவர்மனைதில்மண்பெண் பொன்நினைத்தாரென்றும்
ஊருக்குபிரயாண மிவைகள்தன்னை
உன்மனதில்நினைத்துவந்தா யென்றுசொல்லு
சீருடனேஇவற்றிலொன்றை நினைத்தோமென்றால்
சிறப்பாகநடக்குமென்றும் ஜெயமென்றேது
காருண்யதிருமாலை பூசித்தாலே
கைகூடுமென்றுரைத்து அனுப்புவாயே. 29

உரை:—ஆருடம் கேட்க வந்தவர்கள் புதன்கிழமை யென்று சொன்னால் அவர்கள் மனை, பூமி, கன்னிகை, பொருள், ஊருக்குப் பிரயாணம் இவைகளிலொன்றை நினைத்து வந்தார்களென்றும், தாமதமாய் நடக்குமென்றும், விஷ்ணுபூஜை செய்து புதனுக்கு அர்ச்சனை செய்தால் காரியசித்தியாகுமென்று சொல்லுவாய்.

## குருவாரத்தின் பலன் விபரம்

சொன்னவாரம்வியாழக் கிழமையானால்
சொர்னபணிஉத்யோகம் வியாபாரத்தை
நன்னயமாய்கேட்கவந்தா யென்றுசொல்நீ
நவின்றதிலொன்றுறுதியா யுரைப்பாரப்பா
பன்னுமிந்தகாரியம் பலிக்குமென்று
பவுமுடனேயுரைப்பா யோர்மாதத்தில்
உன்னுடையசிநேகிதனால் நடக்குமென்று
உரைத்திட்டாலுண்மையென நம்புவாரே. 30

உரை:—ஆருடம் கேட்க வந்தவர்கள் வியாழக்கிழமை என்று சொன்னால் அவர் நினைத்த காரியம் ஆபரணங்கள் செய்வதற்கென்றும், உத்தியோகம் தொழில் வியாபாரமென்றும் சொல்வாய். அவைகளில் எவைகளிலாவது ஒன்றை நினைத்து வந்தோம், அது நடக்குமோ நடக்காதோ, எத்தனைநாள் பொறுத்து நடக்குமென்று கேட்டால் நீ நினைத்த காரியம் பூனூல் தரித்தவனாலும் அழகான பருத்த சரீர முடையவனாலும் நிறைவேறும். ஒருமாதஞ் சென்ற பிறகுதான் காரியசித்தி யாகுமென்றும், அதற்கு அடிக்கடி நீ முயற்சி செய்துகொண்டிருந்தால் கஷ்டமில்லாமலும் கவலையில்லாமலும் நிறைவேறுமென்றும் சொல்வாய்.

RangaRakes tamilnavarasam.com

## வெள்ளிக்கிழமையின் பலன் விபரம்

சொல்லுமென்று ஆருடம் கேட்கவந்தோம்
　　சுக்கிரவாரத்தின்பேர் சொல்வாராகில்
நல்லபெண்தனைநினைத்தாய் வர்த்தகமுத்யோகம்
　　நகைசெய்தனிவைகளி லொன்றுண்மையென்றால்
பல்தாளொன்றெண்ணுதே பத்துநாட்குள்
　　பலுக்குமப்பாநீநினைத்த காரியம்தான்
இல்லாளும்நீயுமாய் பக்தியாக
　　இலஷ்மியைபூஜித்தால் காரியசித்தியென்றோதே. 31

உரை:—ஆருடம் கேட்கவந்தவர்கள் வெள்ளிக்கிழமை என்று சொன்னால் நீ அழகிய பெண்மீது வைத்த ஆசையாலும், வர்த்தகம் செய்வதற்கென்றும் மனதில் நினைத்துவந்தா யென்றுரைப்பாய். அவர்களதிலொன்றை நினைத்து வந்தோம் காரியம் சித்தியாகுமாவென்று கேட்டால் நினைத்த காரியம் பத்து நாளைக்குள் முடியும். ஆனால் இலஷ்மிவிரதம் அனுஷ்டிப்பாயென்று விபரமாய்ச் சொல்வாய்.

## சனிக்கிழமையின் பலன் விபரம்

வந்தாருடங்கேட்போர் சனிவாரத்தை
　　வழுத்தினுலவர்மனதில் நினைக்கசேதி
ஏத்தஸ்தானத்திலுத் யோகங்கிடைக்கும்
　　என்னதொழிலிப்போது வாய்க்குமென்றும்
சித்தித்தாய்வர்த்தகத்தின் நினைவுயென்றும்
　　சீக்கிரத்தில்நீநினைத்த காரியமெல்லாம்
பத்துக்கள்ஒருவனால் நடக்குமென்று
　　பகருவாய்ஆருடங்கேட்க வந்தோர்முன்னே. 32

உரை:—ஆருடங் கேட்க வந்தோர் சனிக்கிழமையென்று சொன்னால் கைத்தொழிலேனும் உத்தியோகமாகிலும் வர்த்தகஞ் செய்வதற்காகிலும் நினைத்து வந்தீர்களென்று சொல்லி, அவைகளில் எதை நினைத்து வந்தோமென்று சொல்லுகின்றீர்களோ அதை ஸ்திரப்படுத்திக்கொண்டு நீ நினைத்த காரியம் உமது பத்துக்களில் ஒருவனால் சித்தியாகுமென்றும், சனிக்கிழமை தினத்தில் விரதமிருந்து நவக்கிரக பூஜைசெய்து காரியசித்தி செய்துக்கொள்ள வேண்டுமென்றும் சொல்வாய்.

RangaRakes tamilnavarasam.com

## ஆரூட லக்ஷணமும் பலன் சொல்லும் விபரமும்

இவ்விதமாய் ஆருடங் கேட்கவந்தோர்
இசைந்தவாரத்தின்பேர் சொல்வரைப்[illegible]
ஒவ்வியேகிரகநிலை தனையாராய்ந்து
ஓதுகின்றபலனுடனே சமயம்போல
எவ்விதமாயந்தந்தக் காரியங்கள்
எத்தெந்தகாலத்தில் நடக்குமென்றும்
அவ்வவ்விதமாகவே ஆருடசாஸ்திரம்
ஆராய்ந்துநடக்கின்ற பலன்சொல்வீரே.

உரை:—ஜோதிடநூல் சாஸ்திரத்தில் [illegible] ஆசையுடன் ஆருடங் கேட்கவந்தவர்களின் [illegible] பின் பேரைக்கேட்டு அந்தக் கிழமைக்கிசைந்த [illegible] ன் நினைத்த காரியம் அமைந்திருந்தாலும் [illegible] வரும் காலத்தையும் குறிப்பித்துச் சொல்வதுடன் [illegible] ாய் அந்த நவக்கிரகங்களாகிய சூரியன், சந்திரன், செ[illegible] தன், குரு, சுக்கிரன், சனி யென்னும் இந்த [illegible] மேஷம், ரிஷபம், மிதுனம், கடகம், சிங்கம், [illegible] ரிருச்சிகம், தனுசு, மகரம், கும்பம், மீன மென்னும் [illegible] ாசியி லெந்தராசி ஸ்தானத்தி லிருக்கின்றதே [illegible] வனித்துத்தான் ஆருட பலன் சொல்லவேண்டும்.

நவக்கிரகமாலை முற்றிற்று.

அப்பாவு ஐயரால் அருளிச்செய்யப்பட்ட

# தாண்டவமாலை

## நூற்பெருமை

வெண்பா

ஓரைமுதலாவுரைக்குமவையாவும்
ஓராயிரமுதலோர்ந்துரைக்க—பாரிவிந்தத்
தாண்டவமாலைப்படியேதக்கவிசேடபலன்
ஆண்டருள்விராறறிவினீர். 1

உரை:—நிறைந்த வறிவினையுடைய புலவர்களே பூமியி னிடத்தில் இலக்கினமுதலாகச் சொல்லப்பட்ட பாவங்கள் சகலத் தையும் ஓராசாரம் பாராசாரிய முதலான நூற்களை ஆராய்ந் தறிந்து செய்த தாண்டவமாலை யென்னும் இந்நூற்படியே தகுந்த விசேடமாயிருக்கும் பலாபலன்களை அறிந்தருள்வீர்கள்

கருத்து:—ஓராயிரமுதலென்றது இலக்கின முதற் பன்னி ரண்டு பாவங்கள் கேந்திர திரிகோணங்கள் திசாபுத்திகள் இவை முதலெனக் கொள்க.

## கோள்களின்நோக்கம்

பார்ப்பரேமெல்லாரும் பங்குருசேய்மூன்று [நான்
பார்ப்பத்தைத்தொன்பானுன்பன்னியகோள்—சேர்ப்புறு.
கெட்டுமேபார்ப்பரெழிலாரிளங்கொங்கை
மட்டவிழ்பூங்கோதாய் மதித்து 2

உரை:-அழகுநிறைந்த விளமைதங்கிய ஸ்தனங்களையும் தேன்விரித்த மலர்கள் பொருந்திய கூந்தலையுமுடையவளே! எல்லாக் கோள்களும் தாந்தாம் இருக்குமிடத்துக்கு 7-ம் இடத் தைப் பார்ப்பார்கள். இவைகளில் விசேடமாய் சனி வியாழம் செவ்வாய் இம் மூவரும் நிரணிறைய 3-இடம் 10-ம் இடம் 5-ம் இடம் 9-ம் இடம் 4-ம் இடம் 8-ம் இடங்களைப் பார்ப்பார்கள்.

கருத்து:—சனி 3-10-குருவுக்கு 5-9-செவ்வாய்க்கு 4-8-விசேட பார்வை யென்றறிக.



RangaRakes tamilnavarasam.com

## எல்லாக் கோள்களுடைய நன்மை துன்மை

ஐந்தொன்பானதிபராயவர் வசினுமவர்
அந்தமிலின்பப்பலனையாற்றுவார்—அந்தமுறும்
அறப்பலனுற்றுவாரம்மூன்றும்பதினொன்
றாம்பதிகளில்வுலகுளோர்க்கு. 3

உரை:—இவ்வுலகத்துள் பிறந்தோர்களுக்கு இலக்கினத்துக்கு 5-ம் இடத்துக்கும் 9-ம் இடத்திற்கும் அதிபராய் எந்தக் கிரகங்கள் வந்தாலும் மட்டில்லாத துன்பபலனைக் கொடுப்பார்கள். 3-ம் இடத்துக்கும் 6-ம் இடத்துக்கும் அதிபராய் எந்தக் கிரகங்கள் வந்தாலும் மட்டில்லாத துன்பபலனைக் கொடுப்பார்கள்.

கருத்து:—முன்சொன்ன 3-6-11-ம் இடங்களி லிருக்கிறவர்கள் பாபப்பலனைக் கொடார்கள் என்றறிக.

## கோள்களுக்குரித்தாகுஞ் சுபகேந்திரமும் பாபகேந்திரமும்

கொடியோர்கள்கேந்திரத்தோராகிற்கொடார்கள்
கொடியபலனல்லோர்கொடுப்பர்—கடல்புடைசூழ்
வையகத்தோர்தங்கட்குவைவேன்மலர்விழிபாம்
ஐயப்பாடின்றியறி. 4

உரை:—கூர்மை பொருந்திய வேல்போலு மலர்க் கண்களையுடைய பெண்ணே! சமுத்திரஞ்சூழ்ந்த பூமியிலுள்ளவர்களுக்குப் பாபக்கிரகங்களாகிய சூரியன், செவ்வாய், சனி இவர்கள் கேந்திரங்களாகிற 1-4-7-10-ம் இடங்களுக்கு அதிபரானால் சுபபலத்தைக் கொடுப்பார்கள். சுபக்கிரகங்களாகிற் குரு, சுக்கிரன், புதன், சந்திரன் இவர்கள் கேந்திராதிபதிகளானால் பாபபலத்தைக் கொடுப்பார்கள். முன்சொன்ன எல்லாக் கோள்களும் ஒன்றுக்கொன்று விசேஷ பிரபலராவர். அஃதாவது, 5-ம் இடத்ததிபதிக்கு 9-ம் இடத்ததிபதி பிரபலன் இலக்கினாதிபதிக்கு 4-ம் இடத்ததிபதி பிரபலன் அவனுக்கு 7-ம் இடத்ததிபதி பிரபலன் அவனுக்கு 10-ம் இடத்ததிபதி பிரபலன் 3-ம் இடத்ததிபதிக்கு 6-ம் இடத்ததிபதி பிரபலன் அவனுக்கு 11-ம் இடத்ததிபதி பிரபலன் இவைகளைச் சந்தேகமில்லாமல் அறிவாயாக.

## தானயோகபதிற்கு பலன்

அறைந்ததானத்தவர்யாவருமென்மேலாய்ச்
செறிந்தவவ்வப்பலனைச்சேர்ப்பார்—அறிந்தருள்வாய்
வார்குலன்பொன்வம்பார்வனமுலைப்பூங்கோதைநல்லாய்
ஆர்கலிசூழும்புவியுளார்க்கு. 5

உரை—கச்சும் ஆபரணமும் தேமலும் வாசனையும் நிறைந்த வழகும் பொருந்திய கொங்கைகளையும் பூமாலை பொருந்திய கூந்தலையுமுடைய பெண்ணே! கடல்சூழ்ந்த பூமியிலுள்ள வர்களுக்கு சொல்லப்பட்ட தானத்ததிபதிகளாகிய எல்லாரும் மென்மேலாய்த் தங்களுக்குப் பொருந்திய சுபாசுபபலன்களைக் கொடுப்பார்கள். அன்றியும், 5-ம் இடத் ததிபதியைப் பார்க்கினும் 9-ம் இடத்ததிபதி அதிக பலனைக் கொடுப்பன். இலக்கின கேந்திராதிபதியைப் பார்க்கிலும் சதுர்த்த கேந்திராதிபதி அதிக பலனைக் கொடுப்பன் 3-ம் இடத்ததிபதியைப் பார்க்கிலும் 6-ம் இடத்ததிபதி அதிக பலனைக் கொடுப்பன். அவனைப் பார்க்கிலும் 11-ம் இடத் ததிபதி அதிக பலனைக் கொடுப்பன். ஒழிந்த தானாதிபதிகட்கும் இவ்வளவே கொள்க.

கருத்து:—குரு, சுக்கிரன், புதன், சந்திரன், சுபர்கள் இவர்கள் கேந்திராதிபதிகளானுல் சுபபலனைக் கொடார்கள். சூரியன் செவ்வாய் சனி பாபிகள் இவர்கள் கேந்திராதிபதிகளானுல் அசுப பலனைக் கொடார்கள். என்றறிக

## இரண்டு பன்னிரண்டிற் கிறைவரியல்பு

ஓரையுருபக்கத்திறுதிபர்களொன்றுதலாய்
சேருமவர்தங்கடங்கள்சீரிடக்கு—நேராகும்
அறப்பலனீவரலைகடல்சூழ்வையகத்தில்
எப்பிறவியோர்க்குமிருந்து· 6

உரை:—ஒளி பொருந்திய நெற்றியையுடையவளே! அலை பொருந்திய சமுத்திரஞ் சூழ்ந்த பூமியினிடத்தில் எந்த ஜாதகர்களுக்கும் இலக்கினத்திற்கு இரண்டு பக்கமாகிய தனவியர்த்தானாதிபதிகள் தங்கள் தங்களுடனே சேர்ந்த கோள்களுக்கும் தங்கள் தங்களுக்கு வேறுமிடத்திற்கும் நேராகிய சுபபலன்களைக் கொடுப்பார்கள் என்பதாம்.

கருத்து:—கிரக சம்பந்தமும் இராசி சம்பந்தமும் இல்லாமலிருந்து உள்ளளவில் தங்கள் தங்கள் பொசிப்பிற்கு ஒத்த பலன்களை விசாரித்து கூறுதலெனக் கொள்க.

## எட்டுக் கிறைவனியல்பு

பாக்கியநாசத்திறையாம்பாவத்தாவெட்டதிபன்
விக்குவம்பார்முலையாய்மேதினியோர்—தாக்கமிலாந்
துன்பமீவன்னிவனே தூயரோதிராதிபனேல்
இன்பமீவன்னிகலியே. 7

RangaRakes tamilnavarasam.com

உரை:—கச்சுக்கட்டிய தனங்களை யுடையவளே! பூமியிலுள்ளவர்களுக்கு 9-ம் இடத் ததிபதி பாக்கியத்தானத்திற்கு விரயத்தானாதிபதியான பாவத்தினாலே நன்மை பெருக்கமில்லாத துன்பத்தைக் கொடுப்பன். அந்த 9-ம் இடத் ததிபதிதானே இலக்கினாதிபதியானால் மாறுபாட்டின்பத்தைக் கொடுப்பன்.

கருத்து:—9-ம் இடத் ததிபதியைப்போல மிகவுந் துன்ப பலத்தைக் கொடானெனவுணர்க.

## கேந்திராதிபத்திய தோஷம்

கண்டத்ததிபராம்பாபத்திற்காரிகைபாய்
கொண்டகுருவெள்ளிகொடியரிவர்—தாண்டாமல்
ஆயுவியத்திருப்பாரசமாகில்யமிலா
தாயுவியஞ்செய்திடுவாராங்கு. 8

உரை:—பெண்மணே! கேந்திராதிபத்திய தோஷத்தில் குருவும் வெள்ளியும் மிகவும் பலவான்கள் இவர்கள் நீங்காமல் ஆயுளுக்குள் வியஸ்தானமாகிய 27-ம் இடங்களில் நின்றாராகில் சந்தேகமில்லாமல் ஆயுவியஞ் செய்வார்கள்.

கருத்து:—மார்க்கத்தானாதிபதியைப் பார்க்கிலும் அந்த மார்க்கத்தானத்திலிருப்பவர்கள் பலவான்களெனக் கொள்க. இவர்கட்குக் கேந்திராதிபத்ய தோஷத்தார் கூறப்பட்டது மாரகத்தான் இலக்கினமேற் கூறுகின்றது.

## புதன் சசி இரவிக்குண்டான குணம்

பின்னரப்பாவத்திற்பெரியன்மாலாகும்
பின்னரவன்றந்தைபேசுங்கால்—இத்திலத்தில்
எட்டாமிடத்ததிபரென்ணிபெரும்பாவம்
கிட்டாதிரவிமதிக்கு. 9

உரை:—குரு வெள்ளிகளுக்குப் பின்னர் அந்தக் கேந்திராதிபத்திய தோஷத்தில் புதன் பலவான். புதன் பின்னரவன் தந்தையாகிய சந்திரன் பலவான். 8-மிடத்தாதிபத்தியாதியாலுண்டான மட்டில்லாத பெரியபாவம் சூரிய சந்திரர்கட்குச் சேராது என்பதாம்.

RangaRakes tamilnavarasam.com

## செவ்வாய் குணம்

*ஆறற்கீரை ந்தாங்கண்டாதிக்கத்தான சுபம்*
*சீருற்றகோணத்தாற்சீர்பெருமே—வாருற்ற*
*கொங்கையாய்க்கச்சாலிமூர்த்திகுமார்ந்தையான்*
*சிங்காரமாங்கடச்சீர்.* 10

உரை:—கச்சணிந்த தனங்களை யுடையவளே! செவ்வாய்க்கு ஆதிக்கத்தினுலே தசமகேந்திராதிபத்தியத்திலுண்டான சுபத்வம் திரிகோணுதிபத்தியத்தி லுண்டானபடியினுலே சிறப்பைப்பெறும் தசமகேந்திராதிபத்தியத்தினுலே மாத்திரம் சிறப்பைப் பொருது இஃதுகுமார்ந்தையானுகிய தாண்டவபூபன் புதல்வனுகிய கச்சாலி மூர்த்தியினுடைய சாதக இலக்கனமாகிய கடகத்திற்குண்டாகிய சிறப்பு.

## இராகு கேதுக்களின்பயன்

யாதொருபாவத்தோன்யாதொருபாவேசனுடன்
*நீதறச்சேர்த்திட்டாற்றினபலன்கள்—காதுரவேற்*
கண்ணுய்வடுங்கோட்கள்காசினியிலுள்ளவர்கட்
கென்ணுமலீவாசிருந்து. 11

உரை:—காதளவு பொருந்திய கண்களையுடையவளே! பூமியிலுள்ளவர்கட்கு இராகு கேதுக்கள் மற்றைக் கோள்கள் போல ஆதிபத்தியமில்லாதபடியினுலே அவர்கள் எந்த எந்த ஸ்தானத்திலிருந்தார்களோ எந்தெந்தபாவாதிபவர்களுடன்கூடினர்களோ அவ்வவர்கட்கேற்ப சுபாசுப பலன்களைக் கொடுப்பார்கள்.

கருத்து:—கூடுமவர்கள் பலராயுள்ளவில் அதிற் பலவானுக்கேற்ற பலனீவார்களெனவறிக.

## பொதுச்சுபயோகம்

*கோணக்கோள்கண்டக்கோள்கூடலுடனேபார்த்தால்*
பேணுற்றெருவரில்விற்பெட்புடனே—காணுற்
றெருவருற்றுராகிலொழிந்தோருமல்
இருதலத்தையீவாரிவர்க்கு. 12

உரை:—திரிகோணுதிபதியும் கேந்திராதிபதியும் 3—6—9 10-ம்இடங்களுக்கு அதிபதிகளுடன் கூடாமல் தங்கள்தங்கள் சம்பத்தமான வேறெரிடத்தாதிபத்திய தோஷமில்லாமல் இருவருங்கூடல் ஒருவரையொருவர் பார்த்தால் ஒருவரில்லொருவரிருத்தலான சம்பந்தமுற்றுராகில் இவ்வுலகத்தோருக்கு விசேஷ சுபபலனைக் கொடுப்பார்கள்.

RangaRakes tamilnavarasam.com

கருத்து:—தானவிசேஷத்தால் சுபபலனைக் கொடுப்பவராகுலும் ஒருவருக்கொருவர் சம்பந்தத்தால் விசேஷபலனைக் கொடுப்பார்களென்றறிக.

## இராஜயோகம்

வலியாருங்கண்டக்கோள்வாய்ந்தகோணக்கோள்
நலிடார்களாகிலுமேலல்லர்—சலியாமல்
கூடினமாத்த்ரத்திற்கொம்பனையாய்தாண்டவன்றன்
பீடுருகேட்சிரென்றுபேசு. 13

உரை:—பூங்கொம்புக்குச் சமானமானவளே! தசமகேந்திராதிபதியும் நவமதிரிகோணாதிபதியுங்கூடின் முதலான சம்பந்தமாத்திரத்திலுலே பாவக்கோளுடன்கூடி பாவராசியாதிபத்தியமுற்றிருந்தாலும் சலியாமல் நல்ல இராஜயோக பலனைக் கொடுப்பார்கள். இஃது தாண்டவபூவன் ஜாதக விலக்கினமான விருச்சிகத்துக் குண்டான சிறப்பென்று செல்வாயாக.

தன்மகன்மப்பதிகடக்களிற்றுமதியுமே
அன்னியமாய்த்தங்கட்கறையுமிடத்—தின்பமுடன்
உற்றிடுவாராகிலொளிவனையாயிவ்வுலகோர்
பெற்றிடுவார்யாவர்பெரிது. 14

உரை:—சத்திரப் பிரகாசம் பொருந்திய வளையல்களையுடையவளே! தருமாதிபதியும் தங்களிடத்திற் றுங்களிருந்தாலும் தங்களுக்கு அன்னியமாய்ச் சொல்லுமிடத்திற் சேர்ந்திருந்தாலும் தருமத்தானத்தில் கருமாதிபதி கருமத்தானத்தில் தருமாதிபதி தானிருந்தாலும் இவ்வுலகத்திலுள்ளவர்கள் யாவரும் பெரிதாகிய யோகபலனைப் பெறுவார்கள்.

கருத்து:—தரும கருமாதிபதிகள் தோஷத்துடனே கூடியிருந்தாலும் தோஷத்துடனே கூடாதிருந்தாலும் இராஜயோகத்தைக் கொடுப்பார்கள் எனக்கொள்க.

ஆய்ந்தகோணத்தலைவராரேனுமாமவரோ
டேய்ந்தசம்பந்தமிரைத்தவர்க்கு—வாய்ந்திடுமேல்
வையகிழமைதரும் வாணுதலாய் தாண்டவன்போல்
செய்யகமலைசிறந்து. 15

உரை:—ஒளி பொருந்திய நெற்றியையுடையவளே! ஆராய்ந்தெடுத்த திரிகோணாதிபதிகள் யாராயினுமாக அவருடனே பொருந்திய சம்பந்தத் தசமகேந்திராதிபதிக்குண்டாகில் திருமகள் சிறந்த தாண்டவனைப்போல அரசுரிமைப்பெறுவர்கள் குலைத்தீரார்.

கருத்து:—சம்பந்த மூத்தகிரகங்கள் கொடுப்பார்கள் என்ற போதிலும் தரும கருமாதிபதிகளைப்போலப் பலன்களைக் கொடார்களெனக் கொள்க.

யோகதிசையிரண்டினுண்டு நின்றோன்றசையும்
யோகபலனளித்த லொள்ளியதன்—ருகப்
படமனையவல்குலாய் பாசினிலக்கோள்கள்
உடனுறைகளின்றே யுரை. 16

உரை:—ஒளிபொருந்திய நல்லபாம்பின் படத்தை நிகர்த்த வல்குலையுடையவளே! இராஜயோகங் கொடுக்குமவர் திசையிரண்டினுள் நடுவினின்றவன் திசையும் அவர்களுடன் சம்பந்தமில்லாமலிருந் தன்னளவில் அவ்வரசயோக பலனைக் கொடுக்குமென்று சொல்வாயாக.

## இராஜயோகம்

கோட்கடாம்பொல்லாக் கொடியவர்களானுலும்
வாட்கண்ணுய்வல்லோ ருடன்வயங்கும்—காழ்புருசம்
பந்தமுண்டேற்றத்தம் வயங்குபொசிப்புக்கேற்பத்
தந்திடுவர் பூபாலதாம். 17

உரை:—வாள்போலும் கண்களையுடையவளே! கிரகங்கள் தாங்கள் பொல்லாத கொடியவர்களானாலும் அரசயோக மளித்தற்கு வல்லோருடனே விளங்குமுறுதியமைந்த சம்பந்தமுண்டாகில் தாங்கள் தங்கடங்கள் புத்திக்கேற்ப அரச யோகபலனைத் தந்திடுவார்கள்.

கருத்து:—புத்தியிலக்கண முன்னர்ப் புகல்கின்றது யோககாரக சம்பந்தத்தால் பாவக்கோள்களும் இப்படிப் பலன் கொடுப்பார்களாகில் சுபக்கோள் கொடுக்கும் நிறைந்த பலத்தில் என்ன சந்தேகமென்பதாயிற்று.

கண்டக்கோணத்திலிருந்த கடுங்கோட்டைக்கு [ய்
கெண்டைவிழிச்செவ்வாய் கிளிமொழியாய்—ஒண்டொடியா
ஆதிபனோடல்லா விடத்துண்டேற்சம்பந்தங்
கோதில்யோகங்கொடுப்பார் கூர்ந்து. 18

உரை:—சேல்போலுங் கண்களையுஞ் சிவந்தவாயினையுங் கிளிபோலுஞ் சொற்களையும் ஒளிபொருந்திய வளையல்களையுமுடையவளே! கேந்திரத்திலாவது திரிகோணத்திலாவது இருந்த இராகு கேதுக்களுக்கு அல்லாவிடத் ததிபதியுடனே சம்பந்தமுண்டாகில் அந்த இராகு கேதுக்கள் குற்றமற்ற பெரிய யோக பலனைக் கொடுப்பார்கள்.

RangaRakes tamilnavarasam.com

கருத்து:—அவ்விதவிடத்ததிபதியுடனே சம்பந்தமுற வென்றால் கேந்திரத்திலிருந்தால் திரிகோணாதிபதியுடனும் திரிகோணத்திலிருந்தால் கேந்திராதிபதியுடனுஞ் சம்பந்தமுதல் பிரபலத்தான பிரபலக்கிரக அனுசாரியாய் விசேஷ சுப பலன்களைக் கொடுப்பாரென் றறிவது.

கேந்திரகோணத்தலைவர் கேட்கிலொருவரென்
றுந்திரமாயோக மளிப்பரன்றோ—சுத்தருவீர்
அன்னிய திரிகோணத்தவரோ டாய்ந்திடும்பலன்கள்
என்றுலறிவதா மீங்கு. 19

உரை:—கேந்திராதிபதியும் திரிகோணாதிபதியும் ஒருவராகில் நிறைந்திறமாயிருக்கப்பட்ட யோகபலனைக் கொடுப்பார். அவர் அந்நியத் திரிகோணாதிபதியுடனே சம்பந்தமுற்றுராகில் இவர் கொடுக்கும் பலன்களை என்னுலளவிட் டறியப்படாதென் றறிவீர்.

கருத்து:—அவர்கள் பலத்திற்கு அனுசாரியாய்ப் பலத்தை விசாரித்துச் சொல்வது என்றறிக.

## இராஜயோக பங்கம்

தன்மகன்மதிப்பதிகடா மெட்டுடன்பதினொன்
றின்றலைவராகில ரின்பமுற்ற—நன்னயஞ்சேர்
சம்பந்தத்தாலே சகத்திலுள்ளோர்தமக்குத்
தம்பலனீயாரென்று சாற்று. 20

உரை:—தரும கருமாதிபதிகள் அட்டம இலாபாதிபதிகளாயிருந்தாலும் அட்டம இலாபாதிபதியுடைய சம்பந்தம்வந்தாலும் பூமியிலுள்ளோர்கட்குத் தங்கள் சுபபலனைக் கொடார்களென்று சொல்வாயாக.

கருத்து:—இவர்கள் சம்பந்தத்தால் இல்லை எனவே அன்னியோர் காரகசம்பந்த முண்டாயிருந்தால் யோகபலன் அடைவரெனக் கொள்க.

## மாரக விலக்கணம்

எட்டுமதற்கெட்ட மிரண்டனையுமாயுவென்று
திட்டமுடனறிந்து சீறிலா—நட்டத்தை
மாரகமென்று வகுத்தறிவாய்மாமயிலே
ஆர்கலிசூ ழும்புவியுளார்க்கு. 21

உரை:—பெருமை பொருந்திய மயில்போலுஞ் சாயலையுடையவளே! இலக்கினத்திற்கு 8-ம் இடமும் அதற்கு 8-ம் இடமான 3-ம் இடமும் ஆயுத்தான மென்றுபேர் இவைகளுக்குச்

RangaRakes tamilnavarasam.com

சிறப்பில்லாத விரயத்தானங்களாகிய 2-ம் இடத்தையும் கடல் சூழ்ந்த பூமியிலுள்ளவர்களுக்கு மாரகத்தானமென்று பகுத்தறி வாயாக.

கருத்து—பாவம் 12-க்கும் இப்படியே பகுத்தறிவது.

## சம்பந்த மாரகம்

அம்மாரகமிரண்டி லாதிபர்தோற்பலமென்
றெம்மானவர்க்குமுறை யேந்திழையாய்—அம்மா
ரகத்ததிபருற்று வருடனேகூடும்
அகத்தவர்க்கு மப்படியேயாம். 22

உரை:—ஆபரணங்களை யுடையவளே! அந்த மாரகத் தானம் இரண்டிலே முந்தின மாரகத்தானமாகிய 7-மிடத்தைக் காட்டிலும் பிந்தின மாரகத்தானமாகிய 2-ம் இடம் பலமென் றுரைப்பாயென்க. அஃதெப்படியென்னில் முதற் பரியாயமாய்ச் சொல்லப்பட்ட மாரகத்தானமாகிய 7-மிடத்திற்கு இரண்டாம் பரியாயமாய்ச் சொல்லப்பட்ட 2-ம் இடம் பலமாயிற்று. உதாரணம்: அறைந்ததானத் தலைவர் பாவருமென்மேலாய்ச் செறிந்த வவ்வப்பலனைச் சேர்ப்பரென்று முன்னம் கூறியவதனால் 2-ம் இடமே பலமுடையதெனக் கொள்க. அந்த மாரகத் தானாதி பதியைக்காட்டிலும் அந்த மாரகத்தானத்தி லிருக்கிறவர்கள் பலமுடையவர்கள். இருக்கிறவர்களைக் காட்டிலும் அந்த மாரகத் தானாதிபதியுடனே கூடியிருக்கிற பாபிகள் பலமுடையவர்கள் 2-ம் இடத்ததிபதி 7-ம் இடத்ததிபதி யிவர்களுடைய பலா பலன் கட்கேற்ப இவர்களுடனே கூடுமவர்கட்கும் பலாபலன் யூகித்துக் கொள்வது.

அல்லவர்தங்கட்கமைத்த தெசைபொசிப்பில்
செல்வதேயாமரணம் செப்புங்கால்—வல்லமையில்
இல்லையாமாகிலெழின் முலையி ராசிடந்தோன்
நல்லதெசையி னவில். 23

உரை :—அழகிய கொங்கைகளையுடையவளே! அந்த மாரகத்தானத்திலிருப்போர் அல்லது அந்த மாரகத் தானாதிபதி யுடனே சம்பந்தமுற்றிருப்போர் பாபிகளானால் இவர்கட்கமைந்த தெசாபுத்திகளிலே மரணமுண்டாகும். இவைகளில் மாரக மில்லாவிடில் தன்மை பொருந்திய இலக்கினத்திற்கு 12-ம் இடத் ததிபதியினுடைய தெசாபுத்திகளிலே மரணமுண்டாகுமென்று சொல்வாயாக.

18

RangaRakes tamilnavarasam.com

இவன்றெசையின்றே யிவனிடத்திலுற்ற
அவன்றசையிதாமதுவு மன்றல்—சிவந்தவிழி
தேமொழியேநல்லோர் தெசையிற்குனெட்டிடத்தோன்
நாமதெசையி னவில். 24

உரை:—சிவப்பாகிய கண்களையுந் தேன்போலும் வார்த்தை களையு முடையவளே! இந்த 12-ம் இடத்ததிபதியினுடைய திசாபுத்திகளிலே மரணமில்லையாகில் இவனிடமாகிய 12-ம் இடத்திலிருந்தவன் 12-ம் இடத்ததிபதியுடனே சம்பந்தமுற்றிருக் கிற பாபிகள் இவர்களுடைய திசாபுத்திகளிலே மரணமாம். அதிலும் இல்லையாகில் அந்த விரயாதிபதியுடன் சம்பந்தமுற்ற யோககாரகனல்லாத சுபர்களுடைய திசாபுத்திகளிலேயும் சில விசை மரணமாம் இதிலும் இல்லையாகில் 8-ம்இடத்ததிபதி 8-க்கு 8-ம் இடத்ததிபதியான 8-ம் இடத்ததிபதி இவர்களுடைய திசா புத்திகளிலே மரணமாமென்று சொல்வாயாக.

கருத்து:—3-ம் இடத்தக் குடையவர்கள் ஆயுளைக் கொடுப் பவர்களாயிருப்பாரும் மற்றவர் வேறுவகையில் மாரகம் உண்டா வதற்கு இடமில்லாததனு லிவர்கள் மாரகங் கொடுக்க வேண்டிய தாயிற்று.

ஆங்கவற்றுளில்லையேலல்லாத கற்றவர்தம்
ஓங்குதிசையிலுரைக்கவென்—றீங்குயர்ந்தோர்
செப்பினர்மாரகங்கள் செய்வதறியாதுவிடின்
இப்புவியிலோர்க் கென்றுமே. 25

உரை:—பூமியிலுள்ளோர்க்கு எந்நாளும் அந்த 8-ம் இட முதலியவைகளுக்கு அதிபதிகளுடைய திசாபுத்திகளிலேயும் மரணமில்லையாகில் மாரகங்கள் செவ்வையாய் வராத காலத்தில் மாரக சம்பந்தமில்லாமலிருக்கிற பாபக்கிரகங்களுடைய திசா புத்திகளிலே சிலவிசை மாரகமுரைக்கவென்று சோதிடநூல் வல்லவர்கள் சொன்னார்கள்.

## சனியன் மாரகம்

பாபபலனைக்கொடுக்கும் பங்குகொள்வோருடனே
சேர்பலத்தாரெல்லோரையுஞ் செறிந்து—தீபறமாய்க்
கொல்வனெனகோதாய் குவலயத்திலுள்ளவர்கட்
கில்லிவற்றிலைய மியம்பு. 26

உரை:—மாலையையுடையவளே! பாபபலனைக் கொடுக்கிற சனிமாரகக் கிரகங்களுடனே கூடியிருக்கிற குற்றத்தின் வலிமையி னாலே எல்லோரையுந்தள்ளி தானே சடுதியில் கொல்வனென்று பூமியிலுள்ளபேர்க்குச் சொல்வாய் இவற்றில் சந்தேகமில்லை.

கருத்து:—எல்லோரையுந் தள்ளி யென்பதனால் தனக்கு முன் தந்தபேர்களையுந் தள்ளிப் பின் வரப்போகிற மாரகர்களையுந் தள்ளி யெனப்படும்.

## புத்திவிலக்கணம்

கோட்களெல்லாத்தங்குலவு திசைபொசிப்பில்
சேட்படுமிவ்வையகத்திற் செப்பரிய—மாக்கடமக்
கியோர்பலாபலன்க ளென்றுந்தமக்கேற்ற
சேயரிக்கண்மாதே செப்பு. 27

உரை :—செவ்வரி பொருந்திய கண்களையுடையபெண்ணே! விசாலம் பொருந்திய இப்பூமியிடத்தில் சொல்லுதற்கரிய மனிதர்களுக்கு எல்லாக் கோள்களும் தங்கள் தங்கள் தெசையில் தங்கள் தங்கள் சுயபுத்தியில் தமக்குத் தக்க சுபாசுப பலன்களை எப்போதும் கொடார்களென்று சொல்வாயாக.

கருத்து:—என்னெனில் மேல்வருகிற புத்திகளில் சுபபலனைக் கொடுப்பதனால்தான் தங்கள் புத்தியி லதைக் கொடுப்பாரெனில் முன் திசைக்கொத்த பலன்களைக் கொடுப்பார்கள்.

யாரொருவர்தம்முடனே யுற்றுர்தமக்குநிகர்
யாரவர்கள்யாரு மரும்பொசிப்பில்—வார்நெடுங்கண்
மாதேதத்தந்திசையின்மாண்பர் பலாபலன்கள்
கோதரக்கொள்ளக் கொடுப்பார்கொண்டு. 28

உரை:—நீண்ட கண்களையுடைய பெண்ணே! எல்லாக் கோள்களும் யாதொரு கோள்கள் தங்களுடனே சம்பந்தமுள்ளனவோ யாதொரு கோள்கள் சுபாசுப பாவாதிபத்தியத்திலுமே தங்களுக்குச் சமமா யிருக்கின்றார்களோ அவர்களுடைய அரும் பொசிப்பில் தங்கள் தங்கள் திசைகளுடைய மாட்சிமை பொருந்திய சுபாசுப பலன்களை குற்றமற அடையும்படி கொடுப்பார்கள்.

அல்லாதவர்பொசிப்பி லன்னியமா மப்பலன்கள்
எல்லாருமீவரென்றே யின்பமுடன்—சொல்லிடுவீர்
கோளின்வலியுங் குணமுமறிந்தூக்கி
வாளிடைப்பவர்போல் வந்து. 29

உரை:—சம்பந்தமும் சமானத்துவமும் இல்லாதவர்களுடைய புத்திகளில் தாங்கள் சுபராகு லசுபபலனையும் அசுபரானால் சுப பலனையும் எல்லாருங் கொடுப்பாரென்று கூறுவீராக. சொல்லும்போது கோட்களுடைய வலிமையாகிய நட்பு, ஆட்சி, உச்சம், பகை, நீச முதலாகியவைகளையும் காரகத்துவமுமறிந்து வாளின்மேல் நடப்பவர்போல சாவதானமாய்ப் பலன்களைச் சொல்வீர்.

RangaRakes tamilnavarasam.com

தன்றெசையிற்கோணத் தலைவன்கண்டத்தலைவன்
தன்போசிப்பிற்றுனளிப்ப தக்கசுபம்—அன்னவனும்
அப்படியேயாகுமவ ரகத்தான்றியுர
செப்பமுடனின்றளிப்பன் சீர். 80

உரை:—திரிகோணாதிபதி தன்றெசையில் கேந்திராதிபதியின் புத்திகளில் தனக்குத்தக்க சுபபலனைக்கொடுப்பன். அத்தன்மையனாகிய கேந்திராதிபதியின் வன்றெசையில் திரிகோணாதிபதி தன் போசிப்பில் தனக்குத்தக்க சுபபலனைக் கொடுப்பன். திசாநாதன புத்திநாதன் இந்த இரண்டுபேர்களும் ஒருவர்க்கொருவர் சம்பந்த மில்லாமலிருந்தபோதிலும் இவர்களுக்கு அட்டமாதிபதி பந்திய தோஷம் வராமலிருக்க வேண்டுவது என்பதாம்.

கருத்து:—பத்தாமதிபதி தெசையில் நவமாதிபதி உத்தியில் விசேஷ சுபபலனைக் கொடுப்பன்.

## மாரக ராஜயோக பலன்

அரசயோகந்தனக் காரம்பமாக
மரணமளிப்போரவர் போசிப்பில்—வரிசையினால்
மென்மேல்விளங்குமிது முதல்பாவத்தார்
தன்மாபோசிப்பு களிற்றுன். 81

உரை:—பிரதானமாயிருக்கப்பட்ட மாரகருடைய தெசாபுத்திகளில் இராஜயோகம் ஆரம்பித்தால் அதுமுதல் பாபக்கிரகங்களுடைய புத்திகளின் வரிசையினால் அந்த ராஜயோகம் மேன்மேலாக விளங்கும்.

கருத்து:—யோககாரக தெசையில் புத்திநாதருக்கு பாபத்துவத்தினாலுண்டான தோஷமில்லையெனக்கொள்க.

## ராஜயோக பலன்

கூடுசுபர்யோகங் கொடுத்திடுவர்கூடாத
நீடுசுபர்போசிப்பி னேராக—நாடிடுவாய்
காரகர்சேரச்சுபர்கள் காணரசயோகபலன்
பாரிலுள்ளோர்க் கீவோர்பரிந்து. 82

உரை:—பூமியிலுள்ளோர்க்கு யோகசம்பந்தமுற்ற சுபக்கிரகங்கள் சுபபுத்திகளில் யோகபலனைக் கொடுப்பார்கள். அச்சம்பந்தமில்லாத சுபக்கிரகங்கள் சுபபுத்திகளில் சமபலனைக் கொடுப்பார்கள். அச்சம்பந்தப்படாத யோககாரகர்கள் சுபபுத்திகளில் யாவரும் காண்கிற இராஜயோகபலத்தை பரிவுடன் கொடுப்பார்களென்று அறிந்து கொள்வாய்.

RangaRakes tamilnavarasam.com

கருத்து:—முற்கூறப்பட்டவர்கள் சுயபுத்திகளில் வரிசையாகவும் சமமாகவும் பலனைக்கொடுப்பரென்பதாயிற்று.

யோகமளிப்பவர்க ளொன்றுஞ்சுபர்தெசையில்
பாகமுறுந்தங்கள் யரும்பொசிப்பில்—யோகபலன்
கொஞ்சங்கொடுப்பரென்று கொண்டாற்குழல்கனிவாய்
தஞ்சமரும்வாள்விழியாய் நாடு. 33

உரை:—மேகம்போல் கூந்தலையுங் கொவ்வைக்கனிபோல் வாயினையும் விஷம் பொருந்திய வாள்போல் கண்களையுமுடைய வளே! யோக காரகிரகங்கள் தங்களுடன் சம்பந்தமில்லாத சுபக்கிரகங்களுடைய தெசையில் தங்கள் தங்கள் புத்திகளிலே அற்ப யோக பலனைக் கொடுப்பாரென்று கூறுவாயாக.

எழிலார்சுப வீட்டி லேந்திதரர்சேரா
தழியாவராக்க ளருந்தம்—அழியார்
பொசிப்பிற்கனுகூலம் பூண்ட நல்லயோக
தெசைப்பலனீவர் தெளிந்து. 34

உரை:—அழகிய சுபக்கிரகங்களுடைய வீட்டில் மற்றைக் கோளுடனேயும் சம்பந்தமில்லாதிருக்கிற அழியாத இராகு கேதுகள் பெருமை பொருந்திய பொசிப்பில் இராஜயோக பலனைக் கொடுப்பார்கள்.

அகத்தோர்தெசைக்கிறைவ ராகிலவரோடு
மிதற்செறியாதல்லோர் பொசிப்பில்—பகைப்பலனும்
சேருஞ்சுபர்பொசிப்பிற் செய்வரவர்க்கொத்தபலன்
காரகரிற்பாபபலன் காண். 35

உரை:—பாபக்கிரகங்கள் தெசாதிபதிகளானால் அவருடன் சம்பந்தமில்லாத சுபக்கிரகங்கள் புத்திகளிலே பாபபலனைக் கொடுப்பார்கள் சம்பந்த முற்றிருக்கிற சுபக்கிரகங்களுடைய புத்திகளிலே தெசநாதனுக்கொத்த புத்திநாதனுக்கொத்த பலனு முண்டாம். யோககாரக கிரகங்களுடைய புத்திகளிலே மிகவும் பாபபலன்களைக் கொடுப்பார்க ளென்றறிக.

கருத்து:—தெசாநாதன் பாபியானாலும் அவனியல் அறிந்து சொல்வாயாக.

## மாரகதிசா யோக பலன்

மாரகன்றன்றெசையின்மன்னுஞ் சுபர்பொசிப்பில்
மாரகத்தைப்பண்ணுனிம் மானவர்க்கு—மாரகத்தைப்
பண்ணுவான்றன்றெசையில் பற்றுவகத்தவர்கள்
துன்னும்பொசிப்பிற் றுணிந்து. 36

உரை:—பனிதர்க்கு மாரகன் தன்றிசையில் தன்னுடன் சம்பந்த முற்றிருக்கிற சுபக்கிரகங்களுடைய புத்திகளில் மாரகத்தைக் கொடாமல் தன்னுடன் சம்பந்தமில்லாமலிருக்கிற பாபக்கிரகங்களுடைய புத்திகளிலே துணிந்து கொல்வான்.

கருத்து:—மற்றை மாரகவிலக்கணமனைத்து முன் சொன்னபடியே கொள்கவென்க.

### சனி சுக்கிரன் பலன்

பிருகுதிசையிற்சனிதன் பேராபொசிப்பில்
பெருசுபாசுபங்கள் பேணித்—தருதவன்
அன்னவனுமப்படியே யாழ்ந்தறிவாம்நீர்குழும்
இந்நிலத்தோர்யாவர்க்கு மென்று. 87

உரை:—கடல்சூழ்ந்த இப்பூமியிலுள்ளவர் யாவர்க்கும் சுக்கிரன் தன் திசையில் சனியின் பொசிப்பில் தனக்குண்டான பெரிதாகிய சுபாசுப பலன்களை விசேஷமாய்க் கொடுப்பன் அத்தச் சனியுந் தன் திசையின் சுக்கிரபுத்தியில் தனக்குண்டான சுபாசுப பலன்களைக் கொடுப்பனென்று ஆலோசித்தறிவாய்.

### கோள்களின் குணங்களைப் பகுத்தறிதல்

ஓரைதொறுமுன்ன முரைத்தபடிகோட்குணங்கள்
சேரவரிசையதாய் செப்பிடுவன்—நாரமாகட்
காம்புறுதோட்கண்டாச்சொற் கார்கூந்தற்காரிகையாய்
பாம்புறுதல்லல் குளிருப்பார்த்து. 88

உரை:—கருமை பொருந்திய கண்களையும் மூங்கில் போன்ற தோள்களையும் கற்கண்டிற்கொப்பாகிய மொழிகளையும் மேகம் போன்ற அளகத்தையும் படம் போன்ற நிதம்பத்தையுமுடைய பெண்ணே! மேஷமுதல் பன்னிரண்டு பாவங்களும் முன்சொல்லியபடியே சூரியன் முதலான கிரகங்களுடைய சுபாசுப குணங்களைவரிசையாகத் தொகுத்துச் சொல்லுகிறேன்.

### மேடவிராசி பலன்

மத்தினெடுமால்சுங்கன் மாபாவிநல்லவர்கள்
கொத்தலர்பூங்கோதாய் குருவிரவி—சந்தகமும்
தீயபலன்காரியொடு தேவபிரான்சேர்ந்தக்கால்
தீயுமவனொ டொற்றதே. 89

மாரகத்தானப்பதியா மன்னுகின்றபார்க்கவனும்
மாரகத்தைச்செய்பானெம் மானவர்க்கும்—மாரகத்தைச்

செய்வர்சனிமுன்னோர் செவ்வியமேடம்பிறந்தோர்க்
கில்வாறுரைப்பீ ரிருந்து 40

உரை:—பூங்கொத்துகள் பொருந்திய அழகிய மாலையினை யுடையவளே! சனி-புதன் சுக்கிரன் இவர்கள் பாபிகள் குரு-ரவி ரும் இவர்கள் நல்லவர்கள் சனி சம்பந்தமுற்றால் குரு எப்போதும் அவனுக்கொத்த பாபபலனைக் கொடுப்பான் இதற்குதாரணம் தான் மகன் மதிசப்படாமெட்டுடன் பதினொன்றின் றலைவனாவது தானே மாரகஸ்தாநாதிபதியாகிய சுக்கிரன் கொல்லான். சனி முதலானவர்கள் கொல்வரென்று மேடவிராசியிற் பிறந்தோர்க் குக் கூறுவாய்.

குருவெள்ளி யிந்துகொண்டாடக்கொடியர்
மருவுசுபக்கோன் மந்தனென்றும்—திருவுமரு
யோகங்கொடுப்பான் சனியொருவனுமெனவே
ஆதமெனப்பாவா யறி 41

குருவுமுதலாய்க்கூறுகின்ற கோட்களைகொல்லும்
மருவினையரா ராயினென்றும்—வெரியும்
படியிடபவோரையினிற் பார்மிசையிற்றோன்றும்
முடியுடையோர்கட்கு மொழி. 42

உரை:—பிரதமை போன்றவளே! குருவும் வெள்ளியுஞ் சந்திரனும் பாபிகள். சனியும் இரவியும் நல்லவர்கள். சனி யொருவனே சிறப்புப் பொருந்தி மேலான இராஜயோகங் கொடுப்பான். குரு முதலானவர் கொல்வரென இப்பலனை ஆராய்ந்து பார்க்கும்போது பூமியின்கண் இடபவிராசியிற் பிறக் கின்ற கிரீடத்தையுடைய அரசர்க்குத் தெரியும்படி சொல்லுவாய்.

கருத்து:—குரு சுக்கிரன் சந்திரன் இவர்களுடன் சம்பந்தப் பட்ட கிரகங்களை யாராய்ந்து அவர்கள் நிலைகளறிந்து சொல்லத் தக்கதென்க.

### மிதுனராசியின் பலன்

சேய்சிவ்வனொடிரவி சேராகக்கடுங்கொடியரா
ஆயுபுகரோனொருவ ஞனகோள்—சேயிழையாய்
மந்தனொடுமந்திரியும் வன்மையுடன்கூடுமெனல்
தந்துமேடப்படி நாடு. 43

அசமர்த்தனித்துகொல்லைக் கான்றமுதலாய்
அசமர்த்தரல்ல நிதாராயில்—இசையுற்
றிலங்குமதிமுகத்தா யென்றறிமுன்றுதும்
நலங்கொளிராசிக்கு நவில். 44

RangaRakes tamilnavarasam.com

உரை:—செவ்விதாகிய வாபரணங்களையும் புகழ்பெற்றுப் பிரகாசிக்கும் பூரணச்சந்திரன் போன்ற வதனத்தையு முடைய வளே! அங்காரகன் குரு சூரியன் கொடியபாவிகள்; சுக்கிரன் ஒருவனே சுபன். குரு சனியுடன் சேருவானுகில் மேடராசியில் பிறந்தோர்க்கொத்தபடி அவயோக காரகனுவான். சந்திரன் துதியாதிபதிபத்திய தோஷத்தை அடைந்தவனு யிருந்தாலும் மாரகங்கொடான். சுரன் குரு சூரியன் இவர்கள் மாரகத்தைக் கொடுப்பார்களென்று மூன்றுமிராசியாகிய மிதுனவிராசியிற் பிறந்தோர்க்கு சொல்வாயாக. காரகாள் வலியறிந்து சொல்கவெனக் கொள்க.

## கடகவிராசி பலன்

சுங்கனித்துமைந்தனிவர் குழாக்கொடுங்கோட்கள்
மங்கலன்மாவேந்தனிவர் மன்னுமின்ற—துங்கமுன்ன
நல்லோர்களல்ல யோகக்கிறைவனுதுமவன்
சொல்லுறிற்பூசு கனுய்ச் சொல். 45

ஆதித்தன்கொல்லான் மற்றுரென்னுங்கொல்லுமவர்
சோதித்துரைக்கிற் சுங்கன்முதல் தீதுற்ரேர்
கண்டென்றுகண்டோறு வக்குகளைசொற்காசிகையாய்
நண்டிலுதித்தோர்க்கு நவில். 46

உரை:—கற்கண்டென்று கண்டோர்களுள்ளங் களிக்குஞ் சொற்களையுடைய பெண்ணே! ஆலோசிக்கும்போது சுக்கிரன் - புதன்-பாவிகள். செவ்வாயுங் குருவும் விசேஷசுபர், யோககாரகன் செவ்வாய் ஒருவனே, சூரியன் கொல்லான்; கொல்வாரெனில், சுக்கிரன் முதலியோர் கொல்வார் கடகராசியிற் பிறந்தோர்க்கு இப்பலனைக் கூறுவாய்.

கருத்து:—சூரியன் துதியாதிபதி யானபோதிலுங் கொல்லான் என்க.

## சிங்கராசி பலன்

பந்தியம்பார்க்கவனும் போற்றக்கரும்பாவி
செந்திறத்தசெவ்வாயே—செம்மைக்கோன்
யோகமுற்றுர்தீப்பலனை யோராதளித்திடுவார்
ஆகமதியாரல் புகர். 47

புந்திமுதலாய்ப்புகலும் பொல்லாரேபூமிசையோர்
சந்தமதாய்க்கொல்வரவர் வினையில்—பத்தமுற்றுர்
ஆராகிலாயிழையாயார்கனிகுழ்வையகத்தில்
தாமான சிங்கத்தவர். 48

உரை:—சிங்க நிறத்தையும் ஆராய்ந்தெடுத்த வாபரணங் கனேயு முடையவளே! கடல்சூழ்ந்த பூவுலகத்தில் புதன், சுக்கிரன், துதிக்கத்தகாத பாபிகள் செவ்வாயொருவனே நல்லவன்; யோககாரகான் செவ்வாயும், சுக்கிரனும் இவர்கள் சம்பந்த முற்றால் தீயபலனைக் கொடுப்பார். புதன் முதலானபேர் மாரகக் குறியுற்றாரானால் கொல்வரென்று சிங்கவிராசியிற் பிறந்தோர்க்கு ஆலோசித்துச் சொல்லுவாயாக.

கருத்து:—செவ்வாயோக காரகனுனபோதிலும் சதுர்கேந்திராதிபதி சம்பந்தத்தினல் தீயபலனைக் கொடுப்பா ரென்றதாயிற்று

## கன்னிவிராசி பலன்

செவ்வாயும்செம்பொன்னுஞ் சோமதியுமிவர்
வெவ்வாயர்வெள்ளி விளம்புங்கால்—ஒவ்வுசுபன்
பார்க்கவனும்பங்கயமா வைரிமைந்தன்முனிவர்கள்
ஆர்ப்பெருமா யோகத்தாராங்கு. 49

கொல்லான்பெரிய பிருகுசனுதியர்கள்
எல்லாருங்கொல்லு மியல்புடையார்—நல்லாயென்
றெந்நாளுங்கூறுவாயோ ரிவைமீதுதித்து
மன்னுமவர்க்கு மகிழ்ந்து. 50

உரை:—செவ்வாய், குரு, சந்திரன், பாபிகள்; வெள்ளியொருவனே சுபன். வெள்ளியும், புதனும யோககாரகாள் வெள்ளி கொல்லான். குசன் முதலான பேர்கள் எப்போதும் கொல்வரென்று கன்னிராசியிற் பிறந்தோருக்குச் சொல்வாய்.

கருத்து:—சுக்கிரன் துதியாதிபதியா யிருந்தாலும் கொல்லானென்றறிக.

## துலாவிராசியின் பலன்

குருவிரவிபேய்கொடியர் கூறுசனிபுந்தி
மருவுநலமுடையார் மண்ணில்—திருமருவும்
யோகத்தாரிந்துவுமே யச்சுதனுமொன்றுநன்மீ
தாகுமனகத்தா யறி 51

சேய்கொல்லான்சீவன்முன் னுனவர்களேகொல்வர்
தேயுமதியனைய செந்நுதலாய்—ஆயும்
அறிவினேரெல்லா மனந்தறிகோவின்
குறியாகுமென்றுநீ கூறு. 52

உரை:—ஒளிபொருந்திய நெற்றியினையு மேலாகிய கூந்தலையு முடையவளே! பிரகஸ்பதி, சூரியன், செவ்வாய் இவர்கள்



RangaRakes tamilnavarasam.com

சனியும் புதனும் சுபாள் ; சந்திரனும் புதனும் யோககாரராள் ; செவ்வாய் கொல்லான். குருமுதலானவர்கள் கொல்லுவாரென்று துலாவிராசியிற் பிறந்தோர்க்கு பூகித்துச் சொல்வாய்.

### விருச்சிகவிராசி பலன்

புந்தியும்சேயும்புகரும் பொல்லாக்கொடியர்
இந்துவொருத்தனே யேந்திழையாய்—சந்ததமும்
நல்லனிஞ்ஞாலநல னளிப்போன்ஞாயிறுடன்
அல்லவனு மாகவறி. 63

குருவென்புதன்கொல்லான் கோதாய்கொல்வோர்கள்
மருவுபு[illegible]ஞ்சலோர் மன்றும்—திருவதியர்
என்று[illegible]போய்தேட்பிறந்தோ ரெல்லார்க்குமிப்படியே
குன்றெனவே கூறுமுலே. 64

உரை:—ஆபரணங்[illegible]யும் மலைபோன்ற கொங்கைகளையு முடையவளே! புதன், செவ்வாய், சுக்கிரன், பாபிகள் ; சந்திரன் ஒருவனே சுபன், சூரியனும் சந்திரனும் யோககாரகள் ; குரு துதியாதிபதியா யிருந்தபோதிலும் மாரகத்தைச் செய்யானென்றும் புதன் முதலானவர்கள் கொல்வார்களென்றும் விருச்சிக ராசியிற் பிறந்தோர்களுக்குச் சோதித்து அறிவாய்.

### தனுசுவிராசி பலன்

ஒருவன்புகர்பொல்லானெனு சேயிரவி
மருவுநளர்யோகரென மன்று—திருவுடையோர்
பார்க்கவனும்புத்தியென்று பாம்பேரகலல்குல்
சீர்க்கமலர்ச்சேயிழையாய் செப்பு 65

கதிரவன்சேயாகிவளர் காரிகொல்லான்கொல்வர்
மதிநுதலாய்வெள்ளிமுன்னோர் மன்றும்—திகிவுடைய
பாபிகளென்றோர்த்திப் படிமிசையிலெத்நாளும்
சாபமதிலுற்றவர்க்குச் சாற்று. 66

உரை:—அரவப்படம்போன்ற வல்குலையும் சிறப்புற்ற தாமரை மலரில் விளங்கிய இலக்குமிக்குச் சமானமும் பிறை போன்ற நெற்றியினையு முடையவளே! சுக்கிரன் ஒருவனேபாபி. செவ்வாயும் சூரியனும் சுபாள். சூரியனும் புதனும் யோககாரகள். சனி ஒருவனே கொல்லான், சுக்கிரன் முதலானவர்கள் எப்போதும் கொல்வார்களென்று பூமியின்கண் தனுசிற் பிறந்தோர்க்குச் சொல்வாய்.

கருத்து:—சனி துதியாதிபதியா யிருந்தபோதிலும் கொல்லானென்றறிக.

RangaRakes tamilnavarasam.com

## மகரவிராசி பலன்

ஆரல்பொன்னிந்து பொல்லாரானவர்சுங்கன்புந்தி
வீரமிகுயோகபரன் வெள்ளியே—காரணிய
கூந்தன்மடமானே கும்பிகொல்லானென்றே
ஆய்ந்துணர்ந்தோர் தாமுரைத்தாராம். 67

சேய்முதலாய்முன்னமே செப்புமவரேகொல்வர்
வாய்ந்தமகரமதில் வந்துதித்து—காந்திபெற
வாழுமவர்க்கென்றே வகுத்துரைத்தாரென்றுமிகச்
சூழ்ந்துமடமாமயிலே சொல். 68

உரை:—மேகத்தை நிகர்த்த கூந்தலையும் மயிலைநிகர்த்த சாயலையுமுடைய பெண்ணே! செவ்வாய் குரு சந்திரன் பாவி கள் சுக்கிரனும் புதனும் சுபர்வெள்ளி ஒருவனே இராஜயோக காரகன். சனி கொல்வான்; செவ்வாய் முதலானபேர் கொல்வா ரென்று தெரிந்தவர்கள் ஆலோசித்துச் சொன்னார்களென்று மகர ராசியிற் பிறந்தோர்க்குச் சொல்வாயாக.

கருத்து:—சனி துதியாதிபதியா யிருந்தாலும் மாரகத்தைக் கொடான்.

## கும்பவிராசி பலன்

பொன்மதியேபொல்லார் புகரொருவரேபுனிதன்
தன்னையஞ்சேர்யோக நயந்தளிப்போன்—கன்னனிதர்
ஆனமொழிமாதே யகாத்தமக்கென்றும்
ஞானநிலையுரைப்போ னன்கு. 69

வேந்தனென்போன்கொல்வான் வெறிகமழ்பூங்கோதாய்
ஆய்ந்துணரிவரான்முன்னனவரே—தேய்ந்துரையாய் [ஆர்
வேலையுடைசூழுலகில் வெம்புகுடத்தன்னில்
சாலவுதித்தோர்க்கென்று சாற்று. 60

உரை:—சருக்கரையை நிகரான சொற்களையும் வாசனை வீச மாலையினையுமுடையவளே! குரு சந்திரன் செவ்வாய் இவர்கள் பாபிகள்; சுக்கிரன் ஒருவனே சுபன். அந்தச் சுக்கிரனே யோக காரகன் குருகொல்லான் செவ்வாய் முதலான பேர்கள் கொல் வார்களென்று சமுத்திரஞ் சூழ்ந்த பூமியின்கண் கும்பவிராசியிற் பிறந்தோர்க்குக் கூறுவாயாக.

கருத்து:—குரு துதியாதிபதியா யிருந்தபோதிலும், மாரகத் தைக் கொடான் என்றறிக.

RangaRakes tamilnavarasam.com

## மீனராசியின் பலன்

காசிபுகர்வெய்யோன் மால்காளுக்கடுங்கொடியர்
ஆரலோடித் துவிரானவரே—சேர்ந்தக்கால்
செய்யோன்குருவிவரே செல்வமளிக்கும்பெரியோர்
ஐயமினிநூலிடையா யாய்ந்து. 61

பூசுதன்கொல்லான்கொல்வார் போதசனிமுதலாந்
தேசுபெறும்பாவரென்று தேர்ந்துரைப்பாய்—காசினியில்
கட்கரியமென்று கதித்துவளர்மீனத்தின்
உட்பிறப்போர்க்கெண்ணுதலா யோர்ந்து. 62

உரை:—சந்தேகமற்ற நூல்போன்ற யிடையினையும் ஒளி பொருந்திய நெற்றியினையு முடையவளே! சனி சுக்கிரன் சூரியன் புதன் பாபிகள். செவ்வாயும் சந்திரனும் சுபர் செவ்வாயும் குருவும் ராஜயோககாரர்கள் செவ்வாய் கொல்லான் சனி முதலானவர் கொல்வாரென்று மீனராசியிற் பிறந்தோர்க்குக் கூறுவாய்.

கருத்து:—செவ்வாய் துதியாதிபதியா யிருந்தபோதிலும் கொல்லான். கிரகங்களுடைய வலிமையை யூகித்துச் சொல்லுக வென்க.

## சுபாசுபர்களைப் பொதுவிற் கூறுகின்றது

நல்லார்பொல்லார்களென்று நாடிநவிலாத
எல்லாருமிவ்வுலகோர்க் கேந்திழையாய்—சொல்கின்ற
தானமதற்குந்தம்மைச் சார்ந்தகவாசத்திற்
காணிகுலமாயிவ ராய்ந்து. 63

உரை :—ஆபரணங்களை யணிந்தவளே! பூமியிலுள்ளவர்கட்குச் சுபாசுபர்களென்று குறித்துச்சொல்லாத எல்லாக்கோட்களும் எவ்வாருஞ் சொல்லுகின்ற தங்கள் தானத்துக்குஞ் சுபாளுடன் பிறர் சம்பந்த முற்றிருக்கிறதற்கும் அனுகூலமாய்ப் பலன்களை கொடுப்பார்களென்று ஆராய்ந்து சொல்வாயாக.

கருத்து:—சுபர்கள் பாபசம்பந்தப்பட்டுத் துர்ஸ்தானங்களிலாவது மாரகஸ்தானங்களிலாவது இருந்தால் பலாபலனைக் கொடுப்பார்கள். பாபிகள் சுபசம்பந்தப்பட்டுக் கேந்திர திரிகோணங்களிலிருந்தால் சுப பலனைக் கொடுப்பார்களென்க.

## ஸ்தான பலன்

புத்திரகாராதிகளைப் போற்றுகின்றபாவத்திற்
கொத்தசுபக்கொட்டைசையிலொன்பொசிப்பிற்—புத்திர்தா
ரம்முதலாய்ப்பேரளிப்பா ராயிழையாயார்களிரும்
அம்புவிவாழு மவர்க்கு. 64

உரை:—ஆராய்ந்தெடுத்த ஆபரணங்களை யுடையவளே! கடல்சூழ்ந்த பூமியிலுள்ளவர்களுக்கு புத்திர களத்திரதாவ முதலான ஸ்தானத்துக்கொத்த சுபக்கிரகங்களுடைய தெசாபுத்திகளிற் புத்திர தாராதிகப் பலன்களைப் பெறும்படி கொடுப்பார்கள்.

கருத்து:—புத்திர தாராதி ஸ்தானங்களுக்கொத்த சுபராசவது அத்தானதிபதிகளும் காரகாளும் தான்.

கோட்சாரங்கொண்டு குறிப்பதல்லாஞ்மானவர்தம்
நாட்பலனன்றுன்முகனை யன்றியே—வாட்கண்ணாய்
ஆர்வல்லாற்கூறுவதற் கார்வல்லார்கேட்பதற்கே
யார்வல்லாராய்வ தற்கு. 65

உரை:—வாள்போலும் கண்களையுடை யவளே! மனிதர்களுக்குத் தினபலன் சொல்வதற்குச் சோதிடநூல் வல்லவர்கள் கிரகசாரங்களைக் கொண்டு யுத்தியாகச் சொல்லிக் காண்பிப்பார்களே யன்றித் தாரதன்மியங்களைப் பிரிவினையாய்ச் சொல்ல வேண்டுமென்றால் பிரமதேவனொருவனைத் தவிர சொல்வதற்கும் கேட்பதற்கும் ஆராய்வதற்கும் யார் வல்லவர்.

போகமதிலுற்பவித்து மோங்கும்பயனின்றித்
தாகமிகவுற்றிருப்பார் தாரணிக்குள்—வாகான
காவிமீரக்கண்டக் கழுதைகளென்செய்யுமவர்
தேகதெசை சோாவிடில். 66

உரை:—பூமிக்குள் மிகவும் வளமைபொருந்திய காசுமீர கண்டத்தில் கழுதைகளானவைகள் பிறந்திருந்தாலும் அவைகள் என்ன பலத்தை யடையும். அத்தன்மைபோல் யோகத்திற் பிறந்தாலும் உயர்ச்சி செய்யும்படியான யோககாரகதிசை வாராதாயின் அந்தப்போகபலனனுபவமில்லாமல் ஆசையை மாத்திரமிகுதியா யடைந்திருப்பார்கள்.

ஆதித்தன்முன்னாயறைந் தோரகத்தவரேல்
மீதுற்றுலாயபயன் வேறேது—காதகத்தில்
கைவந்தார்மீதுற்றால் யாதளிப்பார்காசியினியில்
மெய்வத்தார்க்காமதை நீ வேண்டு. 67

உரை:—பூமியின்கண் சூரியன் முதலாகச் சொல்லாநின்ற கிரகங்களெல்லாம் பாபிகளாய்விட்டால் அவர்கள் உச்சம் ஆட்சி நட்பு முதலாகிய பலன்களை யடைந்ததனால் வரும் பயனென்ன சொல்லுகையில் கைதேர்ந்தவர்கள் பலவான்களாயிருந்தால் எந்தப் பலத்தைக் கொடுப்பார்களோ அந்தப் பலன் சரீரமுடையவர்களுக்குண்டாகும். அதை நீ சொல்வாயாக.

RangaRakes tamilnavarasam.com

கோவிந்ததீக்ஷதர்தங் கொள்கைபினுற்செப்புகின்ற
மாவித்தநூலின் வழக்கறிந்து—தேவின்
தருப்போற்றும்பிண்டியன் செல்வன்சீர்கூறி
வருபவனப்பாவையன் வந்து. 68

உரை:—தெய்வீகமாயிருக்கிற கற்பகத்தரு ஜோதிசெய்யும் அசோக விருக்ஷத்தின்கீழ் வாசஞ்செய்கின்ற அருகதேவதையினுடைய பெருமையைச் சொல்லிவாராநின்ற அப்பாவையரென்பவர் கோவிந்த தீக்ஷதருடைய அக்கிரகாரத்தினுல் பெருமை பொருந்திய இந்தத் தாண்டவமாலையைச் சோதிடநடையை அறிந்து செப்பியதாகும்.

ஆதியாஞ்செய்யுளோ ராருமறைத்தின்
மீதிரண்டாய்ச்செப்பினுன் மேதினியில்—வேதியன்வாழ்
ஆண்டகையனுண்டி மகிபனருள்வணிகன்
தாண்டவன்பேரைத் தரித்து. 69

உரை:—இவ்வுலகத்தில் அருக அத்தனனுகிய அப்பாவையன் மனிதர்க்கொத்த நடையினையுடைய ஆண்டிமகிபன் குமாரன் வணிகனுகிய தாண்டவராயனுடைய பேரைத் தரித்து ஆதிமுதல் அறுபத்தெட்டு பாடலாகச் செப்பினுன்.

தாண்டவமாலை முற்றிற்று.

RangaRakes tamilnavarasam.com

# பலகறை ஆரூடம்

## கணேசர் தோத்திரம்

*எண்சீரடி விருத்தம்*

ஆதிகஜானனமூர்த்தி அம்பிகையின்புத்ரா
    அனுதினமுமுனை துதிக்கும் அன்பர்மித்ரா
ஜோதிடசாஸ்திர மெழுத உனைதுதித்து
    சொல்லுகின்றேன் ஆரூடபலனையானும்
நீதியாயானுரைக்கும் பலன்களெல்லாம்
    நீணிலத்தோர்க்குண்மையாய் விளங்கச்செய்வாய்
பாதிமதியணிந்தசிவ னருளால்வந்த
    பக்தரக்ஷகாஎந்தன் குருவேபோற்றி. ௧

உரை:—ஆதிபரப்பிரம்ம சொருபமாய் விளங்கி பார்வதியின் புத்ரனுயமர்ந்து, சதாகாலமும் பத்தியுடனே துதித்து பணியும் அன்பர்கள் மனதிலமர்ந்த மித்ரனே! யான் ஜோதிட சாஸ்திர மெழுதுவதற்கு உன்னை தியானஞ்செய்து ஆரூடபலன் சொல்வதற்கு எனது மனதிலமர்ந்து ஞாபகசக்தியுடன் அவரவர் மனதிலிருப்பதையும், அவர்கள் நினைந்ததையும் யான் குறிப்பாய் சொல்வதற்காக சிவபுத்ரனுகிய உனையே குருவாய் மதித்து நம்பினேன். பக்தரக்ஷகா! எந்தன் குருவாகிய விநாயகமூர்த்தியே! உமது மலரடியை நமஸ்கரிக்கின்றேன்.

## ஜோதிடன் தன்மை

*எண்சீரடி விருத்தம்*

மனிதவகுப்பில் பிறந்துவளர்ந்திட்டாலும்
    மனதிலேதுர்க்குணங்க ளணுகிடாமல்
இனிதான ஜீவகாருண்யத்தோடும்
    ஈஸ்வரதியானத்தோ டிருக்கவேண்டும்
முனிவில்லாசாந்தமன தாயிருந்து
    முகமலர்ச்சியாகவே ஜாதகர்க்கு
கனிவுடனேபலாபலனை சொல்வோர்தன்னை
    காசினியில்ஜோதிடரென் றுரைக்கலாமே. ௨

உரை:—மனித வகுப்பிலே பிறந்து குழந்தை பருவத்தில் தாய்ப்பாலருந்தி அன்னசாரத்தால் அவயவத்தை வளர்த்து, ஆண் பிள்ளையென்று உலகோர் புகழுந்தன்மையான ஜோதிடர்

RangaRakes tamilnavarasam.com

நிலை எவ்விதமா யிருக்கவேண்டுமெனருல் கோபம், குரோதம், லோபம், மோகம், மதம், மாச்சரியம், இடும்பை, வேட்கையென்னும் அஷ்டவித துர்க்குணங்களையும் அருகில் வரவொட்டாமல் தடுத்து கோபம் குரோதம், வஞ்சகம், லோபம், பொருமை யென்பதை துரத்திவிட்டு, அடக்கம், தயாளம், சாந்தம், பொறுமை ஜீவகாருண்யமெனும் நற்குணங்களை துணைவகித்து, உத்தம சத்குருவாகிய ஆசானை அடுத்து அவர் கற்பிக்கும் ஜோதிட கணித சாஸ்திரத்தை ஞாபக சக்தியுடனும் புத்தி கூர்மையுடனும் கற்றுணர்ந்த தன்னிடத்தில் வந்து ஜோதிடங் கேட்கும் ஜாதகரின் நிலையறிந்து சொல்பவனே உலகத்தோர் புகழ்ந்துரைக்கும்படி ஜோதிட கணித வல்லோனாகும்.

## ஜோதிடன் ஆசார அனுஷ்டானம்

அருணோதயமெழுந்துகாலைக் கடன்முடித்து
ஆற்றில்ஸ்நானஞ்செய்துசுத்தமாக
மருவிலாபீதாம்பர மணிந்தே வெண்ணீறு
மாக்ஷிமையாய்த் திருமேனிதனிலணிந்து
குருவருளால்சிவஸ்துதி செய்துக்கொண்டு
குற்றமிலாமான்தோ லாசனத்திருந்து
தருமநெறிதவருமல் ஜாதகர்கட்கோதும்
தாரணியில்ஜோதிடவல்லோர் நிலைமைதானே. 8

உரை:—ஜோதிடரெனில் அறிவிற்சிறந்தோர் அருணோதயத்திலெழுந்து காலைக்கடன்களை முடித்து ஆற்றில் ஸ்நானஞ் செய்து சுத்தமான பட்டுபீதாம்பர முடுத்திக்கொண்டு திருமேனியில் விபூதி சந்தன மணிந்துகொண்டு குரு உபதேசித்தவிதமே சிவத்தியானமாய் சிவபூஜை முதலான தேவபூஜை நவக்கிரக பூஜைசெய்து பிரசாதம் புசித்து மான்தோலாசனத்தமர்ந்து தாம் பூலந்தரித்து, குருவருளால் தனக்குபதேசித்த ஜோதிட சாஸ்திர புத்தகங்களை தனக்கு முன்பாக வைத்துக் கொண்டு தன்னிடத்தில் வந்து ஜோதிடங் கேட்பவர்களின் ஜாதகபலனை பொறுமையோடு கணித்துப் பார்த்து திசாபுத்தி அந்தர முதலானவை கணித்தாராய்ந்து பலாபலன் சொல்வதும், அகஸ்மாத்தாய் ஆருடங் கேட்க வந்தவர்களின் மனநினைப்பவை யுணர்த்து அவர்கள் நாடிவந்த காரியம் ஆகாதென்றும் ஆகுமென்றும் இத்தனை நாள் பொறுத்து ஆகுமென்றும், ஜாதகர்க்கு காரிய சித்தியாவதற்கு நவக்கிரக பூஜைசெய்யும் தன்மையும் விபரமாய் புகல்வதுதான் ஜோதிடரின் [illegible]ன்மையாகும்.

## பலகறை எணிக்கை விபரம்

அன்பானநல்ல பலகறைகளாக
ஆராய்ந்துபார்த்தெடுத்து சொத்தையில்லா

RangaRakes tamilnavarasam.com

தன்மையுள்ளதுவெட்டு பார்த்தெடுத்து
    நலமுடனேபசுவின்பாலால் கழுவிவைத்து
இன்பமாய்பூஜைசெய்யும் ஸ்தானந்தன்னில்
    இனிதுடனேவைத்து நவக்கிரகபூஜை
தன்மையுடன்செய்து தூபதீபாராதனையும்செய்து
    தரைதனிலேபோட்டுபலன் சொல்லுவீரே. 4

உரை:—சொத்தையில்லாமலும் அதிக பருமனில்லாமலும், சரியான அழகமைந்த பலகறைகளில் எட்டு சரியாய்ப் பொறுக்கி எடுத்து வைத்துக்கொண்டு பசுவின் பாலில் கழுவி பூஜா இடத்தில் வைத்து நவக்கிரக பூஜைசெய்து பலகறைக்கு தூபதீபாராதனை செய்து வலதுகரத்திலெடுத்து பாச்சிகையாடுவதுபோல உருட்டிப் போட்டு எத்தனை நம்பர் வருகிறதோ அதனை ஓர் கற்பலகையிலாவது கடிதத்திலாவது எழுதிவைத்துக்கொண்டும் இப்படியே மூன்றுதரமும் பலகறையை உருட்டிப்போட்டு அந்தந்த சமயத்தில் வரும் நெம்பர்களையும் எழுதி மூன்றுமுறை விழுந்த நெம்பர்கட்குந் தகுந்தபடி பலன் சொல்லவேண்டியது.

## சூரியன் - சந்திரன் - சூரியன்

1 - 2 - 1 -அதமம்

### சல்மலி தர்சனம்

சூரியனும்சந்திரனும் ஆதித்தன்தான்
    சூழ்ந்திருந்தால்யாத்திரை செல்வமனமுண்டாகும்
காரியக்கேடலைச்சலுடன் கஷ்டநஷ்டம்
    காணுமேபகையாவா ரெவர்களுக்கும்
வீரியமில்லாமரண கஷ்டம்போல
    விளங்கும்ஒன்றிரண்டொன்றானால் மத்திபமதாகும்
தாரிவிந்தவாருடம் தகுதியல்ல
    தரணியில்வாழ்ஜோதிடரே கவனிப்பீரே. 6

உரை:—சூரியன், சந்திரன், ஆதித்தனும் சூழ்ந்து பலகறை நெம்பரில் 1-2-1-ஆனால் சல்மலி தரிசனமாகும் அதன்பலன் பல விதமான கஷ்டநஷ்டமும் காரியக்கேடலைச்சலுமான துன்பமும் துயரமும், இனஜன விரோதமும் வறுமையும் வியாதியும் மரண கண்டம் முதலான வேதனையும் நேரிடுவதால் இந்த ஆருடம் தகுதியானதல்ல. அதமமாய் விளங்குவதுடன் பொல்லாததாகையால் இது தகாது.

RangaRakes tamilnavarasam.com

### சூரியன் - ஆதித்தன் - சந்திரன்

1 - 1 - 2 - உத்தமம்

### கற்பகத்தரு தரிசனம்

ஆதித்தன்சூரியன் சந்திரனுமாக
அமைந்துஒன்றொன் றிரண்டுமானால்
ஜோதிடரேஇதுஉத்தம மாமென்றோதி
சொல்லுவீர் ஜாதகர்க்கு பலனைத்தானே
பூதலத்திலிவன் நினைத்த தெல்லாங்கூடும்
பொன்பொருளும்கைகூடும் பந்துமித்ரர்
ஆதரவாயிருப்பார்கள் தன்மையான
ஆருடபலனென்று புகலுவீரே. 6

உரை:—ஆதித்தன், சூரியன், சந்திரன் உதயமானால் கற்பகத்தரு தரிசன பலத்தின்படியே 1-1-2-ஆனால் உத்தமமாகும். இதன் பலன் ஆருடம் கேட்கவந்தவன் மனதில் நினைத்த காரிய மெல்லாம் ஜெயமாகும். பொன், பொருள் கையில் வரத்துண்டாகும். பந்து மித்திரர் சகாயமாயிருப்பதுடன் அநேகவிதமான தன்மை செய்து ஆதரவாயிருப்பார்கள்.

### சூரியன் - செவ்வாய் - இராகு

1 - 3 - 8 - உத்தமம்

### பூரணகும்ப தரிசனம்

தினகரனும்செவ்வாயும் இராகுமாக
திகழொன்றுமூன்றெட்டு தெம்பர்வந்தால்
மனமகிழ்பூரணகும்ப தரிசனந்தான்
மாட்சியுடனே கிடைத்துத் தமமேயாகும்
இனமானவாருட பலனேதென்று
இசைந்தஉத்தமமாகி சரீராரோக்யம்
தனதான்யசம்பத்துண் டாகுமென்று
தரணியில்வாழ்ஜோதிடரே புகலுவீரே. 7

உரை:—பலகறைகளை உருட்டி தெம்பரெடுக்கும்போது தினகரனும், ராகு செவ்வாயுமாக 1-3-8-ஆனால் பூரணகும்ப தரிசனம் உத்தமமாகும். இதன் பல னெவ்விதமென்றால் மனோத் சாகமும், நினைத்தகாரியம் ஜெயமும், சரீராரோக்யமும், உத்யோக விர்த்தியும், வித்யாலாபமும் கிடைத்து வியாபார விருத்தியும் திரவிய சம்பத்துமுண்டாகுமென்று ஆருடம் கேட்க வந்தவர்களுக்கு அன்புடன் சொல்லவேண்டும்.

RangaRakes tamilnavarasam.com

## சூரியன் - புதன் - சனி

### 1—4—7 - மத்திபம்

### பிரியஜன தரிசனம்

சூரியனும்புதன் சனியும் சேர்ந்துநிற்க
சொல்லரியதொன்றுநான்கேழ் மத்திபமேயாகும்
தாரிலும்பிரியஜன தரிசனத்தின்
தக்கபலன்யாழுரைப்பேன் கவனிப்பீர்கள்
பாரிலுறும்பலதுன்பம் விலகிப்போகும்
பணமுடன்சுகதுக்க மில்லாமற்றான்
தாரணியில்சமபலனு மிருக்குமென்று
சாற்றுவீராருடபலன் கேட்போருக்கே. 8

உரை:—சூரியனும், புதனும், சனியும், சேர்ந்து நிற்க 1-4-7-நெம்பரின்படி மத்திப பலனானாலும் பிரியஜன தரிசனமாகையால் இது வரையில் அநுபவித்த கஷ்டநஷ்டமெல்லாம் விலகினாலும் சுகதுக்கமில்லாமல் சமபலனாக உலகில் ஜீவித்திருப்பார்களென்று ஆருடங் கேட்க வந்தவர்களுக்கு அன்புடன் சொல்லவேண்டும். ஆனால், நவக்கிரகங்களின் பூஜைசெய்தால் சுகத்தை யனுபவிப்பதற்காகும்.

## சூரியன் - குரு - சுக்கிரன்

### 1—6—0 - உத்தமம்

### இலக்ஷ்மி தரிசனம்

பருதியுடன்குருசுக்கிரன் உதயமாக
பகரொன்றைந்தாறு உத்தமமேயாகும்
திருவாகும்மகாலக்ஷ்மி தரிசனந்தான்
தீரமுடன் ஆருடங் கேட்போருக்கு
பொருளுடனேதனத்தான்ய வியாபாரலாபம்
பொருத்தியேஉத்யோக கீர்த்தியோடும்
பெருமைமிகவிளங்குமென்று ஆருடத்தில்
பேசுதென்றுபுகல்வீர் ஜோதிடவல்லோரே. 9

உரை:—சூரியன், குரு, சுக்கிரன் உதயமாக 1—5—6-நெம்பர் வந்தால் உத்தமமாகும்படியான இலக்ஷ்மி தரிசனம் கிடைக்கும். அதன் பலனாகும் விபரீதல்விகமாதுமென்றால், ஆருடம் கேட்க வந்தவர்களுக்கு பொன்பொருளும் தனந்தான்ய சம்பத்தும் வியாபார லாபமும் உத்யோக மேன்மையும் கீர்த்தியும் விளங்கி சுகானந்தமா யிருப்பதற்காகும்.

## சூரியன் - சுக்கிரன் - குரு

### 1—6—5 - மத்திபம்

### மிருத்தேக தரிசனம்

சூரியனும்சுக்கிரனும் வியாழன்தோன்ற
 மூழ்த்தொன்றுறைந்துவந்தால் மத்திபமேயாகும்
நேரிலருமிருத்தேக தரிசனந்தான்
 நேரிட்டால்வயிற்றுவலி சிறையும்வாய்க்கும்
பாரிலருமாருடங் கேட்போருக்கு
 பகருவாய்மரணகண்ட மென்றிப்போது
சீரிலருநவக்கிரக பூஜைசெய்ய
 சித்தமகிழ்வாயுரைப்பீர் ஜோதிடவல்லோரே. 10

உரை:—சூரியனும், சுக்கிரனும், வியாழனுமாக தோன்றி 1-6-5-நெம்பர் வந்தால் மத்திபமாகும் மிருத்தேக தரிசனமாகவை களாகும். அதன் பலன் ஆருடங் கேட்க வந்தவர்களுக்கு வயிற்று வலியினால் பலவித வியாதிகள் சூழ்ந்து கஷ்டப்படுவதுடன் சிறை துன்பம் கஷ்டநஷ்டமும் கவலையும் நேரிட்டு மரணகண்ட முண்டாகும். ஆகையால், நவக்கிரக பூஜைசெய்து நன்மை தரும் பலத் பக்தியானந்தமா யிருக்கவேண்டும்.

## சூரியன் - சனி - புதன்

### 1—7—4 - உத்தமம்

### தேவவிமான தரிசனம்

தினகரனும்சனிபகவான் புதனுமாக
 திகழொன்றேழ்நான்கு உத்தமமேயாகும்
கனமான தேவவிமான தரிசனமேயாகும்
 காசினியினிமேலே சுகமுண்டாகி
இனஜனமும்பந்து மித்திரர்கள்வாழ்த்த
 இஷ்டமுடன் ஜீவனமும் நடக்கும்நன்றாய்
மனமகிழ்வாயிருந்தாலும் சிலநாள்கஷ்டம்
 மானிலத்தோர்திடுக்கிடவந் தெய்தும்பாரே. 11

உரை:—ஆதித்தனும், சனியும், புதனும் தோற்றமாக 1-7-4 நெம்பர் வந்தால் உத்தமமாகும். தேவவிமான தரிசனமாகும். இதன் பலன் எவ்விதமென்றால் ஆருடம் கேட்க வந்தவர்களுக்கு இனிமேல் சுகமுண்டாகி இனஜன பந்துமித்திரர் புத்திர களத்திராதியோர்க ளெல்லோரும் புகழ்ந்துரைக்கும்படியாக வியாபாரமும் உத்தியோகஜீவனம் நடந்து சுக சவுக்கியமா யிருப்பதற்கேதும். ஆனால் சிலநாள் பொறுத்து சகலரும் கண்டு மனமிரளும்படியான கஷ்ட நஷ்டத்தினால் கலங்கும்படியாயிருக்கும்.

## சூரியன் - ராகு - செவ்வாய்

### 1—6—3 - மத்திபம்

### காராக்ரக தரிசனம்

சூரியனும்ராகுசெவ்வாய் தோற்றமாக
    சூழ்ந்தொன்று எட்டுடனேமூன்றுவந்தால்
காரியமும்மத்திபமே யாகுந்தானே
    காராக்ரகதரிசனத்தின் பலனைக்கேட்பாய்
வீரியமில்லாவித்தை புத்தியும்மழுங்கி
    வேதனைக்கும்வித்தாகி விளங்கும்வியாதி
காரியபங்கமாகி திகைத்துநிற்பார்
    காசினியி லாருடங் கேட்கவந்தோரே. 12

உரை:—சூரியபகவானும், இராகுபகவானும், செவ்வாய் பகவானும் தோற்றமாகி 1-5-9-நெம்பர்கள் வந்தால் மத்திம பலனாகும். காராக்ரக தரிசனபலன். இதன் காரணமெவ்விதமெனில் மனதைரிய மில்லாத வியாகூலமும், மனச்சோர்வும், வித்தை புத்தியில்லாமலும் சோம்பலும், துன்பமும் நேர்ந்து திகைத்திருப்பார்கள். ஆகையால் அவர்கள் சதாகாலமும் நவக்கிரக பூஜை செய்துகொண்டு சஷ்டி விரதமிருக்கவேண்டும்.

## சந்திரன் - சூரியன் - ஆதித்தன்

### 2—1—1 - உத்தமம்

### பத்மவன தரிசனம்

சந்திரனும்சூரியன் ஆதித்தனோடு
    சார்ந்துரெண்டொன்றுமொன் றுதயமானால்
பந்தமாமுத்தமமே யாகுமென்றும்
    பத்மவனதரிசனமு மாகுமென்பீர்
சொந்ததேசத்தில்சுகமாய் ஜீவித்தன்பாய்
    சொர்ணம்வெள்ளிபூஸ்திதியு மிகக்கிடைத்து
சந்தோஷவியாபார உத்தியோகலாபம்
    சார்ந்திடுமேநான்கு மாதத்தில்தானே. 13

உரை:—சந்திரனும் இரவியும் சூரியனும் உதயமாக 2-1-1 இலக்கங்கள் வந்தால் உத்தமமாகும். பத்மவன தரிசனமென் றுணர்வீர்கள். இதன் பலன் இன்னும் நான்கு மாதத்தில் தனது சுய தேசத்திலேயே நல்ல உத்தியோகங் கிடைத்தாவது, வியாபாரஞ் செய்தாவது பலவிதமாய் பொருள் சேர்த்து பொன்நகை, வெள்ளி ஆபரணாதிகளை யணிந்து ஆஸ்தி பூஸ்திதியுடன் கீர்த்திப்ரகாசமாய் ஜீவித்திருப்பார்கள்.

RangaRakes tamilnavarasam.com

## சந்திரன் - இராகு - சந்திரன்

### 2—8—2 - உத்தமம்

### விஜயலஷ்மி தரிசனம்

*திங்களுடன் ராகு சந்திரனுமாக*
*திறமையுடனே தோற்றமாயிருக்க*
*செங்கமலவிஜயலக்ஷ்மி தரிசனந்தான்*
*சேர்ந்திருக்கும்பலன்விபரம் கவனிப்பீர்கள்*
*மங்காதகீர்த்தியொடு நல்லவார்த்தை*
*மானிலத்தோர்பேசுவார் பிரபுக்களாலே:*
*தங்கம்வெள்ளிதானியங்கள் சகாயஞ்செய்து*
*தரணியிலேஜீவிக்கச் செய்குவாரே.* 14

உரை:—சந்திரன், இராகு, சந்திரனும் உதயமாக 2-8-2 உத்தமமானால் விஜயலக்ஷ்மி தரிசனமாகும் இதன் பலன் தன தான்ய சம்பத்துடன் பிரபுக்களின் சகாயமும் உத்தியோகவிருத்தியாலும் வியாபார லாபத்தாலும் வெள்ளி பொன் ஆபரணாதிகள் சேகரித்து ஆஸ்தி பூஸ்திதியுடன் பெருமையாய் வாழ்ந்திருப்பார்கள்.

## சந்திரன் - செவ்வாய் - சனி

### 2—8—7|- மத்திபம்

### மகமேரு தரிசனம்

*சந்திரனும்செவ்வாயும் சனியுமாக*
*சார்ந்திரண்டுமூன்றேழும் மத்திபமேயாகும்*
*தொந்தரையும்துன்பமும் பலகஷ்டங்கள்*
*தோற்றுமேவறுமைபிணி கவலைநஷ்டம்*
*எந்ததேசமுந்திரித் தலைந்திட்டாலும்*
*எவர்களுக்கும்பகையாகி கலங்குவார்கள்*
*இத்தவிதமாயிருந்தேழ் மாதமானல்*
*இசைமாய்பொருள்தேடி:ஜீவிப்பாரே.* 16

உரை:—சந்திரன், செவ்வாய், சனியும் உதயமாக 2-8-7 வது நெம்பர் வந்தால் மகமேரு தரிசனமாகும். அதன் பலன் உத்தியோகத்தில் பகையும், வியாபார நஷ்டமு முண்டாவதுடன், வறுமை பிணி கலகமும் நேரிட்டு துயரப்படச் செய்யும். ஆனல் ஏழு மாதம் பொறுத்து மனதைரியத்துடனும் உத்தியோகத்தினுலும் வியாபாரத்தினுலும் திரவிய சேகரஞ்செய்து இன ஜன பந்துமித்திரர்கள் புகழ்ந்துரைக்கும்படியான பிரபுத்தன்மையாய் ஜீவித்திருப்பார்கள்.

RangaRakes tamilnavarasam.com

## சந்திரன் - புதன் - சுக்கிரன்

### 2—4—6 - மத்திபம்

### தனக்கினி தரிசனம்

மதியுடனேபுதன் சுக்கிரனுமாக
 மாட்சியாயிரண்டு நான்காறுனுல்மத்திபமேயாகும்
விதிமுறைபோல்சுகமாக ஜீவித்தாலும்
 விசனசாகரத்திலுற்ற கலக்கம்சூழ்ந்து
நிதியற்றுநிஷ்டூரத் தாலுற்றர்கள்
 நிந்தைசெய்துபரிகாசித் திகழ்வார்சொந்த
பதிவிடுத்துமறுநகரிற் சென்றுத்யோகம்
 பண்புடனேசெய்து ஜீவிப்பாரே. 16

**உரை:**—சந்திரன், புதன், சுக்கிரன் உதயமாக 2-4-6 நெம்பர் வந்தால் மத்திப பலனாகும். அதனால் தனது கைப்பொருளெல்லாமிழந்து பந்து மித்திரர்களின் பகைமேலிட்டு, துயரத்தினுல் கலங்கி வறுமையும் துன்பமுமடைந்து கஷ்டநிஷ்டூரத்தாற் கலங்கிப் பலபேர் பரிகாசஞ் செய்யும்படியான ஏழையாய் கஷ்டத்தை யனுபவித்து சகிக்க முடியாத மனவிசாரத்துடனே, மறுதேசத்திற் சென்று மேன்மையான உத்யோகஞ் செய்து ஜீவித்துக்கொண்டிருப்பதற்காகும்.

## சந்திரன் - குரு - வியாழன்

### 2—6—5 - உத்தமம்

### பத்மநிதி தரிசனம்

அன்பாககுருவுடனே மதிவியாழன்
 அமர்ந்திரண்டைந்தைந் துத்தமமேயாகும்
நன்மையாயிருப்பதனுல் உத்யோகவிர்த்தி
 நலமானவியாபார லாபமுண்டாம்
பொன்பொருளும்சேர்ந்தினிதாய் பூமிலாபம்
 பொருந்தியேதனவந்த ராய்ஜீவிப்பார்
இன்னவிதமானநற் பலனேடன்பாய்
 இராஜயோகம்போல வாழ்குவாரே. 17

**உரை:**—சந்திரன்-குரு-வியாழன் உதயமாக 2-6-5-நெம்பர் வந்தால் உத்தமமான பத்மநிதி தரிசனமாகும். இதன் பலன் உத்யோகவிர்த்தி வியாபாரலாபம், பொன் பொருள் சேர்க்கை பூமி லாபம் பொருந்திய தனவந்தராய் ஜீவிப்பதுடன் இனஜன புத்துமித்திரர்களனைவரும் புகழ்ந்துரைக்கும்படியான இராஜயோகத்தை யனுபவிப்பார்கள்.

### சந்திரன் - சுக்கிரன் - புதன்

2—6—4 - மத்திமம்

### சர்ப்ப தரிசனம்

சந்திரனும்சுக்கிரனும் புதனுமாக
சார்ந்திருக்க இரண்டாறு நான்குமானால்
அந்தமாம்சர்ப்பதரிசனம் மத்திபமேயாகும்
அவனியிலேஒருவருஷ காலமட்டும்
பந்துமித்திரர்க்குபகை யாய்விளங்கி
பாக்கியமில்லாவறுமை யாகிப்பின்பு
சொந்தமுள்ளமனிதனால் வியாபாரஞ்செய்து
சொர்னம்வெள்ளிசேகரித்து ஜீவிப்பாரே. 18

உரை:—சந்திரன் சுக்கிரன் புதன் உதயமாக 2-6-4-நெம்பர் வந்தால் மத்திபபலன் சர்ப்பதரிசனமாகும். அதன் பலன் ஒரு வருஷகாலம்வரையில் வறுமையாகத் திகைத்து, மனமிரண்டு பந்துஜன மித்திரர்கட்கெல்லாம் பகையாய் விளங்கி பிறகு சொந்த மனிதன் சகாயத்திலே வர்த்தகஞ்செய்து, திரவிய சேகரஞ்செய்தும் பொன், வெள்ளி, ஆபரணம் சேகரித்து சுக சவுக்கியமாய் ஜீவித்திருப்பதற்காகும்.

### சந்திரன் - சனி - செவ்வாய்

2—7—8 - உத்தமம்

### சுவேதக்குடை தரிசனம்

மதிசனியும் செவ்வாயும்உதயமாக
மாணிபுடன் இரண்டேழ் மூன்றுத்தமமேயாகும்
நிதிசேரும்ஆண்மையுடன் வீரத்தன்மை
நீணிலத்தில்தனவந்த ராயிருந்து
அதிகசெல்வத்துடனே வாழ்ந்திருப்பார்
அகிலமதிலேசிறந்த தனவானென்ன
எதிரொருவரில்லாத சீமானாகி
எந்நாளும்வறுமையிலா ஜீவிப்பாரே. 19

உரை:—சந்திரனும், சனியும், செவ்வாயும் உதயமாக 2-7-8-நெம்பர் வந்தால் ஜாதகன் திரவியஞ் சேகரித்து ஆண்மையும் வீரியமும் தைரியமும் உற்சாகமும் பொருந்தி தனதான்ய சம்பத்துடனே வாழ்ந்திருப்பார்கள் தமது பந்துமித்திரர்களில் எவர்களும் தனக்கு நிகரில்லாத சீமானாக விளங்கி வறுமை நோயில்லாப் பெருமையாய் ஜீவித்திருப்பதற்காகும்.

RangaRakes tamilnavarasam.com

## சந்திரன் – இராகு – சந்திரன்

### 2 - 8 - 2 - மத்திபம்

### தயிர், நெய் தரிசனம்

சந்திரனும்ராகுமதி உதயமாக
சார்ந்தஇரண்டெட்டிரண்டு மத்திபமேயாகும்
நிந்தைசெய்வார்சகலருமே பிரபுக்களாவே
நீணிலத்தில்பயங்கர கஷ்டங்களாகும்
பந்துஜனமித்திரரால் சிலநாட்பின்னுவ்
பாக்கியசம்பத்துடனே வாழ்ந்திருந்து
சந்ததமும்பெருமைமிகும் கீர்த்தியோடும்
சவுக்கியமாய்குடும்பத்தில் ஜீவிப்பாரே. 20

உரை:—சந்திரன், ராகு, சந்திரன் உதயமாக 2-8-2-நெம்பர் வந்தால் மத்திபமாகும். தயிர் நெய் தரிசனம். இதன் பலன், மனச்சோர்வினுல் திகிலுற்றுச் சகலரும் பரிகசித்து இகழ்ந்துவரக்கும்படியாய் கஷ்ட நஷ்டத்தை யனுபவித்து பிரபுக்களால் பயங்கரமும் திகிலுண்டாகி சிலநாள் பொறுத்து உத்தியோகஞ் செய்தாவது வர்த்தகஞ் செய்தாவது திரவியசேகரஞ் செய்து கீர்த்திப் பிரகாசமாய் ஜீவித்து சரீராரோக்கியமாய் குடும்பத்தில் சுகமாய் வாழ்ந்திருப்பார்கள்.

## செவ்வாய் – சூரியன் – இராகு

### 3 - 1 - 9 - உத்தமம்

### மதகஜ தரிசனம்

செவ்வாயும்சூரியனும் இராகும்தோன்ற
சேர்த்தமூன்றென்றெட்டு உத்தமமேயாகும்
ஒவ்வியேமதகஜ தரிசனமேயாகும்
ஓங்கியேகீர்த்தியுடன் வியாபாரலாபம்
எவ்விதமும்பெற்று தனவந்தராக
எவர்களுமேபுகழ்ந்துரைக்க ஜீவிப்பார்கள்
அவ்வியமிலாப்பிரபு நேசமாகி
அனைவர்க்கும்விருந்திட்டு ஜீவிப்பாரே. 21

உரை:—செவ்வாயும் சூரியனும் இராகுவும் உதயமாக 3-1-9-நெம்பர் வந்தால் உத்தமமாகும் மதகஜ தரிசனம் இதன் பலன் விபரம்: மனோற்சாகமும் கீர்த்தியும் பொருந்தி உத்தியோக விர்த்தியும் வியாபார லாபத்துடனும் திரவிய சேகரஞ்செய்து மனோல்லாசத்துடன் பிரபுக்கள் நேசமாகி சகலருக்கும் விருந்து செய்து சீமானாய் விளங்கி பெருமையாய் ஜீவித்திருப்பதாகும்.



RangaRakes tamilnavarasam.com

### செவ்வாய் - சந்திரன் - சனி

8 - 2 - 7 - மத்திபம்

### கேதகி தரிசனம்

குஜனுடனேசந்திரனும் சனியுமாக
    குதித்தமூன்றிரண்டேழும் மத்திபமேயாகும்
இசையகேதகி தரிசனமுமாகும்
    இதன்பலனேபயங்கரமாய் நான்குமாதம்
விசையாககழித்துவிட்டால் தனவானாக
    விளங்கியேசுகமாக பொருளும்தேடி
புஜபலபராக்ரமமுடன் பலரும்மெச்ச
    பூலோகந்தனில்ஜீவித் திருப்பர்தானே. 22

உரை:—செவ்வாயும் சந்திரனும் சனியுமாய் உதயமாக 8-2-7-நெம்பர் வந்தால் மத்திபமாகும். இதன் பலன் கேதகி தரிசனம். இதனால் மன பயங்கரமாயிருந்து சோம்பலும் வறுமையுமாயிருக்கும். நான்கு மாதம் கழிந்துவிட்டால் உத்தியோக விர்த்தியாலும் வியாபார லாபத்தினாலும் திரவிய சேகரஞ்செய்து புஜபல பராக்கிரமமுடனும் தைரியத்துடனும் தனவானாக ஜீவித்திருப்பதற்காகும்.

### செவ்வாய் - குஜன் - சுக்கிரன்

8 - 8 - 6 - உத்தமம்

### மன்மத தரிசனம்

சேப்சுக்ரன்செவ்வாயும் உதயமாக
    சேர்த்தமூன்றுடன் மூன்றுமாக
வாய்த்தமன்மததரிசனம் முத்தமமேயாகும்
    வடிவழகிபெண்சேர்க்கை மனதுற்சாகம்
ஆய்த்தவர்த்தகலாபம் உத்தியோகவிர்த்தி
    ஆறுமாதத்திற்குள்ளே பூமிலாபம்
வேய்த்துநற்பொருள்தேடி சீவிப்பார்கள்
    வேணசுகம்கீர்த்தியுண்டு கவனிப்பீரே. 23

உரை:—செவ்வாய், குஜன், சுக்கிரனுதயமாகி 8-8-6-நெம்பர் வந்தால் உத்தமமாகும். மன்மத தரிசன பலனுயிருக்கும். இதன் பலன் வர்த்தகலாபம் உத்தியோக விர்த்தியினாலும் ஆறு மாதத்திற்குள் பூமிலாபமும் கிடைத்து, திரவியசம்பத்துடனே ஜீவித்திருப்பார்கள். இதனால் பந்துமித்திரரெல்லாம் புகழும் கீர்த்தி பிரபலமாயிருப்பார்கள்.

## செவ்வாய் - புதன் - வியாழன்

### 3—4—5 - உத்தமம்

### கேதகி தரிசனம்

செவ்வாயும்புதன் குருவுந் தோற்றமாக
சேர்ந்தமூன்றுடன் நான்கும் ஐந்துமானால்
ஒவ்வியேகேதகி தரிசனமேயாகும்
ஓதுபுகழ்நீசர்களின் துணையினாலே
எவ்விதத்தும்பொருள்தேடி விருதுங்கொண்டு
எவர்களும்புகழ்ந்துரைக்க ஜீவிப்பார்கள்
அவ்விதமாயமைந்தாலும் ஏற்றத்தாழ்வாய்
அமைந்துமத்திபபலனும் விளங்குவாயே. 24

உரை:—செவ்வாயும் புதனும் குருவும் தோற்றமாக 3-4-5 தெம்பர் வந்தால் உத்தமமான கேதகி தரிசனமாகும். இதன் பலன் நீசர்களின் துணையினால் எவ்விதமாகிலும் சரியே திரவிய சேகரஞ் செய்து விருதுகொடிபிடிக்குந் தன்மையான வீரப்ரதாபமான தனவானாயிருந்தாலும் சிலநாள் ஏழையாகவும் சிலநாள் பிரபுவாகவும் ஏற்றத்தாழ்வாயிருப்பதற்காகும்.

## செவ்வாய் - புதன் - வியாழன்

### 3—4—5 - உத்தமம்

### மதகஜ தரிசனம்

அன்பாகக்குருபுதனும் குஜனுமாக
அமர்ந்துமூன்றுநான் கைந்துத்தமமேயாகும்
தன்மையுள்ளமதகஜ தரிசனமுமாகும்
தகுந்தபொன்பொருள்சேர்ந் தனவானாக
நன்மையுடன்வாழ்ந்திருப்பா ருலகமீது
நலமுடனேபந்து மித்திரர்களோடு
இன்பமாகவல்லமையும் பொருந்திநன்றாய்
இனிதுடனேஜீவிப்பார் கவனிப்பீரே. 25

உரை:—குஜன், புதன், குரு உதயமாக 3-4-5-தெம்பர் வந்தால் உத்தமமாகும், மதகஜ தரிசனம் இதன் பலன் விபரமெவ்விதமெனில், மனைவி மக்கள் சுற்றத்தார் சத்ருஜெயமும் பெற்று உத்யோகவிர்த்தியினுடன் [illegible] பொன், பொருள் தேடி சுகசீவியாய் மனைவி மக்களுடனே வாழ்ந்திருப்பார்கள்.

RangaRakes tamilnavarasam.com

### குருன் - சுக்கிரன் - செவ்வாய்

3—6—3 - உத்தமம்

### பூமிதேவி தரிசனம்

செவ்வாயும்சுக்கிரனும் குருனுமாக
சேர்ந்தாறுமூன்றுவந்தால் உத்தமத்தான்
எவ்விதமும்வியாபார உத்தியோகத்தால்
ஏற்றபொருள்தேடியே தனவானுக
ஒவ்வியேபிரபுவென கீர்த்தியோங்கி
உலகத்தில்வாழ்ந்திருப்பார் சீமானுக
இவ்விதமாய்நல்லபலன் கிடைத்துநன்றாய்
இப்புவியில்ஜீவிப்பார் கவனிப்பீரே. 26

உரை:—செவ்வாய், சுக்கிரனும், குருனும் உதயமாக 3-6-3-றெம்பர் வந்தால் உத்தமம், பூமிதேவி தரிசனமாகும். இதன் பலன் விபரம், தகுந்தவிதமான உத்யோகஞ் செய்தும், வியாபாரஞ் செய்தும் பொருள் சேகரஞ் செய்து கீர்த்திப்பிரகாசமாய் ஜீவித்து மனைவி மைந்தர்களுடனே வாழ்ந்திருப்பதற்காகும்.

### செவ்வாய் - சனி - சந்திரன்

8—7—2 - மத்திபம்

### சல்மலி தரிசனம்

நிலமகனுஞ்சனியுடனே மதியுமாக
நீடியமூன்றேழ்ரெண்டும் மத்திபத்தான்
பலபொருளுஞ்செலவழித்து திகைத்துநிற்பார்
பத்துமாதம்போனுல் கஷ்டந்தீர்த்து
குலமிலாபத்துமித்திரர்க ளோடு
காசினியிலுபாயமாய் பொருளைத்தேடி
நலமுடனேஜீவிப்பா ருலகமீது
நன்மதியால்பிழைத்திடுவார் கவனிப்பீரே. 27

உரை:—செவ்வாயும், சனியும், சந்திரனும் உதயமாக 3-7-2 நெம்பர் வந்தால் மத்திப பலனுகும். சல்மலி தரிசனம். இதன் பலன் கையிலுள்ள திரவியமெல்லாம்செலவழித்துவிட்டு, வறுமையாளரா யிருந்து பத்துமாதம் சென்றபிறகு, தமது பந்துமித்திரர்களுடைய உதவியும் உத்யோகவிர்த்தி, வியாபாரலாபமும் மென்மேலும் பெருகி திரவியஞ் சேகரித்து, அன்னவஸ்திரத்திற்கும் குறைவில்லாமல் ஜீவித்திருப்பார்கள்.

RangaRakes tamilnavarasam.com

### செவ்வாய் - ராகு - சூரியன்

3—8—1 - உத்தமம்

### சிந்தாமணி தரிசனம்

உக்ரசெவ்வாய்இராகு தினகரனுமாக
வந்துமூன்றெட்டொன்றுத் தமமேயாகும்
மிக்கவேபொருள்சேர்த்து களத்திரபுத்ர
மேன்மையுண்டாவதுடன் பந்துமித்திரர்
சிக்கில்லா நல்லுறவா யிருப்பதோடு
சீருடனேவெகுலாபம் வாய்க்குமின்னும்
பக்குவமாய்கல்வியுடன் ஞானம்வாய்க்கும்
பாரிலிவர்தன்பெருமை மிகவுண்டாமே. 29

உரை—செவ்வாயும், இராகுவும், சூரியனும் உதயமாக 3-8-1-நெம்பர் வந்தால் உத்தமமாகும், சிந்தாமணி தரிசனம், இதன் பலன் பற்பலவிதமாய்ப் பொருள் சேகரஞ்செய்து, மனைவி மைந்தர்களுடன் சுகசீவியாய் வாழ்ந்திருந்து, பந்துமித்திரர் உற்றார் உறவினர்களும் புகழ்ந்துரைக்கும்படியான கீர்த்தியும் கல்வியும் ஞானமும் பொருந்தி மிகவும் மேன்மையாக ஜீவித்திருப்பார்.

### புதன் - சூரியன் - சனி

4—1—7 - உத்தமம்

### ஐராவத தரிசனம்

புதனுடனேசூரியனும் சனியுமாக
பொருந்தியேநான்கொன்றேழ் உத்தமந்தான்
விதவிதமாய்க்கல்விவரும் ஞானமுண்டாம்
வியாபாரம்உத்யோகத் தாலேலாபம்
சதமானஆஸ்தி பூஸ்திகளோடு
சவுக்கியமாய்மனைவிமைந்த ருடன்சீவிப்பார்
இதமாகப்பெரியோர்க ளாசீர்வாதம்
இன்பமாகப்பெற்றினிதாய் வாழ்குவாரே.

உரை—புதன், சூரியன், சனியுமாய் உதயமாக 4-1-7 நெம்பர் வந்தால் உத்தம பலனாகும். இதன் விபரமென்னவெனில் கல்வியும் ஞானமும் பெற்று வியாபார லாபத்தாலும் உத்தியோக விர்த்தியாலும் பொருள் சேகரஞ்செய்து மனைவி மைந்தர் சுற்றத்தாருடனே சுகமாய் வாழ்ந்திருப்பதற்காகும்.

RangaRakes tamilnavarasam.com

### புதன் - சந்திரன் - சுக்கிரன்

### 4—2—6 - மத்திபம்

### பாத்திர தரிசனம்

மானுடனேமதிசுக்ர னுதயமாக
    மன்னுநான்கிரண்டாறு மத்திபமேயாகும்
பாலருந்தும்பாத்திர தரிசனந்தான்
    பந்துமித்ரரனைவருமே பகையாவார்கள்
ஞானமதிலேழ்மாதம் சென்றபின்னர்
    ஞாயம்சுவும்பேசும் சமர்த்தனாகி
சாலதிரவியந்தேடி தனவானாக
    சவுக்கியமாய்சீவிப்பார் கவனிப்பீரே. 80

உரை:—புதனும், சந்திரனும், சுக்கிரனும் உதயமாக 4-2-6 நெம்பர் வந்தால் பாத்திர தரிசனமாகும். மத்திம பலன். இதன் விபரம் பலவிதமாய் திரவிய சேகரஞ்செய்து மனோகர்வத்தினால் பலபேரை பகைத்து பந்துமித்திரரனைவருக்கும் பகையாகி கவலையாயிருந்து ஏழு மாதத்திற்குப் பிறகு, உத்தமனென்று பலபேர் புகழ்ந்துரைக்கும் கீர்த்திப் பிரகாசனாய் மதிமிகுந்து, சபையிற் சென்று ஞாயம்பேசி சகலருக்கும் நல்லவனெனும் பிரக்யாதியா யிருப்பதற்காகும்.

### புதன் - செவ்வாய் - வியாழன்

### 4—8—6 - உத்தமம்

### தேவாசுவ தரிசனம்

புதனுடனேசெவ்வாயும் வியாழனுந்தான்
    பொருந்தியேநான்குமூன் றைந் துத்தமத்தான்
பதமுடனேதேவாசுவ தரிசனந்தான்
    பகைவராலித்தனைநாள் வருந்தினாலும்
இதமுடனேபொருள்சேர்த்து பகைவரில்லா
    இன்பமுடன் துன்பமில்லா சுகவானாக
சுதன்மனையாள்பந்துமித்ர ருடனேயன்பாய்
    சூழ்புவியில்தனவானாய் சீவிப்பாரே. 81

உரை:—புதன், செவ்வாய், குருவும் உதயமாக 4-8-6 நெம்பர் வந்தால் உத்தமம். தேவாசுவ தரிசனமாகும். இதன் பலன் விபரமெவ்விதமெனில் இத்தனை நாளாய் பகைவர்களால் துன்பமனுபவித்து கஷ்டமுங் கவலையுமாயிருந்தாலும், இனி துன்பமும் துயரமுமில்லாமல் திரவியம் சேகரித்து சகலரும் தனக்கு மித்துருவாயிருந்து நன்மைசெய்வதுடன் தனது மனைவி மைந்தர் பந்துமித்திரர்களுடனே சுகமாய் சீவித்திருப்பதற்காகும்.

RangaRakes tamilnavarasam.com

### புதன் - மால் - புந்தி

4—4—4 - உத்தமம்

### ஆம்பிரவிருக்ஷ தரிசனம்

புந்தியுடன்மால்புதனு முதயமாக
 பொருந்தியேநான்குநான் குடனேநான்கு
இந்தவிதமாயிருந்தா லுத்தமந்தான்
 இனிதாய்ஆம்பிர விருக்ஷதரிசனந்தான்
செந்திருவாழ்வானந்த மாய்விளங்கி
 செல்வந்தராய்கீர்த்தி யாயிருந்து
பந்துமித்திராதிபுத்ர பாக்யத்தோடு
 பக்ஷமுடனேயுலகில் சீவிப்பாரே. 32

உரை:—புதன், மால், புந்தி, உதயமாக 4-4-4-நெம்பர் வந்தால் உத்தமமாகும். ஆம்பிரவிருக்ஷ தரிசனம். இதன் பலன் விபரம் இலக்ஷ்மி கடாக்ஷத்துடனே திரவிய சேகரஞ்செய்து மனைவி மைந்தர் சுற்றத்தாருடனே வெகு மேன்மையாய் வாழ்ந்திருந்து, சகலரும் தன்னை பிரபுவென்றழைக்குந் தன்மையான கீர்த்தி பிரகாசத்துடனே பந்துமித்திரர்களெல்லாம் புகழுந்தன்மையாய் சீவித்திருப்பார்கள். ஆனால் சங்கீத ஞானப்பிரியனாகவு மிருப்பதற்காகும்.

### புதன் - வியாழன் - செவ்வாய்

4—5—3 - உத்தமம்

### இரத்தகமல தரிசனம்

திருமாலும்வியாழனுடன் குஜனுமாக
 சேர்ந்துநான்கைந்துமூன் றுத்தமமேயாகும்
அருமைசேர்ரத்தகமல தரிசனந்தான்
 அழகுபெண்சேர்க்கையுண்டு தனவானாக
பொருள்சேர்ந்துகாணிபூமி கிடைத்துநன்றாய்
 பொன்வெள்ளியுமுமிகக் கிடைத்து
பெருமையாயுலகோர்முன் சீவித்தன்பாய்
 பேசுபுகழ் கீர்த்தியுடன் விளங்குவாரே. 33

உரை:—புதனும் வியாழனும் செவ்வாயும் உதயமாக 4-5-3 நெம்பர் வந்தால் உத்தமமாகும். இரத்தகமல தரிசனம். இதன் பலன் விபரம் அழகான பெண்களின் தரிசன சேர்க்கையும், சுக போக வைபவமும், திரவியசம்பத்தும் காணி பூமிலாபமும் பெற்று, பொன் வெள்ளி ஆபரணாதிகளும் சேகரித்து ஆனந்தமாய் சகலரும் தன்னைப் புகழ்ந்து பேசும் கீர்த்தியுடனே சீவித்திருப்பார்கள்.

RangaRakes tamilnavarasam.com

### புதன் - சுக்கிரன் - சந்திரன்

### 4—6—2 - உத்தமம்

### கேந்த்ர தரிசனம்

புதனுடனே சுக்கிரனும் சந்திரனுக
பொருந்திநான் காறுரெண் டுத்தமந்தான்
சதமென்றேதிரவிய லாபத்தோடு
சரீராரோக்கியம்பெற்று மகிழ்ந்தன்பாக
சுதன்களத்ராதிபந்து மித்ரரெல்லாம்
சூழ்ந்திருக்கும்பெருமையுட னுலகில்நாளும்
பதமாகசீவித்து வாழ்ந்திருக்கும்
பாக்கியத்தைப்பெற்றினிதாய் மகிழுவாரே. 84

உரை:—புதனும் சுக்கிரனும் சந்திரனும் உதயமாக 4-6-2. நெம்பர் வந்தால் உத்தமமான கேந்த்ர தரிசனமாகும். இதன் பலன் விபரம், தனதான்ய சம்பத்துடன் சரீராரோக்யம்பெற்று புத்திரமித்திரகளத்திராதியர் பந்துமித்திரர் கூட்டத்தாரெல்லாம் சூழ்ந்து ஆனந்தமாயிருக்கும் பெருமையுடன் பூலோகத்தில் சதாகாலமும் சுகானந்தமாகவே சீவித்து பாக்யவானு யிருப்ப பதற்காகும்.

### புதன் - சனி - சூரியன்

### 4—7—1 - உத்தமம்

### துளசிவன தரிசனம்

கணக்கனுடன் பரிதி உதயமாக
காணும்நாலேழ்ஒன்று முத்தமமேயாகும்
இணக்கமுள்ள துளசிவன தரிசனந்தான்
இன்பசுகம் சரீராரோக்கியமாகும்
வணக்கமுடன்பந்துமித்திரர் புகழ்ந்துபேச
வல்லமையாய்தனவந்தர் போன்றிருப்பர்
பணம்பாக்கியம்பொன்வெள்ளி ஆபரணங்களோடும்
பாக்கியமும்பெற்றினிதாய் சீவிப்பாரே. 85

உரை:—புதனும் சனி சூரியன் உதயமாக 4-7-1-நெம்பர் வந்தால் உத்தமமாகும். துளசிவன தரிசனம். இதன் பலன்: சரீராரோக்கியத்துடன் இன்பசுகா. ரந்தமாய் சீவித்து பந்துமித்திரர் புகழ்ந்து பேசுந்தன்மையுடன் தனவந்தனுக விளங்கி ஐசுவர்க்கியமாய் பொன் வெள்ளி ஆபரணாதிகளோடும் வாழ்ந்திருப்பதற்காகும்.

RangaRakes tamilnavarasam.com

## புதன் - இராகு - இராகு

### 4—8—8 - உத்தமம்

### ஐராவத தரிசனம்

புதனுடனே இராகு பாம்பிணங்கிசேர
 பொருந்திநாலெட்டெட்டு உத்தமந்தான்
சதமானஐராவத தரிசனந்தான்
 சம்பத்துமிகமகிழ்வாய் பெருகும்நல்ல
விதவிதமாய்வர்த்தகஞ்செய் தெந்தநாளும்
 விசனமில்லாமல்தனந் தான்யலாபம்
இதமாகவேபெற்று பாக்யவானாய்
 இருப்பார்களுலகினிலே கவனிப்பீரே. 36

உரை:—புதன் இராகு இராகுசேர 4-8-8 உத்தமமாகும். ஐராவத தரிசனம். இதன்பலன் எவ்விதமெனில் பலவிதமான வியாபாரத்தினுல் பொருள் சேகரஞ்செய்து தனதான்ய சம்பத்துடனே கீர்த்திப்பிரகாசமாய் ஐஸ்வரியவந்தனாய் விளங்கி சகல பாக்கியாதிபதியாய் மனைவி மைந்தர் பந்துமித்திரர்களுடனே ஆனந்தமாய் வாழ்ந்திருப்பதற்காகும்.

## வியாழன் - சூரியன் - சுக்கிரன்

### 5—1—6 - மத்திபம்

### நிரோதக தடாக தரிசனம்

குருசூரியன்சுக்கிரனிவ ருதயமாக
 கூறுமைந்தொன்ருறு மத்திபமேயாகும்
வருநிரோதகதடாக தரிசனந்தான்
 வந்ததினுல்நட்பினர்கள் மதியில்லாமல்
பெருமைகுறைந்திட பழித்துப்பேசுவார்கள்
 பேதமில்லாதுலகில் ஏழ்மையாக
பொருளில்லாவறுமையால் திகைத்திட்டாலும்
 போஜனத்திற்குறைவில்லா ஜீவிப்பாரே. 37

உரை:—வியாழன், சூரியன், சுக்ரன் உதயமாக 5-1.6-விதம் புர் வந்தால் மத்திப பலனுகும். நிரோதக தடாகதரிசனம். இதன் பலன் விபரம், அறிவில்லாத சிநேகிதருடனே சேர்ந்து பெருமை குறைந்து சகலரும் பழித்துப் பரிகசித்துப் பேசும்படியான ஏழ்மைத்தனமாக இருந்தாலும் அன்னவஸ்திரத்திற்குக் குறைவில்லாமல் ஜீவித்திருப்பார்கள்.



RangaRakes tamilnavarasam.com

## வியாழன் - சந்திரன் - வியாழன்

### 5—2—5 - மத்திபம்

### நாசிகாசேத் தரிசனம்

குருமதியும்வியாழனு முதயமாக
கூறுமைந்துரெண்டைந்து மத்திபத்தான்
வருகின்றநாசிகாசேத் தரிசனத்தான்
வந்ததால்மனதுக்கம் கவலையாகும்
பெருகுமேபந்துபகை யாகுமப்பா
பேதமில்லாமூன்றுமாதத்தின் பின்னர்
பொருள்சேர்ந்தும்வறுமைநோய் தணிந்துதானும்
போஜனத்திற்குறைவில்லா சீவிப்பாரே. 88

உரை :—வியாழன், சந்திரன், குரு உதயமாக 5-2-5 தெம்பர் வந்தால் மத்திப பலனாகும். இதன் பலன் விபரம் எவ்விதமென்றால், நாசிகாசேத் தரிசனம் இதனால் மனதுக்கம், பந்து மித்திரர் பகையினால் பலவித துயரடைந்து கலங்குவார். ஆனால் மூன்று மாதத்திற்குப் பிறகு உத்தியோக விர்த்தியினாலும், வியாபார லாபத்தாலும் பொருள் சேர்ந்தாலும் அன்னவஸ்திரத்திற்குச் சரியாயமைந்திருக்கும்.

## வியாழன் - செவ்வாய் - புதன்

### 6—3—4 - உத்தமம்

### தர்ப்பண தரிசனம்

அந்தணனும்செவ்வாயும் புதனுமாக
அமைந்தைத்துமூன்றுநான் குத்தமத்தான்
அத்தமாம் தர்ப்பண தரிசனந்தான்
அதன்பலன்விபரமாய் கவனிப்பீர்கள்
செத்திருவாழ்வாகவே விளங்கும்நல்ல
செம்பொன்னாபரணங்கள் வெள்ளிசெம்பும்
சந்ததமும்கிடைத்திடுமென் றுலகோருக்கு
சாற்றுவாய் ஆருடபலனைத்தானே. 89

உரை:—வியாழன், செவ்வாய், புதனும் உதயமாக 6-3-4-தெம்பர் வந்தால் உத்தமமாகும். தர்ப்பண தரிசனம். இதன் பலன் விவரமெவ்விதமெனில் மகாலக்ஷ்மி கடாக்ஷத்துடனே மிகவும் மேன்மையாய் சீவித்திருப்பதுடன் தங்கநகை, வெள்ளி ஆபரணாதிகளும் வெள்ளி, செம்பு நாணயங்கள் குறையாத பெருக்கத்துடன் தனசம்பத்தாய் சீவித்திருப்பதற்காகும்.

## குரு - புதன் - செவ்வாய்

### 5—4—3 - உத்தமம்

### நவரத்தின தரிசனம்

குருபுதனும்செவ்வாயும் உதயமாக
கூறுமந்த ஐந்துநான்குடனேமூன்று
வரும்போதுஉத்தமந்தான் நவரத்தினதரிசனந்தான்
வாய்ந்தாலும்ஆருடங் கேட்போருக்கு
பொருளுடனேபூஷண லாபங்கள்பெற்று
பூமிலாபம்பெறுவ ரென்றுசொல்லு
அருமையாய்நூதன வியாபாரத்தன்னை
அதிகநன்முயற்சியுடன் நடத்துவாரே. 40

உரை—குரு, புதன், செவ்வாய் உதயமாகி 5-4-3-தெம்பர் வந்தால் நவரத்ன தரிசனபலன். அதன் விபரம் பொன் பொருள் ஆஸ்தி பூஸ்திதியுடன் பூமிலாபமும் கிடைத்து, பெருமையாய் மனைவி, மைந்தர், பந்துமித்திருடனே சுகசீவியாய் வாழ்ந்திருந்து வெகுலாபம் கிடைக்கும்படியான நூதன வியாபாரஞ் செய்வதற்குத் தகுந்த முயற்சி செய்வார்கள்.

## வியாழன் - குரு - சந்திரன்

### 5—5—2 - மத்திபம்

### தக்கதேகப்பிர தரிசனம்

பொன்னவனும் குருசந்திரனுதயமாக
பொருந்தியைந்தைந்திரண்டு மத்திபந்தான்
இன்னவிதந்தக்கதேகப்பிர தரிசனந்தான்
இருப்பதினுற்றபல னற்பமாகும்
தன்மையுடன்திரவியலாபம் பெற்றாலும்
தகுந்தபடிசுகதுக்கம் சுகமாய்வாய்க்கும்
தன்மையுடன்லாப நஷ்டமில்லாதெந்நாளும்
நலமுடனேசமமாக சீவிப்பாரே. 41

உரை—வியாழன், குரு, சந்திரன் உதயமாகி 5-5-2-தெம்பர் வந்தால் தக்கதேகப்பிர தரிசனம் மத்திப பலனாகும். இதன் விபரம் ஆருடங் கேட்க வந்தவர்கள் தமக்கு எவ்வளவு திரவியமிருந்தாலும் வரவு செலவு சமமாக சுகதுக்கமும் சமமாக அனுபவிப்பார்கள். ஆனால், சதாகாலமும் லாப நஷ்டமில்லாமல் சமமாய் சீவிப்பார்கள்.

RangaRakes tamilnavarasam.com

## வியாழன் - சுக்கிரன் - சந்திரன்

5—6—1 - உத்தமம்

### தேவேந்திர தரிசனம்

அந்தணனும்சுக்கிரனும் ரவியுமாக
    ஐந்தாறுடனொன்றுமுத் தமமேயாகுஞ்
சுந்திரஞ்சேர் தேவேந்திர தரிசனந்தான்
    சொர்ணபணிபூஷணமும் பெருகியன்பாய்
எந்தகாலத்திலுமே கீர்த்தியோங்கி
    எதிரிகட்கஞ்சாமல் தைரியமாக
மைந்தர்களும்மனைவிசுற்றத் தோரும்வாழ்த்த
    மாநிலத்தில்சுகமாக வாழ்குவாரே. 42

உரை:—வியாழன், சுக்கிரன், சூரியனும் உதயமாக 5-6-1-நெம்பர்வந்தால் உத்தமமாகும். தேவேந்திர தரிசனம். இதன் பலன் விபரம்: சொர்ணபணிபூஷணாதிகளும் பெருக்கமாயணிந்து கீர்த்தி பிரகாசமாய் பகைவர்கட்கஞ்சாமல், மனதைரியமுடனே திரவியஞ் சேகரஞ்செய்து, மனைவி, மைந்தர், பந்துமித்திரர்களுடனே சுகசீவியாய் சீவிப்பார்கள்.

## வியாழன் - சனி - ராகு

5—7—8 - உத்தமம்

### சுப்பிரமணியர் தரிசனம்

குருசனிராகுஉதய மாகிநிற்க
    குற்றமிலாஐந்தேழெட் டுத்தமமேயாகும்
முருகனெனும்சுப்பிரமணியர் தரிசனந்தான்
    முகமலர்ச்சியாக பிரபுக்கள்நட்பு
அருமையுடனேபெற்று கனவானாகி
    ஆஸ்திபூஸ்தியுடனே பந்துமித்திரர்
பெருமையுடனேபுகழ்ந் தாசீர்வதித்து
    பேசிடவும்சுகமாக சீவிப்பாரே. 43

உரை:—வியாழன், சனி, ராகு உதயமாக 5-7-8-உத்தமமாகும். சுப்பிரமணியர் தரிசனம். இதன் விபரம்: சதாகாலமும் ஆனந்தமாக மனச்சோர்வில்லாமல் பிரபுக்கள் சிநேகிதமாக பலவிதமான வியாபாரஞ்செய்து, திரவியசேகரஞ்செய்தும், ஆஸ்தி பூஸ்தியுடனே பந்துமித்திரர் புகழ்ந்தாசீர்வதிக்கும்படியான பெருமையுடனே சீவித்திருப்பதற்காகும்.

## வியாழன் - இராகு - சனி

5—9—7 - உத்தமம்

### ஐராவத தரிசனம்

பொன்னவனும்இராகுசனி உதயமாக
பொருந்திஜந்தெட்டேழுத்தமமாகும்
பன்னியதோர்சுற்றத்தார் பந்துமித்திரர்
பகையுமில்லாதெந்நாளும் சுகித்திருப்பார்
தன்னயமாய்வர்த்தகமும் உத்தியோகம்
தலமுடனே செய்துபொன் பொருளுஞ்சேர்த்து
அன்புடனேமனைவிமைந்தர் சுற்றத்தோடு
அவனியிலேசுகமாக ஜீவிப்பாரே. 44

உரை:—வியாழன், ராகு, சனி உதயமாக 5-9-7-தெம்பர் வந்தால் உத்தமம். ஐராவத தரிசனம். இதன் பலன்: சுற்றத்தார், பந்துமித்திரர் ஆகியோர்களின் பகையில்லாமல் சதா காலமும் சுகமாக சீவித்திருப்பதுடன், உத்தியோக விர்த்தியும் வியாபார லாபமும் பெற்று, பொன் பொருள் நவரத்ன ஆபரணத்களும் பெற்று மனைவி மைந்தர்களும் பந்துமித்திரர்களும், புகழ்த்துரைக்கும்படியாய் சீவித்திருப்பதற்காகும்.

## சுக்கிரன் - சூரியன் - வியாழன்

6—1—5 - உத்தமம்

### தேவகன்னி தரிசனம்

சுக்கிரனும்சூரியனும் வியாழனுக
சூழ்ந்தாறொன்றைந்துடத் தமமேயாகும்
சிக்கிலாதேவகன்னி தரிசனந்தான்
சிறப்புடனே தான்விளங்கும் விபரந்தானே
மிக்கவேநற்பலனும் திரவியலாபம்
மேன்மையுடனேபெற்று பூமிலாபம்
தக்க தாய்ப்பெற்றினிதாய் சுற்றத்தோடு
தரணியிலேசுகமாய் சீவிப்பாரே. 45

உரை:—சுக்கிரனும், சூரியனும் வியாழனோடு சூழ்ந்து உதயமாக 6-1-5-உத்தமமாகும். தேவகன்னி தரிசனம். இதன் பலன்: பலவிதமாய்ப் பொருள் சகாயஞ் செய்யும் பிரபுக்களை தேசித்து லாபம் பெற்று, திரவிய சம்பத்துடனே பூமி லாபத்துடனே, பந்துமித்திரருடனும் சுகானந்தமாய் சீவித்திருந்து, புத்திரமித்திரகளத்திராதியருடனே சுகானந்தமாய் வாழ்ந்திருப்பார்கள்.

RangaRakes tamilnavarasam.com

### சுக்கிரன் - சந்திரன் - புதன்

### 6—2—4 - உத்தமம்

### திக்கெஜ தரிசனம்

சுங்கனோடுசந்திரனும் புதனுமாக
　　சூழ்ந்தாறிரண்டுநான் குத்தமத்தான்
மங்களஞ்சேர் திக்கெஜ தரிசனந்தான்
　　மாநிலத்திலெந்நாளும் பகையில்லாமல்
பொங்கும் நல்சுகவாழ்வு பந்துமித்ரர்
　　புகழ்ந்தோத மனைவி மைந்தருடனேவாழும்
சிங்காரதேஜஸுடன் தனவானாக
　　சிறப்பாகதாரணியில் சீவிப்பாரே. 46

உரை:—சுக்கிரன், சந்திரன், புதனும் உதயமாக 6-2-4 நெம்பர் வந்தால் உத்தமமாகும். திக்கெஜ தரிசனம். இதன் பலன்: உலகத்தில் எவர்கட்கும் பகையில்லாமல் சகலருக்கும் நல்லவனாய் நற்குணம் பொருந்தி, பந்துமித்திரர் புகழ்ந்துரைக்க மனைவி மைந்தருடனே சுகானந்தமாய் சீராரோக்ய தேஜஸுடன் வாழ்ந்து தனதான்ய சம்பத்துடன் சீவித்திருப்பதாமாகும்.

### சுக்கிரன் - செவ்வாய் - குஜன்

### 6—3—3 - உத்தமம்

### புஷ்பபிரஷ்டினி தரிசனம்

புகருடனே செவ்வாயும் குஜனுமாக
　　பொருந்தியே ஆறுமூன்று மூன்றுமானால்
மகிழுடனே உத்தமபுஷ்ப பிரஷ்டினி
　　மகாதரிசனமாகும் கீர்த்திவானாய்
சுகமாகபொன்பொருளும் சேர்த்துதானும்
　　சுற்றத்தார்மனைவிமைந்தருடன் வாழ்வார்கள்
ஜெகமீதுகுறையணுகா தெந்தநாளும்
　　செழிப்புடனே வாழ்ந்திருப்பர் கவனிப்பீரே. 47

RangaRakes tamilnavarasam.com

## சுக்கிரன் - புதன் - சந்திரன்

### 6—4—2 - உத்தமம்

### பூரணகும்ப தரிசனம்

சுக்கிரனும்புதனுடனே மதியுமாக
    சூழ்ந்தாறுநாலிரண் டுத்தமந்தான்
சிக்கிலாபூரணகும்ப தரிசனமேயாகும்
    சிறப்புடனேஉத்யோக வர்த்தகங்கள்செய்து
பக்குவமாய்திரவியலா பத்தோடன்பாய்
    பத்தினிப்புத்ரர்சுற்றத்தா ருடனேவாழ்ந்து
இக்குவலயத்தி லினிதாகவேதான்
    இலக்ஷாதிகாரியைப்போல் சீவிப்பாரே. 49

உரை:—சுக்கிரனும், புதனும், சந்திரனும் உதயமாக 6-4-2-நெம்பர் வந்தால் உத்தமமாகும். பூரண கும்ப தரிசனம். இதன் பலன்: உத்தியோக விர்த்தியாலும், வியாபார லாபத்தாலும் வெகு பொருள்சேகரித்து மனைவி, மைந்தர், பந்துமித்திருடனே மிகவும் மேன்மையான இலக்ஷாதிகாரியைப்போல சுகானந்தமாய் சீவித்திருப்பதற்காகும்.

## சுக்கிரன் - வியாழன் - சூரியன்

### 6—5—1 - உத்தமம்

### சொர்ணகும்ப தரிசனம்

புகருடனேவியாழனும் பரிதியாக
    பொருந்தியே ஆறைந்தொன் றுத்தமந்தான்
ஜெகமீதில்வெகுசமர்த்தாய் உத்யோகஞ்செய்தும்
    செம்பொன்னுபரண வியாபாரஞ்செய்தும்
வெகுதனவானுகவே விளங்கிவாழ்ந்தும்
    வேந்தர்களும்பிரபுக்களும் புகழவாழ்ந்து
சுகசீவியாகவே மனைவிமைந்தர்
    சுற்றத்தாருடனினிதாய் சீவிப்பாரே. 49

உரை:—சுக்கிரன், வியாழன், சூரியன் உதயமாக 6-5-1-நெம்பர் வந்தால் உத்தமம். சொர்ணகும்ப தரிசனமாகும். இதன் பலன் வெகு சமர்த்தியமாய் உத்தியோகஞ்செய்தும், தங்கநகை வியாபாரஞ் செய்தும், வெகு தனவானுகி அரசர்களும் பிரபுக்களும் புகழுந்தன்மையான சுகசீவியாய் மனைவி மைந்தர்களுடன் மிகவும் மேன்மையாக வாழ்ந்திருந்து சதாகாலமும் துயரமில்லாமல் சீவித்திருப்பதற்காகும்.

RangaRakes tamilnavarasam.com

### சுக்கிரன் - புதன் - இராகு

6—6—8 - உத்தமம்

### லக்ஷ்ணபூமி தரிசனம்

சுக்கிரனும்புதனுடனே ராகுவுமாக
 சூழ்ந்தாறுஆறெட் டுத்தமத்தான்
சிக்கிலாலக்ஷ்ணபூமி தரிசனந்தான்
 சிறந்தபலன்கிடைத்தாலும் லாபநஷ்டம்
பக்குவமாய்சமமாக அனுபவித்து
 பாருலகோர்முன்சமமாய் வாழ்ந்தெப்போதும்
துக்கமிலாசுகமிலா பொருந்தேடி
 துணைவர்களோடன்பாக சீவிப்பாரே. 50

உரை:—சுக்கிரனும், புதனும், இராகுவும் உதயமாக 6-6-8 நெம்பர் வந்தால் உத்தமமாகும். லக்ஷ்ணபூமி தர்சனம் இதன் பலன்: தனக்கு எவ்வளவு லாபம் கிடைத்தாலும் சரியான பலனாக சுகதுக்கம் அளவுபோல் பொருந்தி பந்துமித்திருடனே சீவித்திருந்தாலும், தனது சக்திக்கியன்றபடி வியாபாரஞ் செய்து கொண்டு, பக்குவமாய் வாழ்ந்திருப்பார்கள்.

### சுக்கிரன் - சனி - சனி

6—7—7 - உத்தமம்

### லதாமண்டப தரிசனம்

அசுரகுருவெனும்சுக்ரன் சனிமந்தன்கோண
 ஆறேழுமேழு முத்தமமேயாகும்
பசுபதியின் திருவருளால் நவரத்னம்பொன்னும்
 பாக்கியமும்நிலபுலமும் கிடைத்தெந்நாளும்
புஜபலமாய்ஸ்திரீசேர்க்கை பந்துமித்திரர்
 புத்திரகளத்திரபாத்யத் துடனேவாழ்ந்து
விசுவாசத்துடனெவரும் நேசித்தன்பாய்
 விரும்பியேபொருள்சகாயஞ் செய்குவாரே. 51

உரை:—அசுரகுருவாகிய சுக்கிரனும், சனியும், மந்தனும் உதயமாக 6-7-7-நெம்பர் வந்தால் உத்தமமாகும். லதாமண்டப தரிசனம். அதன் பலன் விபரம், பகவான் கிருபையால் பலவிதமான வியாபாரஞ்செய்து நவரத்ன லாபம், பொன்மணி பூஷணாதிகளும், காணி, பூமி, நிலபுலன்களும் பெற்று சுகபோக பாக்கியமும் ஸ்திரீ சேர்க்கையும் பெற்று, பந்துமித்திரர் களத்திராதி

RangaRakes tamilnavarasam.com

நடனே சுவானந்தமாய் வாழ்ந்திருந்து சகலரும் தன்மேல் அதிக விஸ்வாசமாய் நேசித்து பொருள் சகாயம் செய்யும்படியான பிரபுக்களின் திரவிய சகாயத்தினால் சுகவும் கீர்த்தியாய் சீவித்திருப்பார்கள்.

## சுக்கிரன் - இராகு - சுக்கிரன்

### 6—8—6 - மத்திபம்

### சண்டிகா தரிசனம்

கவிராகுசுக்கிரனு முதயமாக
　　காணுமாறெட்டாறு மத்திபந்தான்
நவிலுமந்த சண்டிகாதரிசனந்தான்
　　நற்பலனுவ்விளங்கிடினும் மத்திபந்தான்
எவ்விடத்திலேதிரிந்து அலைந்திட்டாலும்
　　ஏற்றத்தாழ்வாயிருப்பருலகமீது
புவியில்வெகுசாமர்த்தியஞ் செய்திட்டாலும்
　　புசிப்பதற்கன்னம்அளவாய்க் கிடைக்கும்பாரே. 52

**உரை:—**சுக்கிரன், இராகு, சுக்கிரன், உதயமாக 6-8-6-தெம்பர் உதயமானல் மத்திபமாகும் சண்டிகா தரிசனம். இதன் பலன் விபரம் : எந்தெந்த தேசத்தில் திரிந்து, என்னென்னவித சாமர்த்தியஞ் செய்தாலும் தனது வயிற்றை வளர்ப்பதற்குச் சரியான அன்ன பதார்த்த பக்ஷணம் அளவுபோல் கிடைத்து ஏற்றத்தாழ்வில்லாமல் கையிற் பொருள் சேராமலும் கடனில்லாமலும் சமமாயிருக்கும்.

## சனி - சூரியன் - புதன்

### 7—1—4 - மத்திபம்

### சம்பராக தரிசனம்

கதிர்மகனும்சூரியனும் புதனுமாக
　　கண்டதோரேழொன்றுநான்கு மத்திபமேயாகும்
பதிகளியும்கையிலுள்ள பணமும்காசும்
　　பாக்கியமும்நாசமாய் கைவரண்டு
சதிசெய்யும்துன்மார்க்க தேயராலே
　　சண்டைசச்சரவுற்றே ரண்டுசென்றால்
மதிவந்ததென்றோர்வர்த்தக முஞ்செய்து
　　மத்திபலாபத்துடனே சீவிப்பாரே. 53



RangaRakes tamilnavarasam.com

உரை:—சனியும், சூரியனும், புதனும் உதயமாக 7—1—4 நெம்பர் வந்தால் மத்திபபலனாகும். சம்பராசுர தரிசனம். இதன் பலன் விபரம்: தன் கையிலுள்ள பணம் காசெல்லாம் செலவழித்து விட்டு துன்மார்க்க சிநேகிதரால் சண்டை சச்சரவும், கலகமும் செய்துக்கொண்டு விசனசாகரத்தி லாழ்ந்து துயரப் படச் செய்யும். ஆனால் இவ்விதமாய் ஒருவருஷம் வரையிலும் மதிமந்தனாய் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தாலும் பிறகு நல்ல புத்தி விளங்கி ஏதாயினும் ஓர் வர்த்தகஞ்செய்து அன்ன வஸ்திரத்திற்கு தகுந்தவிதமாய் திரவிய சேகரஞ்செய்து ஜீவித்திருப்பதற்காகும்.

## சனி - சந்திரன் - செவ்வாய்

### 7—2—3 - உத்தமம்

### சேஷ்டசாக தரிசனம்

மந்தனுடன்சந்திரனும் குஜனுமாக
மதித்திடுமேழ்ரெண்டுமூன் றுத்தமமேயாகும்
அந்தமாம்சேஷ்டசாக தரிசனத்தான்
அவனியிலே தனவந்தனாயிருந்து
சுந்தரஞ்சேர்மனைவிமைந்தர் பந்துமித்ரர்
சூழ்ந்திருக்கவெகுசுகமாய் கீர்த்தியோடு
எத்தகாலத்திலும் தைர்யமாக
எதிரிகளில்லாமல் ஜீவிப்பாரே. 64

உரை:—சனி, சந்திரன், செவ்வாய் உதயமாக 7—2—3-நெம்பர் வந்தால் உத்தமமாகும், சேஷ்டசாக தரிசனம். இதன் பலன் விபரம் உத்தியோக விர்த்தியாலும், வியாபார லாபத்தாலும் பொருள் சேர்த்து மகா தனவந்தனாயிருந்து அழகான மனைவி, மைந்தர், பந்துமித்திரர் சூழ்ந்த பெருக்கத்துடன் சுகானந்தமாய் வாழ்ந்திருந்து எதிரிகட் கஞ்சாமல் மனதைரியத்துடனே ஜீவித்துக்கொண்டிருப்பார்கள்.

## சனி - சந்திரன் - செவ்வாய்

### 7—3—2 - உத்தமம்

### மகாலஷ்மி தரிசனம்

சனிசெவ்வாய்சந்திரனு முதயமாக
சார்ந்தேழ்மூன்றிரண்டு உத்தமமேயாகும்
கனிவானமகாலஷ்மி தரிசனத்தான்
கௌரவமும்கீர்த்தியுடன் தனவானாக

பனிமொழிமாதர்சேர்க்கை பூமிலாபம்
பந்துமித்திரர்மகிழ வாழ்ந்திருந்து
முனிவில்லாசாந்தகுண மாயிருந்தும்
மூதறிஞனெனப்புகழ ஜீவிப்பாரே. 55

உரை:—சனி, செவ்வாய், சந்திரன் உதயமாக 7-8-2-நெம்பர் வந்தால் உத்தமமாகும். மகாலக்ஷ்மி தரிசனமாகும். இதன் பலன் விபரம், கௌரவமும் கீர்த்தியும் பொருந்திய பிரபுவைப் போலிருந்து இனிமையான குரலொலி சப்தித்து மதுரமாய்ப் பேசும் பெண்களின் சேர்க்கையும், காணி, பூமி, நிலபுலத்துடனே சுகஜீவியாய் பந்து மித்திரர் மனமகிழ்ந்து புகழ்ந்துரைக்கும்படியான சாந்த மனதமைந்தவனுய் சீவித்திருப்பதற்காகும்.

## சனி - புதன் - சூரியன்

### 7—4—1 - உத்தமம்

### நளின தரிசனம்

காரியுடன்புதன்பரிதி உதயமாக
காணுமேழ்நாலொன்றுத் தமமேயாகும்
பாரினிதளினதரி சனமேயாகும்
பாக்கியவானுய்வர்த்த கங்கள்செய்து
வீரியமாய்ப்பேசுவதில் கீர்த்திவானுய்
விளங்குவான்பிரபுவைப்போ லுலகத்தன்னில்
பாரியான்புத்ரமித்ர சம்பத்தோடு
பந்துக்கள்சூழ்ந்திடவே ஜீவிப்பாரே. 56

உரை:—சனி, புதன், சூரியனும் உதயமாக 7-4-1-நெம்பர் வந்தால் உத்தமமாகும். நளினதரிசனம் இதன் பலன் பலவித மான வியாபாரஞ்செய்து திரவியலாபத்துடனே கீர்த்திப்பிரகாசமாய் பந்துமித்திரர்கள் புகழ்ந்துரைக்கும் பிரபுவாக மனைவி மைந்தருடன் சுகஜீவியாய் வாழ்ந்திருப்பதற்காகும்.

## சனி - வியாழன்- இராகு

### 7—5—8 - உத்தமம்

### க்ஷீரசாகர தரிசனம்

சனியுடனேவியாழன் ராகுடனேதோன்ற
சார்ந்தரஏழைந்தெட்டு உத்தமந்தான்
இனிதானக்ஷீரசாகர தரிசனந்தான்
இப்புவியில்பிரபுவைப் போலிருந்து

தனதான்யசம்பத்து மிகவேபெற்று
 தரித்திரநோயில்லாமல் பந்துமித்ரர்
மனைவிமைந்தருடனேசம் பத்துண்டாகி
 மாநிலத்தில்பெருமையுடன் ஜீவிப்பாரே. 57

உரை:—சனி, வியாழன், ராகு உதயமாகி 7-5-8-நெம்பர் வந்தால் உத்தமமாகும் ஸஹிரசாகர தரிசனம் இதன் பலன் உத்யோக விர்த்தியாலும் வியாபார லாபத்தாலும் வெகு பொருள் சேகரஞ் செய்து கண்டோர் பிரமிப்பென புகழ்ந்துரைக்குந் தன்மையாக தனதான்ய சம்பத்துடனே, தரித்திரமென்னும் வறுமை பிணியில்லாமல் தனவானென்றுலகோர் மதிக்கக்கூடிய சம்பத்துடனே, மனைவி மைந்தர் பந்துமித்ரர்களுடன் சுகஜீவியாய் வாழ்ந்திருப்பதற்காகும்.

### சனி - சுக்கிரன் - சனி

### 7—6—7 - உத்தமம்

### குகூதேவி தர்சனம்

பங்குபாதனுடுசுக்கிரன் மந்தன்
 பார்வையாயேழாறேழ் உத்தமமேயாகும்
மங்களமாய்குகூதேவி தரிசனந்தான்
 மாநிலத்தில்பலவிதமாய் பொருளுந்தேடி
திங்கள் முகக்காந்தியுள்ள பெண்கள்சேர்க்கை
 திரமுடன்வர்த்தகஞ்செய் தனேகலாபம்
பங்கமில்லாமற்கிடைக்க மனைவிமைந்தர்
 பந்துகூட்டத்துடனே ஜீவிப்பாரே. 58

உரை:—சனி, சுக்கிரன், சனி உதயமாக 7-6-7-நெம்பர் வந்தால் உத்தமமாகும். குகூதேவி தரிசனம். இதன் பலன் விபரம், அழகான ஸ்திரீகளின் சங்கமமும், வியாபார லாபத்தினால் திரவிய சேர்க்கையும் பிரபுத்தன்மையுடனும் மனைவி மைந்தர் பந்து மித்திரருடனே சுகானந்தமாய் ஜீவித்திருப்பதற்காகும்.

### சனி - சனி - சுக்கிரன்

### 7—7—6 - மத்திபம்

### இராகுசர்ப்ப தர்சனம்

மந்தனுடன்சனிசுக்கிர னுதயமாக
 மகிழ்ந்தேழுஏழாறு மத்திபமேயாகும்
அந்தமாய்ராகுசர்ப்ப தரிசனந்தான்
 அலைச்சலுடன்பொருள்சேர்த்து தனவானக

சித்தைமகிழ்ந்திருந்தாலும் சிலநாட்பின்னல்
சிறிதுசிறிதாய்தனமெல் லாம்குறைந்து
வித்தையாய்காண்போர்கள் நிந்திக்கட்டேங்க
விசனமுடன்சமபலனுய் ஜீவிப்பாரே. 59

உரை—சனி, மந்தன் சுக்கிரன் உதயமாக 7-7-6 நெம்பர் வந்தால் மத்திம பலனாகும். இராகு சர்ப்ப பலன். இதன் விபரம், பலவித சமர்த்தாலும் மன அலைச்சலுடனே திரவிய சேகரஞ் செய்து தனவானாக மனமகிழ்ந்திருந்தாலும், சிலநாட் சென்ற பிறகு தன்னிடமிருக்கும் பொருளெல்லாம் சிறிது சிறிதாய்க் குறைந்து பார்ப்பவர்கள் மனமிரங்கிடு நிந்திகிட்டு பரிதாபமடையும்படியான ஏழ்மை நிலையுடன் ஜீவித்திருப்பார்.

## சனி - ராகு - வியாழன்

### 7 - 8 - 5 - உத்தமம்

### ஸ்ரீ தர்சனம்

சனியிராகுவியாழனு முதயமாக
சார்ந்தேழுஎட்டைந்துத் தமமேயாகும்
இனிதானஸ்ரீதரி சனந்தானாகும்
இதன்பலனேபிரபுவைப்போல் வாழ்ந்திருந்து
கனிவுடனேமனைவிமைந்தர் சுற்றத்தோடு
களிப்புடனேஜீவித்துத் துயரமின்றி
பனிமொழிமாதர்சேர்க்கை மிகவுண்டாகி
பண்புடனெந்நாளும் சீவிப்பாரே. 60

உரை—சனி, ராகு, வியாழன் உதயமாக 7-8-5 நெம்பர் வந்தால் உத்தமமாகும். ஸ்ரீ தரிசன பலன். இதன் விபரம், வெகு சாமர்த்தியத்துடனே வியாபாரத்தினாலும் உத்தியோகத்தினாலும் பற்பலவிதமாய் திரவிய சேகரஞ்செய்து பிரபுவைப்போல வாழ்ந்திருந்து மனைவி மைந்தர் பந்துமித்திரர்களுடனே சீவித்து அழகான பெண்களின் சேர்க்கையும் பெற்று ஆனந்தமாயிருப்பதற்காகும்.

## இராகு - சூரியன் - செவ்வாய்

### 8—1—3 - உத்தமம்

### ஐராவத தர்சனம்

ராகுடனேசூரியனும் செவ்வாயாக
தலமானஎட்டொன்றமூன் றுத்தமந்தான்
பாகுசேர்ஐராவத தரிசனந்தான்
பாக்கியமும்மிகுதவாக பெற்றன்பாக

போகபாக்கியங்களுடன் சவுக்யம்மேன்மை
　　பொருந்தியேபந்துமித் திரரோடன்பாய்
சோகமிலாகீர்த்தி ப்ரகாசமாக
　　சொர்ணபணிபூஷணமும் பெருகுந்தானே. 61

உரை:—இராகு, சூரியன், செவ்வாய் உதயமாக 8-1-3 நெம்பர் வந்தால் உத்தமமாகும். இராவக தரிசனம். இதன் பலன் தனத்தான்ய சம்பத்துடனும் பந்துமித்திரர் சேர்கையுடன் புத்திரகளத்ராதி சுகபாக்கியத்துடனே சொர்ணபணி பூஷணாதிகள் ஆஸ்தி பூஸ்திதியுடன் ஆனந்தமாயிருப்பதற்காகும்.

## இராகு - சந்திரன் - சந்திரன்

### 7—2—2 - உத்தமம்

### சுதர்சன தரிசனம்

அரவினொடுசந்திரனும் மதியுந்தோன்ற
　　ஆனஏழிரண்டிரண்டு முத்தமமேயாகும்
பரவியசுதர்சன தரிசனந்தான்
　　பாக்கியமென்மேலுமுண்டாம் நண்பரோடு
தரணிதனில்க்ஷேத்ரயாத் திரைகள்செய்து
　　தானதர்மஞ்செய்துவெகு கீர்த்தியாக
சிரமமின்றிபந்துமித்ரர் கூட்டத்தோடு
　　சிறப்புடனேவாழ்ந்திருப்பா ரவனிமீதே. 62

உரை:—இராகு, சந்திரன், மதியும் உதயமாக 7-2-2-நெம்பர் வந்தால் உத்தமமாகும். சுதர்சன தரிசனபலன். இதன் விபரம், பலவிதத்திலும் திரவியசேகரஞ்செய்து, தனந்தான்ய சம்பத்துடன் பிரபுவாகவிளங்கி சிநேகிதர்களோடு மகத்வம்பொருந்திய க்ஷேத்ர யாத்திரைசெய்து பகவத்பக்தியானந்தமாய் தானதர்ம பரோபகாரம் புரிந்து சுகசீவியாய் பந்துமித்திரர் கூட்டத்துடனும மனைவி மைந்தர்களுடனே பெருமையாய் சீவித்திருப்பதற்காகும்.

## இராகு - செவ்வாய் - சூரியன்

### 8 - 8 - 1 - உத்தமம்

### தேவேந்திர தரிசனம்

பணியுடனேகுஜன்பரிதி உதயமாக
　　பகரெட்டுமூன்றொன்று முத்தமந்தான்
துணிகரமாய்பலவிதத்தில் திரவியத்தேடி
　　துன்பமிலாபேய்மில்லி குனியவாதை

பிணியுமிலாதெந்நாளும் பந்துமித்திரர்
புத்திரகளத்ராதியுடன் வாழ்ந்திருந்து
கணிகையர்கள்சேர்க்கையுட னேயெந்நாளும்
கவலையின்றிசுகமாக சீவிப்பாரே. 63

உரை:—இராகு, செவ்வாய், சூரியன் உதயமாக 8-3-1-நெம்பர் வந்தால் உத்தமமாகும் தேவேந்திர தரிசனபலன். இதன் விபரம், பலவித முயற்சியுடன் திரவியசேகரஞ் செய்து பகைவரின் கொடுமையில்லாமலும் பேய், பில்லி, சூனியம், மந்திர வாதிகள் பகை முதலான துன்பமுமில்லாமல் சரீராரோக்கியத் துடனே வறுமை பிணியில்லாமல் பந்துமித்திரர்கள் புகழ்ந் துரைக்கும்படியான பிரக்யாதியுடனே மனைவி மைந்தர்களுடன் கவலையில்லாமல் வாழ்ந்திருப்பதற்காகும்.

## இராகு - புதன் - இராகு

8—4—8 - உத்தமம்

## இராஜ தரிசனம்

இந்தரிபுதன்ராகு உதயமாக
எட்டுநாலெட்டுஉத் தமமேயாகும்
அந்தமாம்ராஜ தரிசனமேயாகும்
அவனியோர்போகவா னென்றுகூற
எத்தெத்தவியாபாரஞ் செய்திட்டாலும்
எத்தொழிலைச்செய்தாலும் ஜெயமுண்டாகும்
சுத்தரஞ்சேர்பெண்களுடன் போகபாக்யம்
சுகமாகஅனுபவித்து மகிழுவாரே. 64

உரை:—இராகு, புதன், இராகு உதயமாக 8-4-8.நெம்பர் வந்தால் உத்தமபலனாகும் இதன் விபரம், இராஜதரிசனம் இவ் விதமாயிருந்தால் சகலரும் போகவானென்று ஆச்சரியம் எய் துந்தன்மையாக எந்தெந்தவிதமான வர்த்தகம் செய்தாலும், எந்தெந்தவிதமான கைத்தொழிலேனும், உத்தியோகமாயினும் வெகு சமர்த்தாய்செய்து காண்பேர் ஆச்சரியமெய்துந் தன்மை யாய் ஜெயம்பெற்று அதிக லாபத்துடனே திரவியசேகரஞ் செய்து அழகான பெண்களுடனே ஆனந்தமாய் சீவித்துக் கொண்டிருந்து, சதாகாலமும் இன்பசுகத்தை யனுபவித்து மன மகிழ்வா யிருக்கும்படியான நற்பலனுண்டாகும்.

RangaRakes tamilnavarasam.com

### இராகு - வியாழன் - சனி

9—5—7 - உத்தமம்

### மகாலஷ்மி தரிசனம்

நாகமொடுவியாழன் சனிஉதயமாக
 நாடியெட்டைந்தேழ் உத்தமந்தான்
சோகமிலாமகாலஷ்மி தரிசனந்தான்
 சொர்ணபணிபூஷணங்கள் மிகவுண்டாகும்
பாகுசேர்மொழியார்கள் சேர்க்கையாவார்
 பாரிலுள்ளோர்தனவா னென்றுரைக்கக்கீர்த்தி
போகபாக்கியம்பெற்று மனைவிமைந்தர்
 பொன்பொருளோடுலகினில்வாழ்ந் திருப்பர்தானே. 65

உரை—இராகு, வியாழன், சனி உதயமாக 9-5-7-தெம்பர் வந்தால் உத்தமமாகும். மகாலஷ்மி தரிசனம். இதன் பலன், பொன் வெள்ளி பூஷணாதிகளும் பொருள் சேர்க்கையும் கிடைக்கப்பெற்று தாசிவேசிகளின் சேர்க்கையும் பொருந்தி பலபேர் பிரபுவென்று புகழ்ந்துரைக்கும் தன்மையான போகபாக்கியமும் பொன் பொருள் பூஸ்திதியுடன் மனைவி மைந்தர் சுற்றத்தாருடனே சீவித்திருப்பார்கள்.

### இராகு - சுக்கிரன் - சுக்கிரன்

8—6—6 - மத்திபம்

### நஷ்டசந்திர தரிசனம்

பாம்புடனேசுக்கிரன்புக ருதயமாக
 பகருமெட்டாறாறு மத்திபமேயாகும்
வேம்புபோல்நஷ்ட சந்த்ரதரிசனந்தான்
 வேதனையாய்பலதுயரால் மனங்கலங்கி
சோம்பலுடன்கைப்பொருளும் நிதியுந்தோற்று
 சொர்ணபணிபூஷணமும் விற்றுப்புசித்து
விம்புசெய்யும்பந்துமித்திர ராகத்திகைத்து
 விதியைநினைந்தழுதுபின்னால் சுகமாவாரே. 66

உரை—இராகு, சுக்கிரன், சுக்கிரன் உதயமாக 8-6-6-தெம்பர் வந்தால் மத்திபமாகும், நஷ்டசந்திர தரிசனம். இதன்பலன், தொகாலமும் மனவேதனையாய் பலவிதமாகிய துன்பத்தாலும் துயரத்தாலும் மனத்திகைத்து சோம்பலுடன் சீரழிந்து வை

பொருள் சம்பத்தெல்லாம் தோற்று ஆபரணநிலனுட்கீ சேர்க்க பணி பூஷணாதிகளும் விற்றுப்புசித்து வறுமைதோமாற் கலங்கி மனோசர்வ வஞ்சகபந்துமித்ரரால் கலகம் நேரிட்டு சகலரும் வெறுக்கும் பொசம்படியான கொடுமையை நினைந்து விதியின் படிநடக்கிறதென்று விசனப்படுவார்கள்.

## இராகு - சனி - வியாழன்

8—7—5 - மத்திபம்

### சோகசாகர தர்சனம்

விடநாகன்சனிவியாழன் உதயமாக
 விரைத்தெட்டேழைந்து மத்திபமேயாகும்
திடமில்லாசோகசாகர தரிசனந்தான்
 திறமையில்லாசோம்பலுற்று பொருள்தேடாமல்
கடன்வாங்கியேபுசித்து சக்தியில்லா
 கலங்கியேஒருவருஷங் கழிந்தபின்பு
படபடத்துவீராவே சத்தோடன்பாய்
 பலதொழில்செய்தேசுகமாய் சீவிப்பாரே. 67

உரை—இராகு, சனி, வியாழன் உதயமாக 8-7-5 நெம்பர் வந்தால் மத்திபபலன் சோகசாகரதரிசனம். இதன் விபரம், மதியீனத்தாலும் சோம்பலாலும் எந்த தொழிலிலும் பிரவேசியாமல் பொருள் சேகரஞ்செய்ய சக்தியில்லாமல் கலங்கித் துடித்து கடன் வாங்கி புசித்தும், கொடுக்க சக்தியில்லாமல் மனஞ்சோர்ந்து தத்தளித்து ஒரு வருஷமானபிறகு வீராவேசத்துடனே பற்பல விதமாய் கைத்தொழில் புரிந்து கஷ்டப்பட்டு திரவியஞ் சேகரித்து சுக சவுக்கியமாய் சீவித்துக்கொண்டிருப்பார்கள்.

## இராகு - இராகு - புதன்

8—8—4 - உத்தமம்

### சொர்ணகும்ப தர்சனம்

ராகுபாம்புடன் புதனு முதயமாக
 நலமுடனேஎட்டெட்டுநான் குத்தமமேயாகும்
பாகுசேர்சொர்ணகும்ப தரிசனந்தான்
 பலவிதமாய்திரவிய லாபங்கிடைக்கும்
தோகையர்கள்நேசமுடன் வந்துசேர்வார்
 தொல்புவியில்கனதன பாக்கியவானாக



RangaRakes tamilnavarasam.com

போகபாக்யம்பெற்று பந்துமித்ரர்
புத்ரகளத்ராதியரும் ஜீவிப்பாரே.

உரை:—இராகு, இராகு, புதன் உதயமாக 8-8-4 தெம்பர் வந்தால் உத்தமபலன். சொர்ணகும்ப தரிசனம். இதன் பலன் விபரம் வியாபாரத்தினால் வெகுபொருள் சேகரித்து நடனதாசி வேசிகளின் சேர்க்கையுடன் சுகபோகமாய் ஜீவித்திருந்து தன தான்ய சம்பத்துடனே மனைவி மைந்தர் பந்துமித்ராருடனே வெகு ஜனங்கள் புகழ கீர்த்திப் பிரகாசமாய் வாழ்ந்திருப்பார்கள்.

பலகறை ஆரூடம்
முற்றிற்று.

RangaRakes tamilnavarasam.com

# தேங்காய்குறி ஆரூடபலன்

## விநாயகர் துதி

*எண்சீரடி விருத்தம்*

அம்பிகைபாலாகௌரி புத்ராஞான
    ஆதிகஜானனமூர்த்தி அன்பர்மித்ரா
உம்பர்கட்காதார ஜோதியேயான்
    உரைக்கும்தேங்காய்க்குறியின் ஆரூடத்தை
அம்புவியோர்முன்னுண்மை யாய் விளங்க
    அனுக்கிரகஞ்செய்திடுவீர் குருவேயென்றும்
நம்பினேன்அனுதினமும் கணேசாவென்று
    நான்குவேதந்துதிக்கும் தேவதேவே. 1

உரை:—ஆதி கஜானனமூர்த்தியின் தமது திருவருளால் உலகத்தோர் முன்பாக யான் சொல்லுகின்ற இந்த தேங்காய்க் குறி ஆரூடம் சகலருக்கும் சம்மதமாகும்படியான உண்மையைத் தெரிவிக்கும்படியாய் அனுக்கிரகஞ் செய்வீர் கணேச குருநாத ஞகிய தேவதேவே.

அன்புடனேவிரதா னுஷ்டானஞ்செய்து
    ஆண்டவனுக்காரா தனையும்செய்ய
இன்பமுடன்தேங்காயை உடைக்கும்போது
    இரண்டுபிளவாயுடைந்தா லுத்தமந்தான்
துன்பமுண்டுஅழுகலுற்றால் வறுமையாகும்
    துடித்தெகிசிவிழுந்தாலும் கலகமுண்டு
தன்மையுடனிச்சகுனம் கவனமாக
    நாடியேகாண்பதுநற் கடமையாமே. 2

உரை:—மனிதவகுப்பார் தமது கோரிக்கை நிறைவேறுந் தன்மையான விரதானுஷ்டானம் புரிந்து இஷ்டதேவதா தோத் திரஞ் செய்து, சாம்பிராணி தூபங்காட்டிய பிறகு தேங்காயை சுத்தமாய்க் கழுவி சாம்பிராணி தூபத்தில் காட்டி தமது மனக் கோரிக்கையின் விபர மெவ்விதமாகுமோவென்று மனதில் நினைத்துக்கொண்டு இஷ்ட தேவதா அர்ப்பணமென்று தேங் காயை உடைத்தால் அது இரண்டு பிளவு சரியாய் உடைந்தால் தான் நினைத்த காரியம் சித்தியாகும். அந்தத் தேங்காய் அழுகியதாயிருந்தால் தாம் நினைத்த காரியம் பங்கமாகும். சுக்கல் சுக்கலாயுடைத்தாலும் பலவித கஷ்டமும் கவலையு

மாகும். தேங்காயை உடைக்கும்போது வைதழுவி சிதறிவிழுந்தாலும் பகைவரால் கலகமுண்டு. அச்சமயம் பயப்படாமல் முன்னம் வேறு நல்ல தேங்காயொன்றை வாங்கிவந்து இஷ்ட தேவதையை பக்திபரவசத்தமாய் பூசித்து, பிரார்த்தனை செய்துக் கொண்டு தான் நாடியகாரியம் சித்தியாகும்படியாய் சகாயம் புரிவீரென்று தேங்காயுடைத்துக் கர்ப்பூர தீபாராதனை செய்து பிரசாதம் புசித்து மனமகிழ வேண்டும்.

இன்னவிதம்மனித வகுப்பார்களெல்லாம்
இசைந்தஆரூடகுறி கவனித்தன்பாய்
நன்னயமாய்அவரவர்கள் காரியத்தை
நலமுடனேநடத்திநல் கீர்த்தியோங்கி
பொன்பொருளும்சேகரித்து மனைவிமைந்தர்
பெருமையுடன் வாழ்ந்திருக்கும்சுகத்தைநாளும்
அன்பாகவேயடைந்து சீவிப்பார்கள்
அறிகுவீரிதனுண்மை மதியுள்ளோரே. 8

உரை:—மனிதவகுப்பார் அவரவர் முன் ஜன்மத்தில் செய்த பாபபுண்ணியத்திற்குத் தகுந்த விதமாக சுகதுக்கத்தை யனுபவிப்பதற்கிசைந்த விதமாய் நவக்கிரகங்கள் நடத்தும் பலாபலனை ஆரூடத்தாலுணர்ந்து காலபலனை கவனித்துக்கொண்டு தாங்கள் நினைத்த காரியத்தை நிறைவேற்றிக்கொண்டு புத்திர பௌத்திரர் மனைவி மைந்தர் சுற்றத்தாருடனே சுகசீவியாய் வாழ்ந்திருக்க வேண்டும்.

தேங்காய்குறி ஆரூடபலன்

முற்றிற்று.

RangaRakes tamilnavarasam.com

நவக்கிரக

# திசாபுக்தி நிர்ணயம்

## கணேசர் துதி

*எண்சீரடி விருத்தம்*

பரப்ரம்மஜோதியெனுங் கணேசமூர்த்தி
    பாதாரவிந்தமதைத் தினமும்போற்றி
தரணிதனில்பிறந்த ஜாதகர்களுக்கு
    அக்கபடிசுகதுக்கம் வாய்ப்பதற்கு
நிர்ணயமாய்நவக்கிரக திசாபுக்திதன்னில்
    நிச்சயித்துசொல்லுமந்த பலாபலன்கள்
தரணிதனிலுள்ளோர்க்குச் சொல்வதானேன்
    தகுந்தவிதம்ஜாதகர்க்குப் புகலுவீரே. 1

உரை:—பரப்ரம்ம ஜோதிசொரூபமாய் விளங்கும் கணேசமூர்த்தியின் திருவருளால் உலகத்தில் பிறந்த ஜாதகர்கட்குத் தகுந்தபடியே சுகதுக்கம் வாய்ப்பதற்கிசைந்தபடி நவக்கிரகங்கள் தமது திசாபுக்திகளில் கொடுக்கும் பலாபலனுக்கிசைந்த சுகதுக்கத்தின் காரணத்தின் விபரத்தைத் தெரிவிக்கின்றோம். ஜோதிட கணிதவல்லோர்கள் விபரமாய் கவனித்து ஜாதகர்கட்கு பலன்களைப் புகல்வீர்கள்.

## நவக்கிரக வருடம் 120-க்கு விபரம்

சூரியனுக்காறுண்டு மதிக்குப்பத்து
    செவ்வாய்க்கேழாண்டுராகுக்கு பதினெட்டாண்டு
குருவிப்படியமைந்தே வியாழனுக்குத்
    தகுந்தபடிபதினாறு வருஷமாகும்
காரிக்குப்பத்தொன்பது திசைஆண்டாகும்
    குமரபுதன்திசைவருஷம் பதினேழாகும்
பாரில்கேதுக்குஏழ்சுக்கிரற் கிருபதாண்டு
    பகருதிசைநூற்றிருப தாகுந்தானே. ௨

உரை:—உலகத்தில் பிறந்த மனிதர்கட்குச் சகலதுக்கத்தைக் கொடுக்கின்ற நவக்கிரகங்களாகிய சூரியன், சுக்கிரன், செவ்வாய்,

RangaRakes tamilnavarasam.com

இராகு, குரு, சனி, புதன், கேது, சுக்கிரனென்னும் ஒன்பது கிரகங்களும் தமது திசாவருஷமாகிய நூற்றிருபது வருஷத்தின் விபரத்தையும் சரியாய் கவனித்துப் பலன் சொல்லவேண்டும்.

## நவக்கிரக திசை வருஷத்தின் விபரம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| சூரியன் திசை | 6 | இராகு திசை | 18 | புதன் திசை | 17 |
| சந்திர திசை | 10 | குரு திசை | 16 | கேது திசை | 7 |
| செவ்வாய் திசை | 7 | சனி திசை | 19 | சுக்கிர திசை | 20 |

நக்ஷத்திர பல அபஹாரம்

| ...த்திர திசை 0 | ரோகிணி, அஸ்தம், திருவோணம் சந்திர திசை ஃ 10 | | | மிரு, சித், அவி செவ்வாய் திசை ஃ 7 | | | திருவா, சுவா, சதய - இராகு திசை ஃ 18 | | | புனர்பூச, விசா பூரட்டா - குரு திசை ஃ 16 | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| நாள் | புத்தி | மா | நாள் | புத்தி | மா | நாள் | புத்தி | மா | நாள் | புத்தி | மா | நாள் |
| 18 | சந்தி | 10 | 0 | செவ் | 4 | 27 | ராகு | 32 | 12 | குரு | 25 | 18 |
| 0 | செவ் | 7 | 0 | ராகு | 12 | 18 | குரு | 28 | 24 | சனி | 30 | 12 |
| 6 | ராகு | 18 | 0 | குரு | 11 | 6 | சனி | 34 | 6 | புத | 27 | 6 |
| 24 | குரு | 16 | 0 | சனி | 13 | 9 | புத | 30 | 18 | கேது | 11 | 6 |
| 18 | சனி | 19 | 0 | புத | 11 | 27 | கேது | 12 | 18 | சுக் | 32 | 0 |
| 12 | புத | 17 | 0 | கேது | 4 | 27 | சுக் | 36 | 0 | சூரி | 9 | 18 |
| 6 | கேது | 7 | 0 | சுக் | 14 | 0 | சூரி | 10 | 24 | சந்தி | 10 | 0 |
| 6 | சுக் | 20 | 0 | சூரி | 4 | 6 | சந்தி | 18 | 0 | செவ் | 11 | 6 |
| 0 | சூரி | 6 | 0 | சந்தி | 7 | 0 | செவ் | 12 | 18 | ராகு | 28 | 24 |

| ...ஞரம், ...ட்டாதி ...சனி திசை ஃ 19 | | ஆயில்யம், கேட்டை, ரேவதி புத திசை ஃ 17 | | | அஸ்வினி, மகம், மூலம் கேது திசை ஃ 7 | | | பரணி, பூரம், பூராடம் சுக்கிர திசை ஃ 20 | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| மா | நாள் | புத்தி | மா | நாள் | புத்தி | மா | நாள் | புத்தி | மா | நாள் |
| 36 | 3 | புதன் | 28 | 27 | கேது | 4 | 27 | சுக் | 40 | 0 |
| 32 | 9 | கேது | 11 | 27 | சுக் | 14 | 0 | சூரி | 12 | 0 |
| 13 | 9 | சுக் | 34 | 0 | சூரி | 4 | 6 | சந்தி | 20 | 0 |
| 38 | 0 | சூரி | 10 | 6 | சந்தி | 7 | 0 | செவ் | 14 | 0 |
| 11 | 12 | சந்தி | 17 | 0 | செவ் | 4 | 27 | ராகு | 36 | 0 |
| 19 | 0 | செவ் | 11 | 27 | ராகு | 12 | 18 | குரு | 32 | 0 |
| 13 | 9 | ராகு | 30 | 18 | குரு | 11 | 6 | சனி | 38 | 0 |
| 34 | 6 | குரு | 27 | 6 | சனி | 13 | 9 | புதன் | 34 | 0 |
| 30 | 12 | சனி | 32 | 9 | புதன் | 11 | 27 | கேது | 14 | 0 |

## சூரியதிசை பலன்

அக்கினியாற்பீடைபய மிருத்துமண்பொன்
அதிகமாய்ச்சேதமுண்டு சத்துருக்கள்
மிக்கவேபயமுறுத்து வார்கள்துன்பம்
மிகவலைச்சல்கண்நோயுண்டு சிரசின்ரோகம்
துக்கமுண்டுபிதுர்கண்ட மாகும்பொல்லா
துயரமும்தோற்றுமே யென்றுரைப்பீர்
பக்குவஞ்சேர்பரிதிதிசை ஆறண்டுக்கும்
பலன்விபரம்பொதுவாக நடக்குந்தானே. 3

உரை:—சூரியதிசை 6-வருஷத்திற்கும் பொதுவான பலன் விபரமெவ்விதமெனில் அக்கினியாற்சேதம், மனபயங்கரம், மரணபயம், பூமி, பொன், வெள்ளி ஆபரணாதிகளின் சேதம், சத்துருக்களால் துன்பம், அலைச்சல், நேத்திரரோகம், தலைவலி, பிதுர்கண்டம் முதலிய துயரம் கஷ்டநஷ்டமனைத்தும் தோற்றும். ஆனால், சுபக்ஷேத்திரத்திலிருந்து சுபர் சம்பந்தமானாலும் பார்வைபெற்றாலும் நற்பலன் மிகத் தருவார்.

## சூரியன் திசையில் சூரியபுத்தி பலன்

பிரபுக்கள்பகையுண்டாம் சரீரஉஷ்ண
பிணியுண்டாம்தலைநோய் கண்நோயுண்டாகும்
தரணியில்தான்செய்யும்வர்த்த கமும்நஷ்டம்
தரித்திரமாயிருப்பார்கள் சுபர்கண்டாலோ
சிரமமின்றிசுகமாயுத் போகஞ்செய்து
சீரானவியாபாரஞ் செய்தன்பாக
திரவியலாபந்தேடி பிரபுவைப்போல்
திறமையுடன்வாழ்ந்திருப்பா ருலகமீதே. 4

உரை:—சூரியதிசையின் சூரியபுத்தியில் ஜாதகர்க்குப் பிரபுக்களின் பகையுண்டாகும். சரீர உஷ்ணம், தலைநோய், கண்ணோய் முதலான வியாதிகளும் வெட்டைச்சூடும் பொருந்தி சரீர மிளைக்கச் செய்து தான் செய்யும் வர்த்தக நஷ்டம், உத்யோக கஷ்டமனைத்தும் நேரிடும். சுபக்ஷேத்திரத்திலிருந்து சுபர் பார்வை நோக்கமானால் சகலவிதமான நன்மையுமுண்டாகும்.

## சந்திரன் புத்தி பலன்

பரிதிதிசையிற் சந்திரபுத்திவந்தால்
பாக்கியமும்சம்பத்தும் மனமகிழ்ந்து
பெருமையுடன்கீர்த்தியுமே மிகவுண்டாகி
பொன்பொருளும்பந்துமித்ரர் கூட்டத்தோடு

RangaRakes tamilnavarasam.com

வருகின்றயோகமதும் பூமிலாபம்
வாய்த்திடுமேசதாகாலம் திரவியலாபம்
தருமேவறுமையிலா வாழ்ந்திருக்க
தாரணியில்பிறந்திட்ட ஜாதகர்க்கே 5

உரை:—சூரியதிசையில் சந்திரபுத்திவந்தால் தனதான்ய சம்பத்தும், கீர்த்தியும், பெருமையும், மனோற்சாகமும், பூமிலாபமும், பந்துமித்திரர் சேர்க்கையும், திரவியலாபமும் கிடைத்து வறுமை நோயில்லாத தனவந்தனு மிருப்பதற்காகும்.

## அங்காரகன் புத்தி பலன்

மார்த்தாண்டன் திசைதனிலே செவ்வாய்புத்தி
மாஷிமையாய்ஜாதகர்க்கு வந்ததாகுல்
கீர்த்தியுண்டுபொன்பொருளும் வந்துசேரும்
கெம்பீரஉத்யோக வியாபாரஞ்செய்து
சீர்பெறவேவெகுலாபம் பெற்றன்பாக
சிறப்புடனேபந்துமித்ரருடனே வாழ்வார்
பார்த்தவர்களெல்லோரும் புகழ்ந்துரைக்கும்
பாக்கியவானுயிருப்பா ருலகமிதே. 6

உரை:—சூரியதிசையில் செவ்வாய் புத்திவரும்போது சுபக்கிரக பார்வையாயிருந்தால் அந்த ஜாதகனுக்கு மாஷிமை பொருந்திய கீர்த்தியும், பெருமையும், கௌரவமும், வர்த்தக லாபமும், உத்தியோக மேன்மையும் பொருந்திய தனதான்ய சம்பத்தும், பந்துமித்திரர்களின் பெருமையும் சகலரும் தன்னை தனவந்தனென்றுரைக்கும் பிரபுத்தன்மையா யிருப்பதற்காகும்.

## இராகு புத்தி பலன்

இருள்நீக்கும்சூரியனார் திசையிலேதான்
இராகுபுத்திவந்தால் ஜாதகர்க்கு
பொருள்நஷ்டம்வியாபார லாபமில்லை
பொருந்தாதுஉத்யோகம் தொழிலனைத்தும்
பெருமைநீங்கித்துன்ப மனுபவித்து
பேருலகோர்பழித்திகழ கலங்கிநிற்பார்
குருசுக்கிரபுதன்பார்வை யாயிருந்தால்
குற்றமிலாசுகமுடனே சீவிப்பாரே. 7

உரை:—சூரிய திசையில் இராகுபுத்தி வந்தால் ஜாதகனுக்கு மனவிசாரமும், உத்யோகமின்மையும், வியாபாரநஷ்டமும் கஷ்டமும், கவலையும், துன்பமும் நேரிடும். ஆனால் குரு, சுக்கிரன்புதன்

பார்வையானால் கஷ்டநஷ்ட மில்லாமல் சுகமாய் ஜீவித்திருப்பார்கள்.

## குருபுத்தி பலன்

கதிரவன்திசையில் குரு புத்திவந்தால்
　　கலகம்போம்பகையும்போம் பாவம்போகும்
சதிசெய்யும்பகைவரெல்லாம் நேசமாவார்
　　சத்துருபயமில்லாமல் சிறந்துவாழ்வார்
மதியிருந்துபிரபுவைப்போ லுலகமீது
　　மனைவிமைந்தர்பந்துமித்திரர் கூட்டத்தோடு
நிதியிருந்துதனதான்ய சம்பத்தோடு
　　நீனிலத்திலேசிறந்து வாழ்குவாரே. 8

உரை:—சூரியன்திசையில் குருபுத்திவந்தால் மன சஞ்சலம் கஷ்டநஷ்டம் கலகமெல்லாம் விலகி, சத்துருக்களெல்லாம் தனக்கு மித்திரர்களாயிருந்து, பலவித நன்மை செய்துக்கொண்டிருப்பார்கள். தனதான்ய சம்பத்துடனே மனைவி மைந்தர் பந்துமித்திரர்கள் சஹிதமாய் பிரபுவைப்போல கௌரவமும், பெருமையும் பொருந்திய கீர்த்திப் பிரகாசமாய் சீவித்து சுகசவுக்கியமா யிருப்பார்கள்.

## சனிபுத்தி பலன்

சவிதாயென்னும்பரிதி திசையிலேதான்
　　சனிபுத்திவந்தாலே பந்துமித்திரர்
புவியோரெல்லாம்பகையால் விளங்குவார்கள்
　　பொருளனத்திற்கும்வறுமை யாகுமின்னும்
எவ்விடத்திற்சென்றாலும் கொடுமையாகும்
　　எவர்களும்பொல்லாதோனென் றிகழுவார்கள்
அவிபாதவக்கினிபோற் கலங்குவார்கள்
　　அத்தனன்பார்வையானால் சுகமுண்டாமே. 9

உரை:—சவிதாயென்னும் சூரியதிசையில் சனிபுத்தி வந்தால் அந்த ஜாதகனுக்கு பந்துமித்திரர் சுற்றத்தாரெல்லோரும் பகையாய் விளங்கிக் கஷ்டப்படுத்துவார்கள். அலைச்சலும், துக்கமும், துயரமுமுண்டாகி சீவிக்கச்சக்தியில்லாமலும் பொருள்தேடும் வழியில்லாமல் அன்னவஸ்திரத்திற்கே பஞ்சமாய், வறுமை பிணியால் கலங்குவார்கள். ஆனால், குருபகவான் பார்வையானால் இத்தனை விதமான பொருள்தேடி, சீவித்துக் கொண்டிருப்பார்கள்.



RangaRakes tamilnavarasam.com

## புதன்புத்தி பலன்

ஆதித்தன் திசையில்புதன் புத்திவந்தால்
அநேகவிதநோய்களால் கலங்குவார்கள்
வாதித்துதுஷ்டர்களும் கொடுமைசெய்து
வம்புசண்டைசெய்வார்கள் சுபர்பார்த்தாலே
நீதில்லாசுகபோக பாக்யம்பெற்று
தினந்தோறும்சாஸ்திர ஆராய்ச்சிசெய்து
நீதியாப்பலபேர்க்கு மதியுரைக்கும்
நிபுணனுபுலகோர்முன் விளங்குவாரே. 10

உரை :—சூரிய திசையில் புதன்புத்தி வந்தால் பலவித வியாதிகளாலும் வறுமை நோயாலும் துன்பப்படுவதுடன் பகைவர்களின் கொடுமையால் கலங்கி சத்துருக்களால் சண்டை, சச்சரவு, வாத வம்பு நேரிட்டுத் துடிதுடித்து மன விசாரப்படுவார்கள். ஆனால், சுபக்கிரகங்களாகிய குரு, சுக்கிரன், வளர்பிறைச்சந்திரன் பார்வையானால், பற்பல சாஸ்திர ஆராய்ச்சி செய்து சகலருக்கும் மதியுரைக்கும் நீதிவானும் அடக்கம், பொறுமை, சாந்தம், தயாளம், சீவகாருண்யத்துடன் சுகசீவியாயிருப்பார்கள்.

## கேதுபுத்தி பலன்

பருதிதிசையிற்கேது புத்திவந்தால்
பதியிழந்துபொருளிழந்து துன்பமுற்று
வறுமையினுல்கலங்குவார் சுகமில்லாமல்
வையகத்தில்வெகுதுயர மனுபவிப்பார்
மருவினபந்துமித்ரர் பகையாவார்கள்
மரணகண்டமானபிணியால் துடிப்பார்
குருசுக்ரன்மால்மதியன் பார்வையானுல்
குற்றமில்லைநற்பலனும் விளங்கும்பாரே. 11

உரை :—சூரியதிசையில் கேதுபுத்திவந்தால் மனச்சஞ்சலமும் திகிலுமடைந்து சீவிக்கச் சக்தியில்லாமல் கைப்பொருளிழந்து, துன்பமும் கலகமும் கஷ்டநஷ்டமும் கவலையுமடைந்து, தனது வாசஸ்தானத்தை விடுத்து பரதேசியா யலைந்து, சுசௌக்கியமில்லாமல் பந்துமித்திரர்களெல்லாம் பகையாகும்படி, நிலைபிலிருந்து கலங்குவார்கள்.

## சுக்கிரபுத்தி பலன்

சூரியனார்திசையில் சுக்கிரபுத்திவந்தால்
சூலையதிசாரநோய் சுரரோகத்தால்

பாரிலுள்ளோர்தானிகழ்ந்து பரிகாசித்தும்
பகையாகிநிந்திக்கக் கலங்குவார்கள்
சீரிலகும்குருபுதனும் சந்திரன்காணில்
சிறிதுதுன்பம்விலகியே சீவித்தன்பாய்
காரியத்திற்கண்ணுண்டாய் கஷ்டப்பட்டு
காசுபணம்சேர்த்துலகில் சீவிப்பாரே. 12

உரை:—சூரியதிசையில் சுக்கிரபுத்திவந்தால் சூலைரோகமும், கைகால்பிடிப்பு, காய்ச்சல், குளிர், சுரரோக முதலான பலவித வியாதிகளும் சூழ்ந்து, துயரப்படுத்துவதுடன் மனோகர்வர்களாகிய பந்து மித்ரர்கள் பழித்துப் பரிகாசித்து இம்சிக்கும்படியான மனவிசாரமா யிருப்பார்கள். ஆனால், குரு புதன் வளர்பிறைச்சந்திரன் பார்வையானுல் கொஞ்சங்கொஞ்சமாய்த் துன்பமெல்லாம் விலகி ரோஷத்தினுல் காரியத்தின்மேல் பார்வையாய் வீராவேசத்துடன் கஷ்டப்பட்டுக் கைத்தொழிலாகிலும் புரிந்து திரவிய சேகரஞ்செய்து சீவித்திருக்கும்படியாய் நேரிடும்.

## சந்திரமகாதிசை பலன்

சந்திரனார்திசையில்சுக போகபாக்யம்
சகலவிதநன்மைகளும் மிகவுண்டாமே
பந்துமித்ரர்சேர்க்கையினுல் அநேகநன்மை
பாக்யமும்பெற்றினிதாய் மனமகிழ்ந்து
சுந்தரஞ்சேர்மனைவிமைந்த ருடனேயன்பாய்
சூழ்புவியிலேயினிதாய் வாழ்ந்திருந்து
சத்தமும்பொருள்சேர்த்து தனவானாக
சவுக்கியமாய்ப்பூதலத்தில் சீவிப்பாரே. 13

உரை:—சந்திரன் திசைவந்தால் அவர் நல்ல ஸ்தானத்திலிருந்து குரு புதன் பார்வை பெற்றிருந்தால், தனவானாக வியாபாரம் உத்தியோகம் முதலானவைகளால் பெருமையும் கீர்த்தியும் வாய்ந்து திரவியசேகரஞ்செய்து சகலவித நன்மைகளும், சுகபோக பாக்கியமும் பெற்று, உத்தமபந்து மித்திரருடன், சுகசீவியாய் மனைவி மைந்தர்களுடனே வாழ்ந்திருப்பார்கள்.

## சந்திரதிசையில் சந்திரபுத்தி பலன்

மதிதிசையின்சுயபுத்தி வந்திட்டாலே
மாநிலத்தில்பெருமையுடன் பந்துமித்திரர்
அதிகநன்மைசெய்திடுவா ரெந்தநாளும்
ஆபரணாதிகளுடனே விவாகங்கூடும்

நிதிமிகுந்துவர்த்தகஉத் யோகத்தாலும்
　　நீணிலத்தில்பலவிதமாய் பொருள்சேர்த்தன்பாய்
பதியில்வெகுதனவந்த னென்றெல்லோரும்
　　பணுவுடன்புகழ்ந்திடவே சீவிப்பாரே. 14

உரை:—சந்திரன் திசையில் சுபபுத்தி வந்தால் மனமகிழ்வாய் தனக்கு மனோற்சாக மதிகரித்துப் பெருமையும், கீர்த்தியும் வாய்த்து பந்துமித்திரர்களின் சகாயத்தினால் பலவித நன்மையடைந்து உத்தியோக விர்த்தியினாலும் வியாபார லாபத்தினாலும் பொருள் சேகரஞ் செய்து தனந்தான்ய சம்பத்துடனே சகலரும் பிரபுவென புகழ்ந்துரைக்கும்படியாய் சீவிப்பார்கள்.

## செவ்வாய்புத்தி பலன்

சந்திரனுர் திசையில்செவ்வாய் புத்திவந்தால்
　　சகலவிதநோயாலும் பகைவராலும்
சிந்தைமெலிந்துருகியே திகைத்துநிற்பார்
　　சீதஜ்வரம்ஷணவெட்டை மேகரோகம்
வந்துதுயரத்கலங்கி வாடுவார்கள்
　　வறுமைநோயாற்கலங்கி துடிதுடிப்பார்
அந்தனனும்புதன் பார்வை யாயிருந்தால்
　　அன்பாய்வர்த்தகஞ்செய்து சீவிப்பாரே. 15

உரை:—சந்திரன் திசையில் செவ்வாய் புத்திவந்தால் பலவிதமான வியாதிகளாலும் பகைவர்களின் கொடுமையாலும் மனங்கலங்கி திகைத்துத் திக்பிரமையடைந்து ஜ்வர வியாதிகளாலும், வெட்டைச்சூடு முதலிய வியாதிகளாலும் கஷ்டப்பட்டு வறுமை நோயால் துடித்துப் பரதவிப்பார்கள். ஆனால், குரு, புதன் பார்வையானால் வர்த்தகஞ் செய்தாகிலும் கைத்தொழிலாகிலும் புரிந்து பொருள் சேகரஞ்செய்து ஜீவித்துக்கொண்டிருப்பார்கள்.

## இராகுபுத்தி பலன்

அம்புலியின் திசையில்ராகு புத்திவந்தால்
　　அநேகதுயரசகுமப்பா சத்துருக்கள்
வம்புசெய்வார்பொருள்சேர்க்க வகையில்லாமல்
　　வறுமையினாலேதுடித்து வியாதியாலும்
வெம்பியேகலங்குவார் மரணகண்டம்
　　வேதனையாய்சூழ்ந்து பரதவிக்கச்செய்யும்
நம்புவாய்குருசுக்ரன் புதன்பார்த்தாலே
　　நலமாய்வர்த்தகஞ்செய்து ஜீவிப்பாரே. 16

RangaRakes tamilnavarasam.com

உரை:—சந்திரன் திசையில் இராகுபுத்தி வந்தால் அநேக விதமான துன்பத்தாலும், சத்துருக்களின் கலகத்தினாலும் மனத் திகைத்து திரவியசேகரஞ் செய்வதற்குச் சக்தியில்லாமல் வறுமை நோயாற் கலங்கி, ஆகாரபக்ஷணமின்றி சரீர வன்ன மதிகரித்து பல விதமான வியாதிகளால் மரணகண்டத்திற் கிசைந்த வேதனையால் கலங்கித் துடிப்பார்கள். ஆனால், சுக்ரன், புதன், குரு பார்வையானால் வியாபாரஞ் செய்தாகிலும், உத்தி யோகஞ் செய்தாகிலும் திரவிய சேகரஞ்செய்து சீவிப்பார்கள்.

## குருபுத்தி பலன்

இந்துதிசையில்வியாழன் புத்திவந்தால்
இராஜாக்கள்பிரபுக்கள் சகாயத்தாலே
சந்ததமும்வியாபார உத்தியோகத்தால்
சகலவிதமாய்ப்பொருளை சேகரித்து
பந்துமித்திரர்சேர்க்கையால் மகிழ்ந்துபுத்ர
பாக்கியமும்பெற்றினிதாய் வாழ்ந்திருந்து
மைந்தர்களும்மனைவிசுற்றத் தார்களோடு
மாநிலத்திலேசிறந்து ஜீவிப்பாரே. 17

உரை:—சந்திரன் திசையில் குருபுத்தி வந்தால் இராஜாக்களாலும் பிரபுக்களின் சகாயத்தாலும் உத்தியோகஞ் செய்தும், வியாபாரஞ் செய்தும் திரவிய சேகரஞ்செய்து பலவிதமாய்ப் பொருள் சேகரஞ்செய்து பந்துமித்திரர்களுடன் சுகசீவியாய் வாழ்ந்திருந்து மனைவி மைந்தர்களுடன் சீவித்திருப்பதற்காகும்.

## சனிபுத்தி பலன்

இரசக்கதிரானசனி திசையிலேதான்
இரவிமகன்சனிபுத்தி வந்திட்டாலே
பரவுகின்றவியாதியெல்லாம் வந்துசூழ்ந்து
பலவிதமாய்த்துன்மரண கண்டந்தோன்ற
நிராயுதனும்யாதொன்றும் கவனியாமல்
நீணிலத்தோர்பழித்திடவே கலங்குவார்கள்
சுரர்குருவும்புதன்சுக்கிரன் பார்வையானால்
சுகானந்தமாயுலகில் ஜீவிப்பாரே. 18

உரை:—சந்திரன் திசையில் சனிபுத்தி வந்தால் பித்தசீதள வியாதியாலும், மேகரோகத்தினாலும், மரண கண்டத்திற்குச் சரியாய் கஷ்டநஷ்ட மனுபவித்து ஆதரவில்லாத பரதேசியைப் போல நிராதரவாய் கலங்கித் துடிப்பார்கள். ஆனால், குரு, புதன்,

RangaRakes tamilnavarasam.com

சுக்கிரன் பார்வையானல் வியாபாரத்திலுலும், உத்தியோகத்தினுலும் திரவிய சேகரஞ்செய்து மனைவி மைந்தர்களுடனே சுக சீவியாய் வாழ்ந்திருப்பதற்காகும்.

## புதன்புத்தி பலன்

திங்கள் திசையில்புதனர் புத்திவந்தால்
திருமருவும்தனந்தான்ய சம்பத்துண்டாம்
மங்களஞ்சேர்மன்னவர்கள் பிரபுக்கள்நேசம்
மாக்ஷிமையாய்கிடைத்து பொருள்பொன்பூமி
இங்கிதமாய்கிடைத்திடவே தனவானென்றும்
இப்புவியோர்மனமகிழ புகழ்ந்துரைக்கும்
சிங்காரமாகவே மனைவிமைந்தர்
சுற்றத்தாருடனினிதாய் ஜீவிப்பாரே. 19

உரை:—சந்திரன் திசையில் புதன்புத்தி வந்தால் இலக்ஷுமி கடாக்ஷம் பெற்று, தனந்தான்ய சம்பத்துடன் ராஜாக்கள். ஜமீன்தார்கள், பிரபுக்கள் நேசம் வகித்து உத்தியோகத்தினுலும், வியாபாரத்தினுலும் திரவிய சேகரஞ்செய்து பொன், பொருள், காணி,பூமி இலாபத்துடனே அழகான ரூபலாவண்யமும்நற்குண நற்செய்கையுடனிருக்கும் மனைவி மைந்தர்களுடன் சுகசீவியாய் தனது இனஜன பந்து மித்திரர்களெல்லாம் புகழ்ந்துரைக்கும்படியாய் வாழ்ந்திருப்பதற்காகும்.

## கேதுபுத்தியின் பலன்

அலவன்திசையிற்கேது புத்திவந்தால்
அல்லல்துயராற்கலங்கி வறுமைசூழ்ந்து
பலவியாதியால்திகைத்து மார்புநோயால்
பரதவிப்பார்மனத்துயர மதிகரித்து
கலகமுண்டுகடன்கொடுத்தோர் வம்புசெய்வார்
கைத்தொழில்வர்த்தகமில்லா திரிந்தலைந்து
பலநாளும்துன்பமுற்று சிலநாட்சென்றல்
படிப்படியாய்கஷ்டமெல்லாம் விலகும்பாரே. 20

உரை:—சந்திர திசையில் கேது புத்தி வந்தால் ஆரம்பத்திலிருந்தே ஜீவிக்கும் தொழிலுமின்றி, கையிற் காசில்லாமல் கடன்காரர் துன்பத்தால் கலங்கித் துடித்து, வறுமை நோயாற் திகைத்து, மார்புநோய் முதலான பலவித பித்த சம்பந்தமான வியாதிகளாலும் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்து, கடைசியில் கொஞ்சங் கொஞ்சமாக விலகி சீர சவுக்கியமாய் வியாபாரஞ் செய்துக்கொண்டு ஜீவித்திருப்பதற்காகும்.

RangaRakes tamilnavarasam.com

## சுக்கிரபுத்தியின் பலன்

*சந்திரனுர் தன் திசையில் சுக்கிரபுத்தி*
*சார்ந்தாலேதன தான்ய சம்பத்துண்டு*
*சுந்திரஞ்சேர்மங்கையர்கள் நேச முண்டு*
*சுகபாக்யதனதான்ய சம்பத்துண்டு*
*பந்துமித்திரர்சேர்க்கையுண்டு வர்த்தகத்தால்*
*பலவிதமாய்ப்பொருள்சேர்த்து பிரபுவைப்போல்*
*சிந்தைமகிழ்ந்தேமனைவி மைந்தரோடு*
*சிறப்பாகவாழ்ந்திருப்பார் கவனிப்பீரே.* 21

**உரை:**—சந்திர திசையின் சுக்கிரபுத்தியில் ஜாதகர்க்கு மிகுஉற்சாகமும், தைரியமும் பொருந்தி உத்தியோக விர்த்தியும், வியாபார லாபமும் பெற்று தனதான்ய சம்பத்துடனே அழகான பெண்கள் சேர்க்கையும், பந்துமித்திரர் பெருக்கமும், சுற்றத்தார்களால் புகழ்ந்துரைக்கும்படியான கீர்த்தியுடனும் மனைவி மைந்தர்களுடன் சுகஜீவியாய் வாழ்ந்திருப்பார்கள்.

## சூரியபுத்தி பலன்

*திங்கள் திசையிற்சூரியன் புத்திவந்தால்*
*திகைத்துமனஞ்சோர்ந்திடவே வறுமைநோயால்*
*எங்கெங்குந்திரிந்தலைந்து சத்துருக்கள்*
*எந்நாளும்பகைவிளைத்துக் கலகஞ்செய்வார்*
*அங்கமதில்பிணிசூழ்ந்து வருந்தச்செய்யும்*
*அக்கினியினுலேபய மதிகரிக்கும்*
*பங்கமிலாகுருசுக்கிரன் புதன்பார்த்தாலே*
*பாக்கியவந்தனுயுலகில் ஜீவிப்பாரே.* 22

**உரை:**—சந்திரன் திசையில் சூரியன் புத்திவந்தால் உத்தியோக மில்லாமலும் வியாபாரமில்லாமலும் கைப்பொருளில்லாமலும் கலங்கி துடித்து வறுமை நோயினுல் திகைத்து, சத்துருக்கள் பகை விளைத்துக் கலகஞ் செய்வார்கள். சரீர வியாதியால் மெலிந்து உருகுவார்கள். அக்னிபயம் சூழ்ந்து கஷ்டப்படுத்தும். ஆனால் குரு, சுக்ரன், புதன் பார்வையானுல் தனலாபத்துடனே மனைவி மைந்தர் பந்துமித்திரர்களுடன் ஜீவித்திருப்பார்கள்.

RangaRakes tamilnavarasam.com

## அங்காரக மகாதிசை பலன்

அங்காரகன்திசையில் ஜாதகர்க்கு
அக்கினியாற்பீடைவரும் உஷ்ணரோகம்
தங்கியேக்ஷயரோகம் பித்தகாசம்
தலைநோயும்சொரிசிரங்குண் டாகுமின்னும்
எங்கெங்குமுண்டாஞேர் பகைவராகி
எந்நாளுந்துன்பமுந் துயருண்டாகும்
பங்கமில்லேசுபஸ்தானந் தனிலிருந்தால்
பாக்கியம்பெற்றினிதுடனே சீவிப்பாரே. 23

உரை:—செவ்வாய் திசையில் ஜாதகர்களுக்கு அக்னிபயமும் சரீர உஷ்ணமும் க்ஷயரோகமும் பித்தகாசரோகமும் தலைநோய், மண்டைக்காய்ச்சல், சொரி, சிரங்கும், பலபேரால் பகையும், சத்துரு விரோதமு முண்டாகும். சதா காலமும், மன விசாரம் திகிலுமா யிருக்கும். ஆனல் செவ்வாய் பகவான் கேந்திர ஸ்தானம், நட்பு ஆக்ஷி உச்சமாயிருந்தால் மனதைரியமும் பாக்யசம்பத்து முண்டாயிருக்கும்.

### அங்காரக திசையில் அங்காரகபுத்தி பலன்

திமைகனர்திசையில்சேய் புத்திவந்தால்
திருபரால்பகைவரால் மித்ரராலும்
கலகமுண்டுகைப்பொருள்கள் சேதமுண்டு
கனலால்பீடைநேர்ந்து துயருண்டாகும்
நலமானசுபக்ஷேத்ர கேந்திரமுற்று
நாடியேசுபக்கிரக பார்வையானுல்
பலவிதமாய்ப்பொருள்சேர்த்து மனைவிமைந்தர்
பந்துக்கூட்டத்துடனே சீவிப்பாரே. 24

உரை:—அங்காரகதிசையில் செவ்வாய்புத்தி வந்தால் மன்னர்களாலும், பிரபுக்களாலும், சிநேகிதர்களாலும் கலகமுண்டாகி பலவித கஷ்டநஷ்ட மடைந்து, கைப்பொருள் சேதமாகியும், அக்கினியால் அபாயமும் நேரிட்டுப் பலவித துன்புறச் செய்யும். ஆனல், செவ்வாய் பகவான் கேந்திர ஸ்தானங்களிலிருந்தும் நட்பு, ஆக்ஷி, உச்சஸ்தானங்களிலெங்கேனுமிருந்து, குரு, சுக்கிரன், புதன், வளர்பிறைச் சந்திரனுல் பார்வை பெற்ருல் மனதைரிய வைராக்கியத்துடனும், உத்யோக விர்த்தியாலும், வியாபார லாபத்திஞலும், திரவ்ய சேகரஞ்செய்து மனைவிமைந்தர் பந்துமித்திரர்களுடனே சுகசீவியாய் வாழ்ந்திருப்பார்கள்.

RangaRakes tamilnavarasam.com

## இராகுபுத்தி பலன்

செய்திசையில் இராகுபுத்தி வந்திட்டாலே
    சோரர்களால்பகைவரால் கலகமுண்டு
நோய்சரீரத்திலுற்று திருடராலே
    தொந்துழல்வார்மாந்திரீகர் கொடுமையாலும்
வாய்மதமாய்ப்பேசும்வம்பர் தன்னுல் துன்பம்
    வந்திடுமேஜாதகர்கட் கென்றுரைப்பாய்
தூய்மையுள்ளகுருசுக்ரன்புதன் பார்வையானுல்
    துன்பமில்லாதன்மையுடன் ஜீவிப்பாரே. 25

உரை:—செவ்வாய் திசையில் ராகுபுத்தி வந்தால் திருடர்களாலும், பகைவர்களாலும், மாந்திரிகராலும் செய்யும் துரா கொடுமையினுலும், துன்பத்தாலும் கஷ்டநஷ்ட மனுபவிப்பார்களென்றுரைப்பாய். ஆனுல், பரிசுத்தமான குரு, சுக்கிரன், புதன் பார்வையாலிருத்தால் யாதொரு துன்பமும், கஷ்ட நஷ்டமுமில்லாமல் திரவியசேகரஞ்செய்து சுகசவுக்கியமாய் சீவித்திருப்பார்கள்.

## குருபுத்தி பலன்

மங்கலனுர் திசையில்குரு புத்திவந்தால்
    மதிசுத்தமாய்ஞாபக சக்தியுண்டு
செங்கமலலக்ஷ்மிதுணை யுண்டுகல்வி
    செந்தமிழும்சங்கீத ஞானத்தோடு
தங்கம்பொன்னுடன் பூமிலாபமுண்டு
    தையலர்கள்சேர்க்கையுண்டு பூலோகத்தில்
மங்காதகீர்த்தியுடன் மனைவிமைந்தர்
    மகிழ்ந்துபசரித்திடவும் ஜீவிப்பாரே. 26

உரை:—செவ்வாய் திசையில் குருபுத்தி வந்தால் சுத்தமான நன்மதியமைந்து, ஞாபகசக்தியும், வித்யாவிவேகமும், மகாலக்ஷ்மி கிருபையும், தமிழாராய்ச்சியும், சங்கீத ஞானமும் தனதானிய சம்பத்தும், பூமிலாபமும் பந்துஜனங்களின் சகாயமும் பொருந்திய பலவித சம்பத்துடனே மனைவி மைந்தர்கள் சுற்றத்தார்கள் சூழ சுகசீவியாய் வாழ்ந்திருப்பார்கள்.

## சனிபுத்தி பலன்

மங்கலனுர் திசையில் சனிபுத்திவந்தால்
    மாற்றுரின்கொடுமையினுல் துன்பமுண்டு
அங்கத்தில்பலவியாதி சூழ்ந்துக்கொண்டு
    அலைச்சலுற்றயல்நாட்டி லோடச்செய்யும்

௨௬

RangaRakes tamilnavarasam.com

*பங்கமிலா குருசுக்ரன் புதன்பார்த்தாலே*
*பாக்கியசம்பத்துடனே காணிபூமி*
*தங்கம்வெள்ளி ஆபரண திகளோடன்பாய்*
*தாரணியிலேஜீவித் திருப்பார்தானே.* 27

உரை—செவ்வாய் திசையில்சனிபுத்தி வந்தால் பகைவர்களின் கொடுமையினால் துன்பமும் துயரமுமதிகரித்து கைப்பொருளின்றிக் கவலையால் மெலிந்து, சீர வியாதியாகி பலவித கஷ்டமும் கவலையுமதிகரித்து, சகிக்கமுடியாத கஷ்டத்தினால் துயருற்று, தாங்கமுடியாத வறுமைநோயை சகிக்கமுடியாமல் பற்பலவித தேசங்களில் அலையச்செய்து கஷ்டப்படச்செய்யும். ஆனால், குரு சுக்கிரன், புதபகவான் முதலான சுபக்கிரகங்களின் பார்வை பெற்றால் வித்தியா விர்த்தியுடன் உத்திபோக விர்த்தியினாலும் வியாபார லாபத்தினாலும் பொருள் சேர்த்து பூமி லாபத்துடனும், பொன் வெள்ளி ஆபரணத்துடனும் பந்துமித்திரர் மனைவிமைந்தர்களுடனே சீவிப்பார்கள்.

## புதன்புத்தி பலன்

*பனிக்கதிரோனுனை நூசன் திசையிலேதான்*
*பண்டிதனும்புதன்புத்தி வந்திட்டாலே*
*இனிதாகக்கல்விதற் றுத்யோகஞ்செய்தும்*
*இசைந்தவர்த்தகஞ்செய்து திரவியந்தேடி*
*மனைவிமைந்தர்பந்துமித்ரர் கூட்டத்தோடு*
*மகிழ்வுடன்வாழ்ந்திருந்து சுற்றத்தார்மேல்*
*சினமிலாசனத்தோ ரெல்லாம்வாழ்த்த*
*சீமானென்றேபுகழ ஜீவிப்பாரே.* 28

உரை—செவ்வாய் திசையில் புதன்புத்திவந்தால் வித்தையில் தேர்ச்சியடைந்து சோம்பலில்லாமல் சுறுசுறுப்புடன் உத்தியோகஞ்செய்தும் வியாபாரஞ்செய்தும் பலவித சமர்த்தனாய் திரவிய சேகரஞ்செய்து, பொன்பொருள் ஆஸ்தி பூஸ்திகளுடன் கீர்த்திப்பிரகாசமாய் மனைவி மைந்தர் பந்துமித்திரர்களுடன் சுகசீவியாய் வாழ்ந்திருந்து, இனஜனத்தின் விரோதமில்லாமல் சாந்தகுணவானென சகலரும் வாழ்த்தி சீமானென்று புகழ்ந்துரைக்கும்படியாய் சீவிப்பார்கள்.

## கேதுபுத்தி பலன்

*செப்திசையிலே கேதுபுத்திவந்தால்*
*செய்தொழிலும் வர்த்தகமும்நஷ்டங்காட்டும்*
*காய்ந்தமரமெனவே வரட்சியாகும்*
*கைப்பொருளில்லாவறுமை யாளுடம்பில்*

RangaRakes tamilnavarasam.com

நோய்களுந்துபயங்கரமா யிருக்கும்நல்லோர்
நோக்கினால்சுபபலனே நடக்குமென்று
ஆய்ந்துணர்ந்துதிசாபுத்தி பலனாராய்ந்து
அவனியில்சூழ்ஜாதகர்க்குப் பலன்சொல்வீரே. 29

உரை:—செவ்வாய் திசையில் கேதுபுத்தி வந்தால் மன வியாதியினால் கஷ்டமும் கவலையும் நேரிட்டு, சரீர வியாதியால் திகைத்துத் தான் செய்யும் தொழிலும் கெட்டு, வியாபாரமும் நஷ்டமடைந்து, திகைத்துத் திக்பிரமை யடைந்து, நிலையிலாமையடையச்செய்யும். ஆனால், சுபக்கிரகங்களாகிய குரு சுக்கிரன், பார்வை செலுத்தினால் வித்தையும். புத்தியும், ஞானமும் விசேஷித்து, தனதான்ய சம்பத்துடனே மனைவி மைந்தர்களுடன் மனோல்லாசமாய் வாழ்ந்திருப்பார்கள்.

## சுக்கிரபுத்தி பலன்

செவ்வாய்திசை தன்னிலே சுக்கிரபுத்தி
சேரவேவந்திட்டால் கொடியதுன்பமும்
ஒவ்வியேநேரிடும்மார்புநோய் கபமும்சோகை
ஒன்றார்சோரர்பயங்க ளாலுந்துன்பம்
செவ்விழியாள்மாதரின்ப மனுசுமுண்டை
சேர்த்திடவேவறுமையினால் கலங்குவார்கள்
எவ்விதமும்குருபுதனும் பார்வையானால்
எத்தகையதுன்பமில்லா சீவிப்பாரே. 30

உரை:—செவ்வாய் திசையில் சுக்ரபுத்தி வந்தால் பலவிதமான கஷ்ட நஷ்டங்களும் மார்புநோய், சோகை, கபம், காசம் முதலான வியாதியால் கலங்குவார்கள். திருடர்களாலும் பகைவர்களாலும் மனபயங்கரம் நேரிட்டு துன்பப்படுவார்கள். உத்தம ஸ்திரீகளின் சேர்க்கை யில்லாமல் விதவா விருப்ப சுகபோகப் பிரியனும் வறுமை துயரால் கலங்கித் துடிதுடித்துக் கஷ்டப்படுவார்கள். ஆனால், குரு, புதன் பார்வைபெற்றால் எவ்விதமான கஷ்ட நஷ்டமும் வந்து சேராமல் அப்போதைக்கப்போது பலவித துன்பத்தையும் தடுத்து சீவித்திருக்கும்படியான தன்மை யடையச் செய்யும்.

## சூரியபுத்தி பலன்

செந்நிவண்ண திசையில் சூரியபுத்தி
சேர்ந்தகாலத்தில்சுக போகபாக்கியம்
சந்ததமும்கிடைக்கும் வர்த்தகத்தில்லாபம்
சவபத்துமித்திரரால் நன்மையுண்டு

RangaRakes tamilnavarasam.com

மைந்தர்கள்பாக்கியமுண்டு பொருளும்சேரும்
மாஷிமையாபெந்நாளும் சிறந்துவாழ்வார்
அந்தமுடன்பொன்பொருளும் காணிபூமி
ஆஸ்திபூஸ்திகளுடன் சீவிப்பாரே. 81

உரை:—செவ்வாய் திசையில் சூரியபுத்தி வந்தால் மனோற் சாகமாய் வியாபாரஞ் செய்தும், திரவிய சேகரஞ்செய்து தனந் தான்ய சம்பத்துடனே பந்துமித்திரர், மனைவி மைந்தர்களுடனே சுகசீவியாய் வாழ்ந்திருந்து, சீராரோக்யமுடனே காணி, பூமி, பொன், பொருள் பூஸ்திதியுடன் மகா தனவந்தர்களாய் சீவித் திருப்பதற்காகும்.

## சந்திரபுத்தி பலன்

அங்காரகன்திசையில் சந்திரபுத்தி
அமைந்தாலேஜாதகர்க்கு நன்மையுண்டு
மங்காதகல்வியுடன் தைரியத்தால்
மண்பொருளும்சேகரிக்க ஆவலுற்று
எங்கெங்குமலைந்து உத்யோகஞ்செய்தும்
எத்தேசத்திலும்வர்த்த கங்கள்செய்தும்
தங்கம்வெள்ளிசேர்த்துதிரு மணம்புரிந்து
தாரணியில்சீமானாய் விளங்குவாரே. 82

உரை:—செவ்வாய் திசையின் சந்திரபுத்தியில் ஜாதகர்க்கு மனோற்சாகமும் வித்யாபிவிருத்தியும், உத்தியோக மேன்மையும், வியாபார லாபமும் பெற்று, திரவியந்தேடி, பந்துமித்திரர் புகழ்ந் துரைக்கும்படியாய் காணி, பூமி, ஆஸ்தி பூஸ்திதியுடன், பொன் வெள்ளி, நவரத்தினாபரணங்களுடன் திருமண வைபவமுதலான நன்மையனைத்தும் பொருந்தி, பிரபுவைப்போல் மனைவி, மைந் தர், சுற்றத்தாருடன் சுகசீவியாய் வாழ்ந்திருப்பார்கள்.

## இராகு மகாதிசை பலன்

ராகுதிசைவந்தாலே ஜாதகர்க்கு
ராவுபகலெப்போதும் கஷ்டப்பட்டுப்
போகபாக்கியமிழந்து சுற்றத்தார்கள்
பொல்லாத துர்க்குணனென் றிகழ்ந்துரைப்பார்
சோகமுடனேதிகிலுற் றேகலங்கி
சொர்ணபணிபூஷணமெல்லா மிழப்பார்
நாகனையேகுருசுக்ரன் பார்த்திட்டாலே
நல்லபலன்தருவார்கள் ஜாதகர்க்கே. 83

RangaRakes tamilnavarasam.com

உரை:—இராகு திசையில் ஜாதகர்க்கு இரவும் பகலும் மன வருத்தமான விசாரங்களும், சுகபோக பாக்கியமுமிழந்து, தனது பந்துமித்திரர் சுற்றத்தார்களெல்லாம் பொல்லாதவனென் றிகழ்ந்து பேசுவார்கள். கையிலுள்ள பொன் பொருளனைத்தும் செலவழித்து விட்டு வறுமையால் திகைத்துக் கலங்குவார்கள். ஆனால், குரு சுக்கிரன் புதன் பார்வையானால் யாதொரு கஷ்டங் களுமில்லாமல் சுக சீவியாயிருப்பார்கள்.

## இராகு திசையில் இராகுபுத்தி பலன்

கரும்பாம்பின் திசையின் சுயபுத்திதன்னில்
காசினியிலேயெவரும் பகையாவார்கள்
அருமையாயிருந்தபந்து மித்ரரெல்லாம்
அவரவர்கள்மனம்வெறுத்து தூஷிப்பார்கள்
பொருளிழந்துசுகமிழந்து வறுமையாலே
பொல்லாத கஷ்டநஷ்ட மனுபவிப்பார்
குருசுக்கிரன்புதன் பார்வையாயிருந்தால்
குற்றமில்லாசுகமாக ஜீவிப்பாரே. 84

உரை:—இராகு திசையின் சுயபுத்தியில் உலகிலிருக்கும் தனது பிரியமான சிநேகிதரெல்லாம் பகையாகி இகழ்ந்து தூஷிப் பார்கள். சதாகாலமும் மனவிசாரமும், விஷபயங்கரமும், கஷ்ட நஷ்டமும், கையிற் பொருளில்லாத கலவரமும், வறுமையும், துன்பமும், துக்கமும் பொருந்தி கவலையால் மெலிவுறச் செய்யும். ஆனால், குரு சுக்கிரன், புதன் பார்வையாயிருந்தால் மேற்குறிப் பித்த கஷ்டநஷ்டமில்லாமல் தனதான்ய சம்பத்துடன் மகிழ்வ் வாசமாய், மனைவி மைந்தருடன் சீவித்திருப்பார்கள்.

## இராகு திசையில் குருபுத்தி பலன்

இந்தரியின் திசையில்குரு புத்திவந்தால்
இம்சையுடன்பலகஷ்ட மெல்லாஞ்சூழும்
சிந்தைநொந்துருகியே கலங்குவார்கள்
சிறுகின்றசர்ப்பபயத் தாலபாயம்
பந்துமித்திரர்பகையாவார் கேந்திரகோணமுற்று
புதசுக்கிரன்சந்திரன் பார்வையானால்
எந்தவிததுன்பமும் அணுகிடாமல்
எப்போதும்சுகமாக ஜீவிப்பாரே. 85

உரை:—இராகுதிசையில் குருபுத்தி வந்தால் பலவித துன்ப மும் துயரமும் நேரிட்டுப் பலவிதமான கஷ்டநஷ்ட மடையச்

RangaRakes tamilnavarasam.com

செய்து வகைத்தினுல் துயரப்படச் செய்தும் வறுமையால் துன்புறச் செய்யும். பந்துமித்திரர் சுற்றத்தாரெல்லோரும் பகையாவார்கள். ஆனல் புதன், சுக்கிரன், சந்திரன் பார்வையானுல் எவ்விதமான துன்பமும் துயரமும் நேரிடாமல் சுகசீவியா யிருக்கச் செய்யும்.

### சனிபுத்தி பலன்

யோககாரகன் திசையில் மந்தன்புத்தி
 யோக்கியதையில்லாம லலையச்செய்து
சோகமுறச்சித்தபிரமை யாகவேதான்
 சேருமிடம்விரோத்தேகச் செய்யுமப்பா
ஆகாதுபித்தரோகம் பிதுர்க்குபீடை
 அவனியிலேவெறியனைப்போ லலைவாரப்பா
ஆகமம்புகழ்நல்லோர் பார்வையானுல்
 ஐஸ்வரியவானுக விளங்குவாரே. 86

உரை:—இராகு திசையில் சனி புத்தி வந்தால் அந்த ஜாதகன் வெறியனைப்போல சித்தப்பிரமையாக எவர்களுக்கும் பகையாகி யோக்கியதா நடத்தையில்லாமல் தானிருக்குமிடத்திலும் பகையாகி பலதேச சஞ்சாரியா யலைந்து திரிந்து, அன்ன வஸ்திரத்திற்குப் பஞ்சமுற்றவனுயிருப்பான். ஆனல், குரு, சந்திரன், புதன், வளர்பிறைச்சந்திரன் பார்வையானுல் மனேற்சாக மதிகரித்து வீரவேச ரோஷத்துடன் கைத்தொழில் முயற்சி உத்தியோகவிர்த்தி வியாபார லாபத்தினுலும் பலவிதமாகப் பொருள் சேகரஞ்செய்து மனைவி மைந்தர் சுற்றத்தாருடனே சுகசீவியாய் வாழ்ந்திருப்பதற்காகும்.

### புதன் புத்தியின் பலன்

அரவுதிசைதன்னில் புதன்புத்திவந்தால்
 அன்புடனேகல்விகற் ருத்யோகஞ்செய்து
திரவியந்தேடியேவியா பாரஞ்செய்தும்
 நீரமுடன்காணி பூமிலாபம்பெற்று
சரசசல்லாபமங்கை சேர்க்கையாக
 சந்ததமும்பந்துமித்ரர் மகிழ்ந்துவாழ்த்த
தரணியிலேமனைவி மைந்தர்சுற்றத்தோடும்
 தைரியமாய்சீவித்து வாழ்குவாரே. 87

உரை:—இராகு திசையில் புதன்புத்தி வந்தால் வித்தியாபிவிர்த்தியுடன் உத்யோகஞ்செய்தும் திரவியசேகரஞ்செய்து வர்த்தகத்தில் லாபம்பெற்று காணிபூமி லாபத்துடனே அழகானபெண்களின் சேர்க்கையினுல் சதாகாலமும் சுகானந்தமாய் பந்து

RangaRakes tamilnavarasam.com

ரோர் மனமகிழ்ந்து புகழ்ந்துரைக்கத் தன்மையான கீர்த்தி ராசமுடன் மனைவி மைந்தர் சுற்றத்தாருடனே மனோல்லாச வாழ்ந்திருப்பதற்காகும்.

## கேதுபுத்தியின் பலன்

பாம்புதிசைதன்னிலே கேதுபுத்தி
　　பலவிதமாய்க்கெடுதியுண்டு நெருப்பாற்பீடை
சோம்பலொடுதுன்பமுண்டு மனைவாள்கண்டம்
　　சுரமரசராற்கலக மெய்தும்பின்னால்
வேம்பாகசுற்றத்தா ரிகழ்வாரின்னும்
　　வேதனைகள் தோற்றுமப்பா சுபர்பார்த்தாலே
ஆம்புகழுநேகமுண்டு பொருள்சேரும்
　　ஐஸ்வரியோனென்றே ஜீவிப்பாரே. 38

உரை:—இராகு திசையில் கேது புத்தி வந்தால் பலவித கஷ்ட நஷ்டங்களும் கெடுதிகளும் அக்கினியாற் பீடையும் தியும் வந்து பலவித துன்பமும் சுரரோகமும் அரசராற் கலக நேரிட்டு துயரப்படுவார்கள். ஆனால் குரு, சுக்கிரன், புதன், பிறைச் சந்திரன் பார்வையினால் பலவிதமாகிய சாமர்த்திய மும் வியாபார லாபத்துடனும் பொன், பொருள். பூமிலாப திதியுடன் சகலரும் புகழும் பிரபுவென்றும் ஐஸ்வரியவானும் தான்ய சம்பத்துடனே வாழ்ந்திருப்பதற்காகும்.

## சுக்கிரன் புத்தி பலன்

ராகுதிசைதன்னிலே சுக்கிரன்புத்தி
　　நலமுடனேவந்தாலே ஜாதகர்க்கு
போகபாக்கியம்கிடைக்கும் பெண்கள்சேர்க்கை
　　பொன்பொருளும் தனதான்யசம்பத்துண்டு
யோகவாழ்வாகவே பூலோகத்தில்
　　யோக்கியவானென்றே கீர்த்திபெறுவான்
வேகமாய்நாற்றிசையில் வர்த்தகங்கள்செய்து
　　வேணபொருள்சேகரித்து ஜீவிப்பாரே. 39

### சூரியபுத்தி பலன்

மதிப்பகைவன் திசையில்ரவி புத்திவந்தால்
    மன்னவர்கள்பிரபுக்கள் பயமுண்டாம்
சதிசெய்யும்சத்துருவால் வியாதியாலும்
    சந்ததமும்திகில்பட்டு கலங்குவார்கள்
மதியிலாவிவசாயத் தாலேநஷ்டம்
    மாநிலத்திலேகலகத் தாற்றிகைப்பார்
அதிகதுன்பத்தாற்கலங்கி விதியைநொந்து
    அலைச்சலுற்றுவறுமையால் துடிப்பர்தானே. 40

உரை:—இராகுதிசையில் சூரியபுத்தியில் அரசாங்கத்தாரா லும் பிரபுக்களாலும் பயங்காமும் கலகமு முண்டாகும். சத்துருக் களாலும் வஞ்சகராலும் பலவிதமான சண்டை சச்சரவும், துன்ப மும், வம்பு வழக்கு நேரிடும். தனத்தான்ய நஷ்டமும் வியாபாரத் தினால் நஷ்டமும் கையில் பொருளில்லாத கவலையும் சரீர வியாதி யால் துன்பமும் உண்டாகி சதாகாலமும் மனச்சஞ்சலமா யிருக்கும்.

### சந்திரபுத்தியின் பலன்

எட்சணிகாரகன்திசையில் சந்திரபுத்தி
    எடுத்தகாரியமெல்லாம் கூடச்செய்யும்
பட்சமுடன்சுபக்கிரக பார்வையானால்
    பந்துமித்திரர்சேர்க்கை யாலேநல்ல
இஷ்டமுள்ளபெண்களெல்லாம் வந்துசேர்வார்
    இராஜாக்கள்பிரபுக்க ளாலேநன்மை
கஷ்டமில்லாதெந்நாளும் வாழ்ந்திருந்து
    கவலையில்லாதெந்நாளும் ஜீவிப்பாரே. 41

உரை:—இராகுதிசையின் சந்திரபுத்தியில் சுபக்கிரகங்க ளாகிய குரு, புதன் பார்வையானால் உத்தியோகமேன்மையும் வியாபாரலாபமும்பெற்று தனதான்ய சம்பத்துடன் கீர்த்தி ப்ர காசமாய் விளங்கி மனைவி மைந்தர்களுடனே வாழ்ந்திருப்பதுடன் அரசராலும் பிரபுக்களாலும் கஷ்ட நஷ்டமில்லாமல், தனவந்த னாக கவலையில்லாமல் சீவித்திருப்பதற்காகும்.

### செவ்வாய் புத்தியின் பலன்

ராகுதிசையில்செவ்வாய் புத்திவந்தால்
    தலையில்லைபலதுன்பம் பொருளுஞ்சேதம்
பாகுமொழியின்னார்கள் வகையாவார்கள்
    பந்துமித்ரரெல்லோரும் சத்துருவாவார்

சோகமுடன் மனங்கலங்கி வறுமையாலே
  சேர்ந்தவர்ஜாதகர்கள் துயரத்தாலே
நாகனையும்குஜனுமே சுபர்பார்த்தாலே
  நல்லபலனுண்டிலங்கி சீவிப்பாரே. 42

உரை:—இராகு திசையில் செவ்வாய்புத்தி வந்தால் பலவிதமான கலகமும் கஷ்டமும் நேரிட்டு துயரப்படச் செய்யும். வறுமை நோயினால் அலைச்சலுற்று மனங்கலங்கி பந்துமித்திரர் வைரத்தினாலும், ஸ்திரீகளின் பகையாலும் துன்பமும், துயரமும் நேரிட்டு மனவிசாரமாயிருக்கும். ஆனால் குரு, சுக்கிரன், புதன் வளர்பிறைச் சந்திரனாகிய சுபக்கிரகங்கள் திசாநாதனாகிய இராகுபகவானையும், புத்திநாதனாகிய செவ்வாய் பகவானையும் பார்த்தால் மனோற்சாகமும் தைரியமும், உத்யோகவிர்த்தியும், வியாபார லாபமும் தனத்தான்ய சம்பத்தும் பெற்று பந்துமித்திரர் சேர்க்கையுடனும் மனைவி மைந்தர்களுடனே சுகசீவியாய் வாழ்ந்திருப்பதற்காகும்.

## குரு மகாதிசையின் பலன்

ஈர்குருவின் திசையிலேதான் ஜாதகர்க்கு
  சுந்தரகன்னியர்சேர்க்கை வித்யாலாபம்
தரணிதனிலேபெருகும் ஆதிபத்யம்
  தருந்த ஆட்சிஉச்சமுடன் கோணமுற்றால்
சரசநாயகிமனைவி மைந்தரோடு
  சார்ந்தபந்துமித்ரருடன் மனைவிமைந்தர்
பாவியேவாழ்ந்திருப்பா ருலகமீது
  பிரபுவெனசகலருமே புகழுவாரே. 43

உரை—தேவகுருவாகிய வியாழபகவான் திசையில் ஜாதகர்க்கு நடக்கும் பலன் விபரமெவ்விதமெனில்: அந்த திசாநாதனாகிய குருபகவான் தனுசு மீனத்தில் ஆட்சியாயிருந்தாலும் கோண திரிகோண ஸ்தானாதிபதியாயிருந்தாலும் வித்யாபிவிர்த்தி, வியாபார லாபம், உத்யோக மேன்மையடைந்தும் வெகு பொருள் சேகரித்து, பந்துமித்திரர் பிரபுவென்று வாழ்த்தும்படியான கீர்த்திப்பிரகாசமாய் தனத்தான்ய சம்பத்துடன் மனைவி மைந்தர்களுடன் சுகசீவியாய் வாழ்ந்திருப்பார்கள்.

## குருதிசையில் சுயபுத்தியின் பலன்

குருபகவான் ஆறெட்டு பன்னிரெண்டில்
  குரூரபகையாயிருந்தால் பலதுன்பங்கள்



RangaRakes tamilnavarasam.com

வருகுமப்பாதுன்பமுடன் துயரஞ்சேரும்
 சியாழனேகோணமுற்று உச்சத்திருந்தால்
பொருளுடனேபூஷணங்கள் வாகனுதி
 பொருந்தியேதனதான்ய சம்பத்தோடும்
பெருமையுடன்மனைவிமைந்த நடனேவாழ்ந்து
 பேருலகில்கீர்த்தியாய் சீவிப்பாரே. 44

உரை:—குருபகவான் ஆறு, எட்டு, பனிரெண்டாமிடத்தி லிருந்தாலும், அவ்விதமாகிய ஸ்தானுதிபத்தியம் பெற்றிருந்தா லும் பகை, நீசஸ்தானத்திலிருந்தாலும் பலவிதமான கஷ்டநஷ்ட சஞ்சலமும் துயரமுமதிகரித்து வறுமை பிணியால் கலங்குவார் கள். ஆனுல், குருபகவான் கேந்திர திரிகோணுதிபதியாய் ஆட்சி உச்ச ஸ்தானத்திலிருந்தால் வித்யாபி விர்த்தியுடன் உத்தியோக மேன்மை, வியாபார லாபமும் பெற்று மனைவி மைந்தர்களுடன் சுகசீவியாய் வாழ்ந்திருப்பதற்காதம்.

## சனிபுத்தியின் பலன்

அந்தணனுர்திசையில்சனி புத்திவந்தால்
 அநேகவிததுன்பங்கள் மிகவுண்டாகி
மைந்தரொடுமனைவிசுற்றத் தார்க்குகஷ்டம்
 மானிலத்திலேவறுமை யாயிருப்பார்
புத்திமதிசுக்கிரனுமே பார்வையானுல்
 பொன்பொருளும்சேர்த்தினிதாய் சீவிப்பார்கள்
இந்தவிதமாய்கிரக நோக்கைப்பார்த்து
 இனிதுடனேபலனுரைப்பீர் ஜாதகர்க்கே. 46

உரை:—குருபகவான் திசையில் சனிபுத்தி வந்தால் பலவித மான துன்பமும், மனைவி மைந்தர் பந்துமித்திரர்கட்குக்கஷ்டமும் நேரிட்டு, கையிற் பொருளில்லாமல் கஷ்டப்படச்செய்து வறுமை பிணியால் பரிதவித்து கலங்கசெய்யும். ஆனுல் புதன், சுக்கிரன், வளர்பிறைச் சந்திரன் பார்வையானுல் யாதொரு கஷ்டநஷ்ட மும், கவலையும் நேரிடாமல் சுகானந்தமாக திரவியசேகரஞ் செய்து மனைவி மைந்தர்களுடனே சுகசீவியாய் வாழ்ந்திருப் பார்கள்.

## புதன்புத்தியின் பலன்

பொன்னவன்திசையில்புதன் புத்திவந்தால்
 பொருளுடனேபூமிலாபம் வந்துசேரும்
இன்னலில்லாதெப்போதும் சுகபோகங்கள்
 இன்பசுகம்தனதான்ய சம்பத்தோடும்

பொன்பொருளும்பூமி லாபத்தோடன்பாய்
பொருந்தியேமனைவிமைந்த ருடன்வாழ்வார்கள்
நன்னயமாய்பந்துமித்திரர் கூட்டத்தோடு
நலமுடனேவாழ்ந்திருப்பா ரறிகுவீரே. 46

உரை:—குருபகவான் திசையில் புதன் புத்திவந்தால் திர லாபமும், சுகபோகபாக்கியமும் தனந்தான்ய சம்பத்தும், தியும் மென்மேலுமுண்டாகும். மனைவி, மைந்தர், சுற்றத் களுடனே சுகசீவியாயிருந்து உத்தியோக மேன்மையாலும், பார லாபத்தாலும் விசேஷமாய் பொருள் சேர்த்து மனோல் மா யிருப்பதற்காகும்.

## கேதுபுத்தியின் பலன்

குருதிசையில்கேதுபுத்தி வந்ததானால்
குரூரகுண துஷ்டர்களால் துன்பமுண்டு
பெருமையெல்லாம்குறையும் மனைவிக்குக்கேடு
பொல்லாதநோய்சூழ்ந்து மரணமாவாள்
அருமையுடன்புதன்சுக்கிரன் பார்வையானால்
அனேகவிதசமர்த்தினால் வியாபாரஞ்செய்து
பொருள்சேர்த்துதனதான்ய சம்பத்துடனே
பூஸ்திதியோடினிதாக சீவிப்பாரே. 47

உரை:—குரு திசையில் கேதுபுத்தி வந்தால் குரூரகுண மத்த துஷ்டர்களால் கெடுதி உண்டாகும். மனைவிக்குத் பமும் மரணமு முண்டாகும். ஆனால் சுக்கிரன், புதன் வையானால் விசேஷ நன்மையுண்டாகும். திரவிய லாபமும் ரி பூமி லாபமும் கிடைக்கும்.

## சுக்கிரபுத்தியின் பலன்

குருதிசையில் சுக்கிரபுத்திவந்தால்
குரூரகுணசத்துருக்கள் துன்பஞ்செய்வார்
பொருளிழந்துவிவசாயம் நஷ்டமாகும்
பொன்வெள்ளிதானிழந்து வியாதியாலே
உருகியேசரீரபலந் தான்குறைந்து
உறவினர்கள்பகையாகி மனைவிமைந்தர்
பெருமையுந்தானிழந்து பலதேசத்தில்
போயலைவார்மால்காணில் சவுக்கியமாமே. 48

உரை:—குருதிசையில் சுக்கிரபுத்தி வந்தால், குரூரகுண மத்த சத்துருக்களால் துன்பமுண்டாகும், கைப்பொருள் நம், விவசாய நஷ்டம், பொன், வெள்ளி, ஆபரணதிகளை

RangaRakes tamilnavarasam.com

இழந்து சரீர வியாதியினால் மெலிந்து வல்லமையற்று, பந்துமித்ரர்களாலும் பகையாகி மனைவி மைந்தர்களைப் பிரிந்து, பற்பல தேசத்திலும் திரிந்து, தனது பெருமையை இழந்து கவலையுற்றிருப்பார்கள். ஆனால் புதன் பார்வையானால் கஷ்டமின்றி சவுக்கியமாயிருப்பார்கள்.

## சூரியபுத்தி பலன்

பிரகஸ்பதிதன் திசையில் சூர்யபுத்தி
 பிரியமாய்வந்தாலே தெய்வபக்தி
அரன்பூசைஆசார அனுஷ்டானத்தால்
 அனுதினமும்நற்குணமாய் விளங்குவார்கள்
தரணியிலேஅன்னவஸ்திர பஞ்சமில்லை
 தனதுற்றார்மித்திரரும் பகையாவார்கள்
சுரரோகம்வந்தகன்று சவுக்கியமாகி
 சுகானந்தமாகவே ஜீவிப்பாரே. 49

உரை:—குருபகவான் திசையில் சூரியபுத்தி வந்தால் ஆசார அனுஷ்டானத்துடனே பகவத்பக்தியானந்தமாய் சிவபூஜா கைங்கரியத்திற் சிறந்தவராய் அன்ன வஸ்திரத்திற்குப் பஞ்சமில்லாமல் சுகசீவியாய் நற்குணம் நற்செய்கையுடனிருப்பார்கள். ஆனால் தனது பந்து மித்திரர்கள் விரோதிகளா யிருந்து கலகஞ்செய்வார்கள். சில சமயம் சரீரவஸ்னத்தினால் சுரரோகம் வந்து விலகி, சவுக்கியமா யிருப்பார்கள்.

## சந்திரபுத்தியின் பலன்

பொன்னவனார்திசையில்சந்திர புத்திவந்தால்
 பொருள்சேரும்மன்னர்பிர புக்களாலும்
நன்மையேவந்தணுகும் வியாபாரலாபம்
 நாடியதோர்காரியமெல்லாம் சித்தியாகும்
இன்னலில்லாசுகபோக பாக்யத்தோடும்
 இப்புவியில்வெகுமேன்மை யாகவாழ்ந்து
தன்மையுடன்மனைவிமைந்தர் சுற்றத்தோடு
 தாரணியில்பெருமையாய் சீவிப்பாரே. 50

உரை:—குருபகவான் திசையில் சந்திர புத்திவந்தால் வத்திபோக விர்த்தியாலும், வியாபார லாபத்தாலும் திரவிய சேகரஞ்செய்து, அரசர்கள் பிரபுக்களால் சன்மானமும் வாகனவசிகளையும் பெற்று கீர்த்திப்ரகாசமாய் தான் நினைத்த காரியம் சித்தியாகி துன்பமில்லா சுகபோக சவுக்கியத்துடனே வெகு மேன்மையாக தனது மனைவி மைந்தர் சுற்றத்தாருடனே இனதுணைத்தார் மெச்சத்தன்மையான கௌரவத்துடனும் பெருமையாய் சீவித்திருப்பார்கள்.

## செவ்வாய்புத்தி பலன்

அந்தணனுர் திசையில்செவ்வாய் புத்திவந்தால்
அதிகஉஷ்ணத்தால்சுரநோய் இருமல்காசம்
சித்தைமெலித்துருகும் நோயால்திகைத்து
சிரநோயால்திகைத்தாலும் தைரியத்தால்
எத்தொழிலும்செய்துவியாபாரம் உத்யோகத்தால்
ஏற்கெனவேபொருள்சேர்த்து செலவழித்து
சுந்தரஞ்சேர்தாசிகளின் போகபாக்யம்
சூழ்ந்துமனைவிமைந்தருடன் சீவிப்பாரே. 61

உரை:—குருதிசையில் செவ்வாய்புத்தி வந்தால் சரீர உஷ்ணம் அதிகரித்து சுரவியாதி, இருமல், காச வியாதியினுல் மன மெலித்தும் பலவிதமான வியாதிகளால் உளைத்திருந்தாலும் மன தைரியத்தை விடாமல் உத்தியோகஞ் செய்தும் வியாபாரஞ் செய்தும் பலவிதமாய்ப் பொருள்சேகரஞ்செய்து, அழகான நடன தாசிகட்கு புகழ்ந்துரைக்கும்படி செலவழித்து மனைவி மைந்தர்களுடன் சுகசீவியாய் வாழ்ந்திருப்பதற்காகும். ஆனுல் செவ்வாய் ஆட்சி உச்சமாய் கேந்திர ஸ்தானங்களிலிருந்தால் காணி, பூமி, மனை, வீடு வாங்கிக் கொண்டு பிரபுவா யிருப்பதற்காகும்.

## இராகுபுத்தி பலன்

அந்தணன்திசையில்ராகு புத்திவந்தால்
அக்கினியால்திருடரால் வியாதியாலும்
தெ. த்திரவும்துன்பமும் மிகவுண்டாகி
தொடர்வழக்கும் கடன்கொடுத்தோர் பகையுமுண்டாம்
நித்திப்பாருலகத்தோர் துஷ்டனென்று
நிதானித்துசுபக்கிரக பார்வையானுல்
பந்துமித்ரர்மனைவிமைந்த ருடனேயன்பாய்
பாருலகில்சுகமாக சீவிப்பாரே. 62

உரை:—குருபகவான் திசையில் இராகுபுத்திவந்தால் அக்கினியாலும், திருடராலும், வியாதியாலும், பலவித கஷ்டமுந் துன்பமும் துயரமும் நேரிட்டு கடன் கொடுத்தோர் பகையுண்டாகி, தொடர் வழக்கும் துன்பமுமுண்டாம். உலகத்தோர் துன்மார்க்கனென்று நிந்தித்துப் பழிக்குந் தன்மையாயிருக்கும். ஆனுல் சுபக்கிரகங்களின் பார்வை பெற்றிருந்தால் எவ்விதமாயினும், உத்தியோக விர்த்தி, வியாபார லாபத்தினுலும் பொருள் சேகரஞ்செய்து தனது மனைவி மைந்தர் பந்துமித்திரர்களுடனே சுகசீவியாக வாழ்ந்திருப்பார்கள்.

RangaRakes tamilnavarasam.com

## சனிமகாதிசை பலன்

சனிபகவான்பகைநீச மாயிருந்தால்
　　சஞ்சலமும்வியாதியுடன் வறுமையாலும்
முனிவானமனதமைந்து இரந்துண்பார்கள்
　　மூர்க்கமுடனிருப்பார்கள் சுபர்கள்பார்த்து
இனிதானகேந்த்ர ஸ்தானமுற்றால்
　　இலக்ஷ்மிகடாக்ஷம்பெற்று திரவியம்சேர்த்து
மனைவிமைந்தர்பந்துமித்ர ருடனன்பாக
　　மானிலத்தில்சுகமாக சீவிப்பாரே. 53

உரை:—சனிபகவான் பகைநீச ஸ்தானத்திலிருந்தால் தன் திசைபுத்தியில் மனசஞ்சலமும், சரீர வியாதியும் வறுமையும் முன் கோபமும் சோம்பலுமுண்டாகி, பிக்ஷாந்தேகியென்று யாசித்து வயிறு வளர்த்தாலும் மூர்க்க குணமாய்ச் சகலருக்கும் பகையாவார்கள். ஆனால், கேந்திர ஸ்தானத்திலிருந்து ஆக்ஷி உச்சம்பெற்று சுபக்கிரகங்கள் பார்வையானால் இலக்ஷ்மிகடாக்ஷம் பெற்று திரவிய சேகரம் செய்து மனைவி மைந்தர் பந்துமித்திரர்களுடனே சுகானந்தாய் வாழ்ந்திருப்பார்கள்.

## புதன்புத்தி பலன்

மந்தனுர்திசையில்புதன் புத்திவந்தால்
　　மாக்ஷிமையாய்ப் பொன்பொருளும் சேகரித்து
செந்தமிழ்வித்வானுவார் சங்கீதஞானம்
　　செந்திருவின் கடாக்ஷத்தால் பெற்றன்பாக
சுந்தரஞ்சேர்மனைவிமைந்தர் பந்துமித்ரர்
　　சுற்றத்தார்மனமகிழ பிரபுவைப்போல்
சிந்தைமகிழ்ந்தேபூமி லாபத்தோடே
　　சிறப்புடனே தனவானும் ஜீவிப்பாரே. 54

உரை:—சனி திசையில் புதன் புத்தி வந்தால் இலக்ஷ்மி கடாக்ஷம் பெற்று, செந்தமிழுணர்ந்த சங்கீத வித்வானும் பொன் பொருள் பூஸ்திதியனைத்தும் சேகரித்துத் தனது மனைவி மைந்தர், சுற்றத்தாருடனே வெகு மேன்மையாக பூமி லாபத்துடனும் வெகு மேன்மையாக சீவித்திருப்பதற்காகும்.

## கேதுபுத்தி பலன்

காரிதிசையில்கேது புத்திவந்தால்
　　கஷ்ட நஷ்டததாற்கலங்கி மனத்திகைத்து
சீரியபூதவேதாள சொற்பனங்கள்
　　சித்தைமிரண்டிடவேதுர்க் கனவுகாண்பார்

பாரியாள்பகையாவாள் ஆனாலுந்தான்
　　புதன்சுக்ரன்குருசந்த்ரன் பார்வையானால்
சீரிலகும்லக்ஷ்மியின் கடாக்ஷம்பெற்று
　　சிறப்புடனேமனைவிமைந்த ருடன்வாழ்வாரே. 55

உரை:—சனி திசையில் கேது புத்தி வந்தால் மனசஞ்சலம் கஷ்ட நஷ்டம் கலகமனைத்துந் தோன்றி, பூதப்பிசாசுகளின் தோற்றத்தைக் கனவிற்கண்டு மனபீரளல் உண்டாகும். தனது மனைவி பகையாவாள், வறுமையும் சஞ்சலமும் நிதிலமா யிருக்கும். ஆனால் புதன், சுக்ரன், குரு, வளர்பிறைச்சந்திரன் பார்வையானால், இலக்ஷ்மிகடாக்ஷம் பெற்று தனத்தான்ய சம்பத்துடனே வெகு மேன்மையாக மனைவி, மைந்தர், பந்துமித்ரருடன் சுகசீவியாய் வாழ்ந்திருப்பதற்காகும்.

## சுக்கிரபுத்தி பலன்

சனிதிசையில் சுக்ரபுத்திவந்திட்டாலே
　　சுற்றத்தார்பந்துமித்ரர் புகழ்ந்துரைக்க
பொன்பொருளும் தனதான்ய சம்பத்தோடு
　　பொருந்தியசுகசவுக்யம் பெருகுமின்னும்
மன்னர்கள் பிரபுக்களின் சகாயம்பெற்று
　　மகாதனவானாய் மனைவி மைந்தரோடு
அன்புடனேவாழ்ந்திருந்து பூமிலாபம்
　　ஆஸ்திபூஸ்தியுடனே ஜீவித்திருப்பாரே. 56

உரை:—சனி திசையில் சுக்கிர புத்தி வந்தால் வித்யாபிவிருத்தியுடன் உத்யோக மேன்மையும், வியாபார லாபத்துடன் பொன், பொருள், பூஸ்திதியும் சேகரித்து, பந்துமித்ரர் சுற்றத்தார் புகழ்ந்துரைக்க கீர்த்திப் பிரகாசமாய் பிரபுவைப்போல் சீவித்திருப்பார்கள். பிரபுக்களாலும், மன்னர்களாலும் புகழ்ந்துரைக்கும் கௌரவமும், மேன்மையும் பொருந்தி யிருப்பதற்காகும்.

## சூரியபுத்தி பலன்

கதிர்மகனார்திசையிலே சூரியபுத்தி
　　கஷ்டநஷ்டமெல்லாந்த வறுமையோடு
அதிகதுன்பம் வந்தெய்தும் பித்தரோகம்
　　அனலாகசுரநோய்கள் வந்துசூழும்
பிதுர்தேசாந்திரம்போவான் மனைவிமைந்தர்
　　பிரிந்தலையும்மனவருத்தத் தால் திகைப்பார்
துதிபரவும்குருசுக்ரன் புதன்பார்த்தாலே
　　சுகமுடனேமனமகிழ்ந்து ஜீவிப்பாரே. 57

உரை:—சனிதிசையில் சூரியபுத்தி வந்தால் பலவிதமான கஷ்ட நஷ்டமும், கவலையும் சூழ்ந்து துன்பஞ் செய்யும். சரீரத்தில் பித்த உஷ்ணம் அனல்வெட்டை அதிகரித்து ஜுரவியாதியும் வறுமையும் சூழ்ந்து மனவிசாரமா யிருப்பதுடன் தனது தந்தை தேசாந்திரமாய்ப் போவான். மனைவி மைந்தரைப் பிரிந்து துயரப்படச் செய்யும். ஆனால், குரு, சுக்கிரன், புதன் பார்வை பெற்றால் சுகானந்தமாய் பந்து, மித்திரர், மனைவி மைந்தர்களுடனே மனமகிழ தனதான்ய சம்பத்துடனும் பிரபுத்தன்மையாக வியாபார லாபத்துடனே வாழ்ந்திருப்பதற்காகும்.

## சந்திரபுத்தி பலன்

காரிதிசையிற்சந்திரன் புத்திவந்தால்
கலகமுடன்பந்துமித்திரர் பகையாவார்கள்
வீரியமுங்குறைந்துபிணி யால்வருந்தி
விதிவைநொந்துபலதுன்ப மனுபவிப்பார்
நேரிலகும்சுபக்கிரக பார்வையானால்
நினைத்தவையெல்லா முடித்து பொருள்சேர்த்தன்பாய்
பாரியாள்புத்திரருடன் சுகமாய்வாழ்ந்து
பிரபுவென்றுலகோர்புகழ ஜீவிப்பாரே. 58

உரை:—சனி திசையில் சந்திரன் புத்தி வந்தால் வறுமை சூழ்ந்து கடன்காரர் தொந்தரையும் கலகமும் பந்துமித்திரர் பகையும் சூழ்ந்து துன்பஞ் செய்யும். ஆனால், குரு, சுக்கிரன், புதன் பார்வையானால் தனதான்ய சம்பத்துடனே பிரபுவைப் போல சகலருங் கண்டு ஆனந்தமாய் புகழ்ந்துரைக்கும்படியான வியாபாரஞ் செய்து மேன்மையாய் மனைவி மைந்தர் சுற்றத்தாருடனே வாழ்ந்திருப்பதற்காகும்.

## செவ்வாய்ப்புத்தி பலன்

மந்தனிடதிசையில்செவ்வாய் புத்திவந்தால்
மாதாபிதாமரணம் பிணியால்துன்பம்
வந்தெய்திதேசத்தை விடுத்தெங்கும்போய்
வறுமையினால்திகைத்தலையச் செய்யுமப்பா
அத்தனொடும்புகர்மதியால் பார்வையானால்
அதேகவிதநன்மைகளும் வந்துகூடும்
சத்ததமும்மனைவிமைந்தர் சுற்றத்தோடு
சவுக்கியமாய்சுகமாக ஜீவிப்பாரே. 59

உரை:—சனிதிசையில் செவ்வாய் புத்திவந்தால் மாதாபிதா மரணமும், வறுமை பிணியால் துன்பமும், கஷ்டநஷ்டமும், கவ

மும் வந்து சூழும் குரு, சுக்கிரன், புதன், சந்திரன் பார்வையானால் பலவித நன்மைகளும், உத்தியோக மேன்மையும், வியாபார லாபமும் பெற்று, தனந்தான்ய சம்பத்துடன் கீர்த்திப்ரகாசமாய் பிரபுவைப்போல மனைவி மைந்தர்களுடனே சுகஜீவியாய் வாழ்ந்திருப்பார்கள். செவ்வாய் பகவான் மகர ராசியில் உச்சம் பெற்றும், தனுசு லக்கினமாயிருந்தால் மகா சமர்த்தனாய் திரவிய சேகரஞ் செய்து மனை காணி பூமி வாங்குதலும் விற்பனை செய்வதுமான வியாபாரத்தில் சிறந்தவனாயிருப்பதற்காகும்.

## இராகுபுத்தியின் பலன்

கரியன்திசையில்ராகு புத்திவந்தால்
கவலைகஷ்டதுன்பமாகும் சத்ருபீடை
சரீரத்தில்பலவிதரோகங்கள்காட்டும்
சந்ததமும்வறுமைபிணி துன்பஞ்செய்யும்
சரியானகேந்த்ரமுற்று சுபர்பார்த்தாலே
சகலவிதநன்மைகளும் பொருந்தியன்பாய்
திரவியசம்பத்துடனே இல்லறத்தை
திறமையாய்நடத்தி சுகமெய்துவாரே. 60

உரை :—சனிபகவான் திசையில் இராகு புத்தி வந்தால் கஷ்ட நஷ்டமும் கவலையும் சூழ்ந்து சத்துருக்களின் விரோதத்தினால் துக்கமும் துயரமும் நேரிட்டு பலவித துன்பஞ் செய்யும். சரீரத்தில் பலவிதமான பயங்கரவியாதிகளை காண்பித்து வறுமை பிணியால் கலங்கச் செய்யும். ஆனால், சனி கேந்திரமேறி குரு, சுக்கிரன், புதன், வளர்பிறைச்சந்திரன் பார்வையானால், அநேகவித் சமர்த்தினால் வியாபாரஞ்செய்தும், பலவிதமாய் திரவிய சேகரஞ்செய்தும் மனைவி மைந்தர்களுடனே இல்லற தர்மத்தை நடத்திக் காண்போர் மன மகிழும்படியாய் ஜீவித்திருப்பார்கள்.

## குருபுத்தியின் பலன்

கனமுடனேசனிதிசையில் குருபுத்திவந்தால்
கல்வியுடன்வித்யாபி விர்த்தியாலும்
மனமகிழும்உத்தியோக மேன்மையாலும்
வர்த்தகத்தாலும்லாப மதிகம்பெற்று
தனதான்யசம்பத்தோடும் மனைவிமைந்தர்
தன்பந்துமித்திருட னினிதாய்வாழ்ந்து
கனதனமும்வாகனதி யுடனெப்போதும்
காசினியில்பிரபுவென ஜீவிப்பாரே. 61



RangaRakes tamilnavarasam.com

உரை :—சனிபகவான் திசை யில் குருபுத்தி வந்தால் வித்தையும், புத்தியும், ஞாபகசக்தியும் விசேஷித்து, உத்தியோக மேன்மையாலும், வியாபார லாபத்தாலும் திரவியசேகரஞ்செய்து தனதான்ய சம்பத்துடன் மனைவி மைந்த நடனே சுகஜீவியாய் தனது பந்துமித்திரர் புகழுந் தன்மையாய் ஜீவித்திருப்பார்கள்.

## புத மகாதிசை பலன்

தன்மைமிகும்புதபகவான் திசைவந்தாலே
    தற்பலனைத்தான்கொடுப்பார் ஜாதகர்க்கு
பொன்பொருளும்பசுக்கூட்டம் பொருந்திவாழ்வார்
    போஜனசவுக்யமுண்டு ஸ்திரீகள்சேர்க்கை
நன்மைமிகும்உத்தியோக மேன்மையுண்டு
    நாற்றிசையும்வர்த்தகத்தாலே லாபமுண்டு
அன்பாகமனைவிமைந்தர் சுற்றத்தோடு
    ஆஸ்திபூஸ்தியுடனே சீவிப்பாரே. 62

உரை :—சதாகாலமும் நன்மையை விளைவிக்கும் சுபக்கிரகமாகிய புதபகவான் திசையில் ஜாதகர்க்கு உத்தமமான சுபபலன்களும், தனந்தான்ய லாபமும் பசுக்கூட்ட வைபவங்களும் அன்ன வஸ்திர சுகசவுக்கியமும், கல்வியும், ஞானமும், உத்தியோக மேன்மையும், வியாபார லாபமும் பொருந்தி, திரவியவந்தனாகிய பிரபுவென்று உலகோர் மெச்சுந் தன்மையாய் மனைவி மைந்தர்களுடனே பந்துமித்திரர்களுடன் ஆனந்தமாய் ஆஸ்தி பூஸ்தியுடனே சுகமாய் ஜீவித்திருப்பார்கள்.

## புதன்புத்தி பலன்

புதன்திசையின்சுயபுத்தி வந்தபோது
    பூஜைசெய்வதற்கிசைந்த பக்திமார்க்கம்
விதவிதமாய்வர்த்தகங்கள் செய்வதற்கு
    விருப்பமும்பொன்பொருள்சேர்க்கும் ஆசையாலே
இதமாகநல்வார்த்தை தினமும்பேசி
    இனஜனத்தோர்க்கினியவனா யிருந்துகொண்டு
பதமாகபொருள்சேர்த்து பிரபுவைப்போல்
    பாரியாள்புத்ரருடன் சீவிப்பாரே. 63

உரை :—புத மகாதிசையின் சுய புத்தியில் பகவத்பக்தியானந்தமாக ஆசாரம் அனுஷ்டானத்துடன் விரதானுஷ்டானஞ் செய்து, தேவதா பூஜை செய்தும், பகவான் அருள் பெறும் பக்தி

RangaRakes tamilnavarasam.com

மார்க்கமும் பலவர்க்கமான வர்த்தகமுஞ்செய்து, திரவியசேகரஞ் செய்வதற் கிசைந்தகந்திரமும், இனஜனத்தாருடனே இதமாகப் பேசும் நல்விவேகமும் பொருந்தி, பந்துமித்திரர் புகழ்ந்துரைக் கும்படியான பிரபுத் தன்மையும் பொருந்தி, மனைவி மைந்தர் களுடனே சுகசீவியாய் வாழ்வதற்கும் நற்குணமும் பொருந்தி யிருக்கும்.

## கேதுபுத்தி பலன்

புலவன் திசையிற்கேது புத்திவந்தால்
பொல்லாததுன்பமெல்லா மனுபவிப்பார்
கலகமுடன்பந்துமித்ரர் பகையாவார்கள்
கனகாபரணதிகளும் சேதமாகும்
பலவிதத்தும்பந்துஜன உற்றோரெல்லாம்
பகையாவார்வறுமைபிணி துன்பமாகும்
நலமுடனேசுபக்கிரக பார்வையானல்
நன்மையாய்மனைவிமைந்த ருடன்வாழ்வாரே. 64

உரை:—புததிசையில் கேதுபுத்திவந்தால் பொல்லாததுன்ப மும் துயரமும், பந்துமித்திரர் கலகமும், வறுமைபிணியும் சூழ்ந் துக் கவலையடையச் செய்யும். பொன், வெள்ளி, ஆபரணாதி களும் சேதமாகும். பகவானை சதாகாலமும் நினைந்துருகச் செய் யும். ஆனால் குரு, சுக்கிரன், வளர்பிறைச் சந்திரனும் பார்வை யானாலும், புதன் நட்பாக்ஷி உச்சஸ்தானத்திலிருந்து பார்த் தாலும், சகலவித நன்மையும் பொருந்தி, திரவியசேகரஞ்செய்து மனைவி மைந்தர்களுடனே சுகஜீவியாய் வாழ்ந்திருப்பார்கள்.

## சுக்கிரன்புத்தி பலன்

மாவின்திசையில் சுக்கிரன் புத்திவந்தால்
மனோற்சாகமதிகரித்து பிரபுவைப்போல்
சலமுடன்வர்த்தகங்கள் செய்தெப்போதும்
சிங்காரதாசிகளின் சேர்க்கையோடு
பாலமுதந்தான்புசித்து மனங்களித்து
பலவானுய்சகலரும் புகழ்ந்துபேச
காலமெல்லாம்வறுமையின்றி மனைவிமைந்தரோடு
காசினியிலேசுகமாய் ஜீவிப்பாரே. 65

உரை:—புதன் திசையில் சுக்கிரபுத்தி வந்தால் மனோற்சாக மதிகரித்த பிரபுவைப்போல மிகவும் ஒழுங்காய் வர்த்தகஞ்செய் தும் திரவிய சேகரஞ்செய்து அழகானந்த முகவசீகரமான தேஜ ஸமைந்த தாசிகளுடன் சுகபோகமாய் மனமகிழ்ந்து, பாலமிர்தம் புசித்து சரீர புஷ்டியாய் இனஜனத்தார் மனமகிழுந்தன்மையாய் மனைவி மைத்தர்களுடனே வாழ்ந்திருப்பதற்காகும்.

RangaRakes tamilnavarasam.com

## சூரியபுத்தி பலன்

தலைமுடனேபுதன்திசையில் சூரியபுத்தி
நாடிவேலந்தாலே பூமிலாபம்
தகைமிலாசகலருமே துணையாவார்கள்
கல்வியுடன்உத்தியோக வர்த்தகத்தால்
பலவிதமாய்ப்பொருள் சேர்த்து திரவியவானும்
பந்துக்கள்மனைவிமைந்தர் சுற்றத்தார்கள்
நலமானஉறவின்முறையா ருடன்ஜீவிக்கும்
தன்மையெல்லாமனுபவித்து வாழ்குவரே. 66

உரை:—புதன் திசையில் சூரிய புத்தி வந்தால் வித்தையும் புத்தியும் கல்வியும் ஞானமும் பெருகி, உத்யோக மேன்மையும் வியாபார லாபமும் பெற்று திரவியவந்தனும் காணி பூமி லாபத்துடனே சகலருந் துணையாய் விளங்கும்படியான நன்மையனைத்தும் பெற்று பந்துமித்ரர் மனைவி மைந்தர்களுடனே சுகசீவியாய் வாழ்ந்திருப்பார்கள்.

## சந்திரபுத்தி பலன்

புததிசையில்சந்திரன் புத்திவந்தால்
சகோதரர்புகழ்பந்து மித்ரர்பெண்டிர்க்கினம்
வத்துதுன்பங்கள்விளைத்துக் கொடியதுன்பம்
வறுமையுடனேகஷ்ட மதிகரிக்கும்
சுந்தரஞ்சேர்சுபக்கிர கங்கள்பார்த்தால்
சுகமாகஉத்தியோகவர்த் தகங்கள்செய்து
மைந்தர்களால்சுகமடைந்து தனவானாகி
மாநிலத்தில்பெருமையுடன் ஜீவிப்பாரே. 67

உரை:—புததிசையில் சந்திரபுத்தி வந்தால் சகோதரர்கள் பந்துமித்திரர் பெண்சாதி முதலானோர்களுக்குத் துன்பமும் துயரமும் நேரிட்டு வறுமை பிணியால் பலவித கஷ்டமடையச் செய்யும் ஆனால் குரு, சுக்கிரன் பார்வையானால் உத்தியோக விர்த்தியாலும் வியாபார லாபத்தாலும் தனதான்ய சம்பத்துடனே புத்திரர்களால் திரவியசேகரஞ்செய்து கீர்த்திப்பிரகாசமாய்ப்பந்து மித்திரர்களுடனே சுகமாயும் வாழ்ந்திருப்பதற்காகும். நற்குணம் அடக்கம், பொறுமை, சாந்தம், தயாளமும் சிவகாருண்ணியமும் பொருந்திய நற்குணமுள்ள சீமானும் வாழ்ந்து ஞானவானுமிருப்பதற்காகும்.

## அங்காரகபுத்தி பலன்

புததிசையில்செவ்வாயின் புத்திவந்தால்
புசிப்பதற்கும்போசனமு மிதானுத்போக்

RangaRakes tamilnavarasam.com

விதவிதமாய்த்துன்பமுடன் கொடுமையெல்லாம்
விளங்குமேபந்துமித்திரர் பகையாவார்கள்
நிதியிழந்துவறுமையினால் கலங்குவார்கள்
நிலமையுடன்சுபக்கிரக பார்வையானால்
பதமுடனேசகலருமே துணையாவார்கள்
பாக்யசம்பத்துமிருந்து ஜீவிப்பாரே. 68

உரை :—புதன் திசையில் செவ்வாய் புத்தி வந்தால், கைப் பொருளிழந்து கலகத்திற்சிக்கி வறுமையால் திகைத்து அன்ன வஸ்திரத்திற்கே பஞ்சமாய் பந்துமித்திரர்களுக்குப் பகையாய்க் கலங்கித் துடிப்பார்கள். ஆனால் சுக்கிரன் சந்திரன் குரு பார்வை யானால் சகலரும் துணையாயிருந்து திரவிய சம்பத்துடனே வாழ்ந்து சுகபோஜன சவுக்கியமா யிருப்பார்கள்.

## இராகுபுத்தி பலன்

அருணன்திசையில் ராகுபுத்திவந்தால்
அதிகதுன்பம்நேர்ந்து துயரநுபவிப்பார்
மிருகத்தால்மன்னரால் பிரபுக்களாலும்
மிருத்தபயமுண்டாகும் வறுமைசூழும்
குருசுக்கிரன்சந்திரனும் பார்த்திட்டாலே
குற்றமிலா நன்மையெல்லா மநுபவிப்பார்
பெருமையுடன்பொருள்சேர்த்து பிரபுவைப்போல்
பொன்பூமிலாபமுடன் ஜீவிப்பாரே. 69

உரை :—புதபகவான் திசையில் இராகுபுத்தி வந்தால் அதிக துன்பமும் துயரமும் நேரிட்டு, மிருகத்தாலும் அரசர்களாலும் பிர புக்களாலும் பயங்கரமும் வறுமை பிணியும் சூழ்ந்து துன்புறச் செய்யும். ஆனால் குரு, சுக்கிரன், சந்திரன் பார்வையானால் சகல வித நன்மைகளும் பெற்று, சுகவானாய் திரவிய சேகரஞ் செய்து உத்தியோக மேன்மையாலும் வியாபார விருத்தியாலும் பொருள் சேர்த்து காணி பூமி லாபத்துடன் மனைவி மைந்தர்கள் சுற்றத் தாருடனும் தனதான்ய சம்பத்துடனே வாழ்ந்திருப்பதற்காகும்.

## குருபுத்தி பலன்

மதிமகனார்திசையதனில் வியாழன்புத்தி
மனவிசாரத்துடனே கலங்கச்செய்து
நிதியிழந்துசகலருக்கும் பகையாய்தோன்றும்
நிஷ்டூரமாகவே பேசுவார்கள்

RangaRakes tamilnavarasam.com

* விதிமதியின் தன்மைகட் கிசைந்தவாறு
விளங்கியே கோண திரிகோண முற்று
அதிஉச்சம் ஆட்சிநட் பாயிருந்தால்
ஐஸ்வரியத்துடனினிதாய் வாழ்குவாரே. 70

உரை :—புதன் திசையில் குருபுத்தி வந்தால் மன விசாரமும் திகிலும் கஷ்டமும் கவலையும் நேரிட்டு, வறுமை, பிணியால் மன சஞ்சலமடைந்து திகிலுற்று சகலருக்கும் பகையாய் விளங்கி நிஷ்டூர வார்த்தையால் கலகத்திற்சிக்கி கஷ்டப்படுவார்கள்.

## சனிபுத்தி பலன்

† கணக்கனிடதிசையில்சனி புத்திவந்தால்
கஷ்ட நஷ்டம்வறுமைபிணி வந்துசூழ்ந்து
மன விசாரத்தினுல் துன்பமுற்று
மானிலத்தில்பகைப் போலிருப்பார்
இணக்கமுடன்குருசுக்கிரன் சந்திரன்பார்வை
இருந்தாலேமேன்மை யாயிருந்து
தனதான்யசம்பத்து மிகவேபெற்று
தாரணியில்சுகமாக சீவிப்பாரே 71

உரை :—புதன் திசையில் சனிபுத்தி வந்தால், பலவிதமான கஷ்ட நஷ்டமும் வறுமை பிணியும் வந்து சூழ்ந்து மனவிசாரத்தினுல் துன்பமும் துயரமுமடையச் செய்யும் ஆனுல் குரு, சுக்கிரன் சந்திரன் பார்வையாயிருந்தால் வித்தியாபிவிருத்தியும், உத்தி யோக மேன்மையும் பெற்று, வியாபார லாபத்துடனே பிரபுத் தன்மையாக சுகானந்தமாய் மகிழுல்லாசத்துடனே மனைவி மைந்தர்கள் பந்துமித்திரர்களுடனே சீவித்திருப்பார்கள்.

## கேது மகாதிசை பலன்

கேதுமகாதிசையதனில் ஜாதகர்க்கு
கெட்டபலன் நடக்குமென்று கவனிப்பாய்நீ
தீதுற்றுசரீரத்தில் பித்தரோகை
திகிலுடனேமனையாளும் மரணமாவாள்
வாதுசெய்யும்பந்துக்க ளுக்குத்துன்பம்
வந்தெய்தும்ஆகையினுல் சுபர்பார்த்தாலே
ஓதுபுகழ்ஞானம்கல்வி வித்தைகற்று
ஓங்கும்புகழ்பிரபுவைப்போல் சீவிப்பாரே. 72

* விதி - இலக்கினம், மதி - இராசி.

† கணக்கன் - புதன்.

உரை:—கேது மகாதிசையில் துர்ப்பலனைப் பலவித கஷ்ட நஷ்டங்கள் சூழ்ந்து துயரப்படச்செய்து, சரீரத்தில் பித்தசோகை யும் மனையாளுக்கு நிதில் பயங்கரமுமுண்டாகி மரணமாவாள். துர்க்குணமமைந்த பந்துக்களுக்குந் துன்பமும், துயரமும் நேரிட்டு கலங்கித் துடிப்பார்கள்; ஆகையால் குரு, சுக்கிரன், புதன் பார்வை பெற்றிருந்தால் கல்வியும், ஞானமும்பெற்று, வித்யாபிவிர்த்தியுடன் உத்தியோக மேன்மையாலும், வியாபார லாபத்தாலும் பொருள் சேகரஞ்செய்து பிரபுவைப்போல ஜீவித் திருப்பார்கள்.

## கேதுபுத்தி பலன்

கதிர்ப்பகையின் திசையின்சுய புத்திவந்தால்
கலகமுடன்கலவரமும் திகிலுந்தோன்றி
பதிவிட்டுமறுதேசமெல்லாஞ் சுற்றி
பலவிததுன்பமுற்று பந்துக்கூட்டம்
கதியிழந்துமனையாளும் மரணமாவாள்
வனமுடனேகுருசுக்ரன் புதன்பார்த்தாலே
நிதியிருந்தபிரபுவைப்போல் விளங்கிநாளும்
நீணிலத்தில்ஞானியாய் சீவிப்பானே. 73

உரை:—கேதுதிசையின் சுயபுத்தியில் கலகமும் கஷ்ட நஷ்ட கலவரமும் நேரிட்டு வருமை துன்பத்தாற் கலங்கி, பந்துக் கூட்டங்களுக்கும் பலவித துன்பம்நேரிட்டு, மனையாள் மரணமும் பலவித துன்பமுமெல்லாம் நேரிடும். ஆனால் கேதுபகவான் கேந்திர ஸ்தானத்திலிருந்து குரு, சுக்ரன், புதன் பார்வையானால் வித்யாபிவிர்த்தியுடன் திரவியசேகரஞ்செய்து பிரபுவைப்போல் ஞானியாய் ஜீவித்திருப்பதற்காகும்.

## சுக்கிரபுத்தி பலன்

கதிருணியின் திசையிலே சுக்கிரபுத்திவந்தால்
கஷ்டநஷ்டதுன்பமெல்லாம் வந்துசூழ்ந்து
மதிபற்றுகதியற்று துன்பமுற்று
மனையாளும் மரணமாய்த் திகைத்தேதிற்பார்
அதிஉச்சம்ஆட்சிபெற்று சுபர்பார்த்தாலே
அன்புடனேமனைவிமைந்தர் சுற்றத்தோடு
நிதிநிறைந்துதனதான்ய சம்பத்தோடும்
நீணிலத்தில்பிரபுவைப்போல் சீவிப்பாரே. 74

உரை:—கேதுதிசையில் சுக்கிரபுத்தி வந்தால் மனதில் கோபமும் குரோதமும் அதிகரித்து பலவித துன்பமும் துயரமு முண்டாகி மனையாள் மரணமும் திகிலும் கலவரமும் நேரிடும்.

RangaRakes tamilnavarasam.com

ஆனால், சுக்கிரன் ஆஷி ஸ்தானத்திலாகிலும் உச்சஸ்தானத்தி லாகிலுமிருந்து சுபக்கிரகங்களின் பார்வைபெற்றால் பலவித மாய்ப் பொருள் சேகரஞ் செய்து தனதான்ய சம்பத்துடனே பிரபுவைப்போல் கீர்த்திப் பிரகாசமாய் பந்துமித்திரர் மனைவி மைந்தர்களுடன் சுகஜீவியாய் வாழ்ந்திருப்பார்கள்.

## சூரியபுத்தியின் பலன்

ஞானதிசையிற் சூரியன்புத்திவந்தால்
ஞானமதிலேதுயர மனுபவித்து
ஊனமுடன்சரீரத்தில் மேகரோகம்
ஊஷ்ணமுடன்சுரரோக மிருமலுண்டாம்
கானகவாசியைப்போல சுகமில்லாமல்
கலங்கியேதுடிதுடித்துக் கலங்குவார்கள்
வானகுருசுக்கிரபுதன் பார்வையானால்
வையகத்தில்பொருள்சேர்த்து சீவிப்பாரே. 75

உரை:—கேதுபகவான் திசையில் சூரியபுத்தி வந்தால் பலவிதமான துன்பமும் துயரமும் நேரிட்டு, சரீர உஷ்ணத்தினால் வெட்டை அதிகரித்து மேகரோகங்களும் சுரவியாதியும் சூழ்ந்து ஜீவனசக்தியில்லாமல் வறுமை நோயினால் கலங்கித் துடிப்பார்கள். ஆனால் சூரியபகவான் ஆஷி உச்சஸ்தானத்திலிருந்து குரு, சுக்கிரன், புதன் பார்வையின்றால் தனதான்ய சம்பத்துடனே சுகஜீவியாய் வாழ்ந்திருப்பார்கள.

## சந்திரபுத்தி பலன்

இன்னலுடன்கேதுமகா திசையிலேதான்
இந்துபுத்திவந்தாலே கொடியதுன்பம்
பொன்பொருளும்மனையாளும் சேதமாகும்
பொல்லாதவினைபீடை வந்துபோகும்
பொன்னவனும்சுக்கிரபுதன் பார்வையானால்
பொருள்சேர்ந்துதனவானும் சீவிதன்பாய்
தன்மையுடன் உத்தியோக வியாபாரத்தால்
நலமுடனேபிரபுவாய் வாழ்குவாரே. 76

உரை:—கேது மகாதிசையில் சந்திரபுத்தி வந்தால் பலவித துன்பமும் துயரமும் நேரிட்டு கைப்பொருள் சேதமும், பொன், வெள்ளி, ஆபரணாதிகளும் நஷ்டமாகி சகலருக்கும் பொல்லாத வனுமிருந்து, பாம்பு, தேள் விஷத்தினாலும் வியாதியாலும் பயங்கரமான துன்பமும் துயரமும் நேரிட்டு விஷ ஜந்துக்களின் துன்பத்தினால் கஷ்டமும் கவலையும்நேரிட்டு, கலங்கச்செய்து வறுமை

RangaRakes tamilnavarasam.com

பிணியால் துன்புறச்செய்து, மனையாளை மரணமாகும்படி செய்யும். ஆனால், குரு, சுக்கிரன், புதன் பார்வையானால் வித்யாபிவிர்த்தியுடன் உத்தியோக மேன்மையும், வியாபார லாபமும், பெற்று பிரபுவைப் போன்ற தனவந்தனாய் மனைவிமைந்தர்களுடன் சீவித்திருப்பதற்காகும்.

## செவ்வாய்புத்தி பலன்

கேதுதிசைதன்னிலே செவ்வாய்புத்தி
 கெடுதிமெத்தவிளையுமப்பா துன்பத்தாலே
நீதுசெய்யும்வஞ்சகரால் துன்பஞ்சூழும்
 திரவியமில்லாவறுமை யால்திகைப்பார்
ஓதுபுகழ்குருசுக்கிரன்மால் மதிபார்த்தாலே
 ஓங்குபுகழ்திரவிய சம்பத்துண்டாம்
பூதலத்தில்கீர்த்தியுடன் புத்ரமித்ரரோடு
 பிரபுவைப்போலன்பாக சீவிப்பாரே. 77

உரை—கேதுமகா திசையில் செவ்வாய் புத்தி வந்தால் பல விதமான கெடுதியும் துன்பமும் துயரமுமுண்டாகி வஞ்சகராலும் துஷ்டராலும் பொருளிழந்து வறுமையாளராய்க் கலங்குவார்கள். ஆனால் குரு, சுக்கிரன், சந்திரன், புதன் பார்வையானால் சகல விதமான சாமர்த்தியமுடன் பலவிதமான தொழில்புரிந்து, சகலரும் சமர்த்தனென்று பேசும்படியான நற்குணம் பொருந்தி உத்தியோகத்தினாலும் வியாபாரத்தினாலும் திரவிய சேகரஞ் செய்து பிரபுவைப்போல் மனைவி மைந்தர் சுற்றத்தாருடனே சுக சீவியாய் வாழ்ந்திருப்பதற்காகும்.

## இராகுபுத்தி பலன்

செம்பாம்புதிசையில்ராகு புத்திவந்தால்
 ஜெகமீதிலுள்ளவர்கள் பகையாவார்கள்
அம்புவியின் மாந்தர்முன்னே வறுமைசூழ்ந்து
 அல்லல்துன்பத்தால்திகைப்பார் விஷத்தால்பீடை
உம்பர்குருசுக்கிரன்மால் மதிபார்த்தாலே
 உறன்முறையார்மனைவி மைந்தருடன்ஜீவித்து
செம்பொன்னும்வெள்ளி ஆபரணம்பூண்டு
 ஜெகமீதுபிரபுவாய் சீவிப்பாரே. 78

உரை—கேதுபகவான் திசையில் இராகுபுத்தி வந்தால் சகலருக்கும் பகையாயிருப்பதுடன் கைப்பொருளிழந்து கஷ்ட நஷ்டத்துடன் கலங்கி வறுமையினால் திகைத்துக் கலவரத்துடனிருப்பார்கள். பாம்பு, தேள் முதலாகிய விஷஜந்துக்களின் குரூரத்தினாலும் கலங்கித் துடிப்பார்கள். ஆனால் குரு, சுக்கிரன்,



RangaRakes tamilnavarasam.com

புதன், சந்திரன் பார்வையாகுல் பலவித சமர்த்தினுல் திரவிய சேகரஞ் செய்து மனைவி மைந்தர், சுற்றத்தாருடனே சுகஜீவியாய் வாழ்ந்திருப்பதற்காகும்.

## குருபுத்தி பலன்

அன்புடனேகேதுதிசை தன்னிலேதான்
அந்தணனார்புத்திவந்தால் மிகவும்மேன்மை
பொன்பொருளும்பூள்திதியும் ஆடுமாடும்
பொருந்தியே தனவந்தராயிருந்து
நன்மையுடன்மனைவிமைந்தர் சம்பத்தோடும்
நலமுடனேபிரபுவைப்போல் மானிலத்தில்
இன்பசுகானந்தமுடன் நடனமாதர்
இனியசுகபோகபாக்யத் துடன்வாழ்வாரே. 79

உரை—கேதுதிசையில் குருபுத்திவந்தால் மிகவும் மேன்மையும் கீர்த்தியும் பொருந்தி தனதான்ய சம்பத்தும் ஆடுமாடு மந்தைக் கூட்டங்கள் விசேஷித்தும், வியாபாரத்தால் பொருள் சேர்த்தும் மனைவி மைந்தர் பந்துமித்திரர்களுடனே பிரபுத்தன்மையாக நடனமாதர் சேர்க்கையுடன் சுகானந்தமாக ஜீவித்திருப்பதற்காகும். ஞானமும் கல்வியும் சிறந்து கௌரவமும் கீர்த்தியும் பொருந்தி யிருப்பார்கள்.

## சனிபுத்தி பலன்

கேதுமகாதிசைதனிலே சனியின்புத்தி
கெம்பீரமாகவே வந்திட்டாலே
ஓதுபலன்பலதுயர மெய்துமப்பா
ஓங்காமல்வறுமையினுல் திகைத்துநிற்பார்
கோதிலாகுருசுக்கிர சசிமால்பார்வை
கொடுப்பார்கள்தனதான்ய சம்பத்தெல்லாம்
பூதலத்தில்சுகபோக வாழ்க்கைதன்மை
பொருந்தியேசுகமாக ஜீவிப்பாரே. 80

உரை—கேது மகாதிசையில் சனி பகவான் புத்தி வந்தால் பலவிதமான துன்பமும், துயரமும், வறுமையும், கஷ்டநஷ்டமும் வெல்லயுந் தரித்திரமும் சூழ்ந்து பலவித சஞ்சலத்தினுல் கஷ்டப்படுவார்கள். ஆனுல் குரு, சுக்கிரன், சந்திரன் புதனுகிய இந்நான்கு கிரகங்களும், மேற்படி திசாநாதனையும் புத்திநாதனையும் பார்த்தால் மனோற்சாகமும், தைரியமும், உத்தியோகவிர்த்தியும், வியாபார லாபமும், தனதான்ய சம்பத்தும்பெருகி சுகபோக பாக்கியங்களும் பெற்று, சுகஜீவியாக வாழ்ந்திருப்பார்கள்.

RangaRakes tamilnavarasam.com

## புதன்புத்தி பலன்

செம்பாம்புதிசையிலே மாலின்புத்தி
சேர்ந்துவந்தால்தனதான்ய சம்பத்துண்டு
செம்பொன்னும் நவரத்னாபரணமெல்லாம்
சேகரித்துதனவந்த ராயிருப்பார்
வம்பனுகாதெந்நாளும் சுகானந்தமாக
வாழ்ந்திருப்பார்மனைவிமைந்தர் பந்துசூழ
அம்புவியில்கீர்த்திசேர் ஞானத்தோடு
அனுதினமும்பெருமையாய் சீவிப்பாரே. 91

உரை :—கேதுமகாதிசையில் புதன்புத்திவந்தால், கல்வியும், வித்தையும், ஞானமும் அதிகரித்து, உத்தியோக மேன்மையாலும், வியாபார லாபத்தாலும் திரவிய சேகரஞ்செய்து, நவரத்னமிழைத்த பொன்னாபரணங்களும் விசேஷமாய் சேகரித்து, மனைவி, மைந்தர், சுற்றத்தாருடனே வெகு மேன்மையாக வாழ்ந்திருப்பார்கள்.

## சுக்கிர மகாதிசை பலன்

---

அன்புடனேசுக்கிரதிசை ஜாதகர்க்கு
அனுகினால்உத்தியோக வியாபாரலாபம்
இன்பமுடனெய்துமின்னம் மனைவிமைந்தர்
இனஜனமெல்லாம்புகழ வாழ்ந்திருக்கும்
நன்மையுடன்சுகவாழ்வும் நவரத்தினாதி
நலமுடையவாகனபாக் கியமுண்டாகும்
வன்மையுடன்ஆட்சி உச்சநட்புஸ்தானம்
வந்தமர்ந்திருந்தாலே யோகந்தானே. 92

உரை :—சுக்கிரபகவான் தனலாப சுகபாக்ய ஸ்தானங்களில் நட்பு ஆட்சி உச்சமாயிருந்தால் வித்யாபிவிர்த்தி உத்தியோக மேன்மை வியாபார லாபமும் பொருந்திய திரவ்யமத்தனும் பொன், பொருள், பூஸ்திதி உடையவனும் மனைவி மைந்தர்களுடனே வாழ்ந்திருப்பார்கள் சரீராரோக்யமுடனும், தாசிவேசிகளின் சுகானந்தத்துடனும், வாகனாதி முதலான வைபவங்களுடனும் சுகசீவியாய் பிரபுத்தன்மையா யிருப்பார்கள்.

## சுக்கிரபுத்தி பலன்

புகர்திசையில்சுயபுத்தி வந்திட்டாலே
பொன்பொருளும்ஜாதகர்க்கு மிகவுண்டாகும்
ஜெகத்திலுள்ளபிரபுக்கள் மன்னராலும்
செம்பொன்னாபரணமுடன் பூமிலாபம்

RangaRakes tamilnavarasam.com

அகமகிழவேபெற்று பந்துமித்ரர்
    அனைவருடன்மனைவிமைந்தர் குழவாழ்ந்து
மகிழ்ந்துலகில்வாகனு திகளோடன்பாய்
    யாநிலத்தில்கீர்த்தியுடன் சீவிப்பாரே.

உரை :—சுக்ரதிசையின் சூரியபுத்தியில் ஜாதகர்க்குப் ப
மான நன்மைகளும், அரசர்கள் பிரபுக்கள் சகாயமும் ெ
பொருள் பூஸ்திதி லாபமும் கிடைப்பதுடன், வாகனாதிலாப
வியாபார உத்யோகம் விமரிசையாய்ப்பெற்று மிகவும் கீர்த்திப்
மாய் மனைவி மைந்தர், பந்துமித்திரருடனே சுகசீவியாய் வ
திருப்பதுடன் அழகானந்த முகவசீகர தாசிவேசிகளுடனே
போக பாக்கியமனைத்தும் அநுபவித்து, ஆனந்தமாய் ‹
திருப்பார்கள்.

## சூரியபுத்தி பலன்

சுக்கிரபகவானுடைய திசையிலேதான்
    சூரியபுத்திவந்தால் குரூரமாக
அக்கினிபோல்சரீரவெப்ப மிகவுண்டாகி
    அனல்சுரமும்சரீரத்தில் உஷ்ணமாகும்
மிக்கபயம்வியாதியினு லுண்டாகுமப்பா
    மிகதுயரமுண்டாகும் மதிபுகலும்வியாழன்
லக்னந்திசாநாதன்புத்தி நாதனையும்பார்த்தால்
    லக்ஷணமாய்பொன்பொருளோடு சீவிப்பாரே.

உரை :—சுக்கிர பகவான் திசையிலே சூரிய பகவான்
வந்தாலிஜாதகர்க்கு சரீர வெப்பமும் அனல்ஜுரமு முண்ட
உஷ்ண வியாதியும், அன்பமும் துயரமு முண்டாவதுடன் ப
கஷ்டமும் வறுமையும் சூழ்ந்து துயரப்படச் செய்யும். அ
இலக்கினத்தையும், மேற்படி திசாநாதனையும், புத்திநாதனை
குரு, புதன், சந்திரனும் பார்த்தால் சரீராரோக்யமும்
மும் அழகானந்த முகவசீகர தேஜசும் பொருந்தி தனத்த
சம்பத்துடனே சுகானந்தமாய் சீவித்திருப்பார்கள்.

## சந்திரபுத்தி பலன்

அசுரகுருதிசைதனிலே சந்திரபுத்தி
    அமைந்தாலேஜாதகர்க்கு சிரரோகங்கள்
கசிந்திடவேமுகஜன்னி வறுமைநோய்கள்
    கஷ்டநஷ்டங்களெல்லாம் வந்துசூழும்

RangaRakes tamilnavarasam.com

பசுபதியினருளாலே இலக்கினத்தை
    புகன்குருவும்பார்த்தாலே பந்துமித்ரர்
விசுவாசமாயிருப்பார் தனவானாக
    விளங்கியேசீரகக மெய்துவாரே. 85

உரை:—சுக்கிர திசையில் சந்திர புத்தி வந்தால் ஜாதகர்க்கு சீதள சம்பந்தமான தலைநோய், மூக்கொன்னி முதலான வியாதிகளும் வறுமையும் சஞ்சலமும் நேரிட்டு கஷ்டநஷ்டத்தை யனுபவிக்கச் செய்யும். ஆனால், ஜனன இலக்கினத்தை குரு, புதன் பார்த்தால் பந்துமித்திரர்களெல்லாம் மிகவும் விசுவாசமுடனிருந்து பலவித நன்மை புரிவார். உத்தியோக மேன்மையாலும் வியாபாரவிர்த்தியாலும் திரவிய சேகரஞ் செய்து வெகு மேன்மையுடன் ஜீவித்திருப்பதற்காகும்.

## செவ்வாய்புத்தி பலன்

சுங்கன் திசைதனையிற்செவ்வாய் புத்திவந்தாற்
    சூழ்ந்திடுமேமனதினிலே விசாரதுன்பம்
பங்கமுறுஞ்சஞ்சலங்க ளெய்துமப்பா
    பார்தனிலேவறுமையினால் துடிதுடிப்பார்
இங்கிதமாய்குருபுதனும் திசாபுத்திநாதன்
    இலக்கினாதிபதியையும் பார்த்திட்டாலே
மங்களமாய்பல நன்மையனுபவித்து
    மாநிலத்திற்பொருள்சேர்த்து சீவிப்பாரே. 86

உரை:—சுக்கிர மகா திசையில் செவ்வாய் புத்திவந்தால் மனவிசாரமும் திகிலும் சஞ்சலமுமுண்டாகி பலவிதமாகிய கஷ்டநஷ்டங்களும் கவலைகளும் சூழ்ந்து வறுமையினால் துடிதுடித்து மனதிகிலடைந்து கஷ்டப்படுவார்கள். ஆனால் குருபுதனும் இலக்கினாதிபதியையும், திசாநாதனையும், புத்திநாதனையும் பார்த்தால் மங்களகரமாய் பலவித நன்மைகளும் பொருந்தி திரவிய சேரஞ் செய்து சுகசீவியாக மனைவி, மைந்தர், பந்து, மித்திரர், சுற்றத்தாருடனே மனசஞ்சலமில்லாமல் வாழ்ந்திருப்பதற்காகும்.

## இராகுபுத்தி பலன்

பார்க்கவனூர் திசைதனிலே இராகுபுத்தி
    பகைமுடன்வந்தாலே சீரநோய்கள்
தீர்ந்திடுமேமிகநன்மையுண் டாகுமின்னம்
    திறமுடனேகுருபுதனும் லக்கினத்தைப்

RangaRakes tamilnavarasam.com

பார்த்தாலும்கேந்திரத்தில் திசாபுத்திநாதன்
    பலமுடனிருந்தாலும் தனவானுக
சீர்பெறவேமனைவிமைந்தர் சுற்றத்தோடு
    சிறப்புடனேமாநிலத்தில் சீவிப்பாரே. 87

உரை:—சுக்கிரதிசையில் இராகுபுத்தி வந்தால் சரீரரோகமும் மனோற்சாகமுமாயிருக்கும். ஆனால் குரு புதனும் இலக்கினத்தையும் திசாபுத்தி நாதனையும் பார்த்தாலும் கேந்திரஸ்தானத்தில் இராகுபலவானிருந்தாலும் தனத்தான்ய சம்பத்துடனே மனைவி மைந்தர் சுற்றத்துடனே ஜீவித்திருப்பார்கள்.

## குருபுத்தி பலன்

பார்க்கவனும்நட்பாக்ஷி உச்சமேனி
    பகருத்திசைவியேவியாழன் தனுசுமீனம்
நீர்க்கமுடன்கடகத்தி லிருந்தாலந்த
    திசைபிலிவர்புத்திவந்தால் தீரமுண்டு
சீர்பெறவேதனத்தான்ய சம்பத்துண்டு
    செம்பொன்னுபரணங்கள் பூமியுண்டு
ஆர்கவிருமுலகமதில் மனைவிமைந்தர்
    அனுதினமும்மனமகிழச்சீவிப்பாரே. 88

உரை:—சுக்கிரபகவான் நட்பு, ஆக்ஷி, உச்சஸ்தானத்திலிருக்கும்போது, குருபகவானும் தனுசு, மீனம், கடகராசியிலிருந்தால் சுக்கிரதிசையில் குருபுத்தி வரும்போது ஜாதகர்க்கு பலவித சம்பத்தியமும் உத்தியோகவிர்த்தியும் வியாபார லாபமும் பெருகி தனத்தான்னிய சம்பத்துடன் கீர்த்திப்பிரகாசமான பிரபுத்தன்மையாய் ஆடையாபரண அலங்காரமுடன் பூமிலாபம் பெற்று, உலகிலுள்ளோரனைவரும் மெச்சுந்தன்மையாய் மனைவி,மைந்தர், பந்து, மித்திருடனே மனமகிழ்ந்து சுகானந்தமாய் ஜீவித்திருப்பார்கள்.

## சனிபுத்தி பலன்

வெள்ளிதனிலேசனியின் புத்திவந்தால்
    மேன்மையுடன்சுகமுண்டாம் ஜாதகர்க்கு
தென்றுதமிழ்வித்தியா லாபமுண்டு
    தேடுவார்தனதான்ய லாபத்தன்னே

பின்னேபெண் ஜாதிபந்து மித்ரரோடு
பிரியமாய்சுகமாக வாழ்ந்திருந்து
உன்னபொருள்பலவிதமாய் செலவழித்து
ஊரார்கள்மதித்திடவும் சீவிப்பாரே. 89

உரை :—சுக்கிர திசையில் சனிபுத்தி வந்தால், மனோற்சாகமும் தைரியமும் வித்தியா லாபமும், உத்தியோகவிர்த்தியும் அதிகரித்து தனதான்ய சம்பத்துடன் திரவியவந்தனென்ன சகலரும் புகழ்ந்துரைக்குந் தன்மையாய் மனைவி மைந்தர்களுடன் சுசானந்தமாய் வாழ்ந்து பந்துமித்ரர்கள் உறவின்முறையாரனைவரும் புகழ்ந்துரைக்குந் தன்மையாய் பிரபுவைப்போல் சீவித்திருப்பார்கள்.

## புதன்புத்தி பலன்

காமன்திசைதன்னில்புதன் புத்திவந்தால்
கௌரவமும்பெருமையும் கீர்த்திலாபம்
பூமனைப்போக்சுகலாபத் துடனெந்நாளும்
புகழ்பெற்றுவியாபார லாபத்தோடும்
நாமதியாவெகுமுயற்சியா லெல்லோரும்
தனவந்தனென்றிடவே பொருளைத்தேடி
நேமமுடன்பந்துமித்ரர் கூட்டத்தோடு
நேர்மையாய்சுகமுடனே சீவிப்பாரே. 90

உரை :—சுக்கிரதிசையில் புதன்புத்திவந்தால் ஜாதகர்கட்கு மனோற்சாகமும் கௌரவமும் பெருமையும் கீர்த்தியும் திரவிய லாபமும் கிடைப்பதுடன், வித்தியா லாபத்தினால் விவேகம் விளங்கி, வியாபாரஞ் செய்து பலவிதமாய்ப் பொருள் தேடி தாணியோர் மதிக்குந் தன்மையான பிரபுத்தன்மையான பந்து, மித்திரர், மனைவி, மைந்தர்களுடன் சுகசீவியாய் வாழ்ந்திருப்பார்கள்.

## கேதுபுத்தி பலன்

சுக்கிரனார்திசையிலே கேதுபுத்தி
சூழ்ந்தாலேசத்துருக்கள் கொடுமையாலும்
அக்கிரமமாய்துன்பஞ் செய்குவார்கள்
அலைச்சலுடன் வறுமைபிணி சூழ்ந்துவாட்டும்
லக்கினத்தையும்திசாபுத்திநாதனையும் சுபர்பார்த்தாலே
லஷணமாய்பலவிதமாய் பொருளைத்தேடி
தக்கபடி மனைவிமைந்த ருடனேவாழ்ந்து
தனவந்தராகவே சீவிப்பாரே. 91

RangaRakes tamilnavarasam.com

உரை :—சுக்கிர திசையில் கேதுபுத்தி வந்தால் சத்துருக்கள் செய்யும் துன்பத்தால் கஷ்டமும் கவலையும் நேரிட்டு கலகச் செய்து வறுமையும் பிணியும் துன்பமு முண்டாகும். ஆனால் குரு, புதன், வளர்பிறைச் சந்திரனுமிய சுபக்கிரகங்கள் இலக்கினத்தை யாகிலும், திசாபுத்தி நாதனையாகிலும் பார்த்தால் வியாபார விருத்தியினால் திரவிய சேகரஞ் செய்து, தனதான்ய சம்பத்துடனே மனைவி மைந்தர், பந்து கூட்டத்துடனே மனோல்லாசமாய் வாழ்ந்திருந்து ஞானானந்தமாய் சீவித்திருப்பதற்காகும்.

நவக்கிரக திசாபுத்தி நிர்ணயம்

முற்றிற்று.

RangaRakes tamilnavarasam.com

# நக்ஷத்திர ஆரூட பலன்

## கணேசர் துதி

*எண்சீரடி விருத்தம்*

ஆதிபராசக்தியருள் பாலாபோற்றி
அம்பிகையருண் மைந்தா கணேசாபோற்றி
ஜோதிப்பிரகாச பிரணவமேபோற்றி
செழுஞ்சுடரேதுய்யவிநாயகனேபோற்றி
பாதிமதிசடையணிந்தோன் மைந்தாபோற்றி
பக்தர்களைந்தாளுந்துதிக்குந் தேவேபோற்றி
நீதியுடன் நக்ஷத்ர ஆரூடத்தை
நினதருளால்புகல்வதற்கு அருள்செய்வீரே. 1

## ஆரூட பலன்

அன்புடனேவிநாயகரை பூஜைசெய்து
ஆசனத்தில்ஜோதிட னுட்கார்ந்துகொண்டு
சின்முத்திரையாகவே சிவத்தியானம்
செய்தமர்ந்துஓர்மனதா யிருக்கும்போது
தன்முன்னேவந்தா ரூடங்கேட்போர்கள்
தங்களைப்பார்த்தோர் நக்ஷத்ரம் புகலக்கேட்டு
நன்மைதுன்மை இன்னின்னவிதங்களாக
நடக்குமென்றுபலாபலனை புகலுவீரே. 2

உரை— ஆரூடம் சொல்வதற்கிசைந்த ஜோதிடன் ஸ்நானபான நேமநிஷ்டை புரிந்து பகவத் பத்தியானந்தமாய் கணேசருக்குத் தேங்காயுடைத்து கற்பூரமேற்றி தூபதீபாராதனை செய்துமான்தோலாசனத்தில் அமர்ந்து நவக்கிரகங்களை பூஜித்து தியானஞ் செய்துக் கொண்டிருக்கும்போது தன்னிடத்தில் ஆரூடங் கேட்கவந்தவர்களை இருபத்தேழு நக்ஷத்திரங்களில் ஒன்றைச் சொல்லச் சொல்லி, அவர்கள் சொன்ன நக்ஷத்திரத்தின் பலனுக்கிசைந்த விதமாய் நன்மை துன்மை இன்னின்ன விதமாய் நடக்குமென்று சொல்வீர்கள் ஜோதிட கணித வல்லோர்களே.

௨௦

RangaRakes tamilnavarasam.com

## உதாரணம்:—நக்ஷத்திர விபரம்

| | | |
|---|---|---|
| 1 அசுபதி | 10 மகம் | 19 மூலம் |
| 2 பரணி | 11 பூரம் | 20 பூராடம் |
| 3 கிருத்திகை | 12 உத்திரம் | 21 உத்திராடம் |
| 4 ரோகணி | 13 அஸ்தம் | 22 திருவோணம் |
| 5 மிருகசீரிடம் | 14 சித்திரை | 23 அவிட்டம் |
| 6 திருவாதிரை | 15 சுவாதி | 24 சதயம் |
| 7 புனர்பூசம் | 16 விசாகம் | 25 பூரட்டாதி |
| 8 பூசம் | 17 அனுஷம் | 26 உத்திரட்டாதி |
| 9 ஆயில்யம் | 18 கேட்டை | 27 ரேவதி |

## பலன் சொல்லும் விபரம்

அவரவர்கள்மேற்குறிப் பித்திருக்கும்
அந்தந்தநக்ஷத்ர பேரைச்சொன்னால்
தவறுமலவரவர்கள் மன நிலுற்ற
தமதெண்ணத்தின் பலனை சொல்வாரானால்
நவக்கிரகசகாயத்தி னலுரைப்பீர்
நடக்கின்றபலனெல்லாம் சரியாய்த்தோற்றும்
வைமுடனிவற்றையெல் லாமுணர்ந்து
காசினியிலுள்ளோர்க்குப் பலன்சொல்வீரே. 8

உரை—ஆரூடங் கேட்க வந்தவர்கள் மேலே காட்டியிருக்கின்ற நக்ஷத்திரங்களொன்றின் பேரைச் சொல்லக் கேட்டு அந்தந்த நக்ஷத்திரங்களுக்குரிய பலன்களை விபரமாய்ச் சொன்னால் சரியாயிருக்கும்; இதனை ஜோதிடர்கள் கவனமாய்ப் பார்த்து, ஆரூடங்கேட்க வந்தவர்கட்கு பலாபலனை விபரமாய்ச் சொல்ல வேண்டும்.

## அசுபதி நக்ஷத்திர பலன்

அசுபதியென்றேயுரைத்து கேட்டவர்க்கு
ஆரூடபலனுத் தமமேயாகும்
பசுபதியினருளாலே நினைத்தகாரியம்
பக்குவமாய்நலமுடனே நடத்தன்பாக
விஜயமுடன் ஜெயம்பெற்று வருவாரின்னும்
விரும்பியதோர் பொன்பொருளும் வந்துசேரும்
விசுவாசமாகவே சகலருந்தான்
விருப்பமுடனேயிருப்பார் கவனிப்பீரே.

உரை—அசுபதி நக்ஷத்திரத்தைச் சொன்னால் அவர்கள் நினைத்த காரியம் உத்தமமாகும். அதன் பலன் விபரமெவ்வித

RangaRakes tamilnavarasam.com

மெனில் பகவான் கிருபையால் நினைத்த காரியம் ஜெயமாவ துடன் தான் நாடிய மனிதர்கள் தன்மீது விஸ்வாசமாக கேட்ட தைத் தருவார்கள். ஆகையால் இந்தக் காரியம் ஜெயமென் றுரைக்கவேண்டும்.

## பரணி நக்ஷத்திர பலன்

பரணியென்ற நக்ஷத்திரம் சொல்வாராகுல்
    பலனில்லை அதமபல னுதமப்பா
தரணியில் நீ நினைந்த காரியங்கூடாது
    தனக்கெவரும்பகையாவார் பொருளுஞ்சேதம்
சிரந்தாழ்த்தலாதும்சபைக் கேகலாகா
    சிறித்ததுமிவர் சொல்லோ சபைக்கேகாது
திரவியமுஞ்சேதமாம் சண்டையுண்டு
    தீராகவலைதைத்தொழிலு மகப்படாதே. 5

உரை:—ஆருடங் கேட்க வந்தவர்கள் பரணியென்ற நக்ஷத் திரத்தை சொல்வாராகுல் அதமபலனுகும். ஆகையிறுல், நீ நினைத்த காரியம் பலிக்காது. சகலரும் சப்பிராதிகளா யிருப்பார் கள். கைப்பொருள் சேதமாகும் சபையிற் சென்று பேசினலும் தனது வார்த்தையை எதிரிகள் அலக்ஷியஞ் செய்து அவமதிப் பார்களென்றும், சிவன காரியத்திலும் கஷ்டமும் கவலை யுண் டாகுமென்றும், கைப்பொருள் சேதமாவதுடன் சண்டை, சச்சர வும் தீராத மனக்கவலையு முண்டாகுமென்றும். அதனுல் தற் சமயம் நாடிய காரியத்தை நினைக்க வேண்டாமென்று சொல்ல வேண்டும்.

## கார்த்திகை நக்ஷத்திர பலன்

கார்த்திகையென்றேசொன்னல் ஆருடந்தான்
    கைகண்டபலனுமுடைத் தமமேயாகும்
மூர்த்திகளின்சகாயத்தால் நினைத்தகாரியம்
    முதன்மையாய்க்கைகூடும் மரணமுமாகும்
ஆர்த்தசபையிற்பேசி வெற்றிகொள்வார்
    ஆபரணப்பொன்பொருளும் வந்துசேரும்
கீர்த்திசேருத்யோக வர்த்தமானங்கள்
    கிடைக்குமென்றுசொல்வீர் ஜோதிட வல்லோரே. 6

உரை:—ஆருடங் கேட்க வந்தவர்கள் கிருத்திகை நக்ஷத் திரத்தின் பேரைச் சொன்னுல் நினைத்த காரியம் ஜெயமாகும்; உத்தமமென்று சொல்லவேண்டும். பகவத் சகாயத்தால் சகலமும் நன்மையாய் நடக்குமென்றும், சபையிற் பேசச் சென்றால் தன் வார்த்தையே மேன்மையாய் நடக்குமென்றும், உத்யோக

RangaRakes tamilnavarasam.com

மேன்மை, வியாபார லாபமும் பெருகுமென்றும், ஆபரணதி களும், பொன் பொருள் விசேஷமாய் கிடைக்குமென்றும் சொல்வீர்.

## உரோகணி நக்ஷத்திர பலன்

அன்புடனே ஆரூடங் கேட்கவந்தோர்
அவர்வாயால்ரோகணிநக்ஷத் ரத்தைச்சொன்னால்
நன்மையில்லை அதமபலனென்றுரைப்பாய்
நாடிவந்தோர்காரியங்கை கூடாதென்பாய்
வின்னமாய்உத்யோக பங்கமாகும்
வியாபாரநஷ்டமென்றும் விபரமாய்ச்சொல்
நன்மணமுமிவ்வருஷங் கூடாதென்பாய்
நலமில்லைநீகேட்ட ஆரூட மென்பாயே. 7

உரை:—வந்தவர்கள் ரோகணி நக்ஷத்திர மென்றுரைத்தால் அதமபலனாகும். அவர்கள் நாடிவந்த காரியம் சித்தியாகாது. அவர்கள் செய்யும் கைத்தொழில் உத்தியோகத்தில் பங்கமாகும், தொழி லகப்படாமல் மதிமயங்கி திகிலுற்றிருப்பார்கள். வர்த்தகம்செய்பவராயிருந்தால் பலவித நஷ்டமாகும், கலியாண காரியத்தை நினைத்து வந்தால் இந்த வருஷம் பலவித கலகத்தாலும் மனஸ்தாபத்தாலும் திருமண வைபவமும் நடவாதென்றுரைப்பாய்.

## மிருகசீரிட நக்ஷத்திர பலன்

மிருகசீரிடநக்ஷத் திரத்தைச்சொன்னால்
மிக்கநற்பலனில்லை மத்திபமேயாகும்
தருணத்திலுற்றநோய் தீருமென்பாய்
தனக்குப்பகைவர்கள்துன்பம் கொஞ்சங்காட்டும்
முருகனைஸ்தோத்ரம்புரிந்து நவக்ரகங்கள்
முதற்கடவுள்விநாயகனை பூஜைசெய்தால்
திருமணமுங்கூடும் பொன்பொருளும்சேரும்
திரவியமும்சேகரித்து ஜீவிப்பாரே. 8

உரை:—மிருகசீரிடத்தின் பேரைச் சொன்னால் மத்திபபலனாகும். கோபத்தினால் சகலரும் விரோதமா யிருப்பார்கள். சரீரத்தில் வியாதி வருவதும் போவதுமா யிருக்கும். ஆகையால் சிவசுப்ரமணியரையும் விநாயகரையும் பூஜித்து நவக்கிரக பூஜை செய்தால் வறுமை பிணியெல்லாம் விலகும். சகலரும் சிநேகமா யிருப்பார்கள். பந்து மித்திரர் சகாயமா யிருப்பார்கள். கலியாணங்கூடும். பொன் பொருள் திரவியலாபமும் கிடைத்து பிரபுவைப்போல் பெருமையாய் ஜீவித்திருப்பார்கள்.

RangaRakes tamilnavarasam.com

## திருவாதிரை நக்ஷத்ர பலன்

திருவாதிரைநக்ஷத்ர மென்றுரைத்தால்
    தீங்கெய்தும் நினைத்த காரியமாகாது
பருவப்பெண்ணொருத்தியால் கலகமாகும்
    பார்தனிலேமழைபொழியா வருத்துமென்பார்
தருணத்தில்விதைத்தபயிர் விளைவதில்லை
    தற்பரனும்கணேசரையே பூஜைசெய்தால்
கருமவினைபாலுற்ற கலகம்நீங்கி
    கவலைதுன்பமில்லாமல் சீவிப்பாரே. 9

உரை :—ஆரூடங்கேட்க வந்தோர் தமது வாயினால் திருவாதிரை நக்ஷத்ரமென்று சொன்னால் அவர்கள் நினைத்துவந்த காரியம் முடியாது. வாலிபப்பெண்ணால் வம்பு சண்டை கலகமனைத்தும் நேரிட்டுத் துன்பமும் துயரமுமாகும். காலமழை தவறி கஷ்டப்பட்டு விதைத்த தான்யாதிகள் விளையாது. ஆனால், சித்தசுத்தி, பக்தி வைராக்கியத்துடனே விநாயகப்பெருமானை பூஜித்தால் சகலவித கஷ்டமும் விலகி கருமவினையால் வந்த பலவித கலகமும் விலகி கவலையும் துன்பமுமில்லாமல் சுகசீவியாய் வாழ்ந்திருப்பீர்களென்று சொல்லுவீர்.

## புனர்பூச நக்ஷத்ர பலன்

புனர்பூசநக்ஷத்திர மென்றுரைத்தால்
    பூமியிலேமாடாடு நிலமும்வீடும்
தனதான்யசம்பத்தும் கிடைத்தன்பாக
    தரணியிலேகுபேரசம்பத் தாயிருப்பார்
இனஜனங்கள் நட்பாவார் மணமுங்கூடும்
    இனிதுடனேசுகபோக மநுபவித்து
தனதுமனையாள்புத்ர பாக்யம்பெற்று
    தன்மனதின்படிநடப்பா ளெனச்சொல்வாயே. 10

உரை :—ஆரூடங் கேட்க வந்தவர்கள் புனர்பூச நக்ஷத்திரமென்று சொன்னால் அவர்களுக்கு நற்காலம் வருமென்றும், தனதான்ய சம்பத்துடன் ஆடுமாடுகள் முதலானவை விசேஷமாய்க் கிடைப்பதுடன் குபேரசம்பத்துடன் இருப்பார்களென்றும், பந்துமித்திரர்களனைவரும் ஆசாபாச நேச விஸ்வாசமாயிருப்பார்கள். கலியாணங் கூடும். சுகபோகமாக்கியமனைத்தும் அநுபவித்து மனையாள் தன் மனதின்படி நடந்து சுகசீவியாய் வாழ்ந்திருப்பதுடன், புத்திர பாக்கியம் பெற்று ஆனந்தமாயிருப்பீர்களெனப் புகல்வீர்.

RangaRakes tamilnavarasam.com

## பூச நக்ஷத்திர பலன்

பூசநக்ஷத்திரமென்று சொல்வாரானால்
போனவர்மறுபடியும் திரும்பாரென்பாய்
நாசமாப்நினைத்ததெல்லாங் கைகூடாது
நாற்றிசையும்மழையில்லா துலர்ந்துபோகும்
மோசஞ்செய்வார்பகைவர் வறுமைமூடும்
மொழிவதெல்லாம்பொய்யென்பா ரருகிருப்போர்
விசம்பொன்பொருள்கையில் கிடைத்திடாது
வினைத்தால்கலங்குவீரென் றோதுவாயே. 11

உரை :—ஆருடங் கேட்போர் பூச நக்ஷத்திரமென் றுரைத்தால் பிரயாணத்திற்கு பங்கமுண்டாகுமென்றும், போனவர் மறுபடியும் திரும்பாரென்றும், நினைத்தகாரியமெல்லாங் கைகூடாமல் நாசமாகுமென்றும், நாலாபக்கத்திலும் மழையில்லாமல் காய்ந் துலர்ந்து போகுமென்றும், பகைவர் மித்ரபேதமாய் மோசஞ்செய்வார்களென்றும் சொல்வீர். வறுமையதிகரித்து உத்தியோகமில்லாமலும் வர்த்தகமில்லாமலும், கையில் காசும் பணமுமில்லாமல் கலங்குவார்களென்று சொல்வீர். ஆனால், நவக்கிரக பூஜை செய்து கொண்டிருந்தால் கொஞ்சங் கொஞ்சமாய் சுகலாபம் பெறுவீர்களென்றும் தெரிவிப்பீர்.

## ஆயில்ய நக்ஷத்ர பலன்

அன்புடனேஆருடங் கேட்கவந்தோர்
ஆயில்யநக்ஷத்ர மென்றுரைத்தால்
மன்னர்பிரபுக்களால் நலமுண்டாகும்
மாநிலத்தில்தனவானுஞ் சீவிக்கலாகும்
நன்வாயின்சொல்மதுர வார்த்தையாகும்
தனதுமனையாள்புத்ர மித்ரரோடு
நன்மையுடன்சீவிப்பார் பகவானுலேயென்று
நவிலுவீர்ஜோதிடசாஸ்திர வல்லோரே. 12

உரை :—ஆருடங் கேட்க வந்தவர்கள் ஆயில்ய நக்ஷத்ரமென்று உரைத்தால் அரசர்களாலும், பிரபுக்களாலும் வெகு மேன்மையுண்டாகுமென்றும், உத்தியோக விர்த்தியாலும், வியாபாரலாபத்தாலும் பலவிதமாய் திரவியசேகரஞ்செய்து, தனவந்தனாக சீவித்திருப்பதற்காகுமென்றும் சொல்வாய். அவர்கள் மனிதரிடத்தில் பேசுவதெல்லாம் அழகான உண்மை வாக்கியமாயிருக்குமென்றும், மனைவி, மைந்தர்கள், சுற்றத்தாருடன் சுகசீவியாய் வாழ்ந்திருப்பார்களென்றும் சொல்வீர்கள்.

## மக நட்சத்திர பலன்

மகநக்ஷத்திரமென்று சொல்வாராகில்
மனதினிலேநினைத்ததெல்லாம் முடியுமப்பா
ஜெகமீதுதனதான்ய சம்பத்தோடு
செல்வவத்தாரய்மனைவி மைந்தரோடும்
புகழ்மேவும்வியாபாரம்செய் துத்யோகத்தால்
பொருள்தேடிபந்துமித்ர ருடனன்பாக
சுகபோகபாக்யமெல்லா மனுபவிப்பாரென்று
சொல்லுவீர்ஜோதிடத்தில் மிகவல்லோரே. 13

உரை:—ஆரூடங் கேட்க வந்தவர்கள் மக நக்ஷத்திரமென்று சொல்வாராகில் அவர்கள் நினைத்த காரியமெல்லாம் நிறைவேறுவதுடன் உத்தியோகங் கிடைத்தும், வியாபாரத்தில் லாபமதிகரித்தும், தனத்தான்ய சம்பத்துடன் வெகு மேன்மையாக ஜீவித்து மனைவி, மைந்தர், மித்திரர். சகலரும் புகழுந்தன்மையான பெருமையுடன் சுகபோகமாய் ஜீவித்திருப்பதற் காகுமென்றுஞ் சொல்வீர்கள்.

## பூர நட்சத்திர பலன்

பூரநக்ஷத்திரத்தைப் புகல்வாராகில்
போனவர்கள்திரும்பார்கள் பொருளுஞ்சேதம்
தாரமிழந்திடுவார்கள் வறுமை சூழ்ந்து
தவிப்பார்கள்விரதபங்க மாகும்பொல்லா
கோரமாய்பலதுன்பம் வந்து சூழ்ந்து
கொடுமைபோசத்துருக்கள் செய்வாரென்பாய்
தாரணியில்நவக்கிரக பூஜைசெய்து
தப்பித்துக்கொள்வீரென் றோதுவீரே. 14

உரை:—ஆரூடங் கேட்க வந்தவர்கள் பூர நக்ஷத்திரத்தின் பேரைச் சொன்னால் சதாகாலமும் மனவிசாரமா யிருப்பாரென்றுரைப்பாய், தூரதேசத்திற் சென்றவர்கள் திரும்பமாட்டார்கள். பலவிதமாய் கைப்பொருள் சேதமாகுமென்றும், மனைவி மரணமாவாளென்றும், வறுமையினாலே தத்தளித்துக் கஷ்டப்பட்டு கலங்குவதுடன் தான் செய்யும் விரதம் பங்கமாகுமென்றும், விசேஷமான துன்பமும் துயரமும் பகைவர்கள் செய்யும் கொடுமையும் சூழ்ந்து, கஷ்டப்படுத்துமென்று சொல்வீர். ஆனால், நவக்கிரக பூஜை தவறாமல் செய்வீர்களாகில் கொஞ்சங் கொஞ்சமாய் குரூரபயங்கர கஷ்டநஷ்டமெல்லாம் விலகி சுகமா யிருப்பீர்களென்றும் சொல்வீர்கள்.

RangaRakes tamilnavarasam.com

## உத்திர நட்சத்திர பலன்

உத்திரநக்ஷத்திர மென்றுரைத்தால்
உத்தமம்சகலவித நன்மையுண்டு
புத்திரபாக்கியமுண்டு பொருளும்சேரும்
பூஸ்திதியும்மெத்தவே பெருகுமப்பா
எத்தினமும்வியாபார உத்யோகங்கள்
எடுத்தகாரியமெல்லாம் ஜெயமே ஆகும்
பத்திரங்களெழுதிபணம் கொடுப்பதற்கும்
பாக்கியமுண்டாகுமென்று பகருவீரே. 15

உரை :—உத்திர நக்ஷத்திரத்தின் பேரைச் சொன்னால் நினைத்த காரியமெல்லாம் உத்தமமாகும். அதனால் சகலவித நன்மையும் புத்திர பாக்கியமுமுண்டாகும். உத்தியோக மேன்மையாலும், வியாபார இலாபத்தாலும் பலவிதமாய்ப் பொருள்சேகரஞ் செய்து கொடுக்கல் வாங்கல் முதலான பெருமையும், பத்திரமெழுதி வாங்கிக் கொண்டு பணங்கொடுக்கும் பிரபுத் தன்மையுமுண்டாகுமென்றும் சொல்வீர்

## அஸ்த நட்சத்திர பலன்

அஸ்தமென்றுசொன்னாலே துன்பமப்பா
அரசர்கள்பிரபுக்கள் பகையுண்டாகும்
வித்தையில்லைபுத்தியில்லை சோம்பலுற்று
விவேகமில்லாவறுமையால் திகைத்திருப்பார்
சித்தமிகத்துயரடைந்தெப் போதும்பொல்லா
திகிலடைத்துவறுமையினால் கலங்கிநிற்பார்
இத்தகையதுன்பமெல்லாம் நடக்குமென்று
இன்பமாகச்சொல்வீர் ஜோதிடவல்லோரே. 16

உரை :—ஆருடங் கேட்க வந்தவர்கள் அஸ்த நக்ஷத்திரத்தின் பேரைச் சொன்னால் சித்தம் மயங்கி திகைத்து, ஞாபகசக்தியில்லாமல் கைத்தொழிலுமில்லாமல் வறுமையாளராய்க் கலங்கித் துடித்து திகிலடைந்து, துன்பமும் துயரமுமடைந்து, கவலையினால் விசனமாயிருப்பார்கள். ஆனால் தினந்தோறும் நவக்கிரக பூஜை செய்து கொண்டிருந்தால் சுகமாயிருப்பதற்காகும்.

## சித்திரை நட்சத்திர பலன்

சித்திரைநக்ஷத்திரத்தின் பேரைச்சொன்னால்
சிவனருளால்பலநன்மை மிகவுண்டாகும்
வித்தையுடன்புத்தியுண்டு உத்தியோகவிருத்தி
வியாபாரலாபத்தால் பொருளுஞ்சேரும்

RangaRakes tamilnavarasam.com

மெத்தநன்மைகளுண்டு மணமுங்கூடும்
மேன்மையுடன்பந்து மித்ரகூட்டஞ்சேரும்
உத்தமமென்றினிதுடனே வாழ்விரென்று
உரைத்திடுவீர்கேட்போர்க்கு ஜோதிடவல்லோரே. 17

உரை:—ஆருடங்கேட்க வந்தவர்கள் வாயினால் சித்திரை நக்ஷத்திரமென்று சொன்னால் அவர் மனதில் நினைத்த காரியம் ஜெயமாகுமென்றும், சிவபெருமான் திருவருளால் பல நன்மையுண்டாவதுடன் வித்தையும்,புத்தியும் வெகுவாயுண்டாவதுடன் உத்தியோக விருத்தியும், வியாபாரலாபமும் பெருகி, தனத் தான்ய சம்பத்தும், பந்துமித்திரர் கூட்டமும் சேர்ந்து பலவித நன்மையும் பெற்று சுகானந்தமாய் ஜீவித்திருப்பார்களென்று சொல்லுவீர்கள்.

## சுவாதி நட்சத்திர பலன்

சுவாதியெனும்நக்ஷத்திர பேரைச்சொன்னால்
சொர்னபணிபூஷணமும் நஷ்டமாகும்
ஜாதியார்பகையாகி துன்பமுற்று
சஞ்சலத்தினுற்றினைத்து கலங்குவார்கள்
தாதிகளும்அடிமைகளும் விலகிப்போவார்
தனதான்யமில்லாமல் விசனமாகும்
ஆதிகணேசர்பூஜை நவக்கிரகபூஜை
அன்புடனேசெய்துலகில் ஜீவிப்பாரே. 18

உரை:—ஆருடங்கேட்கவந்தவர் சுவாதி நட்சத்திரத்தைச் சொன்னால் தனத்தான்ய நஷ்டமும், பொன், பொருள், பூஸ்திதியும் நஷ்டமாவதுடன் ஜாதியார்களும் பகையாகி பலவித கஷ்டப் படுத்துவதுடன், வறுமையினால் மனந்திகைத்து, அடிமையாட்களும் விலகிப் போவார்கள். ஆனால் ஆதிகணேசரை பூஜை செய்து நவக்கிரகங்களை சதாகாலமும் தியானஞ்செய்து பூஜித்துக் கொண்டிருந்தால், அந்தந்த சமயத்தில் வருகிற கஷ்ட நஷ்டமெல்லாம் விலகி அப்போதைக்கப்போது சமயம்போல் சுபபலனை யனுபவித்து ஜீவித்திருப்பார்கள்.

## விசாக நட்சத்திர பலன்

அன்புடனேவிசாகநக்ஷத் திரத்தைச்சொன்னால்
அநேகவிதநன்மை யுண்டாகுமென்றும்
நன்மையுடன்வித்தைபுத்தி உத்தியோகமேன்மை
நாடியநேர்வியாபார லாபமாகும்
பொன்பொருளும்பூஸ்திதியும் சேரும்பாக்கியம்
பொருந்தியேமனைவிமைந்தர் பந்துமித்திரர்



RangaRakes tamilnavarasam.com

இன்பமுடனேவாழ்ந்த மேன்மையாக
    இனிதுடனேஜீவிப்பாரெனச் சொல்வீரே. 19

உரை :—ஆருடங் கேட்க வந்தவர்கள் விசாக நட்சத்திரத்தின் பேரைச் சொன்னால், அநேகவித நன்மையுண்டாகுமென்றும் வித்தையும் வியாபார விர்த்தியும் பெற்று திரவிய லாபமும் பொன் பொருள், பூஸ்திதியும் பொருந்தி, மனைவி, மைந்தர், பந்து மித்திரர்களுடனே சுகஜீவியாய் வாழ்ந்திருப்பதற்கிசைந்த நலமனைத்தும் உண்டாகும். நினைத்த காரியமும் ஜெயமாகும்.

## அனுஷ நட்சத்திர பலன்

துன்பமுண்டு அனுஷ நக்ஷத்திரத்தைசொன்னால்
    தொலையாதவிசாரமப்பா பூவாடைக்காரி
தன்குறையாகப்பலதுன்பம் வந்துகுழும்
    தாரித்ரபீடையுண்டு நலமாகாது
நன்மையுடன்விநாயகரை ஸ்துதிபுரிந்து
    நவக்கிரகபூஜைசெய்தால் வறுமைநீங்கி
பொன்பொருளும்சேர்ந்து திருமணமுண்டாகும்
    போஜனாதிகள்வெகுவாய் கிடைக்கும்பாரே. 20

உரை :—ஆருடம் கேட்க வந்தோர்கள் அனுஷ நட்சத்திரத்தின் பேரைச் சொன்னால் அவர்களுக்கு தீராத மன விசாரமும் கஷ்டமும் கவலையும் சூழ்ந்து தன் வீட்டுப் பூவாடைக்காரிகுற்றத்தால் பலவித துன்பமும் துயரமும் சூழ்ந்து, வறுமையுமுடன் கஷ்டப்படுத்தும். கலியாணமாகாமல், கஷ்டப்படுத்துவதுடன் மனச்சஞ்சலமும் பயங்கரமும் பொருந்தியிருக்கும். ஆகையால், விநாயகரை ஸ்துதி செய்து நவக்கிரக பூஜை செய்தால் சகலவித தோஷமும் விலகி, தனதான்ய சம்பத்தும் பொன் பொருள், பூஸ்திதி கிடைப்பதுடன் திருமண வைபவம் நடந்து சுகபோஜனாதிகளுடன் சௌக்கியமாய் ஜீவித்திருப்பார்கள்.

## கேட்டை நட்சத்திர பலன்

கேட்டைநக்ஷத்திரத்தின் பேரைச்சொன்னால்
    கெம்பீரம்கௌரவமும் கீர்த்தியோங்கி
வீட்டைபார்மனைவியினால் சுகபோகத்தை
    விரும்பியேதிரவியமே காங்கள்செய்து
கேட்டைமிகும்மூதேவி வாசம்நீங்கி
    செழிப்புத்துமகாலக்ஷ்மி வருவாளே
நாட்டிலேபிரபுவென வாழ்ந்திருக்கும்
    நான்வந்ததென்றன்பாய்ப் புகலுவீரே. 21

உரை :—ஆருடங் கேட்க வந்தவர்கள் கேட்டை நக்ஷத்திரமென்று சொன்னால் அவர்களுக்கு இனிமேல் துக்கமும், துயரமும், துன்பமும் நீங்கி, மூதேவி வாசமில்லாமல் மகாலக்ஷ்மி கிருபையினால் சகலவித நன்மையும், கௌரவமும், கெம்பீரமும், கீர்த்தியும், தனதான்ய சம்பத்தும் அதிகரித்து, மனைவி மைந்தர் பந்துமித்திரர்களின் பெருக்கத்தினால் விசேஷ நன்மையும், சுகபோகபாக்கியமும் பெற்று, தரணியோர் பிரபுவென்று புகழுந்தன்மையான பொருள் சேகரஞ் செய்வதற்கிசைந்த நந்நாள் வந்ததென்றன்புடன் புகலுவீர்.

## மூல நக்ஷத்திர பலன்

அருடங்கேட்கவந்தோர் மூலமென்றால்
அல்லல்துன்பமின்றோடே விலகிற்றென்றும்
காருண்யதிருமாலின் சகாயத்தாலே
கனகம்வெள்ளிதிரவியங்கள் சேகரித்து
பாருக்குளிவன்போற்பிரபு கிடையாதென்றும்
பகைகளில்லாசகலர்க்கும் மித்ருவாகி
சீருடனேகௌரவமும் கீர்த்தியோடே
சீவிப்பாரென்றினிதாய்ப் புகலுவீரே. 22

உரை :—ஆருடங்கேட்டு பலன் தெரிந்துகொள்ள வந்தவர்கள் மூல நக்ஷத்திரத்தின் பேரைச் சொன்னால், இனிமேல் யாதொரு கஷ்டநஷ்டமும் அல்லல் துன்பமுமில்லையென்று கருணாகரனாகிய ஸ்ரீமந் நாராயணர் கிருபையால் தனத்தான்ய சம்பத்துடன் பொன், பொருள், பூஸ்திதியும் பெறுவதற்கிசைந்த வியாபார விருத்தி, உத்தியோக மேன்மை வியாபார லாபமும் பெற்று, உலகத்தோர் பிரபுவென மெச்சுந் தன்மையான கீர்த்திப்பிரகாசமும், பெருமையும், கௌரவமும் பொருந்தி யிருப்பதற்காகும். உலகத்தில் தனக்கெவரும் பகையில்லாமல் சுகானந்தமாய் சீவிப்பதற்காகும்.

## பூராடம் நக்ஷத்திர பலன்

பூராடநக்ஷத்ர மென்றுரைத்தால்
போனவர்கள்வரமாட்டார் பொருளுஞ்சேதம்
பாராடப்பகைதுன்பம் மழையுமில்லா
பயிர்விளையாபலதான்ய சேதமாகும்
போராடப்பகைவர்வந்து சூழ்வாரப்பா
பொன்பணியும் பூமியுடன்போகுமப்பா
நீராடப்போனமங்கை திரும்பாளென்று
நிதானித்தாருடபலன் புகலுவாயே. 23

RangaRakes tamilnavarasam.com

உரை :—ஆருடங் கேட்க வந்தோர் பூராட நக்ஷத்திரத்தின் பேரைச் சொன்னால் பிரயாணஞ் செய்யப் போனவர் வரமாட்டா ரென்றும், கைப்பொருள் சேதமாகுமென்றும், உறவின் தனக்கும் பற்பலவித துன்பமும் துயரமும் நேரிடுமென்றும், மழையில்லாமல் தான்யாதிகள் விளையாதென்றும், சத்துருக்கள் அதிகரித்து சண்டை சச்சரவு செய்வார்களென்றும், பொன் பணி பூஷணாதிகள், காணி பூமிகளும் சிதறிப்போகுமென்றும், ஆற்றில் ஸ்நானஞ் செய்யப் போனவன் திரும்பானென்றும், ஆருடகணிதத்தை ஆராய்ந்துணர்ந்து பலன் சொல்வீர்கள்.

## உத்ராட நக்ஷத்திர பலன்

உத்ராட நக்ஷத்ர மென்றுரைத்தால்
உத்தமமாய்பலநன்மை வந்துசூழும்
புத்திரபாக்கியமுண்டு பொருளும்சேரும்
பூஸ்திதியும்வெகுலாபங் கிடைப்பதோடு
உத்தியோகவிர்த்தியும் வர்த்தகத்தின்மேன்மை
உற்றநும்பந்து மித்ருடனேயன்பாய்
எத்ததியும்சுகசீவி யாகவாழ்ந்து
எவர்களுக்கும்மேன்மையாய் சீவிப்பாரே. 24

உரை :—ஆருடங் கேட்க வந்தோர் உத்ராடமென்றுரைத்தால் அவர்கள் நாடிவந்த காரியம் ஜெயமென்றும், அதனால் பலவித காரியமும் நன்மை பெறும். புத்திர பாக்கியமும், பொன் பொருளும் உண்டாகுமென்றும், காணி பூமி லாபமும், உத்யோக விர்த்தியும், வியாபார மேன்மையும் அதிகரித்து, கௌரவமும், கீர்த்தியும், தனதான்ய சம்பத்தும் அதிகரித்து மனைவி மைந்தர், பந்துமித்திருடனே சதாகாலமும் சுகானந்தமாய் சீவித்திருப்பார்களென்று சொல்வீர்கள்.

## திருவோண நக்ஷத்திர பலன்

வந்தோர்கள் திருவோணநட்சத் திரமென்றாலே
வாய்தனிலேஜலமில்லா மழையுமின்றி
சிந்தைநொந்துருகியே விளைவில்லாமல்
சினமுடனேமன்னர்பகை யதிகரித்து
பந்துமித்ரர்பகையாலும் வறுமையாலும்
பதைபதைத்துசுகமில்லா கலகத்தாலே
எத்தவிதம்பிழைப்பதென் றுவேசித்துநாளும்
ஏங்கியேகவலையினால் கலங்குவாரே. 25

உரை :—ஆருடங் கேட்க வந்தவர்கள் திருவோண நட்சத்திரமென்றால், வயல்தனிலே தான்யாதிகள் விளைப்பதற்கு

[illegible]ளாகவும், மறைவில்லாத கவலையால் மனந்[illegible] [illegible]த்தார் பகை யதிகரித்து, வறுமையினால் [illegible] [illegible], சரீரசௌக்கியமில்லாமல் சுகமற்று பந்துமித்திரர் ப[illegible] [illegible] [illegible]ரத்துடனே எவ்விதமாய் பிழைப்பதென்று [illegible] நாளும் ஆலோசித்துக் கவலையினால் கலங்கி திகைத்திருப்பார்கள். ஆகையால், இந்த ஆருடம் அதமபலனாய் நடக்குமென்று சொல்வீர்கள்.

## அவிட்ட நட்சத்திர பலன்

இன்பமாகஅவிட்டமென் றுரைத்தாரானால்
இராஜயோகத்திற்கிசைந்த சுகமாய்வாழ்வார்
தன்மனமுங்கூடும் உத்யோகமேன்மை
நாடியேவர்த்தகத்தில் லாபமுண்டு
பொன்பொருளும்பூஸ்திதியும் மிகவேபெற்று
போனவர்கள்திரும்புவார் பூமிலாபம்
விண்ணமிலாவிதைத்திட்ட தான்யமெல்லாம்
விளைந்துபயிரோங்கியே செழிக்குந்தானே. 26

உரை:—ஆருடங் கேட்க வந்தவர்கள் அவிட்ட நட்சத்திர மென்று உரைத்தால் இராஜயோகத்தைப்போல் பலவித நன்மை யனுபவித்து வித்யாபிவிர்த்தியுடன் உத்தியோக மேன்மையும் வியாபார லாபமும்பெற்று, சுகசீவியாயிருப்பதுடன் [illegible] கூடும். மனைவி, மைந்தர் பந்துமித்ரர்களுடனே [illegible] யிருப்பதுடன், தனதான்ய சம்பத்துடனே வாழ்ந்திருப்பார்களாகும்.

## சதைய நட்சத்திர பலன்

கவைரமாய்ஆருடம் வந்துகேட்போர்
கலக்கமுடன் சதையநட்சத்ரமென்றால்
தலையில்வினைபமுண்டு திகிலுமாகும்
நாடியதோர் காரியங்கை கூடாதப்பா
பலயில்லைவறுமையினால் கஷ்டமுண்டு
பரிதியெனுஞ்சூரியனை பூஜைசெய்தால்
சிலநாளைக்குள்ளாக வெகுலாபங்கள்
சித்திக்குஞ்சுகமாக வாழ்வாரென்பீரே. 27

உரை:—மனதிகிலுடன் ஆருடங் கேட்க வந்தவர்கள் சதைய நட்சத்திரமென்றுரைத்தால் அவர்கள் நினைத்த காரிய மானது பலவிதமாகிய துன்பத்தாலும் துயரத்தாலும் மனதிகி லடைந்து யாதொரு காரியத்திலும் பிரவேசிக்க மனமில்லாமல் உத்தியோக ஸ்தானத்தில் கலகமும், வியாபாரத்தில் நஷ்டமு மடைந்து வறுமையால் கலங்குவார்கள். ஆகையால் அதிகாலை

RangaRakes tamilnavarasam.com

யிலெழுந்து ஸ்நானபானஞ் செய்து சிந்தசுத்தி பக்தி வைராக்யத்துடன் குரிய பூஜை செய்துகொண்டிருந்தால் பலவித துன்பமும் நீங்கி பகைவரெல்லாம் துணையாவார்கள். உத்தியோக மேன்மையும் வியாபார லாபமும் கிடைத்து தனவந்தராய் ஜீவித்திருப்பீர்களென்று சொல்வீர்கள்.

## பூரட்டாதி நட்சத்திர பலன்

பொறுமையுடன் ஆருடங் கேட்கவந்தோர்
பூரட்டாதிநட்சத் திரமென்றுலே
சிறுமையில்லைபெருமையுண்டு நினைத்ததெல்லாம்
சித்திக்கும்உத்தியோகம் வர்த்தகத்தால்
பொருள்சேரும்தனத்தான்ய சம்பத்துண்டாம்
புத்திரபாக்கியமுண்டு புகழுங்கீர்த்தி
வருமப்பாபிரபுவென மனமுங்கூட்டும்
வையகத்தில்பந்துமித்திரர் துணைசெய்வாரே. 28

உரை:—மிகவும் பொறுமையுடனே வந்து ஆருடங் கேட்பவர்கள் பூரட்டாதி நக்ஷத்திரமென்றால் வெகு நன்மையான பலனுகிய உத்தமமாகும். உத்யோக மேன்மையாலும், வர்த்தகலாபத்தினலும் வெகு பொருள் சேகரித்து தனதான்ய சம்பத்துடனே சிறுமையில்லாமல் பெருமையாக கீர்த்தியுடன் பிரபுவென்று சகலரும் புகழ்ந்துரைக்கும்படியான கௌரவமுண்டாகும். கலியாண சுபகாரியமும் புத்திர சம்பத்தும் பந்துமித்திர் சகாயமு முண்டாகும். உலகத்தில் சதாகாலமும் மனேல்லாசமா யிருப்பதற்காகுமென்று சொல்வீர்கள்.

## உத்திரட்டாதி நட்சத்திர பலன்

உத்திரட்டாதியென் றுரைத்தாரானுல்
உறவினரும்பந்துமித்திரர் பகையாவார்கள்
உத்தியோகமில்லாமல் வர்த்தகஞ்செய்யாமல்
உணவின்றிவறுமையினுல் திகைப்பாரப்பா
எத்ததியுந் துன்பமுண்டு கஷ்டநஷ்டம்
எடுத்தகாரியமெல்லாம் கைகூடாது
சித்திவிநாயகர்பூஜை செய்திருந்தால்
சிறுமையில்லாசுகமுடனே ஜீவிப்பாரே. 29

உரை :—ஆருடங் கேட்கவந்தவர்கள் உத்திரட்டாதி நக்ஷத்திரமென்றுரைத்தால் அவர்கள் தமது பந்துமித்திரர் உறவினர்களும் பகையாயிருப்பதுடன் ஜீவிப்பதற்கிசைந்த உத்தியோகமில்லாமல், வர்த்தகஞ் செய்யாமலும் மனவிசார மடைந்தவர்களாய் புசிப்பதற்குணவில்லாமல் அன்னவஸ்திரத்திற்குப்பஞ்சமாய்சதா

RangaRakes tamilnavarasam.com

காலமும் துன்பமும் துயரமு மனுபவிப்பதற்காகும். எடுத்த காரியம் சித்தியாகாது. ஆகையால் தினந்தோறும் விநாயகர் பூஜை செய்துக் கொண்டிருந்தால் கஷ்டநஷ்டமில்லாமல் சகலரும் துணைவராய் விளங்கி உத்தியோகங் கிடைத்தும், வியாபாரத்தில் லாபம் பெற்றும் வறுமை யில்லாமல் பெருமையாய் வாழ்ந்திருப்பீர்க ளென்றுரைப்பீர்கள்.

## ரேவதி நட்சத்திர பலன்

அன்புடனேரேவதியின் பேரைச்சொன்னால்
அஷ்டலக்ஷ்மி கடாக்ஷங்களுண்டு
தன்மையுடன்மணங்கூடும் உத்தியோகங்கிட்டும்
நாடியதோர்வியாபார லாபமுண்டு
பொன்பொருளும்மிகப் பெருகும்புத்திரபாக்கியம்
பொறுமையுடன் பந்துமித்திரர் மனையாள்சுற்றம்
இன்பமாய்பலநாளும் சகாயஞ்செய்ய
இனிமையுடன் வாழ்ந்திருப்பா ரெனச்சொல்வீரே. 80

உரை:—ஆரூடங் கேட்கவந்தோர் ரேவதி யென்று சொல்வாரானால் அஷ்டலக்ஷ்மி கடாக்ஷமுண்டு. அநேகவித நன்மையும் பொருந்தி, உத்தியோக மேன்மையும் வியாபார லாபமும் பெருகி பொன் பொருள் புஷ்டியுடன், கலியாணம் சுபகாரியம் முதலான நன்மையும் புத்திரபாக்கிய சம்பத்தும், பந்துமித்திரர் சகாயமும் பெற்று சுகஜீவியா யிருப்பார்களெனச் சொல்வீர்கள்.

நட்சத்திர ஆரூட பலன்

முற்றிற்று.

RangaRakes tamilnavarasam.com

நாலுநாலுபாகமாக பனிரெண்டு ராசியை பிரித்து
ஜெனித்த ஸ்தானம் முதலிய
அடையாளங்களைக் குறிப்பிட்டுச் சொல்லும்

# காக்கையர் நூல்

## மேஷம் முதற்பாகம்

மேடமுதலக்கினந்தா னுதயமாகில்
விளம்புகிறேன் வடக்கதுவே வீதியாகும்
ஆடமுதுனக்கினைய மருகேநிற்கும்
அந்தமனையிருந்து கட்டினதேயாகும்
நீடியதோர்சயனங்கள் தெற்கேயாகும்
நேர்வடக்குவாலயமு மிடிந்துகாட்டும்
பாடுன்னவிதிவிலோர் கணைசருண்டு
பாடினேனுடியொன்று பரித்துபாரே.

## மேஷம் இரண்டாம்பாதம்

மேடமென்றலக்கினத்தான் இரண்டாம்பாதம்
விளம்பியதோர் கீழ்மேற்கு வீதியாகும்
பாடுற்றருனக்கினை மெதிராய்தோன்றும்
பரிவானவாலயமே வாய்வின்றிக்கில்
நீடியதோர்தேர்மேற்கிற் றுண்டமொன்று
நிறைதெற்கவடக்குமொரு வாழியாகும்
ஆடையுடனெடுத்தமனை யாமேயாகும்
அதற்கேற்றமண்ணறுவதை யறிவித்தோமே.

## மேஷம் மூன்றாம்பாதம்

குறிப்பிலவன்ஜெனனமது மூன்றாம்பாதம்
கூறுவேன்வடக்குதெற்கு வீதியாகும்
சரியாயிருபுரமுந் தடுத்தவீடு
தானிருக்கும்தெருவாயிற் கிழக்கேசொல்லும்
பெரியகன்னிதரமதி லீசன் கோவிட்டம்
பேசினேன்மேற்குதிக்கிற் கன்னிசன்கோயில்
அருகாகவும்மனையிற் சாத்தான் தறவன்
ஆறுகேதானுண்டா மறிந்துகொள்ளே.

RangaRakes tamilnavarasam.com

## மேஷம் நாலாம்பாதம்

நகரதில்நாலாம்பாதந் தன்னிலேஜெனனமாகும்
புகல்வதுகிழக்குமேற்கு புகன்றிடுந்தெற்குவாசல்
மகரசிங்கத்திற்குண்ட மங்கொருகோயில்தோப்பு
நிகர்துளிமேஷஞ்சாத்தா னிருக்குமேருண்டமொன்றே. 4

———

## ரிஷபம் முதற்பாதம்

குண்டையிவன்பிறந்துவந்த விதிதன்னைக்
கூறுகிறேன்தென்வடக்கு வீதியாகும்
அண்டமெனுமிவன்வாசற் கிழக்கேயாகும்
அதற்கருகில்மூன்றும்வீ டதுவும்பின்னம்
பண்டையென்றும்தென்கிழக்கிற் றடமேயாகும்
பசர்வன்னிபுத்திரத்தி லீசனுமி
கெண்டையெனுங்கயல்விழியாய் ரிஷபத்தேனும்
கிராமத்திற்குடியிருப்பு கணேசன்துர்க்கை 1

## ரிஷபம் இரண்டாம்பாதம்

விடையிலிவன்பிறந்துவந்த ரெண்டாம்பாதம்
விளம்புகிறேன்கீழ்மேற்கு வீதியாகும்
நடைபுலவுவாசலது தெற்கேயாகும்
நாட்டுகிறேன்கீழ்மேற்கு கணேசன்குண்டம்
படையிலிவன்மிதுன துலாங்கும்பந்தன்னிற்
படுகிறார்மைய்யன் துர்க்கை மாரியென்று
குடையிலிவன்கும்பத்தில் வாழுந்தெய்வம்
கொக்கிலையிலேகுடியிருப்பா மென்றுகூறே. 2

## ரிஷபம் மூன்றாம்பாதம்

புல்விடபமிவன்ஜெனன மூன்றாம்பாதம்
புகலுகிறேன்தென்வடக்கு வீதியாகும்
கல்வியுடனவன்வாசல் மேற்கேயாகும்
காட்டுவேயைத்தெருவிற் கணேசன்கோயில்
செல்லுமேமேடமது தனுசுதன்னில்
சிவன்சத்திகுண்டமென்று செப்பலாகும்
வல்லமையாயிவன்குடும்பந் தன்னில்வாழும்
மாதுரைவீரனென்று வகுத்துச்சொல்லே. 3



RangaRakes tamilnavarasam.com

### ரிஷபம் நான்காம்பாதம்

ரிஷபமேநான்காம்பாதம் நேருடன்கிழக்குவீதி
அழகியவடக்குவாசல் அதிகிருதும்பழுண்டு
பழகியகிழக்கில்குண்டம் பதிந்திடுங்கோயிலுண்டு
அழகியசாத்தான்கோவி லம்மையாம்வடபுரத்தில்.

---

### மிதுனம் முதற்பாதம்

மிதுனமுதற்பாதமதி லுதயமாகில்
விளம்புகிறேன்தென்வடக்கு வீதியாகும்
இதாமெனுமிவன்வாசல் கிழக்கேயாகும்
இவனில்லத்தன்டைசந்து பாழதாகும்
மிதுனமதில்மேற்கதிலே குண்டங்கோயில்
மேவீசன்சூழ்சத்தி கால்வாயொன்று
அதன்மேலுமிவன்குடியை யானுந்தெய்வம்
அயனாரமென்றுசொல்லி அறிவித்தோமே.

### மிதுனம் இரண்டாம்பாதம்

தண்டிவிவன்ஜெனனமது விரண்டாம்பாதம்
தானதுவேகீழ்மேற்கு வீதியாகும்
அண்டியிவன்வாசலது தெற்கேசந்து
அதன்மேலேசூட்சியொன்று கோயிலுண்டு
கண்டுமிவன் வடதிக்கின் றென்பால்கீழ்பால்
காவியொன்றுகால்வாய்நீ ரோடையொன்று
கொண்டோடியிவன்றனையே காக்குந்தெய்வம்
கூறுமக்கினிவாயுவே குறித்துச்சொல்லே.

### மிதுனம் மூன்றும்பாதம்

ஆழியிவன்ஜெனனமது மூன்றும்பாதம்
அதுதெற்கேவடக்குள்ள வீதியாகும்
தாழியிவன்றனைவாசல் மேற்கேயாகும்
சாத்திரனுமக்கினியில் சாத்தான்மாசி
ஊழியிவன்றேன்ரிஷப ராசிதன்னி
னூற்றுகெங்கைசடையணிந்த வீசனில்லம்
வாழியிவன்றென்புரத்தில் றேருங்கோயில்
வருத்துரைத்தபுஜண்டருட வாக்குத்தானே.

## மிதுனம் நான்காம்பாதம்

நல்வினைராசிதன்னில் நான்காம்பாதம்
　　நாடிவந்தசுதன்வீதி கிழக்குமேற்கு
பல்வினையாளிவன்வாசல் வடக்காயில்லம்
　　பாருமதுசொந்தமில்லை பிறர்தன்வீடு
சொல்வினையாருசிதும்பம் துலையிற்குண்டம்
　　சொல்லுமதிற்சிவன்சத்தி சாத்தான்கோஷ்டம்
வெல்வினையாமிவன்குடும்பந் தன்னைக்காக்கும்
　　வேல்மதுரைசொக்கலிங்க வீரன்றானே.

---

## கடகம் முதற்பாதம்

கொண்டலெனுங்கடகமதி லுதயமாகிற்
　　கூறுவேனவன்வீதி வடக்குதெற்கு
விண்டவன்றன்வாசலது மேற்கேயாகும்
　　யிவனில்லத்தன்னருகிற் குண்டமுண்டு
பண்டலெனுந்துலாங்கும்ப மேடத்தன்னிற்
　　பண்பானகோயிற்சத்தி சாத்தான்மாரி
விண்டலெனுமிவன்தெருவில் விளங்குந்தெய்வம்
　　வேல்முருகக்கடவுளென விளம்பலாமே.

## கடகம் இரண்டாம்பாதம்

தண்டியுறுஜெனனமது லிரண்டாம்பாதம்
　　நாடிவந்தசுதன்வீதி கிழக்குமேற்கு
அண்டியிவன்வாசலது தெற்கேயாகும்
　　மனையெதிரிற்சந்துயெதிர் வீடுமில்லை
கொண்டவிவன்குடியிருப்பு ரெண்டாம்பாதம்
　　கூரக்கினிமேடத்துலாங் கும்பங்குண்டம்
வண்டியிவன்வாழுமிந்த வீதிதன்னில்
　　வருஞ்சுழிமதன்கோஷ்டங் கடகத்தானே.

## கடகம் மூன்றும்பாதம்

சேர்க்கையெனுமிவன்ஜெனன மூன்றும்பாதம்
　　ஜெனித்துவந்தசுதன்வீதி வடக்கேயாகும்
வேர்க்கையிவன்றலைவாசல் கிழக்கேயாகும்
　　மேவுதுலாமிதுனத்திற் குண்டங்கோயில்

ஆக்கையெனுந்தேன்மகர மைப்பனம்மை
யானைகடைவீதியென்று சால்வாயென்று
சேர்க்கையெனுமிதனேகேள் புஜண்டவர்வாக்கை
செப்பினதோர்நூல்தனிலே தப்பிராதே.

## கடகம் நாலாம்பாதம்

நன்னியெனுந்தண்டகனி னுன்காம்பாதம்
நாடிவந்தசுரன்வீதி கிழக்குமேற்கு
சென்னியெனுமிவன்வாசல் வடக்கேயாகும்
திகழ்கன்னிசத்திரமு மீசன்கோவில்
கன்னியெனுந்தேர்மிதுனம் காரிகோஷ்டம்
காரைத்தியாச தண்டங் காளிகோயில்
வன்னியவன் குடியதனில் வாழுந்தெய்வம்
மதுரைவீரன்சக்தியென்று வகுத்துச்சொல்லே.

---

## சிங்கம் முதற்பாதம்

சிங்கமெனுமிலக்கினந்தா னுதயமாகில்
சிறப்பானகீழ்மேற்கு வீதியாகும்
பங்கமெனும்பிதிர்குடும்ப மூன்றேயாகும்
பாலனிடவாசலது தெற்கேயாகும்
இங்கேயெனுமிருபுறமுஞ் சந்தேயாகும்
இயல்பானமேற்புறத்தில் கோயிலாகும்
தங்கவேயதுகாலந் தியோகவானுஞ்
சாற்றுகிறேன்கீழ்திசையிற் றடாகமுண்டே.

## சிங்கம் இரண்டாம்பாதம்

சிங்கமெனுமிலக்கினந்தா னிரண்டாம்பாதஞ்
சிறப்பானஇரன்வடக்கு வீதியாகும்
அங்கமிரைதிதிற்பிறந்த மனையிற்றோட்டம்
அம்மனையின்முன்புறமே கட்டிநிற்கும்
சங்கையுடனிஷபகன்னி மகரராசி
சரித்சிவலிங்கமொன்று வாழியென்று
திங்களணிகடமது லக்கினத்தி
சேர்ந்திருக்கின் விழல்வீடு தானுண்டாமே.

RangaRakes tamilnavarasam.com

### சிங்கம் மூன்றும்பாதம்

தானமாம்புவியிலிவன் மூன்றும்பாதம்
　　தான்வந்தசு தன்வீதி கிழக்குமேற்கு
ஆனவிவன் றலைவாசல் வடக்கேயாகும்
　　அந்தவில்லத்தன்னருகிற் பாழதாகும்
மானமகாமேடதனு மீனஞ்சாத்தான்
　　மாகாளிகுலமதனை காக்குந்தெய்வ
கானசத்திபாவாடை ராயனங்கே
　　காத்திருப்பாரெக்காலுங் காவலாமே.

### சிங்கம் நான்காம்பாதம்

அரிபதனிலிவன்ஜெனனம் நான்காம்பாதம்
　　ஆகிவந்தசு தன்வீதி வடக்குதெற்காய்
தலையிலிவன்வாசலது மேற்கேயாகும்
　　சாற்றுகிறேனிவன்வீட்டி லிருபாலில்லம்
எரிமேடத்துலாமகர ராசிதன்னில்
　　இருக்குமதுகுழிகுண்டங் கோவிலொன்று
சரியில்லைகாக்கவந்த பெரியதெய்வம்
　　தானடிமையிவனெனவே சாற்றலாமே.

---

### கன்னி முதற்பாதம்

கன்னியெனுமிலக்கினந்தா னுதயமாகில்
　　கனமாககீழ்மேற்கு வீதியாகும்
உன்னதமாய்தென்வாசல் மேற்கேகோஞ்டி
　　புயருகின் றவாசலுமு மெதிரேதோன்றும்
மன்னியவர்கீழ்புறத்தில் நீராடும்வாய்க்கால்
　　வாழையுடன்தேங்குழு தோன்றும்பாரு
மன்னவனும்புற்றண்டரவ! சொன்னதாலே
　　வனமறித்துதிடமுடனே வரையலாமே.

### கன்னி இரண்டாம்பாதம்

தெரிவையெனுமிலக்கினந்தா னிரண்டாம்பாதம்
　　ஜெனித்துவந்தசுதன்வீதி வடக்குதெற்கு
அரிவையெனுமிவன்வாசல் கிழக்கேயாகும்
　　அவ்வில்லத்தருகிற்குண்டம் எதிரேகாணும்

நிலைவெனுர்தனுர்மீனம் வடக்கேசாத்தான்
சாதுகன்னியிசனில்லவ் கிழக்கேகுண்டம்
ஒருவிவிவன்குலங்காக்குங் கருப்பன்மாரி
கதித்தபஞ்சபாண்டவர்க்கே சகாயனென்னே.

## கன்னி மூன்றாம்பாதம்

சேடிதனிற்ஜெனனமது மூன்றாம்பாதம்
ஜெனித்துவந்தசுதன்வீதி கிழக்குமேற்கு
பாடியிவனில்லமதுக் கருதிற்சந்து
பகருவேன்றலைவாசல் வடக்கேயாகும்
ஆடியபேரம்பலவன் கணேசன்கோயில்
அதுமகரமேடசிங்க மறிந்துகொள்ளு
கூடியிவன்குடும்பத்தைக் காக்குந்தெய்வங்
குணவீரனென்றுமிவை கூறலாமே.

## கன்னி நாலாம்பாதம்

கையதனிற்கனலேந்துங் கன்னியென்றும்
காணயிந்தசுதன்வந்த நான்காம்பாதம்
வையமிவன்வீதியது வடக்குத்தெற்கு
வளமானதலைவாசல் மேற்கேயாகும்
செய்யவிவன்மனைக்கருகிற் சந்துமுண்டு
செப்புகிறேன்கீழ்மேற்கு குண்டங்கோஷ்டம்
மெய்யிவிவன்குலங்காக்குந் தெய்வம்மெல்லா
மேல்வடக்குத்தெற்கிலொரு கோயிலுண்டே.

## துலாம் முதற்பாதம்

சீரானதுலாமதிலே தோன்றுமாகில்
சிறப்பானகீழ்மேற்கு வீதியாகும்
பேரானவடவாசல் மேற்கேகோயில்
பெரிதானவொல்லியிலே புளியனுர்த்தை
கூரானகுளமெட்டில் தடும்பத்தன்னில்
குண்டமாங்கோயிலொன்று குறித்துச்சொல்லு
ஆரானவிவன்குலத்தை யாளுந்தெய்வம்
ஆடுபன்றிகோழிகொள்ளும் மாண்டவனுன்.

RangaRakes tamilnavarasam.com

### துலாம் இரண்டாம்பாதம்

கோலமிதுனிவன்றெனு மிரண்டாம்பாதம்
குறித்துவந்த [illegible] க்கெதற்கு
ஏலவிவன்றனை [illegible]
இருபுறமுமில் [illegible] யுண்டாம்
சாலதனுர்கடக [illegible] சாத்திர [illegible]
சாற்றுவேன் [illegible] னவன்கோட்டம்
வேலவனுர்குல [illegible] தத்திகவ்வாம்
வெளித்தகன் [illegible] புவோனே.

### துலாம் மூன்றாம்பாதம்

செட்டியெனுமிவன் றெனு மூன்றாம்பாதம்
ஜெனித்த [illegible] கிழக்குமேற்கு
திட்டியெனுமிவன் [illegible] நற்கோகரும்
தேன்மீனமேஷ [illegible] னங்கள்கோஷ்டம்
வட்டியெனும்வாசலிலே மரங்களுண்டு
வளர்மேஷந்துலா [illegible] ண்டத்தாழி
கட்டிவிவன் துலா [illegible] க்குத்தெய்வம்
காளிசத்திபா [illegible] ன்றனே

### துலாம் நான்காம்பாதம்

வணிகனெனுமிரா [illegible] நான்காம்பாதம்
வந்துதித் [illegible] வடக்கேவாகும்
அணிகனெனு [illegible] நோப்பு
அந்தயில்வத் [illegible] துப்பாரு
குணிகடகத்தனுர் [illegible] கோயிற்குண்டம்
கூறுமிவன்தெ [illegible] ங்காளி
கணிகனெனுமிவன் [illegible] க்குத்தெய்வம்
காத்தவனு [illegible] சொல்லே.

---

### விருச்சிக முதற்பாதம்

அறிவதென்னவிருச்சிகத்தா [illegible] யமாகில்
அப்பனேகிழ்மேற்கு வீதியாகும்
தெரிவதென்ன [illegible] வாசல் மேற்கேகோயில்
செப்புகிறேன்மேற்புரத்திற் றடாகமென்று

RangaRakes tamilnavarasam.com

திரிவதென்னகீழ்ப்புற நீரோடுவாய்க்கால்
ஸ்திரமாகமரமுண்டு வறிந்துகொள்ளு
பிரிவானவடபுறத்திற் பிடாரிகோயில்
பேரானபாட்டையொன்று தோன்றும்பாரே.

## விருச்சிகம் இரண்டாம்பாதம்

பத்துடையதேளில்வந்த விரண்டாம்பாதம்
பாருமிவன்தெருவீதி வடக்குத்தெற்கு
கொத்துடனேயிவன்வாசற் குறியேமேற்கு
கொல்லையினிற்குலதெய்வங் குடியிருப்பாம்
சுத்துடையகூவ விருச்சிகமீனத்தில்
காவிதண்டங்கால்வாய் நீரோடுங்கோயில்
சத்துடையனிவன்வீட்டிற் றிருபாவில்லம்
சாற்றுகிறேனேகங்கன்னி சாத்தான்மாரி.

## விருச்சிகம் மூன்றும்பாதம்

தேளதனிற்றெருக்காவிற் மூன்றும்பாதம்
செனித்துவந்தசுதன்வீதி கிழக்குமேற்கு
ஆளவில்லமிவன்வாசல் வடக்கேயாகும்
அதுசத்துக்கடுத்தவீ டதுவுமாகும்
மீனனெனுமேடசிங்கங் கால்வாய்த்தோட்டம்
மிகமகரங்கன்னிதண்டங் கோயிலாகும்
கோனனெனுங்குலதெய்வங் குடியன்வீரன்
கொல்லையிலேகுடியிருப்பா மென்றுகூறே.

## விருச்சிகம் நான்காம்பாதம்

விட்டதொருதேளதனி னான்காம்பாதம்
விளம்பிவந்தசுதன்வீதி வடக்குதெற்கு
கிட்டியிவன்றலைவாசற் கிழக்கேயாகும்
கேளிருவர்பாரமுமாய் குடியிருப்பு
தொட்டதனூர்மேடகுண்டஞ் சத்தியோகம்
சொல்லுமதிசென்பதி யிசானியத்தில்
கட்டியிவன்குடியைநிதங் காக்குத்தெய்வம்
கருப்புகச்சைகட்டுமிற வீரன்றானே.

---

## தனுசு முதற்பாதம்

தனுசலக்கினமேயாகிற் றகமையாங்கிழக்குமேற்கு
மனையுடன்மற்றவாசல் மருவியேகட்டிரண்டாம்
அனுதினம்பூசைசெய்பு மரன்கோயில்மேற்கேயுண்டு
மனைமதாப்தெற்கில்தோப்பு நாவிரும்பானுண்டாமே.

## தனுசு இரண்டாம்பாதம்

வின்னதனில்ஜெனனமது ரெண்டாம்பாதம்
விளங்கிலத்தசுதன்வீதி வடக்குந்தெற்கு
சொன்னதொருமேல்வாசல் மிதுனகுண்டம்
சூழுமதின்காவியொன்று கால்வாயொன்று
அன்னதொருமேடதுலை யயினார்கோவில்
ஆனதொருவீதிதனில் மதவேன்சாதி
இன்னவன்றன்குலமதனைக் காக்குந்தெய்வம்
இருவகுப்பாமென்றெடுத்து வியல்பாய்ச்சொல்லே.

## தனுசு மூன்றும்பாதம்

காண்டிபம்வந்திவன்றெனன மூன்றும்பாதம்
காணவத்தசுதன்வீதி கிழக்குமேற்கு
ஆண்டவிவன்றனிவாசல் வடக்கேயாகும்
அதனருகில்ஐயனார் சத்தியாகும்
பூண்டதுவுமேஷமதிற் குண்டங்கோஷ்டம்
புகழானசிலதாளிற் றருக்களுண்டு
ஆண்டவிவன்குலதெய்வ மையன்காளி
ஆகமிவனுமெனவே யறியலாமே.

## தனுசு நான்காம்பாதம்

சார்முகத்திவன்ஜெனனம் நான்காம்பாதம்
காணவத்தசுதன்வீதி வடக்குத்தெற்கு
ஏர்முகத்திவன்வாசற் கிழக்கேயாகும்
எதிர்விடுபாமெனவே யிருக்குஞ்சூழி
பேர்முகத்தில்மேஷகன்னி துலையிற்குண்டம்
பேசலாமரங்கோஷ்ட மீனங்கால்வாய்
சேர்முகத்திவனடியைக் காக்குந்தெய்வம்
செனுவிரனுமவனைத் தெரிந்துகொள்ளே.



RangaRakes tamilnavarasam.com

## மகரம் முதற்பாதம்

மகரலக்கினமேயாகின் மருவியகிழக்குமேற்கு
அமைதுதெற்குவாசலதற்கெதிர்சந்துமுண்டாம்
ஜெகம்புகழ்கோயில்மேற்கு செப்புநீர்குளமுமுண்டு
வகையுடன்மரங்கள்சூழ்ந்த வரிசைகள்தானுண்டாமே.

## மகரம் இரண்டாம்பாதம்

கேதுவெனும்லக்கினத்தா னிரண்டாம்பாதம்
கேடுறமைந்தன்வீதி வடக்குத்தெற்கு
வாகுருத்தலைவாசற் கிழக்கேயாகும்
வத்தயில்லம்மூன்றிலோர் பங்குமாகும்
பாதுதலைமேஷைதன்று மகரமீனம்
பாரிதிலேகோயிலொன்று பவரவாகும்
வேதியன்றன் குலங்காக்குந் தெய்வமாங்கே
வேன்மதுரைவீரனென்றே விளம்பலாமே.

## மகரம் மூன்றும்பாதம்

மான்கலையிலிவன்றெனை மூன்றும்பாதம்
வந்துதித்தோன்வீதியது கிழக்குமேற்கு
வான்கலையிலிவன்டாசல் வடக்கேயாகும்
மானகுண்டமேஷைதுலை மகரமாகும்
ஒன்கலையில்ரிஷபகன்னி மகரந்தன்னி
கோதுகங்கைசடையணிந்தோர் சிவனையன்
என்கலையாக்குலங்காக்குந் தெய்வந்தேனா
வென்னபெரியாண்டவன்றன் பத்திவாமே.

## மகரம் நான்காம்பாதம்

புல்வாயில்இவன்ஜெனனம் நாலாம்பாதம்
பொருந்திவந்த சுதன்வீதி வடக்குத்தெற்கு
மெல்வாயின்தலைவாசல் மேற்கேயாகும்
மேஷைமாந்துலைமகரங் குண்டங்கோயில்
பல்வாயிலிம்மனையோ விரண்டுபாகம்
பாரதத்துமெதிரில்லம் பாழுதாகும்
சொல்லயிவன்குலதெய்வ மையன்சத்தி
சூழ்பெரியாண்டவன்றன் பத்தியாமே.

RangaRakes tamilnavarasam.com

## கும்பம் முதற்பாதம்

கும்பலக்கினமேயாகிற் குலவியவடக்குத்தெற்கு
சம்பிரமாம்கிழக்குவாசற் றடாகமுங்கீழ்மேலுண்டு
கும்பலாயரசமேற்கு கூறியகிணறுமுண்டு
இன்பமாய்விஷ்ணுகோயி லிருந்திடுந்தப்பிராதே.

## கும்பம் இரண்டாம்பாதம்

கொட்டுகும்பலக்கினத்தா னிரண்டாம்பாதம்
கூறிவந்தசுதன்வீதி கிழக்குமேற்கு
தெட்டனிவன்றலைவாசல் மேற்கேயாகும்
தென்கடைமாரகன்னி குண்டங்கோயில்
வட்டனிவனீசன்றிக்கில் வடபால்மேலை
மனைவிடிந்துகலைந்துநிற்குங் கண்டுகொள்வாய்
தொட்டனிவனதற்கப்பால் மனைவியும்பாழாம்
சொல்லுமிவன்குலதெய்வந் துர்க்கைவீரன்.

## கும்பம் மூன்றும்பாதம்

செட்டுதனில்ஜெனனமது மூன்றும்பாதம்
ஜெனித்துவந்தசுதன்வீதி வடக்குதெற்கு
வெட்டிதனிற்றலைவாசல் மேற்கேயாகும்
மேவுதுலைதேள் தனக்குக் குண்டங்கோயில்
பொட்டியிவன்பிறந்தமனை சொந்தமல்ல
பேசுமனையவலார்தன் குடியிருப்பு
குட்டியிவன்குடியினக்குத் தெய்வங்கேளு
கொடியபெரியாண்டவனுங் கூறுவாயே.

## கும்பம் நான்காம்பாதம்

குடமதனிலிவன்ஜெனனம் நாலாம்பாதம்
கூடிவந்தசுதன்வீதி கிழக்குமேற்கு
வடமதனிற்றலைவாசல் வடக்கேயாகும்
ஆனதொருகொல்லையிலே குழிபத்தும்

இடமதனில்துலைமகர மிரண்டுருமி
　　யெதிர்த்ததொரு தேன்மிதுன மீசன்கோயில்
வடமதனில்வாழுமிவன் குலதெய்வந்தான்
　　வாழ்சத்திவீரன் முனி யென்றுசொல்லே.

---

### மீனம் முதற்பாதம்

மீனத்திற்றோன் றியவன் முதலாம்பாதம்
　　விளக்கவந்தசு தன்வீதி கிழக்குமேற்கு
தானமதிலமர்த்திருக்கும் வடக்குவாசல்
　　தன்னிலோர்குண்டமென்று சார்ந்திருக்கும்
ஆனதொருகன்னிகுண்டல் கோயிலொன்று
　　அக்கினியில்வடக்குண்டு சாத்தான்மாரி
காவயிவன்கருக்குலத்தைக் காக்குந்தெய்வம்
　　கண்டுசொல்லுபொம்மியம்மன் வாழுதாமே.

### மீனம் இரண்டாம்பாதம்

சேலுடையமீனத்தி விரண்டாம்பாதம்
　　ஜெனித்தவந்தவிதியது வடக்குத்தெற்கு
பேலுடையவிவன்வாசற் கிழக்கேயாகும்
　　யென்றதுலைமகரகன்னி குண்டங்கோயில்
மேலுமிவன்பிறந்தமனை சொந்தமல்ல
　　மேற்றிக்குவடுத்தமனை காவிருமி
காலுமிவன்கருப்பத்திற் காத்தான்தெய்வம்
　　கண்டுசொல்லுங் காக்கபர்தன்வாக்குத்தானே.

### மீனம் மூன்றும்பாதம்

செங்கையெனும்கெண்டையதின் மூன்றும்பாதம்
　　தேறுமந்தசுதன்வீதி கிழக்குமேற்கு
அங்கையிவன் றலைவாசற் றெற்கேயாகும்
　　ஆனதுலைமகரகன்னி கோயிற்குண்டம்

## காக்கயர் நூல்

மங்கைதருமேடசிங்க மங்கேகோஷ்டம்
வாசலின்னங்குடியிருப்பு சந்துவங்கே
இங்கேயிவன்குலதெய்வ மென்னவென்றால்
சதுபெரியாண்டவனென் றியம்பலாமே.

## மீனம் நான்காம்பாதம்

மீனமெனுமிலக்கினந்தா னான்காம்பாதம்
மீண்டுவந்தசைதன்விதி வடக்குத்தெற்கு
ஆனையிவன்றங்குவாச லதுவுமேற்கு
அந்தயில்லத்தனக்குக்கீழ் மேற்கிற்குண்டம்
வாளைகன்னியிடமேற்கிற் கோயிலொன்று
வரும்வழியில்வாவியொன்று மருந்துச்சொல்லு
தீனமிவன்தெய்வமது தெற்கேயுண்டு
செல்லக்காளென்றுமதை தெளிந்துசொல்லே.

காக்கயர் நூல் முற்றிற்று.

RangaRakes tamilnavarasam.com

# காக்கயர் வாக்கியம்

கரியவன் ஐந்தில் கனகனும் சேயும்
காணவே மூன்றினிலமர
பரிதியும் புதனும் பதிந்திட வாக்கில்
பஞ்சமி பரவுமே வியமாய்
வளிபுகர் மாந்தி புயிர்தனில் அமர
வழங்கிய கேதுவராதில்
குரியெனவுயிரும் கலியெனப் பகர்வோம்
குறித்திடும் அச்சமுள் தனுவே.

தனுசென மாந்தி பரவுமே வியத்தில்
தன்சனி லாபத்தி லமர
அனுமறைதேசத்தில் ரவிபுகர் நலமாய்
அன்புடன் புதன்சிமூன்றில்
கனுவெனசேயும் ஐந்தினிலாழி
கதித்திடும் சிசியவனுலாய்
பனுவெனப்பிறந்த ஜாதகர் தனக்கு
பத்தியபலனது பகரே.

பகரெனதிறமும் கருப்பினிச்சமனும்
பத்தியபகரமே புள்ளான்
திகரெனசுஸ்தன் தின்பனைக்கவடு
நிமைதில் யோகவானுதுப்
அகரெனப்புவியில் வாணிபசுகஸ்தன்
வழங்கிய பூகவாணிவனுப்
துகரெனத்துன்ப விகோசனும்கொண்
துந்பலக்கொடுத்திடார் [illegible]லான்
வகரெனவம்பு வழக்குகளுரைப்பேன்
வார்த்தையால் இஷ்டத்திக்கவே.

சகரெனப்பிறந்த ஜாதகர்தனக்கு
சகோதரம் துணைகளுமில்லான்
இகமதில்கன்னி துணையதுயோகம்
இருப்பெனப்பார்த்து இவர்க்கு
அகமதில்சங்கள் மிருதிறமுள்ளான்
அன்புடன்பிதாபொருள் குறைவோன்
ஜெகமதில்துணைபோல் இருந்தவன் நிதியும்
செப்பிய இவர்க்கதுபலமே.

RangaRakes tamilnavarasam.com

பெலமதால்யோகம் தீர்க்கமென் றுரைத்தோம்
பிற்பலச்செயல்களு முடையான்
குலமதால்சுகமும் ராகுவின் திசையில்
குறித்தனர் பலவிளைவிவர்க்கு
அலமெனச்சுகமாம் மாறுபவன் திசையில்
அன்புடன் தனது நாளதனில்
சலமெனத்தருகாக்குறைவினை யுரைத்தோம்
சாத்தியசனி புதனுமே.

வனெனஅதனில்பலன் சமனுரைத்தோம்
உகந்திடும் தனவழிக்குறைவும்
காவெனமனமும் ஏற்கையையனுகா
காட்டிய சிசுபுகரவிருவன்
ஆனெனஇவர்க்கு தந்தையர்மரணம்
அன்புடன்மனமதிலக் குறைவும்
வானெனப்பொருளும் மற்றவராலே
வந்துமே யனுகிடுமிவர்க்கே.

இவர்க்கென அதுவால்சுகங்களும்மேலாம்
இன்பமா யோகமுமமையும்
பவர்க்கெனபாக்கிய வழிதனில்சுகமும்
பத்திய வாணிபயோகம்
தவர்க்கெனமேன்மை வரவரத்திறமாம்
தம்பிய செயல்களுங்காட்டும்
அவர்க்கெனசுகங்கள் சேபரலுனில்
அன்புடன் பலமதுவுரையே.

உரைஎனஇவர்க்கு யோகமும்சுகமாம்
உரைத்திடும் வரவதால்மேன்மை
கரைஎனத்தருகா சனிதிசையதனில்
காட்டிடசுகமுடன் ஏற்கை
திரைஎனச்செல்வம் உண்டெனக்காண
தீர்க்கமாய் புதன்சிசுபுகருன்
வரைஎனமேன்மை விளாகமுமிவர்க்கு
வழங்கிய இஷ்டங்கள்சுகமே.

சுகமதில்மேன்மை வரவினால்சிலவும்
சொல்லிய இயற்கையுமேலாம்
அகமதில்சுகமும் அனுகிடுமிவர்க்கு
அன்புடன்ரவி சசிசேயூன்

RangaRakes tamilnavarasam.com

வகரெனஅன்னை மரணமுங்காட்டும்
வழங்கிய அங்கிசலுமிவர்க்கு
வசமெனவம்பு பலமதுஅனுகா
வந்திடும்லாபத்தில் சமனே.

சமனெனில்சுகமாம் மறுமணமுரைத்தோம்
சாற்றிய அரவினுான்வரையாம்
பமனென இவனும் ஜென்மமுன்னதனில்
பாக்கிய பலனிலாதவனும்
அமனெனசிவனின் அருளினுமிவர்க்கு
அன்புடன்ஜெனனமும் இதுவாய்
கமனெனப்பொருளும் கன்னியால்கிடைத்து
காட்டிய இருமணமுறையே.

உரையெனஅதுவும் திரமெனப்பார்த்தோம்
உதவிடும் வாணிவாணிபமும்
திரையெனப்புதல்வர் மூன்றுடன்கன்னி
நிற்குமென்றுரைத்தனர் இவர்க்கு
தரைதனில்பலன்கள் மேன்மையையடைவன்
தன்மையாய் மறையவனுானில்
குரையெனத்தருசா புதன்திசைபதனில்
குறித்திடும் தனதுநான்பகரே.

பகரெனஅதனில் பீடையும்வினையும்
பற்றிய சிகிபுகரவிநூன்
துகரெனத்துன்ப வினைகளுமணுகா
துரிசேனும் வாணிபலாபம்
தகரெனபாக்கிய வழிச்சிலவுண்டாம்
தங்கிய ரவிசசியாலுன்
அகரெனமேன்மை அணுகிடுமிவர்க்கு
அதிக்மறைநூனினில் அறிவே.

கரியவன்சசியும் அரவுரநண்டில்
கனகனும் சேயுரபெட்டாய்
பரியவன்ஆறில் பண்டிதன்புகரும்
பதித்திட கோவினில்பிமைாய்
குரிசிசித்தைசத்தில் மாந்தியும்கயலில்
கருமிமரியென அமைத்தோம்
வரியெனஅம்சம் ரெட்டையாம்அரவும்
வாழ்த்திட அரியெனபகரே.

பகர்சிறந்தில் குருவுமேதேனாய்
பானுவும் வியத்தினிலமர
நிகர்சனிமாநதி கயினில்பென்றேறும்
தின்கவி சேயவன் குடத்தில்
துவர்புதன் பெட்டில் சுக்கிரன் தனுவாய்
துலங்கிய சாதகன் தனக்கு
சுகர்நிர்சமன்போல் ஆகுமென்றுரைத்தோம்
அமைந்திடும் விவேகமுள்ளவனே.

உள்ளவன்சிலாக்கியன் மிகுமனதபிரியன்
உகந்திடும் செல்வதாமென்றேரும்
வள்ளலேசிலாக்கியன் வரவரயோகன்
வார்த்தையில் வித்தாரமுமிவனும்
தெள்ளெனஅரசர் செயலுளதிரகான்
செகத்தினில் கீர்த்திவானுவன்
கள்ளனமனத்தன் வாகனயோகன்
கருவத்தில் சிறந்திடும்சுகனே.

சுகமெனக்கல்வி மூன்றெனஉரைத்தோம்
குட்டியஅரசர் தன்விபயும்
இகமதில்அதுவும் மிருதிரமாகும்
இயற்கையாய் துணைகளும்பகர்வோம்
தகமெனத்துணையும் ரெண்டுமேதீர்க்கம்
தங்கிடும் கன்னிரெண்டுடனே
வகமெனமறுதாய் வழிதனில்துணையும்
வழங்கிடுமிவற்றுமே உரையே.

உரைபெனவிவனும் சனிதிசையதனில்
இன்பமாய் அரவுனானுதிப்பன்
திரைபெனபீடை காட்டியேவிலகும்
நின்றிடும் மரையிறானதனில்
துரையெனத்துன்பம் வந்துமேவிலகும்
துலக்கிய புதன்திசைதனதில்
கரையெனகுடும்ப பலன்மிகஅனுசா
காட்டிய சிகிபுகருணில்.

கனியினில்சிலாக்கியம் உயர்வுமேகாட்டும்
உகந்திடாபிணிவர விலகும்
வணனகாரிய குடும்பத்தில்வரலாம்
காட்டிய கல்வியும்பேற்கும்



RangaRakes tamilnavarasam.com

பூணைபிரபல வாணிபமுயற்சி
புகழ்ந்திடும் யிட்டங்கள் முதலாய்
வேணையோகம் ரவிசசிசேயூண்
வேண்டிய மணமதுயிலதே.

மணமதுயிலமாம் களத்திரத்தால்யோகம்
மார்க்கமாய் பிதாபிணிஉரைத்தோம்
குணமுறசேர்க்கை பணிமரையூணில்
கூறிநேம் அரசின்முயற்சி
சணமதில்தாயும் மரணமுமடைவன்
சஞ்சலம் காட்டுமாயிவற்கு
ஞெணமதுகருகா மேலதாய்யோகம்
வுரைத்திடும் விவாகமொன்றுரையே.

உரையெனமேன்மை சனியிறானதனில்
உகந்திடும் கேதுவின் திசையில்
நிரையெனசெல்வம் மேலதாயுபரும்
நின்றிடும்சென்ம முன்னிவறும்
நிறையெனசேது நாட்டினில்மறையோன்
நின்றிடும் குலமதில்செனித்து
வரையெனசெய்த கொடுமையினதுவால்
வழங்கினன் யிழிகுலத்து தித்தே.

உதித்துமேசெய்த நன்மையின்பயனுல்
உகந்திடும் சோழநாட்டதனில்
சதித்துமேகலியின் வாணிபமுடைய
செட்டியபிதாவிடம் செனித்த
துதித்துமேயோகம் மிகுதியாய்அடைவன்
துலங்கியகுடும்ப தோஷத்தால்
விதித்துமேதந்தை தனக்கிருதாரம்
விளங்கிடும் தனக்குமவ்வழியே.

வழியெனரெண்டு தாரங்கள்தனக்கு
வழங்கிடும்புத்திரர் தாமகாம்
கழிபெறதன்னி ரெண்டிருதீர்க்கம்
காட்டினர்சென்மத்தின் விளையாம்
வழியுடன்புகன்றேன் திசைதனறாணில்
வழங்கிடும்பிதாவுமே அழிவன்
அழிவிலாயோகம் அரசசந்தோஷம்
அவனியில்மேலதாய்ப் பகரே.

RangaRakes tamilnavarasam.com

பகரெனபாக்கியம் நிலம்பொருள்சேரும்
பற்றியசெய்ச்சி அரவுமா
நிகரெனசிம்ம சனமுதலுரைத்தோம்
நின்மறுதாயுமே அழிவள்
துகளிலாசெல்வம் அடைவநாமிவனும்
தூரிஞேம் மரைசனிபூணில்
அரசனபுவியில் தாரமொன்றொழியும்
அமைந்திடும் புதன்சிகிபூவே. 23

வனினில்அரசர் பிட்டங்கள்பெற்றும்
அவனியில்வெல்வர் பகையும்
காணைபொருளும் செலவுமேஉரைத்தோம்
கட்டியரவிதிசை யதனில்
பூணைபிரபலம் மேலதாஅனுளும்
புகட்டிகபணிமரை சனிபூண்
ஆணைபுகரேன் வண்வறஆவி
அந்தகன் பதிக்கெனப்பகரே. 24

கரியவன்மாந்தி வாக்கினிலமர
கனகெனும் எட்டினில்மரைவாய்
பரிபுதன்மரியில் பார்க்கரவன்கயலாய்
பாம்சிகி ஐந்தினில்பிலமாய்
குரிசசிவிபத்தில் சேய்பணி எருதாய்
கூரஉயர்கடகமாய் அமைத்தோம்
வரினஅமுசம் கோலென அதரேன்
வத்திட சாடிபென்றுரைவே. 25

உரைபெனசனியும் கன்னியிலமர
உகத்திடும் சேய்புதன் அரியில்
திரை என எல்லி மூன்றினிலமர
நின்சசி ஆறினில் மலரவாய்
கரை எனபணியும் கனகெலும் எட்டில்
கரிமகன் சிகியுரவாக்கில்
துரைஎனக்கோட்கள் அமைந்த ஜாதகனுக்கு
துலங்கிய திரம்சுகமிவர்க்கே. 26

இவர்க்கென ஏர்க்கை மிருந்தயோக்கியனும்
இன்பமும்குணமிக அமைத்தீதான்
தவர்க்கெனதயிர ஸ்கிரீவழிகலனன்
தம்பவாம் யோக்கியனென்திவலே

RangaRakes tamilnavarasam.com

துவர்க்கெனதுன்ப வினைகளுமில்லான்
 துர்மனசுவடுகள் தருகா
அவர்க்கெனமேன்மை யரியதல்லுறவால்
 அரசனின் இஷ்டனென்றுரையே.

உரை எனத்தந்தை பொருளது உள்ளான்
 உகந்திடும் துணைகளும் இவர்க்கு
திரைஎனரெண்டு தீர்க்கமொன்றுரைத்தோம்
 நிலைத்திடும்கன்னியும் அதுவாம்
வரையெனமற்றோர் தாய்தனிற்றுணையும்
 ஒழுங்கிடுமிதன்றனை மிவர்க்கு
அரைஎனபுவியில் பிரபுவென் றுரைத்தோம்
 அன்புடன் திசைபலபகரே.

பகரென அரவோன் திசைபுக வனில்
 பாரினில்ஜெனிப்பனும் இவனும்
நகரெனசுகங்கள் சமனதாய்காட்டும்
 நலங்கிடும் ரவிசசிசேயுன்
திகரெனகுடும்ப வரவுகள்சமனும்
 நின்றிடும் மறைதிசையதனில்
அகரெனகண்டம் காட்டியேவிலகும்
 அதின்பலம் உயர்வெனச்சுகமே.

சுகமெனசவுரி புதசிகிணனில்
 குட்டிஜெனும் உயர்ச்சியும்மேலாம்
திகரெனசாறு போகத்திவர்க்கு
 நின்றிடும் புகரவிழுனில்
வகரெனக்கெட்டி மனைவர உண்டாம்
 வழங்கிய செப்சசி அர வன்
அகிரெனசேர்க்கை மேமதாய்கல்வி
 அமைந்திடும் மனமது பெலமே.

மிலமெனயோகம் மிதாபலவரவாம்
 பிரியமாய் முயற்சியில் வளம்
அலம்ளாபெற்ற அன்னையுமடிவன்
 அன்புடன் சனிதிசைதனதிக்
சமயிலாசசுழும் பெருத்தவாணிபமாம்
 வழங்கிடும் கடற்கரையதனில்
குலமெனசேர்க்கை மிகுபொருள் உயர்வாம்
 கூறினோம்புத்தி வணிவர்க்கே.

RangaRakes tamilnavarasam.com

## காக்கயர் வாக்கியம்

இவர்க்கெனமேலாய் வாணிபமுயற்சி
இயம்பினேனும் சிகிபுகர் ரவிழுன்
தவர்க்கெனப்பொருளும் மேலதாய்லாபம்
நாட்டினபிதாவுமே அழிவன்
துவர்க்கெனபலமும் உயர்வெனபகர்ந்தோம்
துலங்கிய ஜென்மமுன்னிவனும்
அவர்க்கெனபாண்டி இழிகுலத்துதித்து
அன்புடன் சிவத்தனைப்பணிந்தே.

பணித்திடும்செயலால் சோழநாட்டதனில்
பக்குவ நற்குலமதனில்
துணிவுடன்வாணி வாழியமைத்த
துலங்கியபிதா முதல்மனைவிக்கு
அணியெனத்துதியா புதல்வனுங்உதிப்பன்
வழியென இவனும் முப்பிறப்பதனில்
காட்டினேனும் செய்தனைக் கேளே.

கேளெனயிருந்த அரசனைசெலுத்தி
வெட்டினன் குலமுதனிவனும்
திரலெனஅந்ததோஷத்தால் இவர்க்கு
நிச்சயம் புத்திரதோஷம்
ஆணெனஅறுவும் விலகிடதீயும்
அன்புடன் சேதுவில்மூழ்கி
குழெனதினத்தால் ஓமமும்செய்தால்
கருக்கமாய் ஏகபுத்திரனே.

ஏகபுத்திரனும் இச்சென்மத்திலிவர்க்கு
இயம்பினேனும் மறுபிறப்பிலிவனும்
பாகமாய்மேலோர் குலத்தினில்ஜெனித்து
பரகெதிஅடைவனும் இவனும்
நாகமாய் இச்சென்மத்திலிவர்க்கு
தங்கியசேய்சசி அரவோன்
யோகமும்மேலாய் உரைத்தனர்தலமாய்
உயர்த்திடும் நிலைசுமனைவே.

மனைமுதல்கட்டி கடனுடன்வரவும்
மார்க்கமாய் தூரத்தில்அலைச்சல்
வினைபதுஅனுசா தங்கடமும்காட்டும்
விளங்கிய புத்தியின்திசையில்

RangaRakes tamilnavarasam.com

அன்னமெனத்தனது சிகிபுகர விருண்
அதின் பலன் சமமெனபகர்ந்தோம்
கனமெனச்செல்வ வாணிபலாபம்
காட்டியசேபர வனே.

மணிமிக்கூட்டு வாணிபநஷ்டம்
உகர்த்திடும் வழக்குகள் சிலவும்
காமெனச்சுகங்கள் ஏத்திடுவிவர்க்கு
காட்டியமரை சனிவனில்
வானெனப்புவியில் ராஜயோகமுமாம்
வழங்கிய சித்திரையதனில்
பூனெனச்சனிபோன் அன்வரஆவி
புகுத்திடும் எமபதிதனக்கே.

அகத்தியர் வாக்கியம் முற்றிற்று.

# நவக்கிரக கோட்சார பலன்

## கொம்மைப் பாட்டு

### சூரியன்

சூரியனொன்று நாலைந்தேழெட்டுச் சுகமிலையென்பது பன்னிரண்டில், வீர்யமாக நின்றால் விபரீதம் விளைக்குமே நிதம் மானிடரே. 1

### சந்திரன்

சந்திரனிருநான்கா றெட்டுவியத்தில் நாளேகதித்து நின்றக்கால், மந்திரவாதி வாயடங்கினாற்போல மாறுமே பலன்கள் மானிடரே. 2

### செவ்வாய்

செவ்வாயொன்றிரண்டு நாலெட்டுப்பத்தில் ஏழும் விரையத்திலிருந்தால், எவ்வாறேபிள்ளை பெண்சாதி பெற்றார்திலு மிசையாதென்றுவு மானிடரே. 3

### புதன்

புதனோர்மூன்று நான்காறெட்டு தசம்வியத்தில் பொல்லாரோடுதானிருந்தால் இதமில்லையெந் நேரமுந்துக்க மெழும்பு மென்றுணர் மானிடரே. 4

### வியாழன்

குருவேயொன்றுநான் காறெட்டுமூன்றில் கூடியபத்துப் பன்னிரண்டிலிருந்தால், உருவேயில்லையென் றோதினோர் முன்னோர் உற்றுக்கேள்நிசமே மானிடரே. 5

### வெள்ளி

சுக்கிரன் மூவாறே ழொன்பதாறில் தொகையாயிருந்தா லித்தபலன், அக்கிரமு மழுகையு மவமான மாகுமென்றாரே மானிடரே. 6

RangaRakes tamilnavarasam.com

## சனி

சனியோசிருநான் கெட்டுநாசம் வியத்தில் சனிப்புடனேதா னிருந்தால், இனிபிசாசு பூதப்பேய் கருப்பன் ஏவலாம் சத்துரு மானிடரே. 7

## இராகு கேதுக்கள்

ராகுகேதுக்களொன் றிரண்டெட்டு நவமுடன் விரயத்திருந் தால், பாருசேர் மொழியாள் பயித்தியத்தால் பாடியாடுவரே மானிடரே. 8

மற்றவிடத்திற் கிரகங்களிருந்தால் மாளாத செல்வமும் போகம் வரும், முற்றுந்துறந்த முனிவர் சொன்னாரிதை முறை மையாய்ப்பார் மானிடரே. 9

நீசமென்றுநீ தள்ளாதே நிலையுச்ச மனங் கொள்ளாதே, நீசனிருந்த விட்டா னுச்சமானால் நிலைக்குமே போகம் மானி டரே. 10

கொம்மைப்பாட்டாக மொழிந்தவனாரெனில் கோதை திரு வடிதாடொழுது, நன்மையாகுந் தேவராச கவிராயன் நாடிச் சொன்னான் மானிடரே. 11

### கோட்சாரப் பலாபலக் கொம்மைப் பாட்டு

முற்றிற்று.

RangaRakes tamilnavarasam.com

# சந்திர காவியம்

எண்சீரடி விருத்தம்

அவனியிலேபிறந்திட்ட மனிதர்கட்கு
அன்புடனேநவக்கிரகமொன் பதுபேரானோர்
தவறுமல்சுகதுக்கம் கொடுக்குமந்த
தன்மையெல்லாம்விபரமாய்ச் சொல்வதற்கு
சிவசக்திபார்வதியாள் சொல்லுகின்றேன்
சித்திரைவிநாயகரருளால் சொல்லுகின்றேன்
கவனித்துக்கொண்டுசுக மாயிருப்பீர்
கவலையில்லாதெந்நாளும் ஜீவிப்பாரே. 1

உரை:—உலகில் பிறந்த மனிதர்களுக்கு நவக்கிரகங்களாகிய சூரியன், சந்திரன், செவ்வாய், புதன், குரு, சுக்கிரன், சனி, ராகு கேதுவென்னும் ஒன்பதுபேரும் கொடுக்கும் சுகதுக்கத்திற் கிசைந்த பலாபலன் விபரத்தை சிவசக்தியான பார்வதியின் பாலனுகிய சித்தி விநாயகரின் கிருபையால் சொல்லுகின்றேன், அந்த விபரத்தை யெல்லாம் கவனித்துக்கொண்டு சுக ஜீவியாய் வாழ்ந்திருப்பீர்கள்.

## இராசி சக்கரத்தின் பலன்

பருதிமதிசெவ்புதனும் குருவும்சுக்கிரன்
பகருசனிராகு கேதுக்களெல்லாம்
வருகின்றபனிரண்டு ராசிதன்னை
வருத்துணர்ந்துபலாபலனைச் சொல்வதென்றால்
குருவருளும்ஞானபகத்தின் சக்திவேண்டும்
குற்றமிலாமனதமைந்தா சனத்துட்கார்ந்து
கருணையுடன்ஜாதகத்தைக் கணித்தாராய்ந்து
கழறுவீர்பலாபலனை மனிதருக்கே. 2

உரை:—மனிதவகுப்பார்கள் பூமியில் பிறந்து, வளர்ந்து ஜீவித்திருக்கும்போது, சுகதுக்கத்தைக் கவனிப்பதென்றால், அவரவர்கள் ஜனனலக்கினத்தின்படியே குறிப்பித்திருக்கும் இராசி சக்கரமாகிய மேஷம், ரிஷபம், மிதுனம், கடகம், சிங்கம், கன்னி, துலாம், விருச்சிகம், தனுசு, மகரம், கும்பம், மீனமாகிய பனிரெண்டு ராசியிலும் எந்தெந்தராசியில் சூரியன், சந்திரன், செவ்வாய், புதன், குரு, சுக்கிரன், சனி, இராகு, கேது என்னும் நவக்கிரகங்கள் ஒன்பதுபேரு மிருக்கின்றார்களோ அந்தந்த பலா

RangaRakes tamilnavarasam.com

பலனைப் பார்த்து பலன் சொல்ல வேண்டும். ஜாதகர் முன் ஜனனத்தில் செய்த பாப பலனுக்கிசைந்த கஷ்டபலன் நேரிடும் போது அவற்றிற்கிசைந்த சாந்தி செய்துக்கொண்டால் துன்ப பலன் நீங்கி இன்ப பலனுண்டாகும்.

## ஐந்தொன்பதுக்கதிபர் பலன்

ஐந்தொன்பதாமிடத்திற் கதிபராஞேர்
　　அன்புடனேநற்பலன்தந் தருவார்கள்
சிந்தைமகிழ்ந்தேமூன்றுக் காருனுந்தான்
　　சித்தமகிழ்வாய்லாபஸ் தோனுனாலும்
அந்தமுடன்நல்லபலன் மிகவேதந்து
　　அவரவர்கட்கிசைந்தசுக வாழ்வுதந்தும்
மைந்தர்பாக்கியந்தருவார் மென்மேலாக
　　மாநிலத்தில்பிரபுவென ஜீவிப்பாரே. 3

உரை :—பஞ்சமஸ்தானாதிபதியாகிய ஐந்தாமிடத் ததிபதியாஞேர் சூரியன், சந்திரன், செவ்வாய், புதன், குரு, சுக்கிரன், சனி, இராகு கேது வென்னும் நவக்கிரகங்களில் எவர்களாயிருந்தாலும் நல்ல பலனையே தருவார்கள். மூன்று ஆறு லாபஸ்தானாதிபதியானாலும் மேற்குறிப்பித்த கிரகங்களைப்போல் அவர்கள் திசாபுத்தியில் நல்ல பலனையே தருவார்கள். அதன் விபரம் அடியிற் காண்க.

வெண்பா

அஞ்சொன்பதுக்கதிபர்பாபர் சுபராளுலும்
மிஞ்சுபலனைத்தருவார் மென்மூன்று—நெஞ்சுபதி
னொன்றுக்கதிபதிபு மிப்படியேயொன்றிவரிற்
போன்றசுபமே கொடுப்பார்பூண்டு. 4

உரை :—ஐந்தாமிடத்ததிபதியும், ஒன்பதாமிடத்ததிபதியும் மூன்றாமிடத்ததிபதியும், ஆறாமிடத்ததிபதியும், இலாபஸ்தானாதிபதியும் அவரவர்கள் திசாபுத்தியில் நல்லபலனைத் தருவார்கள். ஆனால், அவரவர்களிருக்கும் ஸ்தானபலனறிந்து சொல்ல வேண்டும்.

திசகேந்திராதிபதி நீதிசுபராளுலே
அசுபபலனேகொடுப்ப ரல்லாமல்—விரைகேந்
திரபதிகள்பாவிகளாய் சேரிலதிசுபங்கள்
பரவிதற் பலன்கள்கொடுப்பார். 5

உரை :—குரு, சுக்கிரன், புதன், சந்திரனுகிய இவர்கள் நால்வரும் கேந்திராதிபத்தியம் பெற்றிருந்தால் அவர்கள் திசாபுத்தி தனில் அசுபபலனுகிய கஷ்டநஷ்டத்தையே அனுபவிக்கச் செய்

வார்கள். ஆனால், சூரியன், செவ்வாய், சனி, இராகு, கேது என்னும் இவர்கள் கேந்திராதிபத்தியம் பெற்றால், அவர்கள் திசா புத்தியில் சுகசவுக்கியமாகிய நல்ல பலனைத் தருவார்கள்.

தேறுமந்தப்பாவிகளில் சேய்கேந்திராதிபனும்
ஆறிலவனேக வல்லாமற்—வீறுசனி
தல்வனைவிட்டால் நன்கிரவிதானுஞ்சேய்
வல்லகோணேச வெனின்மாண்பு. 6

உரை :—சூரியன், சனி, ராகு, கேது யென்னும் இவர்களில் செவ்வாய் கேந்திராதிபதித்துவம் பெற்று, ஆறாமிடத்தில் தனியாய் இருந்தாலும், சனியாகிலும், சூரியனாகிலும் சம்பந்தப்பட்டிருந்தாலும் இவர்களுடன் சேர்ந்த செவ்வாய் கோணத்தி லிருந்தாலும் பெருமையே யாகும்.

ஏறுமிரண்டுபனிரெண்டா மிடத்ததிபன்
கூறுஞ்சுபருடனே கூடிநிற்கில்—வீறுநல்லன்
பாவியுடனேகூடிப் பாவித்தான த்திலிருந்து
மேவிவிடிற் பாவனும்வில். 7

உரை :—இரண்டு பனிரெண்டா மிடத்ததிபதிகள் சுபக்கிரகங்களாகிய குரு, சுக்கிரன், புதன், சந்திரனுடனே சேர்ந்து நின்றால் மிகவும் நல்ல பலனைக் கொடுப்பர். ஆனால், சூரியன், செவ்வாய், சனி, இராகு, கேதுக்களுடனே சேர்ந்து அவர்கள் ஸ்தானத்திலேயே இருந்தால் மிகவும் கஷ்ட நஷ்டத்தை யனுபவிக்கச் செய்யும் துர்ப்பலனையே கொடுப்பார்கள்.

எட்டுக்கதிபதியும் பாக்கியத்திற் கேவசையாய்த்
தொட்டவியாதிபனுய்த் தோன்றுமந்த—வட்டமத்துக்
காதிபதிபொல்லா தவனிலக்கினதிபனுப்
போதிலவனேக நல்லனேக்கும். 8

உரை :—அஷ்டமாதிபதி பாக்கியத்தாவத்தில் இருந்தால் தான் இருந்த ஸ்தானத்திற்கு அஷ்டமஸ்தானம் வியஸ்தானமாகையால் அந்த திசாபுத்தியில் ஜாதகனை வியாதியஸ்தனுய் வருத்தச் செய்யும். ஆனால், அஷ்டமாதிபதி பொல்லாதவனுயிருந்தாலும் அவனே இலக்கினதிபதியானாலும், இலக்கினத்திலிருந்தாலும் நல்ல சுப பலனைத் தந்து வித்தியாலாபம், உத்தியோக விருத்தி, வியாபார லாபமுந் தந்து, சரீராரோக்கியமாயிருக்கச் செய்யும்.

இலக்கினத்திற்காமிரண் டேழ்மாரகராமென்று
மிலக்குமிரண் டான்சொல் லானல்லா—விலக்கினத்துத்
தோன்றுமந்தப் பாவிகன்தான் காமனையிற் சொல்லுகின்ற
முன்றெட்டு மாரகமாய் மூட்டு. 9

RangaRakes tamilnavarasam.com

உரை :—ஜனன இலக்கினத்திற்கு இரண்டாமிடமும், ஏழா மிடமும் மாரகஸ்தான மென்றாலும் இரண்டாமிடத் ததிபதியானவன் கொல்லமாட்டான். ஆனால், இலக்கினத்திற்கு சேர்ந்தகேந் திராதிபதியும், மூன்று, எட்டுக்கதிபதி மாரகஸ்தராய் அவர்கள் திசாபுத்திகளில் கொல்வார்கள். ஆனால் இலக்கினத்தையாகிலும் திசாபுத்தி நாதர்களையாகிலும் குரு, சுக்ரன், புதன், வளர்பிறைச் சந்திரனும் பார்த்தால், மாரகஞ் செய்யாமல் மரணத்திற்குச் சமானமாகிய கண்டங்களையும் கஷ்டநஷ்ட பலனையுங் கொடுத்து கடைசியில் சுகமாய் ஜீவித்திருக்கச் செய்வார்கள்.

மாரகஸ்தானத்தன்னில் வந்ததோர்சம்பந்தமுள்ள
பேருந்தான்மாரகமாய்ப் பேசிடிற்—சீராசர்
சேர்கத்பிறந்தவருக் கோர்மாறுப் புத்திதிசை
யாகவரும் யோகங்களாம். 10

உரை :—மாரக ஸ்தானத்தன்னி லிருப்பவர்களுடனே சம் பந்தமா யிருப்பவர்கள் மாரகஞ் செய்வார்களென்று சொன்னாலும், சிறப்புப் பொருந்திய இராஜயோக முடையவர்களின் திசா புத்திகள் வரும்போது மாரகத்திற்குப் பதிலாக நல்ல யோக பலனையே கொடுப்பார்களாம்.

மாரகத்தோ ஷத்திறுக்கு வன்குருவுஞ்சுக்கிரனும்
மாரகனேயானால் வலுதோஷம்—பாரதனை
விட்டால்புதனிந்து இரவிசனி மேற்செவ்வாய்க்
கட்டாம் பலநிறையாய்க் காண். 11

உரை :—மாரகத்தோஷத்திற்கு வல்லமை பொருந்திய குருவுஞ் சுக்கிரனும் மாரகஸ்தரானால் வன்மையான தோஷமாகும். ஆனால், புதன், சந்திரன், சூரியன், சனி செவ்வாய் இவர்களுக்கு அதிக பலமான மாரகமென்றுணர்வீர்கள்.

உற்ற தலமுத்தானோர் மாரகத்தானத்தைப்
பற்றியிருந்தாலும் பார்த்தாலும்—வெற்றியுற
மாரகாள் தன்னுடனே கூறுகினுமாரகர்போ
லாரவதைத் திடுவா ரன்று. 12

உரை :—ஆயுள்காரகனாகிய சனி ஓர் மாரகஸ்தானாதிபதியா யிருந்தாலும், மாரக ஸ்தானாதிபதிகளைப் பார்த்தாலும், அவர்களுடனே சம்பந்தமானாலும், பலவிதமான கஷ்டநஷ்டத்தினால் வருந்தச்செய்து மாரகத்திற்குச் சமானமான துன்பஞ் செய்வார்.

RangaRakes tamilnavarasam.com

பன்னொன்று மூன்றெட் டாதிபதியமிசை
தன்னுடைய சம்பந்தஞ் சார்ந்தவரும்—வன்பாவி
சம்பந்தர் கூடுவதும் பார்க்கிறதுந் தானதுவா
மிம்மகிமை கண்டே இயல்பு. 13

உரை:—ஜனன லக்கினத்திற்கு பதினொருமிடம், ஆறுமிடம், எட்டாமிடத்ததிபதிகளின் அம்சையில் தங்களுடனே சம்பந்தமாயிருக்கும்படியானவர்களை கொடிய பாபக்கிரகங்கள் பார்த்தாலும், சம்பந்தமானாலும், கஷ்டநஷ்ட பலன்களை யனுபவிக்கச் செய்யும். ஆனால் சுபக்கிரகங்கள் பார்வை பெற்றாலும் ஜனனமூல லக்கினத்தை சுபக்கிரகங்கள் திருஷ்டித்து நோக்கினாலும், கஷ்ட நஷ்டம் விலகி, ஒருவிதமான சுபபலனாகவே விளங்கும். ஆனால், இலக்கின கணித ஆராய்ச்சியுடன் திசாபுத்தி வலுவறிந்து பலன் சொல்லவேண்டும்.

மிலகேந்திர கோணநாதருக்கு பேதஞ்
சொலும்பாவி சம்பந்ததோஷ—மிலேமயிலே
பன்னியகண்டங்கோணத் தாதிபருக் குண்டாகும்
மின்னதனை பார்த்தறி வாயே. 14

உரை:—பலம் பொருந்திய கேந்திர ஸ்தானாதிபதிகளுக்கும் கோணாதிபதிகளுக்கும் பேதாபேதஞ் சொல்வதாயிருந்தால் பாபக்கிரக சம்பந்தத்தின் தோஷமில்லை. ஆனால் கண்டமானது கோண ஸ்தானாதிபருக் குண்டாகும்படியான தன்மையை அந்தந்த கிரகங்கள் நின்ற ஸ்தானத்தை யறிந்து பலாபலனை விபரமாய் ஆராய்ந்துணர்ந்து பலன் சொல்லவேண்டும்.

சாடுந்திரிகோணத் ததிபதிகள் தன்னுடனே
நாடுகண்டமாதிபர்க ளற்கோளாய்க்—கூடின
மெத்தப்பலன் தருவர் மேலவர்கள் தன்திசையில்
வெற்றியோகங் கொடுப்பார் விள். 15

உரை:—விசம் புகழமைத்த திரிகோணத் ததிபதிகளுடனே கண்ட ஸ்தானாதிபதிகள் சுபக்கிரகங்களாய் சேர்ந்திருந்தால் மிகவும் மேன்மையான பலன்களாகிய வியாபாரலாபம், உத்தியோக விர்த்தியினாலும் திரவிய சேகரஞ்செய்து தனந்தான்ய சம்பத்துடனே ஜீவித்திருப்பதற்காகும். ஆனால் அவர்கள் திசா புத்தியில் மிகவும் மேன்மையான யோகபலனைத் தருவார்கள். ஆனால் மற்ற கிரகங்களிருக்கும் ஸ்தானபலனறிந்து பலன் சொல்லவேண்டும்.

கேந்திரத்திற் பத்தாங் கிளர்திரிகோணத்தொன்பான்
ஆய்ந்தபெலமாம்பெயர்க ளத்ததிபர்—சேர்ந்திருக்கப்
பார்க்க ஒருவர்க்கொருவர் பார்யோகக்காரரா
மார்க்கு மறிதா மறி. 16

உரை :—கேந்திர ஸ்தானத்திற்கு பத்தாமிடத்ததிபரும் திரிகோண ஸ்தானத்திற்கு ஒன்பதாமிடத்ததிபரும் மிகவும் மேன்மையான நற்பலன்களைத் தருவார்கள். ஆனால் அந்த ஸ்தானாதிபதிகளுடன் சேர்ந்திருந்தாலும் பார்வைபெற்றிருந்தாலும் ஒருவர்க்கொருவர் யோகபலனை விசேஷமாய்த் தந்து உத்தியோகவிருத்தி, வியாபாரலாபம், திரவிய சம்பத்து முதலான நற்பலன்களைக் கொடுப்பார்கள்.

ஒன்பதுபத் தல்வா துறுதிரிகோணங்கண்ட
மன்னியயோகப் பெயரா மந்ததிப—ரன்பாக
வொன்றுக்கொன்றாய் மருவிச் சம்பந்தமுண்டாகில்
நன்றரசர் யோகமாம் நட்பு. 17

உரை :—ஒன்பதாமிடத்ததிபதி பத்தாமிடத்ததிபதியில்லாமல் பெரிதாகிய திரிகோணத்திருந்தால் விசேஷமான யோக பலன் கொடுப்பார்கள். ஆனால் அந்த ஸ்தானாதிபர் ஒவ்வொருவரும் சம்பந்தமா யிருந்தால் மிகவும் நன்மையான இராஜ யோகத்தைத் தருவார்கள். ஆனால் மற்ற கிரகங்களிருக்கும் ஸ்தானபலன்களை ஆராய்ந்து பலன் சொல்லவேண்டும்.

பத்துக் கதிபதிதன் பாக்கியத்தி லேயிருக்க
வைத்தாமனிரைந்தில் வாய்ந்திருக்கச்—சத்தோ
டவரவர்கள் வீட்டி லமர்ந் திருக்கயோக
முமாக வேவருமா மோது. 18

உரை :—ஜீவனஸ்தானாதிபதி, பார்வை ஸ்தானத்திலேயிருக்க ஆயுள் [ஸ்தானாதிபதியாகிய சனிபகவான் பத்தாமிடமாகிய ஜீவனஸ்தானத்திலிருந்தால், அன்றியும் அவரவர்கள் ஸ்தானத்தில் அவரவர்கள் பலத்திருந்தாலும் நல்ல சுலபமாக பலனை தருவார்களென்றுரைப்பாய்.

ஒன்பதுபத் துக்குடையோ ரெட்டுப்பன் னொன்றதிபர்
இன்பயோகங்களிலை யென்றிடினும்—பின்புதிரி
கோணேசர்சம்பந்தங்கூடினும் யோகங்களுண்டா
மாவேனறு யோகமுடை யார்க்கு. 19

உரை :—ஒன்பது பத்துக்குடைய ஸ்தானாதிபர்களும், ஆறு, எட்டு, பதினொன்றுக் கதிபர்களும் இன்பமான யோகத்தைக் கொடுக்கமாட்டார்களென்றாலும், அவர்கள் திரிகோணஸ்தானாதிபர் சம்பந்தம்பெற்றால் நல்லயோகத்தைக் கொடுப்பார்களென்றும் சொல்வாய். ஆனால் ஜனன லக்கினத்தைக் குரு பார்த்தாலும்,

RangaRakes tamilnavarasam.com

திசாபுத்தி நாதர்கள் உச்சஸ்தானத்திலிருந்தாலும் விசேஷமான இராஜயோகத்தையே தருவார்கள்.

மண்டபத்துக்காதிபர்க்கு விண்கோணத்தோசியிலொன்று
தப்புயிடுஞ்சம்பந்தந் தானிருக்கில்—வண்டமிழோர்
சொன்னபத்துக்காதிபதி சொல்யோகக்காரகனு
மன்னரிகந் தான்கொடுப்பான் வந்து. 20

உரை:—ஜென்மலக்கினத்தின் பத்தாமிடத் ததிபர்கட்கு கோண ஸ்தானத்திலிருப்பவர்கள் சம்பந்தமானால் பத்தாமிடத் ததிபதி யோககாரகனாய் விளங்கி நற்பலன் கொடுப்பதுடன் அந்த ஸ்தானாதிபதி தனது திசாபுத்தியில் நல்ல இராஜயோகத் தைத் தந்தும், வித்தை, புத்தி, உத்தியோகமேன்மை, வியாபாரலாபந் தந்து தனவந்தனா யிருக்கச் செய்வான். ஆனால் மற்ற கிரகங்களிருக்கும் பலனையும் ஆராய்ந்து பலன் சொல்ல வேண்டியது.

தன்கேதுராகுவுந்தா னற்கோணக்கூடுகினும்
பன்சுபர்கள் நோக்குந்தான்பட்டாலும்—அன்புடையே
நற்குணமோடிருந்தாலும் நல்லபலனே கொடுப்பார்
சொற்றியகோன் தங்களுக்குச் சொல். 21

உரை:—ஞானகாரகனாகிய கேதுபகவானும் மோக்ஷகாரகனாகிய இராகுபகவானும் சுபக்கிரகங்களுடனே சேர்ந்தாலும் பார்வை பெற்றாலும், அல்லது நல்ல ஸ்தானத்திலிருந்தாலும், அவர்களுடைய திசாபுத்தியில் ஞானமும், கல்வியும், வித்யாபிவிர்த்தியும், உத்யோக மேன்மையும், வியாபார விருத்தியும், திரவிய லாபமும் தந்து வெகு மேன்மையான பலனைத் தருவார்கள்.

கெடிராகு கேந்திரங்கள் கூறுதிரிகோணம்
குடிநாதர் நற்கோனைக் கூடித்திடனாகக்
கேந்திரத்தினுசுபர்கள் நோக்கினர்போகம்
சேர்ந்திருக்கச் செய்வார்தினம். 22

உரை:—மிகவும் வல்லமை பொருந்திய இராகு, கேது கேந்திர ஸ்தானத்திலாகிலும், திரிகோணாதிபதிகளுடன் சம்பந்தப் பட்டாலும், கேந்திர ஸ்தானாதிபர்களாகிய சுபக்கிரகங்களின் பார்வை பெற்றாலும், சம்பந்தமானாலும் விசேஷபலனைத் தருவார்கள்.

செல்திரிகோணாதிபருஞ் சேர்ந்தகண்டத்ததிபரும்
சொல்கேதுராகுவுடன் சேர்ந்தாலும்—வல்லமையாய்க்
கூடிவரும்பாம்புங் கொள்யோகக்காரகராம்
நாடிஇதைச் சொல்வாய் நயந்து. 23

RangaRakes tamilnavarasam.com

உரை :—திரிகோணாதிபரும் கண்டஸ்தானாதிபரும் இராகு கேதுக்களுடன் சேர்ந்திருந்தால் நல்ல பலமான யோகத்தைக் கொடுத்து சுகப்படச்செய்வார். ஆனால், திசாபுத்திகளில் அவர் கள் கொடுக்கும் பலன்களுடனே மற்ற கிரகங்களிருக்கும் ஸ்தான பலனையும் ஆதிபத்ய பலனையும் ஆராய்ந்துணர்ந்து பலன் சொல்ல வேண்டும்.

மீறும்பாம்பிருந்த வீட்டுக்கதிபதியா
னேறுமிராசிக்குடையோன் நோக்கி—யூராக்
கைத்தகோளின்பலனைக் கண்டளிப்பர்காரரர்
குறைவு தம்மரவாங்கூறு. 24

உரை :—இராகு, கேதுக்களிலிருந்த வீட்டுக்கதிபதிகள் இருந்த ராசிக்குடையோன் பார்வையானாலும், சம்பந்தமானாலும் அவர்கள் கொடுக்கும் பலனை இராகு கேதுக்கள் கொடுப்பார்கள். ஆனால், குரு, சுக்கிரன், புதன், சந்திரன் இலக்கினத்தைப் பார்த்தாலும் குருபகவான் திசாநாதர்கள் மீது ஐந்தாமிடத்தில் பார்வை செலுத்தினாலும் விசேஷமான நல்லபலனைத் தந்து உத்யோக மேன்மையும், வியாபார லாபமுந் தந்தும் ஆரோக்கிய சௌக்கியமா யிருக்கும்.

கூறுமரவுடனேத் தனிகோள்கள்கூடுகினு
மீறுபலவான்பலனை விண்டளிப்பர்—வேறுமற்ற
பேர்பலனைத்தாரார்கள் பேதைநீயாராய்ந்து
பாரிதைச்சொல்வாய் பகுந்து. 25

உரை :—சொல்லுதற்குரிய இராகுகேதுக்களுடனே எத்தனை கிரகங்கள் சேர்ந்தாலும் விசேஷமானபலவான் கொடுக்கும் நல்ல பலனை அனுபவிக்கும்படியான சுபபலனையே கொடுப்பார்கள். ஆனால் மற்ற கிரகங்கள் அத்தகைய நற்பலனைக் கொடுக்கமாட் டார்கள். ஆகையால், ஜனன இலக்கின பலனுக்கிசைந்த திசா புத்தி பலனுடனே மற்ற கிரகங்கள் நின்ற பலனையும் ஆராய்ந் துணர்ந்து பலன் சொல்லவேண்டியது.

கண்டத்திற்பாம்புறுதற் றீயோர்கலந்திருக்கிற்
றண்டகோணத்ததிபர் சம்பந்த—முண்டெனினும்
கோணத்திருக்கிற்கண் டத்ததிபர்சம்பந்தம்
பூணயோகங்க ளுண்டாம்பொற்பு. 26

உரை :—கண்டஸ்தானத்தில் இராகு கேதுமுதற் பாபக்கிர கங்கள் கலந்திருந்தாலும் கோணாதிபர் சம்பந்தமுண்டா யிருந்

கோணாதிபதிகள் கண்டஸ்தானாதிபர்களுடனே சம்பந்தமாயிருந்தாலும், விசேஷமான யோகபலன் கிடைக்கும்படியான தனத் தான்ய சம்பத்தும், உத்தியோக விர்த்தியும், வியாபார லாபமும் பொருந்தி யிருக்கும்.

கேந்திரகோணங்களதிற் கேடில்லாக்கோள்கூடி
சார்ந்திருக்கிலன்னியகோ ணத்ததிபர்—போந்தமலர்க்
கண்ணுறவேபார்த்திடினும் கூடக்கலந்திடினும்
நண்ணுமன்னோர் யோகநல்லநாடு. 27

உரை :—கேந்திரஸ்தானத்திலும், கோணஸ்தானத்திலும் சுபக்கிரகங்கள் சேர்ந்திருந்தால் மற்ற கோணத்ததிபர் பார்வை பெற்றிருந்தாலும் சம்பந்தமாயிருந்தாலும் அவர்களுடன் பொருத்திய சுபாசுப பலன்களை தருவார்கள். துவாதசராசியில் நிற்கும் கிரகங்களின் நட்பு, ஆட்சி, உச்சம், பகை நீசஸ்தானபலனறிந்து திசாபுத்தி நாதர்களின் வலுவறிந்து பலன் சொல்லவேண்டும்.

நாங்குகண்டக்கோணத் ததிபதிகள்சம்பந்தம்
நீங்கிமூன்றெட்டு நேர்பதினொன்—றாங்கதிபர்
காரகசம்பந்தந்தான் சாரில்யோகத்தினுக்கு
காரகமாமென்றே கருத்து. 28

உரை :—ஜன்மலக்கினத்ததிபதி, கோணத்ததிபதி சம்பந்தமில்லாமல் மூன்று, ஆறு, எட்டு, பதினொன்றுக்கு அதிபதிகள் காரக சம்பந்தத்தை சேர்ந்தால் விசேஷ யோகத்திற்கு, அதிபதிகளை விருப்பாரென்று நினைக்கவேண்டும். ஆனால், உதய லக்கினத்தையாகிலும், மேற்குறிப்பித்த கிரகங்களையாகிலும் சுபக்கிரகங்களாகிய குரு, சுக்கிரன், புதன் வளர்பிறைச்சந்திரன் பார்த்தால் விசேஷ யோக பலன் கிடைக்கும்.

நன்யோகக்காரக ளன்றிமற்றோர்நல்திசையின்
முன்யோகமுமுண்டாய் வந்திடினும்—பன்யோகக்
காரகரேயாகிற்கன பலனீவார்மற்றோ
ரீரதிறையக் கொடுப்பாராய்ந்து. 29

உரை :—நல்ல யோககாரகரில்லாமல் மற்ற கிரகங்களின் உத்தமமான நல்ல திசையில் சொல்லுதற்குரிய சுபயோகங்கள் வந்தாலும், அவர்கள் யோககாரகரேயானால் அதிகமாய் விசேஷமான பலனைக் கொடுத்து அதனால் வித்யா லாபம் உத்தியோக மேன்மை வியாபார விருத்தி திரவிய லாபமனைத்தும் தருவார்கள். இன்னும் மற்றக் கிரகங்கள் விசேஷமான பலனை அதிகமாய்த் தருவார்கள்.



RangaRakes tamilnavarasam.com

இரவிமுதலோன்பதுகோ ளோங்குந்திசையிற்
சேருமவர்புத்தியினிற் சூரார்—மருவுபலன்
வேறொருவர்புத்தியனுசரித்து விப்பலன்கள்
கூறுகூறுக்கொடுப்பார் கூறு. 80

உரை :—சூரியன், சந்திரன், செவ்வாய், புதன், குரு, சுக்கிரன், சனி, இராகு, கேது என்னும் ஒன்பது கிரகங்களின் திசையிலும் வருகிற அவர்கள் சுயபுத்தியில் நல்ல யோக பலனை கொடுக்க மாட்டார்கள். ஆனால், அந்தந்த கிரகங்களின் திசையில் மற்ற கிரகங்களின் புத்தி வந்தால் விசேஷமான சுப பலனைத் தருவார்கள். குரு பகவான் அந்த திசாநாதரையாகிலும் புத்திநாதரையாகிலும் பார்த்தால், விசேஷ பலனுண்டா யிருப்பதுடன் பிரபுவென சகலரும் புகழ்ந்துரைக்கும்படியான தனவந்தரா யிருப்பதற்காகும்.

கேந்திரத்திற்காதிபதி கேட்கினுந்தன்திசையிற்
சேர்ந்ததிரிகோணேசர் புத்தியினிற்—சேர்ந்தபலன்
தந்திடுவர்கோணேசர் தன்திசையில்கேந்திரேசன்
சொந்தபுத்தியிற் கொடுப்பார்சொல். 81

உரை :—கேந்திராதிபதியானவர்கள் தமது திசையால் திரிகோண ஸ்தானாதிபதிகளின் புத்தியினிற் சேர்ந்த பலன்களைத் தருவார். ஆனால் கோணாதிபதிகளின் திசையில் கேந்திராதிபதிகளின் சொந்த புத்தியில் விசேஷ பலன்களைத் தருவார்கள்.

சொல்லு மிருவோர்க்குந் தோஷமுண்டாய்க் கேந்திரேசன்
புல்லிவிடுஞ் சம்பந்தம் பொய்த்திடினும்—நல்லதுதான்
பூண்டதிசை யதனில்கேந்தி ரேசன்புத்தியினில்
நீண்டசுப மளிப்பார் நின்று. 82

உரை :—திசாநாதனுக்கும் புத்திநாதனுக்கும் ஸ்தான பலனால் தோஷமுண்டாயிருந்தாலும் கேந்திரேசன் சம்பந்த நன்மை பொய்த்துப் போனாலும் கேந்திரஸ்தானாதிபத்யத்தைக் கொண்டவர் திசையிற் சேர்ந்து வந்த கேந்திரஸ்தானாதிபதியின் புத்தியில் விசேஷமான சுப பலன் கொடுத்து உத்தியோக விருத்தி, வியாபார லாபம், திருமண வைபவ முதலான பெருமை யடையும்படி செய்வார்கள்.

ஏற்றதிசையிற் பலன்கள் எப்போதருவரெனின்
ஆற்றலவர்க்குமூன் றுரெட்டு—தோற்றுபதி
னொன்றுக் குடையரல்லா தொத்தாமானக்கிரக
நன்றுபுத்தியிற் கொடுப்பார் நல்கு. 83

உரை:—ஜாதகர்க்குத் தகுந்தபடியே அந்தந்த கிரகங்களின் திசையில் நற்பலன்களை எப்போது தருவார்களென்றால் அந்த திசாநாதனின் மூன்று, ஆறு, எட்டு, பதினொன்றுக்குடைய ரல்லாமல் தனக்கு சமானமான கிரகங்களின் புத்தியில் நல்ல யோக பலன்களைக் கொடுத்து வறுமை நோயில்லா பெருமை யுடன் திரவிய சம்பத்துடன் ஜீவித்திருக்கும்படி செய்வார்கள்.

ஏற்றதிசைநாதனுக்கு மேத்துபுத்திநாதனுக்கும்
தோற்றமூன்றாறெட்டு தொல்பதினொன்—றூற்றதிபர்
சம்பந்தமில்லையெனிற் றுமிருவோரும்பலன்கள்
செம்பலனளிப்பார் சிறந்து. 34

உரை:—ஜாதகர்க்கு தகுதியான திசாநாதனுக்கும் அவர்க் கிசைந்த புத்திநாதனுக்கும் மூன்று, ஆறு, எட்டு பதினொன்றுக்கு அதிபர்களாகிய கிரகங்களுக்கு சம்பந்தமில்லையென்றால் திசாநாத னும் புத்திநாதனும் விசேஷமான பலன்களைத் தருவார்கள். ஆனால் யோகபலனுக்கிசைந்த விதமாய்த் துவாதச லக்கினத் திலுமிருக்கின்ற கிரகநிலையை ஆராய்ந்து பலன் சொல்ல வேண்டும். ஆனால் குருபகவான் பார்வையானால் விசேஷ பலன் கிடைக்கும்.

தானுவெனும்மாயோகக் காரகாள்சம்பந்தத்
தோனுமூன்றாறெட்டுத் தொல்பதினொன்—றுனதிபர்
வன்றிசையில்வெற்றியுள மாயோகக்காரகாள்
தன்புசிப்பில் யோகத்தரும். 35

உரை:—காருண்யமாய் பெருமைதங்கிய யோககாரகாளு டனே சம்பந்தமாயிருக்கும் மூன்று, ஆறு, எட்டு, பதினொன்றுக் கதிபரானவர்கள் வல்லமை பொருந்திய தன் திசையில் பெருமை பொருந்திய யோககாரகாளின் புத்தியில் நல்ல யோகத்தைக் கொடுப்பார்கள். அந்த பலன் விபரமெவ்விதமெனில்: வித்யாபி விருத்தி, திருமண வைபவம், உத்யோகவிர்த்தி, வியாபாரலாப மீனத்துத்தந்து, பிரபுத்தன்மையாக இருக்கும் நல்ல யோகத் தைக் கொடுப்பார்கள்.

சீராசர்யோகமது சேர்ந்துவரும் காலத்தின்
மாரகன்தன் திசையில் வந்தெய்தும்—பாரதனுள்
பாவபுத்தியின்மிகுதி பாக்கியமுங் கீர்த்திகளும்
மேவுமற்றப் புத்திசமன் மெய். 36

உரை:—சிறப்புப் பொருந்திய இராஜயோகமானது வரும் போது, அந்த சமயத்தில் மாரகர்கள் திசைசரி வருஷம், அத் தருணம் குருரமாகிய கஷ்டத்தையும், கண்டங்களையும்

RangaRakes tamilnavarasam.com

கொடுப்பது அதிகமானாலும், அந்த இராஜயோகத்தின் விசேஷத்தினால் பாக்யம், தனதான்ய சம்பத்தும் பெருமையும் கீர்த்தியும் பொருந்தி, மற்றபுத்தி நாதர்களுக்குச் சமானமாய் பொருந்தியிருக்கும்.

மன்யோககாரகா ளாந்திசையில்வந்திடுமேற்
பன்புத்திநாதர்க்குப் பாவமுறிற்—றன்றேட
மில்லையந்தப்பாவிபுத்தி யில்யோகம்மெத்தவுண்டாம்
சொல்லும்பின் யோகங்களுண்டு. 37

உரை:—சொல்லுதற்கரிய யோககாரகாள் திசையில் வருகின்ற பல புத்திநாதர்களுக்கும் பாபபலன் வந்தால் தன் தோஷமில்லை அந்த புத்திநாதர்களுடைய யோகம் அதிகமாகி பின்னால் விசேஷமாய் யோகத்தைக் கொடுப்பார்கள். அதன் பலன் விபரம் எவ்விதமெனில் அந்த புத்திநாதர் முதலில் பலவித கஷ்டத்தைக் கொடுத்தாலும் கடைசியில் தனதான்ய சம்பத்தும் சுகபோக பாக்யமுங் கொடுப்பார்கள்.

தான்றுவார்சம்பந்தத் தோன்றுதற்கோளில்யோகம்
பூண்டளிப்பான் சம்பந்தம்பூணத்—தீண்டுதற்கோள்
புத்திமந்தான்முற்போற் பொருந்துஞ்சமபலனை
மெத்தத்தருவார் விரைந்து. 38

உரை:—அந்தந்த சமபத்தில் தேரிடுகின்ற சுபக்கிரகங்களில் யோகத்தைத் தருகின்ற கிரகங்களுடனே சம்மந்தமான சுபக்கிரகங்களின் புத்தியும் முன்போலவே பொருந்தி சமபலனை அதிகமாய்த் தருவார்கள். அதன் விவர மெவ்விதமெனில், வித்யாபிவிருத்தி, உத்யோகமேன்மை, திருமண வைபவம், வியாபார லாபம் முதலான நன்மையனைத்துந் தருவார்கள்.

விரைந்துவருமாயோகக் காரகாள்வெற்றிப்
பொருந்துஞ்சம்மந்தமில்லாப் போந்தே—இருந்துவரு
மன்னியயோகங்களுட காரகாளாம்புசிப்பில்
மன்னுயோகங்கள் வரும். 39

உரை:—அதிகரித்து வருகிற பெருமை பொருந்திய யோககாரகாள் ஜெயமுடனே சம்பந்தமில்லாமல் வருகின்ற அந்நிய யோககாரகர் புத்தியில் சொல்லுதற்கரிதான யோகபலனைக் கொடுப்பார்கள். அதன் பலனெவ்விதமெனில், வெற்றி பிரதாபம், தொழில் முயற்சி முதலான நல்ல யோகபலனைத் தருவார்கள். மனோற்சாகத்தினால் இன்னும் பலவிதமான யோக பலன்களெல்லாம் வரும்.

RangaRakes tamilnavarasam.com

சார்யோககாரகா டங்களுடசம்மந்த
மோர்கிரைக் கோளினெதிர் திசையில்—ஆர்யோகக்
காரரவர்புத்தியினிற் காறும்பலன் கொடுப்பார்
வேறுமொருவிடத்தே தன். 40

உரை :—அதிகமான பலனைக் கொடுக்கும் யோககாரர்களு டனே சம்பந்தம் பெறாத கிரகங்கள் எந்திசையில் யோகம் பொருந்திய காரகர்களின் புத்தியில் குறிப்பித்த பலன்களை யெல்லாம் மற்ற கிரகங்களின் புத்திகள் வரும்போது கொடுக்குமென்று சொல்வீர்கள்.

வின்கேதுராகுவுக்கு மேன்யோகக்காரகா
ளென்மருவுசம்மந்த மில்லையெனும்—நன் திசையில்
யோகமுளகாரகர்புத்தி யுற்றபோதேயோகம்
வாகுபடக்கொடுப்பார் மாண்பு. 41

உரை :—இராகு கேதுக்களுக்கு மேல் யோககாரகரானென்ற சம்பந்தமில்லாம லிருந்தாலும், நல்ல திசையாகிய சுபர்களின் திசையில் யோககாரகர்களுடைய புத்தி வந்தபோதே ஜாதகர்களுக்கு அதிக லாபத்தைக் கொடுக்கும்படியான நல்ல யோகத்தை மேன்மையாகக் கொடுப்பார்கள். அதன் விபரம் எவ்விதமெனில் : சரீராரோக்யம், வித்யாலாபம், உத்தியோகவிர்த்தி, வியாபார மேன்மை முதலான நல்ல யோக பலன்களைத் தருவார்கள்.

சந்திர காவியம் முற்றிற்று.

RangaRakes tamilnavarasam.com

# துவாதச லக்கின கிரகபலன்

எண்சீரடி விருத்தம்

பருதிமதிசேய்புதன் அந்தணனும்சுக்கிரன்
　　பகருசனிஇராகுகேதுக்க ளென்பார்
வருகின்றதுவாதசலக் கினத்தின்தன்மை
　　வகைபறிந்துதிசாபுத்தி பலனாராய்ந்து
கருணையுடன்ஜாதகர்க்கு பலாபலன்கள்
　　கடாக்ஷிக்குத்தன்மையெல்லாம் விபரமாக
அருமைபுறும்ஜோதிடநூ லுரைக்கும்மார்க்கம்
　　அன்புடனே நவனித்து பலன்சொல்வீரே. 1

உரை :—சூரியன், சந்திரன், செவ்வாய், புதன், குரு, சுக்கிரன், சனி, இராகு, கேது என்னும் ஒன்பது கிரகங்களும், துவாதச லக்கினமாகிய மேஷம், ரிஷபம், மிதுனம், கடகம், சிம்மம், கன்னி, துலாம், விருச்சிகம், தனுசு, மகரம், கும்பம், மீனம் என்னும் பனிரெண்டு இராசியிலும் எந்தெந்த இராசியில் எவ்வெவ் விதமாய் பலம் பெற்றிருக்கிறார்களோ அவ்வவ்விதமாய் அவர்கள் திசாபுத்தியில் பலன் தருவார்கள்.

## மேஷலக்கின பலன்

மன்னுபுகழ்மேஷத்திற் பிறந்தோர்க்குச்சந்திரன்
　　மாக்சுக்கிரன்சனியும் கொடுமைசெய்வார்
நன்மைதருவார்பருதி குருவும்செவ்வாய்
　　நவில்பாக்கியகர்மாதிபதி குருவும்மைந்தன்
நன்மையுடன்சேர்ந்திருந்தால் யோகமில்லை
　　தாரணியின்ஜாதகர்க்கு பலனாராய்ந்து
அன்பாகஅவரவர்கள் அதிர்ஷ்டம்போல
　　அவனியில்ஜாதகர்க்குரிய பலன்சொல்வீரே. 2

உரை :—மேஷராசியில் பிறந்தவர்களுக்குச் சந்திரனும், சுக்கிரனும், சனியும், புதனுந் துன்பஞ் செய்வார்கள். சூரியனும், குரு, செவ்வாயும் நன்மை செய்வார்கள். ஆனால், தர்மகர்மாதிபதியான சனியும், குருவும் சேர்ந்திருந்தால் யோகம் இல்லை. ஆகையால், இ[illegible] உண்மை ரகசியத்தை ஒழுங்காய் கவனித்து ஜாதகர்க்கு ப[illegible]சொல்லுவீர்.

RangaRakes tamilnavarasam.com

மந்தன்குருவும்மேஷத் தோர்க்குப்பொல்லார்
மன்னுபுகழ்சுக்ரன் கொல்லமாட்டார்
மந்தனுடன்புதனும் மாரகஞ்செய்வார்கள்
மற்றகிரகங்கள் மாரகஞ்செய்யார்கள்
இந்தவிதமாகவே நவக்கிரகங்கள்
இருக்கும்ஸ்தானத்துடனே ஆதிபத்யம்
சிந்தைமகிழ்வாயறிந்து பலனுராய்ந்து
செப்புவீர்ஜாதகர்க்கு பலனைத்தானே. 8

உரை :—ரிஷராசியில் பிறந்தவர்களுக்கு சனியும், குருவும் கஷ்டபலனைத் தருவார்கள். ஆனால் சுக்கிரன் துதிய சப்தமாதி பதியாகையால் மாரகஞ் செய்யார். சனியும், புதனும் மாரகஞ் செய்வார்கள். மற்ற கிரகங்கள் துன்பப்படுத்தினாலும் கொல்ல மாட்டார்கள். இந்த விசேஷத்தை கவனித்து கிரகநிலையையும், பார்வை சம்பந்த ஆதிபத்யபலனையும் ஆராய்ந்துணர்ந்து பலன் சொல்லவேண்டும்.

## ரிஷபலக்கின பலன்

மன்னுபுகழிடபலக்கினஞ் ஜனித்தோர்க்கு
மதிகுருவும்சுக்கிரனும் துன்பஞ்செய்வார்
அன்பானசூரியனும் சனியும்நல்லோர்
அதிகநல்யோகபலன் சனிவேதந்து
பொன்பொருளும்பூஸ்திதியும் தனலாபங்கள்
பொருந்திஜீவித்திருக்கச் செய்தெந்நாளும்
நன்மையாய்ராஜயோகந் தருவாரென்று
நவிலுவாய்ஜாதகர்க்கு பலனைத்தானே. 4

உரை :—ரிஷபலக்கினத்தில் பிறந்தவர்களுக்கு, சந்திரனும், குருவும், சுக்கிரனுந் துன்பஞ் செய்வார்கள். சூரியனும், சனியும் நல்லவர்கள். ஆனால் ரிஷபலக்கினத்திற்கு சனிபகவான் அதிக மான தன்மையைச் செய்வதுடன் வித்யாபிவிர்த்தி உத்தியோக மேன்மை, வியாபாரவிருக்தி, பொன், பொருள், பூஸ்திதிலாபமும், தனந்தான்ய சம்பத்தும் தருவதுடனே இராஜயோக பலனையும் விசேஷமாக தந்து மேன்மையாயிருக்கச் செய்வாரென்று ஜாதக பலனையும் விபரமாய்ச் சொல்வீர்கள்.

மாமதியும்செவ்வாயும் வியாழனுந்தான்
மாரகஞ்செய்வார்ரிஷப லக்கினத்தோர்க்கு
தாமதஞ்செய்யாதிவர்கள் திசாபுத்திதன்னில்
தப்பாமற்கொன்றிடுவா ரென்றிட்டாலும்

*சோமன்மகன்புதன்கொல்லான் ரிஷபலக்கினத்தோர்க்கு*
*சொல்லுவாய்நற்பலனைத் தருவாரென்று*
*ஆமப்பா அவ்விடத்தில் மதியிருந்தால்*
*அன்பாய்ராஜயோகபலன் தருகுவாரே.* 5

உரை :—பெருமை பொருந்திய சந்திரனும் செவ்வாயும் குருவும் ரிஷபலக்கினத்திற்கு மாரகாதிபர்கள். இவர்கள் தமது திசாபுத்தியில் கொஞ்சமேனும் தாமதஞ்செய்யாமல் கொல்வார்கள். ஆனால், புதபகவான் மாரகஞ்செய்யாமல் பலவித நன்மையுந்தந்து, தனதான்ய சம்பத்துடன் உத்தியோக மேன்மை வியாபாரவிருத்தி திரவியலாபமனைத்தும் தருவார். தான் ரிஷபலக்கினத்திற்கு துதியை ஸ்தானாதிபதியானாலும் மாரகஞ் செய்யாமல் தனது தனபஞ்சமாதிபதி ஆதிபத்தியத்தினால் இராஜயோகத்தை தருவார்.

## மிதுனலக்கின பலன்

*அன்புடனேமிதுனத்தில் பிறந்தோர்க்கு*
*அந்தணனும்ரவிகுஜனும் துன்பஞ்செய்வார்*
*இன்பமானசுக்ரபக வானேநல்ல*
*இனியபலன்தந்திடுவா ரென்றுரைப்பாய்*
*வன்மையுடன்குருசனியும் சேர்ந்திருந்தால்*
*வையகத்தில்யோகமில்லை ஜாதகர்க்கு*
*தன்மையுடன்வேறுகிர கங்கள்பார்வை*
*தானறிந்துபலன்சொல்வீர் ஜாதகர்க்கே.* 6

உரை :—மிதுனலக்கினத்தில் பிறந்தவர்களுக்கு குருபகவானும், சூரியனும், செவ்வாயும் கொடுமை செய்வார்கள். சுக்கிர பகவானொருவனே இனிமையான நல்ல பலன் தந்திடுவார். ஆனால், குருவும் சனியும் சேர்ந்திருந்தால் யோகமில்லை. மற்ற கிரகங்களின் பார்வையும், சம்பந்தத்தையும், ஸ்தானபலனையும் கவனித்து பலன் சொல்லவேண்டும்.

*சந்திரனும்கொல்லான்மிதுன லக்னத்தோரை*
*சந்ததமும்தனலாபம் பெருகச்செய்வர்*
*அந்தணனும்ரவிசேய்மா ரகஞ்செய்வார்கள்*
*அனுதினமும்கஷ்டநஷ்டமடையச்செய்து*
*சந்ததமும்வெகுதுன்ப மிகவேசெய்து*
*சண்டைசச்சரவுடனே வறுமைசூழும்*
*இத்தவிதமாய்பலனும் தேர்ந்திட்டாலும்*
*இசைந்தமற்றகிரகநிலை கவனிப்பீரே.* 7

RangaRakes tamilnavarasam.com

உரை:—மிதுன லக்கினத்தில் பிறந்தோருக்கு சந்திரன் துதியாதிபதியாயிருந்தாலும் மாரகஞ் செய்யாமல் தனுதிபத்திய பலத்தினால் தனது திசாபுத்தியில் தனதான்ய சம்பத்து, உத்யோகவிர்த்தி, வியாபாரலாபம் பந்துமித்திரர் சகாயம், திரவியலாப முதலான நன்மையனைத்தும் பெருகும்படி செய்வார். ஆனால் குரு சூரியன், செவ்வாய் முதலானோர் தனது திசாபுத்தியில் பலவித துன்பமும், கஷ்டநஷ்டமும், கவலையும், வறுமையும், பிணியும் குழும்படியான துன்பஞ்செய்து மதிமயக்கமும் மறதியும், சத்துரு கொடுமையும், சண்டை சச்சரவும், துன்மார்க்கர் நேசமும் கலகமும் நேரிடச்செய்து மாரகஞ்செய்வார்கள். ஆனால், மற்ற கிரகங்களின் ஸ்தானபலனும், நோக்கமும், சம்பந்தமும் கவனித்துப் பலன் சொல்லவும்.

## கடகலக்கினத்தின் பலன்

ஜனனலக்கினங் கடகமாயிருக்க
ஜனித்திட்டஜாதகர்க்கு புதனும்சுக்கிரன்
கனமானமாரகத்தை செய்வாரப்பா
கனகுருசெவ்வாயும் நல்லோராவார்
தனதான்யசம்பத்து மிகவேதந்து
தாரணியில்பிரபுவென்று எவரும்போற்ற
இனஜனமும்பந்துமித்திரர் மனைவிபுத்ரர்
இனிதுடனேபுகழ்ந்திடவே ஜீவிப்பாரே. 8

உரை:—கடகலக்கினத்தில் ஜனனமானவர்களுக்கு புதனும், சுக்கிரனும் மாரகஞ் செய்வார்கள். ஆனால், குருவும், செவ்வாயும் நல்லவர்கள். தனதானிய சம்பத்தும் விசேஷமாய்த் தருவதுடன் பிரபுக்களைப்போற் சகலரும் புகழ்ந்துரைக்கும்படியான தன்மையுடன் இனஜனபந்துமித்திரர்கள், மனைவி, மைந்தர்களுடனே சுகஜீவியாய் வாழ்ந்திருப்பார்கள். ஆனால், மற்ற கிரகங்கள் நின்ற பலனும் கவனித்துப் பார்த்து பலன் சொல்லவும்.

இனிதுடனேகடகலக்னத் தில்ஜனித்தோர்
இசைந்தபடிபலனுதவும் விதமேதென்றால்
துணிகரமாய்சுக்கிரனும் புதனும்பொல்லார்
துடித்திடவேமாரகத்தை செய்வாரப்பா
மனமகிழ்வாய்குருசெவ்வாய் நல்லோராவார்
மாவலியுடனேசேர்ந்தால் ராஜயோகம்
இனஜனமும்பந்துமித்ரர் மனைவிபுத்ரர்
இனிதுடனேமனமகிழ வாழ்குவாரே. 9

உரை:—கடகலக்கினத்தில் பிறந்தவர்களுக்கு சுக்கிரனும், புதனும் கொடிய துன்பஞ் செய்வார்கள். மாரகத்திற்குச் சமான



RangaRakes tamilnavarasam.com

மான கண்டத்தையும் கலகத்தையும் அனுபவிக்கச் செய்வார்கள். ஆனால், குருபகவானும் செவ்வாயும் நல்லவர்கள். இவ்விருவரும் சேர்ந்து சம்பந்தமாயிருந்தால், நல்ல ராஜயோக பலனைத் தருவார்கள். அதன் பலன் விபரம் என்னவெனில், மனைவி மைந்தர்களுடனே தனதான்னிய சம்பத்துடனும் பிரபுவைப் போல் இருப்பார்கள்.

## சிம்மலக்கினத்தின் பலன்

மனமகிழ்வாய்சிம்ம லக்கினத்தில்
   மாவழிமையாகவே பிறந்தோருக்கு
சனிசுக்கிரன்புதன்பொல்லார் கொடுமைசெய்வார்
   சார்ந்தஸ்தானமறிந்துபலன் சொல்வீர்கள்
தினகரனும்சந்திரனும் சேயும் நல்லோர்
   செவ்வாயும்புதன்சேர்ந்தால் யோகமாகும்
இனிதுடனே இவர் நிலையை ஆராய்ந்தன்பாய்
   இசைத்தபுதன்புகன்றிடுவீர் ஜாதகர்க்கே. 10

உரை :—சிம்மலக்கினத்தில் பிறந்த ஜாதகர்க்கு சனிபகவானும் சுக்கிரபகவானும், புதபகவானும் குரூரமாகிய துர்ப்பலனைத் தந்தாலும், பிறகு நல்ல யோகபலனைத் தருவார்கள். ஆனால் சூரியனும் சந்திரனும் செவ்வாயும், வெகு மேன்மையான நல்ல பலனைத் தருவார்கள். இவர்கள் நின்ற ஸ்தான பலனறிந்து தமது திசாபுத்திகளில் தனதான்ய சம்பத்து, மனைவி, மைந்தர், பந்துமித்திரர்களின் சகாயமும் தந்து ஆதரிப்பார். ஆனால் செவ்வாயும் சுக்கிரனும் தர்ம கர்மஸ்தானத்தில் சேர்ந்திருந்தால் நல்ல யோகபலனைத் தருவார்கள்.

புதபகவான்மாரகஞ் செய்யமாட்டார்
   புகர்சனியுங்கொன்றிடுவா ரென்றுரைப்பாய்
இதமாகமற்றகிர கங்களானோர்
   எப்போதும்மாரகஞ் செய்யமாட்டார்
பதரமல்ஜாதகங் கணித்தாராய்ந்து
   பலன்சொல்லும்போதுமபர் பார்வைகண்டு
சிதறுமல்கணிதமெடுத் தேயாராய்ந்து
   சீராகபலாபலனை சொல்லுவீரே. 11

உரை :—சிம்மலக்கினத்தில் பிறந்த ஜாதகர்க்கு புதபகவான் மாரகஞ்செய்யமாட்டார். ஆனால் சுக்கிரனும் சனியும் கொல்லுவார்கள். மற்ற கிரகங்களாகிய சூரியன், சந்திரன், செவ்வாயும், புதன், வியாழன் முதலானோர் கொல்லமாட்டார்கள். ஆனால் ஜாதகபலனை பார்க்கும்போது இலக்கினத்தைப் பார்த்து கிரக நிலையைக் கண்டு பலன் சொல்வீர்கள்.

RangaRakes tamilnavarasam.com

## கன்னியாலக்கினத்தின் பலன்

கன்னியாலக்கினத்தில் ஜனித்தவர்க்கு
    கனகுருசேய்மதியும் கொடுமைசெய்வார்
மன்னுசனிசுக்கிரனும் நல்லோராவார்
    மால்புதருஞ்சேர்ந்தாலே யோகமுண்டு
நன்னயமாய் வித்யாபிவிருத்தியோடு
    நற்பலனுய்உத்தியோக வர்த்தகத்தால்
பொன்பொருளும்பூஸ்திதியும் தேடியன்பாய்
    பெருமையுடன்ஜீவித்து வாழ்குவாரே.

உரை :—கன்னியா லக்கினத்தில் பிறந்தவர்களுக்கு குரு பகவானும், செவ்வாய், சந்திரனும் பலவிதமாகிய கஷ்டநிஷ் டூரத்தைச் செய்வார்கள். சனி பகவானும், சுக்கிர பகவானும் நன்மைசெய்வதுடன் வித்தியாபிவிருத்தி, உத்தியோகமேன்மை வர்த்தகலாபத்துடன் பொன், பொருள், பூஸ்திதியுடன் மகாதன வந்தராய் பிரபுத்தன்மையாக ஜீவித்திருப்பதுடன் சுகஜீவியாய் வாழ்ந்திருக்கச் செய்வார்கள்.

சுக்கிரனும்புதபகவான் கொல்லமாட்டார்
    செவ்வாயும்சந்திரனும் வியாழன்மூவர்
பக்குவமாயவர்கள் திசா புத்திதன்னில்
    பற்பலவியாதியினால் திகைக்கச்செய்து
தக்கபடிமாரகஞ் செய்வாரென்று
    தாரணியில்ஜாதகர்க்கு பலனைச்சொல்வீர்
சிக்கிலாகிரகநிலை தனையாராய்ந்து
    சிறப்புடனேஜாதகத்தின்பலன் ஓதுவீரே. 19

உரை :—சுக்கிரபகவானும் புதபகவானும் மாரகஞ் செய்ய மாட்டார். ஆனால் செவ்வாயும் சந்திரனும் வியாழனும் அவர் கள் திசாபுத்தியினில் பலவித வியாதிகளினால் கஷ்டப்படச் செய்து மாரகஞ் செய்வார்கள். ஆனால் மற்ற கிரகநிலை ஆராய்ந் துணர்ந்து அந்தந்த ஸ்தான பலனைக் கவனித்து கிரகங்கள் நின்ற நட்பாட்சி உச்சபகை நீசஸ்தான பலனையும் ஆராய்ந்து பலன் சொல்ல வேண்டும்.

## துலாலக்கின பலன்

அன்புடனேதுலாலக்கினம் பிறந்தோருக்கு
    ஆதித்தன்சேய்குருவும் கொடுமைசெய்வார்
நன்மையாய்புதன்சனியும் சுக்கிரன் நல்லோர்
    நற்பலனைவிசேஷமாய் தருகுவார்கள்

தின்புடனே சந்திரனும் புதனும்சேர்ந்தால்
இராஜயோகபலனனுப விக்கச்செய்வார்
தன்மையுடன் செவ்வாய் மாரகஞ்செய்வரென்று
தாரணியோர்க்கோதுவீர் ஜோதிடவல்லோரே. 14

உரை :—துலாலக்கினத்தில் பிறந்தவர்களுக்குச் சூரியனும், செவ்வாய், குருவும் குரூரமான கஷ்டநஷ்டத்தை விளைவிப்பர். புதபகவானும், சனி, சுக்கிரனும் நல்ல பலனைக் கொடுப்பார்கள். ஆனால், சந்திரனும், புதனும் சேர்ந்தால், வித்தியாபிவிருத்தி, உத்தியோக மேன்மை, வர்த்தகலாபம் பொன் பொருள் பூஸ்திதி தனதான்ய சம்பத்துடன் கீர்த்திப்ரகாசமாய் ஜீவித்திருப்பார்கள். ஆகையால் செவ்வாய் பகவான் மாரகஞ் செய்வார்.

இன்னவிதமாகவே துலாலக்கினத்தின்
இசைந்தபலனிருந்தாலும் ஜாதகர்க்கு
பொன்னவனுங்குருரவியும் கொடுமைதுன்பம்
பொருந்திடவே மாரகத்தைசெய்வாரப்பா
நன்னடமாகக்கிரகநிலை தனையாராய்ந்து
நலமுடனேபலன் சொல்விரினிதாய்தானும்
அன்புமிகும்கணிதநூல் ஆராய்ச்சிசெய்து
அம்புவியின்மானிடர்க்கு புகலுவீரே. 15

உரை :—துலா லக்கினத்தில் ஜனனமானவர்களுக்கு கிரகங்கள் இன்னின்னவிதமாகப் பலன் கொடுத்தாலும், வியாழபகவானும் சூரியனும் பலவிதமான வியாதியால் கஷ்டப்படச் செய்து கொல்வார்கள். என்றாலும் மற்ற கிரகங்கள் நிற்கும் நிலையையும், அந்தந்த கிரகங்களின் ஆதிபத்திய பலனையும் ஸ்தானபலன்களையும் கேந்திரகோண பகை நீச ஆட்சி உச்சஸ்தானபலன்களையும் அனுசரித்துப் பார்த்து பலன் சொல்ல வேண்டும்.

## விருச்சிகலக்கின பலன்

விருச்சிகலக்கினத்தில் பிறந்தோர்க்கு
வெள்ளிபுதன்செவ்வாயும் சனியும்பொல்லார்.
குருரவியும்சந்திரனும் நல்லோராகும்
கொற்றவர்கள்போலரசர் யோகமுண்டாம்
பெருமையுண்டுதனலாப சம்பத்துண்டு
பொன்பொருளும் பூஸ்திதியும்கிடைக்குமப்பா
குருசனியும்மாரகஞ் செய்யமாட்டார்
கூறுவாய்ஜாதகத்தின் பலனாராய்ந்தே. 16

உரை :—விருச்சிக லக்கினத்தில் பிறந்தவர்களுக்கு வெள்ளியும், புதனும், செவ்வாயும், சனியும் பொல்லாத கஷ்ட பலனை

RangaRakes tamilnavarasam.com

கொடுப்பார்கள். வியாழனும், சூரியனும், சந்திரனும், நல்ல யோகபலனைக் கொடுப்பார்கள். அதன் பலன் விபரமெவ்விதமெனில் பெருமையும் தனலாபமும் தனதான்ய சம்பத்தும் பொன், பொருள் பூஸ்திதியும், பொருந்தியிருக்கும்படியான இராஜயோகத்தை அனுபவிப்பார்கள். குருபகவானும் சனிபகவானும் மாரகஞ் செய்யமாட்டார்கள். ஜனனலக்கின கணிதத்தின் விபரத்தை சரியாய் ஆராய்ந்து பலன் சொல்வீர்கள்.

சுக்கிரனும்புதன்செவ்வாய் மாரகஞ்செய்வார்கள்
சூழ்ந்துபலவியாதிகளா லலையச்செய்து
மிக்கவேதுன்பமுடன் துயரமெல்லாம்
மிகவேதனையாக தந்தேகொல்வார்
சிக்கிலாகிரகநிலை தனையாராய்ந்து
சிதறுமல்கணிதநூற் படிசோதித்து
இலக்கினபலனின்னதென்றும் வகுத்துணர்ந்து
லக்ஷணமாய்ப்பலனுரைப்பீர் ஜாதகர்க்கே 17

உரை :—சுக்கிரனும், புதனும், செவ்வாயும், விருச்சிக லக்கினத்தில் பிறந்தவர்களுக்குப் பலவித குரூரபயங்கர கொடுமை செய்து வியாதியினால் மெலிவுறச் செய்து மாரகஞ் செய்வார்கள். துன்பமும், கஷ்டநஷ்டங்களும் அமையும்படி செய்தாலும் அவர்கள் ஜனனமான லக்கினபலன் விபரமும், மற்ற கிரகங்களின் சம்பந்தப்பார்வை முதலானவைகளும் சோதித்துணர்ந்து பலன் சொல்வீர்கள்.

## தனுசுலக்கின பலன்

ஜனனலக்கினந்தனுசாகப் பிறந்தோர்க்கு
சந்ததமும்புகர்குருவும் துன்பஞ்செய்வார்
சனிசெவ்வாய்சூரியனும் நல்லோராகும்
சம்பத்துற்சாகபலன் தருவாரப்பா
சனிமதியும்மாரகஞ் செய்யமாட்டார்
சாற்றுபுகர்புதன்கொல்வா ரென்றுரைப்பீர்
தினகரனும்மால்சேர்ந்தால் இராஜயோகம்
திருமங்கைலக்ஷ்மிகர மிகவுண்டாமே. 18

உரை :—ஜனன இலக்கினந் தனுசாகப் பிறந்தவர்களுக்கு சுக்கிரனும் குருவும், கொடுமையும் துன்பமுஞ் செய்வார்கள். சனியும், செவ்வாயும், சூரியனும், நல்லபலனைக் கொடுத்து நல்ல லாபமும் கிடைக்கும்படி செய்து ஆதரிப்பார்கள். ஆனால் சனிபகவானும், சந்திரனும் மாரகஞ் செய்யமாட்டார்கள். சுக்கிரனும் புதனும் பலவித வியாதியால் மெலியச்செய்து மாரகஞ் செய்

RangaRakes tamilnavarasam.com

வார்கள். சூரியனும் புதனும் சேர்ந்திருந்தால், இராஜயோகத்திற்குச் சமானமான போகத்தை அனுபவிக்கச் செய்வார்கள்.

## மகரலக்கின பலன்

மகரலக்கினத்தனிலே பிறந்தோருக்கு
 மதிகுருவுங்கஷ்டநஷ்ட பலனைத்தந்து
மிகதுன்பஞ்செய்வார்க ளென்றுரைப்பாய்
 மிக்கசேய்புகர்நல்லோர் ரவிகாரிகொல்லார்
சுகபலனைசந்திரனும் குருவுந்தந்து
 சொர்னபணிபூஷணமும் திரவ்யலாபமும்
புகழ்மேவும்பந்துமித்திரர் மனைவிமைந்தர்
 பொன்வெள்ளிவிசேஷமாய் கிடைக்குந்தானே. 19

உரை:—மகர லக்கினத்தில் பிறந்தோருக்கு மதிகுருவும், சேர்ந்து விருச்சிகலக்கினத்திலிருந்தால் அது லாபஸ்தானமாயிருந்தாலும் கஷ்டநஷ்டபலனை அனுபவிக்கச் செய்வார். சுக்கிரனும், செவ்வாயும் நல்ல பலனைத் தருவார்கள். சூரியபகவான் மாரகஞ் செய்யமாட்டார். ஆனால் சந்திரனும், குருவும், கடகத்திலிருந்தால் குருச்சந்திர யோகமாகும் பலவிதமான மனோற்சாகமும், வித்யாபிவிர்த்தி, உத்தியோகமேன்மை, வியாபாரவிருத்தி தனதான்ய சம்பத்து பொன்பணி பூஷணாதிகளும், மனைவி, மைந்தர், பந்து மித்திரர் முதலான சகலரும் ஆசாபாச நேசவிஸ்வாசமாயிருப்பதுடன் பொன், பொருள், பூஸ்திதியுடன் பிரபுத்தன்மையாய் ஜீவித்திருப்பார்கள்.

குருவுடனேசந்திரனும் மாரகஞ்செய்தாலும்
 கூடியேவெள்ளிபுதன் சேர்ந்திருந்தால்
பெருமையுடன்பொன்வெள்ளி நாணயங்கள்
 பொருளுடனேதனதான்ய சம்பத்தெல்லாம்
தருவார்கள்மனைவிமைந்தர் பந்துமித்திரர்
 தரணியிலேபெருகியே வாழ்ந்திருப்பார்
அருமையுடன்ஜோதிடநூ லாராய்ந்தன்பாய்
 அன்புடனேஜாதகர்க்கு பலன்சொல்வீர். 20

உரை:—குருவும், சந்திரனும் தமது திசாபுத்தியில் மாரகஞ் செய்தாலும், சுக்கிரனும் சேர்ந்திருந்தால் பெருமையுடன் பிரபுத்தன்மையாக உத்தியோகவிர்த்தி வியாபாரலாபம் பொன் பொருள் பூஸ்திதி முதலான சம்பத்துடன் மனைவி, மைந்தர், பந்துமித்திரர்களுடனே வாழ்வு பெருகியே ஜீவித்திருப்பார். ஆனால், மற்ற கிரகங்கள் நின்ற நிலையையும், ஸ்தான பலனையும் கணித்தாராய்ந்து பலன் விபரத்தை கவனித்துரைப்பீர்கள்.

RangaRakes tamilnavarasam.com

## கும்பலக்கின பலன்

கும்பலக்கினந்தனிலே பிறந்தோருக்கு
குருசெவ்வாய்தன் திசா புக்திதன்னில்
வம்பானகஷ்டநஷ்ட மனுபவிக்கச்செய்யும்
வருத்தமெல்லாம்புரிந்து துன்பஞ்செய்வார்
நம்புவாய்புதன்ரவிமால் மந்தன்நல்லோர்
நாடியேபுகர்செவ்வாய் சேர்ந்திருந்தால்
அம்புவியில்யோகபலன் மிகவேதந்து
அணிபணிகள்பொன்பொருளுந் தருவாரே. 21

உரை :—கும்ப லக்கினத்தில் பிறந்தவர்களுக்கு வியாழ பகவானும், செவ்வாயும் தமது திசாபுத்திகளில் பலவிதமாகிய கஷ்ட நஷ்ட பலனை அனுபவிக்கச் செய்வார்கள். ஆனால், சுக்கிரன், சூரியன், புதன், சனி நல்லவர்கள். சுக்கிரனும், செவ்வாயும் சேர்ந்திருந்தால், அணிபணிகள் ஆஸ்தி பூஸ்திதி பொன், பொருள், மனைவி, மைந்தர்களுடன் சுகஜீவியாய் வாழ்ந்திருப்பார்கள்.

அந்தணனேகும்பலக்னத் தோனைக்கொல்லான்
அன்பில்லாசந்திரனும் செவ்வாய்கொல்வார்
இந்தவிதமாயிருந்தால் பலனாராய்ந்து
இலக்கினத்திற்கேபொருந்தும் திசையுங்கண்டு
சந்ததமும்பலனெல்லாம் வகுத்துணர்ந்து
சாற்றுமந்தகிரகநிலை யோசித்தன்பாய்
சிந்தைமகிழ்வாய்ஜாத கர்க்கிசைந்த
சிறப்பானபலாபலனை பகருவீரே. 22

உரை :—குருபகவான் கும்ப லக்கினத்தோனுக்கு நுதியாதிபதியாயிருந்தாலும் கொல்லமாட்டார். ஆனால், சந்திரன், செவ்வாய் மாரகஞ் செய்வார்கள். ஆகையினால், இலக்கினாதிபதியையும், இலக்கினஸ்தானத்தையும் மற்ற கிரகங்களின் பலாபலத்தையும் கவனித்து பலன் சொல்ல வேண்டும்.

## மீனலக்கின பலன்

ஈனமானமீனலக் கினத்தோருக்கு
கதிரவனும்பொன்புகர்மால் கொடுமைசெய்வார்
மனமகிழ்வாய்சேய்மதியும் நன்மைசெய்வார்
மாக்ஷிமையாய்குருசெவ்வாய் சேர்ந்திருந்தால்
தனதான்யசம்பத்து மிகவேதந்து
தாரணியில்வாழ்ந்திருக்கச் செய்குவார்கள்
இனஜனத்தோர்மனைவிமைந்த ருடனன்பாக
இனிதுடனே வாழ்ந்திருப்பாருலகமீதே. 23

உரை :—மீன லக்கினத்தில் ஜனனமானவர்களுக்கு சூரியனும், குருவும், சுக்கிரனும், புதன் முதலானோர்கள் தமது திசா புத்தியில் பலவிதமாகிய கஷ்டநஷ்டத்தை யனுபவிக்கச் செய்வார்கள். ஆனால், செவ்வாயும், சந்திரனும் நன்மை செய்வார்கள். குருபகவானும், செவ்வாயும் சேர்ந்திருந்தால் தனதான்ய சம்பத்து அதிகரித்து உத்தியோகவிருத்தி, வியாபார லாபமும் பெற்று திரவிய பெருக்குடனே பந்துமித்திரர், மனைவி, மைந்தர்களுடனே சுகஜீவியாய் வாழ்ந்திருப்பார்கள்.

மனமகிழும்மீனலக்னத் தோனைசெவ்வாய்
மாரகஞ்செய்யவேமாட்டார் புதருமத்தன்
தினகரனும்புதன்சொல்லார் வியாதியாலே
திகைத்திடவேமாரகஞ்செய் வாரென்றாலும்
கனமுடனேலக்னகணிதா ராய்ச்சிசெய்து
காணவேபலன்சொல்வீர் ஜாதகர்க்கு
இனிதானபலாபலனை கவனமாக
இசைந்தவிதமாவுரைப்பீர் மதியுள்ளோரே. 24

உரை :—மீன லக்கினத்திற் பிறந்த ஜாதகனை செவ்வாய் மாரகஞ் செய்யார். ஆனால், சூரியன், புதன், சுக்கிரன், சனியும் அவர்கள் திசாபுத்தியில் பலவிதமாகிய வியாதியினால் மெலிந்துருகச் செய்து மாரகத்தை யடையச் செய்வார்கள். ஆனால், இலக்கின கணிதாராய்ச்சி செய்து பார்த்து, மற்ற கிரகங்களிருக்கிற ஸ்தான பலனும், திசாபுத்தியின் விசேஷத்தினால் நடக்கும் உண்மை ரகசியத்தையும் ஒழுங்காக கவனித்துப் பலன் சொல்ல வேண்டும்.

துவாதச லக்கின கிரகபலன்

முற்றிற்று.

RangaRakes tamilnavarasam.com

# ஆயுள் நிர்ணய பலன்

எண்சீரடி விருத்தம்

இலக்கினத்தோன் அஷ்டமத்தோ னிருவருந்தான்
 இசைந்தசரராசியுற்றால் ஜாதகர்க்கு
பலமானதீர்க்காயுள் தருவாரப்பா
 பகருஸ்திரம்அற்பாயு ளென்றேசொல்லு
நலமுடனே உபயந்தான் மத்திபமேயாகும்
 நாடியதோர்ஜாதகர்க்கு பலனாராய்ந்து
கலக்கமிலாகிரகநிலை தனையாராய்ந்தும்
 கழறுவீர்ஜாதகர்க்கு விபரந்தானே. 1

உரை:—இலக்கினாதிபதியும் அஷ்டமாதிபதியும் சரராசியி லிருந்தால் ஜாதகர்க்கு தீர்க்காயுசாயிருக்கும். ஸ்திரராசியிலிருந் தால் அற்பாயுசாயிருக்கும் உபயராசியிலிருந்தால் மத்தியபலனா கும். இவ்விதமே ஒவ்வொரு ஜாதகர்க்கும் மாரகதிசாபுத்திபலன் ஆராய்ந்துரைக்கும்போது கணிதாராய்ச்சியுடன் பலன் சொல்ல வேண்டும்.

பெருமைமிகும்லக்கினத்தோ ரானகோள்கள்
 பெலமாகஸ்திரராசி தனிலமர்ந்தால்
தருணமேநான்கோணும் உபயமேறில்
 தருந்தஸ்திரஞ்சரமுபயம் கவனித்தோர்ந்து
அருமையாய்ஜோதிடநூல் கணித்தாராய்ந்து
 அன்புடனேகிரகங்கள் நின்றஸ்தானம்
பொருந்தியதோர்லக்கினபலன் தனையும்பார்த்து
 பொருத்தமாய்ஆயுள்பலன் புகலுவீரே. 2

உரை:—இலக்கினாதிபதியாகிய கிரகங்கள் ஸ்திரராசியிலிருந் தால், சுகாதிபதியும் உபயராசியிலிருக்க தருந்தவிதமாய் சரராசி ஸ்திரராசி உபயராசியில் கிரகங்கள் நிற்கும் விபத்தைப் பார்த்து பலன் சொல்லும்போது ஆயுள் கணிதத்தைக் கணக்கெடுத்து, பார்த்து மாரக ஸ்தானாதிபத்தியத்தையும் பகுத்துணர்ந்து பலன் சொல்ல வேண்டும்.

அன்புடனேலக்னாதி பதியுந்தானே
 அற்பமிலாமல்பலத்து உபயமேறி
தன்மையுடன்அஷ்டமத்தோன் ஸ்திரத்தில்நிற்க
 நலமானவபது மத்திபமேயாகும்



RangaRakes tamilnavarasam.com

இன்பமுடனிவர்கள் நின்ற ராசிநாதன்
இருந்தஸ்தானத்தின்பலனை கவனித்தோர்ந்து
தன்மையுடன்மாரகஸ்தானத்திற்கேற்ற
தகுந்தபலனுயாயுள் பொருந்தும்பாரே. 3

உரை:—இலக்கினாதிபதி பலமான ஸ்தானாதிபதியாகி உபய ராசியிலிருக்கும்போது, ஆயுள் ஸ்தானாதிபதியாகிய கிரகங்கள் ஸ்திர ராசியிலிருந்தால் மத்திப பலனுயிருக்கும். ஆனால் இந்த கிரகங்கள் நின்ற ராசிநாதர்களிருக்கும் ஸ்தானபலனைக் கவனித்து, அந்தந்த திசாநாதர்களின் மாரகஸ்தானாதிபத்திய பலனையும் அனுசரித்துப் பார்த்து ஆயுள் பலன் சொல்ல வேண்டும்.

பன்னுமஷ்டமாதிபதி யிருந்தராசி
பகருமந்ததிரிகோண ராசிதனில்
தன்னைஞ்சேர்மாதத்தில் மாரகத்தை
நாடியேதருவார்க ளென்றுரைப்பாய்
பன்னூர யிராசிக்கு நேசனை
பகருதிரிகோணமாம் நக்ஷத்திரத்தில்
துன்பமாய்மாரகஞ் செய்வாரென்று
துரிதமுடன் ஜாதகர்க்குப் புகலுவீரே. 4

உரை:—அஷ்டம ஸ்தானாதிபதியாகிய கிரகங்கள் திரிகோண ஸ்தானத்திலிருந்த மாதத்தில் வரும்போது அந்த ஸ்தானத்திற் கதிபவனுக்கு நட்புராசியின் ஸ்தானாதிபதி திசை வரும்போது மாரகத்திற்குச் சமானமான கஷ்ட நஷ்டங்களைத் தருவதுடன் சோகஸ்தானாதி திசையும் வந்தால் பலவிதமான வியாதிகள் சூழ்ந்து, அதனால் பலஹீனமாகி துயரப்படச்செய்து மாரகஞ் செய்வார்கள்.

## புத்திரதோஷ பலன்

பஞ்சமஸ்தானத்திலும் ஜனனமான
பகருலக்கினம்ஒன்பதாம் வீட்டிலுந்தான்
எஞ்சவிலாசனிகுளிகன் ராகுகேது
இருந்தாலேஜாதகர்க்கு சர்ப்பதோஷம்
வஞ்சனை செய்தேகருவை யழித்ததோஷம்
வந்துசந்ததிகேடாய் மைந்தரில்லா
துஞ்சியேமிகவருந்தி கலங்குவார்கள்

துன்பமுடன்துயரமுந் தங்குவாரே. 5
உரை:—ஜனனலக்கினத்திலும், பஞ்சமஸ்தானத்திலும், ஒன்பதிலும், சனி, குளிகன், இராகு, கேதுஇருந்தால்முன்ஜனனத்தில்

ந்த பழிபாபத்தினாலும், கருவழித்ததினாலும், சர்ப்பத்தைக் கொன்ற பாபத்தினாலும் சந்ததியில்லாமல் கலங்குவார்கள். ஆதல் அதற்குரிய கர்மசாந்தி செய்தால் கீர்த்தி பிரகாசம் பொருந்திய பிள்ளைகள் பிறந்து சுகமா யிருப்பதற்காகும்.

## நவக்கிரகங்களின் நட்பு ஆட்சி பகை நீசபலன்

### சூரிய பலன்

சூரியனுக்காஷி சிங்கம் தனுசுமீனம்
சொல்லரியநட்பாகும் மேஷமுச்சம்
சீரிலாநீசஸ்தானம் துலாமென்றோது
சிக்கிலாசூரியர்க்கு மற்றையேழும்
விரியமில்லாபகையா யிருப்பதாலே
விளங்குமேழ்வீட்டிலொன்றில் ரவியிருந்தால்
காரியஸ்தானாதிபதி பாக்கியத்தோன்
களிப்புடனேஆஷிபொருள் பலனுண்டாமே. 6

உரை:—சூரியபகவானுக்கு சிங்கராசி ஆஷியாகும். மேஷ உச்சமாகும். தனுசு மீனம் நட்பாகும். துலாராசி நீசமா மற்ற ஏழுஸ்தானங்களும் பகைவீடாகும். ஆனால் பாக்கிய ஸ்தானாதிபதியும், ஜீவனஸ்தானாதிபதியும் ஆஷி பெற்றிருந் தால், அவரவர் பலனை அந்த சூரிய திசாபுத்திகளில் விசேஷ மாகத் தருவார்கள்.

### குருபகவான் பலன்

அம்புலிக்குக்கர்க்கடகம் ஆஷியாகும்
ஆனதுலாம்தனுசுமீனம் மிதுனம்கன்னி
வம்பனுவாநட்பாகும் ரிஷபமுச்சம்
விருச்சிகமேநீசமென வழுத்துவாயே
நம்புவாய்மற்றவைத்து ராசியெல்லாம்
நவிலவுனுபகையாகு மென்றேசொல்லு
அம்புலியின்னூாதகர்க்குப் பலனாராய்ந்து
அறிவிப்பாய்திசாபுத்தி பலனைத்தானே. 7

### செவ்வாய் பலன்

செய்க்காடுசேர்விருச் சிகமுமாட்சி
சேர்ந்தரிஷபம் தனுசு சிங்கம் நட்பு
வாய்ந்தமகரம் உச்சம் கடகம் நீசம்
வையத்தின் ஜாதகர்க்குப் பலனுராய்ந்து
ஆய்ந்தவன் சொல்லும்போது லக்கினந்தன்னில்
அடைவர்கள் ஜெனித்தகால நிர்ணயத்தை
சாய்ந்தவிடம் கணக்கெடுத்து திசாபுத்திவிதம்
சரியாகப்பார்த்துபலன் சொல்லுவீரே. 8

உரை:—செவ்வாய் பகவானுக்கு மேஷம், விருச்சிகம், ஆட்சி, சிம்மம், ரிஷபம், துலாம் சமமாகும். தனுசு முதலான இராசிகள் நட்பாகும். மிதுனம், கன்னி, கும்பம் முதலான இராசிகள் பகையாகும். கடகம் நீசமாகும். இவையனைத்தும் கவனித்து ஜாதக பலனை ஆராய்ந்துணர்ந்து திசாபுத்திக்கிசைந்த விதமாய் பலன் சொல்ல வேண்டும்.

### புதபகவான் பலன்

கன்னியுடன் மிதுனமும் புதனுக்காட்சி
காணுமந்தகன்னியே உச்சமாகும்
நன்னயமாய்துலாம்நட்பு மாகுமப்பா
நவிலும்விருச்சிகராசி தனுசுராசி
அன்பானகும்பம்மேஷம் சமமேயாகும்
ஆனகடகம்பகையாம் கவனிப்பாயே
இன்னவிதம்திசாபுத்தி பலனுராய்ந்து
இனிதுடனேபலன்சொல்வீர் ஜாதகர்க்கே. 9

உரை:—புதபகவானுக்குக் கன்னியும், மிதுனமும் ஆட்சியாகும். ஆனால் கன்னியாராசியே புதபகவானுக்கு ஆட்சி உச்சமான ஸ்தானம். துலாம் நட்புஸ்தானமாகும். விருச்சிகம், தனுசு, கும்பம், மேஷம் சமமாகும். கடகராசி பகை. இவையனைத்தும் கவனித்துணர்ந்து இலக்கின கணிதத்திற் கிசைந்த விதமாய் திசாபுத்திபலனுராய்ந்து அந்தந்த ஜாதகர்கட்கிசைந்த பலாபலனை விபரமாய் ஆராய்ந்துணர்ந்து பலன் சொல்ல வேண்டும்.

### சந்திர பலன்

குருபகவானுக்குமீனம் தனுசும்ஆட்சி
குறித்ததேன்ரிஷபமும் பகையேயாகும்

RangaRakes tamilnavarasam.com

பெருமையுறும்மகரமே நீசமாகும்
பேசும்புகழ்மற்றதெல்லா நட்பேயாகும்
அருமையுடன்திசாபுத்தி பலனுராய்ந்து
அன்புடனேமற்றகிரகங்கள் நோக்கம்பார்வை
தருணமேநிற்கும்கோட் சாரங்கண்டு
தகுந்தபலன்சொல்லுவீர் ஜாதகர்க்கே. 10

உரை :—குருபகவானுக்கு மீனமும் தனுசும் ஆஷியாகும். விருச்சிகம் மேஷமும் பகையாகும். மகரராசி நீசமாகும். மற்ற ராசிகள் நட்பாய் விளங்கும். இவையனைத்தும் கவனித்து இலக்கினத்திற்கிசைந்த விதமாய் திசாபுத்தி பலனையும் ஆராய்ந்து கணக்கெடுத்து அந்தச் சமயத்தில் சந்திரன் நின்ற இராசியின் படியே கோட்சாரத்திற்கு இசைந்த மற்ற கிரகங்கள் நிற்கும் ஸ்தான பலனறிந்து பலன் சொல்ல வேண்டும்.

## சுக்கிரபகவான் பலன்

சுக்கிரர்க்குரிஷபதுலாம் ஆஷியாகும்
சுகமாகவேமீனம் உச்சமாகும்
சிக்கிலாகும்பமும்கேள் ராசிதானும்
சமமானதென்றுணர்வாய் மற்றராசி
பக்குவமிலாதநட்பு ராசியென்று
பகுத்துணர்ந்துகணிதநூல் தனைஆராய்ந்து
இலக்கினத்திற்கிசைந்ததிசா புத்தியோடு
இசைந்தராசிப்பலனும் விவரிப்பீரே. 11

உரை :—சுக்கிரபகவானுக்கு ரிஷபமும், துலாராசியும் ஆஷியாகும். மற்ற ராசிகளெல்லாம் நட்பாகும். இதனை இலக்கின கணிதாராய்ச்சியுடன் பார்த்து திசாபுத்தி பலனை ஆராய்ந்து மற்ற கிரக நிலையையும் கவனித்துணர்ந்து பலன் சொல்ல வேண்டும்

## சனிபகவான் பலன்

மந்தனுக்குக்கும்பமும் மகரம்ஆஷி
மகிழாகதுலாம்உச்ச மாகுமப்பா
முந்தியமேஷமேநீச மாகுமென்றும்
முன்னின்றகடகசிங்கம் பகையதாகும்
பந்தமுடன்மற்றவைகள்நட்பே யாகுமென்று
பகருவாய்ஜாதகருக்கு பலனுராய்ந்து

RangaRakes tamilnavarasam.com

சித்தாமத்பலனுரைக்கும் போதுராசி
சேர்ந்தகோட்சாரம்போல் புகலுவீரே. 12

உரை :—சனிபகவானுக்கு கும்பராசியும் மகரராசியும் ஆட்சியாகும். துலாம் ராசி உச்சமாகும். மேஷம் நீசமாகும். கடகம், சிங்கம் பகை ராசியாகும். மற்ற ராசிகள் நட்பு ராசியாகும். ஆகையால், ஒவ்வொரு ஜாதகரின் பலனுக்கிசைந்த விதமாய் திசாபுத்தி பிரித்து பலனுராய்ந்து சொல்லும்போது மற்ற கிரகங்கள் நின்ற இராசிப் பலனும் கோட்சாரத்திற் கிசைந்தபடியே கணித்துப் பார்த்து பலன் சொல்ல வேண்டும்.

## ஆயுள் நிர்ணய பலன்

முற்றிற்று.

RangaRakes tamilnavarasam.com

போதக - வேதக - பாசக - காரக

# கிரக நிலை

வெண்பா

கூறுபலனைக்கொடுவென்பான் போதகனும்
வேறுபண்ணித் தட்டுவிப்பான் வேதகனும்—தேறுபலன்
கூட்டுவிப்போன் பாசகனும் கோலமகாதிசைக்கே
ஈட்டு பொருள் காரகனீவான். 1

உரை:—ஜாதகம் சொல்லும்போது நல்ல பலனைக் கொடுப்பவன் போதகன். அதைத் தவிர்த்து வேறாக்கித் தட்டுவிப்பவன் வேதகனாகும். உத்தமபலனை சேர்த்துக் கொடுப்பவன் பாசகன். அந்தந்த கிரகங்களின் மகாதிசையில் விசேஷமான லாபத்தைக் காரகன் தருவான்.

## சூரியதிசையின் கிரகநிலை

பானுதிசைக்கு மந்தன் பாசகனுஞ் சுக்கிரனே
மானேகேள்வேதகனும் மன்னவனே—தேனனையாய்
காரகனுஞ் செவ்வாயே காசினியோர் நாமறிய
தாரணியும் போதகனுமே. 2

உரை:—சூரியதிசையில் சனிபகவான் பாசகன், சுக்கிர பகவான் வேதகன். குரு காரகனாகும் செவ்வாய் போதகனாகும். ஆகையால் சூரியமகாதிசையில் இன்னின்ன ஸ்தானத்தில் கிரகம் நின்ற நிலையென்பதுணர்ந்து பலன் சொல்லும்போது திசாபுத்தியின் பலாபலனையும் அநுபவமாக திசாநாதர்கள் கொடுக்கும் பலனுடன் அந்த ராசியில் கிரகங்கள் நிற்கின்ற கிரகங்களின் பலனையும் அநுசரித்துப் பலன் சொல்லவேண்டும்.

## சந்திரதிசையின் கிரகநிலை

இந்து திசைக்குவெள்ளி ஏற்றதோர் பாசகனும்
விந்தைமலர் நன்பனே வேதகனாம்—மந்தனே
வங்கா நதிபுடைநாம் காசினியிற் காரகனும்
அங்கா ரகன்போதகனும்.

உரை:—சந்திரதிசைக்கு சுக்கிரபகவான் பாசகன். புதன் வேதகன். சனிபகவான் காரகனும். ஆனால் அங்காரபகவான் போதகன் ஆகையால் சந்திரபகவான் கடகராசியிலிருக்கும் போது மிதுன லக்கினத்தில் பிறந்த ஜாதகர்கட்கு, குருபகவான் உச்சம் பெற்றிருந்தால் சப்தம ஜீவன ஸ்தானாதிபதி பலனை

யனுபவிப்பதற்கிசைந்த விசேஷபலனைத்தருவார். ஆனால் மற்ற கிரகங்கள் நின்ற ஸ்தானபலனும் அனுசரித்துப் பலன் சொல்ல வேண்டும்.

## செவ்வாய்திசையின் காரகத்வம்

மங்கலனுர் தன்திசைக்கு மார்த்தாண்டன்பாசகனும்
திங்களுமே போதகனும் சேயிழையீர்—பொங்குபுகழ்
ஏவபுதன்வேதகனு மித்தரணி யோரறிய
ஆவசனி காரகனே யாம். 4

உரை:—செவ்வாய் திசைக்கு சூரியபகவான் பாசகன். சந்திரபகவான் போதகன். புதபகவான் வேதகனும். ஆனால் சனிபகவானே காரகனும். செவ்வாய் பகவான் மகரத்திலிருக்கும்போது தனுசு லக்கினமாயிருந்தாலும், சந்திரன் ஆறுமிட மாகிய ரிஷபத்திலிருந்தாலும், அஷ்டமஸ்தானமாகிய கடகத்தி லிருந்தாலும் பலனை விமரிசையாய்க் கொடுப்பார். ஆனால் புத பகவான் மூன்று, ஆறு, எட்டு, பனிரெண்டாம் வீட்டிலிருந்தால் மாத்திரம் நற்பலனை யனுபவிக்கச் செய்யவொட்டாமல் தடுத்து கஷ்டத்தை யனுபவிக்கச் செய்வார். புதபகவான் வேதகனு யிருந்தாலும் கன்னியா ராசியில் தசம ஸ்தான கேந்திராதிபத்தி யம் பெற்றாலும் அந்த ஸ்தானம் ஆட்சி உச்சஸ்தான மகிமை யால் நற்பலன்களை யனுபவிக்கச் செய்வார்.

## புதன்திசையின் காரகத்வம்

புத்தி திசைக்குப் புரவலனே போதகனும்
சந்திரனே பாசகனுய்த் தானுவ—னிந்துறுதல்
மின்னனையீர் செவ்வாயோ வேதகனும் வெள்ளியோ
மன்னுபுகழ் காரகனு வான். 6

உரை:—புதபகவான் திசையில் குருபகவான் போதகன். சந்திரன் பாசகன். செவ்வாய் வேதகனுகும். சுக்கிரன் காரக னுவான். ஆகையால் குருபகவான் மீனலக்கினத்தில் ஆட்சி பெற்றிருக்கும்போது கன்னியாலக்கினமாயிருந்து புதனும் இலக் கினத்தில் ஆட்சி உச்சமாய் பலத்திருந்தால் குருபுத்தியில் விசேஷபலன் கிடைத்து அதனுல் பிரபுத்தனமாயிருப்பதற் காகும். ஆனால் செவ்வாய் பகவான் விருச்சிகம், மேஷம் தனக்கு ஆட்சி ஸ்தானமாயிருந்தாலும், மூன்று எட்டாம் ஸ்தானமாத லால் பலவிதமான பொன் பொருள் சேதமாவதுடன் பலவித கஷ்டநஷ்டமும் கவலையும் உண்டாகும்படி செய்வார். ஆகை யால் அவர் புததிசைக்கு வேதகனுயிருந்தாலும், இவ்வை லக்கி னத்திற்கும் பதினொருமிடத்தி லிருந்தால் எத்தகைய கஷ்ட நஷ்டமும் நேரிடாமல் பிரபுத்தன்மையாக ஜீவித்திருக்கும்படி யான நற்பலனைத் தந்து தனவந்தனுயிருக்கும்படி செய்வார்.

RangaRakes tamilnavarasam.com

### குருதிசையின் கிரகநிலை

வேந்தன்மனை திசைக்கு வெய்யவனே வேதகனும்
போந்தவருஞ்செவ்வாயே போதகனும்—சாந்திசெறி
சந்திரனே காரகனா மதைப்போல் தாரணியில்
அந்தகனே பாசகனு மாவான். 6

உரை :—குருமகா திசையில் சூரிய பகவான் வேதகனாகவும், செவ்வாய் போதகனாகவும், சந்திரன் காரகனாயுமிருந்து பல பலனை அனுபவிக்கச் செய்வார்கள். சனி பகவான் பாசகனாயிருந்து பலன் கொடுப்பார். எவ்விதமென்றால், ஜனன லக்கினம் தனுசு அல்லது மீனமாயிருந்து குருவானவர் ஆஷி பெற்றிருந்தால் தன் திசையிற் பலனைக் கொடுப்பார். சூரியன் வேதகனாயிருந்தாலும் சிம்மராசியில் ஆஷி பெற்றிருந்தால் பட்டம் மறுகாமல் சுகலாபத்தையே அனுபவிக்கச் செய்வார். ஆனால் மற்ற கிரகங்கள் நின்ற இராசிபலனையும் பார்த்து, ஜாதகபலனை யனுசரித்து சொல்லவும்.

### சுக்கிரபகவான் திசையிற் கிரகநிலை

புகர்திசைக்கு வியாழனே போதகன் தான்
புதபகவான்பாசகனு மென்றுசொல்லு
மகிழுடனே சூரியன் காரகனேயாகும்
மைந்தனேவேதகனு மென்றுரைப்பாய்
சுகமான நற்பலனைக் கொடுக்கும் நல்ல
சுத்தநவக்கிரகங்க ளொப்பதிற்கும்
சுந்தபலன்லக்கினத்தின் ஆஷிக்கப்போல
தாரணியில்வாழ்ஜாதகர்க்கு நடக்கும்பாரே. 7

உரை :—சுக்கிரமகா திசையில் வியாழ பகவான் போதகனாகும். புத பகவான் பாசகனாகும் சூரிய பகவான் காரகனாகும். சனிபகவான் வேதகனாகும். ஆகையால், சுக்கிர பகவான் மீன லக்கினத்திலிருக்கும்போது துலா ராசியில் ஆஷியாகவும், சூரியன் சிம்மத்தில் ஆஷியாயிருக்கும்போது, தனுசு லக்கினத்தில் பிறந்த ஜாதகனை சகலரும் பிரபு என்று புகழ்ந்துரைப்பார்கள். அத்தகைய ஜாதகனுக்கு சுக்கிரதிசை வந்தால் மிகுந்த யோக பலனைக் கொடுப்பார்கள். ஆனால், மற்ற கிரகங்களின் தன்மையையும் பார்த்து பலன் சொல்ல வேண்டும்.

### சனிதிசைக்கு கிரகநிலை

சனியின் திசைக்குச் சந்திரனே போதகனும்
இனியசெவ்வாய் வேதகனென் றோதுங்—கனிமொழியாய்
வெள்ளியே பாசகனாம் வேந்தனே காரகனும்
தெள்ளுதமி ழோருரைத்த சீர். 8

உரை :—சனிபகவான் திசையில் சந்திரன் போதகனாகவும், செவ்வாய் வேதகனாகவும், சுக்கிரன் பாசகனாகவும், குருபகவான் காரகனாகவும் வருவார்கள். ஆனால், கும்ப லக்கினத்தில் ஜனித்தவர்கட்கு, சனி பகவான் துலா ராசியில் உச்சம் பெற்றிருந்தால், அந்த சனி திசையில் விசேஷ பலனைக் கொடுப்பார். ஆனால், செவ்வாய் அந்த சனி திசைக்குத் தான் வேதகனுயிருந்தாலும் கும்ப லக்கினத்தில் செவ்வாயும் மீனத்தில் குருவு மிருந்தால் ஜாதகனானவன் கல்வியில் தேர்ச்சியடைந்து இராஜாங்க உத்தியோகஞ் செய்துகொண்டிருப்பதற்காகும் அங்காரக புத்தியில் விசேஷ நற்பலனைத்தந்து பிரபுத்தன்மையாய் விளங்கச் செய்வார். ஆனால் மற்ற கிரகங்கள் நின்ற இராசிபலனையும் அநுசரித்து திசாநாதன் பலமறிந்து சொல்லவும். சனிபகவான் மேஷம் விருச்சிகராசிகளிலிருந்தால் ஜாதகருக்கு நல்ல விசேஷ பலன் கொடுக்கமாட்டார்கள்.

## பொதுப் பலன்

இவ்விதமே நவக்கிரக பலனாராய்ந்து
  நிலக்கினத்தையனுசரித்து திசையும்புத்தி
ஒவ்வொருகணிதமெடுத் துற்றுப்பார்த்து
  ஒதுபலனுரைக்கும்போ தவர்களுக்கு
எந்தவிதமாய்ப்பலாபலன்க ளமையுமென்று
  ஏற்றபடி பார்த்துரைக்க வேண்டுமென்று
இவ்விதமாய்க்கிரகநிலை தனையாராய்ந்து
  இனிதுடனே பலனுரைக்க வேண்டுந்தானே. 9

உரை :—இவ்விதமாகவே ஜாதக லக்கின கணிதமெடுத்துப் பலனாராய்ந்து சொல்லும்போது திசாபுத்தி பலனும் சரியாயெடுத்துப் பார்த்து திசாநாதனிருக்கும் ஸ்தான பலனும், புத்திநாதனிருக்கும் ஸ்தான பலனும் ஆராய்ந்துணர்ந்து மற்ற கிரகங்களிருக்கும் ஆட்சி, உச்ச, நட்பு, பகை, நீச ஸ்தானத்தின் பலனையும் ஆராய்ந்து பலன் சொல்ல வேண்டும். அந்த திசாபுத்தி காலத்தை யனுசரித்து பார்க்கும்போது, தற்சமயத்தில் நடக்கும் கோட்சார பலனையும் அனுசரித்து பலன் சொல்ல வேண்டும்.

போதக-வேதக-பாசக-காரக கிரகநிலை

முற்றிற்று.

RangaRakes tamilnavarasam.com

# சகாதேவாரூடம்

நூற்றெட்டு லக்கத்துள் ஒரு தொகையைச்
சொல்லக்கேட்டு பலன் சொல்லும் விபரம்

எண்சீரடி விருத்தம்

அன்புடனே ஆருடங் கேட்கவந்தோர்
அவர்வாயால் நூற்றெட்டுந் தொகையிலொன்றை
இன்பாகக்கேட்டுபலன் லக்கத்துற்ற
இசைந்தபடி நடக்குமென்று விபரமாக
தன்மைதுன்மை இன்னின்ன விதங்களாக
நடக்குமென்றுபலாபலனை சொல்லுவீர்கள்
பன்முறையும்நடக்கின்ற பலன்களெல்லாம்
பார்த்துசொல்லும்விபரமினி பகருவேனே.

உரை :— ஆருடங் கேட்க வந்தவர்களின் வாயினால் நூற்றெட்டு லக்கத்தில் ஒன்றை[ச்]சொல்லச்சொல்லி, அதன் விபரத்திற் கிசைந்தபடியே அவரவர்கட்கு நடக்கும் பலனை விபரமாய்ச் சொல்ல வேண்டும். அவ்வவ்விதமாய்ப் பலன் சொல்லும் போதும் அவர்களின் பொருட்டேனு நிற்கின்ற ஸ்தானத்தையும் குறிப்பையும் கவனித்துப் பலன் சொல்லவேண்டும்.

சகாதேவ ஆருடச் சக்கரம்

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 | 17 | 15 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 |
| 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | 32 | 33 | 34 | 35 | 36 |
| 37 | 38 | 39 | 40 | 41 | 42 | 43 | 44 | 45 | 46 | 47 | 48 |
| 49 | 50 | 51 | 62 | 53 | 54 | 55 | 56 | 57 | 58 | 59 | 60 |
| 61 | 62 | 63 | 64 | 65 | 66 | 67 | 68 | 69 | 70 | 71 | 72 |
| 78 | 74 | 75 | 76 | 77 | 78 | 79 | 80 | 81 | 62 | 83 | 94 |
| 85 | 86 | 87 | 88 | 89 | 90 | 91 | 92 | 93 | 94 | 95 | 96 |
| 97 | 98 | 99 | 100 | 101 | 102 | 103 | 104 | 105 | 106 | 107 | 108 |

RangaRakes tamilnavarasam.com

## ஆருட சக்கரத்தின் விபரம்

அன்பாகஜோதிஷர்முன் வந்துநின்று
  ஆருடஞ்சொல்லுமென்னில் நூற்றெட்டிலொன்றை
இன்பாகசொல்லுமென் றுரைத்திட்டாலே
  இசைந்தபடியேதேறுமோர் லக்னஞ்சொன்னால்
அன்பாகபலனைதனி லெழுதிக்கொண்டு
  அடியிற்குறிப்பித்திருக்கும் பாடலைச்சொல்லி
தன்மைதுன்மை இவ்வகையாய் நடக்குமென்று
  தவிலுமீர்கேட்டோர்க்கு ஜோதிடவல்லோரே.

உரை:—உலகத்தில் வாழ்ந்திருக்கும் மனிதவதப்பார்களில் மனச்சஞ்சலமுடையவர்கள் ஏது மனவிசார சந்தேகத்தை நிவர்த்தி செய்துகொள்வதற்கு ஆரூடவர்த்தமானத்தைக் கவனித்துத் தமது சந்தேகந் தீர்த்துக்கொள்வோமென ஜோதிடர் முன்பாக வந்து தாங்கள் நினைத்த காரியத்தின் நிலையைச் சொல்லுமென்று தாம்பூல தக்ஷிணை கொடுத்தாரானால் மேஷம், ரிஷபம், மிதுனம், கடகம், சிம்மம், கன்னி, துலாம், விருச்சிகம், தனுசு, மகரம், கும்பம், மீனம் ஆக 12-ராசி, சூரியன், சந்திரன், செவ்வாய், புதன், குரு, சுக்ரன், சனி, இராகு, கேது ஆக 9-கிரகங்கள், இவைகளை முறைப் பெருக்க 12 9 108 ஆக மேலே காட்டிய சக்கரத்தின் நெம்பர்களில் எந்த நெம்பர்கள் சொல்லுகின்றார்களோ? அதேபிரகாரமாக அடியிற் குறிப்பித்திருக்கும் நெம்பரில் காட்டிய பாடலின்படி அதன் விவரத்தின் படியே நடக்கும் பலாபலனை சொல்லவேண்டும்.

ஒன்றென்றுசொன்னாலே யவர்களுக்கு
  ஒய்ந்தபுகழ்காரியங்கள் சித்தியாகும்
தன்மையாய் நினைத்ததொரு காரியஞ்சித்தி
  தனதான்யலாபமுண்டு நினைத்தகாரியம்
அன்பாகவேதுச் சுகம்பார் [illegible] சம்போகத்தில்
  அதிலாபங்கிடைக்கும் மனமுறுக்கூடும்
பொன்பொருளும் பூஸ்திதியும் கிடைக்குமென்று
  புகல்வீர்கேட்டோர்க்கு ஜோதிடவல்லோரே.

உரை:—ஆரூடங் கேட்கவந்தவர்கள் ஒன்று என்று சொன்னால் அவர்கள் நினைத்த காரியமெல்லாம் சித்தியாகும். இத்தனை நாளாய் அனுபவித்த கஷ்டநஷ்டமும் வறுமை பிணியெல்லாம் விலகி, தனதான்ய லாபமுண்டு. வர்த்தகத்தில் விசேஷலாபமுண்டு. உத்தியோகத்தில் பெருமையும் கீர்த்தியும் திரவிய லாபமுண்டு. பொன் பொருள் பூஸ்திதியும் கிடைக்கும். கலியாண வைபவ சுபகாரியங்களெல்லாம் நடக்குமென்றும் சொல்வீர். ஆனால், அவர்கள் இலக்கினத்தை யனுசரித்து

RangaRakes tamilnavarasam.com

கோட்சார பலனையும், திசாபுத்தி பலனையும் ஆராய்ந்துணர்ந்து சொல்ல வேண்டும்.

விருத்தம்

வந்தோரிரண்டென்றுசொன்னால் வருகையிலாபொருள்சேதம்
சிந்தையில்பயமில்லாமல் திரவியமிகவேதேடி
சந்தோஷமிகவுண்டாகி சகலபாக்கியமும்பெற்று
அந்தமாய்தொழில்கிடைத்து ஆதங்காரியங்கள் தானே. 2

உரை:—ஆருடங்கேட்க வந்தவர்கள் இரண்டென்று சொன்னால் முதலில் கைப்பொருள் சேதமாகும். ஆனால், மனதில் பயமில்லாமற் பற்பலவித சமர்த்தினால் உத்தியோகத்தினாலும், வியாபாரத்தினாலும் பொருள் சேகரஞ் செய்து மனோ உல்லாசத்துடன் சகல பாக்கியமும்பெற்று, லக்ஷ்மிகடாக்ஷம் பெற்று ஜீவித்திருப்பதுடன், தான் நடத்துந் தொழில் தனக்கு வேண்டிய தன்மையும் பெருமையும் உண்டாகி சுகசவுக்கியமா யிருப்பதற்காகும்.

எண்சீரடி விருத்தம்

அன்புடனேமூன்றென்று சொல்வாரானால்
ஆருமேகவியாண சுபகாரியங்கள்
பொன்பொருளும்தனதான்ய சம்பத்துண்டாம்
போரூர்வாழ்முருகனுக்கு பூஜைசெய்து
தன்மையுடனிருந்தாலே உத்தியோகலாபம்
நடக்குமப்பாவர்த்தகமும் விருத்தியாகும்
இன்னலில்லாதன்மையெல்லா மனுபவித்து
இனிதாகஜீவிப்பீ ரெனச்சொல்வீரே. 3

உரை:—ஆருடங் கேட்க வந்தோர் மூன்று என்று சொன்னால் கலியாண வலபல சுபகாரியமனைத்தும் நடப்பதுடன் வியாபார விர்த்தியினாலும், உத்தியோக மேன்மையினாலும் வெகு பொருள் சேகரித்துத் தனதான்யம் சுபபுத்திர லாபத்துடன் வெகு மேன்மையாகத் துன்பமில்லாமல் இன்பசுகானந்தமாய் ஜீவித்திருப்பார்கள். ஆனால், திருப்போரூரில் வாழும் சிவசுப்பிரமணியராகிய முருகனை பூஜித்துக் கொண்டிருந்தால் நோயற்ற வாழ்வும் குறைவற்ற செல்வமுமாய் ஜீவித்திருப்பதற்காகுமென்றுரைப்பீர்கள்.

நான்கென்றுசொன்னாலே கலகங்தானும்
நலமில்லாமைப்பொருளும் சேதமாகும்
காண்போனமனிதரைப்போல் பந்துமித்திரர்
காணாமல்மனத்துயரா லலைந்தலைந்து

RangaRakes tamilnavarasam.com

தான்யசம்பத்தையிழந்து உத்தியோகமின்றி
தத்தளிப்பார்வர்த்தகத்தில் நஷ்டங்காணும்
வான்புவிபோலாந்துதிக்கும் முருகனைபூசித்து
வையகத்தில்சுகமாக ஜீவிப்பீரே. 4

உரை :—ஆரூடங் கேட்க வந்தோர் நான்கு என்று சொன்னால் கலகமாகுமென்றும், எந்தக் காரியமும் நடக்காதென்றும், கைப்பொருள் சேதமாகுமென்றும், உத்தியோகமில்லாமலும், வர்த்தகம் நடவாமலும், மனந்திகைத்து கடன்காரருக்கு அஞ்சிப் பயந்து அவர்களுடைய பந்துமித்திரரைப் பிரிந்து, கானகவாசி யாயலைந்து வெறியரைப்போல் கலங்குவார்கள். ஆகையால், தேவர் சேனாதிபதியாயிருந்து அமராதியர் சகாயமிருந்தும் பூலோகத்தில் ஜீவிக்கும் மனித வகுப்பார் வறுமைப் பிணியை விலக்கி வாழ்ந்திருக்கும்படியாய் திருப்போரூரில் அமர்ந்து தரிசனந்தந்து காப்பாற்றும் திருமுருகனை பூசித்துக்கொண்டு பகவத் பக்தியாய் ஜீவித்திருக்கும்படியாய் சொல்வீர்கள்.

ஐந்தென்றுசொன்னாலே உத்தமந்தான்
ஆரம்பமாகவியான சுபகாரியங்கள்
பந்துக்கள்கூட்டமுண்டு வர்த்தகலாபங்கள்
பலிக்குமேஉத்தியோக மேன்மையுண்டு
சந்ததமும்தாய்தந்தை சுற்றத்தாரோடு
சகோதரரொற்றுமையாய் சிறந்துவாழ்வார்
இந்தவிதநற்பலன்பொன் பூமிலாபம்
இனிதுடனேகிடைக்குமென்று சொல்லுவீரே. 5

உரை :—ஆரூடங் கேட்க வந்தோர் ஐந்தென்று சொன்னால் உத்தம பலனாகும். கலியாண சுபகாரியமனைத்தும் நடக்குமென்றும் பந்துமித்திரர் சுற்றத்தார் கூட்டமா யிருக்குமென்றும், தான் செய்யும் வர்த்தகத்தில் திரவியலாபம் கிடைக்குமென்றும், உத்தியோக மேன்மையும், தாய், தந்தை, சகோதரர் முதலானோர் அன்புடனே குடும்பஸ்தனென்று புகழ்ந்து ஆசீர்வதிக்கும்படியான கீர்த்தியுடன் வெகு மேன்மையினால் தனவானென்று அநேகர் புகழ்ந்துரைக்கும்படியான நன்மை விளங்குமென்று சொல்வீர்கள்.

அன்புடனேஆரூடங் கேட்கவந்தோர்
ஆறென்றலக்கத்தை வாக்காற்சொன்னால்
துன்பம்போம்துயரம்போம் பிணியும்போகும்
தொல்லுலகில்வறுமையற்று தனவானாக
பொன்பொருளும்தனதான்ய சம்பத்துண்டாம்
போற்றியஅன்னதானங்கள்செய்து

நன்னயமாய்கீர்த்தியுடன் வித்வானாய்
நலமுடனேஜீவிப்பீ ரெனச்சொல்வீரே. 6

உரை:—ஆரூடங் கேட்கவந்தவர்கள் ஆறாவது லக்கத்தைச் சொன்னால், சிலநாளைக்குள்ளாக துன்பமும் துயரமும் விலகி சுகமாயிருப்பதுடன் வறுமை பிணி தீர்ந்து, பொன், பொருள், பூஸ்திதியுடன் மனைவி மைந்தர் சுற்றத்தாருடனே வெகுசுக மாய்க் கீர்த்திப்பிரகாசத்துடனே வாழ்ந்திருப்பதுடன், அன்ன தானஞ்செய்து புண்யாத்மாவாய் சாஸ்திர ஆராய்ச்சியில் தேர்ந்த வித்வானாயிருப்பதற்காகும்.

அன்புடனேஏழென்று சொல்வாரானால்
அல்லல்துயரில்லாம லுலகில்வாழ்ந்து
பொன்பொருளும்மிகசேர்த்து பந்துமித்திரர்
பெருக்கமுடன்தனதான்ய சம்பத்தோடு
நன்மனைவிமைந்தருடன் சுகானந்தமாக
நலமுடனேவாழ்ந்திருப்பா ருலகமீது
இன்னலில்லாவர்த்தகஉத்யோக லாபத்தால்
இனிதுடனேஜீவிப்பா ரெனச்சொல்வீரே. 7

உரை:—ஆரூடங்கேட்கவந்தோர் ஏழு என்ற இலக்கத்தைச் சொன்னால் அவர்களுக்கு இனிமேல் யாதொரு துன்பமும் வறுமையுமில்லாமல் ஜீவித்திருப்பதுடன் மனைவி, மைந்தர்களுடன் சுற்றத்தார், பந்துமித்திரர்கள் பெருக்கத்துடன் வர்த்தக லாபத்தினாலும் உத்தியோக மேன்மையாலும் திரவியஞ் சேகரித்து பொன், பொருள், வெகுவாக சேகரித்துக் கீர்த்திப்பிரகாசமாய் அல்லல் துன்பமில்லாமல் மிகவும் மேன்மையான பிரபத்தன்மையாக ஜீவித்திருப்பீரென்று சொல்லவும்.

வந்துன்னை ஆரூடங் கேட்போர்வாக்கால்
வழுத்தியபாட்டென்ற லக்கந்தன்னால்
சிந்தைநொந்திருக்கும் கிரகத்தில்தீது
சிலநாளில்பலதுன்ப மெய்துந்தான்யம்
எந்தவிதமானாலும் வினையாதப்பா
எடுத்தகாரியமெல்லாம் வீணாய்ப்போகும்
பத்தமுடன்காளிக்குப் பூஜைசெய்து
பக்தியுடன்ஜீவிப்பீ ரெனச்சொல்வீரே. 8

உரை:—ஆரூடங் கேட்கவந்தவர்கள் வாக்கினால் எட்டென்ற லக்கத்தைச்சொன்னால் சதாகாலமும் மனவிசாரத்துடன் திகைத்து, தானிருக்கு மிடத்துள்ளோரும் பகையாகி வீட்டிலுள்ளோர் கொடுமையால் பலவிதமாகிய துன்பமும் துயரமுமாகும்,

RangaRakes tamilnavarasam.com

வயல்களில் விதைத்த தான்யமும் சரியாய் விளையாமலும் எடுத்த காரியங்களெல்லாம் வீணாய்ப் போகும். அதனால் வறுமை சூழ்ந்து பலவித கஷ்டநஷ்ட மடையச்செய்து, கலங்கித் துடிப்பார்கள். ஆகையால், பத்திரகாளியம்மனுக்குப் பொங்கலிட்டுப் பூஜைசெய்து பக்தியோனந்தாயிருந்தால் பலவித துன்பமும் விலகி உத்தியோக பெருக்கத்தாலும், வியாபாரலாபத்தாலும் திரவியசேகரஞ்செய்து, மனைவி, மைந்தர், பந்துமித்திரர்களுடன் தனவந்தராய்ச் சுகமாக ஜீவித்திருப்பீர்களென்று சொல்வீர்கள்.

ஒன்பதென்றலக்கத்தைச் சொல்வாராகில்
ஓங்குபுகழ்பலநன்மை வித்தியாபிவிர்த்தி
நன்மையாய்ப்பெருகுமப்பா உத்தியோகமேன்மை
நாடியதோர்வியாபார லாபத்தாலும்
பொன்பொருளும்மிகசேர்த்து பந்துமித்திரர்
பெருக்கமுடன்மனைவிமைந்த ருடன்வாழ்வார்கள்
இன்னவிதநன்மையெல்லாம் அனுபவித்து
இகபரலாபமடைவி ரெனச்சொல்வீரே. 9

உரை:—ஆருடங்கேட்க வந்தோர் வாக்கினால் ஒன்பதென்று சொன்னால் பலவித நன்மையும்பெற்று, வித்யாபிவிருத்தியுடன் உத்யோக மேன்மையாலும், வியாபாரவிர்த்தியாலும்பலவிதமாய் திரவிய சேகரஞ்செய்து, பந்து மித்திரர் கூட்டத்துடன் மனைவி, மைந்தர்கள் பெருக்கத்துடனே பொன், பணி, பூஷணாதிகளுடன் ஆடை ஆபரணாதிகளும் அணிந்து சுகஜீவியாயிருந்து, பலவித நன்மையெல்லா மனுபவித்து, உலக ஆசையை வெறுத்து, பகவத் பக்தி ஆனந்தமாய் இகபரசுகத்தை யனுபவிப்பீர்களென்று சொல்வீர்.

பத்தொன்றலக்கஞ்சொல் வார்களாகில்
பயனைமுழுடியாதென் றன்பாய்சொல்லு
உத்தியோகங்கிட்டா தப்பாவுனக்கு
உறவினர்கள்பகையாவா ரென்றுரைப்பாய்
சித்தமுங்கலங்கிபுத்தி மதியுங்கெட்டு
சீதரியேவறுமையாலே திகைத்து
பித்தர்போலிருப்பிரென் றுரைத்துசோர்ந்து
பிழைத்திடிரெனச்சொல்வீர் வந்தோருக்கே. 10

உரை:—ஆருடங் கேட்க வந்தவர் பத்தென்னும் இலக்கத்தைச் சொன்னால் அவர்கள் போகும் பிரயாணம் பங்கமாகுமென்றும், உத்தியோகங் கிட்டாதென்றும், பந்து, மித்திரர், உற்றார், உறவினரெல்லாம் பகையாவார்கள். மனமயங்கி திகிலடைந்து புத்தி சிதறி வறுமையா யிருப்பார்கள்.

பதினொன்றுலக்கத்தைச் சொல்வாரானால்
பலவிதமாய் உத்யோகவர்த்தகத்தால்
நிதிசேர்த்து பொன்பொருள் பூஷணாதிகளோடின்னும்
நீணிலத்தில் நற்பசுவும் வாகனாதிகளும்பெற்று
அதிகசம்பத்துடனே வாழ்ந்திருந்து
அன்பாகமனைவிமைந்தர் பந்துமித்திரர்
பதிலாபம்தனதான்ய சம்பத்தோடு
பக்ஷமாய்வாழ்ந்திருப்பீரெனச்சொல்வீரே. 11

உரை:—ஆருடங் கேட்க வந்தவர்கள் வாக்கினால் பதினொன்றெனும் இலக்கத்தைச் சொன்னால் உத்தியோக மேன்மையாலும், வியாபாரவிர்த்தியினாலும் பலவிதமாய்ப் பொருள் சேகரஞ் செய்து பொன், பொருள், பூஷணாதி லாபத்துடனும் அஸ்வ வாகனாதிகளுடனும் அதிக தனதான்ய சம்பத்துடன் மனைவி, மைந்தர்களுடனும், பந்துமித்திரர், சுற்றத்தாருடனும் வெகு மேன்மையாக தனதான்ய சம்பத்துடனே சுகஜீவியாக வாழ்ந்திருப்பீரெனச் சொல்வீர்கள்.

பன்னிரண்டென்றிலக்கம் சொல்வாரானால்
பலவிதமாய்ப்பொருள் சேர்த்து உலகோர்மெச்ச
பொன்பணியும் பூஸ்திதியும்மிகவேபெற்று
புத்ரசம்பத்துடன்பந்து மித்ரர்சேர்க்கை
கன்னிப்பெண் சுகபோக பாக்கியங்கள்
கீர்த்திபெறும் வியாபார உத்தியோகத்தால்
நன்மையமாய்விசேஷ தனலாபத்தாலே
நலமுடனேஜீவிப்பீரெனச்சொல்வீரே. 12

உரை:—ஆருடங் கேட்கவந்தவர்கள் பனிரெண்டு என்னும் இலக்கத்தைச் சொன்னால் உத்தியோக மேன்மையாலும், வியாபாரலாபத்தாலும், தனதான்ய பசுபுத்ரலாபத்துடனும் கீர்த்திப்ரகாசமாய் மனைவிமைந்தர் பந்துமித்திரர் ஆஸ்தி பூஸ்திதியுடனே மிகவும் பிரபுவென் றுலகோர் புகழுந்தன்மையான பெருமையுடன் ஸ்திரீபோக பாக்யத்துடனே விசேஷ லாபத்துடனும் திரவிய லாபத்துடனும் பிரபுவாய் ஜீவித்திருப்பீரெனச் சொல்வீர்கள்.

பதின்மூன்றுலகத்தைச் சொல்வாரானால்
பகைவரால்பலதுன்பம் நேர்ந்துபின்னால்
நிதிமிகுந்தகழனிவீடு பணிகள்விற்று
நிலமீதுவியாபாரஞ் செய்துபின்னால்
அதிகபிரயாசையுடன் வியாபாரஞ்செய்து
அளவுபோல்பொருள்சேர்த்து பகைவர்கட்கு

எதிரிலேதைரியமாய் தனவானும்
எப்போதும்வாழ்விரென் றோதுவீரே. 13

உரை :—ஆருடங் கேட்கவந்தோர் வாக்கால் பதின்மூன்று என்னும் இலக்கத்தைச் சொன்னால் சத்துருக்களால் பலவித துன்பமும் துயரமும் நேரிட்டு, அதனால் மனந்திகைத்துத் தனது வீடு, கழனி ஆபரணாதிகளை விக்கிரகஞ் செய்துவிட்டு, திரவிய சம்பத்தினுல் வியாபாரஞ்செய்து வெகு லாபத்துடனே ஜீவித்துப் பின் யோகமாய் மனைவி, மைந்தர், பந்து மித்திரர், சுற்றத்தார்களுடனே வெகு மேன்மையாக ஜீவித்திருப்பீரெனச் சொல்வீர்கள்.

இன்பமுடன் ஆருடங் கேட்கவந்தோர்
விசைந்தபதினான்குலக்கஞ் சொல்வாரானல்
அன்பானதொருவருளால் நன்மையுண்டு
அதிகசுகமாகவே ஜீவிப்பார்கள்
உன்னுடையகுலதெய்வந் தனைபூசித்தாலே
உத்தியோகவியாபார லாபத்தாலே
பொன்பொருளும்மிகசேர்த்து வாழ்விரென்று
புகன்றிடுவீரினிதாய் ஜோதிடவல்லோரே. 14

உரை :—ஆருடங் கேட்கவந்தோர்கள் வாக்கினால் பதினான்கென்னும் இலக்கத்தைச் சொன்னால், அவர்கள் குருசகாயத்தால் பலவிதமான நன்மையும் பெறுவார்கள். ஆனால் அவர்களுடைய குல தெய்வத்தைப் பூசித்தால் உத்யோக மேன்மையாலும் வியாபார நன்மையாலும் திரவியசேகரஞ்செய்து, சுகபாக்ய சம்பத்துடனே தனதான்ய சம்பத்துடனும் மனைவி, மைந்தர் பந்துமித்திரர்களுடனே [சுகானந்தமாய் ஜீவித்திருப்பீர்களென் றுரைப்பீர்கள்.

சிந்தைமகிழ்ந்தேபதி னைந்தென்றாலே
ஜெயமுண்டுவழக்குவெல்லும் வர்த்தகத்தால்
சந்ததமும்வெகுலாபம் கிடைத்தன்பாக
சகலவிதபொன்பணியும் பூஷ்திதியும்பெற்று
பந்துமித்ரர்சுத்றத்தா ருடனேவாழ்ந்து
பிரபுவெனசகலருமே புகழ்ந்துபோற்ற
அந்தமுள்ளசுகியான சுபகாரியங்கள்
ஆகுமென்றேசொல்வீர் ஜோதிடவல்லோரே. 15

உரை :—ஆருடங் கேட்கவந்தோர்கள் பதினைந்தென்னும் இலக்கத்தைச்சொன்னால் ஜெயமுண்டு, வழக்குவெல்லும், வர்த்தகத்தில் வெகு லாபங்கிடைக்கும். சதாகாலமும் நஷ்டமில்லாமல் தனலாபங் கிடைக்கும். பொன், பணி, பூஷணாதிகளுடனே

RangaRakes tamilnavarasam.com

பூஸ்திதியுடன் பந்துமித்திரர், சுற்றத்தாருடனே மிகவும் மேன்மையாய் ஜீவித்திருப்பீரெனப் புகலுவீர்.

பண்புடனே ஆரூடங் கேட்கவந்தோர்
  பதினுறென்றினிதாக சொல்வாராகுல்
வன்மையுடன்தேகத்திற் பிணியுண்டாகும்
  வான்மேகஇடியால்பொண் சாதிசாவாள்
திண்மமுடன்சிலகாலஞ் சென்றபின்னர்
  திரவியசேகரஞ்செய்து தயாளசிந்தை
கண்மமுடனிருப்பார்கள் போகபாக்யர்
  கனதனவானுவீரென்று புகலுவீரே. 16

உரை :—மிகவும் விஸ்வாசத்துடனே ஆரூடங் கேட்க வந்தோர் பதினாறு என்னும் இலக்கத்தைச் சொன்னால் சரீரத்தில் பலவித வியாதி சம்பவித்து, கஷ்டப்படுத்துவதுடன் மேக இடியால் மனையாள் மரணமாவாள். சிலநாள் பொறுத்து, உத்தியோக மேன்மையால் திரவிய சேகரஞ் செய்து வெகு மேன்மையாக வாழ்ந்திருப்பதுடன் மறுமணம்புரிந்து மனைவி, மைந்தர், சுற்றத்தாருடனே கீர்த்திப்பிரகாசமாய் வாழ்ந்திருப்பார்கள்.

இஷ்டமுடன் ஆரூடங் கேட்கவந்தோர்
  இசைத்தவிதம்பதினேழென் றுரைத்திட்டாலே
கஷ்டமில்லைநலமிருந்து பொருளும்சேரும்
  கனதனவானுகவே வாழ்ந்திருப்பார்
துஷ்டர்கள்நேசம்விடுத்தால் வறுமைநீங்கி
  துன்பமில்லாதெந்நாளும் வர்த்தகத்தால்
நஷ்டமில்லாபொன்பொருள்சேர்த் துலகமீது
  நலமுடனேவாழ்ந்திருப்பீ ரெனச்சொல்வீரே. 17

உரை :—ஆரூடங் கேட்க வந்தவர்கள் பதினேழென்னும் இலக்கத்தைச் சொன்னால் இனிமேல் நஷ்டம் நேரிடாது. உத்தியோகத்திலும், வர்த்தகத்திலும் பலவிதமாய் திரவிய சேகரஞ்செய்து தனந்தான்ய சம்பத்துடன் மனைவி, மைந்தர், பந்துமித்திரர், சுற்றத்தாருடனே பொன், பொருள், பூஸ்திதியுடனே பிரபுத்தன்மையாய் ஜீவித்திருப்பார்கள். ஆனால், துர்க்குணமமைத்த துன்மார்க்கர்கள் சகவாசத்தை விடுத்து, நற்குணத்தினருடன் சேர்ந்தால் கஷ்ட நஷ்டமில்லாமல் பொன் பொருள் சேகரித்து மனைவி, மைந்தர்களுடனே வாழ்ந்திருப்பீர்களெனச் சொல்வீர்கள்.

துன்பமுடன்வந்துநின்றோர் பதினெட்டென்றால்
  தூரத்திற்போனவர்கள் வருவாரென்பாய்
தின்மனமெலியாதே கவலையாலே
  நிதிதனிற்கொஞ்சம்பொருள்கள் விரயமாகும்

உன்காதல்தனியசுக போகபாக்கியம்
　　உண்டாகுந்தனத்தான்யமெல்லாம் சேரும்
தன்மைஇன்னுஞ் சிலநாட்சென்றால் வருகுமென்று
　　நலமுடனேசொல்வீர் சோதிடவல்லோரே. 18

உரை :—ஆருடங்கேட்க வந்தவர்கள் பதினெட்டு என்னும் இலக்கத்தைச் சொன்னால் தூரதேசத்திற் போனவர்கள் வருவார்களென்றும், தற்சமயமிருக்கும் மனவிசாரத்தை விலக்கிவிட்டு தைரியமாய் வர்த்தகஞ் செய்தும், உத்யோகஞ் செய்தும், திரவியசேகரஞ்செய்து தனைந்தானிய அன்னபதார்த்தம் புசித்து ஆனந்தமாயிருந்து ஸ்திரீ சம்யோகத்தினாலே சுகபோக பாக்கியத்தை யனுபவித்துந் தன்மையாமெயின் சுகத்தை யனுபவிக்கச் செய்தும் சுகஜீவியா யிருப்பீர்களென்று சொல்வீர்கள்.

பத்தொன்பதென்றுவந்தோ ருரைப்பாரானால்
　　பலிதகாரியசித்தி யாகுமென்பாய்
புத்திரபாக்யமுண்டு பொருளுஞ்சேரும்
　　பூஸ்திதியுங்கிடைக்குமென்பாய் போனோர்மீள்வார்
உத்தியோகவிர்த்தியினால் வியாபாரலாபம்
　　உண்டென்றுசொல்லீரின் வழுமன்பாக
சத்திசிவபூஜைசெய்து தரணிமீது
　　சவுக்கியமாயிருப்பீர்களெனச்சொல்வீரே. 19

உரை :—ஆருடங்கேட்க வந்தவர்கள் பத்தொன்பதென்று சொல்வார்களானால், அவரவர்கள் நினைத்த காரியஞ் சித்தியாகும். புத்திர பாக்கிய முண்டாகும் பொன் பொருள் பூஸ்திதி கிடைக்கும். உத்தியோக விர்த்தியினாலும் வெகுலாபம் பெற்று சுகசீவியா யிருப்பதற்காகும். சிவபூஜை சத்திபூஜை செய்து கொண்டு பகவத் பக்தியானந்தமாய் சுகசீவியாய் சீவித்திருப்பீரென்றும், ஆனால் துர்வ்ஷயத்தில் மனதைச் செலுத்தாமல் நன் மனதுடன் பந்துமித்திரர்களுடனே மனைவி மைந்தர்களுடனும் வாழ்ந்திருப்பீர்களெனப் புகல்வீர்.

இருபதென்றலக்கத்தை சொல்வாரானால்
　　இசைந்தபடிநினைத்ததெல்லாம் பலிக்குமென்பாய்
தருணமேஉத்தியோக வர்த்தகத்தால்
　　தனதான்யசம்பத்து மிகவுண்டாகி
பொருள்சேர்த்துமன்னர் பிரபுக்கள்சேவை
　　பெறுவார்கள்பந்துமித்திரர் சுற்றத்தோடு
அருமைசேர்மனைவிமைந்த ருடனேவாழ்வார்
　　அணிபணிகள்பெறுவீரெனப் புகலுவீரே. 20

உரை:—ஆரூடங்கேட்கவந்தவர்கள் இருபதென்னும் லக்கத்தைச்சொன்னால் நினைத்த காரியமெல்லாம் கைகூடுமென்றும், உத்தியோக மேன்மையாலும் வியாபார விர்த்தியாலும் திரவிய சகாயஞ் செய்து, தனதான்ய சம்பத்துடனே பிரபுக்கள் மன்னர்கள் முதலானவர்களின் சகாயமும்பெற்று, பந்துமித்திரச் சுற்றத்தோடு மனைவி மைந்தர்களுடனே சுகசீவியாய் வாழ்ந்திருப்பீர்களென்றுரைப்பீர்கள்.

அன்புடனே இருபத்தொன் றென்றுரைத்தால்
அவரவர்கள் நினைத்ததெல்லாம் பின்னால்கூடும்
உன்பொருளைவாங்கியவர் தருவாரென்பாய்
உற்றபொருள்சேத மில்லை யென்றுரைப்பாய்
கன்னியர்க்குமணம்கூடும் நினைத்ததெல்லாம்
கவுரவமாய்கிடைக்கு மென்றிட்டாலும்
துன்பத்தால் வியாதிவந் தகன்றுபோகும்
துயரமற்றுவாழ்விரெனப் புகலுவீரே. 21

உரை:— ஆரூடங் கேட்கவந்தவர்கள் இருபத்தொன்று என்றுரைத்தால் அவர்கள் நினைத்தகாரியம் சித்தியாகும் ஆனால் உன்கையில் மற்றவர் வாங்கிய பொருள் சேதமாகாமல் திருப்பி தருவார்களென்றும், மனவிசாரத்தினால் கலக்கமுண்டாகி வியாதி வந்து விலகுமென்றும், சிலநாள் பொறுத்து பலவிதமாய் திரவிய சேகரஞ் செய்து சுகமடைவார்களென்றும், கன்னியர்கட்குக் கலியாணமாகுமென்றும், இனிமேல் சுகசீவியாய் சீவித்திருப்பார்களென்றும் சொல்வீர்.

இருபத்திரண் டென்று சொல்வாரானால்
இனியபலன்மிகவுண்டு சகோதரரோடன்பாய்
பெருமையாய்வாழ்ந்திருப்பா ரென்றுரைப்பீர்
பேசுபுகழானந்த மாகவேதான்
பொருளுடனே தனதான்ய சம்பத்தோடு
பொருத்தமுடன்வாழ்ந்திருப்பா ரெனச்சொல்வீரே
திருகொன்றுமில்லாமல் விரதானுஷ்டானம்
தினந்தோறும்அனுஷ்டித்து சீவிப்பாரே. 22

உரை:—ஆரூடங் கேட்கவந்தவர்கள் இருபத்திரண்டென்று உரைத்தால் சகோதரருடனே நேசவிஸ்வாசமாக வாழ்ந்திருப்பார்கள். உத்தியோக சம்பத்துடனும், வியாபார லாபத்துடனும், தனதான்ய சம்பத்துடனே வாழ்ந்திருக்கும்படியான அனுகூலமுண்டாகும். ஆனால் பகவத்பக்தியானந்தமாய் விரதானுஷ்டானம் புரிந்து ஆனந்தமா யிருப்பீர்களென் றுரைப்பீர்.

RangaRakes tamilnavarasam.com

அன்பாகஆருடங் கேட்கவந்தோர்
　　ஆனஇருபத்துமூன் றென்றுரைத்தால்
தன்மையாயெடுத்த காரியங்கைகூடும்
　　நாடியதோர்வியாஜ்யத் தாலனேக
துன்பமெல்லாம்விலகி சுகமாயுந்தன்
　　துணைவர்களால்சுகமுடனே யிருப்பீரென்று
தன்மையாய்சுகதுக்க மிரண்டுமொன்றுய்
　　தவமுடனேயநுபவிப்பீ ரெனச்சொல்வீரே. 23

உரை:—ஆருடங் கேட்கவந்தவர்கள் வாயினுல் இருபத்து மூன்றென்று சொன்னுல் தான் நினைத்த காரியம் கைகூடுமென்றும், தன்மேல் எதிரிகள் தொடுத்த வியாஜ்யங்களால் தனக்கு நன்மையாய் ஜெயமாகுமென்றும், பந்துமித்திரர்களால் பலவித நன்மையடைத்தும் உண்டாகுலும், சுகதுக்க மிரண்டும் சமமா யநுபவிப்பதற்காகுமென்றும் புகலுவீர்.

வந்தவர்களிருபத்து நான்கென்றேதில்
　　வியாதியுடன் வழக்குகள் சூழ்ந்தலையச்செய்யும்
தொந்தரைசெய்வார்பகைவ ராளுருன்மேல்
　　தொடுத்தவியாஜ்யம்வெல்லும் கலங்கிடாதே
இந்தவிதமாயிருந்திட் டாலும்ஜோதி
　　ஈஸ்வரியைதினம்பூசித் திருப்பீராலுல்
சிந்தைமிகமகிழ்ந்தினிதாய் வாழ்வீரென்று
　　சிந்தைமகிழ்வாகவே புகலுவீரே. 24

உரை:—ஆருடங் கேட்கவந்தவர்கள் இருபத்து நான்கென்று சொன்னுல் பலவிதமான வியாதியினுலும் வீண்வழக்கு வியாஜ்யத்தினுலும் துன்பமும் துயரமும் நேரிட்டு, பலவிதமாகிய கஷ்டநஷ்டம் நேர்ந்தாலும், பிறகு சகல வியாஜ்ஜியத்தையும் ஜெயித்து, வியாதியும் தீர்ந்து சுகமாயிருப்பதற்காகும். ஆனுல், ஈஸ்வரியை தியானஞ் செய்து பூசித்துக் கொண்டிருந்தால் சகல நன்மையும் உண்டாகும்.

தன்னயமாய்இருபத்தைந் தென்றுசொன்னுல்
　　நாடியதோர்காரியஞ் சித்தியாகும்
கன்னிகைபெண்ணுலே பொருள்கைகூடும்
　　.காரியங்கைகூடுமினி பயப்படாதே
மன்னவரால்பிரபுக்க ளாலேநல்ல
　　மாநிதியும்பொருள்கிடைக்க சீவிப்பீர்கள்
இன்னவிதமநுபவிக்கும் நன்மைக்கெல்லாம்
　　ஈஸ்வரியைதுதிசெய்து மகிழுவீரே.' 25

உரை : ஆருடங் கேட்க வந்தவர்கள் இருபத்தைந்தென்னும் இலக்கத்தைச் சொன்னால் நீ நினைத்த காரியம் சித்தியாகுமென்றும் கன்னிப்பெண் ஒருத்தியால் விசேஷ பொருள் சேர்க்கையுண்டாகுமென்றும், அரசர்களாலும், பிரபுக்களாலும் வெகு பொருள் பூஸ்திதி முதலான பாக்கியங்களைத்தும் கிடைத்து, இத்யாதி நன்மை யனைத்தும் அனுபவிப்பதா யிருந்தாலும், ஈஸ்வரியை சதாகாலமும் பூஜித்தால் காரிய பங்கமாகாமல் சகல நன்மையு முண்டாகும். திரவிய லாபமும் கிடைக்கும்.

இருபத்திஆறென்று சொல்வாரானால்
    இவர்களுக்குள்பகைவரால் வழக்குண்டென்றும்
முருகனையேஸ்தோத்திரஞ் செய்தன்பாய்நாளும்
    மூத்தோர்கள்நேசம்வைத் திருப்பாரானால்
பெருமையுடன்கனதன வாகனாதி
    பெற்றிருப்பார்வியாஜ்யமெல்லாம் விலகிப்போகும்
பொருளுடனேபூஷணா திகள்சம்பத்தும்
    பொருந்தியேசுகமாக சீவிப்பாரே. 26

உரை :— ஆருடங் கேட்க வந்தவர்கள் இருபத்தியாறென்று சொன்னால், இவர்களுக்குள் வழக்குண்டென்றும் அதனால் பலவித துன்பம் சூழுமென்றும், அதற்காக முருகப் பெருமானை தியானஞ் செய்து பூசித்துக்கொண்டிருந்தால் சகலவித நன்மையும் பெருகி வியாஜ்யத்தில் ஜெயமாகி அதனால் தனக்குப் பலவித நன்மையும் கீர்த்தியும் உண்டாகும். வறுமை விலகி சரீர சவுக்கியமுடன் தனதான்ய சம்பத்தும் பலவித நன்மையுமுண்டாகும். பொன், பொருள், பூஷணாதிகள் திரவிய சம்பத்துடையவர்களா யிருப்பீர்களென்றுரைப்பீர்.

வையகத்திலிருபத் தேழென்றுசொன்னால்
    வரவுகொஞ்சம்செலவதிக மென்றுரைப்பாய்
தெய்வத்தினுதவியுண்டு திருடராலே
    சேதமாய்ப்பொருளும் சிறிதுபோகும்
ஐயமிலாதனவத்த னுகவாழ்ந்து
    ஆடுமாடுகளுடனே தான்யலாபம்
பையவேமேவிவரும் சிலகாலத்தில்
    பணக்காரராவாரென் றோதுவீரே. 27

உரை :— ஆருடங் கேட்க வந்தவர்கள் இருபத்தேழென்னும் இலக்கத்தைச் சொன்னால், தெய்வ சகாயத்தினால் பலவித நன்மை யுண்டாகும். ஆனால், திருடரால் சில திரவியங்களுடனே பொன் பணி பூஷணாதிகள் களவு போகும். வியா

RangaRakes tamilnavarasam.com

பாரத்தினாலும் சிறிது பொருள் சிதறி சேதமானாலும், தெய்வ சகாயத்தினால் மறுபடியும் சிலநாள் பொறுத்து வர்த்தகத்தன்மையால் விசேஷ லாபங்கிடைத்து பொன் பொருள் பூஸ்திதி ஆடு மாடு முதலானவைகளும் கொஞ்சங் கொஞ்சமாய் சேர்த்து பணக்கார பிரபுவைப்போ லிருப்பீரெனப் பகருவீர்.

தன்மையுண்டெந்நாளும் இருபத்தெட்டு
நாடியேசொன்னாலுத் தமமென்றோது
இன்பமுடனேபொருளும் கிடைக்குமப்பா
இசைந்தபடிவியாஜ்ஜியங்கள் நேரிட்டாலும்
உன்னையொன்றுஞ்செய்யாது பயப்படாதே
உந்தனுக்கேவெற்றியென் றறிந்துசொல்லு
பொன் பொருளும்பூஸ்திதியும் மிகவேபெற்று
பொறுத்தமுடன்சீவிப்பீரெனச் சொல்வீரே. 28

உரை :—ஆரூடங் கேட்க வந்தவர்கள் இருபத்தெட்டென்று சொன்னால் மிகவும் உத்தமமாகும். ஆனால் பொன் பொருள் விசேஷமாய்க் கிடைத்தாலும், வழக்கு வியாஜ்ஜியங்கள் நேரிடும். ஆனால், உனக்கே ஜெயமாகும். அதனால் உனக்கு யாதொரு பயமு மில்லாமல் ஜெயமுண்டாகும். இன்னும் சிறிது நாள் பொறுத்து இலக்ஷ்மீ கடாக்ஷம் பெற்று பொன், பொருள், பூஸ்திதியுடன் சகல சம்பத்தும் உண்டாகு மென்றுரைப்பீர்.

இருபத்தொன்பதுலக்கம் சொல்வாரானால்
இசைந்தபடி தையலாள் சண்டையாகும்
பொருள்சேதம்பொன்பணிகள் சேதமாகும்
பூஸ்திதியும்போ தும்மனை யாளும்சாவாள்
திருமுருகனைப்பணிந்து பூஜைசெய்தால்
தீர்ந்திடுமேவறுமைபிணி யானதெல்லாம்
தருமதானஞ்செய்து வர்த்தகத்தால்
தனவந்தனுமிருப்பீ ரறிகுவீரே. 29

உரை :—ஆரூடங் கேட்க வந்தோர் இருபத்தொன்பதென்று வாக்கினால் சொல்வாரானால் துர்க்குண மனைவியால் சண்டை நேரிடும். மனைவியின் கொடுமையினால் பொன், பொருள், பூஸ்திதி யனைத்தும் செலவாகும். மனைவியும் மரணமாவாள். ஆனால், திருமுருகனாகிய சிவசுப்பிரமணியக் கடவுளை பூஜித்திருந்தால் வறுமை துயர் துன்பமெல்லாம் விலகும். வர்த்தகஞ்செய்து திரவிய சேகரஞ் செய்தும், அன்னதானம் பரோபகாரம் தானதர்மஞ் செய்து சுகமாக சீவித்திருப்பீர்கள்.

இன்னமுற்ற ஆரூடங் கேட்கவந்தோர்
இசைத்த முப்பதானலக்க மென்றுசொன்னால்
துன்பமுடன் துயரமும் வறுமையாலே
துடிதுடித்து மனங்கலங்கி விசனிப்பீர்கள்
அன்பாகவிரதானுஷ் டானஞ்செய்து
அன்னதானஞ்செய்தால் வர்த்தகத்தால்
பொன்பொருளும்பூஸ்திதியும் சேகரித்து
பெருமையுடன் ஜீவிப்பீ ரெனச்சொல்வீரே. 30

உரை :—மிகவும் மனச்சஞ்சலத்துடன் கலங்கி இனி எவ்வித மாய் சீவிப்பதென்று ஆரூடங் கேட்க வந்தோர் முப்பதென்னும் இலக்கத்தைச் சொன்னால், துன்பமும் துயரமும் அதிகரித்துப் பல வித கலகமும் கஷ்டநஷ்டமும் நேரிட்டு கவலையடையச் செய்யும். ஆகையால், விரதானுஷ்டானஞ் செய்து அன்னதானஞ் செய்தால் இலக்ஷ்மி கடாக்ஷத்தினால் வர்த்தகத்தில் விசேஷ லாப முண்டாகி பொன் பொருள் பூஸ்திதியும் விசேஷமாய் சேகரித்து சுகசீவியா யிருப்பதற்காகும்.

பக்தியுடன் ஆரூடங் கேட்கவந்தோர்
பக்ஷமாய்முப்பத்தொன் றென்றுரைத்தால்
புத்திரர்விர்த்தியுண்டு பிரபுக்கள்நேசம்
பொன்பொருளும்தனதான்ய சம்பத்துண்டு
சத்திரமொன்றுண்டாக்கி அன்னதானம்
சந்ததமும்தந்துநீ மனங்களிப்பாய்
எத்தினமும்வர்த்தகத்தில் லாபங்களும்
ஏழைகளுன்னால்பிழைப்பா ரென்றுசொல்லே. 31

உரை :—மனமகிழ்வுடனே வந்து ஆரூடங் கேட்க வந்தவர் கள் முப்பத்தியொன்றென்று சொன்னால், புத்திர பாக்கிய சம்பத் துடனும் பந்துமித்திரர்களுடனும் மனைவி மைந்தர் சுற்றத்தார் களுடனும் தனக்கு உதவியா யிருக்கவும், வர்த்தகத்தினால் வெகு பொருள் சேகரஞ்செய்து, அன்னசத்திர மொன்றுண்டாக்கி ஏழைகளுக்காதாரமாக சதாகாலமும் அன்னதானஞ் செய்து சுகசீவியா யிருப்பீர்களெனப் புகலுவீர்.

முப்பத்திரண்டென்று சொல்வாரானால்
முந்தியபலநன்மை யிருந்திட்டாலும்
தப்பாமல்வர்த்தகத்தில் லாபமுண்டு
தனதான்யசம்பத்து மிகவுண்டாகும்



RangaRakes tamilnavarasam.com

இப்புவியில்சத்துருக்க ளிருந்திட்டாலும்
இரண்டுமாதத்துள்ளே மித்ருவாகி
எப்போதும்போலவே வாழ்ந்திருப்பார்
என்றினிதாய்ப்புகல்வீர் ஜோதிடவல்லோரே. 32

உரை :—ஆரூடங்கேட்க வந்தவர்கள் முப்பத்திரண்டென்று சொன்னால், முன்னே பற்பல விதமாகிய நன்மை யெல்லாம் அனுபவித்தாலும் இனிமேல் வெகு விதமான சுகபோக பாக்கிய மனைத்தும் பெரும்படியான வர்த்தகத்தினால் வெகு பொருள் சேகரமாகி பொன் பொருள் பூஸ்திதியுடனே பிரபுவென்பதாய் காணப் படுவார்கள். அந்தச் சமயத்தில் சத்துருக்க ளிருந்திட்டாலும் இரண்டு மாதத்திற்குள் அவர்களனைவரும் மித்துருவாகி எப்போதும் போலவே தனவந்தராகி வாழ்ந்திருப்பீரெனப் புகல்வீர்.

அன்புடனேமுப்பத்தி மூன்றென்றன்பாய்
ஆரூடங்கேட்கவந்தோர் சொல்வாராகில்
இன்புடனே நினைத்ததெல்லாம் ஜெயமேயாகும்
இசைந்தஉத்தியோகத்திற் கேகக்கூடும்
நன்மையுண்டுபுத்திர பாக்கியமுண்டாகும்
நாடியவியாபாரத்தில் லாபமாகும்
தன்மையாய்ப்பலபேரும் நேசமாவார்
தாரணியில்நினைத்ததெல்லாம் கூடுத்தானே. 33

உரை :—ஆரூடங் கேட்க வந்தோர் முப்பத்துமூன் றென் றுரைத்தால், அவர்கள் நினைத்த காரியமெல்லாம் சித்தியாகும். தனக்குத் தகுந்த உத்யோகம் கிடைக்கும். இன்னும் பலவித மான நன்மையும், பந்துமித்திரர் சகாயமும் கிடைப்பதுடன் புத்திரபாக்கியமு முண்டாகும். வித்யாபிவிர்த்தி வியாபார லாப மும், மனதில் நினைத்த காரியமெல்லாம் சித்தியாகும்.

இனிதுடனே ஆரூடங் கேட்கவந்தோர்
இசைந்தமுப்பத்தி நாலென்றுரைத்தால்
கனிவுடனேபல நன்மையாகுமின்னம்
காரியசித்தியாய் லாபங்காட்டும்
முனிவில்லா நல்லோர்கள் நேசமாகும்
முண்டவியாதிகளெல்லாம் பறந்தேபோகும்
தனிலகமகிழவேவலவனை பூசித்தன்பாய்
தாரணியில்மேன்மையுடன்சீவிப்பீரே. 34

உரை :—ஆரூடங் கேட்க வந்தவர்கள் முப்பத்துநாலென் றுரைத்தால், பல்வித நன்மையுண்டாகும். நினைத்த காரியஞ்

RangaRakes tamilnavarasam.com

சித்தியாகும். நல்லோர் சேர்க்கையும் வியாபார லாபமும் உத்தியோக பெருக்கமும் பொருந்தி நன்மையடையச் செய்து திரவிய லாபமும் கிடைக்கும். ஆனால் சரீர வியாதி நேரிடும். திருத்தணிகை மலையிலிருக்கும் சிவசுப்பிரமணியக் கடவுளைப் பூஜித்துக் கொண்டிருந்தால் சரீர சவுக்கியம், சம்பத்து, உற்சாகமும் பெருகி, மேன்மை யடைந்திருப்பார்களென்று சொல்லவும்.

உன்னிடத்தில் ஆருடம்கேட்கவந்தோர்
　　உரைத்தமுப்பத்தைந்தின் பலனைக்கேட்பாய்
துன்பமாயோர்பெண்ணாலே வந்தமைந்த
　　துயரமெல்லாம்விலகிசுக மடைவாரப்பா
அன்பாயமாகவே பகைவராலே
　　அதிகரித்ததுன்பமெல்லாம் விலகிப்போகும்
நன்மையுடன்நவக்கிரக சாந்திசெய்து
　　நலமுடனேசீவிப்பீ ருலகுள்ளோரே. 35

உரை :—ஆருடங் கேட்க வந்தவர்கள் முப்பத்தைந்தென்று சொன்னால் ஓர் ஸ்திரீயினால் வந்த துயரமெல்லாம் விலகி சுகப்படுவார்கள். துர்க்குணமமைந்த பகைவர்களால் பலவித கஷ்டங்களும் சூழ்ந்து வருத்தப்படுத்திய துன்பத்தையும் விலகச் செய்யும். ஆகையால் நவக்கிரக பூஜை செய்துகொண்டு சுகசீவியாய் வாழ்ந்திருப்பீர்களென்றுரைப்பீர்கள்.

முன்னாலேவந்து ஆருடங்கேட்போர்
　　முப்பத்திஆறென்று சொல்வாரானால்
நன்மையுள்ள ஞானவானொருவனாலே
　　நதிதீர்த்தக்ஷேத்ரலா பத்தினாலே
பன்முறையும்நற்பலன்கள் மிகவுண்டாகும்
　　பார்தனிலேகீர்த்தியுடன் பிரகாசிப்பார்
இன்னவிதமாய்சுபமும் புத்ரபாக்யம்
　　இசைத்தவிதம்நடக்குமென்று புகலுவீரே. 36

உரை :—ஆருடங் கேட்க வந்தவர்கள் முப்பத்தி ஆறென்று சொன்னால், ஞானமும் கல்வியும் நிறைந்தவராய் பலவித நன்மையும் பெற்று, கீர்த்திப்பிரகாசமாய் க்ஷேத்திரவாசியாய்ச் சென்று தீர்த்த ஸ்நானஞ் செய்து பகவத் பக்தியானந்தமா யிருந்து, பலவித நன்மையும் அடைவார்கள். இன்னமும், புத்திர பாக்கியம் குடும்பவிர்த்தி முதலான மேன்மையும் கிடைத்து சகலவித நன்மையும் பெறுவீர்களென்றுரைப்பீர்.

அன்புடனேமுப்பத்தி ஏழென்றேதும்
    ஆருடங்கேட் போர்க்குசுகமதாக
நன்மையெல்லாம் வெகுவாகக்கிடைக்குமப்பா
    நாடியதோர்காரிய சித்தியாகும்
இன்புடனேகப்பல்வியா பாரத்தில்லாபம்
    இசைந்தபடியேகிடைத்து சுகமுண்டாகும்
தன்மையாய்வெகுபாக்ய தனமுண்டாகும்
    தரணியிலேசுகம்பெறுவீ ரெனச்சொல்வீரே. 37

உரை :— ஆருடங் கேட்க வந்தவர்கள் முப்பத்தி ஏழென்று சொன்னால் பலவித நன்மையும் கிடைத்து, சுகசீவியா விருப்ப துடன் கப்பல் வியாபாரத்தினாலும், வர்த்தகத்தினாலும், உத்தி யோக மேன்மையாலும், பலவித நன்மையுமடைந்து, தனதான்ய சம்பத்தும், கீர்த்தியும், புகழும், மேன்மையு முண்டாகுமென்றும் சொல்வீர்கள்.

முப்பத்தியெட்டென்று ருடங்கேட்போர்
    முதற்றிஞர்பந்துமித்திரர் பகையினாலே
தப்பாமல்துயரடைந்து துன்பமுற்று
    தரணியிலேகலங்கியே திகைத்துநிற்பார்
எப்போதுங்கவலையால் மதிமயங்கி
    எம்மைதனத்தாழுமுல்வா ராகையாலே
இப்போதேநவக்கிரக பூஜைசெய்தால்
    இனிதுடனேசுகமாக சீவிப்பாரே. 38

உரை :— ஆருடங் கேட்க வந்தவர்கள் முப்பத்தியெட்டென் றுரைத்தால், அவர்கள் தமது வார்த்தையினாலே பல பேருக்கும் பகையாவதுடன் பந்துமித்திரர்கட்கும் பகையாகி பலவிதமான துன்பமும் துயரமுமடைந்து, வறுமையினாலும் துன்பத்தினாலும் கவலையடைந்து, பலவிதமாய்க் கஷ்டப்பட்டுக் கலங்குவார்கள். தான் செய்யும் தொழிலிலும், வர்த்தகத்திலும் பலவிதமாகிய கஷ்டமும் கலகமும் நேர்ந்து, வறுமையினால் திகைத்து, எவ்வித மாய் பூலோகத்தில் சீவிப்பதென்று மனஞ் சோர்ந்து திகைத்து, கஷ்டப்படுவார்கள். ஆகையால், இச்சமயமே நவக்கிரக பூஜை செய்துகொண்டிருந்தால் கொஞ்சங் கொஞ்சமாய்க் கஷ்டம் விலகி சுகானந்தமா யிருப்பீர்களென் றுரைப்பீர்கள்.

ஆருடங்கேட்கவந்தோர் எதிரில்நின்று
    அன்புடனேமுப்பத்தி யொன்பதென்றால்
சீருடனேபலநன்மை மிகவுண்டாகும்
    சித்தமகிழ்வாய்பலன்கள் அதிகமாகும்

பேருடனேகீர்த்தியும் பிரகாசிக்கும்
பெண்பிள்ளைபந்துமித்திர ருடனேவாழ்ந்து
காருண்யஇஷ்டதெய்வ சகாயத்தாலே
காசினியில்சீவிப்பா ரெனச்சொல்வீரே. 39

உரை:—ஆருடங் கேட்க வந்தவர்கள் முப்பத்தொன்ப தென்று சொன்னால் பலவிதமான நன்மையு மடைந்து, சுகசீவியாக தனதான்ய சம்பத்துடனே சீவித்திருப்பார்கள். ஆனால், சகலரும் சமர்த்தனென்று புகழுந் தன்மையாகிய கீர்த்தியும் பெருமையும் பொருந்தி, சுகமாக பந்துமித்ரருடனே சவுக்கியமாக இஷ்ட தெய்வத்தின் கிருபையால் வெகு லாபத்துடனே உலகத்திலே வாழ்ந்திருப்பார்கள்.

நலமுடனேஆருடங் கேட்கவந்தோர்
நாற்பதென்றுரைத்தாலே கஷ்ட நஷ்டம்
கலகமுடன்பந்துமித் திரர்களாலே
கவலையுடன்வெகுதுயர மடைகுவார்கள்
பலவிதமாய்மனத்துயரம் சரீரநோயால்
பாதவித்துப்பிறகுசுக மாகவாழ்வார்
சிலகாலம்சென்றால்சுகமும் நன்மையுண்டாம்
சீராகசீவிப்பீரெனச் சொல்வீரே. 40

உரை:—ஆருடங் கேட்க வந்தவர்கள் நாற்பதென்று சொன்னால் மனவிசாரமும் கஷ்டமும் கவலையுமுண்டாகும். பந்துமித்திரர்களால் கலகமும் பகையு முண்டாகும். ஆனால் சிலகாலஞ் சென்றால் பகவானுடைய செயலினால் கொஞ்சங் கொஞ்சமாக கஷ்டமும் கவலையும் விலகி, சுகசீவியா யிருப்பதுடன் நினைத்த காரியம் சித்தியாகி உத்தியோக மேன்மையுடன், வர்த்தக லாபத்திலும் சுகசீவியா யிருப்பார்களெனப் புகல்வீர்.

அகமகிழ்ந்துஆருடங் கேட்கவந்தோர்
அன்புடனேநாற்பத்தொன் றென்றுரைத்தால்
சுகமுண்டுகீர்த்தியுண்டு பெருமையுண்டு
சுற்றத்தார்மனைவிமைந்தர் பெருக்கத்தாலே
மகிழ்ந்துதனதான்யசம்பத் துடனேயன்பாய்
மாநிலத்திலேசுகமாய் வாழ்ந்திருந்து
ஜெகமெங்கும்பிரபலமாய் தனவானென்று
தேசத்தோர்மெச்சிடவே சீவிப்பாரே. 41

உரை:—ஆருடங் கேட்க வந்தோர்கள் நாற்பத்தொன்றென்று சொன்னால் தனதான்ய சம்பத்துடன் வெகு கீர்த்தி பிரகாசமாய் மனைவி, மைந்தர், சுற்றத்தாருடனே சுகசீவியாய் வாழ்ந்திருப்ப

RangaRakes tamilnavarasam.com

துடன், நினைத்த காரியம் சித்தியாகி பலிதமாய் மனோச்சாக மதிப்பர்ந்து வித்யாபிவிர்த்தியுடனும், உத்தியோக விர்த்தியினு லும், வித வியாபார லாபத்தினாலும் திரவிய சேகரஞ் செய்து பிரபலமான கீர்த்தியுடன் சீவித்திருப்பார்கள்.

இனிதுடனே ஆருடங் கேட்கவந்தோர்
    இசைத்தநாற்பத்தி யிரண்டென்றாலே
கனிவுடனே நினைத்தகாரியமுமாகும்
    கஷ்டநஷ்டம் விலகியே சுகித்திருப்பார்
மனிதவதுப்பார் தனக்கு நேசமாவார்
    மனைவிமைந்தர் பந்துமித்ர ருடனேயன்பாய்
தனத்தான்யசம்பத்தோ டன்பாய்வாழ்வார்
    தரணியிலே சுகமடைவா ரெனச்சொல்வீரே. 42

உரை :—ஆருடங் கேட்க வந்தோர் நாற்பத்திரண்டென்று சொன்னால் அவர்கள் நினைத்த காரியம் சித்தியாகுமென்றும், இத் தனை நாளாய் அனுபவித்த கஷ்ட நஷ்டமெல்லாம் விலகி, சுகா னந்தமாயிருப்பதுடன், சகல மனிதரும் தனக்கு நன்மை செய்வ துடன், தனதான்ய சம்பத்துடனே உலகத்தார் புகழ்ந்துரைக் கும் தன்மையாகிய பெருமையாய் சீவித்திருப்பீர்.

மனந்திகைத்துஆருடங் கேட்கவந்தோர்
    மனமெலிந்துநாற்பத்தி மூன்றென்றோதில்
இனஜனங்கள்பந்துமித்ரர் பகையாவார்கள்
    இசைத்தபொருள் மாடாடுசேதமாகும்
தனதுதேகம்மெலிந்து துயரத்தாலே
    தரணியிலேவறுமைபிணி யால்திகைத்து
தனமிழந்துவிதிவசமென் றேங்கியேதான்
    தத்தளித்துத்திகைப்பா ரென்றோதுவாயே. 43

உரை :—ஆருடங் கேட்க வந்தோர் நாற்பத்தி மூன்றென்று சொன்னால், இனஜனத்தார் பந்துமித்திரர்களெல்லாம் பகையா வார்கள். வறுமை சூழ்ந்து பலத்த கஷ்டநஷ்டமுண்டாகி ஆடு மாடு சேதமாகியும் பலவித கவலையுமுண்டாகி தத்தளிப்பாரென்று சொல்லுவீர்.

அன்புடனே நாற்பத்தி நாலென்றோதி
    ஆருடங்கேட்போர்க்கு காரியசித்தி
பொன்மயமாம்பெண் ணொருத்தி யாலேமெத்த
    பொருளுடனேபூஷணமும் கிடைத்தேத்தானும்

RangaRakes tamilnavarasam.com

நன்மையாய்தனவந்த ராயிருந்து
  நலம்பெறுவார்கீர்த்திசம் பத்தினாலே
இன்பாகதிரவியசம் பத்தினாலே
  இனிமையாய்வாழ்வாரென் றோதுவீரே. 44

உரை :—ஆரூடங் கேட்க வந்தவர்கள் நாற்பத்தி நாலென் றுரைத்தால், அழகான ஓர் பெண்ணும் பொருள் கிடைத்து ஆடை ஆபரண அலங்காரத்துடன் மிகவும் கீர்த்திப் பிரகாசமாய்த் தனதான்ய சம்பத்துடனே, பந்துமித்திரர்களுடன் சுகஜீவியாய் வாழ்ந்திருப்பார்களென் றுரைப்பீர்.

ஆரூடங்கேட்கவந்தோர் நாற்பத்தைந்தை
  அன்புடனே யுரைத்தாலே காரியசித்தி
சீருடனேபலநன்மை விளையும்நல்ல
  சொர்ணபணிபூஷணங்கள் கிடைக்கும்பாரே
பாருக்குள் தனதான்ய சம்பத்தோடு
  பாக்யவானாயிருப்பா ரென்றேசொல்லு
காருண்யமேவும்நவக்கிர கங்களாலே
  கவுரவமாய்ஜீவிப்பா ரெனச்சொல்வீரே. 45

உரை :—ஆரூடங் கேட்க வந்தவர்கள் நாற்பத்தைந்தென்று சொன்னால், அவர்கள் நினைத்த காரியம் சித்தியாவதுடன் வெகு மேன்மையாக நன்மனைதமைந்தவர்களாய் தனதான்ய சம்பத்துடனும், உத்யோகவிர்த்தி, வியாபார லாபத்தால் திரவியஞ் சேர்த்து மனோற்சாகமாய் சதாகாலமும் நவக்கிரகங்களின் சகாயத்தினாலே வெகு மேன்மையாய் சீவித்திருப்பார்கள்.

கவலையுடன் ஆரூடம் கேட்கவந்தோர்
  கலக்கமுடன் நாற்பத்தி ஆறென்றோதில்
தவறுமல்நேர்ந்தகஷ்டம் சிதறுமற்றுந்
  தன்னையேவெகுதுயர மனுபவிக்கச்செய்யும்
நவக்கிரகபூஜைசெய்தால் பக்தியாலே
  தனமுடனே ஆடுமாடு பொருளும்சேர்த்து
அவனியிலே தனவந்தராயிருந்து
  அன்புடனேவாழ்வாரென் றோதுவீரே. 46

உரை :—ஆரூடங் கேட்க வந்தோர் நாற்பத்தாறென்றுரைத்தால் அச்சமயத்திலிருக்கின்ற கஷ்ட நஷ்டத்தினால் பலவித துன்பமும் துயரமு மனுபவிப்பார்களென்று சொல்ல வேண்டும். ஆனால். பகவத் பக்திபாவனத்தமாக நவக்கிரக பூஜை செய்து கொண்டிருந்தால் உத்யோகமேன்மை, வியாபாரலாபம், திரவிய சம்பத்து தனதான்ய லாபத்துடனே சுகமாய் சீவித்திருப்பார்கள்.

RangaRakes tamilnavarasam.com

அன்புடனே நாற்பத் தேழென்றுரைத்து
    ஆருடங்கேட்கவந்தோர் நினைத்தகாரியம்
நன்மையுடனே ஜெயமாய் விளங்குமித்த
    ஞாலத்தில்வெகுமேன்மை யாகவாழ்ந்து
துன்பமற்றுதுயரமற்று கஷ்டமின்றி
    சுகசீவியாகவே வாழ்ந்திருந்து
பொன்பொருளுஞ்சேகரித்து சம்பத்தோடு
    பெருமையாய்வாழ்ந்திருப்பா ரெனச்சொல்லீரே. 47

உரை :—ஆருடங் கேட்க வந்தோர் நாற்பத்தேழென்று சொல்வாரானால் தாங்கள் நினைத்த காரியமெல்லாம் சித்தியாவதுடன் உத்யோகவிர்த்தியினால் பொன் பொருள் பூஸ்திதியுடன் வெகு மேன்மையாக சீவித்திருப்பார்கள். ஆனால், சிலநாட் சென்றால் மிகவும் மேன்மையாய் பந்து மித்திரர்களுடனே சகலரும் தனவந்தனென்று புகழ்ந்துரைக்கும்படியாக நாளுக்கு நாள் நடும்ப விர்த்தியாகி நன்மையுடன் மனைவி மைந்தர்களுடனே வாழ்ந்திருப்பார்களென் றுரைப்பாய்.

நலமுடனே ஆருடங் கேட்கவந்தோர்
    நாற்பத்தியெட்டென்று சொல்வாரானால்
பலவிதமாய்நன்மையுண்டு மித்ரருடனே
    பக்ஷமுடன்வியாபாரந் தனிலேலாபம்
கலகமிலாசுகமாக வாழ்ந்திருப்பார்
    கனகமணிபூஷணமும் பூமிலாபம்
சிலகாலத்திற்குள்ளே கிடைத்துநன்றாய்
    சித்தமகிழ்வாகவே சீவிப்பாரே. 48

உரை :—ஆருடங்கேட்க வந்தவர்கள் நாற்பத்தியெட்டென் றுரைத்தால் சிநேகிதருடனே பலவிதமாகிய நன்மையும் கீர்த்தியும் பொருந்தி தனந் ான்ய சம்பத்துடன் திரவிய லாபமும், பூமிலாபமும் கிடைத்து, சில காலத்திற்குள்ளே தனத்தான்ய சம்பத்துடன் உத்தியோக விர்த்தியினாலும், வியாபார லாபத்தினாலும் திரவிய சேகரஞ் செய்து சுகசம்பத்துடனே சீவித்திருப்பார்கள்.

ஜோதிடர்முன் ஆருடங்கேட்கவந்தோர்
    சொன்னதோர் நாற்பத்தி யொன்பதுக்கு
ஆதியிலுன்னுடனே நேசித்திருந்தோன்
    அவனுறவைநீக்கியுந்தன் மனதின்பேரில்
பூதலத்திலேயிருந்தால் வர்த்தகத்தால்
    பொன்பொருளும்மிகசேர்த்து சுகவானாக
நீதிதவறாமலே சன்பாதம்
    நினைத்திதேதுதித்து மகிழுவாயே. 49

உரை :—ஆருடங்கேட்க வந்தவர்கள் நாற்பத்தி ஒன்பதென்றுரைத்தால், ஆதியில் நேசித்திருந்த சிநேகிதனை விடுத்து, தனிமையாக வியாபாரஞ் செய்துக்கொண்டிருந்தால் விசேஷமாய் திரவியஞ் சேகரித்து மிகவும் மேன்மையாக பிரபுத்தன்மையாய் பொன், பொருள் விசேஷமாய் சேர்த்து மேன்மையுடன் மனைவி, மைந்தர் சுற்றத்தாருடன் வாழ்ந்து, சிவத்தியானமாய் பல தினமும் சுகானந்தமா யிருப்பதற்காகும்.

ஆருடங்கேட்கவந்தோர் ஐம்பதென்றால்
அன்புடனேசிலகாலஞ் சென்றதானால்
சீருடனே பொன்பொருளும் மிகவே தேடி
சிறப்புடனே தனவந்தராகவாழ்வார்
பாருக்குள்பாக்கிய வானுமிருந்து
பலநாளும்பிரபுத் தன்மையாகவாழ்ந்து
காருண்யமாகவே தர்மஞ்செய்து
கவலையின்றியெந்நாளும் சீவிப்பாரே. 50

உரை :—ஆருடங்கேட்க வந்தோர் ஐம்பதென்று சொன்னால் சிலகாலஞ் சென்றால் தனந்தான்ய சம்பத்துடனே திரவிய சேகரஞ்செய்து மகாதனவந்தராக பொன் பொருள் பூஸ்திதிகள் பெற்று திரவியவந்தனாய், பிரபுத்தன்மையாகக் கவலையில்லாமலிருப்பதற்காகும்.

கலகத்தால்பயமுமில்லை தூரஞ்சென்றோர்
காணுவார் இரண்டொரு வருடஞ்சென்றால்
நலமுடனே பிரபுக்கள் நேசமுண்டு
நன்மைமிகவுண்டாகும் பொருளும்சேரும்
மலைதனிலேபோயிருக்க லாகும்நல்ல
மதிமிகுந்தபுத்திரர்கள் பெற்றேவாழ்வார்
தலைநோயும்கண்டுதணிந் திடுமெப்போதும்
தரணியிலேசுகமாக வாழ்குவாரே. 51

உரை :—தற்சமயம் ஐம்பத்தொன்றுயென்றால் கலகத்தினால் பயங் கிடையாது, தூரதேசத்திற் போனவர் இரண்டொரு வருடஞ் சென்றால் வருவார்கள், பிரபுக்கள் நேசமுண்டு, விசேஷ தன்மையும் உண்டாவதுடன் திரவிய சேகரஞ்செய்து யாத்திரை வாசியாய் மலைகளில் போயிருக்கும்படியான நன்மையும் உண்டாகும். தமது மனைவி ஆண் குழந்தையைப் பெற்று சுகசீவியாயிருப்பதற்காகும். ஆனால், சீதள சம்பந்தமாக தலைநோய் வந்தாலும் உடனே விலகி சவுக்யமா யிருப்பதற்காகும்.



RangaRakes tamilnavarasam.com

அன்புடனேகொஞ்தாரந் தனில்சேர்ந்தாலும்
அநேகவிதகார்யங்க ளுஞ்செய்யவல்லோன்
தன்பங்கைசகோதரனுக் கீந்துநல்ல
தயாளகுணமாகவே யிருப்பானென்றும்
நன்மையுடன்வணக்கத்தி லுயர்த்தோனுநம்
ஞானமதில்சகவானும் விளங்குவானே
பன்முறையும்பாரிலுள்ளோர் புகழ்ந்துபேச
பணமுடனேயிருப்பார் கவனிப்பீரே. 52

உரை :—ஐம்பத்திரண்டு யென்று சொன்னால், வெகு தூரத்தில் சேருவதாயிருந்தாலும் அந்த காரியத்தை உடனே செய்வதற்கிசைந்த சமர்த்தனும் விளங்குவதற்காகும். தனது பங்கு பாகத்தைத் தனது சகோதரனுக்குக் கொடுத்துவிட்டு, தயாளமும் தயாள குணமாகவே யிருப்பானென்றும் தன்மையுடன் சகலரிடத்திலும் வணக்க மிகுந்த மரியாதையுடனே விளங்கி, சகலரியால் பலநாளும் தன்மையுடன் பலபேரும் புகழ்ந்துரைக்கும் பணமும் விளங்கி சுகமா யிருப்பதற்காகும்.

என்னியநோர்காரியங்க ளாகாதப்பா
எடுத்துசெய்யுங்காரியத்தில் பலன்தராது
தன்மைமிகும்நன்மனதும் வருத்தமாகி
தரணியிலேவறுமையால் தியங்கும்போது
வன்மையுள்ளபந்துமித்ர ருரைத்தவாக்கால்
வளமைமிகும்காரியங்கள் பலிதமுண்டு
கன்னியமாய்பொருள்சேரும் கவனிப்போர்க்கு
காரியசித்தியுண்டு மயங்கிடாதே. 53

உரை :—ஐம்பத்திமூன்று யென்றால் நீ மனதில் நினைத்த காரியங்களொன்றும் நடவாது. விடாமுயற்சியுடன் எடுத்து செய்யும் காரியத்திலும் பலன் கிடையாது. குளிர்ச்சி பொருந்திய சாந்தகுணமும் வருத்தமுமடைந்து சிலநாள் வரையிலும் வறுமையினால் தியங்கும்போது, தமது பந்துமித்திரர்கள் சொல்லும் நல் வாக்கியத்தால் செய்யும்படியான தொழிலால் பொருள் சேர்த்து திரவியவந்தனு யிருப்பதற்காகும். சகலவித காரியமும் சித்தியுண்டாகும்.

துன்பமுடன் துயர் நீங்கி சிநேகராலே
சுகமடைந்து பொருள்சேரஞ்செய்தன்பாய்
நன்மையுடனே நினைத்த காரியசித்தி
நலமுடனேசகலவித நன்மையுண்டு

RangaRakes tamilnavarasam.com

பின்னுமொருநற்சேதி கலியாணம்கூடும்
பிழையில்லாசுபகரும மெல்லாம்வாய்க்கும்
அன்புடனேநீநினைத்த காரியங்கள்
அனைத்துமேசுகமாக நடக்கும்பாரே. 54

உரை :—ஐம்பத்து நான்கென்றால் இத்தனை நாளா யிருந்த துன்பமும் துயரமும் விலகி, உன்னுடைய சிநேகிதர்களாலே சகலவித காரியமும் சித்தியாவதுடன், பொன் பொருள் யாவும் விசேஷமாய் சேர்ந்து சுகமா யிருப்பதற்காகும் சகலவித நன்மையும் உண்டாகும். கலியாண காரியங்களுமுண்டு. இன்னும் விசேஷ சுபகாரிய மனைத்தும் நேரிட்டு சவுக்கியமா யிருப்பதற்காகும்.

செல்லுகின்றமார்க்கத்தில் காரியசித்தி
ஜெகம்புகழவாய்த்திடுமே அறிவுவித்தி
கல்வியிலும்விசேஷமாய் பவிதமுண்டு
காதலியும்நன்மனதா யிருந்துவாழ்வார்
நல்விவேகமுமுண்டு நன்மையான
நற்சகோதரர் துணை யாவாரின்னும்
வல்லமையும்கீர்த்தியுண்டு பொருளுமுண்டு
வையகத்தில்பிரபுவென வணங்குவாரே. 55

உரை :—ஐம்பத்தைந்தென்றால் வித்தியாபுத்தி விசேஷத்தினலும் நற்கீர்த்தி யுண்டாகும். நற்சமயம் போகும் ஸ்தானத்தில் எடுத்த காரியம் சித்தியாகும். தனது மனையாளும் ஆசாபாசமாகவும் நற்குணசாலியாகவு மிருந்து பலவித நன்மையும் செய்வாள். நல்ல விவேகமும் பந்துமித்திரர் சேர்க்கையும் பொருத்தி யிருப்பதுடன் அவர்கள் சொல்லும் வாக்கியத்தின்படி நடத்தால் காரியசித்தி யுண்டாவதுடன் நல்ல விவேகம் பொருந்தி, சகோதரர் துணையாக விளங்குவார். வல்லமையும் கீர்த்தியும் பொன், பொருளுமுண்டாகும். உலகத்தில் பிரபு வென்று வணங்குந் தன்மையான பலவிதமாகிய நன்மையுமுண்டாகும்.

வீணன அலைச்சலும் பகையுமுண்டு
வெகுஜனங்கள்சத்துருவாய் விளங்குவார்கள்
காணிபூமியைவழக்கால் ஜெயித்துக்கொண்டு
கைவசமாய்வைத்துக் கொண்டேபிழைக்க
வேணுமெனில்சிவன்கோவில் தனிலேநெய்யால்
விளக்கேற்றிபூஜித்து வருவாயாகில்
தோணும்ஞானகல்வி பொருளும்சேரும்
தொல்லுலகில்சுகமாக வாழலாமே. 56

உரை :—ஐம்பத்தாறென்றால் தற்சமயம் பிரயோசனமில்லா மல் வீணும் அலைச்சலுண்டு. பல ஜனங்களின் விரோதமும் நேரிட்டு அதனாலே பகையாகி, தனது பூர்வீக சுவாதீனமா யிருந்த காணிபூமியை வழக்கால் வென்று மீட்டுத் தனது கைவச மாக வைத்துக்கொண்டு பிழைப்பதற்காகும். ஆனால் தினந் தோறும் சிவன் கோவிலில் நெய் விளக்கேற்றி வைத்து பூஜித் தால், ஞானமும் கல்வியும் விசேஷித்து வியாபாரத்தினாலும், உத்யோக சம்பத்தினாலும் பொன், பொருள் விசேஷமாய் சேர்ந் திருப்பதுடன் உலகத்தில் சதா சுகமாக இருப்பதற்காகும்.

துயர்வந்துநேருமுத் தன் பந்துமித்திரர்
துணைவர்கள்பகையாவா ரிச்சமயந்தன்னில்
நயமிக்கமேலோராலே நன்மையுண்டு
நாடியசகாயமுண்டு கீர்த்தியுண்டு
பயமில்லை இந்தமாதத்திருந்து
பக்குவமாய்சகலருமே நேசமாவார்
சுபகாரியமெல்லாஞ்சித்தி யாகுமென்று
சொல்லுவீர்சோதிட சாஸ்திரவல்லோரே. 57

உரை :—ஐம்பத்தேழென்றால் தற்சமயம் துன்பமும், துயர மும் நேரிட்டு பலவித கஷ்டமுமடைவித்து பந்துமித்திரர்கள் பகை யாவார்கள். ஆனால், இச்சமயத்தில் உத்தமர்களின் சகாயத் தினால் பலவித நன்மையுமுண்டு. அவர்களால் நாடிய சகாயமும் கீர்த்தியுமுண்டாவதுடன் இந்த மாதத்திலிருந்து பலவித நன் மையும் கீர்த்தியும் பொருந்தி சகலரும் சிநேகிதமாவார்கள். இன்னும் தனது சுபகாரியமனைத்தும் சித்தி யுண்டாகுமென்று சொல்வீர் ஜோதிட வல்லோர்களே.

கன்னிகையும்கிடைக்குமினி சுபங்களுண்டு
கலியாணகாரியங்கள் நடக்கும்பாரே
தன்மையாய்பொருள்சேரும் ஆனால்சத்துரு
நாட்டத்தினால்சில துன்பமுண்டு
இன்னும்சிலநாட்பின்னால் வறுமைதுன்பம்
இன்னலெல்லாம்விலகி சவுக்கியமாகி
பொன்பொருளும்மிக சேர்த்துசவுக்கியமாகி
பிரபுவெனவாழ்குவா ரென்றறிகுவீரே. 58

உரை :—ஐம்பத்தெட்டென்றால் இந்த சமயத்தில் நாடிய கன்னிகையும் கிடைக்கும். இன்னும் சுபகாரியமும் நடக்கும். கலியாண வைபவங்களும் நடந்து சவுக்கிய மடைவதற்காகும். ஆனால், பகைவர்களின் பார்வையினால் பலவிதமான வகையும்,

RangaRakes tamilnavarasam.com

துன்பமும், துயரமும், கஷ்டநஷ்ட முண்டாகும். ஆனால், இன்னும் சிலநாட் சென்ற பிறகு வறுமையும், துன்பமும் விலகி சுகமடைவதுடன் சத்துருக்களின் விபரீத பகையும் விலகி சகலரும் நேசமாவார்கள். மனோற்சாகமதிகரித்து சுகசவுக்கியமா யிருப்பதுடன் பொன், பொருள் சேர்த்துக்கொண்டு பிரபுவென்று சகலரும் புகழ்ந்துரைக்கும்படியாக ஜீவித்திருப்பதற்காகும்

காரியங்கள்ஜெயமுண்டு கவலையில்லா
    கைதனிலேபொன்பொருளும் வெகுவாய்சேரும்
மாரிபெய்துன்வயல்தனிலே தானியங்கள்
    மாஷிமையாய்விளையுமின்னம் உனதுமச்சான்
நீரின்மேலேயிருந்துபொன் பொருளோடேவந்து
    நின்முகத்தைக்காணுவான் கவனிப்பாயே
பாரிலுள்ளோருந்தனக்கு நேசமாவார்
    பலதினமும்சவுக்கிய முண்டுதானே. 59

உரை :—ஐம்பத்தொன்பதென்றால், நினைத்த காரியம் ஜெயமுண்டு. கஷ்டநஷ்டமுங் கவலையில்லாமலும் கையில் பொன், பொருளும், அதிகமாக சேர்த்து சவுக்கியமா யிருப்பதுடன் மழை பொழிந்து தானியங்கள் விசேஷமாய் விளையும். உனது மைத்துனன் கடல் யாத்திரையாக தீவாந்திரத்திற் சென்றவன் பொன் பொருளோடு வந்து சேர்வான். உலகிலுள்ள சகலரும் உனக்கு சிநேகிதராய் விளங்க சுகஜீவியா யிருப்பாய்.

எடுத்தகாரியங்கள்சித்தி யாகும்உன்றன்
    இச்சமயம்நாமதமா யிருக்கும்நீயே
தொடுத்ததொருவியாஜ்ஜியத்தால் ஜெயமுண்டாகும்
    தோல்வியில்லைஜெயம்பெறுவா யுன்கையாலே
கொடுத்தபணமுங்கிடைக்கும் தடையிராது
    கோரியதோர் நன்மையெல்லாம் கிடைக்கும்பாரே
விடுத்தமனுவாகிதத்தால் நிதியும்பொன்னும்
    விசேஷமாய்கிடைக்குமினி கவனிப்பாயே. 60

RangaRakes tamilnavarasam.com

யாத்திரைபோக யோகம்மிகவேபெற்று
　　பாவிலைக்களவிற் கண்டால்மிகவும்தன்மை
பேத்திரம்விளங்கப்பாலன் பிறப்பான்தேவர்
　　கோரியதோர்தன்மையெல்லாம் செய்வாரின்னும்
கீர்த்தியுடன்பொன்பொருளும் ஆதியாக
　　கிடைக்குமப்பாசிறிதுநாள் சென்றதானல்
நேத்திரம்போல்பத்துமித்திர் சுற்றமெல்லாம்
　　நேர்மையாய்துணையிருந்து காப்பார்தானே. 61

உரை :—அறுபத்து ஒன்றென்றால் யாத்திரைபோக பாக்கியம் அதிகமாய் கிடைக்கப்பெற்று சுகமா யிருப்பதற்காகும். ஆனால், களவில் பாவிலைக் கண்டால் வெகு தன்மையாயிருக்கும். வம்ஸ விருத்தியாக ஆண் குழந்தைபிறக்கும். பகவத் பக்தியானந்தமாக பூஜா நைவேத்தியம் செய்வதால் தேவர்கள் சகல தன்மையும் தருவதற்கிசைந்தவை யனைத்தும் தருவர். செய்யும் முயற்சியனைத்தும் பெற்று கீர்த்திப்பிரகாசமாய் பொன் பொருள் பெருகும்படியாக வாழ்ந்து சிறிதுநாளானபிறகு பந்துமித்திரரனைவரும் தமது நேத்திரம்போல வெகு ஆசாபாசத்துடன் துணையிருந்து காப்பாற்றுவார்கள்

சொற்பமாய்ப்பொருள் நஷ்டமாகுங்கண்டாய்
　　தொடுத்ததுவிளங்காமல் மறையுமின்னும்
அற்பர்களின்உறவுகிட்டும் ஆனலின்னும்
　　அரும்பொருள்நஷ்டத்தா லுண்டாகும்பின்பு
துர்ப்பலமாயெக்காரியமும் செய்யொணுது
　　தூரத்திலேகிடுவாய் சிறிதுநாளில்
நற்பலனையனுபவித்து ஞானத்தன்னில்
　　நலமுடனேஜீவிப்பீர் தரணிமீதே. 62

உரை :—அறுபத்திரண் டென்றால் சொற்பமாய் திரவிய நஷ்டமுண்டாகி செய்கின்ற வியாபாரமும் மறையும், துன்மார்க்கர்களின் உறவுகூடும், எந்தக்காரியமும் செய்யலாகாது. இன்னும் சிறிதுநாளில் தூரதேசத்தி லேகுவாய். ஆகையால் துர்ப்பலமாய் எந்தக் காரியத்திலும் பிரவேசியாமல் ஒவ்வொரு விஷயத்திலும் உறுதியானகாரியத்தையே நடத்தி அதனால் நற்பலனை யனுபவித்து பூமியில் சுஜீவியா யிருப்பீர்.

மன்னவரால்அச்சமுண்டு நஷ்டமாகும்
　　வறுமையும்சூழுமின்னும் வையகத்தில்
உன்வீடுதகனமாய் துர்ப்பலனைக்காட்டும்
　　உடனேயுன்தன்பலமும் சிதிலமாகும்

தன்மையில்லை அந்நியரால் வழக்குண்டாகும்
நாடியதோர் காரியங்கள் ஜெயமேயாகும்
உன்தகப்பன் பாட்டன் சொத் துந்தனக்கு
ஆர்ஜிதமாய்க் கிடைக்குமினி கலங்கிடாதே. 63

உரை :—அறுபத்து மூன்றென்றால் அரசராலும் பிரபுக்களாலும் அச்சமும் கஷ்டமு முண்டாகும். வறுமையும் சூழ்ந்து துயரப்படச் செய்யும். உனது வீடு தகனமாகி துர்ப்பலனை யனுபவிக்கச் செய்யும். உனது சிநேகிதரொருவரால் உனக்குக் கொஞ்சம் லாபபலனைக் காட்டும். அந்நியரால் வழக்கு வியாஜ்ஜியத் தொடுக்கப் பெறவு உனக்கு ஜெயமுண்டாவதுடன் உனது பிதுரார்ஜித சொத்துக்களும் உனக்கே வந்து சேரும்.

கன்னிகையாலேயுனக்கு பொருளும்சேரும்
கவலைகொஞ்சமுந்தனக்கு வருதுமப்பா
பொன்பொருளுமதனாலே செலவுசெய்வாய்
போசனமும் அற்பமாய் கிடைக்கும்பாரே
தன்மையில்லைசிலகாலம் கஷ்டம்துக்கம்
நாடினாலுந்தனக்குக் கொஞ்சநாளில்
வின்னமிலா வியாபாரத்தாலேலாபம்
விளங்கியேதனவந்த னுவாய்த்தானே. 64

உரை : -அறுபத்திநாலென்றால் கன்னிகையாலே உனக்கு வெகு லாபத்துடனே திரவியலாபம் கிடைத்து பொன் பொருள் ஆபரணங்களுண்டாகும்; ஆனால் கொஞ்ச மனஸ்தாபங்களுண்டாகி அற்பபோசனங் கிடைப்பதுடன் சிற்சில சமயம் கஷ்ட நஷ்டமான துன்பமும் துயரமு முண்டாகும். ஆனால் சிறிது நாள் பொறுத்து வியாபாரத்தில் வெகுலாபம் சேகரித்து தனந்தேடி திரவியவந்தனு யிருப்பதற்காகும்.

மனத்திலேவருத்தங்க ளாகும்மாசி
மாதத்திலுன்குல தேவதைக்கு
இனதனத்தாரோடன்பாய் பூசைசெய்தால்
இனிதுடனேவியாபார லாபத்தாலே
தனத்தேடிபொன்பொருள்பூஷ் திதியோடன்பாய்
திரவியஞ்சேகரித்து மகிழ்ந்திருப்பாய்
வனத்தினில்வாழும்கந்த னருளினாலே
வையகத்தில்கீர்த்தியுடன் சுகமாவாயே. 65

உரை :—அறுபத்தைந்தென்றால் மனவிசாரத்தினால் சில காலம் வரையிலும் துன்பமும் துயரமுமுண்டாகும். ஆனால் மாசி

RangaRakes tamilnavarasam.com

தத்தில் உனது குலதேவதைக்கு பூஜை செய்தால் நீ செய்யும் வியாபாரத்திலே அதிக லாபம் பெற்று சுகசீவியாக திரவியந் தேடி மகிழ்ந்திருப்பதற்காகும். ஆனால் சிவசுப்பிரமணியர் கிருபையால் அவரை பூஜித்து விரதானுஷ்டானம் புரிந்தால் கீர்த்திப்பிரகாசமா யிருப்பதுடன் தனவந்தவனாகவு மிருப்ப தற்காகும்.

துன்பமேசதாகாலம் பெருகுமப்பா
துடராத்தாலேகலகம் வந்துசூழும்
பொன்பொருளுஞ்சிறிதுநாட் சென்றாற்சேரும்
போனபொருள் கிடைப்பதுதான் கஷ்டமாகும்
நன்மையில்லாசிநேகிதத் தாலேகஷ்டம்
நாடுமேமேற்குதிசை தன்னிலேதான்
இன்னலுடன்சாந்திசெய்ய கஷ்டம்நீங்கி
இன்பமுடன்சுகமாக வாழ்குவீரே. 66

உரை :—அறுபத்தாறுயென்றால் துன்பமும் துயரமும் சதா காலமும் விளங்கி கலகம் சூழ்ந்து வறுமையாற் கலங்கி, தத்தளித் துத் தவிக்கச்செய்யும். ஆனால் சிறிதுநாட் சென்றபிறகு பொன் பொருள் விசேஷமாய்ச் சேருவதுடன் திரவியவந்தவனா யிருப் பதற்காகும். ஆனால் மேற்கு திசையில் சிநேகிதனொருவனாலே பலவித கஷ்டமுண்டாகும். அதற்குரிய சாந்தி செய்தால் சுகமா யிருப்பதற்காகும்.

இன்னவாற்கனைத்தோமென் றஞ்சிடாதே
இனிதுடனேசிறிதுநாட் சென்றதானால்
பொன்பொருளும்பூஷணமும் மிகவேபெற்று
பூஸ்திதியோடனுதினமும் சுகமாய்வாழ்வாய்
நன்மையுண்டுசிலகாலம் பொறுத்துனக்கு
நன்மணமும்சுகமுண்டு தனவானாக
துன்பமில்லாவாழ்ந்திருப்பாய் கீர்த்தியாலே
தொல்லுலகிலன்புடனே ஜீவிப்பாயே. 67

உரை :—அறுபத்தி ஏழென்றால், பலவித கஷ்டநஷ்டத்தால் களைத்தோமென்று அஞ்சவேண்டாம். சிலநாட் சென்ற பிறகு பொன் ஆபரணங்களும், பூஷணமும், திரவிய லாபத்துடனே பொருளும் பூஸ்திதியும் பெற்று சுகமாய் வாழ்வதுடன் கலியாண மும் நடக்கும். அதன் பிறகு துன்பமில்லாமல் கீர்த்தியுடனே பூலோகத்தில் வாழ்ந்திருப்பாய்.

பொருளதுவும்கைகூடும் நீயுமிப்போ
போருங்காரியமும் கைகூடுமின்னும்
அருளதுவுமுண்டாகும் அரனார்பூஜை
அனுதினமும்செய்துசிவன் ஆலயத்தில்

RangaRakes tamilnavarasam.com

திருவிளக்கேற்றிவைத்து தினம்பூசித்து
　　மேனிமைந்தர்சுற்றமுடன் வாழ்ந்திருந்தால்
பெருகுமேதன தான்ய பசுபுத்ரலாபம்
　　பேதமில்லாசுகமாக வாழ்குவாயே. 68

உரை :—அறுபத்தி எட்டென்றால் நீ நினைத்த காரியமும் ஜெயமாவதுடன், பொருள் கைகூடும். நீ இப்போது போதங் காரியம் ஜெயமாகும். பகவானுடைய அருளுண்டாகும். அனுக்கிரகமு முண்டாகும். ஆனால் சிவன்கோவிலில் திருவிளக்கேற்றி வைத்து தினந்தோறும் பூசித்துக்கொண்டிருந்தால் மனைவி மைந்தர் சுற்றத்தாருடன் சுகஜீவியாய் வாழ்ந்து நன்மையா யிருப்பதற்காகும் இன்னும் வியாபாரத்தினாலும் உத்தியோகத்தினாலும் திரவிய சேகரஞ் செய்து கீர்த்திப்பிரகாசமாக தன தான்ய பசுபுத்ரலாபத்துடனே யாதொரு கஷ்ட நஷ்டமனுகாமல் சதா மனமகிழ்வுடனே வாழ்ந்திருப்பதற்காகும்.

கைவிட்டுப்போனபொருள் வந்துசேரும்
　　கைப்பொருளும்தனந்தான்ய மிகவுண்டாகும்
பையவேவயலில்நெல் விளைவுண்டாகும்
　　பந்துமித்ரர்சகாயத் தாலேநீயும்
வையமிசைகீர்த்தியுடன் வாழ்ந்திருந்து
　　மாதர்களின்சுகந்தானே மாநிலத்தில்
துய்யமனதுடையோனுஞ் சவுக்யமாக
　　துன்பமிலாதெந்நாளும் வாழ்குவாயே. 69

உரை :—அறுபத்தி ஒன்பதென்றால் காணாமல் மறைந்து கைவிட்டுப்போன பொருள் வந்து சேரும் சதாகாலமும் தனத் தான்ய சம்பத்தும் கையிலிருக்குந் தன்மையாகவே லக்ஷ்மீ கடாக்ஷமா யிருக்கும் வயலில் விதைத்த நெல் முதலாகிய தான்யாதிகள் நன்றாய் விளைந்து லாபத்தை உண்டாக்கும். பந்து மித்திரர் சகாயத்தினால் உலகத்தில் கீர்த்திப்பிரகாசமாய் ஸ்திரீகளின் நேசத்தினால் நல்ல மனதுடனே துன்பமும் துயரமும் வியாகுலமுமில்லாமலே ஜீவித்திருப்பதற்காகும்.

இத்ததிநீமருந்துண்டால் வியாதிநீங்கும்
　　இகமுடனுன்மருமகனும் வருதவனே
உத்தமர்கள்சேர்க்கையால் பொருளும்வாய்க்கும்
　　உனதுநோய்தீர்ந்துனது இருமல்நீங்கும்
சுத்தமனதாகவே ஏழைகட்கு
　　சுயமாகஅன்னதானஞ் செய்தன்பாய்
சத்திரமும்சாவடியும் கட்டுதற்கு
　　சம்பத்தும்தனதான்ய மிகவுண்டாமே. 70

உரை :—எழுபதென்றால் இந்த சமயத்தில் நீ அவுஷதம் புசித்து சுகமாயிருப்பாய். உனது மருமகன் வருவான். நற்குண முடையவர்களின் சேர்க்கையால் திரவிய சேகரமுண்டாகும். உனக்கு உஷ்ணத்தாலிருந்த இருமல் வியாதி விலகும். ஆகை யால் சுத்த மனதாகவே ஏழைகளுக்கு அன்னதானம் செய்வதற் கும் சத்திரஞ்சாவடி கட்டுவதற்கும் ஏராளமான திரவிய லாபமும் தான்ய லாபமும் அதிகரித்து சுகசவுக்கியமா யிருப்பதற்காகும்.

அதிகமாயிருக்கின்ற துன்பமெல்லாம்
அகன்றுவிடுமுனதிஷ்ட தெய்வத்தின்மேல்
பதிகமோர்பத்துசொல்லி பூஜித்தாலே
பறக்குமப்பாதுன் முடன் துயரமெல்லாம்
நதியினில்வெள்ளமுண்டு தானியங்கள்
நன்றாகவேவிளையு முத்தன்தேவி
பதிவிரதாதன்மைமேற் கொண்டுன்மீது
பக்ஷமுடனே இருப்பாள் கவனிப்பாயே. 71

உரை :—எழுபத்தி ஒன்றென்றால் உனக்கு இத்தனை நாளாக அதிகரித்திருந்த துன்பமும் துயரமும் விலகிவிடும். உனது இஷ்ட தேவதையை பூஜித்து பத்து பதிகம் பாடினால் எத்தகைய துன்ப மும் காற்றாய்ப் பறந்தோடிப் போகும். உமது வயல்புறத்திலிருக் கும் நதியில் வெள்ளமதிகரித்து தான்யாதிகள் நன்றாய் விளையும். உனது மனையாள் புருஷ விஸ்வாசியாய் பதிவிரதாதன்மை அனு சரித்து உன்மீது ஆசாபாசமா யிருப்பாள்.

அன்புடன் நீகாணிநிலம் வாங்கினாலே
அதிகநன்மைபொன்பொருளு மிகவுண்டாகும்
சன்மார்க்கபந்துமித்ரர் மனைவிமைந்தர்
சம்பத்துற்சாகமும் வாய்க்கும்பாரே
நன்மையுண்டுஇஷ்டதெய்வ சகாயமுண்டு
நலமாகபகவானை பூஜித்தன்பாய்
இன்பமாயெந்நாளும் வாழ்ந்திருந்து
இப்புவியில்கீர்த்தியாய் ஜீவிப்பாயே. 72

உரை :—எழுபத்திரண்டென்றால் நீ இந்த சமயத்தில் காணி பூமி வாங்கினால் அதனாலே அதிக நன்மையடைத்தும் தேரிடுவ துடன் பொன், பொருள், திரவிய சம்பத்து, மனோற்சாக மனைத் தும் மென்மேலும் பெருகி பலவிதமான நன்மை யடைத்துமுண் டாகும். உனது இஷ்டதெய்வ சகாயமுண்டு. ஆகையால், பக வானைப்பூஜித்து நன்மனதாய் சகலருக்கும் நல்லவனா யிருப்பாய்.

RangaRakes tamilnavarasam.com

பந்துமித்திரர்களின் பகையுண்டாகும்
பாரிலுள்ளோர் விரோதமு மாகுமின்னம்
சிந்தைதனில்கலவரங்கள் மெத்தநேர்ந்து
சிலகாலமானபின் விலகிப்பின்பு
சுத்தனருளாலுனக்கு நன்மையுண்டு
கிருத்திகையுர்சஷ்டி விரதத்தாலே
சந்ததமும்தனந்தான்ய சம்பத்தோடு
சகலவிதநன்மையும் பெறுவாய்பாரே. 73

உரை :—எழுபத்திமூன்றென்றால் இந்த சமயத்தில் உனது பந்துமித்திரர்கள் பகையாயிருப்பதுடன் பாரிலுள்ளோரும் விரோதமா யிருப்பார்கள். மனதில் பலவிதமான சந்தேகமுண்டாவதுடன் கலவர பயங்கரங்களுண்டாகி சிலகாலம் சென்றுவிலகிப் போகும். ஆனால், கிருத்திகை சஷ்டி விரத தினங்களில் சுப்பிரமணியரை பூஜித்துக்கொண்டிருந்தால் கஷ்ட நஷ்ட துன்பமும் துயரமும் பறந்து இனிமேல் சுகஜீவியாயிருப்பதற்காக அன்றியும் தனதான்ய பசு புத்ரபாக்கியத்துடன் பொன், பொருளும் கிடைக்கப் பெற்று பெருமையாய் வாழ்ந்திருப்பதற்காகும்.

கொஞ்சமுன்னால்பொருள்சேத மாச்சுதப்பா
குருவருளாலினிமேல்பொன் பொருளுஞ்சேரும்
தஞ்சமென்றவன்பாதந் தன்னைநாடி
தாரணியிலேயிருப்பா யுனக்குமுன்னம்
வஞ்சியால்பலபொருளு மிழந்தோமென்று
வருத்தமுறாதேஇனிமேல் தனவானாய்
எஞ்சவிலாகீர்த்தியுடன் பந்துமித்திரர்
எப்போதுந்துணையிருந்து காப்பாரப்பா. 74

உரை :—எழுபத்திநாலென்றால் சில காலத்திற்கு முன்னால் கொஞ்சம் பொருள் சேதமாச்சுது. அதனால் வருந்தப்படாதே. உனது குரு உனக்குச் செய்யும் சகாயத்தினால் தனதான்யம், பசு புத்ர லாபமும், கீர்த்தியும் உண்டாகும். முன்னம் வஞ்சகர்களால் பொருள் சேதமாச்சுதென்று வருந்தப்படாதே. இனிமேல் உனது பந்துமித்திரர் எப்போதும் சகாயமாயிருந்து உனக்கு பலவித நன்மையும் செய்து காப்பாற்றுவர். இனிமேல் அஞ்ச வேண்டாம்.

வெற்றிமிகும்நீசெய்யும் வியாஜ்யத்தாலே
விரோதிகளும்உனதிஷ்டம் போலிருந்து
பற்பலரும்நட்பினரா யிருந்துனக்கு
பலநன்மைசெய்வார்கள் பூதலத்தில்

RangaRakes tamilnavarasam.com

கற்றவரும் பெரியோரும் பந்துமித்திரர்
    காசினியிலேயுனக்கு நன்மைசெய்வார்
நற்றவஞ்செய்வதுபோல ஆலயத்தில்
    நலமுடனேபோய்பகவானை பூஜிப்பாயே. 75

உரை :—எழுபத்து ஐந்தென்றால் இப்போது நடத்தி வருகிற வியாஜ்ஜியத்தில் நீயே ஜெயம் பெறுவாய். உனது விரோதிகள் உனது மனம்போல் நடத்துகொள்வார்கள். அன்றியும் பகைவர்களே உனக்கு பலவித நன்மை செய்வார்கள். புராணிகர்களும், பெரியோர்களும், உனது பந்துமித்திரரும் தற்சமயம் உனக்கு சகாயமா யிருப்பார்கள். ஆகையால், நீ தவஞ் செய்வதுபோல பக்தியுடன் தினந்தோறும் ஆலயத்திற்குப் போய் பகவானை பூஜித்துக் கொண்டிருப்பாய்.

துணைவன் தன்சொல்மீறு நடப்பாயாகில்
    தொல்லுலகில்பலநன்மை யடைந்துநீயும்
மணம்புரிந்தனேகசுக மடைந்தெந்நாளும்
    மனைவிமைந்தர்சுற்றமுடன் மகிழ்ந்தேவாழ்வாய்
வணக்கமுடன்சகலருமே யுந்தனுக்கு
    வாய்பேசினுஞ்சகாயஞ் செய்வார் நல்ல
குணமுடனேயிருந்துலகில் வாழ்ந்திருப்பாய்
    கூறுமென்சொல்தம்பியே ஜீவிப்பாயே. 76

உரை :—எழுபத் தாறென்றால் உன்னுடைய துணைவன் சொல் தவறாமல் நடந்து கொள்வாயானால் உலகத்தில் சகலவித நன்மையும் பொருந்தி கலியாண சுபகாரியமனைத்தும் நடந்து மனைவி, மைந்தர், சுற்றமுடன் மனமகிழ்ந்து வாழ்வாய். சகலரும் உனக்கு வணக்கமுடன் மரியாதை செய்வார்கள். உனது நற்குணத்தின் நல்ல வார்த்தையாலும் சகலரும் உனக்கு துணையாயிருப்பார்கள்.

உன்னுடையசகோதரனை விலக்கினாலே
    உயர்தரமாய்பந்துக்க ளுனைமதிப்பார்
அன்புடனேஉனக்குநல்ல காலமாகும்
    அயலில்மனைங்கூடும் வேதியனுதுனக்கு
நன்மையுண்டுசிலகாலம் சென்றதனால்
    நாடியதோர்காரியங்கள் சித்தியாகும்
இன்னுஞ்சிலநாள்சென்றால் துன்பஞ்சூழ்ந்திட்டாலும்
    இருக்காமற்பறந்தோடும் பிரபுக்களாலே. 77

உரை :—எழுபத்தேழென்றால் உன்னுடைய சகோதரனிடமிருந்து தற்சமயம் விலகிக்கொள்வாயானால், உனக்கு கீர்த்தியும்

RangaRakes tamilnavarasam.com

மதிப்புமுண்டாவதுடன் பத்துக் கூட்டங்களுன்னே பெருமையாய் மதிப்பதுடன் உனக்கு நல்லகாலமுண்டாகும். உனக்கு அதனுல் பலவித நன்மையும், நினைத்த காரிய சித்தியும் உண்டாகும். ஆனுல் சில நாள் பெருந்துக்கமான கஷ்டமும் கவலையும் சூழ்ந்திட்டாலும் பிரபுக்கள் சகாயத்தினுலே பலவித துன்பமும் விலகி சுகமாய் ஜீவித்திருப்பதற்காகும்.

கலகம்வரும்பிறகுக்ஷேம மாகுமுந்தன்
கஷ்டநஷ்டகவலையெல்லாம் விலகிப்போகும்
குலதெய்வத்தால்நோயின் குறைவுண்டப்பா
குடும்பத்திலுந்தனுக்கு சுகமேயில்லை
ஜலகண்டமுந்தனுக்குண் டானுலும்நீங்கி
சாராமல்சுகமாக வாழ்ந்திருப்பாய்
நிலையானதூரதேசவிருந் தொருவர்வந்து
நின்சமுகம்துணையிருப்பார் கவனிப்பாயே. 78

உரை :—எழுபத்தெட்டென்றால் கற்சமயம் கலகம் நேரிட்டு பிறகு சவுக்கியமாகும். உனது குலதெய்வத்தின் குறையால் வியாதியுண்டாகும். குடும்பத்தில் உனக்கு ஒரு சுகமுங் கிடையாது. உனக்கு ஜலகண்டமுண்டானுலும் உடனே விலகிவிடுவதுடன் சுகமாக ஜீவித்திருப்பதற்காகும். தூரதேசத்திலிருந்து ஓர் விருந்தாளி வந்து உனக்கு துணையிருப்பான்.

வாத்திபேதிஉன்வீட்டில் வந்துநிற்கும்
வளர்மதிபோல்சுகமாக வாழ்ந்திருப்பாய்
சாந்திசெய்தால்நவக்கிரக சகாயத்தாலே
சகலவிதநன்மையுண்டு தனலாபந்தான்
காந்தியுடனேவிளங்கி பொருளுந்தேடி
காணிபூமிபூஸ்திதியும் பெற்றுவாழ்ந்து
வேந்தனைப்போலேகீர்த்தி மனேற்சாகந்தான்
விளங்கியேபெருமையாய் ஜீவிப்பாயே. 79

உரை :—எழுபத்தொன்பதென்றால் உமது வீட்டில் வாந்திபேதி வந்து விலகிப் போகும். வளர்பிறைச் சந்திரனைப்போல் நாளுக்கு நாள் சுகஜீவியா யிருப்பதற்காகும். நவக்கிரக சாந்தி செய்தால் ஒன்பது கிரகங்களும் நன்மையையே செய்து சகாயமாயிருந்து தனத்தான்யம் பசு புத்ர லாபங் கிடைக்கும்படியான நன்மை புரிந்து சரீரம் பிரகாசமாய் விளங்கும் தன்மையான நன்மையனைத்தும் விளங்கி பொன் பொருள் சேகரித்து காணி, பூமி, பூஸ்திதியும் பெற்று பிரபுவைப்போல் பெருமையடைந்து

RangaRakes tamilnavarasam.com

சுகஜீவியாய் வாழ்ந்திருப்பதற்காகும். இன்னும் பலவித தன்மை யுடனே கீர்த்திப்பிரகாசமாய் மனோற்சாகத்துடனே பெருமை யாய் ஜீவித்திருப்பதற்காகும்.

கொஞ்சமாகிலுமுனது எண்ணங்கூடாது
குருபகையுமுனக்கு நேரிடுமப்போது
நெஞ்சிலே நீநினைத்த படியேயலைந்து
தெருந்தூரமப்பலூரிற் சென்றபின்பு
வஞ்சகரால்துன்பம்வாய்ந்து நலமாகாமல்
வாடியேதிகைத்திடுவாய் மனமெலிந்து
பஞ்சமாய்திகைத்துசில நாட்சென்றபிலே
பணம்சிறிதுசேகரித்து ஜீவிப்பாயே. 80

உரை :—எண்பது என்று சொன்னால் நீ நினைத்த எண் ணங்கூடாது. குரு பகையும் உனக்கு நேரிடும். மனதில் நீ நினைத்தபடியே அலைந்து திரிந்து, அந்நிய தேசத்திற் சென்று சில வஞ்சகராலே துன்பமும் துயரமும் நேரிட்டு, நன்மையாகா மல் திகிலடைந்து, வறுமையாற் கலங்கி சிறிதுநாட் சென்றபிறகு திரவிய சேகரஞ் செய்து ஜீவித்திருப்பாய்.

சித்தியாம்நினைத்ததெல்லாம் ஆனாலுனக்கு
சேதமாகும்பொருள்தான் மற்றொன்றுமில்லை
புத்திதனில்சிறந்தோனே மேற்குதிக்கில்
போனாலேயுத்தனுக்கு ஆகாதப்பா
சத்தியினாலுந்தனுக்கு அபாயமுண்டாம்
கவனித்துஜாக்கிரதை யாயிருப்பாய்
சுத்தமனதாயிருந்தா லுந்தனுக்கு
கும்புவியில்சிலகாலம் நன்மையாமே. 81

உரை :—எண்பத்து ஒன்றுயென்றால் நீ எண்ணிய காரிய மெல்லாம் நிறைவேறும். ஆனால், கைப்பொருள் சேதமாகும். புத்தியிற் சிறந்தவனே! நீ இந்த சமயம் மேற்கு திக்கில் பிரயாண மாய்ப் போனால் சத்தியினால் உனக்கு அபாயமுண்டு, அதற்காக அஞ்சாதே. சுத்த மனதாயிருந்தால் இந்த உலகத்தில் சிறிது காலம் சுகமாக ஜீவித்திருப்பாய்.

சஞ்சலமும்தானகலும் நீவிதைத்த
தானியமும்விளைந்துசுக மாயெப்போதும்
கொஞ்சுமொழிலஷ்மியின் கடாக்ஷமுண்டு
குவலயத்தில் வெகுகீர்த்திதானுண்டாகும்

RangaRakes tamilnavarasam.com

அஞ்சாமல்பூமியிலே வாழ்ந்திருந்தால்
ஆதரவாய்மனைவிமைந்தர் சுற்றத்தோரு
எஞ்சலிலாவாழ்ந்திருப்பாய் சுகானந்தமாக
எப்போதும்கவலையிலா ஜீவிப்பாயே. 82

உரை:—எண்பத்திரண்டு என்றால் இனிமேல் உனது மனசஞ்சலமுந் தீரும். நீ நினைத்த காரியங்கள் விளைந்து சுகஜீவியாய் லாபத்துடனே இருப்பாய். காணியோர் புகழ்த்துரைக்கும்படியான லக்ஷ்மீ கடாக்ஷம் பொருந்தி கீர்த்திப்பிரதாபமா யிருப்பதற்காகும். மனைவி, மைந்தர், பந்துமித்திரர்களுடன் சதாகாலமும் கஷ்டநஷ்ட கவலை யில்லாமல் சுகமாய் ஜீவித்திருப்பதற்காகும்.

உனதில்லந்தனிலிருக்கும் ஒருத்தியாலே
உனதெண்ணம்யாவுங்கை கூடுமின்னம்
மனதினில்நினைத்ததெல்லாம் மாறாமல்கூடும்
மாக்ஷியுடனேயுனக்கு நற்காலந்தான்
கனமுடனேவந்தெய்தும் உத்தியோகத்தில்
கௌரவமும்வியாபாரந் தனிலேலாபம்
தனதான்யசம்பத்துஞ் சகாயமாய்க்கும்
தாரணியிற்பிரபுவாய் காணுவாயே. 83

உரை:—எண்பத்துமூன்று என்றால் உனது வீட்டிலிருக்கும் ஒரு ஸ்திரீயினால் உனது மனதில் நினைத்தவையெல்லாம் யாதொன்றுந் தவறாமல் நடக்கும் உனது எண்ணமும் கைகூடும். இனிமேல் உனக்கு நற்காலமே வந்து சகலரும் உனக்கு சகாயமாயிருப்பதுடன் உத்தியோகத்தில் கௌரவமும் வியாபாரத்தில் லாபமும் உண்டாகும். பொன் பொருள், பூஸ்திதியுடன், தனந்தான்னிய சம்பத்துடனே பிரபுவைப்போல உலகோர் மதிக்குந் தன்மையாயிருக்கும்.

ஆகாதுநீநினைத்த காரியமெல்லாம்
அதிகபயமுண்டாகுந் திருடராலே
ஏகாதிபத்தியங்கள் சிறிதுசேர்ந்து
எவர்களுமேபுகழ்ந்துரைக்கும் படியாய்நீயும்
போகபாக்கியத்துடனே வாழும்போது
பொன்பொருளும்சேகரித்து வைப்பாயானால்
போகாதுசிறிதளவு முன்னைவிட்டு
பூலோகத்தில்கீர்த்தி யாயிருப்பாய். 84

உரை:—எண்பத்துநான்கென்றால் நீ நினைத்த காரியமொன்றும் நடவாது. திருடர்களால் அதிக பயமுண்டாகும். சிலநாட்

RangaRakes tamilnavarasam.com

சென்ற பிறகு தனவந்தனாய் வாழ்ந்திருந்து, சகலரும் புகழ்ந்துரைக்கும்படியாக சீவித்திருந்தும் சௌசவுக்கியமாய் சீவித்திருக்கும்போது சேகரித்த பொன் பொருள், பூஸ்திதி பணைத்தும் உன்னை விட்டுப் போகாமல் பிரபுவைப்போல வாழ்ந்திருப்பதற்காகும்.

உந்தனுக்கேகஷ்ட கஷ்டமுண்டாம்
 உளவாளியாலுனக்கு பகைவர் துன்பம்
வந்தாலும்சிறிதுநாள் பொறுத்ததானால்
 வையகத்திலுந்தனுக்கு நற்காலத்தான்
எந்தவிதமாகவந்து சேர்ந்திட்டாலும்
 எடுத்தகாரியசித்தி யாகுமின்னும்
பந்துமித்திரர்சுற்றமனைவி மைந்தர்களோடும்
 பணமுடன்சுகமாக வாழ்குவாயே 85

உரை :—எண்பத்தைந்தென்றால் உந்தனுக்கு கஷ்டமுண்டாகும் சத்துருக்களின் தந்திர சாமர்த்திய உளவாளியாலுனக்கு துன்பம் வந்தாலும் சிலநாட் சென்றால் யாதொரு துன்பமும் துயரமும் இல்லாமல் நல்லகாலம் வந்து சுகமாய் சீவித்திருப்பதற்காகும். நீ எடுத்த காரியம் எந்த விதமானாலும் சித்தியாகும். உனது பந்துமித்திரர் மனைவி மைந்தர்கள் உன்மீது பட்சமாய் இருப்பதுடன் சுக சவுக்கியமாய் வாழ்ந்திருப்பாய்.

அன்புடனேயுந்தனுக்கு பொருளும்சேரும்
 ஆனாலும்உனதுமித்ரர் சேர்க்கையாலே
நன்மையுண்டுமனைவிமைந்தர் வியாதியாலே
 தவித்தாலும்பிறகுசுக மாயிருப்பார்
உன்மாமன்தூரதேசந் திலிருந்துவந்து
 உந்தனுக்குபலநன்மை செய்வானின்னம்
பொன்பொருளும்பூஸ்திதியும் பெற்றுவாழ்ந்து
 பூலோகத்தில்கீர்த்தி யடைகுவாயே. 86

உரை :—எண்பத்தாறென்றால் உனக்கு இனிமேல் பொன் பொருளும் அதிகமாய்ச்சேரும். உனது சிநேகிதரின் சேர்க்கையால் பலவிதமான நன்மையுண்டு. ஆனால் உனது மனைவி மைந்தர்கள் வியாதியால் தவித்தாலும் பிறகு சவுக்கியமாயிருப்பார்கள். தூர தேசத்திலிருந்து உனது மாமன் வருவான். அவனால் உனக்கு பலவித நன்மையுண்டாகும். அப்பால் உனக்கு பலவிதமாகிய நல்ல பலன் அமைந்து, பொன் பொருள் தனந்தான்னிய சம்பத்தும் விசேஷமாய் அமைந்திருக்கும்.

RangaRakes tamilnavarasam.com

இன்பாகவுந்தனுக்கு நற்காலந்தான்
இசைந்தபடியேயமையும் பயப்படாதே
உன்தங்கைபுத்திரியை மணந்துநீயும்
உல்லாசமாகநீ வாழ்ந்திருந்தால்
பொன்பொருளுமுந்தனுக்கு வாய்க்கும்நல்ல
போஜனமும் சுகசவுக்கியமாகும்
அன்புடனேகவனித்து நல்லோர்சேர்க்கை
அடைந்தினிதாய்ஜீவிப்பாய்தாணிமீதே. 87

உரை :—எண்பத்தேழென்றால் உந்தனுக்கு இனிமேல் நல்ல காலம் கருத்தபடியாகவே வந்து சுகாவுக்கியத்தை யடையச் செய்யும். ஆனால் உனது தங்கையின் புத்திரியை மணம்புரிந்து மிகுஉல்லாசமாய் வாழ்ந்திருப்பாயானால், உனக்கு உத்தியோக சம்பத்தும் விசேஷித்து பொன் பொருள் பூஸ்திதியுடன் சுகசவுக்கியமுடனே நாவிற்கினிய நல்லுணவாதிகளமைந்த சுகபோஜனாதிகள் புசித்து சுகசவுக்கியமா யிருப்பதற்காகும்.

இந்தசமயத்திலுனக் கிருக்கும்நோய்கள்
இசைந்தமருந்தால் விலகி சவுக்யமாவாய்
சந்தோஞ்சேர்கன்னியரோ டன்பாய்வாழ்வாய்
சுகுணமாய்மனோல்லாச மாயிருந்து
பந்துமித்ரர்மனைவிமைந்த ருடனேயன்பாய்
பார்தனிலேதன தான்ய சம்பத்தோடும்
சந்ததமும்சுகஜீவி யாயிருந்து
சரீரசுகமாகவே யிருப்பாய்நீயே. 88

உரை :—எண்பத்தெட்டு என்றால் இந்த சமயத்தி லுனக் கிருக்கும் வியாதிகள் நீ உபயோகிக்கும் மருந்த அவுஷதத்தால் விலகி சவுக்கியமாகும் அழகான பெண்களுடன் சுகமாயிருப்பாய். உனது பந்துமித்திரர் மனைவி மைந்தர்களுடனே தன தான்ய சம்பத்துடன் சரீரசுகமாய் ஜீவித்திருப்பாய்.

இதமுடனேஉந்தனுக்கு சுகசவுக்யம்
இன்றுமுதலுந்தனுக்கு கிடைக்குமப்பா
பதமாகபிரபுக்க ளிடத்திற்சென்றால்
பணமுடனுத்யோகங் கிட்டும்நல்ல
தனலாபவியாபார விர்த்தியாகி
சொர்ணமுடனேபூமி வாகனங்கள்
அதிகாரமேன்மையும் பெற்றேயிந்த
அவனிதனிலன்பாக வாழ்வாய்நீயே. 89

44

RangaRakes tamilnavarasam.com

உரை :—என்பத்தொன்பது யென்றால் இனிமேல் உனக்கு சகலவித நன்மையும் சுகசவுக்யமு முண்டாகும். பிரபுக்களிடத்திற் பக்ஷமாகப் பேசி மேன்மையான உத்தியோகமும் பெற்று, சவுக்கியமா யிருப்பாய். உனது புத்திரன் செய்யும் வியாபாரத்தினால் பொன், பொருள், பூஸ்திதியும் பெற்று சுகமாய், அதிகாரமும் மேன்மையும் பெற்று உலகத்தில் மேன்மையாய் வாழ்ந்திருப்பாய்.

உத்தமர்கள்சேர்க்கையினா லுலகமீதி
உந்தனுக்குப்பலநன்மை யுண்டாமென்று
இத்ததியேமனதிலெண்ணி மகிழ்ந்திருப்பாய்
இசைத்தபடிபொன்பொருளும் சேகரித்து
புத்திரபாக்யமுடனே வாழ்ந்திருப்பாய்
பூலோகத்தனிலுனக்கு துன்பமில்லா
எத்தகியும் சுகஜீவியாயிருந்து
எல்லோருக்கும் நல்லவனாயிருப்பாய்நீயே. 90

உரை :—தொண்ணூறு யென்றால் உத்தமர்களின் சேர்க்கையினால் உலகத்தில் உனக்கு பலவித நன்மையும் சேருமென்று மனதில் மதித்துக் கொள்வாய், இன்னும் பலவிதமாகிய லாபமும் பொன், பொருள், பூஸ்திதிகளுனக் குண்டாகுமென்று மதித்துக்கொண்டு சுகமாயிருப்பாய் புத்திர பாக்கியமும் பெற்று வாழ்வாய். இனிமேல் பூலோகத்தில் சகலருக்கும் நல்லவனாய் விளங்கி சவுக்கியமா யிருப்பாய்.

பக்தியுடன்வித்தையுண்டு ஞானமுண்டு
பாக்கியமிகவுண்டு பொருளுஞ்சேரும்
சிக்கிலாமனதிலுத் சாகந்தோன்றும்
சிறந்தவிதம்நற்பலனே யநுபவிப்பாய்
பக்ஷமாய்ப்பலபேர்கள் நேசத்தாலே
பாக்கியவானாயிருப்பா ரென்றிட்டாலும்
அக்கறையாய்தான்செய்த வழக்கைவென்று
அந்நியதேசத்திற்சேர்ந்து வாழ்குவாரே. 91

உரை :—தொண்ணூற்று ஒன்றென்று சொன்னால், தான் எடுத்த காரியம் ஜெயமாகியும் தொடுத்த வியாஜ்ஜியத்தில் ஜெயம் பெற்றார் அந்நிய தேசத்தில் பிரயாணமாகியும் பெரியோர்கள் சேர்க்கையினாலும், வித்தை, புத்தியிற் சிறந்து பொருள் சேர்த்து ஜீவிக்கலாகும்.

RangaRakes tamilnavarasam.com

அன்புடனேபுத்திர பாக்கியம்பெற்று
　　அனுதினமும் சுகஜீவியாயிருப்பார்
தன்மையுடனே வியாபாரஞ்செய்து
　　நலமுடனேவாழ்ந்திருப்பா ரெந்நாளும்
இன்னலின்றி சுகசீவியாகவாழ்ந்து
　　இப்புவியில்நற்பே ரெடுத்துவாழ்த்து
வன்மையுடன்பலபொருளும் தேடியன்பாய்
　　வையகத்தில்பெருமையாய் சீவிப்பாரே. 92

உரை :—ஆரூடங் கேட்க வந்தோர் தொண்ணூற்று இரண்டென்று சொன்னால் சுகசம்பத்துடனே புத்திரபாக்கியம் பெற்று சதாகாலமும் சுகசீவியா யிருப்பதற்காகும். தான் செய்யும் வியாபாரத்தில் விசேஷ லாபமும் உத்தியோகத்தில் கீர்த்தியும் பெற்று திரவிய வந்தராயிருப்பதற்காகும்.

தமதினியசுற்றத்தார் தன்பாலே
　　தாரணியில்வெகுலாபம் கூடுமின்னம்
சமானமாயுள்ள தொரு நேசனாலே
　　சந்ததமும்தொழில் முயற்சிசெய்துகொண்டு
அமர்நாதன் துணையினாலேயித்த
　　அவனிதனில்கீர்த்தியாய் வாழ்ந்திருந்து
தமதுமனைபாள் புத்ரர்பந்துமு
　　தாரணியில்சுகமாக சீவிப்பாரே. 93

உரை :—ஆரூடங் கேட்க வந்தோர் தொண்ணூற்று மூன்றென்று சொன்னால், தமது சுற்றத்தார் பந்து, மித்தரர்கள் சகாயத்தாலே வெகு லாபங் கிடைத்து, அதனாலே பகவானருள் பெற விரதானுஷ்டானம் புரிந்து பெருமையாய் வாழ்ந்திருப்பீர்களெனப் புகலுவீர்.

வெஞ்சினம்விலகிப்போகும் விசனமற்றன்பாய்நாளும்
அஞ்சிடாதெத்ததாலும் அவனியில்கீர்த்தியோங்கி
வஞ்சகருறவைபற்று வாழ்ந்திருப்பீர்களென்றும்
பஞ்சமேபணுகிடாமல் பார்மீதில்வாழ்குவீரே. 94

உரை :—94-என்றால் மிகுந்த கோபமும் விசனமும் விலகி சதாகாலமும் யாதொருவருக்கும் அஞ்சாமல் தைரியத்துடனே வஞ்சகர் சேர்க்கை யில்லாமலும், வறுமை துயரில்லாமலும் வாழ்ந்திருப்பீர்கள். ஆனால், எடுத்த காரியமும் கைகூடும்.

RangaRakes tamilnavarasam.com

கழனியில் விளைத்த தான்யம் கடவுளின் கிருபையாலே
செழித்திட விளைத்து நன்றாய் க்ஷேமமாயிருப்பாயின்னும்
பழமைசேர் பந்துவாலே பகருமுன் கலியாணந்தான்
பழுதிலா நடக்குமென்று பகரும் ஜோதிட வல்லோரே. 95

உரை:—95-என்றால் கழனியில் நீ விளைத்த தான்யங்கள் கடவுளின் கிருபையால் செழிப்பாய் வளர்ந்து க்ஷேமமாய் சீவித்திருப்பாய், உனது பழமையான சிநேகிதன் உனக்கு சகாயமாயிருந்து பந்துக்களுடன் உனக்கு கலியாண காரியமும் கூடுமென்று சொல்வீர்கள்.

கன்றுடன் பசுவும் வாங்க கருதினாயுன் மனத்தில்
நன்றல்ல இந்த மாதம் நாடி நீ சென்றிடாதே
துன்பத்தால் கலகம் நேர்ந்து தொடர் வழக்காகும் பின்னும்
அன்றுனக்குரைத்த வாக்யம் அனுவேனும் பிசகிடாதே. 96

உரை:—தொண்ணூற்று ஆறென்று சொன்னால், நீ பசுவும் கன்றும் வாங்குவதற்கு மனதில் நினைத்தாய். இந்தக் காரியம் நலமல்ல. நீ இந்த மாதம் நினைத்த காரியம் முடியாது. கலகங்களுமுண்டாகும் இதை நீ மனதில் நினைத்து ஜாக்கிரதையாயிருப்பாயெனச் சொல்வீர்.

அன்புடன் தொடுத்த வியாஜ்யம் அவனியில் ஜெயமேயாகும்
துன்பமும் துயரம் போகும் தொல்புவி யோர்கள் மெச்சும்
நன்மையாய் மனமுங்கூடும் நாட்டினில் சுகமாய் நீயும்
இன்பமாய் வாழ்ந்திருப்பாய் இனதுடன் கவனிப்பாயே. 97

உரை:—ஆருடங் கேட்க வந்தோர் தொண்ணூற்றேழென்றுரைத்தால் நீ தொடுத்த வியாஜ்யம் ஜெயமாகுமென்றும், துன்பமும் துயரமும் விலகி சவுக்கியமாயிருப்பாயென்றும், வெகு பொருள் சேகரித்து கலியாண சுபகாரியமும் நடக்குமென்றும் இனிமேல் சுகசீவியாயிருப்பாயென்றும் சொல்வீர்.

இனியுனக்கெந்த நாளும் இன்னலுந் துயரிராது
முனிவதை விடுத்து நீயும் மூதறிவோர்கள் சூழ
மனதினில் துயரிலாமல் மதிமிகுத்தினிதாய் நாளும்
கனிவுள்ள மித்ரரோடு கவலையில்லாதிருப்பீர். 98

உரை: -ஆருடங் கேட்கவந்தோர் தொண்ணூற்றெட்டு என்று சொன்னால் துன்பமும் துயரமுமில்லாமல் கோபத்தை விடுத்து பெரியோர்கள் நேசத்தை வகித்து சிநேகிதரோடு சுகமாய் சீவித்திருப்பீரெனப் புகலுவீர்.

RangaRakes tamilnavarasam.com

பிரபுக்களாலுனக்கு பொன்பொருள் மிகஉண்டாகும்
தாணியில்சுகானந்தமாக தானிருப்பாயேநீயும்
பரமனார்பூஜைசெய்து பாரில்நற்பலனை நீயே
தருணமேஅனுபவித்து தரணியில்சீவிப்பீரே. 99

உரை :—ஆருடங் கேட்க வந்தோர் தொண்ணூற்று ஒன்ப தென்றால், பிரபுக்களால் உனக்கு பல நன்மையும் உண்டாவ துடன் பொன், பொருள் கிடைத்து சுகசீவியாக வாழ்ந்திருப் பதற்காகும். ஆனால், சதாகாலமும் சிவபூஜை செய்துகொண்டு உலகில் சீவித்திருப்பதே நலமாகும்.

பத்தினிவந்ககாலே பலவிதகலகமாகும்
மெத்தவும்பயப்படாதே மேன்மையாய்பிறகுவாழ்வாய்
சித்தத்தில்வருத்தமில்லா சிவபூஜைமறந்திடாமல்
பத்தியாயிருந்தாயானால் பசுவினால்சீவிப்பாயே. 100

உரை :—ஆருடங்கேட்க வந்தோர் நூறு என்று சொன்னால் அவர்களுக்கு கொஞ்சம் மனஸ்தாபமென்றும் மனைவியினால் கலக முண்டாகுமென்றும், ஆனால், சிறிது நாட்சென்றால் க்ஷேம முண் டென்றும், சிவபூஜை செய்துக்கொண்டிருந்தால், திரவிய லாபங் கிடைப்பதுடன் பசுவினால் பொருள் சேர்த்து பெருமையாய் சீவித்திருப்பீரெனச் சொல்வீர்.

அன்பானநண்பன்தன்னால் அவனியில்கீர்த்தியாக
துன்பமொன்றணுகாவண்ணம்சுகமுடன்பொருளுஞ்சேர்த்து
நன்மையாய்வாழ்ந்திருப்பாய் நாராயணனைபூஜித்து
இன்பமாய்சீவித்திருந்தால் இன்னலொன்றணுகிடாதே. 101

உரை :—ஆருடங்கேட்க வந்தோர் நூற்றி ஒன்றென்றுரைத் தால், நீ உனது சிநேகிதனாலே பலவித நன்மையும் கீர்த்தியும் பெற்று துன்பமில்லாமல் சீவித்திருப்பதுடன் திரவிய சேகரஞ் செய்து சுகசீவியா யிருப்பாய். ஆனால் தினந்தோறும் ஸ்ரீமந் நாராயணனை தியானஞ் செய்துக் கொண்டிருந்தால் எவ்வித மாகிய துன்பமும் துயரமு மில்லாமல் சீவித்துக்கொண்டி ருப்பா யெனச் சொல்வீர்.

கைவிட்டபொருளுங்கிட்டும் காசினிதன்னில்மெத்த
ஐயமில்லாமல்நாளும் அநேகமாய்பொருளும்சேரும்
வையகத்தோர்களுன்னை வணங்கியேநல்லோரென்று
துய்பநன்மனத்தோனென்ன துலங்குவாய்பயப்படாதே. 102

உரை :—நூற்றிரண்டென்று சொன்னால் உனது கைவிட்டுப் போன பொருள் கிடைக்குமென்றும் யாதொரு சந்தேகமுமில்லை

மல் திரவிய சேகரஞ் செய்து சீவிப்பதுடன் உலகத்தோர் சகல ரும் உத்தமனென்று உன்னை பூஜிக்குந்தன்மையான நலமனைத் தும் உண்டாவதுடன், சதாகாலமும் விசனமில்லாமலிருப்பீரெனச் சொல்வீர்.

உந்தன்கைவிட்டுப்போன உற்றதோர்பொருளும்சேரும்
சிந்தையில்பயப்படாதே சிறந்தநன்மார்க்கத்தாலே
எந்தகாரியமும்வென்று எதிரிகளில்லாமற்றுன்
சந்தோஷமாயிருப்பாய் சற்றேனும்மயங்கிடாதே. 103

உரை :—ஆருடங் கேட்க வந்தோர் நூற்றுமூன்றென்றால் உந்தன் கைவிட்டுப் போன பொருள் மறுபடியும் எந்த விதத்தி லேனும் உந்தனுக்குக் கிடைக்குமென்றும், எடுத்த காரியமெல் லாம் சித்தியாவதுடன் பகைவர் பயமில்லாம லிருப்பாயென்றும், சதாகாலமும் மனோல்லாசமா யிருப்பா யென்றும் சொல்வீர்.

வருகின்றதுன்பமெல்லாம் வந்தாலும்விலகிப்போகும்
பொருள்மிககிடைத்துனக்கு பூஷணம்பெறுவாயின்னும்
பெருநிதிபெற்றுவாழ்ந்து பொன்பொருள்பூமிலாபம்
தருணமேபெற்றுவாழ்வாய் தைரியம்விடாதென்பீரே. 104

உரை :—ஆருடங் கேட்கவந்தோர் நூற்றுநாலென்றால் தற் சமய மிருக்கிற துன்பமும் இனிமேல் வருகிற துன்பமும் கொடிய தாயிருந்தாலும் அஞ்ச வேண்டுவதில்லை. இனிமேல் பொருள் லாபம் கிடைத்து சதா சவுக்கியமா யிருப்பதுடன், திரவிய சேக ரஞ்செய்து சுகசீவியாய் இருப்பதற்காகும்.

அன்பானலக்ஷ்மிவாசம் அனுகியேவெந்தநாளும்
துன்பங்கள்வந்திடாமல் துயரில்லாபொருள்சேர்த்தன்பாய்
தன்மையேயனுபவித்து நலமுடன்சகலருக்கும்
இன்னலொன்றணுகிடாமல் இனிதுடன்சீவிப்பீரே. 105

உரை :—ஆருடங் கேட்கவந்தோர் நூற்று ஐந்துயென்று சொன்னால், இனிமேல் லக்ஷ்மிகடாக்ஷம் உண்டாகுமென்றும் எவ் விதமான துன்பமும் துயரமும் நேரிடா தென்றும், சதா காலமும் நன்மையா யிருப்பீர்களென்றுஞ் சொல்வீர்

ஆசையாய்நீயெடுத்த அன்புள்ளதொழில்களெல்லாம்
மாசின்றிமுடியுமுந்தன் மனைவியும்சுற்றத்தாரும்
பாசமாயிருப்பார்நீயும் பகைவரின்வியாஜ்ஜியத்தாலே
யோசனைபுரியவேண்டாம் ஒழுங்குடன்வெல்லுவாயே. 106

உரை:—ஆருடங் கேட்க வந்தவர்கள் நூற்று ஆறென்று சொன்னால் நீ எடுத்த காரியம் ஜெயமாகுமென்றும், அதனால்

RangaRakes tamilnavarasam.com

யாதொரு தடையில்லாமலும், குற்றங் குறையில்லாமலும் முடியுமென்றும், உனது மனைவியும் பந்துக்களும் அன்பாயிருப்பார்களென்றும், எதிரியை ஜெயித்து வியாஜ்ஜியத்தில் ஜெயம் பெறுவாயென்றும் சொல்லுவாய்

அன்பாயுன்புத்திரனாலே அநேகமாய்ப்பொருள்கிடைக்கும்
தன்மையாயெவரும்வாழ்த்த தரித்திரமணுகிடாமல்
தன்மையையனுபவித்து நலமுடன்வாழ்ந்திருப்பாய்
பொன்பொருள்மிகவேசேர்த்து பூமியில்ஜீவிப்பாயே. 107

உரை :—ஆருடங் கேட்க வந்தவர்கள் நூற்றேழென்று சொன்னால், உனது புத்திரனாலே வெகு பொருள் சேகரித்துக் கீர்த்தி வந்தனுபவிருப்பாயென்றும் சதாகாலமும் நன்மையையனுபவித்து பொன் பொருளுடன் பூமி காணி வாங்கி சீவித்திருப்பாயென்றும் சொல்லுவீர்.

பெருமழைபோலேவந்த பொல்லாங்குந்துன்பமெல்லாம்
தருணமேவிலகிப்போகும் சஞ்சலமினிமேல்வேண்டாம்
கருணையாய்மித்ரருன்னை காப்பாற்றுவதற்காகத்தான்
பொருளுபகாரஞ்செய்வார் பொறுமையாய்வசிப்பாயே. 108

உரை :—ஆருடங் கேட்க வந்தவர்கள் நூற்றெட்டென்று சொன்னால் உனக்கு மழைபோலே வந்த துன்பமும் துயரமும் விலகிப் போகும். தற்சமயம் யாதொரு கவலையில்லாமல் சீவித்திருப்பதற்காகும். ஆனால் மிகவும் கருணை பொருந்திய உனது சிநேகிதனால் வர்த்தகஞ்செய்தும் உத்தியோகஞ்செய்தும் திரவிய சேகரஞ்செய்து பொறுமையாய் சீவித்திருப்பீரென்று சொல்லுவீர்கள்.

சகாதேவராருடம் முற்றிற்று.

RangaRakes tamilnavarasam.com

# ஸ்திரீ ஜாதகம்

## கணேசர் துதி

விருத்தம்

திருவளர்பிரதனான தேவனேகணேசமூர்த்தி
தருணம்ஸ்திரீஜாதகத்தை தரணியோர்பார்ப்பதற்கு
அருமையாயெழுதுகின்றேன் ஆதிவிக்னேசாவெந்தன்
குருவாகவந்தென்முன்னே கூறும்ஜோதிஷத்தைநீரே.

## நூல் வரலாறு

உலகினிலுள்ளோர்முன்னே உரைக்கும்ஸ்திரீஜாதகத்தை
நலமுடன்கவனித்தோர்ந்து நவக்ரகசகாயத்தாலே
பலவிதலாபம்பெற்று பார்தனிலுள்ளோரெல்லாம்
நிலவுநீள்சடையோன்பாதம் நினைத்தன்பாய்பூஜிப்பீரே.

அன்புடன்பூலோகத்தில் அன்னைகர்ப்பத்திருந்து
இன்பமாய்ப்பிறந்தவேளை இலக்கினம்கணித்துக்கொண்டு
பன்னிரண்டுராசிதன்னில் பகருங்கோளிருப்பதோர்ந்து
நன்மையாய்பலாபலத்தை நவில்வீர்ஜோதிடவல்லோரே. 1

உரை:—உலகில் வசித்துவரும் மாந்தர்களின் ஜாதக பலாபலனைக் கவனித்துப் பலன் சொல்வதென்றால், தாயின் வயிற்றிலிருந்து குழந்தை பிறந்தபோது கெடியாரத்தைப் பார்த்து அதில் குறிப்பித்திருக்கும் இங்கிலீஷ் மணிக்குச் சரியான தமிழ் நாழிகையைக் கணக்கெடுத்து இலக்கினம் பிரித்துப் பார்த்தால் குழந்தை பிறந்த வேளையில் எந்த லக்கினம் உதயமாயிருக்கிறதோ அதே ஜன்ம லக்கினமாகும். அந்தச் சமயத்திலிருக்கும் நக்ஷத்திரம் எந்த ராசியைக் குறிப்பிக்கின்றதோ அதே ஜன்மராசி யென்பதாய் தீர்மானஞ் செய்துக்கொண்டு அந்த நக்ஷத்திரத்தின் நான்கு பாகத்தில் எந்தப் பாகத்தில் குழந்தை பிறக்கிறதோ அதனையே கவனித்து அந்த நக்ஷத்திரத்தின் முதலெழுத்தைக் கொண்டு மற்ற எழுத்துக்களுடனே சேர்த்தபடியே பெயரிட்டால் அந்த பேர் ராசியைப் பார்த்து ஜோதிடர் பலன் சொல்லுவதற்காகும்.

## ஓர் குழந்தை பிறந்தால் ஜாதகம் கணிக்கும் விபரம்

சுக்கிலஆடி மாதம் தோன்றிடுப்பத்தாந்தேதி
சிக்கிலாகுழந்தைபெற்றால் சீருடன்ஜாதகத்தைப்
பக்குவமாய்க்கணித்துப் பார்த்துநற்பலனைத்தானே
தக்கதாய்ஜோதிடன்சொன்னாலே சரியாகயிருக்கும்பாரே. 2

RangaRakes tamilnavarasam.com

உரை :—சுக்ில வருஷம் ஆடி மாதம் பத்தாந் தேதியில் குழந்தை பிறந்தால் முன் தெரிவித்தபடியே இராசி லக்கினம் பிரித்து ஜாதக பலாபலனை சொன்னால் சரியாய் நடக்கும். ஆனால் கஷ்டபலனிருக்கும்போது எந்த கிரகத்தினால் நடக்கிறதென்று கவனித்து அதற்கிசைந்தபடியே சாந்தி செய்துக் கொண்டால் சவுக்கியமா யிருப்பதற்காகும்

வருஷமுர்மாதந்தேதி வழங்கியதிதிநஷத்திரம்
பெருமைசேர்கரணயோகம் பேசரும்லக்னராசி
அருமையாய்கணித்தாராய்ந்து அவரவர்பலனைச்சொல்லி
வருவதேஜோதிடர்க்கு வல்லமையெனக்காண்பீரே. 8

உரை :—ஓர் குழந்தை பிறந்தால் முதலாவது நமது இராஜாங்கத்தாரால் நியமித்த வருஷம் மாதம் தேதியை அனுசரித்து தமிழ் வருஷம் மாதம் தேதியைக் கணக்கெடுத்து இராசி லக்கினம்பிரித்து பலன் சொல்லும்போது சரியாயிருக்கும். அப்படி விதமெனில் இங்கிலீஷ் 1929-ம் வருஷம் ஆகஸ்டு மாதம் 9-ந் தேதி காலை 6-மணிக்கு குழந்தை பிறந்ததென்றால், அதை அனுசரித்து தமிழ் சுக்கில வருஷம் ஆடி மாதம் 25-ந்தேதி வெள்ளிக்கிழமை பஞ்சமி திதி 40-9 அஸ்த நக்ஷத்திரம் 37-45 சாந்தி யோகம் 4-29 கௌலவ கரணம் 8-5-ல் சூரிய உதாயதி முதல் நாழிகையில் குழந்தை பிறந்தால் அன்றைய தினம் வெள்ளிக்கிழமையானதால் உதயாரம்பத்தில் பெண் குழந்தை பிறந்ததென தீர்மானஞ்செய்து அந்தப் பெண் குழந்தையின் ஜாதகத்தை கணிக்கும்போது இராசி சக்கரம் அமைத்து அவற்றில் கிரகங்களிருக்கும் தன்மையைப் பார்த்து பலன் சொல்ல வேண்டியது.

இதற்கு உதாரணம்

| | | | |
|---|---|---|---|
| | ராகு | குரு | சுக் |
| | | | ஜன்ம லக்னம் சூரியன் |
| | | | செவ் |
| சனி | | கேது | சந்திர இராசி |



RangaRakes tamilnavarasam.com

மேற்காட்டிய படத்தில் குறிப்பிட்டிருக்கும் விதமே அந்த வருஷத்தின் பஞ்சாங்க கணிதத்தின்படியே பனிரெண்டு இராசியிலும் அந்தந்த சமயத்தில் எந்தெந்த கிரகம் எந்தெந்த நக்ஷத்திரத்திலிருக்கின்றதோ அந்தந்த இராசியில் கிரகங்களமைத்துப் பலன் சொல்லவேண்டும்.

பாரினிற்பிறந்தோருக்குப் பனிரெண்டுராசிவீட்டில்
சூரியன்சோமன்செவ்வாய் சொற்புதன் குருவுஞ்சுக்ரன்
காரியுமிராகுகேது கனிவாயுற்றபலனைத்தானே
தாரினில்ஜாதகர்க்குத் தருகுவார்கவனிப்பீரே. 4

உரை :—உலகத்தில் பிறக்கும்போது அமைந்திருக்கும் மேஷம், ரிஷபம், மிதுனம், கடகம், சிங்கம், கன்னி, துலாம், விருச்சிகம், தனுசு, மகரம், கும்பம், மீனம் என்னும் பனிரெண்டு இராசிகளில் எந்தெந்த ஸ்தானத்தில் கிரகங்களிருக்கின்றார்களோ அந்தந்த பலனையே ஜாதகர்க்குக் கொடுத்து கஷ்டத்தையோ சுகத்தையோ அநுபவிக்கச் செய்வார்கள்.

சனிசெவ்வாய்ராகுகேது ஜனனலக்னத்திருந்தால்
சினமுடன்பித்தவுஷ்ணம் சிரரோகங்காணு மின்னும்
முனிவுடன்மற்றோர்மீது மூர்க்கமாய்பேசத்தோணும்
கனிவுடன்சுபர்கண்டாலே களிப்புடன்சீவிப்பாரே. 5

உரை :—சனிபகவானுகிலும் செவ்வாய்பகவானுகிலும், ராகு கேதுவாகிலும் ஜன்ம லக்னத்திலிருந்தால் மனதிற் கோபமும், சரீரவெப்பமும் பித்தமும், தலைநோய் முதலான வியாதியும் வந்து, கஷ்டப்படுத்துவதுடன் எவர்கள்மீதும் மனவெறுப்பா யிருப்பதற்காகும். ஆனால் சுபக்கிரகங்களாகிய குருபகவானுகிலும் புதன், சுக்கிரன், வளர்பிறைச் சந்திரபகவானுகிலும் ஜனனலக்கினத்தைப் பார்த்தால் சுகசவுக்கியமா யிருப்பதற்காகும்.

குருசுக்ரன்புதனும் குறித்திடும்லக்னத்துற்றால்
பொருளுடன்காணிபூமிபொன்வெள்ளி ஆபரணம்வாய்த்து
பெருமையாயெவருமெச்ச பேருலகில்ஜீவிக்க
தருகுவார்நற்பலன்கள் தரணியில்ஜாதகர்க்கே. 6

உரை :—ஜனன லக்னத்தில் குருவாகிலும், சுக்கிரனுகிலும், புதனுகிலும், வளர்பிறைச் சந்திரனுகிலுமிருந்தால் ஜாதகி பிறந்த காலத்திலிருந்து தனது தாய் வீட்டில் தனலாபம் மென்மேலும் பெருகி, காணி பூமியும் கிடைக்கப்பெற்று பொன் வெள்ளி ஆபரணாதிகட்குக் குறையாமல் மிகவும் மேன்மையாயிருந்து ஜீவிக்கும் படியான நற்பலனைத் தருவார்கள்.

RangaRakes tamilnavarasam.com

ஒன்பதாமிடத்தில்மந்தன் ஒளிமிகுராகுகேது
தன்மையாயமர்ந்திட்டாலே தந்தைதாய்வறுமையாலே
துன்பமுற்றலைவார்பந்து சுற்றத்தார்பகையாவர்கள்
பன்முறைதுயரால்நொந்து பரதவித்தலைகுவாரே. 7

உரை:—இலக்கினத்திற்கு ஒன்பதாமிடமும் பிதுர்ஸ்தானமுமாகிய பாக்கிய ஸ்தானத்தில், சனிபகவானாகிலும், இராகு கேதுக்களாகிலுமிருந்தால், தாய் தந்தை வறுமையினால் கலங்கி கையிற் காசில்லாமல் இனஜனத்தோர் பழித்துப் பரிகாசஞ் செய்யும்படியான ஏழ்மை நிலையிலிருப்பதற்காகும்.

புகருடன்மதியும்மாலும் பொன்னவன் நவத்திருந்தால்
ஜெகத்துளோர்மகிழத்தந்தை செல்வந்தனுமிருந்து
மகிழுடன்திரவியம்பெற்று மனைபூமிபொருளும்சேர்த்து
புகழ்பெற்றுகனவானாக பூமியிலிருப்பான்பாரே. 8

உரை:—சுக்கிரனும், குருவும், சந்திரனும், புதனும் ஒன்பதாமிடமாகிய பிதுர் ஸ்தானத்திலிருந்தால், ஜாதகியின் தந்தை மகாசமர்த்துடன் திரவிய சேகரஞ்செய்து மனை, பூமி, நில புலமுடையவனாய் பொன் பொருள், ஆஸ்திபூஸ்திதியுடன் பெருமையாய் வாழ்ந்திருப்பதற்காகும்.

தினகரன்செவ்வாய்மந்தன் சீறிடும்பாம்புந்தான்கில்
இனிதுடனிருந்திட்டாலே இம்சையும்கவலைநேர்ந்து
தனதான்யமில்லாமற்றான் தரித்திரமுற்றலைந்து
இனஜனத்தோர்நிந்திக்க இருப்பார்ஜாதகரென்றோதே. 9

உரை:—சுகஸ்தானமாகிய நான்காமிடத்தில் சூரியனாகிலும் செவ்வாயாகிலும், சனி, ராகுவாகிலும் கேதுவாகிலு மிருந்தால் பலவித துன்பமும், துயரமும், வறுமையுமடைந்து சதாகாலமும் சுகமில்லாமல் கஷ்டத்தையே யனுபவித்துக்கொண்டு, தனதான்யமில்லாமல் தரித்திர நோயினால் கலங்கி இனஜனத்தோர் பழித்துப் பரிகாசிக்குந் தன்மையான கவலையுந் தலையச்செய்வார்கள்.

சுகஸ்தானத்தனிலேசந்திரன் சுக்ரனும்புதனும்வியாழன்
மகிழுடனிருந்திட்டாலே மாநிலத்தனிலெத்தாளும்
புகழுடன்கீர்த்திவாய்த்து பொன்பொருள்சேர்த்துக்கொண்டு
ஜெகத்துளோர்புகழவாழ்ந்து ஜீவிக்கச்செய்குவாரே. 10

உரை:—நான்காமிடமாகிய சுகஸ்தானத்தில் சந்திரன், புதன், குரு, சுக்கிரனும் இருந்தால் சதாகாலமும் சுகஜீவியாய்

உலகத்தாரனைவரும் மெச்சுந் தன்மையான தனத்தான்ய சம்பத்துடனே பிரபுத்தன்மையாக சதாகாலமும் சுகஜீவியாயிருக்கும்படியாய்ச் செய்வார்கள்.

பொன்னவன்புதனும்சந்திரன் புகழுமேழிடத்திருந்தால்
கன்னிகைதனைமணப்போன் கல்வியும்பொருளும்வாய்த்த
மன்னவன்போலிருப்பான் மங்கையைமணம்புரிந்து [வாரே.
பொன்பொருள் பூஸ்திதியோடன் பாய் பொருந்திவாழச்செய்

உரை :—குரு, புதன், சந்திரன், சுக்ரனுகிய இந்நால்வரில் எவர்களாகிலும், ஜாதகியின் சப்தமஸ்தானமாகிய களத்திர ஸ்தானத்திலிருந்தால், ஏழை வீட்டுப் பெண்ணு யிருந்தாலும் அன்ன வஸ்திரத்திற்குப் பஞ்சமாய் வறுமை நோயாற் கலங்கியிருந்தாலும் மேற்குறிப்பித்த சுபக்கிரகங்கள் சப்தமஸ்தானத்திலிருந்த பலத்தினுல் வித்தியா சாமர்த்தினுலும், வியாபாரத்தினுலும் உத்தியோகப் பெருக்கத்தினுலும் தனது மனமகிழ வெகு பொருள் சேகரித்து பூமி, காணி, வீடு முதலான பூஸ்திதி சம்பத்துடனிருந்து ஜாதகி சதாகாலமும் மனமகிழ வாழ்ந்திருக்கும்படியானவனை மணம்புரிந்து வாழ்ந்திருக்கும்படியாக செய்வார்கள்.

மந்தனும்ராகுகேதும் மன்னியஏழிலுற்றால்
சுந்தரிதனைமணப்போன் சோம்பனும்துஷ்டனுகி
பந்துமித்திரர்நிந்திக்க பலநாளும்துன்பமுற்று
சிந்தைநொந்துருகிவாடச் செய்குவார்கவனிப்பீரே. 12

உரை:—சப்தம ஸ்தானமாகிய களத்திர ஸ்தானத்தில் சனி, இராகு, கேது இவர்களில் எவர்களாகிலுமிருந்தால், அந்த ஜாதகியை மணம்புரிபவன் சோம்பலும், துஷ்டனும் வாயாடியம்பனுமாயிருந்து சதாகாலமும் வறுமையால் கலங்கும்படியாகச் செய்து பந்துமித்திரர் பரிகாசித்து நிந்திக்கும்படியாகவும் செய்வார்கள்.

சுக்கிரன்சனியும்செவ்வாய் சூழ்ந்தேழாமிடத்திருக்க
மிக்கவேகவலையுற்று மணவாளன்தனையிழந்து
துக்கமாய்விதவையாகி துயருற்றுகலங்குவார்கள்
எக்காலும்சஷ்டிபூசை எடுத்தன்பாய்ஜீவிப்பீரே. 13

உரை :—சப்தமஸ்தானமாகிய களத்திரத்தானத்தில் சுக்கிரன், சனி, செவ்வாயிருந்தால் தனது மணாளனையிழந்து விதவையாகி பல நாளும் துன்பமும் துயரமுமடைந்து வறுமையாற் கலங்குவார்கள். ஆனுல் சஷ்டி விரதத்தை யனுஷ்டித்து சிவசுப்பிரமணியரை பூஜித்திருந்தால் நன்மையாய் ஜீவித்திருப்பதற்காகும்.

RangaRakes tamilnavarasam.com

ஜன்மத்தில்குருவிருக்க சனிஆறில்சுக்ரென்நாவில்
ஒன்பதில்புதனிருக்க ஒளிர்மதிஏழில்நிற்க
பன்னிரண்டில்ராகுநிற்க பாக்கியவந்தராக
பொன்பொருள்பூமிலாபம் பொருந்தியேஜீவிப்பாரே. 14

உரை :—ஜாதகியின் ஜன்ம லக்கினத்தில் குருவிருக்கவும் சனி ஆறுமிடத்திலும், சுக்கிரன் நான்காமிடத்திலும், ஒன்பதில் புதனும், ஏழில் சந்திரனும், பனிரெண்டில் இராகுபகவானு மிருந்தால், ஜாதகியின் மணாளன் மகா சமர்த்தனாக உத்தியோக சம்பத்தாலும் வியாபாரத்தாலும் வெகு பொருள் சேகரித்து, காணி பூமி லாபத்துடனே பொன், பொருள், ஆஸ்தி பூஸ்திியுடன் வாழ்ந்திருக்கும்படியான தன்மை யனைத்தும் அனுபவிக்கச் செய்வார்கள்.

அஞ்சொன்பதொன்றில்மந்தன் அரவுடன்குளிகன்நின்றால்
வஞ்சகமாய்ப்புத்ரசில்லா வறுமையுற்றவிருவார்கள்
எஞ்சவில்லாதநல்லோர் இருந்திடில்புத்திரருண்டு
பஞ்சமேயணுகிடாமல் பாக்கியம்பெறுருவாரே. 15

உரை :—ஐந்தாமிடத்திலாகிலும் ஒன்பதாமிடத்திலாகிலும் ஜன்மலக்கினத்திலாகிலும், சனி, இராகு, கேது, குளிகனுகிய இவர்களிலெவர்களாகிலு மொருவரிருந்தால், புத்திரபாக்கிய மில்லாத வறுமையாளரா யிருப்பார்கள். ஆனால், ஜன்மலக்கினத்தில் குருவும், பஞ்சமஸ்தானத்தில் சுக்கிரனும், ஏழாமிடத்தில் சந்திரனும், ஒன்பதாமிடத்தில் புதனுமிருந்தால், அழகும், அறிவும், ஆலோசனையும், அதிர்ஷ்டமு மிகுந்த புத்திரபாக்கியம் பெற்று திரவிய சம்பத்துடனே வாழ்ந்திருப்பதற்காகும்.

ஸ்திரீ ஜாதகம் முற்றிற்று.

RangaRakes tamilnavarasam.com

# ஸ்திரீகள் ருதுஜாதக நிர்ணயம்

கணேசர் துதி

விருத்தம்

ஆதிவிக்னேசாயுந்தன் ஆதரவாலேயானும்
பூதலஸ்திரீருதுஜாதகத்தைப் புகல்வதைமாந்தர்கட்கு
நீதியாயமைந்திருக்க நிதானமாய்ப்பலனைச்சொல்ல
ஆதாரமாயிருந்து அனுக்கிரகஞ்செய்வீரே. 1

உரை :—உலகில் பிறந்திருக்கும் பெண்களின் ருது காலத்தின் பலனை விபரமாய்ச் சொல்வதற்கு ஆதிகணேசமூர்த்தி அனுக்கிரகஞ் செய்வாரென்று தியானஞ் செய்துக்கொண்டு, ஜாதக பலனைக் கேட்க வந்தவர்களுக்கு விபரமாய்ச் சொல்ல வேண்டும்.

கன்னிகைருதுவானலக்ன காலத்தின் திதிநக்ஷத்திரம்
பன்னியமாதவாரம் பார்த்திடும்கரணயோகம்
மன்னியகிரகம்நின்ற மார்க்கமும்விபரமாக
தன்னையயாபுணர்ந்து நவில்வீர்ஜோதிடவல்லோரே. 2

உரை :—பெண்கள் ருதுவான லக்ன பலனைப் புகலவதெனில் அவர்கள் ருதுவான மாதம், வாரம், நக்ஷத்திரம், திதி, யோகம், கரணம் முதலானவைகளின் தன்மையும், அந்த சமயத்தில் உதயமான முதல் பனிரெண்டு இராசியிலும், நவக்கிரகங்களிருக்கும் தன்மையும் பார்த்து பலன் சொல்ல வேண்டும்.

## பெண்களின் ருதுகாலத்தின் விபரம்

சித்திரைபுருஷர்க்காகா சுகமுண்டுவைகாசிமாதம்
புத்திரபாக்கியமுண்டு பொருந்தியஆனிமாதம்
சித்தினிஆடிமாதம்சீர்மைந்தருண் டாவணியிலானால்
புத்தியும்விருத்தியுண்டுபுரட்டாசியில் ருதுவானாலே. 3

உரை :—பெண்கள் சித்திரை மாதத்தில் ருதுவானால் புருஷனுக்காகாது. வைகாசியில் சுகசம்பத்தா யிருப்பாள். ஆனி மாதத்தில் புத்திரபாக்யத்துடனே சுகசம்பத்தா யிருப்பாள். ஆடி மாதத்தில் ருதுவானால் பல பேரை இச்சிக்கும் சித்தினியா யிருப்பாள். ஆவணி மாதத்திலானால் மேன்மையான அறிவிற் சிறந்த

RangaRakes tamilnavarasam.com

பிள்ளைகளைப் பெறுவாள். புரட்டாசி மாதமானால் அறிவும், ஆலோசனையும் அதிகரித்து புத்தி விர்த்தியாய் திரவிய சம்பத்துட னிருப்பதற்காகும்.

ஐப்பசிபுத்ரரின்றி அமங்கலியாவாளென்பீர்
செப்பியகார்த்திகையேயானால் சீறுவாளவைவர்மீதும்
ஒப்பிலாமைந்தருண்டு உயர்ந்தமார்கழிதையானால்
தப்பிலாபுண்யஞ்செய்யும் தனவதியாமென்றேதே. 4

உரை :—பெண்கள் ஐப்பசி மாதத்தில் ருதுவானால் விசேஷமாய் பிள்ளைகளைப் பெற்று விதவையாவார்கள். கார்த்திகை மாதமானால் எவர்களைக் கண்டாலும் கோபமாய்க் கடுகடுத்துப் பேசுவதுடன் சீறுவார்கள் மார்கழி மாதமானால் அறிவிற் சிறந்த உத்தம புத்திர பாக்கியங்களைப் பெறுவாள். தை மாதமானால் விரதானுஷ்டானம் புரிந்து தானதர்ம பரோபகாரஞ் செய்து புண்ணியவதியா யிருப்பாள்

மாசிமாதத்திலானால் மனைகாணிபூமிலாபம்
காசுடன்பொன்னும்வெள்ளி கௌரவமாகச்சேர்த்து
வீசியபுகழோடன்பாய் விளங்குவாள்பங்குனியேயானால்
ஆசையாய்பலபுத்திரரின்று அவனியில்வாழ்குவாரே. 5

உரை :—மாசி மாதத்தில் ருதுவானால் மனை, காணி, பூமிலாபத்துடனே திரவியசேகரஞ்செய்த பொன், பொருள், வெள்ளி ஆபரணாதிகளுடன் சுகமாயிருப்பதற்காகும் பங்குனி மாதமானால் வெகு புத்ரபாக்கியங்களைப்பெற்று பந்துமித்திர பெருக்கத்துடன் உலகத்தில் வெகு பெருமையாய் வாழ்ந்திருப்பதற்காகும்.

ஆதிவாரத்தில்வியாதி ஆகும் திங்கள்கற்பாகும்
தீதுறும்செவ்வாயானால் செல்வமுண்டாகும்புந்தி
ஆதரவானவியாழன் ஐஸ்வரியமாயிருப்பாள்
ஓதரும்புகரோதன்ற ஒழுங்கின்மைசனியானாலே. 6

உரை :—ஆதிவாரத்தில் ருதுவானால் வியாதியாயிருப்பாள். திங்களில் பதிவிரதையாகும். செவ்வாயானால் பல துன்பம் நேரிடும். புதன்கிழமையானால் புத்ரபாக்கியம் பொன், பொருள், பூஸ்திதியோடு வாழ்ந்திருப்பதற்காகும். வியாழனில் வெகு பாக்கியத்துடனே தனவதியா யிருப்பதற்காகும். சுக்கிரவாரமானால் பதிவிரதையா யிருப்பதற்காகும். சனிக்கிழமையானால் பலவித துன்பமும் துயரமும் மனச்சஞ்சலமுமா யிருக்கும்.

RangaRakes tamilnavarasam.com

பிரதமைபாவியாவாள் துதியைத்திதிபாக்யமுண்டு
திரிதிகைமகப்பேருண்டு சதுர்த்தசிவேசையாவாள்
பிரியமும்நன்மையுண்டு பஞ்சமிதிதியிலானால்
தருணம்சஷ்டிஅஷ்டமிநவமி திதிகளாகாதுதானே. 7

உரை :—பெண்கள் ருதுவான திதி பிரதமையானால் துர்க்குணமுடைய பாவியாயிருப்பாள். துதியை திதியில் ஆனால் தனந்தான்ய சம்பத்துண்டு. திரிதிகையானால் புத்திரபாக்கியம் விசேஷமாயுண்டு. சதுர்த்தசியானால் பலபேரை இச்சிக்கும் வேசையாவாள். பஞ்சமி திதியிலானால் வெகுவித நன்மையும் குடும்ப ரக்ஷகியாகவும் மணாளன் மைந்தர் பாக்கியத்துடனே சுக ஜீவியாயிருப்பதற்காகும். சஷ்டியாதிலும் அஷ்டமி நவமியாகிலும் ருதுகாலத்தின் திதியானால் பலவித துன்பமும், துயரமும் மனஸ்தாபமுமுண்டாகி, வறுமையால் கலங்கும்படியாயிருக்கும்.

அன்புடன்தசமிதிதி திரயோதசிஆனால்நன்று
பொன்பொருள்பூஸ்திதியோடன்பாய் பூமிலாபங்களுண்டாம்
துன்பமாம்அமாவாசைபௌர்ணமி துவாதசிதன்னிலானால்
பொன்பொருளில்லா பூமியில் திகைப்பார்தானே. 8

உரை :—தசமி திரயோதசி திதியில் ருதுவானால் மிகவும் மேன்மையாகும். சகலரும் புகழ்ந்துரைக்கும் தன்மையான பொன், பொருள், காணி, பூஸ்திதி புத்ரலாபத்துடனே வாழ்ந்திருப்பதற்காகும். ஆனால் துவாதசி, பௌர்ணமி, அமாவாசை திதிகளிலானால் சகலரும் பழித்து பரிகசிக்கும் தன்மையான வறுமைநோயினால் கலங்கி பூர்வீகமாயிருந்த பூமி, மனை, காணி, நில பலயிழந்து கையிலுள்ள பொன், பொருளெல்லாமிழந்து, துயரக் கலங்கி திகைப்பார்கள்.

கன்னிகைருதுலக்கினத்தின் களத்திரஸ்தானத்தன்னில்
பன்னியசனியும்சூரியன் பாம்புகளிருந்திட்டாலே
துன்பமும்துயரமாகி துர்க்குணமணாளனாலே
பொன்பொருளிழந்துதானும் புசிப்பின்றிகலங்குவாரே. 9

உரை :—பெண்கள் ருதுவான ஜன்மலக்கினத்திற்கு சப்தமஸ்தானமாகிய களத்திரஸ்தானத்தில் சனி, சூரியன், இராகு இருந்தால் துன்மார்க்கனாகிய துஷ்ட புருஷன் தன்னை மணம் புரிந்துகொண்டு பலவித துக்கமும் துயரமுமடைந்து அன்ன வஸ்திரத்திற்குப் பஞ்சமாய்த் துன்பமும், கஷ்டமுமனுபவித்துக் கையில் காசில்லாத வலையால் கலங்கித் தத்தளிக்கச் செய்யும்.

இலக்கினம்மிதுனமாகி இராசியும்கடகமாக
கலக்கமில்லாமல்வியாழன் களத்திரஸ்தானம்நிற்க
பலவிதசமர்த்தினாலே பாக்கியவந்தனான
நலமுள்ளமணவாளன்வந்து நங்கையைமணப்பான்பாரே. 10

உரை:—ருதுவான இலக்கினம் மிதுனமாகவும், அதில் புதன் ஆக்ஷிபாகவும், சந்திரன் கடகராசியில் ஆக்ஷியாகவும், குரு சப்தம ஸ்தானத்தில் ஆக்ஷிபெற்றிருந்தால், பலவித சமர்த்தினால் திரவிய சேகரஞ்செய்து தனவானுயிருக்கும் உத்தம புருஷனை மணம்புரிந்து சுகஜீவியா யிருப்பதற்காகும்.

எந்தலக்கினத்திலேனும் எழில்மிகும்குருவிருக்க
சந்திரன்எழில்நின்று சுக்கிரன்நாலில்நிற்க
மந்தனும்ஆறில்நின்றால் மாநிலத்தோர்கள்வாழ்த்த
சுந்தரமுளான்வாய்த்து சொர்ணபூஷண முண்டாமே. 11

உரை:—ஜாதகி எந்த லக்கினத்தில் ருதுவானாலும் அந்த ஜன்ம லக்னத்தில் குருபகவானிருக்க அந்த லக்கினஸ்தானத்திற்கு ஏழில் சந்திரனும், நாலில் சுக்கிரனும், சனி ஆறமிடத்திலு மிருந்தால், அந்த ஜாதகிக்கு அழகான முகதேஜஸ் விளங்கி, சகலரும் புகழ்ந்து, ஆசீர்வதிக்கும்படியான நற்குணம் பொருந்தியிருப்பதுடன், மிகவும் ரூபசுந்தரமா யிருக்கும் தனவந்தனை மணபுரிந்து, சொர்ணபணி பூஷணாலங்காரத்துடன் ஜீவித்திருப்பதற்காகும்.

கன்னியாலக்னமாகில் கதிரவன்புதனும்சுக்ரன்
தன்னபமாகவேதான் சந்திரன் ரிஷபத்துச்சம்
முன்னியரசர்கும்மந்தன் மாக்ஷியாய்க்கும்பம்நிற்க
பொன்பொருள்சொனிபூமி பொருந்தியேஜீவிப்பாரே. 12

உரை:—ருதுகால நிர்ணயத்தின்படியே உதய லக்னம் கன்னியாக அதில் புதனும், சூரியனு மிருக்க பாக்கிய ஸ்தானமாகிய ரிஷபத்தில் இலாபாதிபதியாகிய சந்திரன் உச்சம் பெற்றிருக்க இராகு, சனி இவ்விருவரும் கும்பத்திலிருந்தால் அந்த ஜாதகி வெகு சமர்த்தாய் பந்துமித்திரர் ஆச்சரியப்படும்படியாக வெகு பொருள் தேடி வெள்ளி, பொன் ஆபரணாதிகளுடன் பிரபுத்தன்மையா யிருப்பதற்காகும்.

கும்பலக்கினமாக குருதனுசில்விளங்க
அம்புலிரிஷபத்துச்சம் ஆதித்தன் மேஷத்துச்சம்
சம்ப்ரமாய்சுக்கிரன்மீனத் தன்னிலேஉச்சமானால்
அம்புவியிலிராஜயோகம் அடைந்தன்பாய்சீவிப்பாரே. 13



RangaRakes tamilnavarasam.com

உரை :—கும்பலக்னமாகவும் குருபகவான் இலாபஸ்தானமாகிய தனுசில் ஆக்ஷியாயிருக்கவும் சந்திரன் சுகஸ்தானமாகிய ரிஷபத்தில் உச்சமாயிருக்க சூரியன் நீசஸ்தானமாகிய மேஷத்தில் உச்சமாகவும் சுகபாக்கியாதிபதியாகிய சுக்கிரன் தனஸ்தானமாகிய மீனத்தில் உச்சமாகவுமிருந்தால் அந்த ஜாதகி மகா தனவதியாகவும் தமது பந்துக் கூட்டத்தாரில் சிறந்த இராஜயோகத்தை அனுபவிக்கும்படியான தனவதியாக மிகவும் மேன்மை பெற்று, சுமங்கலியாயிருப்பதற்காகும்.

லக்கினம்மேஷமாகி ரவிமதிசுக்ரன் கூடி
பக்குவமாகவுமில் பகையாயிருக்கும்போது
மிக்கவேசனியெனெட்டில் விளங்கியேயிருப்பானாகில்
தக்கவோர்விவாகமில்லா தவித்திடுவாளென்றோதே. 14

உரை :—மேஷ லக்கினமாய் விளங்கி சூரியன், சந்திரன் சுக்கிரனும் ஏழிலிருக்க, சனி பகவான் எட்டிலிருந்தால், சதா காலமும் பலபேர் மீது மையலுற்று கவலையடைந்திருப்பாள். விவாகமாகாமல் தனது காதலால் கலங்கித் தவித்து, வறுமையினால் மனவிசாரமாகவு மிருப்பாள்.

பஞ்சமஸ்தானந்தன்னில் பருதியும் ஆக்ஷியாகி
மிஞ்சியசெவ்வாய்தானும் மேஷத்தில் ஆக்ஷியாக
எஞ்சலில்லாதசுக்ரன் இடபத்தில் ஆக்ஷியானால்
செஞ்சொலாள்புத்ரரோடு செல்வவதியாவாள்பாரே. 15

உரை :—மேஷ லக்கினத்தில் செவ்வாய் பகவான் ஆட்சியாகவும் புத்திர ஸ்தானத்தில் சூரியன் ஆக்ஷியாகவும் தனஸ்தானமாகிய ரிஷபத்தில் சுக்கிரன் ஆக்ஷியாகவுமிருந்தால் அந்த ஜாதகிக்கு பிறக்கும் பிள்ளை மிகவும் சாமர்த்தனாக திரவிய சேகரஞ் செய்து தனவந்தனாகவு மிருக்க தான் மனோவாசத்துடன் தனவதியென்று உலகோர் புகழும்படியாக ஜாதகி கீர்த்திப் பிரவசமா யிருப்பாள்.

தனுசுலக்கினமேயாக சமைந்திடும்வேளைதன்னில்
தினகரன்குருவும்மாலும் திங்களும்சுக்ரன்மீனந்
தனிலிருந்தாலேபுத்ரர் தனவந்தராயிருந்து
கனிவுடன்தாயையன்பாய் காப்பாற்றிரக்ஷிப்பாரே. 16

உரை :—ஜாதகியின் லக்னம் தனுசாகவும் அதற்கு நான்காமிடமாகவும், சுகஸ்தானமாகியும் விளங்கிய மீனத்தில் சூரியனும் சந்திரனும், புதனும், குருவுமிருந்தால் அந்த ஜாதகிக்கு பிறக்கும் புத்திரர்கள் மகா சமர்த்தராய்க் கல்வியில் தேர்ச்சி யடைந்தவர்களாய் உத்தியோகத்திலும் வியாபாரத்திலும் வெகு பொருள்

RangaRakes tamilnavarasam.com

சேகரித்து தமது தாயை மிகவும் மேன்மையாய் மதிக்கும்படியான கீர்த்தி பெறுவர். ஜாதகி சந்ததமும் தனவதியா யிருக்கும்படியான புத்திரபாக்கியத்துட னிருப்பாள்.

ஒன்றைந்துள் தானமேனும் ஒன்பதாம்ஸ்தானமேனும்
பன்னியசனியும் நிற்க பாம்புகளிருந்திட்டாலும்
மன்னியபுத்ரரில்லா மலடியென்றுரைப்பார் ஆனால்
நன்னயசாந்திசெய்தால் நற்புத்ரருண்டாமே. 17

உரை :—ஜாதகி லக்னத்திலேனும் ஐந்தாமிடத்திலேனும் பாக்கிய ஸ்தானமாகிய ஒன்பதா மிடத்திலேனும் சனி, ராகு, கேதுக்களிருந்தால் புத்ரரில்லாத மலடியா யிருப்பதற்காகும். ஆனால், சர்ப்பதோஷ விமோசனஞ் செய்து நவக்கிரக சாந்தி செய்தால் புத்திரபாக்கிய முண்டாகும்.

காசினிதனில்பிறந்த கன்னியர்ருதுலக்னத்தில்
தேசுறும்குருவிருந்து திங்களும்ஐந்தில்நிற்க
மாசிலாபெண்களின்று மகாதனவானுக்கீந்து
பேசரும்பாக்யத்தோடே பொருந்திசுஜீவிப்பாரே. 18

உரை :—பெண்களின் ருது லக்கினத்தில் குரு உச்சம் பெற்றிருக்கவும், சந்திரன் பஞ்சமஸ்தானத்திலிருந்தால் அந்த ஜாதகி அழகானத்த முகவசீகரமும், ஐஸ்வரிய அதிஷ்டானத்தமும் பொருந்திய பெண்ணைப்பெற்று, மகாதனவந்தனுக்குத் கலியாணஞ் செய்துக் கொடுத்து தனத்தானிய பசு புத்ர பாக்கியத்துடனே வெகு மேன்மையாக சீவித்திருப்பதற்காகும்.

சுக்கிரன் ரிஷபத்துற்று துலங்கியபஞ்சமத்தில்
சிக்கிலாபுதனுமசந்தரன் சேர்ந்திருப்பார்களானால்
மிக்கவேசபெண்கள்பெற்று மேன்மையாய்குடும்பத்தோடே
பக்குவமாகவாழ்வார் பார்தனிமினிதாய்த்தானே. 19

உரை :—பெண்களின் ருதுகால லக்கினமாகிய ரிஷபத்தில் சுக்கிரன் ஆட்சிபெற்றிருக்க, பஞ்சமஸ்தானமாகிய கன்னியராசியில் புதனும் சந்திரனுமிருந்தால் அந்த ஜாதகிக்கு பெண் குழந்தைகள் விசேஷமாய்ப் பிறந்தாலும், மகா தனவந்தர்களுக்கு மணஞ் செய்துவைத்து, தனதான்யம் பொன் பொருள் பூமி லாபத்துடனே சீவநதருப்பதற்காகும்

சனிராகுகேதுமொன்றில் சாற்றுமைந்தோன்பதுற்றால்
பனிமொழியாதுமூன்றால் பாம்பபயேகொன்றதோஷம்
முனிவுடன்மூண்டதாலும் முன்னோர்கள்சாபத்தாலும்
கனிவானமைத்தரில்லா வெங்கியேதவிப்பர்தானே. 20

உரை:—உதய லக்கினத்தில் சனி, ராகு, கேது இருந்தாலும் அல்லது ஐந்து ஒன்பதாமிடத்தி லிருந்தாலும் அந்த ஜாதகி முன் ஜன்மத்தில் சர்ப்பத்தைக் கொன்ற தோஷத்தினாலும் கருவழித்த தோஷத்தாலும் பெரியோர் மனமெரிந்து கொடுத்த சாபத்தினாலும், புத்திர பாக்கியமில்லாமல் பரிதவித்திடலாகும்.

அவ்விதமாகத்தானே அருமையாய்புத்ரசில்லா
தவ்வியேயிருந்ததானால் ஒழுங்குடன்கிரகசாந்தி
செவ்வையாய்ச்செய்தாரானால் செல்வர்கள்பிறப்பாரென்று
எவ்விதமானாலுந்தான் எடுத்துரைத்ததுபோற்செய்வீர். 21

உரை:—மேற் கதித்த பிரகாரம் புத்திரபாக்கிய மில்லாமல் பரிதவித்திடுவோர் தங்கத்தினால் நாகஞ்செய்து நவகலசம் நிறுத்தி நவக்கிரக பூஜைசெய்து கிரமப்படியே சாந்தி செய்தால் புத்ரபாக்ய முண்டாகும்.

அருமைசேர் தனுசுலக்னத் தமர்ந்தவர்க்கைந்தாம்ராசி
பெருமைசேர்மேஷமாக பிறந்தவர்பெருமையாக
பொருளுடன்பூமிலாபம் பொருந்தியேவாழ்ந்திருப்பார்
தருணமேநூலாராய்ந்து சாற்றுவீருலகோருக்கே. 22

உரை:—தனுசு ஜன்ம லக்கினமாகவும் அதற்கைந்தாம் வீடாகிய மேஷத்திற்குரிய அங்காரகன் மகரத்தில் உச்சம்பெற்றிருந்தால் அந்த ஜாதகிக்குப் பிறக்கும் பிள்ளை வெகு கீர்த்திவந்தனாக ஜீவித்து தனதான்ய லாபத்துடனே தனது குடும்பத்தாரின் பெருமையாயிருக்கும்படியான புத்திரனைப்பெற்று மேன்மையாய் ஜீவித்திருப்பதற்காகும்.

ஸ்திரீகள் ருதுஜாதக நிர்ணயம்

முற்றிற்று.

RangaRakes tamilnavarasam.com

# திருமணப் பொருத்த நிர்ணயம்

## கணேசர் துதி

*விருத்தம்*

மணமுகூர்த்தஞ்செய்வதற்கு மானிலத்தோர்கட்கன்பாய்
இணங்கியநக்ஷத்ரம்போ் இசைந்தநற்பொருத்தமெல்லாம்
வணக்கமாய்சொல்வதற்கு வளர்மதிஜோதியான
கணபதியருள்வீரென்று கரங்குவித்துணைதுதித்தேன்.

## முருகர் துதி

திதிவாரநக்ஷத்ரங்கள் தாராபலன்சந்த்ரன்நின்ற
சதிரானபலனுமின்னும் சாற்றிடும்பலனைபெல்லாம்
மதியினால்வரைவதற்கு மயேஸ்வரிபாலனான
அதிபதிமுருகாஉத்தன் அடிமலர்துதித்திட்டேனே.

## நவக்கிரக தேவர்கள் துதி

சூரியன்சோமன்செவ்வாய் சொற்புதன்வியாழன்வெள்ளி
காரியுமிராகுகேது கருணைசேர்நவக்ரகங்கள்
பாரினில்மனிதர்கட்குப் பலன்சொல்லும்விபரமெல்லாம்
சீரதவுரைக்கச்செய்வீருங்கள் திருவடிபணிந்திட்டேனே.

## கணப் பொருத்தம்

கன்னிகைபுருஷனுக்கு கணப்பொருத்தமுமொன்றாக
தன்மையாயமைந்ததானால் நலமெனப்புகலவேண்டும்
மன்னியகணப்பொருத்தம் மாறுபட்டிருக்குமானால்
வின்னமாய்முடியுமென்று விளம்புவீர்ஜாதகர்க்கே. 1

உரை :—கன்னிகைக்கும் புருஷனுக்கும் கலியாணஞ்செய்வதானால் இருவருக்கும் ஒரே கணமானால் உத்தமமாகும். அவ்விதமின்றி ஸ்திரீ மனுஷ கணமும் புருஷன் தேவ கணமானாலும் உத்தமம். ஸ்திரீ தேவ கணமும் புருஷன் மனுஷ கணமும், ஸ்திரீ தேவ கணமும், புருஷன் இராக்ஷச கணமானாலும் மத்திபம். ஸ்திரீ ராக்ஷச கணமும் புருஷன் தேவ கணமானாலும், ஸ்திரீ ராக்ஷச கணமும் புருஷன் மனுஷ கணமானாலும் அதம பலனாகும்.

RangaRakes tamilnavarasam.com

## உத்தம பலன்

உத்தமபலனென்றுலே உயர்த்ததற் குடும்பமாக
புத்திரசம்பத்தோடும் பொன்பொருள்பூமிலாபம்
எத்ததியும்விளங்கி எவ்யோரும்புகழவாழ்ந்து
மெத்தவும்அன்பாய்நாளும் மேன்மையாய்ஜீவிப்பாரே. 2

உரை :—உத்தம பலனு யிருந்தால் பெண்ணும் புருஷனும் மனமகிழ்ந்து, ஒருவர்க்கொருவர் இரதி மன்மதன்போல சுகஜீவியாய் வாழ்ந்து, புத்திர பாக்கியத்துடனும், பொன் பொருள் பூமி லாபத்துடனும், மிகுந்த கீர்த்திப் பிரகாசமாய் பந்துமித்திரர் புகழ்ந்துரைக்குந் தன்மையான தனவந்தராய் ஜீவித்திருப்பார்கள்.

## மத்திப பலன்

மத்திபபலனென்றுலே மனைவியும் புருஷன்தானும்
எத்ததியும்பொருந்தா எவர்களுமிகழ்ந்துரைக்க
சத்துருவென்றேசொல்லும் தன்மையாம்பகைத்திட்டாலும்
புத்திரசம்பத்தோடே பொருந்தியேஜீவிப்பாரே. 3

உரை :—ஸ்திரீ புருஷனுடைய கணப் பொருத்தம் மத்திபமானால் எப்போதும் குடும்பத்தில் விரோதமாய் ஒருவர்க்கொருவர் சண்டை சச்சரவு செய்துகொண்டு. தன்னைப்போன்ற குடும்பஸ்தர் பழித்துப் பரிகாசஞ் செய்யும்படியான கலகஞ் செய்துக் கொண்டிருந்தாலும், ஸ்திரீ புருஷன் அடிக்கடி பகையாயிருந்தாலும், சிற்சில சமயம் சமாதானமாயிருந்து, வறுமையால் துயரமடைந்தாலும் சமயோசிதமாய் புத்திர பாக்கியத்துடனே வாழ்ந்திருப்பார்கள்.

## அதம பலன்

அதமமாய்கணப்பொருத்தம் அமைந்திட்டாலிதுவாகாது
பதமுடனுற்ருர்பெற்ருர் பாஷமாயிருந்திட்டாலும்
சதிபதிவாழ்த்திராமல் சிறிதுநாளைக்குள்மாள்வார்
நதியில்ஜாதகத்தைப்பார்த்து சாற்றுவிர்பலனைத்தானே. 4

உரை : அதம பலனும் கணப் பொருத்த மிருந்தால் ஸ்திரீ புருஷனுக்கும் மணஞ் செய்யலாகாது அவ்விதமா யிருக்கும் போது இருவருக்கு மணஞ் செய்தால் பொருந்தி சம்சாரம் செய்ய மாட்டார்கள். ஆனால், அவர்களுடைய தாய்தந்தை பந்துமித்திரர் எவ்வளவு சகாயம் செய்தாலும், சிறிது நாளில் பெண்சாதியாகிலும் புருஷனுகிலும் மரணமாய் விடுவதுடன் அவர்கள் குடும்பம் விர்த்தியாகாது. ஆகையால், மணஞ் செய்யும்போது அவர்கள் ஜாதக பலாபலனைப் பார்த்து பலன் சொல்லவேண்டும்.

RangaRakes tamilnavarasam.com

## செவ்வாய்தோஷ பலன்

பன்னியரெண் டுநாலேழெட்டுல் பனிரெண்டில்குஜனிருக்க
மன்னியசெவ்வாய்தோஷம் மரணமோ பாதமென்றும் [ல்
முன்னோர்களுரைத்தவாக்கியம் ஏதறிவாயுணர்ந்து
கன்னிகைபுருஷனுக்கும் கவனித்துமணஞ்செய்வீரே. 5

உரை:—செவ்வாய் பகவான் பெண்களின் ஜாதகத்தில் இரண்டு, நான்கு, ஏழு, எட்டு, பனிரெண்டு ஸ்தானங்களிலிருந்தால் புருஷனை இழந்து விதவையாவாளென்றும், புருஷனுக்கிருந்தால் மனைவியை இழந்து மறுமணஞ் செய்துகொள்வா னென்றும், பெரியோர்கள் சொன்ன வாக்கியத்தை அனுசரித்துப் பார்த்து திருமணஞ் செய்வது உத்தமமாகும்.

அன்புடனிருவருக்கும் அங்காரகனில்லாத
நன்மையாயமைந்திருந்தால் நல்லகல்யாண முகூர்த்தம்
பன்னியவுலகிலன்பால் பரிகாரஞ்செய்துக்கொண்டு
பொன்பொருள்மைந்தரோடு பொருந்தியேவாழ்குவாரே. 6

உரை:—பெண்ணுக்கும் புருஷனுக்கும் மேற்குறிப்பித்த விதமே, அங்காரக தோஷமிருந்தால் அகற்றிய நவக்கிரகசாந்தி செய்துகொண்டு சஷ்டிவிரதத்தை அனுஷ்டித்தும், சிவசுப்ரமண்யரைப் பூசித்துக் கொண்டிருந்தால் சதாகாலமும் மனமகிழ்வாய் பந்துமித்ரர் புகழ்ந்துரைக்குந் தன்மையாய் பொன் பொருள் ஆஸ்தி பூஸ்திகியுடனே வெகுமேன்மையான புத்திர பாக்கியங்களைப் பெற்று சுகசீவியாக வாழ்ந்திருப்பார்களாகும்.

விருச்சிகம்மகரம்மேஷம் விளங்கியோர்ஸ்தானமில்
பெருமையாய்க்குஜனிருக்க புதன் வளர்மதியும்பார்க்க
குருபகவானும்நோக்க குறையொன்றுமேற்படாமல்
பொருள்புத்ரபாக்கியம்பெற்று பூமியிற்சீவிப்பாரே. 7

உரை:—செவ்வாய் பகவான் விருச்சிகம், மகரம் மேஷமாகிய இந்த மூன்று இராசிகளில் எங்கேனுமொரு ஸ்தானத்திலிருக்க, அவரை புதன் வளர்பிறைச் சந்திரன் குருபகவானும் பார்த்தால் யாதொரு தோஷமுமில்லாமல், மனைவியுடனும் வெகு பெருமையாக வாழ்ந்திருந்து பொன் பொருள் பூஸ்திகியுடன் புத்ரபாக்யம் பெற்று, பந்துமித்திரர் புகழ்ந்துரைக்கும்படியாக குடும்பரக்ஷகராய் சீவித்திருப்பார்கள்.

RangaRakes tamilnavarasam.com

## தாரா பலன்

ஜன்மநக்ஷத்திரத்திலிருந்து சாற்றுமந்நாள்நக்ஷத்திரம்
தன்மையாய்எண்ணிப்பார்த்து தாராபலன் சுபமேபாகில்
நன்னயமுகூர்த்தமிட்டு நன்மணம்செய்யும்போது
வின்னமாயாகாநக்ஷத்திரம் விலக்குதல்மிகவும்நன்றே. 8

உரை :—ஜன்ம நக்ஷத்திரமுதல் மணமுகூர்த்தம் செய்யும் நக்ஷத்திரம் வரையில் எண்ணிப் பார்க்கும்போது வந்த தொகையை ஒன்பதில் வகுத்துக் கழித்தால் மீதியாய்நின்ற இரண்டு, நான்கு, ஆறு, எட்டு, ஒன்பது ஆனால் உத்தமமாகும். மற்றவை ஆகாது. இதனை சரியாய் கவனித்து திருமண முகூர்த்தம் செய்வதுதான் சிரேஷ்டமாகும்.

ஜன்மமேகிலேசமுண்டு சம்பத்துரெண்டேயாகும்
துன்பமாம்விபத்துமூன்று சுகமாகும்நாவில்க்ஷேமம்
வின்னமாய்காரியங்காணும் விளங்கியஐந்துவந்தால்
பன்னியஆறுந்தாரை பகவான்தன்சகாயமுண்டாம். 9

உரை :—ஜன்ம நக்ஷத்திரம் கிலேசமும் கிளுமா யிருக்கும். இரண்டு சம்பத்து, மூன்று விபத்து. நான்கில் க்ஷேமம், ஐந்தில் காரியநாசம், ஆறுந்தாரையானால் பகவான் சகாயமுண்டாகும்.

இன்னலாம்வதையேழில் எட்டினில்சுபங்களுண்டு
அன்புடன்ஒன்பதானால் அதிகலாபங்களுண்டு
மன்னியசுபநக்ஷத்திரம் மைந்தர்பாக்கியமுண்டாகும்
பன்னியவிதமேநன்றாய் பார்த்துநற்பலன்சொல்வீரே. 10

உரை :—ஏழாவதுதாரை வதையாகும். எட்டாந்தாரை சுபங்களுண்டு ஒன்பதாவது தாரையானால் அதிக பாக்கிய முண்டாகும். ஆகையால், அவரவர்கள் ஜன்ம நக்ஷத்திரத்தி லிருந்து அன்றைய நக்ஷத்திரம் வரையிலும் எண்ணிப் பார்த்து மேற்குறிப்பித்த விதமே சுபதாரை மிகவும் நன்று. அசுபதாரை ஆகாது. ஆகையால் உத்தம தாரையில் எந்தக் காரியம் செய் தாலும் உத்தமமாகும்.

## சுபயோக பலன்

சித்தயோகங்கள்நன்று சிறந்தது அமிர்தயோகம்
அத்தகையானயோகம் அதிர்ஷ்டமும்பொருள் பொன்சேரும்
புத்திரபாக்யமுண்டு பொன்பூமிலாபமாகும்
எத்தனமும்நன்றாக எழிலுடன்சீவிப்பீரே. 11

RangaRakes tamilnavarasam.com

உரை :—மணமுகூர்த்தம் செய்வதற்கு சித்தியோகமாயிருந்தால் மிகவும் சிலாக்கியமாகும் அமிர்தயோகமாயிருந்தால் அதனிலும் நன்மையாகும். அந்த சுபயோகத்தில் மணஞ்செய்தால், இலக்ஷ்மிகடாக்ஷமாய் சுகசௌக்கியத்துடன் ஜீவித்திருப்பார்கள், பொருள், ஆஸ்தி, பூஸ்திதியுடன், புத்திரசம்பத்துடனும் ஜீவித்திருப்பார்கள்.

## அசுபயோக பலன்

துன்பமாம்மரணயோகம் சொல்லும்உற்பாதம்யோகம்
பன்னியபிரபலாரிஷ்டயோகம் பலபலதுயர் விளைத்து
பொன்பொருளற்றுதான்யம் பூமியில்விளைவுமற்று
துன்பமேவிளையுமென்று சொல்லுவீர் பலனைத்தானே. 12

உரை:—மரணயோகம், உற்பாதயோகம், பிரபலாரிஷ்டயோகமாகிய நாட்களில் மணமுகூர்த்தம் செய்தால் மனைவியும் புருஷனும் பல துன்பமடைந்து, பொன் பொருள் பூஸ்திதியுமிழந்து, அன்ன வஸ்திரத்திற்கே பஞ்சமுற்று பலவிதமாகிய துன்பத்தினால் சகலரும் பகையாகி, பந்துமித்திரர் பரிகாசமடையும்படியான ஏழ்மை ஸ்திதியிலிருப்பார்கள்.

## கிரகப் பொருத்தம்

கன்னிகைபுருஷனுக்கும் கிரகங்கள்பொருத்தம்பார்க்க
பொன்னவன்மாலும்சுக்ரன் பொருந்தியேஜன்மஜந்தேழ்
ஒன்பதிலிருந்திட்டாலே உத்தமம்மிகவும்நன்று
மன்னும்மூன்றாறெட்டும்விரயத்தில் மறைந்திடில்துன்பமே.

உரை :—பெண்ணுக்கும் பிள்ளைக்கும் மணமுகூர்த்தகாலத்தில் உதயலக்னம் ஐந்து, ஏழு, ஒன்பதாமிடங்களில், குரு, சுக்ரன், புதனும் இருந்தால் மிகவும் உத்தமமாகும். அதன் பலன் புத்திரவிர்த்தி திரவியலாபம் பந்துமித்திரர் பெருக்கம், தனதான்ய சம்பத்துடனிருப்பதற்காகும். ஆனால் குரு, சுக்ரன், புதனும் உதய லக்கினத்திற்கு மூன்று, ஆறு, பனிரெண்டாமிடத்திலிருந்தால் யாதொரு சுபபலனுமில்லாமல் சதாகாலமும் மனச்சலமும், துன்பமும், துயரமும் அனுபவித்துக் கஷ்ட நஷ்டமடையச்செய்து சதாகாலமும் மனவிசாரமாயிருப்பதற்காகும்.

சூரியன்செவ்வாய்ராகு சனிகேதுஜன்மஜந்தில்
கூறியஏழிலொன்பான் குறித்தஸ்தானத்திருந்தால்
காரியபங்கமாகும் கஷ்டநஷ்டத்தோடொன்றும்
பாரில்துன்பமுற்றெத்தாலும் பகைத்திடுவாரென்றோதே. 14



RangaRakes tamilnavarasam.com

உரை :—மணமுகூர்த்தஞ் செய்யும்போது உதய லக்னத்திலும் ஐந்து, ஏழு, ஒன்பது இந்த ஸ்தானங்களிலும் சூரியன், செவ்வாய், சனி, ராகு, கேது யென்னும் கிரகங்களிருந்தால், சண்டை சச்சரவு நேரிட்டு சகலகாரிய பங்கமாய்ப் பலவித கஷ்டநஷ்டங்களுண்டாவதுடன் சதா காலமும் துன்பமும், துயரமும், துக்கமும் மேலிட்டு மனவிசாரமாய் வறுமையாற் கலங்கச் செய்து பந்து மித்திரர் பழித்துப் பரிகாசஞ் செய்யும்படியான ஏழ்மை நிலையாயிருப்பதற்காகும்.

இலக்கினங் கடகமாக இந்துவுந் தருவுந்நிற்க
பலமுடன் மூன்றிலாறில் பருதியுஞ்செவ்வாய்நிற்க
நலமுடன்முகூர்த்தஞ்செய்தால் நன்மையாய்வாழ்ந்திருந்து
நலமதில்புத்ரரையும்பெற்று தனவந்தராவர்தானே 15

உரை :—மணமுகூர்த்தம் செய்யும்போது உதயலக்னம் கடகமாய் அந்த ஸ்தானத்தில் சந்திரன் ஆட்சியாகவும், குரு உச்சமாகவுமிருந்து, சூரியனும், செவ்வாயும் மூன்று ஆறிலிருந்தால், மிகவும் நன்று. புருஷன் பெண்சாதியும் மனதைரியத்துடனும் சத்துருக்களில்லாமல் சதாகாலமும் தைரியமாக சீவித்திருப்பதுடன் பொன் பொருள், ஸ்திதியுடன் புத்திரபாக்கியத்துடனே குடும்பஸ்தராய் சகலரும் புகழ்ந்துரைக்கும்படியான மேன்மையாயிருப்பதற்காகும்.

## மகேந்திரப் பொருத்தம்

கன்னிகைநக்ஷத்திரத்திலிருந்து கணவன்நக்ஷத்திரம்வரைக்கும்
நன்னயமாகவெண்ணி நான்தன்னைவெண்ணிப்பார்த்து
அன்பாககபதினைத்தை ஆராய்ந்துபார்த்துசெய்தால்
மன்னியநன்மையான மகேந்திரப்பொருத்தமாமே. 16

உரை :—பெண் பிறந்தநாளின் நக்ஷத்திரத்திலிருந்து புருஷன் பிறந்த நக்ஷத்திரம் வரைக்கும் எண்ணிய நக்ஷத்திரங்களின் கணக்கின்படியே நாலு, ஏழு, பத்து, பதின்மூன்று, பதினாறு, பத்தொன்பது, இருபத்திரண்டு, இருபத்தைந்தாம் நாட்களின் நக்ஷத்திரங்களே மகேந்திரப் பொருத்தமுண்டாகும்.

## இராசிப் பொருத்தம்

கன்னிகைபுருஷன்ராசி கலந்தொன்றுப்பினங்குமானால்
பொன்பொருளும்புத்ரபாக்யம் பொருந்தியேஇருக்கும்ஆனால்
வின்னையாய்ஒன்றுக்கொன்று வேறுபட்டுச்சத்துருவானால்
தன்மையைபடையாமற்குன் ஞாலத்தில்கலங்குவாரே. 17

RangaRakes tamilnavarasam.com

உரை :—பெண்ணின் ராசியும் புருஷன் ராசியும் ஒரே ராசியானாலும் ஒன்றுக்கொன்று மித்ருவா யிருந்தாலும், தம்பதிகளனுபவிப்பதுடன் பொன் பொருள் பூஸ்திதியும் புத்திர பாக்கியமும் பெற்று சகலரும் புகழ்ந்துரைக்கும் குடும்ப ரக்ஷகரா யிருந்து மேன்மை யடைந்திருக்கச் செய்யும். ஒன்றுக்கொன்று பகை இராசியா யிருந்தால், சதாகாலமும் மனைவி மணாளன் ஒருவர்க்கொருவர் சத்துருத்தன்மையாக பகைத்துக்கொண்டும் சண்டை சச்சரவு செய்துக்கொண்டும் குடும்ப கலகஞ் செய்யும் வஞ்சகரின் வார்த்தையைக் கேட்டு வம்பும் வாதும் கலகமும் செய்துக்கொண்டிருப்பார்கள்.

இவ்விதமாகவேதான் இசைந்ததற்பொருத்தம்பார்த்து
அவ்வியமில்லாமற்றன் அளவுபோற்கணித்தாராய்ந்து
செவ்விழிகன்னிகைக்கும் செல்வனாம்புருஷனுக்கும்
ஒவ்வியேமணஞ்செய்தாலே உத்தமமாகுந்தானே. 18

உரை :—இவ்விதமாய் ஓர் பெண்ணுக்கும் பிள்ளைக்கும் பொருத்தம் பார்த்து இராசி லக்கினத் திதி வார நக்ஷத்ர பொருத்த மனைத்தும் சரியாய்ப் பார்த்து மணஞ் செய்வதுதான் சிரேஷ்டமாகும். ஆகையால், இந்தப் பொருத்தங்கள் பார்த்து செய்வதுடன் அவர்கள் ஜாதகத்தையும் ஆராய்ந்து பலனுக்கிசைந்த விதமாய் மணமுகூர்த்த சுபதினத்தின்படியே மங்கிலியஞ் சூட்டினால் சதிபதி சுகஜீவியாய் புத்ரசம்பத்துடன் வாழ்ந்திருப்பார்கள்.

பொருத்தங்களமைந்திடாமல் பெண்ணின்ஜாதகம்பாராமல்
புருஷன்ஜாதகமும்நல்ல பொருத்தமாயமைந்திடாமல்
வருவதுவந்தேதீரும் மணஞ்செய்வோமென்றுரைத்தால்
பொருளில்லாவறுமையாலே பூதலத்தலைவாரே. 19

உரை :—கன்னிகைக்கும் புருஷனுக்கும் பொருத்தமும் சரியாயமைந்திடாமலும், அவர்கள் ஜாதக பலனும் சரியாயமையாமலுமிருக்கும்போது, வருவது வந்தே தீருமென்று மணஞ்செய்தால் பலவித கஷ்ட நஷ்டமும் கவலையும் வறுமையும் சூழ்ந்து கவலையால் மெலிந்து மரணமாகியும் பலவித துன்பங்களெல்லாம் அனுபவிக்கச் செய்யும்.

கன்னிகைபுருஷனுக்கும் கலியாணஞ்செய்யும்போது
என்னமோஏதோவென்று ஏற்றதோர்மணமுகூர்த்தம்
தன்னயமாகச்செய்தால் நவில்நன்மையாயிருந்தால்
அன்புடன்வாழ்ந்திருப்பார் ஆண்டவன்சகாயத்தாலே. 20

RangaRakes tamilnavarasam.com

உரை :--சிலசமயம் மணப்பொருத்தம் பாராமலும் காலபலன் ஜாதகபலன் பாராமலும் மணமுகூர்த்தஞ் செய்யும்போது புருஷன் தனது மனைவிக்கு மங்கிலியம் சூட்டுகிறல் அந்த வேளை பலனுக்கும் ஜாதக பலனுக்கும் சரியாய் சேர்த்திருக்கும்படியாக முன் ஜனனத்தின் புண்ணிய பலனிருந்தால் அவர்கள் மங்கிலியம் சூட்டும்போது முகூர்த்தமெல்லாம் நன்மை தருவதற்கிசைந்த விதமானபடி சரியாய் அமைந்திருப்பதுடன் அவர்கள் ஜாதக பலனும் மேன்மையாயிருந்தால் மணஞ் செய்துகொண்ட கணவனும் மனைவியும் மகிழ்வாய் வாழ்ந்திருந்து புத்திரபாக்யம் பெற்று தனதான்ய சம்பத்துடனும் பந்துமித்திரர் கூட்டத்துடன் வெகு மேன்மையாக முன் ஜனனத்தின் புண்ணியத்தினால் பகவானுடைய அனுக்கிரகம்பெற்று ஆனந்தமாய் வாழ்ந்திருப்பதற்காகும்.

திருமணப் பொருத்த நிர்ணயம்

முற்றிற்று.

RangaRakes tamilnavarasam.com

எல்லேரி க. வ. அப்பாவு பிள்ளை இயற்றிய

# ஜெயமுனி சோதிட சூத்திரம்

## விநாயகர் துதி

### அகவல்

ஆனைமுகவ னடியினைதொழுது
மானிடர்ஜெனித்த வையகந்தன்னில்
நற்பலன்துற்பலன் நாளுமேயறிய
சொற்பொருள்தன்னால் சொல்லுதற்கியைந்து
பரிமுதலுடுக்கள் பாங்கானகாற்று
அரிமுதலெழுத்தும் அவர்ராசிதானும்
பகையுடனட்பும் பார்வையும்சமமும்
தொகையதாமிராசி தொகுத்தவர்குணக்கும்
இடபம்முதலா மெல்லாவிபரமும்
திட்டமுடனெடுத்து சீர்பெறவமைத்து
கப்பியம்புலியூர் கருணீகர்குலத்தோன்
தப்பியப்பெரியணன் தனக்குப்பவுத்திரன்
அப்பாவுபிள்ளை அன்புடனிதனை
செப்பேடுதன்னில் சீர்பெறஎழுதி
அச்சிற்பதிக்க அளித்தனன்தானே.

RangaRakes tamilnavarasam.com

## நக்ஷத்ர எழுத்து இராசியில் நக்ஷத்ர நிலை

| எண் | முதல் பாதம் | 2-ம் பாதம் | 3-ம் பாதம் | 4-ம் பாதம் | நட்சத்திரம் | இராசி |
|---|---|---|---|---|---|---|
| 1 | சு | சே | சோ | ல | அசுவனி | மேடம் |
| 2 | லி | லூ | லே | லோ | பரணி | மேடம் |
| 3 | ஆ | ஈ | ஊ | ஏ | கார்த்தி | 1-கால் மேடம்<br>2,3,4 கால் இடபம் |
| 4 | ஓ | வா | வி | வு | ரோகணி | இடபம் |
| 5 | வே | வோ | கா | கி | மிருகசீரி | 1,2 கால் இடபம்<br>3, 4-கால் மிதுனம் |
| 6 | கூ | க | ங | ச | திருவா | மிதுனம் |
| 7 | கே | கோ | ஹ | ஹி | புனர்பூ | 1,2,3-கால் மிதுனம்<br>4-கால் கடகம் |
| 8 | ஹு | ஹே | ஹோ | ட | பூசம் | கடகம் |
| 9 | டி | டூ | டே | டோ | ஆயில்யம் | கடகம் |
| 10 | மா | மி | மூ | மே | மகம் | சிங்கம் |
| 11 | மொ | டா | டி | டு | பூரம் | சிங்கம் |
| 12 | டெ | டொ | பா | பி | உத்திரம் | 1-கால் சிங்கம்<br>2,3,4-கால் கன்னி |
| 13 | பூ | ஷ | நா | ட | அஸ்தம் | கன்னி |
| 14 | பே | போ | ரா | ரி | சித்திரை | 1,2-கால் கன்னி<br>3, 4-கால் துலாம் |
| 15 | ரு | ரே | ரோ | த | சோதி | துலாம் |
| 16 | தீ | து | தே | தோ | விசாகம் | 1,2,3-கால் துலாம்<br>4-கால் விருச்சிகம் |
| 17 | நா | நீ | நூ | நே | அனுஷம் | விருச்சிகம் |
| 18 | நோ | யா | யி | யு | கேட்டை | விருச்சிகம் |
| 19 | யெ | யோ | பா | பி | மூலம் | தனுசு |
| 20 | பூ | தா | ப | டா | பூராடம் | தனுசு |
| 21 | பெ | போ | ஜ | ஜி | உத்ராடம் | 1-கால் தனுசு<br>2,3, 4-கால் மகரம் |
| 22 | ஜு | ஜே | ஜோ | க | திருவோ | மகரம் |
| 23 | கா | கி | கு | கெ | அவிட்டம் | 1,2-கால் மகரம்<br>3, 4-கும்பம் |
| 24 | கொ | ஸா | ஸி | ஸு | சதையம் | கும்பம் |
| 25 | ஸெ | ஸோ | தா | தி | பூரட்டாதி | 1,2,3-கால் கும்பம்<br>4-கால் மீனம் |
| 26 | து | ஞத | த்தா | தீ | உத்ரட் | மீனம் |
| 27 | தே | தோ | சா | சி | ரேவதி | மீனம் |

RangaRakes tamilnavarasam.com

## இராசிகளில் கிரகங்களின் நட்பு

### ஆட்சி, உச்சம், பகை, நீசம்

| இராசி | சூரி | சந் | செ | புத | குரு | சுக் | சனி | இரா | கேது |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| மேடம் | உ | ப | ஆ | ந | ப | ந | நீ | ப | ப |
| இடபம் | ப | உ | ந | ந | ந | ஆ | ந | நீ | ந |
| மிதுன | ப | ந | ந | ஆ | ந | ந | ந | ஆ | ந |
| கடகம் | ப | ஆ | நீ | ந | உ | ப | ப | ப | ப |
| சிங்கம் | ஆ | ப | ப | ப | ந | ப | ப | ப | நீ |
| கன்னி | ப | ந | ந | ஆஉ | ந | நீ | ந | ந | ஆ |
| துலாம் | நீ | ப | ந | ந | ந | ஆ | உ | ந | ந |
| விருச் | ப | நீ | ஆ | ப | ப | ந | ப | உ | ஆ |
| தனுசு | ந | ந | ப | ந | ஆ | ந | ந | ந | ஆ |
| மகரம் | ப | ப | உ | ந | நீ | ந | ஆ | ந | ஆ |
| கும்பம் | ப | ப | ப | ந | ந | ந | ஆ | ந | உ |
| மீனம் | ந | ந | ப | நீ | ஆ | உ | ந | ந | ஆ |

### கிரகங்களின் நட்பு பகை சமம்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| சூரி | ச | ந | ந | ந | ந | ப | ப | ப | ப |
| சந் | ந | ச | ச | ந | ச | ச | ச | ப | ப |
| செவ் | ச | ந | ச | ப | ந | ச | ந | ப | ப |
| புதன் | ந | ப | ச | ச | ச | ந | ச | ப | ப |
| குரு | ந | ந | ந | ப | ச | ப | ச | ப | ப |
| சுக்கிர | ச | ப | ச | ந | ச | ச | ந | ப | ப |
| சனி | ப | ப | ச | ச | ந | ந | ச | ப | ப |
| இராகு | ப | ப | ப | ப | ப | ப | ப | ப | ப |
| கேது | ப | ப | ப | ப | ப | ப | ப | ப | ப |

ந - நட்பு, ப - பகை, ச - சமம்.

RangaRakes tamilnavarasam.com

## இராசியில் கிரகாட்சி, உச்சம், பகை, நீசம்

காப்பு

கயமுகனடியிணை கரத்திருற்றெழுது
செயமுனிவாக்கியம் செப்பிடலாமே.

அறுசீர்க்கழி நெடில்

சூரிய னாட்சி சிங்கஞ் சேர்விலா மேட முச்சம்
வீரிய துலாமே நீசம் மீன்தனு நட்ப தாகும்
ஏரிய மற்ற ராசி யினையிவைப் பகைய தென்று
பாரினில் பகர்ந்து நீயும் பலனை நப் பகருவாயே.

சந்திரன் கடக மாட்சி தார்விடை யுச்ச மாகும்
சிந்திய தேனே நீசஞ் சிங்கன்னி மிதுன மீனம்
வந்திடு நட்ப தாகும் மற்றவை பகையதாகும்
இந்திர னுதலாய் கேளே யிவை யெலாம் நிசாகர்க்கே.

எண்சீர்க்கழி நெடில்

செவ்வாய்க்கு மேடத்தே யாட்சியாகுஞ்
சீரியதோர் மகரமுச்சங் கடகநீசம்
வெவ்வியதோர் விடைமிதுனங் கன்னியோடு
வேண்டுதுலா ராசியிவை நட்பதாகும்
கவ்வியிடு சிங்கமுடன் கும்பந்தானுங்
கனமான தனுவுடனே மீனங்கூட
சவ்வியதோர் பகையதென்று கணிதமேலோர்
தப்பாமல் சாற்றுவாரென் றறைவாய்நீயே.

புதனுக்கு மிதுனகன்னி யாட்சியாகும்
பூவையுச்சம் நீசமது மீனமாகும்
பதமுடையவிடையோடு தனுமகர கும்பம்
பார்தனிலே துலாகடக நட்பதாகும்
விதனமுடன் சிங்கந்தேள் பகையதாகும்
மேதையுட சங்கதையின் விபரஞ்சொன்னேன்
சிதையாம லிப்படியே புவியில்பார்த்து
சிறப்புடனே மானிடர்தஞ் சிறப்புசொல்லே.

குருவுக்கு விடைமிதுனஞ் சிங்கங்கன்னி
கும்பமுடன் துலாமதுவு நட்பதாகும்
பருகுமது கடகமுச்சம் மகரநீசம்
பாவையேதனுமீன மாட்சியாகும்

திருத்தரு தேனாடு பகையதாகும்
செகத்தனிலே யிவ்வகையைச் செப்பலாகும்
அருமைதரும் குருவினுட வியற்கைதன்னை
அவனிதனி லறிந்து அறைவாய்நீயே. 5

[illegible]

பார்க்கவன் விடையுங் கோலும் பார்தனி லாட்சியாகும்
ஏர்க்கவே மீன முச்சம் ஏந்திழை நீசமாகும்
மூர்க்கமா மகரங் கும்பமுந்நியே ஆடுந் தேளும்
பார்தனு மிதுன நட்பு பகையரி கடகந் தானே. 6

சனியது மகர கும்பத் தாலுமே யாட்சியாகும்
வனியாளுந் துலாமு முச்சந் தகரது நீசமாகும்
குனிசிலை மீன மேறு கொடியிடை மிதுன நட்பாம்
வனிதையே கடகஞ் சிங்கம் வன்மேஷம் பகையதாமே. 7

பாம்பது கன்னி செட்டி பார்தனு மகர கும்பம்
சோம்பிலா மீனம் நட்பு சேர்விலா மிதுன மாட்சி
தேம்பிடுந் தேளு முச்சம் சிலை விடை நீசமாகும்
பாம்பது கடகஞ் சிங்கம் பகையுடன் மேடந் தானே. 8

கேதுயாழ் விடையுங்கூட கெட்புயாஞ் செட்டி நட்பாம்
வாதைசெய் கேது மீனம் மகந்தனு கன்னி ஆட்சி
கோதையே கும்ப முச்சம் கூறிய சிங்க நீசம்
பாதகக் கடக மேடம் பகையெனப் பகர லாமே

## இராசிகளில் கிரகம் நிற்குங்காலம்

சூரியக்கதி ரோன்புகர் புந்தி துலாமுதல் நிற்ப மொருமாதம்
செறுத்தமதி நாளிரண்டேகாகச் செவ்வாய்மாதமொன் றரையாகும்
சுறுத்தசனி ரெண்டரையாய் [illegible] மிரண்டும்
திறத்தவாண் டொன்றரையாக விராசியொன்றர் நின்றிடுமே.

## கிரக பார்வை

காரியுமூன் றேழ்பத்து மனகனஞ் சீரெழொன்பானும்
பாரினில் செவ்வாய்நாலே டெட்டெனப் பகரலாகும்
சூரியன் மதியும்புந்தி சுக்கிர னிராகுகேது
ஏரியவேழிற் பார்வை யெனவிதித் தனர்மேலோரே. 11



RangaRakes tamilnavarasam.com

## கோசார பலன்

### எண்சீர்க்கழி நெடில்

இராசிபதி பனுச்சம்வரி லறிவுதோன்று மிசக்களிப்புந்
தேசமிலருந் திரவியமுஞ் சேருஞ்சுகியாய்த் தானிருப்பன்
தேசம்புவியில் ஜெயங்கொள்வ வினைத்தகருமங் கைகூடும்
பேசமிவரைத் தீக்கோட்கள் பிடித்துநோக்கிற் பிழையாமே. 1

ஆமோராசி பதிநீச மரித்ருயச மடைந்துவரும்
போமேயலது திரவியமும் பொருந்தா விலைமை வேறுபடும்
தாமேயிவரோடுடன் தீக்கோள் தானுங்கூடில்பார்த்திடிலே
சாமேயலது தரித்திரனும் சமைந்துநோயில் தான்படுமே. 2

படுமோராசி சொலேத்தி சத்திலிருக்கில் பயந்தீரும்
விடுமேநோயுஞ் சுகமுண்டு விளங்குங்கீர்த்தி மிகவுண்டாம்
கொடுமேதினியு மனவில்வரும் குறித்தகருமங் கைகூடும்
அடுமே பாவக்கோன்பத்தில் அணிமில்நோக்கி லனுகாதே. 3

ஆரோராசி பதியித்துரு ஆனவிட்டி லமர்ந்திருக்கில்
மாதேகவியா னங்கள்வரும் மனதுபீடை யகன்றுவிடும்
மீதேகரியா றுறவாவார் விளங்குமரசர் மகிழ்ந்திடுவார்
ஏதேதீக்கோ ளுடன்கூடில் எதிர்த்துநோக்கி லழிந்திடுமே. 4

அழியாவிராசி பதிசத்துரு வானவிட்டி லமைந்திருக்கில்
ஒழியாதுக்க நோய்வினைவு மோங்குமுறவும் பகையாவர்
செழியாதேசந் திரிந்திடுவார் செறியுநிதியுஞ் செலவாகும்
பழியாம்பாவக் கோள்நோக்கில் படியில்மரணம் பலித்திடுமே. 5

பலிக்குமிராசி பதிசபரோ டோங்கியிருக்கில் பதிபெறும்
கெலிக்கும்படையுந் திரவியமும் கிடைக்குஞ் சிநேகம் புத்திரரும்
சலிப்புநீங்கு மடந்தையர்கள் தனதுபோக மிகுத்துவரும்
வலிக்குந்தீக்கோள் பார்த்திடிலே சொன்னபலன்கள்வாராதே. 6

வாராமிராசி யாதிபதி வந்துபாவ ருடன்கூடில்
தீராநோயுந் தரித்திரமும் சேருநிதியும் பதிபோகும்
பேராதெஞ்சங் கலங்கிவிடும் பிரியாத் திரிவும் பிரிந்துவிடும்
சேராத்துணைவர்பயஞ்செனிக்கும் செய்யுங்கருமஞ்சிதைத்திடுமே.

சிதையாவிராசி யாதிபதி சீரில்சத்துருவுடன் கூடில்
மதியாதிருக்கில் மனைப்பீடை மனதில் துக்கம் வருமலது
பதிபோமொன்றுர் பயஞ்செனிக்கும் பழியாங்கலக்கம் மிகவுண்
திதியும்பயிரும் பலியாது தேரும்திந்தை தெடியதாமே. [டாம்

RangaRakes tamilnavarasam.com

நெடிதா மிராசியாதிபதி நீங்காதஸ்த மனையாகில்
மடிவார் மனைதமிராமிக்கார் மாதவநிதியும் கெடுமுடனே
கொடியே யிடையாள் சுகமில்லை கொடுமைவந்து விளைந்துவிடும்
படிமேலெங்கும் திரிந்திடுவர் பழிகா மாரர் பகையாமே. 9

பகையா மிராசியாதிபர் படியிற்றுலிங்கிற் பலனீந்தி, மிகவாங்கனகரத்தின முமேன் மேல் வசமாம் விஸ்வநீர் நர். கனமாந்தேகம் வாகனமுந் தோற்று மொன்னுர் தமை வெல்வார், செகமேல் விளங்குந் தொழிலுண்டாம் சிறையும் நீங்கச் செருக்காமே. 10

செருக்கு மிராசியாதிபதி சிறுமிராகு கேதுவந்தான்
இருக்கும் வழியில் நடந்திடுமேல் இடர்ப்பிணியும்வாளதினல்
பெருக்கும்விரணங் கடநோய்கள் பேராந்திடவும் பொருட்சேதம்
உருக்குமனதில் வருத்தமிடை யொன்றுாகவர் உறுதியிதே. 11

உறுதிராசி யாதிபதி மொன்றேனுடந்தி லொன்பதினில்
அறுதியாக வமைந்துநிற்கில் அதிக நிதிகள்வருமுடனே
பிறிதியான தொழிலுறும் பிறந்துசுபக்கோள் நோக்கநலம்
இறதிகொடுக்கு நீசக்கோள்கள் இருந்துநோக்கி விளங்காதே. 12

இணங்குராசி லொன்பதஞ்சில் ஏற்குஞ் சுபக்கோ ளிருந்திடுமேல்
கணங்கள் நிதியும் வருந்தொழில்கள் கரும கனத்தும் கைவசமாம்
அணங்குபோக சவுக்கியங்கள் ஆகும் அரசமுறவாவர் [தே.
கணங்கும் பாவக்கோள் நோக்கில்சொன்ன பலன்கள் தோன்று

தோன்றும் ராசியொன்பதஞ்சில் தொடர்ந்து பாவக்கோளிருக்கில்
வன்றும் சுரமும் பலபிணியும் மூங்குந் திரவியந் தான்கெடுமே
மின்றதுமரியுயிர்ச்சேதம் இவ்வாறுஞ் சித்தும் பயமாது
தோன்றுமனது சஞ்சலமாம் கோலாப்படையுந் தோன்றிடுமே. 14

தோற்று மிராசியாதிபனை சுபமாம் வியாழும் பார்த்திடிலே
ஏற்றதொழிலுந் திரவியமும் இருந்தவிடத்தி லெய்திவிடும்
ஆற்றபுகரும் புதன்சசியும் அடர்ந்து பார்க்க லதுவசயமாம்
கூற்றங் கழிசேய் பாம்பரசனி பார்க்கில் பலன்கள் கூடாதே. 15

கூடும்ராசிக் கிருபுறமுங் கூறுமதிபர்க் கிருபுறமும்
நீடுஞ் சுபக்கோள்கள் நின்றிடிலே நிதியுஞ் சேரும் சுகமுண்டு
மூடும்பாவக் கோளிருக்கில் முயலுங் கருமங்கூடாது
தேடும் பொருள்க ளழிவாகும் தேகமதுக் நக் கண்டமதே. 16

கண்டராசியாதிபதி கதிர்கள் நீங்கி வக்கிரிக்கில்
கொண்ட பொருள்க ளழிவாகும் குடிவிட் டோட்டும் கலகமுறும்
அண்டும் பிணிகள் தீராது அதிகமாகுந் தொழில்மறுக்கும்
விண்டபலன்கள் வக்கிரந்தீர்ந் துடனேவந்து விளைந்திடுமே. 17

விலையுமிராசி யாதிபதி விரைந்தே நிற்குமிராசியினுக்
குலையுந்திரிகோ ணந்தனக்கே யுற்றசுபக்கோள் தானிருக்கில்
வலையுஞ் சுபமும் தானுண்டாம் வருந்தும் பாவக்கோளிருக்கில்
கிலையும் பகையாம் பலனில்லை தெளிப்பும் நீங்குமறிவீரே. 18

அறிபு மிராசியாதிபதி ஆறீருரோ டெட்டதனில்
நிறுவியிருக்கி லவலமும் நிதியுமிழக்கும் நிலைநீங்கும்
உறுதிசுபக்கோள் கூடிடினே உண்ணும் பலன்கள் வைகவமாம்
முறுதி பாபக்கோள் கூடில்முழுது மரணங் கிட்டிடுமே. 19

கிட்டுமிராசி யதிபன்முதல் கிளருஞ் சுபக்கோள் திரிகோணம்
திட்டராசி யுடனிருக்கில் சேரும்பலமென் றுரைத்ததுமெய்
உட்டமூன்றின் விட்டோர்கள் இருக்குந்தானம் பலத்திருக்கில்
தொட்டபலன்சம்பூரணமாய் தோணக்கிடைக்குந்தொலையாதே.

தொலையா தொருவன் தான்பிறந்த தோன்றும் நாள்கள் மூன்றிலுந்தான், நிலையாஞ்சுபக்கோள் நின்றிருக்கில் நிதியுஞ் சேரும் நிறைநீக்கோள், உலையாதிருக்கப் பொருளழிவாம் உடம்பு பீடையுறுங் கலகம், மலைவாம்பதிவிட் டேகிவிடும் மறமாம்பலன்கண் டறிந்துரைமே. 21

உரையாம் பிறக்குர் நாளினுக்கே ஒன்றுங்கிரக மொன்பதுந்தான்
நிரையாமவத்தை வேதைபுறில் நிதியுமிழக்கும் நிலைநீங்கும்
விரையாம் பலன்கள் வாராது விரணம்பிணிநோய் மனஸ்தாபம்
புரையே ராசர்பய மிதுதிபோரில் மரணம் புகழ்வீரே. 22

புகலும்ராசிக் கிரண்டைத்தில் பொருந்துஞ் சுபக்கோள் நின்றிருக்கில், இகலுமரசர் மூலவசியம் எவர்க்கும் பிரியமா யிருப்பர், அகலுமூன்றி ரைந்திடத்தில் ஆகாக்கிரக மமைந்து நிற்கில், இகலும் பொருந்தா ரோடிருந்தால் இணைப்போர் செயிப்பர் நிச்சயமே. 23

சயமாமிராசிக் கைந்தனிலே சாரும் பாவக்கோளிருக்கில்
தயமாந் தாரம்தினக்கதிகம் நாடும் பிணியாம் நான்கதனில்
சுயமாஞ் சுபக்கோள் நின்றிடிலே சுகமாந் தேகம் பத்தினிலே
வயமாம் பாவக்கிரக முறில் வறுமை கீர்த்தி வரண்டிடுமே. 24

இடுமா மிராசிக்கொன்பதனில் இசையாய் பாபக்கோளுதிக்கில், அடுமேதனைதின் பிதுர்பீடை அனுகூலமா மிடத்தனிலே, விடுமே பாவிருந்திட்டால் விடுவிட் டோட்டும் பதினொன்றில், தெடிதாஞ் சுபக்கோள் நின்றிட்டால் நிதியும் சேருமிதுநிசமே. 25

நிசமா மிராசிக் கெட்டினிலே தேடியபாவ மிருந்திடிலே
வசமாந் தேகபீடைகள்தான் வருமேஒன்ப தாமிடத்தில்
விசையாய் சுபக்கோள் வீற்றிருக்கில் விலையுந் தரும தானகுரு
நசையாய் தெய்வபக்திமுடன் நன்றும் வருமே நங்கையரே. 26

RangaRakes tamilnavarasam.com

தங்கைராசி கேந்திரத்தில் நற்கோள் நிற்கில் சுபமுறும்
சங்கையுடைய மருவலரை சாடித்துரத்தி வென்றிடுவன்
மங்கைசுகமு மாடுமணி மைந்தரின்பம் பெற்றிடுவார்
தங்கும்பாவர் சுபருமுறில் தருமே யசுப சுபபலனே. 27

பலமா மிராசியாதிபதி புரிவாஞ் சௌஷேத் திரமுச்சம்
குலமாங் கோள்கள் தன்னுடனே கூடியிருக்கத் திருவுண்டாம்
நலமாத் தேகதிடமுண்டாம் நற்கந்தியும் அறிவுநும்
தலமாத்தொழிலு மிகவுண்டாம் சாருட்பிணியுந் தவிர்ந்திடுமே 28

தவமா மிராசியாதிபதி தானே நவாம்ச சத்திருக்கில்
உவமாஞ் சௌஷேத்திரமுச்சம் ஓங்கு நவாம்ச சத்தினிலே
நிவமாயிருக்க சுபபலனும் நீசமருவி சத்துருக்கள்
பவமாமென்னு மங்கிசத்தில் பாரில் பலனும் அவமுரையே. 29

உரையாமுள்ள சரராசியோர்கள் திரராசியைப் பார்ப்பர்
திரையாந்திர ராசியிலுள்ளோர் நீங்கா சரராசியைப் பார்ப்பர்
விரைவா முபயராசியது மேன்மேலுபய ராசியினை
புரையாகுஞ் சுற்றிப் பார்த்திடுவார் புகலக்கேளு மிதுகணையே. 30

இதுதானெனுக்கிற் சரராசி யிருப்பதிரண்டா மிராசிதனை
அதுதானெனுக்கார் திரராசி யமர்ந்தோர் பன்னிரண் டாகும்
விதமா மிராசியினை நோக்கார் விளங்குமுபய ராசியுள்ளோர்
சுதவா தான்கா மிராசிதனை கண்ணுறல் நோக்கார் காணுமதே. 31

காணுமிது நோக்கல்லாமல் காரியுன்றுபத்துகுஜன், தோணுதான் காமெட்டு பொன்னேனுன் துடர்ந்து நோக்குமொன்பதஞ்சு, பூணும் புகர்மால் சசிபாம்பு பொருந்தி நோக்குமே மிடங்கள், வேணுமித னோக்குடன் கலந்தே விரைந்தே பலன்கள் விளம்புவரே. 32

விளம்பு மிராசியாதிபதி வினைவாய்ப் பார்த்து விரைவாக
வளங்கொள்பலன்கள் சொலுமதுபோல் வடிவாமங்கி சாதிபர்க்கு
துலங்கும் பலமுந் தொகுத்திடுவாய் சுருதிநூலு மிவ்வாறே
களங்கமறவே சொல்வதுநீ கண்டே யறியுங் காரிகையே. 33

காரிஜென்மத் துறையுமதில் கலந்தே சனியுந்தா னிருக்க
தேரிதான்காம் நாளதனில் நெடிய ராகுகேது குஜன்
சீரியிருக்க ஒன்பதெட்டா நாளில்ரவி சிறந்திருக்கில்
பாரவிலங்கு மடிபிடியும் உடனே வந்து பலித்திடுமே. 34

பலிக்குஞ் ஜென்மத்தியாயமதில் பதிவாய் வியாழம்பதித்திருக்கில், பொலிக்கும் தான்காம் நாளதனில் புகரும் புதனும் புகழ்ந்திருக்க, சசிக்கும் தான்க ளொன்பதெட்டில் சசியு மிருக்க மருவலரை கெலிக்கும் சுபயோகங்கள்திதி கிடைக்கு மரசர் வணங்கிடவே. 35

RangaRakes tamilnavarasam.com

வணங்கும் பலன்கள் வகுத்துரைக்கில் வளங்கொள் ராசி யாற்பதினேன், நிணங்கு மகமும் நான்மூன்றி லிருக்கும் கிரக வலிமைகளும், கணங்கொள் கிரகநோக்குகளும் கடிதாமவஸ்தை வேதைகளும், மணங்குமிராசி யிருபுறங்கொள் வலியும் பார்த்து வகுத்துரையே. 36

## துவாதச பலன்

செப்பியதோர் லக்னுதி பலவானுகில்
    சேர்ந்தசுப நுடன்கூடி ஆட்சியுச்சம்
தப்பில்லாக் கருமாதி பாக்கியாதி
    தான்கூடி யிருந்திடவே தாழ்விலாமல்
செப்பினும் முக்கிமட வாய் தனமும்தானியம்
    திறமான அறங்கீர்த்தி யுடையோனுவான்
அப்படியே பூரணமாய் வயதுமாகும்
    அறிந்தபடி யின்னங்கே ளறிவாய்மானே. 37

யானேகேள் லக்கினுதி நீசனுகில்
    மன்னுமுடல் சவுக்கியமே யில்லானுகும்
தானுகும் சரராசி கடகமேடம்
    தான்மகரம் துலாமோடு தவர்ந்துமற்ற
தானுகும்ராசிதனி லிருந்திட்டாலும்
    தாயகமாகு சடமில்லை சுகமுமில்லை
தேனுகும்சுபருடனும் பத்தாமாதி
    சேர்நோக்கம் பிரகாச தேகங்காணே. 38

காணவே சென்மாதி யங்கிசத்திலேறில்
    கருதுசுக தேகியாத் தனமுடையனுவன்
நீணவே நினைத்தகாரிய முடிப்பன்சபையில்
    நிர்வாகி யிதமதித்து நேராய்ச்சொல்வன்
பாணவே பூமிகள் விஸ்தாரமாகும்
    பார்த்திடவே பிரசித்த கீர்த்திமானும்
வாணவே நல்வசுப ருடனேகூடில்
    வாழ்ந்தமற்றே ருடன்கூடி வலஞ்சேர்வானே. 39

சேர்ந்துநின்ற குடும்பாதி பல்வானுகில்
    சேருமதி தனவானும் கேத்திரபுரியமகன்
வாய்த்ததோர் குடும்பமுண்டாம் பாவரோடு
    மருவியே சேர்ந்துநின்றும் மற்றுங்கேளாய்
ஆய்ந்தவித்தை பொருள்செலவு குடும்பநாசம்
    அகன்றுவிடு மத்திய வயதுமாகும்
ஏந்துமுலை மடமாதே பலனைப்பார்த்து
    இயம்புவா யிப்படியே யெழிலாய்நின்றுல். 40

RangaRakes tamilnavarasam.com

நின்றமூன்று மிடத்திறைவன் பலவானாகில்
　　நேர்பெரிய சகோதரங்கள் வரியமுண்டாம்
வென்றிடாச் சகோதரங்கள் மிகவுண்டாகும்
　　விப்பிரர்நீச மூடமதில் மேவிநின்றால்
வன்றணிந்தோன் மடமானே சகோதரர்களும்
　　மருவியே சுபர்பார்க்க மற்றுங்கேளாய்
பொன்றணியாய் சத்துருவா யிருப்பரெல்லாம்
　　பூவைநீ யிதையறிந்து போற்றுவாயே. 41

நாலிடத்ததிபன் நன்மையாய் பலராய்
　　நயந்துற பந்துக்க ளுண்டாம்
காலிடக் காமி யாயிருப்பவனும்
　　கன்னிகை தன்னை நேசிப்பன்
மாலியா மிருதி விதிதமாயிருப்பன்
　　மருவுநல் களத்திரம் வருமால்
ஆலியாம் அம்மான் வமிசம்பேர் சொல்வன்
　　அன்பர் தற்சுப ருடன்கூடில். 42

கூடியே நாலா மாதிதானிருக்கில்
　　குலவிய வாகன மிகவாம்
வடியாந் தோளிவாகன முண்டாம்
　　உண்மையாய் மனைகளு முண்டாம்
வாடியே பாவி யாகியேபலனு மற்றுமே
　　பாவரைக் கூடில்
சாடியே யிவைகள் தானுமேயில்லை
　　சகத்தினில் தெளிந்திடச் சாற்றே. 43

அஞ்சிடத் ததிபன் பலவந்தனாகில்
　　அருந்ததற் புகல்வரைப் பெறுவன்
நெஞ்சினில் மனநிட் களங்கமாய் வாழ்வன்
　　நேமியோர்புகழ் புத்தி நெறிமான்
வஞ்சமில் ஞானி தர்க்கமே செய்வன்
　　வன்பாவர் நீசரைக் கூடில்
பஞ்சுமெல் லடியார் நேமா மூட புத்தி
　　யாமெனப் பகர்ந்திடுமே. 44

ஆறிடத் தன்னில் லக்கினத் ததிபன்
　　அமர்ந்திட ரோகவான் கோபி
வேறிய சூன்ய மந்திரத்தேவி பூஜையா
　　மிவையெல்லாம் வெறுப்பாம்

RangaRakes tamilnavarasam.com

வேறிடத் தன்னில் பாவரைச்சேரில் மணிபிணி
சத்துரு விலையாய்
மாறிடப் பலமு மிலாமலே யிருக்கில்
மருவிய யீன வாறுமே. 43

ஏழிடத் ததிபன் பலவானேயாகில்
ஏர்சுத களத்திரப் பிரியன்
வாழிய ஷணத்து ஷணத்து மேகாமி
வகையொடில் வாழ்க்கையிற் சதிரான்
ஆழியாஞ் சொற்ப பலங்களாயிருக்க
அம்புவி தனிற் சதாகாமி
பாழிவன் றேன்று மேழிடத்ததிபன்
பலங்களைப் பார்த்துநீ பகரே. 4ı

எட்டிடத் ததிபன் லக்கினத்தாதி யிருவருங்
கூடியேயிருந்தால்
பட்டண வயதும் அற்பமதாகும்
பதியோக தீர்க்க மென்பாரால்
தட்டவே பலனில்லா திருந்தாலும்
சன்மாதி சார்ந்திருந் தாலும்
வட்டமா முலையாய் நீசொல்லக் கேளாய்
வருசாதகன் வருத்தந் தானே. 4

வருத்தமில்லா பாக்கியாதி பலவானுகி
வந்துநிற்க பிதுர்தனமே யுள்ளானும்
அருத்தியுறும் பிதுர்மூல சுகமேயுண்டு
அன்னியரால் பாக்கியங்க ளன்பாய்ச்சேரும்
செருத்தமிலாப் பிரகாச தேகங்கண்டாய்
செப்பியநேதார் பிதுர்மூல சுகமேயுண்டு
உருத்திபிடும் பலவீன மானுவில்லை
உண்மையா யிதையறிந்து யுரைப்பாய்மானே. 48

பத்திடத் ததிபன் பலவானேயாகில் பரிந்துதற்
கர்மமே செய்வன்
மெத்தவே பாவி யாகவேவயிருந்தால் வேணுதற்
கர்மமே செய்து
சத்தியாய் சுகசீவ னுயிருப்பன் சகலதற்
கருமமும் செய்வன்
மத்தமாய் வருத்த மாகவேவாழ்த்து
மறலியூர் தனிலடை வார்கள். 49

RangaRakes tamilnavarasam.com

அடைவுடன் லாபத் தாதியேபலமாய் அடைந்திடச்
சகோதர மூலம்
இடைமுடை லாபம் பயிர்வழியே யமும் இத்தகை
யுடையவ னுவான்
சடைமுடி பலமு மீனமேயாகில் சாற்றிய
சகோதர மூலம்
படைநெடுங் கண்ணு யிலேசுபலாபம் பருந்திட
மொழிந்திடு மானே. 50

மானே பன்னிரண் டிடத்ததிபன் மணிபல
வானுமே யாகில்
தானமாந் தர்ம மிகவுமேசெய்வன் தர்மவான்
கீர்த்திமா னவன்
ஆனதோர் விறையத்தாதி தர்பலனும் அமைந்திட
ஐத்தனும் வாழ்வன்
தேனேர் மொழியாய் துவாதச பலனைச்
செப்பினர் ஜெயமுனிதானே. 51

## திசாபுத்தி பலன்

தேவமண் டலத்தி லிருந்திடுங் கோட்கள்
திசைபுத்தி அந்தரம் நடக்கில்
தேவதாபத்தி வாகனஞ் சுபங்கள்
திரவியமி ராசாபிமானம்
மேவலர் சமானம் பூமியாளடிமை விரும்பிய
பலனெலாங் கூடும்
தாவிய விவாக புத்திரர்லாபம் தைரியம்
வெகுபலன் சாற்றே. 52

நரமண்டலத்தி லிருந்திடுங் கோட்கள் நடத்திடுந்
திசைபுத்தி யந்தரம்
பரவியபலன்கள் தடாகம் பிரதிஷ்டைபாக்கியம்
வாகனம் பலிக்கும்
திரவியலாபம் பயிர்பரிசெட்டுசெகத்தினில்
நன்மனை கிடைத்தல்
குறைவிலாப்பூமிதாய் தந்தைதமைந்தர் குளிச்சியா
மிவையெலாங் கூடும். 53

அரக்கர்மண்டலத்தி லிருந்திடுங்கிரகம் அந்தரம்
திசைபுத்தி வருமால்
பெருக்கதேவபுத்ரர் பெண்ணுடன்சேதம் பசாசினுல்
பயித்திய ரோகம்

வருக்கமாம்பித்தர் தாய்தந்தைநஷ்டம்மனதினில்
பயத்துயர் காட்டும்
இரத்தவேகஷ்டம் பாற்பசுசேத மிவையெலாஞ்
ஜெயமுனி யிசைப்பே. 64

---

## நவக்கிரக சமயம் 48-க்குப் பலன்

---

ஆறுமுகத் சன்மலக்னமட்டு மெண்ணிக்கொண்டு
அவரவர்க ளிருந்தபதி யீறுகச்சரியாய்
பீடுறவேயெண்ணியிரு தொகையுமொன்றாய் பேணி
பெருக்கிபதோர் தொகையையிரு பானேழிற்கீந்த
சேடமதை கிரகதிசை வருடமதிற்பெருக்கு
சேயிழையே யாறெட்டுக் கீந்தமிச்சமதுதான்
நீடுலகில்சமயபல னிதுவா மென்றே
நிகழ்த்தினற் ஜெயமுனிவர் நிச்சயமாய்த் தானே.

### 1-வது சமயம்

சொல்வர்முதற் சமயமது நிர்த்தனமேயாகும்
தொல்புவியிற் பாவமதற் கஞ்சுவன்சத்துருவவான்
நல்லபொருள் சேர்த்தெவர்க்கும் வள்ளலெனக்கொடுப்பான்
நயத்தநா லுணர்த்துவித்வத் தன்மைமிதமில்லவன்
பல்வளஞ்சேர் நிலமும்வெகு மாளிகையுஞ்சேர்ப்பன்
பலபெண்டிர் மித்ரரோடு பாருலகில்நெடுநாள்
அல்லலின்றி வாழ்ந்திடுவன் கன்னலிமுக்கனியை
யமுதினைபோத் திடுமொழிசேர் அன்னநடையாளே.

### 2-வது சமயம்

ஆறமது வேல் நங்கை சமயமிரண்டுக்கே
யறையவர்ப்ரோச் சிதமெனவேயரு ளுணர்த்தபெரி
வாளவைக்கு மரசர்களால் தண்டனைக்குட்பட்டு (போர்
மனைவிமைத்த னவளரசு மானமுங்கெடாரும்
கோளர்களால் பகைநேரும் கவலைனப்படுவன்
குன்றுமெய்ச்சொல்லி லான்கூர்வன் மிகுபொய்மை
வேண்புசிப்புணவு தவர்த்தலவன் வெகுகோபி
விதியிவர்க்கு விதித்தனவாய் விளம்புவர்நன்னூலே.

RangaRakes tamilnavarasam.com

## 3-வது சமயம்

விருத்திடுமூன்றும் சமயத்தான மெனப்பகர்வர்
மிகமனதிற் கடுமையுளான் விடமெனவேமுனிவன்
கதித்திடுமா சாரமுளன் திரவியமுமற்பம்
கைப்பொருளாற் சித்திபுண்யம் கருதுமிக்ககாலான்
துதிபெறும் திசாபுத்தி வருநாள்மத்திமியிலே
துன்பமடைவான் தனதான்யம் துலங்குமவனிடத்து
பதிவிலவ வேசர்களும் துணைவர்களும் விசனப்பட
மனைவிபுதல்வர் கண்டம் பருவர்பைந்தொடியே.

## 4-வது சமயம்

பைந்தொடியே நீ ரெண்டாஞ்சமயபலன் புகல்வேன்
பகருக்கிய பாத்திரத்தில் போசனமேயாகும்
சுந்தரஞ்சேர் சுரர்களையே தரிசிப்பரவரால்
சுகமடைவன் நவமணியோ டுமிகுநிதிதானியமும்
புத்திகளித்திடுநிலமும் பயிர்பலனும் பெறுவன்
புகழ்பெறதற் செல்வனெனப் போகமடைந்திடுவன்
சத்தமமு மறுசுவையோ டருந்துதலுந்தவருன்
தருக்கிளமைதனமளித்து தருமனெனப் புகழ்வார்.

## 5-வது சமயம்

தவமிலைத்தாம் சமயமுரை தரித்திரனோவாகும்
தனிவுடல் சேர்த்திடுமனைவி மைத்தர்மித்ருபீடை
நிலையுளதன் பிதுர்க்குமூவம் அன்னைதலங்குறைவாம்
நீணிலத்தோர் பித்தனென நிகழ்த்துவர்களவனை
அலைவான் சுத்தமிலான் புத்தியனுசாரன்
அறிவிலனென்றெவர் கருமேயவனை யிகழ்ந்திடுவர்
கலைபுகழுமான்மகள்சேர் காங்கேயன் கைதொடுமொான்
கதிர்வேலுக் கினையெனசொல் களியளிகண்ணுளே.

## 6-வது சமயம்

கண்களிக்கும் சமயமிருமூன்றினுக்கே புகல்வர்
காவித்த பூணூலின் கலியாணமாகும்
மண்ணுலகிற் றனதானிய பணியினமுஞ்சேர்ப்பன்
வாகனமு மாவினமு மாவணியிலிடுவன்
என்னமுளான் சுகபோசிப்போன் குடும்பமதிற்றலைவன்
எய்த்தசுற்றத் தொடுவாழ்வான் இயல்பானகுணவான்
புண்யபலத்திகளிற் போவாடுவன் மன்னவரைப்
புரோகிதரைச் சேர்ந்துகனம் புரிவனற்பொற்றொடியே.

RangaRakes tamilnavarasam.com

## 7-வது சமயம்

பொற்கொடியே யேழாஞ்சமயமா சனத்தின்மீது
பொருந்தும்வெகு பழிபேசர் பொறுமையிலான்கோபி
நற்பகைசேர் வித்தைபுத்தி தொழில்களுந் தப்பனமாம்
நானிலத்தி லற்பவல் செலவுதிகமுறுநும்
செப்புவர்கள் திசையாதி யந்தமதில் நஷ்டம்
செய்தொழிலின் பலன்பயிற் சிறந்திடுமத்தியிலே
தாக்கமிகு முத்தியோகந் தருமன் தன்னால்
தனவிரயம் மனதின்மிகச் சஞ்சலஞ்சேர்கடனே.

## 8-வது சமயம்

கடக்நிகர்த்த கண்ணுகேள் நாவிரஷ்டாஞ்சமயம்
கழுத்தினிலுஞ் சிராட்சம திமணியு மிதைக்குமற
நடமடவனிநநான்கி லிலக்குமியு மனையில்
நானிலத்திலுயிர்க்குதவு நற்நநெம்பத் தரிவன்
திடமொட நுசைவைவநந்துர் தனதான்யம் வெகுவாய்ச்
சேர்ந்திடுவன் சருதிமொழிந் தினிய தலஞ்சூழ்வன்
இடும்பையிலான் குருசுக்ரர்கள் பூசுரர்கள் மகிழும்
இன்பவான் வானத்தோ டிருநிலத்திலாசான்.

## 9-வது சமயம்

உளமகிழோன்பான்சமயம் புவித்தோவிற்சயனம்
ஒண்பூமிசுரபி எருதுச்சுப வாகனமாம்
களங்கமிலாக் குலம்விளங்க யாகாதிகருமம்
கவித்துவஞ்செய் விவேகமுடன் பிறர்க்குபகாரனுமா
வளங்கொள் களத்திரமகிழவும் பந்துமித்ரான்மகிழவும்
வளர்பொருள் தானியலாப மதுரகவைபோசனமும்
துளங்குபுராணக் கேள்விசோதிட வேதாந்தம்
தூபிதலந்தாம்பூலம் சோபனமே சொல்வர்.

## 10-வது சமயம்

சொல்லுவன்பத்தாஞ் சமயநீருகாித்திடுதல்
சொற்பனித்தைதெய்வபக்தி யற்பதனவருத்து
பல்லலங்காரன் வெளிக்குக்கீர்த்தி புளன்பிறர்க்கு
பண்புபெறுசுபசாதி மித்ருதுரோகனுமாம்
நல்லவர்கள் சாபமதால் திரேகமதிற்பிணட
நவிக்தெய்வ பிரார்த்தனை மந்த்ரமவிழ்சித்தி
அல்லதுசெய்துபிறர் பொருளை களங்கமதாற்கவர்ந்து
மாவலாலுணர்வுசெய்வ னென்னநடமயிலே.

## 11-வது சமயம்

சோதிட நூலாருரைப்பர் பதினொன்றும் சமயம்
ருட்சமா மந்திரசித்தி பூதபாசுகனே
மோதியேசிஷ்டைசெக மோகனமே செய்தல்
முக்காலதேச வர்த்தமானமதையறிதல்
வாதமொடு வயித்தியஞ்செய்திடுவன் மிகுபூமி
வளமையுளான் தனதான் யமலைவி மைந்தருளனும்
ஓதுவர்களுயிர்களின்மே லிளைகயுள்ளவனும்
ஒவ்வா தசத்ருவுக் கிடியேறொப்பவனே.

## 12-வது சமயம்

உன்னிதபோகன் சகப்பிரசித்தன் உறுதொழில் சித்திநற் குணவான், மூதிநல்வித்தை சாஸ்திர தர்க்கன் ஸஜ்ஜனன் யோக்கியவானே, மன்னனும் பிரபலன் தானராசரன் மானிஷ்டை யேவலாள்மிகவாம், மாய்கைபகற்றும் விபூதிருத்திராட்ச மாலி காபரண நற்சுசிமான், நன்னிலையுடைய இஷ்டர்கள்நேசன் நற்சுபசோபனகாமி, நன்னெறிமகிழ்ச்சி விருத்திபபாசி நவிலுவர் வாகன முடையோன், பொன்னிலமதனில் அதிகவிர்த்தியதாம் புகல்வியாபார மேன்மேலாம், புகலுவர்வயது தீர்க்கமாமின்னூர் புகழ்சொன்ன வஸ்திரசமயம்.

## 13-வது சமயம்

பத்தின்மேல்மூன்று ரசவர்க்கசமயம் பகருவாருமறை தெரிந்தோர், பாரில்பற்பலவாத் தான்யவியாபாரம் பவிதமாகப் பூப்பயிர்விருத்தி, புத்திமானுலகிற் பற்பலவான புகழ்பெறு தரும சித்தையினன், பூதலத்தனிலே போகபாக்யவான் புத்ரமித்ரர் தன் மனைவியினுல், இத்தரணியினற்புகழ் பெயருளனுமியல்பெறு சலசமாதெண்மர், ஏதமில்லாமலிருந்திடுங் குணவா னிருதிலத் தோர்களும் புகழும், வித்துவான் சகலபாஷைகளிடத்தும் விதி பதித்துரைக்கும் வல்லவனும், விறுதுயர்யோகனு மெளனிலம்பும் வேலினை திர்த்திடுங்கண்ணுய்.

## 14-வது சமயம்

கண்மணிகேளீ ரேழாஞ்சமய மதைப்புகல்வேன்
கற்பாஷாணச் சமயமென்னவே சொல்வர்
மண்ணில்வெகு குணமுளனு மாபூமிதனவான்
மாதுவர்க்கம் பிதுர்வர்க்க மாகருமமுளனும்
அன்னைவ்வெகு ருட்சிகுண மாட்சிவிரனுமாம்
ஆனபிரை யாசிதன வினனெனவறைவார்
குன்றுவழி நடைதனிலே மிகவினைப்புள்ளவனும்
கொடுவினை முளனெனவே கூறுவர்சோதிடரே.

## 15-வது சமயம்

வல்லிகேள் துர்க்காபரணமேதரித்தல் மன்னுழவைத் தெனுஞ்சமயம், நல்லபுத்திரர் மித்திரர் களத்திரமும் நவிலன்னை தந்தையர் நாசம், சொல்லுவர் சிரேஷ்ட கனிஷ்டபங்காளி சினே கரு நாசமதாகும், அல்லலு மடைவன் சாதகனென்றே அறை குவர்மறையுணர்ந்தவரே.

## 16-வது சமயம்

மறையுரைத்திடு மீறெட்டெனுஞ் சமயமென்னு பீதாம்பர மணிதல், மான்புளசிநேகர் தமரையுறித்தம் வணக்கமா யுபசரித் திடுதல், குறைவிலாப்பூம்புத் தனதான்யங் கோதிலாரத்தினு பரணம், கொற்றவர்தமக்கு மித்திரனுகும் கொடியசத்துரு ஜெய முடையோன், தரணியில்வெகுபேர் தேடியபொருளுந் தான்யமு மெளிதில் வந்தெய்தும், நானதர்மங்கள் வஸ்திரலாபம் ததியுடன் சிஷ்டபோசனமும், கறையிலாவஸ்திர மணிதலுந்திவ்விய களப கஸ்தூரியில் விருப்பும், கானமார்கீத நடனநாட்டியத்தில் கன விருப்புடையவனென்பார்.

## 17-வது சமயம்

எண்பர்பத்தேழாஞ் சமயமாவுதத்தோடேய்த்த சிம்மாசன மிருந்து, எண்டிசைத்தொழிலு நடத்துவன் பூமியொடுதன தானியமிகவாம், தன்மையோ டுகித்திடுதலும்போக தலமுறு வஸ்திரமணிதல், நாடிய புகழ்ச்சி வெற்றியோடன்ன நடையினர் தங்களைத்துதிக்கும், தன்மையாளுமைகவசியமே செய்தல் தாஞ் சுகர் பூஜ்யதையுடையோன், சங்கரனையன்மால் சேவையுந் தீர்த்த யாத்திரை தன்னிலுஞ்சான்றோர், பன்மறைகேள்வி பலுக்கிரசித்தி பாரகாவிய முணர்திறமும், பற்பலநலமுண் டென்றுரைசெய்வர் பாவலராகிய பழையோர்.

## 18-வது சமயம்

பாவலருரைப்பார் பதினெட்டாஞ்சமயம் பாரினில் பிராணியை வதைத்து, பலவழக்காடி ஜெயமடைந்திடுதல் ப[illegible]த்திற்கடன்படுதல், கேவல தேகனவிழ்தமேபொசித்தல் தேயதன தான்யம் தவக்கம், கீர்த்திமான் வெளிக்குக் குடும்ப னுமோம கிரகசாந்திகளிலே பிரீடன், நாவலர்முதலோர் தங்களை விடம் நவிலுவன் தாலகிர்த்தியனும், நாட்டுளார் சமய வாதி களுடனே நவிலுவான் சகலதர்க்கமுமே, தீவினைதேக விரணமு மென்பர் திசைகளந்தரத் தினிற்செப்பும், செய்தொழில் மேன்மை தனதானியபூமி சொர்ணவஸ்திரமுண் டென்பரே.

RangaRakes tamilnavarasam.com

## 19-வது சமயம்

பத்தொன்பான் சமயமிது காலில்விலங்கிடு நல்
  பயமிலான் வைரியவான் நூடங்கிநான்றுடுக்கள்
மெத்தவேசேட்டையுளன் ஞானமிலாயினன்
  வேதனைசெய் வயிற்றுவலி நோதுடல்வாதம்
தத்துகளத்திர முதலாய் புத்ரா திலேசம்
  ராஜசிறை திருடன்பிதுர் தூஷணமே நவில்வர்
சத்துமதி யாருமவனோர் யாருமிவன்றன்னை
  சண்டாளன் பொய்யனென தானறிவாய்மின்னே.

## 20-வது சமயம்

பின்னையாய் கேளிருப தாஞ்சமய மிருபிராணிகளை வெட்டு வலான், மிரியபவமிருக் தொடுபயம் நித்தியமிதுபிரை யாசைபே படுவன், மன்னியவறுமை அடிமையாளனுமாம் வளர்த்திடு மன்னை தந்தைக்கு, மாதுயர்செய்பவன் நித்தியகிலேசன் மனமறி பாவகீர்த்தியாளும் நன்னியில்லா தூஷணைசெய்யும் நவின் றிடும்சுகமிலானடிமை, நவில்சிரரோகன் மேகவாய்வுடனே நாடியவிஷமுளரோகன் தன்னை, வந்தடுத்தோ ருக்குபகாரி தன மிலான் தயையிலானினன், தந்தைதாய்தமர்கு தகமதுசெய்து தானுமேகடன் படுவானே.

## 21-வது சமயம்

மானே இருபா னொன்றதற்கு வழக்கும் நமஸ்காரச்சமயம், வானோர் முதலந்தணர் தமையும் வணங்கித் துதிக்கும் பிறர் பொருள்மேல், தானே மிகவச் சையுளனும் தனமே குறைவுசெல வதிகன், தேனுர் சுவைபோசனசவுக்யன் செகத்தோரிகழு நடை யான்.

## 22-வது சமயம்

நடக்கு மிருபா னிரண்டிருரோட் சமையவன்னை பிதா, இடத்திற் பிரியன் களத்ரபுத்ர மிருதில் சேர் போக போக்கியமாம், பிடித்த தொழிலும் சித்தியதாய் பெருகுஞ் சுபசோபனமவன தன், கடத்திற் சுகந்தபரிமளமும் கலைவேண் மதிபோற் கலை யணிவான்.

## 23-வது சமயம்

அணிசே ரிருபான் மூன்றிற்கு மஸ்வ நடாத்து மதுசமயம் தணிவா வயிர்க பொசிப்பதனைச் சாஸ்திரம் பழுவா நடையுள னும், பணியார் கனகம் சுரபிவஸ்திரம பாரில் மிகவும் பலித் திடுமே, பிணியிலாமல் மேன்மேலும் பெருகுமாயுள் தீர்க்கமதாம்.

RangaRakes tamilnavarasam.com

## 24-வது சமயம்

இருபா ருன்கில் மேற்றிசையி லெழில்சஞ்சார மெனவிசைப்பர்
மருவுஞ்சடை னானமும் வாழ்வன் கிராமா திக்கமுடன்
தருமே வஸ்திர லாபமது தக்க கிரகந் தனம்பூமி
பொருமே கொடுக்கல்வாங்கலுடன் புனைதீர் தருமம்நடத்துவனே.

## 25-வது சமயம்

மருவுமை யைந்தாம் சமயமேயெழுந்து மாகுட்சமேபோசனே புரிதல், வெகுவிலாக் கபடவஞ் சகநெஞ்சன் வெளிக்குடம்பன் வெகுதீரன், பரிகலம் பதினெட் டுமுடையவன் வெகுபேர் பயப்படும்படி யுறுக்கிடுவன், அருளிலான் கோவிய ஞசாரனென்றே அறைகுவர் அருமறை யறிந்தோர்.

## 26-வது சமயம்

அநிந்தவ ரிருபத் தாறெனுஞ்சமய மசுவவா கனமனழுத் திடுதல், சிறந்தகோர் தடாக நந்தனவனமும் சிவாலய மன்ன தானங்கள், அறம்பல புரிந்து குருதெய்வமறையோ ரடுத்திடும் போதுரட்சகனும் புரந்தர னென்ன கீர்த்திமான்சிதேக பூவிந் னெனப் புகன்றிடுவார்.

## 27-வது சமயம்

புகவிருபானேழ் சமயம்வாகனத்தி லிருத்தல்
பூவில்குடும்பத் தலைவன்பரவு பசாரனுமாம்
அகலிடமுந் தனதான்ய மகிழ்சிறந்தசுரபி
அன்ன வஸ்திரமுமா ஊடிமையர்கள்மிகவாம்
மிகத்தரும தானமுடன் பாகவதபாரதமும்
மேலாய் ராமசரிதைமிக விருப்பமுடையோன்
ஜெகமதில் வியாபாரமிகு பற்பலவாங்கீர்த்தி
சேர்ந்தபத்துசுதர்களுக்கு செங்கோல் மன்னவனும்.

## 28-வது சமயம்

ஆறிருபத் தெட்டாநும் சமயமதைக்கேண்மோ
ஆசாத பிரேதகஞ் சாரமெனவறைவர்
நாமுரைப்போந் திசைபுத்தி மத்தியிலேதேக
நலிவும்வெகு வாதனையால் தாஷணமே நலிவார்
பூமிதனில் மிகவலிச்சல் காலமதிற்புசித்தல்
பொல்லாங்கு நிஷ்டூரம் பிறர்வெகு தூஷித்தல்
தீமைபுரிந் தேபுலகி லபகீர்த்திசுமந்தே
திரிவரெனவே மொழிவர் தெய்வமறையோரே.

## 29-வது சமயம்

மறைபுகலு மிருபானொன் பான்சமயமதுகேள்
மன்னுயிரைப் பிடித்தல் மாகுருவுந்தெய்வம்
புரையிலந்தணரை நிந்தித்தல் சோதரரைப்
பெற்றதாய் தந்தையரை சற்றுமதியாமை
இறையளவுஞ் சீவர்கள்மேல் காருண்யமிலகுறு
மெழிலுலகில் நிந்தைபுரிந் திடுவன்மெய்தமர்மீ
குறைசெய் பசாசுகளாலும் நாகப்ரேகத்தாலும்
கொடுமைசெய்யும் பாவியெனக்கூறுவர் நூல்வல்லோர்.

## 30-வது சமயம்

முப்பான் திதி பூசையநாகும் மொழிவர் மணிமந்த் ரவிழ்த சித்தி, செப்பார்புத்திர களத்திரரொடும் சேர்ந்தோர் வணங்குஞ் சாந்தகுணன், இப்பார் தனிலே மிகவாரிய மொழிகார் ஸ்திரீகள் வசியனென்பர், தப்பா தைரிய லட்சுமியும் தனமுந் தான்ய மிகவுளனும்.

## 31-வது சமயம்

சொன்னேன்முப்பத்தொன்றதற்கு நூர்போசனனென்றுரைத் திடுவர், பொன்னே யிவனைப் பிறர்தித்தும் பூசித்தவர்போல் சிந்தைசொல்வான், அன்னை பிதுர்வர்க்கங்கள்தமை அலைச்சல் படுத்து மாபாவி, என்னு ளிலுமோ ரோகிதம் சனந் தொழிலில் விருத்தியுளன்.

## 32-வது சமயம்

முப்பா னிரண்டிற் சலபான மொழிவ ரவிழ்த மிகபோசிப்பான்
அப்பா வியாதி பிடைமிகு மவன் புத்ர களத்திரமும்
தப்பார் சுயசா திகள்பிறரும் தவில்வர் விரோத மிகுகடினம்
தப்பா ரிவர்க்குக் கடன்மிகவாம் தன்கா ரியமுந் தாழ்வாமே.

## 33-வது சமயம்

மாதுகேள்முப்பான்மூன்றுதாம்பூலம்வழங்கல்சற்குணன்சுகவாறு
மன்னுசத்தனமும் நட்பகந்தங்கள் மகர்புழியணியலங்காரம் (ம்
ஏதமில்சரபிமறி யொடுமகிட மெருதுமானடிமைகள் மிகவாம்
எழில்பெறுகலையில் தானியமதனி லேறலாங்கனுமிகவாம்
நீதிலாதன்னிய பாவைகள்தனிலே நிரமும் கீதவாத்தியத்தில்
தெளிவுடன்தெய்வங் குருமறையவர்க்கு தொண்டுசெய்
[ தருள்பலபெறுவன்
ஆதரவுடைய தந்தையின் தனமு மகன்றிடு சத்துருபொருளும்
அவன்வசமாகு மிகுசவுந்தரிய குமெனவறை தவரதினர்.

## 34-வது சமயம்

அறைவார் முப்பா னுன் சதற்கு அளிசத் தனம்பூ சுதலாகும்
மறைநேர்த் திடுவன் பிரசங்கி மாலாத் தனதா னியமிகவாம்
புறைதீர் புதவன் குருபுத்தி புண்ய மிகுதி பிறவிச் செல்வம்
தரைமேல் கீர்த்தி மிகவுளரும் தனத்தி லளகைத் தலைவனுமாம்

## 35-வது சமயம்

மானே முப்பத் தைந்தில்நித்ரை மாகா மியனும் ஸ்திரீ லலன், தேனே தூர்த்தன் பிறர்பொருள்மேல் சித்தைமிகவஞ் சகன் மனதில் கோனே பெனச்சில் லரைப்புகழ்ந்து கொடுமை சொல்வன் பின்பவர்மேல், ஆனபீதி பிதுர் அன்னை அடியாள் தாசம் பந்துகர்மம்.

## 36-வது சமயம்

கன்னல்மொழிவாய் கேள்முப்பானு ருஞ்சமயம்
கருதிடுமோ கனகமவிழ்தமணி மந்த்ரசித்தி
இன்னமுறை மனைவிபத்ரர் மித்ரர் நட்புளரும்
சதவிலாசப்புத்தி விவேகமு முண்டென்பார்
மன்னுதன தானியங்கூட்டு வியாபாரமதனில்
வந்திடுந் துரோகமதாற் சிந்தையிலே சமர்த்தன்
தன்னிலையி லான்பாவி பரசர்நிஷ்டூரனுமாம்
தாடிபிறர் பொருளிச்சை மாகும்வியா கூலனே.

## 37-வது சமயம்

கூறுவாய் முப்பானேழ் பிறர்தமை தூஷித்தல்
கோபிதுஷ்ட புத்தியுளான் பாவமனுடிப்பான்
வீரமே கிலேசமது தனதானிய நஷ்டம்
மேலான சுரபிகன்று காலிநஷ்டமென்பர்
ஆறுசுதை பொடுதுணைவி யில்லாமலலைந்து
அரசர்பகை யாலவருந் சிறைபுகுந்து நொந்து
ஈறுமுத லுப் நடினி லாதபரனருளால்
எப்போதும் வறுமையுள னென்றுரைப்பர் நூலோர்.

## 38-வது சமயம்

முப்பானெட் டாஞ்சமயம் நித்திரையாங்காவி
மொழிவன்விரோதம் என்றுந் துன்மந்திரியாலே
அப்பாக்செய் தொழில்தவக்கம் வித்தையுடன்மறைவு
ஆனகவி காவியம் சங்கீதமுடன்பாட்டு

RangaRakes tamilnavarasam.com

தப்பா நாட்டிய தொழிலால் சஞ்சலயாசகியாம்
தனருணைவான் களவதனுல் தண்டனைக்குட்படுவான்
இப்பாரில் சத்தியபுத்ரி சுகந்தாழ்வாயிலேதல்
இரவுபகல் கஷ்டமுளான் எருமைபோல்நடப்பான்.

## 39-வது சமயம்

முன்னவ நரைப்பா மூப்பத்தொன்பதற்கு
முனிவோர் கலாபமே புரிதல்
அன்னை தந்தையர் சகவிரோதிபொய்கேட்பன்
அவரைத் தூஷிடத்திற் துஷ்டன்
சொன்னதோர் பந்து சகோதரர்க்கிலேசன்
தொழிலுறு கொடுக்கல் வாங்கலிலும்
அன்னியவீடு தனமுதற் குவ்ய
வண்மையு மற்பமா மயிலே.

## 40-வது சமயம்

மயில்நிகர் மாதே நாற்பதாஞ்சமயம் மகிமுடி யியங்குத லென்பர், அயலுளோர் தூஷித் திடுதல்துர்ப்போகி அநுசார மிகவுளன் காமி, செயமிலா நண்பன் தந்தையர் நாசம்செப்புவர் பூதன மிலாத, கயவனுமீன விருத்தியன் மர்மி கைப்பொரு ளுக்குமே செலவாம்.

## 41-வது சமயம்

வானமடமானே நாற்பதொன் றுஞ்சமயம்
வமுத்துவர் திரேக்கானம் மாவுசத்துருபீடை
ஆனசுகந் தாழ்வுகளந் திரர்புதல்வர்நாசம்
அம்புவிகொஞ்ச முளனருள் தனமிலாதான்
மேனிதனில் ரோகமுளன் மூலரோகமதுவே
மிகுதியா மெனமொழிவர் தானப்பிரஷ்டன்
மானதுதந்தை யன்னைபொருளுந் தன்பொருளாம்
வளரிடமு மிலனெனவே சாற்றுவர்நல்லோரே.

## 42-வது சமயம்

நல்லவருரைப்பர் நாற்பதுமிரண்டும் நாட்டில்சஞ் சாரமா மென்பர், தலயிலான்காமக் குரோதலோபியரும் நாடுநீச்சர்கள் சகவாசன், அல்லலேமிகுந்த நீசகீர்த்தியரு மன்னை தந்தைய ரோடு களத்ரம், யாரையும்தம்பா மனதுடையவனும் அன்னியர் சொத்தபகரிப்போன், சொல்லுவர்மேக ரோகமோ டசீர்ணந் தோன்றிடு மூலரோகமுமே, தொத்தமா மலப்போர் தெத்தநாளை யினுஞ் சோர்விலாப் பாவமேபுரிவன், தொல்லுலகதனில் தந்தை யின்குலத்தில் குழ்ந்தபந்து குலத்தோர்க்கும், துரோகனுமிரு பயமுமிலாளரசர் சீரியேயுலகு தூஷிக்கும்.

RangaRakes tamilnavarasam.com

## 43-வது சமயம்

மறைபுகல் நாற்பான் மூன்றில்சந்தோஷம் வஸ்திரத் தொடு தனதான்யம், மன்னுதேவதைகள் தன்னையேதுதித்தல் மாகங்கை தீர்த்தமேயாடல், பிறையணி சடையோன் ஆலயமுடனே பெரியமாலாலயமதனைப், பேதமிலாம லனுதினந்தொழுது பெற்றிடுமருட் பிரசாதம், நறைவிரிகமல மாதுகன்னருளால் நன்னடை செய்தொழில் விர்த்தி, நான்மறைப்புராண சாஸ்திரக் கேள்வி நற்கருமத்தொடு தானம், புறையறுசிநேக ராயுகவிர்த்தி பூமியுமேவலாள் சரபிபொங்கிய செல்வர், தங்குமென்றுரைத்தார் போதமார் முனிவர்கள் தாமே.

## 44-வது சமயம்

நாற்பா னன்கிற் சலசையவன் நணுகுஞ் சமயம் பிறனூர் போய், சேர்ப்பான் மிகுந்த தனமதனை செய்யுந் தொழிலில் லாபமதாம், காப்பான் களத்ர புத்திரரை கருதும்போக பாக்கியவான், பார்ப்பார் முதலோர்க் குபகாரி பண்பாற் றெரிய லட்சுமி கரன்.

## 45-வது சமயம்

கருதும் நாற்பான் ஐந்ததற்கு கங்காஸ்நானம்சிவனருளால், பெருகுந்தேவர் பிரசன்னம் பேருர் தலங்கள் யாத்திரையாம், மருவுஞ் சாந்த குணன்தருமன் வளர்நாற் றிசையுங் கீர்த்தியுளன், உருகுமணி மந்த்ரவிழ்த சித்தி ஒளிர் தேவர்கள் பிரசாதமுளான்.

## 46-வது சமயம்

உள்ளதுநாற்பத் தாறுவிமான சமயமதாம்
ஒளிரும்அஷ்ட லட்சுமியும் வாசமவனிடத்தில்
என்னளவுங் குறையாமல் தயிர்பால்நெய்யுடனே
இன்பசுக போசனமென் றுறுமவன்புசிப்பன்
வள்ளலென வாகனமும் நித்தியகளத்திரமும்
மாண்புள புத்திரர் மகிழ்வுமா நிதி தானியமும்
கொள்ளுமுத்தியோக தட்பசுர பிமிகவுளனும்
குடும்ப சவரட்சகனும் கூறுவர்கள் பெரியோர்.

## 47-வது சமயம்

நாலுபத்தேழுக் களவைமானகரில் நற்குடியிருக்கை யாமென்று, நவிலுவர்புண்ய தவமதில்வாசம் நற்றனதானியம் பூமி, சாலவும்நஷ்ட னற்பவிருத்தியனும் தையல்மேற் காரியமதனால், தனதுதேகத்தில் துன்பமேவினைத்து தவித்திடுவான் மனப்போக்

கால், கோலுமே யன்னத்துவேஷம் வத்கணுதம் கொடுத்திடு மவிழ்சுத்தின் பலத்தால், கொடும்பிணியான இடும்பைகள் நீங்கி கூறனுகூலமேசொல்வர், மேலுநற்பூமி பயிரொடுதனமும் விருத் தியதாகிடுமென்றே, வேதியர்தானும் விளம்பினூரதனை விபரமா யறித்துரை செய்வீர்.

## 48-வது சமயம்

உரைசெய்வா தாத்பா னெட்டதாஞ் சமையமுறும்புண்ய கதா ப்ரசங்கம், உற்றநெய்தயிர்பால் கனிரசவர்க்க முணதில்மிகவிருப் புளனும், நிறையோடுமேதி கன்றுகாலிகளை நெருங்கு சுற்றத்தை ரட்சித்தல், தேமிபொன்னடிமை யாள்களுமிகவால் நிறைந்திடு தானியமல்லபோல், மறைமுடிவறியும் குருபதத்தனிலும் வானவர் பதந்தொழு மனதோன், மாவியாபாரி தொழில்மிகவிருத்தி மா கங்கையாத்திரைபிரியன், கறையிலாமனிதர் இஷ்டர்கள்நேயன் களித்திடும் போகபாக்கியவான், காதலால்தர்க்க சாஸ்திரமத னில் சனதருமங்கள் செய்புகழான்.

ஜெயமுனி சோதிட சூத்திரம்

முற்றிற்று.

RangaRakes tamilnavarasam.com

# கருட தரிசன பலன்

தினகரனுல் கலியாண பலமேயுண்டாம்
திங்கள்தனில் நினைத்ததெல்லாந் திரளாய்க்கூடும்
அன்புடனே அறுசுவையுஞ் சிக்கும் செவ்வாய்
அபமிருத்து தோஷத்தை யகற்றும்புந்தி
மனதிலுறு துயரம்போம் குருவாரத்தில்
வளர்வெள்ளி தனக்கிடுக்கண் மாற்றிவைக்கும்
கனசனிநாள் கெம்பீர பலவேயுண்டாம்
கருடனைக் கண்டாலிதுவே கழறுவாயே.

## நந்திதேவரை தரிசித்த பலன்

அருக்கன் தனலாபம் மதிக்கே ஆடைவரு மங்காரகற்கு
மருக்கொள் பண்டம் புந்திகளி மன்னர்க் கின்பம் மாவலியன்
குருவுக் கிடர்போ குஞ்சனிக்கு குழந்தை பிறக்கு மீசன்நந்தி
இருக்கு மிடஞ்சென் றிறைஞ்சுவர்க்கு எய்தும் பலன்களிதுவாமே.

## • வாய்ச்சொல்

திங்கள்சிவமறையோன் செவ்வாய்புலிவரிடம்
பொங்குபுதன்கம்மாளன் பொன்வளருன்—நங்காய்கேள்
ஆயன் சனிக்கிழமை அம்பட்டன்ஞாயிறு
தூயவெள்ளிவண்ணான் வாய்ச்சொல்.

• இவ் வாரங்களின் உதயத்தில் அந்தந்த சாதியார் வீட்டெதிரில் போக முதல் அங்கிருந்து வரும் வாய்ச்சொல்லே, தான் நினைத்த காரியத்தின் முடிவாம்.

பெரிய ஜோதிட சில்லறைக் கோவை

முற்றிற்று.

திருமகள் அச்சகம் சென்னை-79

RangaRakes tamilnavarasam.com